Koviloor Digital Library

குறுந்தொகை

(மூலமும் உரையும்)

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No. 11793

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

உரையாசிரியர்

முனைவர் வி. நாகராசன்

தலைமைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ. மா. பரிமணம்

முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்

Alagappa University
Central Library
70021

VTN085

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.

Koviloor Digital Library

குறுந்தொகை (மூலமும் உரையும்)

முனைவர் வி. நாகராசன்

முதல் பதிப்பு : ஏப்ரல், 2004

மூன்றாம் அச்சு : பிப்ரவரி, 2007

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

Code No : A 1261

ISBN : 81-234- 0848 - X

விலை : சங்க இலக்கியம் எட்டுத்தொகை & பத்துப்பாட்டு நூல்கள் ரூ.3000

அட்டைப் படம் : மருது

ஒளி அச்சு : பிரிண்ட் லேண்ட்
திருச்சி.

அச்சிட்டோர் : சென்னை ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 021.
தொலைபேசி: 65692807

Koviloor Digital Library

குறுந்தொகை

புத்தகம் – 1

உள்ளுறை

பக்கம்

பதிப்புரை v

உரை பற்றிய முன்னுரை

- முனைவர் வி. நாகராசன்

உரையாசிரியர் xxxvii

பக்க எண்

குறிஞ்சி : 5, 9, 13, 44, 47, 55, 58, 70, 75, 77, 84, 91, 100, 105, 109, 113, 125, 136, 140, 150, 154, 159, 171, 173, 175, 179, 181, 184, 188, 192, 200, 202, 204, 211, 213, 215, 221, 233. 235, 243, 246, 254, 256, 267, 269, 275, 277, 284, 286, 302, 308, 310, 312, 316, 320, 326, 329, 331, 338, 346, 351, 353, 361, 366, 368, 370, 372, 382, 393, 400, 406, 413, 420, 427, 431, 456, 459

நெய்தல் : 16, 19, 22, 31, 129, 133, 143, 148, 227, 237, 248, 250, 262, 273, 279, 281, 288, 290, 294, 300, 336, 377, 384, 397, 404, 408, 424, 450, 454, 461

Koviloor Digital Library

பாலை : 25, 38, 41, 50, 53, 64, 68, 80, 82, 86, 103, 107, 111, 115, 117, 127, 145, 152, 161, 169, 177, 190, 194, 206, 252, 292, 304, 306, 314, 318, 324, 334, 340, 344, 349, 355, 389, 402, 415, 435, 443

மருதம் : 28, 35, 61, 88, 93, 95, 98, 119, 122, 131, 138, 156, 186, 197, 209, 217, 224, 229, 258, 271, 298, 322, 363, 379, 391, 395, 410, 417, 452

முல்லை : 66, 72, 163, 165, 167, 231, 239, 241, 260, 264, 296, 342, 358, 375, 386, 422, 429, 433, 438, 440, 445, 448

Koviloor Digital Library

பதிப்புரை

தமிழ்நாட்டில் முதன்மை நூல்வெளியீட்டகமாகக் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியத்தையும் முற்போக்குச் சிந்தனைகளையும், தமிழகத்தின் பட்டிதொட்டிகளுக்குக் கிளைகள் வழிக் கொண்டுசெல்ல முனைப்புடன் பணியாற்றி வரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (புதுயுக நூல் வெளியீட்டகம்) நெடுங்காலமாகக் கண்டிருந்த கனவு இப்பொழுது நனவாகிறது – சங்க இலக்கியமும் உரையும் வெளியிடுவதன் வாயிலாக.

இந்திய நாட்டின் தென்கோடியில் உள்ள தமிழ்நாடு உயர் நாகரிகத்தின் தொட்டிலாக இலங்கி வந்துள்ளது. தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழி, அது எப்பொழுது தோன்றிற்று என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதது, இலக்கண, இலக்கியத்துறைகளில் நுட்பமும் செறிவுமுடையது என்பன அனைவரும் அறிந்த வரலாற்று உண்மைகள்.

பண்டைய தமிழ் நாகரிகம் மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோர்க்குச் சான்றாதாரமாக, செய்தி ஊற்றாக அமைவது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தின் எந்த நூலைப் பிரித்து பார்த்தாலும் சிறந்த சிந்தனைகள் மிளிர்வதையும் – ஓங்கி வளர்ந்த நாகரிகத்தைப் பிரதிபலிப்பதையும் காணலாம். அத்தகைய இலக்கியத்தை முழுமையாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உரையுடன் வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

சங்க இலக்கியங்கள் மூவகையாக, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் எனச் சிலரும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் சங்க இலக்கியங்களே என வேறு சிலரும் கருதுவர். ஆனால் கால நிரல்படி பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சில சங்ககால நூல்களாகவும், வேறுசில பிற்பட்ட காலத்தவையாகவும் அதாவது சமண, பௌத்த, வைதிகச் சமயச் சிந்தனைகள் தமிழகத்தில் ஆழ வேரூன்றி இரண்டறக் கலந்தபின் எழுந்தவையாகவும் கொள்ளுதலே பொருந்தும்.

Koviloor Digital Library

சங்க இலக்கியம் எனக் குறிப்பிடும்போது இரு ஐயவினாக்கள் இயல்பாக எழும். 1. சங்கம் என்பது என்ன ? 2. சங்கம் என ஏதேனும் இருந்ததா ? இருந்தது எனில் எக்காலத்தில் ? என்பன. இவ்வினாக்களுக்கு விடையளிக்க ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக ஆய்வுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இது இன்னும் முடிந்தபாடில்லை. ஏனெனில், புதிய புதிய செய்திகள் கிடைத்தவண்ணம் உள்ளன. எனவே அவை இனியும் தொடரும்.

சங்கம் என்பது தமிழாயும் அவை; கூடல் எனவும் பொருளுடையது. “தமிழரின் வரலாறு” என்னும் நூலில் பி. டி. சீனிவாச ஐயங்கார் சங்கம் இருந்ததற்கான சான்றுகள் எவையும் இல்லை என்றார். “பழந்தமிழர் கால அட்டவணை” **Chronology of Early Tamil's** என்னும் நூலில் K. N. சிவராஜபிள்ளை சங்கம் இருந்தது என்பது நம்பத்தக்கது அன்று; சங்கம் பற்றி இறையனார் களவியலில் கண்ட செய்திகள் பொய்யானவை; பிற்காலத்தவர் எவரோ எழுதிச் சேர்த்த இலக்கிய மோசடி என்றார். சங்கம் இருந்ததே இல்லை என்று அடித்துச் சொல்லுபவர்களும் இறையனார் களவியல் செய்திகள் முழுக்க முழுக்க உண்மை என்று வாதிப்பவர்களும் இன்றும் உள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் எனக் கருதப்பெறும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தொடக்கத்தில் சங்கம் ஏதும் இருந்ததில்லை என்று உறுதியாக நம்பினர். ஆனால் அவை, மன்றம், கூட்டு, சங்கம் என்னும் வழக்காறுகள் சங்கம் என்பது போன்ற அமைப்பு இருந்ததற்கு அகச் சான்றுகளாகவும், புறச்சான்றுகளாகவும் மோதி எழுந்ததால் முச்சங்கங்கள் இல்லை என்றாலும் சங்கம் என்பது ஒன்றாவது இருந்திருக்க வேண்டும் என்று ஏற்று, பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் என வரையறை செய்தார். சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் பற்றிச் சமஸ்கிருதச் செல்வாக்கு தம்மீது அதிகம் இருந்த காரணத்தால், ஒப்ப வைத்து எண்ணத்தக்க சமஸ்கிருத இலக்கியங்களைத் தழுவி அவற்றின் பின்னரே எழுந்தவை என வையாபுரிப்பிள்ளை வாதித்தார். எனினும், அவர்களின் இக்கருத்தை ஏற்காதவர்களும், சங்கம் இருந்தது என்பது பற்றியும் நூல்களின் வைப்பு முறை பற்றியும் அவருடைய பொதுவான கருத்தை ஏற்பர்.

Koviloor Digital Library

சைவசித்தாந்த மகாசமாஜம் சார்பாக வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1940ஆம் ஆண்டு பதிப்பித்த சங்க இலக்கியம் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டி. இவர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுக்கு அமைத்துத் தந்த காலவரிசையை அறிஞர் ஒப்புக்கொண்டுள்ளனர். இவரே நக்கீரர் நால்வர் இருந்தனர். ஔவையாரும் ஒருவருக்கு மேற்பட்டவர் எனச் சுட்டிக்காட்டினார்.

சங்க இலக்கியங்கள் கற்பனையும் கனவும் பொய்யும் புனைவும் அற்ற தமிழ்ச் சமுதாயத்தை உள்ளது உள்ளபடியே காட்டும் படிமக்கலங்கள்– கண்ணாடிகள் என்று மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையும் வரலாற்றுப் பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியும், கலாநிதி கைலாசபதியும் கலாநிதி சிவத்தம்பியும் கருதுவர். இந்தப் பின்புலத்தில் சங்க இலக்கியத்தை உரையுடன் வெளியிட்டுத் தமிழர்களின் அவாவை நிறைவேற்ற முனைந்துள்ளோம்.

சங்க இலக்கியங்கள் காட்டும் நாகரிகம் சமகாலத்தில் நிலவியிருந்த கிரேக்க, ரோம நாகரிகங்களுடன் ஒப்பவைத்துக் கருதத்தக்கது. எவ்வகையிலும் குறைந்ததன்று. அசோகன் பாறைக் கல்வெட்டு (கி. மு. 3ஆம் நூற்றாண்டு) சேர, சோழ, பாண்டியர் அரசுகளைக் குறிப்பிடுகிறது. கி. மு. 22 இல் ரோம் அரசன் அகஸ்டஸ் அரசவைக்குப் பாண்டிய தூதன் வந்திருந்ததுபற்றி ஸ்ட்ரேபோ என்பார் குறிப்பிடுகிறார். பினினி (கி. பி. 77) பெரிபுளூஸ் (கி. பி. 54) அலெக்ஸாண்டிரியா சார்ந்த புவிநூல் வல்லுநர் டாலமி (கி. பி. 50) ஆகியோர் தமிழ் நாட்டுடன் துணி, முத்து, நறுமணப் பொருள்கள் வாணிபம் நடைபெற்றது பற்றிப் பேசுகின்றனர். கி. மு. 1000ஆம் ஆண்டு ஆண்டதாகக் கருதப்பெறும் சாலமன் மன்னன், தமிழ் நாட்டிலிருந்து பொன்னும் வெள்ளியும் யானைத் தந்தமும் மனிதக் குரங்குகளும் (கபி – கவி: வளைதல்) மயில் தோகையும் (துகி) இறக்குமதி செய்ததாக, ஈப்ரு மொழி விவிலிய சான்று தருவதாகக் கருதுகின்றனர். வில்போர்டு ஹார்வி ஸ்காப் **(Wilford Harvey Schoff)** என்னும் ஆய்வாளர் 1913ஆம் ஆண்டு, "அமெரிக்கக் கீழை நாட்டுச் சமுதாய ஆய்வு" இதழில் பண்டைய தமிழர் வாணிபம்பற்றி "கிறித்துவ அக்தத்தின் முதல் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் அரசியல் பிரிவுகள்" என்னும் தலைப்பில்

Koviloor Digital Library

ஒரு கட்டுரை வரைந்தார். கிரேக்கரும் ரோமானியரும் யவனர் எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுடைய குடியிருப்புகள் கீழைக் கடற்கரை ஓரங்களில் அமைந்திருந்தன. யவன வீரர் பாண்டியர் அரண்மனைகளில் காவலாளிகளாக இருந்தனர் எனவும் இலக்கியங்கள் சான்று தருகின்றன.

சங்ககாலம் கி. மு. 500 முதல் கி. பி. 300 வரை ஏறத்தாழ 1000 ஆண்டுகள் நிலவியிருந்தது என ஆராய்ச்சியாளர் சிலர் கருதுவர். வேறு சிலர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை சங்கம் இருந்தது என்பர். கடந்த நூற்றாண்டில் சங்க நூல்களையும் வேறு பல நூல்களையும் அச்சு வடிவில் பதிப்பித்த சான்றோர் பலர். ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதற்கும் அவற்றில் கண்ட மூலபாடங்களை ஒப்பிட்டுச் சரிசெய்வதற்கும் அச்சேற்றுவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளையும் சந்தித்த இடர்ப்பாடுகளையும் விரிவாக எடுத்துச் சொல்லியுள்ளனர். இதனை நோக்கும்போது போக்குவரத்து வசதி இல்லாத, கல்வி வளர்ச்சி அடையாத நிலையையும் இடைஇடையே அடுத்தடுத்து மாறுபட்ட அரசுகள் ஆண்டதனால் ஏற்பட்ட இடையூறுகளையும் நோக்கும்போது பல நூற்றாண்டுகளுக்கு முன் சங்க இலக்கியங்களை ஒன்றுதிரட்டிப் பனை ஒலை ஏடுகளில் எழுதித் தொகுத்துத் தருவதற்காக தொகுத்தோரும், தொகுப்பித்தோரும் மேற்கொண்ட முயற்சிகள் மிகக் கடுமையானவை, இச்சான்றோர் என்றும் பாராட்டத்தக்கவர்கள், நினைவில் கொள்ளத் தக்கவர்கள், இவர்கள் இன்றேல் சங்க இலக்கியங்களே நமக்குக் கிடைத்திராமல் போயிருக்கும் என்பது தெளிவு. இக்கால அறிஞர் பெருமக்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தம் அரிய விரிந்த அணிந்துரையில் ஆங்காங்குக் குறிப்பிட்டுச் சொல்வது நினைவில் கொள்ளத்தக்கது. பாடல்கள் கால வரிசையில் அமைந்தவை அல்ல; சில முன் பின் காலத்தவையாக இருக்கலாம், இடைச் செருகல்களாக எழுதிச்சேர்த்த பாடல்களும் உள்ளனவாகலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில், ஐவகை நிலம் சார்ந்த இனக்குழுச் சமுதாயத்தைக் கடந்து வர்க்க சமுதாயத்தை – மேலோர், கீழோர், ஏவலர், வினைவலர், ஆண்டான், அடிமை, செல்வர், வறியர் உழுவித்து உண்போர் உழுவோர் எனப் பல்வேறு வர்க்கப் படிநிலைகள் வரலாற்றுப் போக்கில் அமைந்துவிட்டதனைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது.

Koviloor Digital Library

மேலும், சங்க இலக்கியத்தின் தலையான சிறப்பு, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும் அவற்றையொட்டியமைந்த மக்கள் பிரிவுகளும் திணை, துறை காட்டும் பழக்கவழக்கங்களும் ஒழுகலாறுகளும் ஆகும். முதன் முதலில் குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய குன்றக்குறவர் – தமிழன் எவ்வாறு படிப்படியாகச் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தினான், சமுதாயத்தைக் கட்டியமைத்துக் கடலையும், ஆற்றையும் வென்று ஆளுமை செலுத்தினான் என்பதைச் சங்க இலக்கியங்கள் பெருமிதத்துடன் எடுத்துக் கூறுகின்றன. இது மட்டுமல்லாமல் விண்கோள்களையும், அவற்றின் நிலை மாற்றங்களையும், பருவ மாற்றங்களையும் கண்டறிந்தான். வேளாண்மை, வாணிபம், கைத்தொழில், ஆகியவற்றுக்குப் பயன்படுத்தினான். பல கலைகளை, போர், ஆடல், பாடல், ஒவியம், சிற்பம், கட்டடம், அணை, புணை தெப்பம், ஓடம், நாவாய் கப்பல் கட்டுதல், பானை வனைதல், நெசவு, உழுகருவிகள், போர் கருவிகள் படைத்தல் போன்ற கலைகள், தொழில்கள் எல்லாவற்றையும் கற்றுத் தெரிந்து சிறந்தான் என்பதையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

உலக இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் சமயம் சாரா இலக்கியங்கள் என்பது தெளிவாகத் தெரியும்.

மனித சமுதாய வரலாறு ஒவ்வொரு சமுதாயத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அரசு என்பது இருந்ததில்லை எனக் காட்டுகிறது. ஆங்காங்குப் பழங்குடிக் குழுக்களும், குல அமைப்புகளும் இருந்து மக்கள் கூட்டங்களை நெறிப்படுத்தி வழிகாட்டின. அவை சமுதாயத்திற்கு வழிகாட்டி நெறிப்படுத்தத் தேவையான விதிகளையும், உறவுகளையும் ஒழுகலாறுகளையும், பண்புகளையும் படைத்துக்கொண்டன. அரசு தோன்றிய பிறகு அவை அறநெறிகளாகவும், பழக்கவழக்கங்களாகவும், காலத்திற்கேற்ப மாறிப் புதுப்பொலிவுடன் இன்றளவும் நின்று நிலவிப் பெருமை சேர்த்து வருகின்றன. உழைப்பு, நேர்மை, அறம், வாய்மை, உண்மை, இன்னா செய்யாமை, ஒப்புரவு போன்ற பண்புகள் எல்லாம் இவ்வாறு உருப்பெற்றுத் தொடர்வனவே.

இரும்பு கண்டுபிடிப்பும், வேளாண்மையில் அதன் பயன்பாடும் நாகரிகத்தையும் வர்க்க சமுதாயத்தையும் தோற்றுவித்தன. இந்த உண்மையைச் சங்க இலக்கியங்கள் மிகத் துல்லியமாகக் காட்டுகின்றன.

Koviloor Digital Library

பிரடெரிக் ஏங்கெல்ஸ் "குடும்பம் தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்னும் நூலில் அரசின் குணங்களை இவ்வாறு எடுத்துக்கூறுகிறார். "வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய நாடு, பொது அதிகாரம், அதனைச் செலுத்தும் உள் அமைப்புகள், படை, அமைச்சு, காவல்துறை, ஒற்று, நீதிமன்றங்கள் என்பன. இவை எல்லாவற்றின் நோக்கமும் தனி உடைமையைப் பேணிப் பாதுகாத்து வரி வசூலிப்பதே. விவசாயத்திலும் வாணிபத்திலும் பிற தொழில்களிலும் கிடைக்கும் உபரி மதிப்பிலிருந்து பெறும் வரிகள், மக்களை நெருக்கிச் சுரண்டி அடக்கிப் பெறும் வருவாய் ஆகும். இதனால் அரசின் நலன்களும் மக்கள் நலன்களும் ஒரே சீராக இல்லாதாகி அதிகார அமைப்பாக அரசு மாறுகிறது. அதாவது மக்கள் நலன்களுக்காக என்று சொல்லித் தனி உடைமையைப் பாதுகாப்பதும் அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதும் அரசு". மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தெரிவு நூல்கள் தொகுதி III பக். 328) சற்றேறக்குறைய சங்ககாலச் சமுதாயத்தில் தோன்றி நிலைபெற்ற அரசு இத்தகைய தன்மை பெற்றிருந்தது என்பதைப் புறநானூறும், பத்துப்பாட்டும், பதிற்றுப்பத்தும் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் வேளாண்மையும் கைவினைத் தொழில்களும் வாணிபமும் கைகோத்து இணைந்து வளர்ந்தன. பரிசிலர்களுக்குப் பொன்னும், பொருளும் அரசர்களும் குறுநில மன்னர்களும் கொடையாக வழங்கியதோடு நிலத்தையும் தானமாகத் தந்தனர். பாரி 300 ஊர்களைப் புலவர்களுக்குப் பரிசிலாகத் தந்தான் என்று புறநானூறு கூறுகிறது. பதிற்றுப்பத்து, சேர மன்னர் சிலர் யாகம் செய்வதற்குப் பிராமணர்களுக்கு நிலக்கொடை தந்தனர் – என்று குறிப்பிடுகிறது.

"இந்தியாவின் நிலமானியமுறை" என்னும் நூலில் ஆர். எஸ். சர்மா மன்னர்கள் நிலக்கொடை தந்ததிலிருந்து நிலமானியமுறை தொடங்குகிறது என்று கூறுவது நினைவுகொள்ளத்தக்கது.

வரி விதிப்பின் மூலம், பெரும்பகுதி வரி நிலத்திலிருந்தும் வாணிபத்திலிருந்தும் அரசன் பெற்றான். சங்க இலக்கியங்கள் பல்வேறு ஊர்களில் கோயில்கள் – சைவ வைணவக் கோயில்கள், சமணப்பள்ளிகள்

Koviloor Digital Library

புத்த விகாரைகள் இருந்தன எனக் குறிப்பாக மதுரைக்காஞ்சி காட்டுகிறது. கோயில்களுக்கு நிலத்தானம் செய்யும் வழக்கம் அப்போதே தோன்றியிருக்க வேண்டும். எனவே நிலத்தில் கோயில்கள், மதங்களின் தனிஉடைமை அக்காலத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம்.

வேளாண்மை மிகப் பழைய நிலையில் இருந்ததைச் சில பாடல்கள் காட்டுகின்றன. வேறுசில பாடல்கள் மருத நாகரிகத்தில் நிலத் தனிஉடைமை தோன்றி வளர்ந்து வலிமை பெற்றதனையும் காட்டுகின்றன. தனிஉடைமை நிலத்தில் கால்கொண்டு, உபரி உற்பத்தி பெருகி உழுவோர், உழுவித்துண்போர், கடைசியர், ஏவலர், வினைவலர் என்றும் மக்கட் பகுதிகளைத் தோற்றுவித்தது. நெல்லைச் சேமித்துவைக்க நிலவறைகள் **(Godowns)** இருந்தன. வேட்டுவர், காலப்போக்கில் எவ்வாறு பல படிநிலைகளைக் கடந்து வேளாளர் ஆகின்றனர் என்பதனை ரோமில்லாதாப்பர் **From Lineage to State** என்னும் நூலில் மிக அருமையாக எடுத்துச் சொல்கிறார். தேனெடுத்துச் சாமை, வரகு, தினை பயிரிட்ட தமிழ் மக்கள் பின் எவ்வாறு நெல்லையும், கரும்பையும் பயிரிட்டனர் என்பதனை நோக்கும்போது, சங்ககாலச் சமுதாய வளர்ச்சி பல படிநிலைகளைக் கடந்து வந்தது என்பது புலனாகும்.

சமூக வாழ்வில் மக்கள் அனைவரும் கண்டு அறிந்து அனுபவித்து மகிழ்வதைப் புறம் எனவும் தலைவன்–தலைவி, கணவன் – மனைவி இருவரிடை முகிழ்க்கும் உறவையும் மேற்கொள்ளும் இல்வாழ்க்கையையும் உண்டாகும் பிறர்க்கு அறிவிக்கவொண்ணாப் பேரின்பத்தை அகம் எனவும் தமிழ்ச் சான்றோர் பகுத்துக் கண்டனர். போரில் புறம்காட்டா வீரர்களையும் தம் மக்களைப் போருக்குத் தெருட்டித் துணிவு தந்து அனுப்பிய தாய்மார்களையும் போரில் விழுப்புண் பட்ட மறவர்களைப் பாராட்டுதலையும் அரசு வீழ்ந்த மறவர்களுக்கு நடுகல் நாட்டுதலையும் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தியது என்பதையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அரசன் பிற நாட்டின்மேல் படையெடுத்துக் கொள்ளையடிப்பதையும் ஆநிரை கவர்வதையும் அக்காலப் போர் அறமாகச் சங்க இலக்கியம் காட்டுகிறது. அதே போது "சாலிநெல்லின் சிறைகொள் வேலி ஆயிரம் விளையூட்டாக, காவிரி புரக்கும் நாடு" எனப் பொருநர் ஆற்றுப்படையும்,

Koviloor Digital Library

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய கடற்காவிரி” என மதுரைக் காஞ்சியும் “மழைத் தொழில் உதவ மாதிரம் கொழுக்கத் தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய” என மதுரைக் காஞ்சியும், தண்டலை உழவர் தனி மனையில் விளைபொருள் குவிந்து” “மாடம் ஓங்கிய மணல் மலி மருகு” “விண்பொருள் நிவந்த வேயா மாடம்” என வேளாண்மையால் செழித்துத் திளைத்த தமிழகத்தைப் பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடுவது காண்கிறோம்.

அதேபோது சீரழிந்த ஊர்களும் நம்முன் நிற்கின்றன. “பருவ வானத்து மாமழை கடுப்பக் கருவை வேந்த கருங்குடிச்சீரூர்” “வேழம் நிறைத்து வெண்கோடு விரைஇத் தாழைமுடித்துத் தருப்பை வேய்ந்த குறியிரைக் குரம்பை” “பறியுடை முன்றில்” என ஏழைகள் வாழ்ந்த குடிசைகளையும் சங்க இலக்கியம் காட்டுகின்றது. ஐவகை நில மக்களும் அவர்தம் தொழில்களும் ஒன்றுடன் ஒன்று மயங்கிக்கிடந்த பான்மையையும் வாணிபம் தழைத்து, ஊர்களில் ஊடுருவி ஊர் அங்காடிகள் உலக வாணிபத்தோடு இணைந்ததையும் சங்க இலக்கியம் அறிய வைக்கின்றது. இவற்றிலிருந்து வர்க்க வேற்றுமைகள் ஆழக்கால் கொண்டுவிட்டன என்பது தெரிகின்றது. (தினை, சாமை விளைத்துத் தேனெடுத்த குறிஞ்சியும், ஆனிரை மேய்த்து, கலத்துப் பால், தயிர், வெண்ணெய் விற்ற முல்லையும் மருதத்துக்கு உள்ளடங்கின. இதனோடு நெய்தல் நாகரிகம் இணைந்தது)

கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான மாங்குளம் கல்வெட்டு வணிகச் சாத்து **(Merchant Guild)** இருந்ததாகக் குறிப்பிடுகிறது. மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த தமிழகம், இயல்பாகவே கடல் வாணிபத்தில் சிறப்படைந்தது, கிரேக்கம், ரோம், அரேபியா, சாவகம், கடாரம் முதலான நாடுகளுடன் வாணிபத் தொடர்பு இருந்தது. கடல் வழியாகவே கிறித்துவம், இந்தியா வந்தடைந்தது. வாணிபத்தில் நேர்மையையும் நாணயத்தையும் வலியுறுத்துவதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பட்டினப்பாலை “புகழ்நிலை இயமொழி வளர அறன்நிலைஇய அகன் அட்டில், சோறு வாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந்து ஒழுகி (42 – 45) வழிந்த உணவுச் சாலைகளையும் நீரினின்று நிலத்தேற்றவும் நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்

Koviloor Digital Library

அளந்தறியாப் பல பண்டம் வரம்பறியாமை வந்தீண்டி அரும்கடிப் பெருங்காப்பின் வலியுடையவல் அணங்கின் நோன் புலிபொறித்துப் புறம் போக்கி'' (129 – 135) ''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும் தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் கங்கை வாரியும் காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகு'' (185 – 193) என நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காகக் காத்திருக்கும் பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான பண்டங்களை எடுத்துச் செல்லுவதற்கான செயல்பாடுகளையும் விவரிக்கின்றது. அது மட்டுமல்லாமல் அது நேர்மையான வணிகப் பெருமக்களையும் ''நெடுநுகத்துப் பகல் போல நடுவுநின்ற நன்னெஞ்சினோர் வடு அஞ்சி வாய் மொழிந்து தமவும் பிறவும் . ஒப்பநாடிக் கொள்வதூஉ மிகைகொளாது. கொடுப்பதூஉம் குறை கொடாது பல பண்டம் பகிர்ந்து வீசும் நெஞ்சினர்'' எனப் பாராட்டிக் கூறுகிறது.

ரோம் அரசர்கள் வழங்கிய நாணயங்கள் இந்தியாவில் 127 இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான இடங்கள் தமிழகத்தில் உள்ளன எனத் தொல்லியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். ''இந்தியாவின் ஆதி வரலாறு'' என்னும் நூலில் வின்செண்ட் ஸ்மித் இவ்வாறு எழுதுகிறார். ''தமிழரசுகளிடம் வலிமை வாய்ந்த கப்பற்படை இருந்தது. கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் பண்டங்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் துறைமுகங்களில் தங்கின. பல்வேறு நாடுகளிலிருந்து முத்து, பவளம், மிளகு, பிற பண்டங்கள் வாங்குவதற்கு வணிகர் வந்து குழுமினார்கள். அப்பண்டங்களுக்கு விலையாகப் பொன், வெள்ளி, நேர்த்தியான கலைப்பொருள்களைத் தந்தனர். ரோமானியர் குடியிருப்புகள் கிறிஸ்துவ அப்தத்தின் முதலிரு நூற்றாண்டுகளில் உண்டாயின.'' (பக்கம் 461 – 462) பிளினி, ரோம் மகளிர் ஒப்பனை செய்துகொள்வதற்குச் செல்வச் செழிப்பில் மிதப்பதற்கு ஒவ்வொராண்டும் தமிழகத்திலிருந்து நறுமணப்பொருள்கள் இறக்குமதி செய்யப் பலகோடி ரோமானிய நாணயங்களை (செஸ்டர் செஸ்)ச் செலவழிக்கவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

சங்ககால நிலப்பிரிவுகள் தொழில்கள் அடிப்படையில் உண்டாயின. மேலோர், கீழோர் என மக்கள் பிரிந்தனர். வடபுலத்திலிருந்து வந்த நால்வருணப் பாகுபாடு தமிழ்ச் சமுதாயத்தில் ஊடுருவிற்று. ஏற்கனவே மேலோர் கீழோர் எனப் பிரிந்திருந்த சமுதாயம் நால்வருணப் பாகுபாட்டால் மேலும் சிதைந்தது. குலத்தொழில்கள் நால்வருணப் பாகுபாட்டு அடிப்படையில் மாறி அமைந்தன. இதனால், சாதியே தொழிலாகவும் தொழிலே சாதியாகவும் தமிழ்ச் சமுதாயத்தில் பிற்காலத்தில் மாறிப் போயின. தந்தை வழிக் "குடி" எனவும் தாய்வழிக் "குலம்" எனவும் வழங்கப்பட்டன என்பர் அறிஞர் சிலர். இக்கருத்து ஆராயத்தக்கது.

சிந்துச்சமவெளி நாகரிகம் சிதைந்த பின் சில மக்கட் பகுதிகள் தமிழகம் வந்தடைந்தன. ஜைனமும், பௌத்தமும் அடுத்து வந்தன. பின்னரே பிராமணர்கள் வந்தனர் என அறிஞர்கள் சு. வித்தியானந்தனும், கே. கே. பிள்ளையும், தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் கருதுவர். வந்த பின்னர்தான் சிவனும் திருமாலும் முழுமுதற் கடவுளாயினர். ஆரிய தெய்வங்கள் சிறு தெய்வங்களாயின. இம்மாற்றத்தினையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தமிழர் தெய்வமான முருகனும் மாயோனும் சுப்பிரமணியனாகவும் விஷ்ணுவாகவும் மாறுகின்றனர். புராணங்களும் இதிகாசங்களும் மக்களிடை வலிமை பெறுகின்றன. இந்த நிகழ்ச்சிகளே தமிழ் பக்தி இலக்கியத்திற்குத் தூண்டுகோல்களாக அமைகின்றன. கோயில்கள் கட்டுவதும், குளங்கள் வெட்டுவதும் பக்தி இயக்கத்தை ஊக்குவித்தன. குறிஞ்சிநில வெறியாட்டும் மருதநில நடுகல் வழிபாடும் நெய்தல் நிலச் சுறா வழிபாடும் (பட்டினப் பாலை 86 – 92) பிற்காலத்தே எழுந்த பக்தி இயக்க உருவ வழிபாட்டுக்கு அடிகோலின. அக்காலத் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கைகள் – பேய், பிசாசு, நிமித்தம், சோதிடம், குறி சொல்லுதல், காக்கை பலி, பல்லிசொல் போன்றவற்றிற்குச் சங்க இலக்கியம் சான்று தருகிறது. மனை உறை மகளுக்குக் கற்பும் ஆடவர்க்கு வினையும் இலக்கணங்களாயின. ஆடவன் மேன்மைபெற்றான். பெண் நிலை தாழ்கிறாள். பரத்தையர், பொதுமகளிர் பற்றி மதுரைக் காஞ்சியும் திருமணச் சடங்கு பற்றிக் குறிஞ்சிப் பாட்டும் எடுத்துக் கூறுகின்றன. மகளிர் தாழ்வுற்ற போதும் சங்ககாலத்தில் மகளிர் சில உரிமைகளோடு மேன்மையாக வாழ்ந்தனர், பிற்காலத்தே தாழ்ந்தனர் என வரலாற்று அறிஞர் கருதுவர்.

இப்பதிப்புரை இவ்வளவு நீண்டு விரிவாக அமைய வேண்டுமா எனப் பலர் ஐயம் கொள்ள நேரிடலாம். இது நியாயமானது. ஆயினும் முதன்

Koviloor Digital Library

முதலாகக் கன்னி முயற்சியாகச் சங்க இலக்கியத்தை நேரியமுறையில் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும், அவர்கள் பயனுறவேண்டும் என்னும் நன் நோக்கத்தோடு பதிப்புப் பணியை, பொறுப்பை எமது நிறுவனம் ஏற்றுக்கொண்டது. சங்க இலக்கியத்தின் சிறப்பைச் சற்றாவது எங்கள் நோக்கத்தோடு இணைத்துச் சொல்லவேண்டும் எனக் கருதினோம்.

கடந்த நூற்றாண்டில் தலைசிறந்த பதிப்பகங்கள் சங்க இலக்கியங்களின் மூலங்களையும், உரைகளையும், பழைய உரைகளையும், புத்துரைகளையும் பதிப்பித்துப் பெரும் பணியாற்றியுள்ளன. அப்பதிப்பகங்கள் எல்லாவற்றிற்கும் எங்கள் வெளியீட்டகம் கடன்பட்டுள்ளது. நன்றி நவில்கிறது. புத்தகப் பதிப்பில் உள்ள இடர்ப்பாடுகள் கண்டு அஞ்சி இவற்றை எல்லாம் புறம்கண்டு முன்னோடிகளாகப் பணியாற்றிய அப்பதிப்பகங்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

1957ஆம் ஆண்டு மர்ரே அண்டு கம்பெனி உரிமையாளர் திரு. ராஜம் அவர்கள் சங்க இலக்கியம், தொல்காப்பியம், கல்லாடம், கம்பராமாயணம், வில்லிபாரதம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவற்றை வெளியிட்டார். திறமையான ஆசிரியர் குழு இதற்காகப் பொறுப்பேற்றது. இலக்கண, சந்திப் பிழைகள் இன்றி அலகு பிரித்து அற்புதமான முறையில் முன்னுரையுடன் இவை வெளியிடப்பட்டன. ராஜம் மர்ரே கம்பெனியிடம் வெளியிடும் உரிமைபெற்று இவற்றில் சில நூல்களை என். சி. பி. எச் 1981ஆம் ஆண்டு வெளியிடத்தொடங்கிற்று. மக்களின் நல்லாதரவு கிடைத்தது.

இந்த நல்லாதரவு உந்த ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன் சங்க இலக்கியங்கள் உரையுடன் வெளியிடுவதற்குச் சிந்தித்தோம். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் **முனைவர் இ. சுந்தரமூர்த்தி** அவர்கள் உதவ முன்வந்தார்.

பழைய உரைகள் கற்பதற்குக் கடினமாக அமைந்துவிட்ட காரணத்தினால், மூலம் பழைய உரை ஆகியவற்றின் சிறப்பு, சிறிதளவும் சிதையாமல் அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர். உரைகள் புத்துரைகளாகவே அமைகின்றன. மூலத்தின் சிறப்பு உரையில் மிளிர்கிறது. பலபுதிய நுண்ணிய கருத்துகளையும் உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் ஆங்காங்கே எடுத்துச் சொல்லுகின்றனர். பழைய உரையாசிரியர்கள் குறிப்புகள் மிகுதியும் தருவர். இவ்வுரைகளில் உரையாசிரியர்கள்

Koviloor Digital Library

அருஞ்சொற்களுக்கும் சிறப்பிடம் தந்துள்ளனர்.

தலைமைப் பதிப்பாசிரியர்களாகப் பொறுப்பேற்றோர் முனைவர்கள் அ. மா. பரிமணம், கு. வெ. பாலசுப்பிரமணியன் ஆகிய இரு பெரும் அறிஞர்கள். இவர்களே சில நூல்களுக்கு உரையாசிரியர்களாகவும் பணி ஏற்றனர்.

கீழ்க்கண்ட அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர்.

நற்றிணை	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
குறுந்தொகை	–	முனைவர் வி. நாகராசன்
ஐங்குறுநூறு	–	முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
பதிற்றுப்பத்து	–	முனைவர் அ. ஆலிஸ்
பரிபாடல்	–	முனைவர் பெ. சுப்பிரமணியன்
		முனைவர் கு..வெ. பாலசுப்பிரமணியன்
		முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
கலித்தொகை	–	முனைவர் அ. விசுவநாதன்
அகநானூறு	–	முனைவர் இரா. செயபால்
புறநானூறு	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
		முனைவர் அ. விசுவநாதன்
		முனைவர் வி. நாகராசன்
		முனைவர் இரா. ஆரோக்கியசாமி
		முனைவர் க. திலகவதி
		முனைவர் வெ. சத்திய நாராயணன்
பத்துப்பாட்டு முதற் பகுதி	–	முனைவர் இரா. மோகன்
பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி	–	முனைவர் வி. நாகராசன்

இப் பேராசிரியப் பெருமக்களின் உரைத் திறனை வாசகப் பெருமக்கள் படித்தறியலாம். இவர்களுக்கு எங்கள் பதிப்பகத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி.

Koviloor Digital Library

உரை வரைந்து முடிந்த பின் பேராசிரியர்கள் அ:. மா. பரிமணம், அ. விசுவநாதன், பெ. சுப்பிரமணியன் மூவரும் இயற்கை எய்தினர். எங்கள் நிறுவனம் இவர்கள் பணிக்கு நன்றி செலுத்தி மறைவுக்குக் கைக்கூப்பி அஞ்சலி செய்கிறது.

இது மிகப்பெரும்பணி. ஏதேனும் பிழைகள் இருப்பின் வாசகப் பெருமக்கள் அன்புகூர்ந்து சுட்டிக்காட்டுவார்களேயானால் இனிவரும் பதிப்புகளில் செம்மை செய்ய இயலும்.

நியூ செஞ்சுரி நூல் வெளியீட்டகம் தோன்றிய பின் பாவை, அறிவு, தாமரை என்னும் துணைப்பதிப்பகங்கள் உருவமைந்தன. அனைத்தும் இணைந்து பதிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. நியூ செஞ்சுரி நூல் வெளியீட்டகம் 2001–ஆம் ஆண்டு பொன் விழா கண்டது.

எமது நிறுவனமும் துணை நிறுவனங்களும் பணியாற்றும் காலத்தில் பட்டி தொட்டிகளில் எல்லாம் இரவு பகல் பாராது பணிக் காலங்களில் ஊர்திகளைச் செலுத்திச் சென்று நூல் விற்பனை செய்த ஊழியர்கள், வெயில் பனி பாராது ஊர்கள் பலவற்றில் புத்தகக் கண்காட்சிகளில் பணியாற்றியவர்கள், கை எழுத்துப் படிகளைச் சரிபார்த்துத் தட்டச்சு, ஒளியச்சு செய்தல், மெய்ப்புத் திருத்துதல், செப்பனிடல், பதிப்புரை வரைதல் என்னும் பணி செய்பவர்கள், நூலாசிரியர்களுடனும் விற்பனையாளர்களுடனும் தொடர்பு கொள்ளுதல் என்னும் பணிகளில் ஒருங்கிணைந்து அயராது பணிசெய்த கிளை மேலாளர்கள், ஊழியர்கள் எல்லாருக்கும், கண் துஞ்சாது அயராது காலம் வருவாய் கருதாது பல்லாண்டுகள் உழைத்து எமது நிறுவனங்களை இந்த நிலைக்கு உயர்த்திய தொழிலாளத் தோழர்கட்கு அன்புக் காணிக்கையாக இந்தப் பதிப்பை நன்றியுடன் உரிமையாக்குகிறோம்.

ஆசிரியர் குழுவுக்காக, உரையாசிரியர் திறமையையும் தகைமையையும் பாராட்டி, தமிழ்ப் பெருமக்களின் உணர்வையும் ஆர்வத்தையும் பெருமிதத்தையும் தூண்டுதற்பொருட்டு இந்நீண்ட பதிப்புரையை எழுதலுற்றேன்.

வணக்கம்.

ஆர். பார்த்தசாரதி

[ஆசிரியர் குழுவுக்காக]

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

இருபதாம் நூற்றாண்டு சமூக, அரசியல், இலக்கிய மாற்றங்களுக்குப் பல்வேறு வகைகளில் தடம் பதித்தது. இந்த நூற்றாண்டின் ஆய்வுக் களத்துக்குரிய பலவும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. அச்சு ஊடகத்தின் உயரிய வெளிப்பாடாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்கியது. தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர்களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய இலக்கணப் பெருஞ்செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களே ஆவர். மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சுயந்திர வசதிகளும் கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழிவகுத்தன. ஆறுமுக நாவலர் (1822–1879), சி.வை. தாமோதரம் பிள்ளை (1832–1901), உ.வே. சாமிநாதையர் (1855–1942), வையாபுரிப்பிள்ளை (1891–1956) ஆகியோர் தமிழ்ப் பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்.

தம்பிரான் வணக்கம் (1557) தமிழில் அச்சுருவில் தோன்றிய முதல் நூல் என்பர். இந்நூலே இந்திய நாட்டில் முதன்முதல் அச்சுருப்பெற்ற நூல் என்பர். தொடக்க காலத்தில் கிறித்தவ சமய நூல்களே பெரும்பாலும் அச்சாகி வெளிவந்தன. ஏசு சபையினர் அம்பலக் காட்டிலும், புன்னைக்காயலிலும் அச்சகங்களை நிறுவி இந்நூல்களை வெளியிட்டனர். தமிழகத்தில் தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடம் ஏற்பட்டது (1712), இரட்சிப்பின் ஒழுக்கம் (1712), விவிலிய நூல் தமிழ் மொழிபெயர்ப்பு (1715), வேதசாஸ்திரம் (1718), ஞான உபதேசத்தின் குருபீடம் (1798) முதலாய பல நூல்கள் வெளிவந்தன. தரங்கம்பாடி அச்சகம் வெளியிட்ட தமிழ் அகராதிகள் (தமிழ், ஆங்கிலம்), பதிப்பு வரலாற்றிலும் அகராதிக் கலை வளர்ச்சி வரலாற்றிலும் தடம் பதித்து முன்னோடியாய் விளங்கின.

1810–க்குப் பின் தமிழில் புதிய பதிப்பு முயற்சிகள் தொடங்கின. சென்னைக் கல்விச் சங்கத்தார் வெளியிட்ட திருவேற்காடு சுப்பராய முதலியார் எழுதிய தமிழ் விளக்கம் (1811) தமிழில் எழுதிய உரைநடை இலக்கணம் ஆகும்.

Koviloor Digital Library

இன்று கிடைக்கும் இலக்கிய நூல்களுள் முதன்முதலில் அச்சுருவம் பெற்ற நூல் திருக்குறள். 1812–இல் திருக்குறள் மூலபாடம் வெளியிடப்பெற்றது. 'தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை மாநகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால்' அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூலின் பதிப்பு முறையும் நூலின் முன்னுரையும் தமிழ்ப்பதிப்பு நெறியின் வரலாற்றைச் சுட்டுவன. மூலபாடத் திறனாய்வுக்குரிய முன்னோடிப் பதிப்பாக இந்நூல் விளங்கியது.

பதிப்பு நூல்களுள் பின்வருவன முன்னோடி நூல்களாகக் கருதத் தக்கன. திருக்குறள் (எல்லிஸ் துரை 1812), இலக்கணச் சுருக்கம் (சிற்றம்பலதேசிகர் 1813), இராமாயண உத்தரகாண்டக் கதை 1815, சதுர் அகராதி (பெஸ்கி 1824), கணித தீபிகை (பண்டன ராமசாமி நாயக்கர் 1825), கதாமஞ்சரி (பஞ்சதந்திரம் தாண்டவராய முதலியார் 1826), தமிழ் அரிச்சுவடி (திருவேங்கட முதலியார் 1827), இலக்கண வினாவிடை (தாண்டவராய முதலியார் 1828), குமரகுருபரர் நீதி விளக்கம் (எம்ஸ்போக்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பு 1831), திருக்குறள் (விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் 1831), கம்பராமாயணம் (நரசிங்கதரையச் சருக்கம் 1843), திருக்குறள் (வேதகிரி முதலியார் 1849) முதலாய நூல்கள் பதிப்பு நூல்களுள் குறிப்பிடத்தக்கன. திருக்குறளைத் திருத்திய சுகாத்தியர் பதிப்பும் (1889) குறிப்பிடத்தக்கது. 1850–1900 ஆண்டுகளுக்கிடையே பல்வேறு நூல்கள் அச்சுருவம் பெறுகின்றன. திருமுருகாற்றுப்படை (1851) ஆறுமுக நாவலர், 1858–இல் வெளியிடப்பெற்ற தொல்காப்பியம் – நன்னூல் (சாமுவேல்பிள்ளை), 1887–இல் சி.வை. தாமோதரனாரின் கலித்தொகை, உ.வே. சாமிநாதையரின் பதிப்புகள் முதலானவை குறிப்பிடத்தக்கன. வையாபுரிப்பிள்ளை அவர்களின் சங்க இலக்கியம் (சமாஜப்பதிப்பு) பதிப்பு முயற்சிகளுள் தனித்த சிறப்புடையதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

சி. வை. தா., உ. வே. சா. ஆகியோரின் பதிப்பாய்வு முன்னுரைகள் தமிழ் ஆராய்ச்சியில் புதிய தடங்களைப் பதித்தன. 1856–இல் மொழி ஒப்பாய்வு குறித்துக் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' இருபதாம் நூற்றாண்டுக்குரிய ஆய்வுநெறியில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது. கால்டுவெலின் ஒப்பிலக்கணம் அவர்தம் கடுமையான உழைப்பின் பயனாகவும் அத்துறையில் முன்னோடி நூலாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகியன அவருக்குக் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

மலையாளமொழி அறிஞரான குண்டர்ட், தமிழ் அறிஞரான போப், கன்னட அறிஞர் கிட்டெல் ஆகியோர் சில திருத்தங்களைக் கூறினர். கால்டுவெல் அதனை ஏற்றுக்கொண்டு திருத்திப் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக்கழகம் இதனை வெளியிட்டது. இவ்வாய்விற்குப் பின் மாகறல் கார்த்திகேய முதலியாரின் மொழிநூல், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் 'தமிழ்ப்பாஷையின் வரலாறு' இவ்வகையில் தோன்றின. தெ.பொ.மீ அவர்களின் தமிழ்மொழி வரலாறு, மு.வ. அவர்களின் மொழி வரலாறு, மொழிநூல் முதலாயவை குறிப்பிடத்தக்கன. இந்த ஆய்வுநெறி அடிப்படையில் மொழி வரலாறு, மொழியியல், ஒப்பியல் மொழிநூல் முதலாய ஆய்வுகள் வளர்ந்தன.

தொல்காப்பியப் பதிப்பிற்குப் பின் (1846 சி.வை.தா., மழவை மகாலிங்க ஐயர்) அதனைத் தொடர்ந்து பல ஆய்வுகள் தோன்றின. தொல்காப்பிய வரதப்ப முதலியார் காலத்திற்குப்பின் இப்பயிற்சி (தொல்காப்பியப் பயிற்சி) வளர்ந்ததாகச் சி.வை.தா. தம் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவார். அரசஞ்சண்முகனார், மு. இராகவையங்கார், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், சி. கணேச ஐயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாராயண ஐயங்கார், சி. இலக்குவனார், தெ. பொ. மீ, வ. சுப. மா எனப் பலரும் இவ்வாய்வின் முன்னோடிகளாக விளங்குகின்றனர். அ. சிதம்பரநாதனாரின் தமிழ் யாப்பியல் சிறப்பாய்வு (Advanced Studies in Tamil Poetry) குறிப்பிடத்தக்க ஆய்வாகும். தொல்காப்பிய மேற்கோள் விளக்க அகராதி (நாகமணி அடிகள், 1942), தொல்காப்பிய நன்னூல் ஒப்பாய்வு, மொழியியல் நோக்கில் ஒப்பாய்வு நூல்கள் தொல்காப்பிய ஆய்வடங்கல் முதலானவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

சங்க இலக்கிய ஆய்வுகளுள் முன்னோடியாய் விளங்குவது அறிஞர் கனகசபைப்பிள்ளையின் '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' (1904) என்னும் நூல். இது **Madras Review** என்னும் இதழில் தொடர் கட்டுரையாக வெளிவந்தது (1895–1901). இந்நூலை ஆர்.சி. மஜூம்தார் முதலாய வரலாற்று அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தனர். கே.என். சிவராசபிள்ளை (The Chronology of Early Tamils), பெ. சுந்தரம்பிள்ளை (Some Milestones in the History of Tamil Literature), பி.டி. சீனிவாச ஐயங்கார் (History of Tamils), வேங்கடராசலு ரெட்டியார் (கபிலர், பரணர்), தெ.பொ.மீ (சங்க காலம்), கமில சுவலபில் (History of Tamil Literature), கைலாசபதி (Tamil Heroic

Koviloor Digital Library

Poetry), கா. சிவத்தம்பி (The Literary History of Tamil), ஏ.கே. இராமானுசன் (Interior Landscape), மு. வரதராசனார் (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை), வ.சுப.மாணிக்கம் (தமிழ்க்காதல்), தனிநாயக அடிகளார் (Landscape and Poetry), ந. சுப்பிரமணியன் (சங்ககால வாழ்வியல் Sangam Polity), தமிழண்ணல் (Tradition and Talent in Cankam Poetry) போன்றோர் சங்க இலக்கிய ஆய்வில் தடம்பதித்துள்ளனர்.

நீதி நூல்களுள் திருக்குறள் குறித்து ஏறத்தாழ இரண்டாயிரம் நூல்களுக்குமேல் வெளிவந்துள்ளன. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் வாயிலாக அரிய ஆய்வுநூல்கள் வெளிவந்துள்ளன. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற திருக்குறள் நீதி இலக்கியம் ஒப்பாய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கது (க.த. திருநாவுக்கரசு : 1971). சக்கரவர்த்தி நயினாரின் திருக்குறள் ஆய்வு நூல் முன்னோடி நூலாக விளங்குகின்றது. காலந்தோறும் திருக்குறளுக்குப் பல்வேறு துறைகளிலும் நூல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

மொழிஞாயிறு பாவாணரின் மொழியாய்வு, சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், மாந்த நாகரிகம், தமிழ் உயர் தனிச் செம்மொழி முதலாய நூல்கள் ஆய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கன. அறிஞர் சாமி சிதம்பரனார், வெ. சாமிநாதசர்மா, மயிலை சீனிவேங்கடசாமி, சிலம்புச்செல்வர் ம.பொ.சி, சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, ந. சஞ்சீவி முதலாய அறிஞர்களின் ஆய்வு நூல்களுள் சங்க இலக்கியம் குறித்த புதிய ஆய்வுத் தடங்களைக் காணலாம். மறைமலையடிகளார் இவ்வகை ஆய்விற்கு அடிகோலினார். தமிழாராய்ச்சியின் வளர்ச்சி குறித்து ஆராய்ந்த ஏ.வி. சுப்பிரமணிய ஐயரின் நூல் புதுவகையானது. நா. வானமாமலை ஆராய்ச்சிக்குப் புதிய பார்வை தந்து பல ஆய்வு நூல்களை வெளியிட்டார். கோவை கிழார் பல்துறை ஆய்வுகளையும் வளர்த்து முன்னோடியாய் விளங்கினார்.

இரண்டு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தமிழியல் ஆய்வுகள் வளர்ந்த வண்ணமுள்ளன. உரையாசிரியர்கள் ஒருவகையில் ஆய்வு நெறிகட்கு முன்னோடியாய் அமைந்து விளங்கினர். இருபதாம் நூற்றாண்டில் தமிழியல் ஆய்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுத் திகழ்ந்தது. எதிர்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு இவை அடித்தளமாய் அமைந்து புதிய பார்வைகளையும், புதிய வீச்சினையும் தமிழ் ஆய்வியல்நெறி பெறும் என்று நம்பலாம்.

Koviloor Digital Library

தமிழிலக்கிய மரபில் தனிச் சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூகப் பின்னணியையும் வாழ்க்கை நெறிமுறையையும் சங்க இலக்கியங்கள் மூலமே இன்று நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. பழமை வாய்ந்த சங்க இலக்கியத்தை முன்னையோர் அகத்திணை, புறத்திணை என இருவகைப்படுத்தியுள்ளனர். சங்கப் பாடல்களுள் ஏறத்தாழ முக்கால் பகுதி அகத்திணைப் பாடல்களாகும். 2381 பாடல்களுள் 1862 பாடல்கள் அகப்பாடல்கள். சங்கப் புலவர்களின் எண்ணிக்கை 473. அகப்பாடல்கள் பாடியோர் 378. எனவே சங்க இலக்கியப் பாடல்களுள் முதன்மையாகத் திகழ்வது அகத்திணையேயாகும்.

முதன்முதலில் சங்கப் புலவர்கள் பலரும் பாடிய பாடல்களைத் தொகுத்துத் தந்த முன்னை அறிஞரின் பெருமுயற்சி பெரிதும் எண்ணுதற்குரியது. 'பாட்டும் தொகையும்' எனத் தொகுத்துப் பலரும் பாடிய பாடல்களுக்கு வாழ்வு தந்த பெருமக்கள் பண்டைய அறிஞர்களாவர். தொகுத்தோன், தொகுப்பித்தோர் என்று சங்க நூல்கள் தொகுத்த காலத்திலேயே அவர்களைப் பதிவுசெய்து நூல் தொகுப்பு வரலாற்றில் போற்றப்படுகின்றனர்.

சங்கச் செய்யுள்களைப் பழந்தமிழ்ச்சுவடிகள் போற்றிப் பாதுகாத்து இன்றைய தலைமுறைக்குத் தந்தன. அச்சுவடிகளைப் பொன்னேபோல் போற்றி எழுதிய பெருமக்களுள் ஒருவர் சங்க இலக்கியத்தைச் சுவடியில் படியெடுத்துத் தந்த நெல்லை நாயகம் என்பவர். சங்க இலக்கிய ஓலைச்சுவடி ஒன்றின் இறுதியேட்டில் (சுமார் முந்நூறு ஆண்டு காலப் பழைமையது) உணர்வு மிகுந்த நடையில் தன்னைப் பற்றிய குறிப்பை அவர் பின்வருமாறு சுட்டுவது பெரிதும் கருதத்தக்கது.

> 'சங்க இலக்கியத்தை அனுசரிக்கும் மகாவித்துவான்களுக்குத்
> தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து'

என்னும் அந்தக் குறிப்பு அக்காலத்திய அறிஞர்தம் மன உணர்வைக் காட்டும். இந்தக் குறிப்பினைக் கல்கத்தா தேசிய நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ள ஓலைச்சுவடியில் காணமுடிகின்றது. இங்ஙனம் காலந்தோறும் சுவடிகள் மூலம் சங்க இலக்கியத்தைப் போற்றிப் பாதுகாத்துத் தந்த தமிழறிஞர்களை நினைவுகூர்வது பொருத்தமாகும்.

> பழம் சங்கப் பனுவலைக் கற்றால்
> கிழம்போகும் கீழ்மையும் போம்.

என்று பாராட்டிப் போற்றினார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார்.

Koviloor Digital Library

சங்க இலக்கியப் பயிற்சியைக் காலந்தோறும் போற்றி வந்தமையை வரலாறு நமக்குக் காட்டும். இன்று சங்க இலக்கியம் குறித்துப் பல்வேறு பார்வைகளில் ஆய்வுநூல்கள் வந்துள்ளன. இத்தகைய ஆய்வு நூல்களுக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர்கள் சென்ற நூற்றாண்டில் சங்க இலக்கியத்தைப் பதிப்பித்துத் தந்த பேரறிஞர்களே ஆவர். சுவடியினின்றும் சங்க இலக்கியத்தை அச்சுவடிவில் கொண்டுவருவதற்கு அவர்கள் பெருமுயற்சி எடுத்து உழைத்தனர்.

சங்க நூல்களுள் கலித்தொகை 1887ஆம் ஆண்டில் முதன்முதலாக அச்சிடப்பெற்றது. (இதற்கு முன்னர் திருமுருகாற்றுப்படையை மட்டும் ஆறுமுக நாவலர் 1851–ல் வெளியிட்டார்) யாழ்ப்பானத் தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இதனைப் பதிப்பித்து அறிமுகம் செய்தார். பதிப்புலகில் பெரும்புகழ் பூத்து விளங்கிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் 1889–ல் பத்துப்பாட்டு நூலினை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். பின்னர் இப்பணியைத் தொடர்ந்து உ.வே.சா. அவர்கள் புறநானூறு (1894) ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகிய நூல்களை வெளியிட்டார்.

சங்க நூல்கள் முதன்முதலில் அச்சான விவரங்கள் வருமாறு:

திருமுருகாற்றுப்படை	–ஆறுமுக நாவலர்	1851
கலித்தொகை	–சி.வை. தாமோதரம்பிள்ளை	1887
பத்துப்பாட்டு	–உ.வே. சாமிநாதையர்	1889
புறநானூறு	–உ.வே. சாமிநாதையர்	1894
ஐங்குறுநூறு	–உ.வே. சாமிநாதையர்	1903
முல்லைப்பாட்டு	–மறைமலையடிகள்	1903
பதிற்றுப்பத்து	–உ.வே. சாமிநாதையர்	1904
பட்டினப்பாலை	–மறைமலையடிகள்	1906
பொருநராற்றுப்படை	–வா. மகாதேவமுதலியார்	1907
குறுந்தொகை	–சௌரிப்பெருமாள் அரங்கனார்	1915

Koviloor Digital Library

நற்றிணை	–பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்	1915
பரிபாடல்	–உ.வே. சாமிநாதையர்	1918
அகநானூறு	–ரா. இராகவையங்கார்	1918

இவற்றைத் தொடர்ந்து சங்க இலக்கியங்களுக்குப் பல்வேறு வகைகளில் நூல்கள் எழுந்தன. பழைய உரைகளைப் பதிப்பித்தனர். புத்துரைகளும், விளக்கவுரைகளும், எளிய உரைகளும் எனப் பொதுமக்கள் எளிதில் படித்துணர்ந்துகொள்ளுமாறு பல வகைகள் தோன்றின. ஒவ்வொரு நூலுக்கும் திறனாய்வு நோக்கிலும் பல நூல்கள் எழுந்தன. அறிஞர்கள் எளிமையான விளக்கங்களுடன் சங்க இலக்கியத்தை மக்கட்கு அறிமுகம் செய்தமை பெரிதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் 'சங்க இலக்கியம் – பாட்டும் தொகையும் என்னும் சமாஜப் பதிப்பு (1940) சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். தொகை நூல்களைப் பழைய உரையுடனோ அல்லது புதிய எளிய உரையுடனோ தொகைவாரியாகக் கற்ற நிலையிலிருந்து மாறிப் புலவர் வாரியாகக் கற்கும் நெறியை இப்பதிப்பு புதுநெறியாகக் காட்டியது. சங்கப் பாடல்களை உரையின்றி உணர்ந்துகொள்வதற்கு ஏற்பச் சந்தி பிரித்துப் பதிப்பிக்கும் முறையினையும் பேராசிரியர் அறிமுகம் செய்து வெற்றிபெற்றார்.

மரபுப்பாங்கான முறை வைப்பிலிருந்து மாற்றிப் புலவர் வரிசையில் சங்கப் பாடல்களை அமைத்தார். இப்பதிப்பால் பல்வேறு வகைப் பதிப்புகளும் ஆய்வு நூல்களும் தோன்றின. திணைவாரியான பதிப்புகள், திறனாய்வு அடிப்படையில் அமைந்த ஒரு புலவரின் பாடல் தொகைகளின் ஆய்வு முதலாயவை தோன்றின. சங்க இலக்கியப் பதிப்புகளுள் இப்பதிப்பு பல்வேறு நிலைகளில் தனிச் சிறப்புப் பெற்றதாகும்.

சங்கச் செய்யுள்களை உரையின்றிப் படிக்கும் காலம் மிகப் பழங்காலத்தில் இருந்திருக்கவேண்டும். காலம் செல்லச் செல்ல உரையிலக்கணமும் தேவைப்பட்டது. உரைநடையில் சங்கச் செய்யுட்களுக்கு விளக்கம் தோன்றிற்று. அறிவுத் தேடலின் வளர்ச்சியில் இக்காலகட்டம் பெரிதும் நினைவுகூரத் தக்கதாகும். உரையின் வரலாறும் தோற்றம் கொள்கின்றது.

மொழியின் தொன்மையையும் தோன்றிய காலத்தையும் வரையறை செய்வது என்பது இயலாததொன்று. மனித வரலாறு காலத்தால் நீண்டு

Koviloor Digital Library

செல்வதைப்போலவே மொழியின் வரலாறும் நீண்டு செல்கிறது. சில மொழிகளில் உரைநடைத் தோற்றத்தையும் வரலாற்றையும் வரையறை செய்வது இயலாததொன்றாக உள்ளது. மொழியின் கூறுகளுள் பாட்டும் உரையும் முதன்மையானவை. தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்களுள் முதன்மையானதாகிய தொல்காப்பியம் செய்யுளைப் பற்றியும் உரைநடையினைப் பற்றியும் சுட்டிச்செல்வது இங்கு உளங்கொளத்தக்கது. எனவே பாட்டும் உரையும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழில் வழங்கிவருகின்றன என்பது வெள்ளிடைமலை.

மிகப் பழங்காலத்தில், மக்கள் செய்யுள் வடிவிலேயே தங்கள் கருத்தை எளிதில் விளக்கும் திறன் பெற்றிருந்தவர்களாய் இருந்திருத்தல் வேண்டும். விரிவுரை விளக்கங்கள் இன்றியே பொருளுணர்ந்த காலமும் இருந்தது.

இக்கருத்தை 'உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலம் உண்டு' என்றும், 'உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் என்பது கருத்து' என்றும் பேராசிரியர் மரபியலில் விளங்க உரைப்பதால் புலனாகிறது.

உரை என்ற சொல்லும் தமிழில் 'சொல்' என்றே பொருள் விளங்குமாறு அமைந்துள்ளதும் வாய்மொழி இலக்கியமாக இவை முன் இருந்தன என்பதற்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது என்பர்.

'கற்றலினும் கேட்டலே நன்று' என்று கேள்விச் செல்வத்தைப் பழங்காலத்தில் போற்றினர். செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்கும்பான்மை அக்காலத்தில் மிகுதியும் வழக்கில் இருந்தது. 'கேள்வி' என ஓர் அதிகார அமைப்பே குறளில் உள்ளது கருதத்தக்கது. 'மாணாக்கர் பாடம் கேட்கும் இயல்பு' என்றே இதற்கு மயிலைநாதர் விளக்கமும் தருவர். இவை எல்லாம் உரை எழுதி நூற்களைப் படிப்பதைவிடப் பிறரிடமிருந்து கேட்டுக் கல்வி பயின்ற வழக்கம் அக்காலத்தில் மிகுதியும் இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

அக்காலத்து எழுது கருவிகளும் எழுதும் கலை விரைவில் வளரத் தடையாய் இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாட்கள் எழுதிச் சேர்த்துச் சுவடியாக்கிப் போற்றிக் காக்கவேண்டிய நிலை இருந்துவந்தது. ஒரே சுவடியைப் பலர் கூடிக் கற்கும் நிலையும் இருந்தது.

Koviloor Digital Library

ஒருவர் படிக்க மற்றவர் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்கவேண்டியவற்றை எழுதாமல் வாயால் கூறியே விளக்கிவந்தனர். 'விரிப்பின் பெருகும்; விரிவஞ்சி விடுத்தாம்; வல்லார்வாய்க் கேட்டுணர்க; வந்தவழிக் காண்க' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச்செல்லும் வழக்கம் அக்காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை உணர்த்தும். நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி கற்றுப் புலமைபெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது. எனவே பலமுறை வாய்மொழியாக வழங்கி வந்த உரைகளே பின்னர் எழுதும் பேறுபெற்று அழியாநிலை பெற்றன எனலாம்.

இறையனார் அகப்பொருள் உரை பல தலைமுறைகளாக வாய்மொழியாக வந்தது என்பதற்கு அவ்வுரையிலேயே அகச்சான்று உண்டு.

'மதுரை ஆலவாயிற் பெருமானடிகளால் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு குமாரசுவாமியால் கேட்கப்பட்டது என்று'

'இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்'

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார், இங்ஙனம் வருகின்றது உரை'

என்னும் பகுதி உரையின் வாய்மொழி வரலாற்றை நன்கு உணர்த்தும்.

காலப்போக்கில் இவ்வுரை விளக்கங்களே பல்வேறு வடிவம் பெற்றன. விளக்கங்கள் மிகுதியாக நினைவில் நிறுத்துவதும் அரியதாயிற்று. எனவே உரைகளை எழுதி வைத்துப் போற்றவேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இந்நிலை ஏற்பட்டபோதும் அக்காலத்தில் எழுதுவதில் இருந்த தொல்லைகளால் முதலில் உரைகள் குறிப்புரைகளாகவே

Koviloor Digital Library

அமைந்தன. விரிவும் விளக்கமுமமைந்த உரையாக அமையவில்லை. அருஞ்சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டுகூட்டி முடிக்கும் முறையும் நினைவிற்காகச் சில வரலாற்றுக் குறிப்புகளுமே கொண்டு அமைந்தன.

சான்றாகச் சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையைக் கொள்ளலாம். மேலும் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் எனும் சங்கத்தொகை நூல்களுக்குக் குறிப்புரைகளே முதலில் இயற்றப்பட்டன. அகநானூற்றிற்கும் (தொண்ணூறு பாடல்கள்) பழைய உரை குறிப்புரையாகவே கிடைத்துள்ளது. புறநானூற்றில் பழைய உரை பொழிப்புரையாகவே உள்ளது. பின்னர் எழுந்த உரைகள் விளக்கவுரைகளாக மலர்ந்தன.

கருத்துக்கள் வளர வளரப் பொழிப்புரை, விளக்கம், மேற்கோள் முதலியன உரைகளில் இடம்பெற்று வளர்ச்சியுற்றன. இக்கருத்திற்கு அரண் செய்யும் வகையில் சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையைத் தொடர்ந்து அடியார்க்கு நல்லாரின் உரை எழுந்தது.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை முதன்முதலில் சிலப்பதிகாரமே 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று போற்றப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் தொடர்ந்து உரைநடை வருவதைக் காண இயலாது. உரைபெறு கட்டுரை, உரைப்பாட்டு மடை முதலிய தலைப்புக்களில் உரைநடை இடையிடையே வருகின்றது. அரும்பத உரையாசிரியர் 'உரைப்பாட்டு மடை' என்பதற்கு 'உரையாகிய பாட்டை இடை மடுப்பது' என உரை எழுதுவர்.

உரையின் வளர்ச்சி மூலபாடம் சொல்லல், கருத்துரைத்தல், சொல் வருவித்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங்காட்டல், விரிவுகாட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனொடுபடுத்தல், ஆசிரிய வசனம் காட்டல் என்று பலவகைகளாக விரிந்தது என்பதை மயிலைநாதர் உரையால் அறியமுடிகிறது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்து, பின் தோன்றாது நின்ற உரைநடை, சிலப்பதிகார காலத்தில் மறைவாகத் தோன்றி மறுபடியும் சில நூற்றாண்டுகள் கழித்தே வளர்ச்சியுற்றது என்ற கருத்து இங்குக் கருதத்தக்கது.

இறையனார் களவியலுக்கு உரை வகுத்த நக்கீரர் காலத்திலிருந்துதான் (கி. பி. எட்டாம் நூற்றாண்டு) உரை வரலாற்றின் சிறப்பு தொடங்குகிறது என்பர். ஒரு நூல் முழுமைக்கும் முழு உரையாகவும் முழுமைபெற்ற உரையாகவும்

Koviloor Digital Library

விளங்குவது நக்கீரரின் இறையனார் களவியல் உரையே ஆகும். எனவே இதனை உரைநடையின் ஊற்றிடம் என்று கூறுவர்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை தமிழ் உரைநடை செழித்து வளர்ந்தோங்கியது. இக்காலத்தில் பல்வேறு பழந்தமிழ் நூல்களுக்கு உரைகள் எழுந்தன. அறிஞர் இக்காலத்தைத் தமிழ் உரைநடை வரலாற்றின் பொற்காலம் என்பர்.

சோழப் பெருமன்னர் ஆட்சி மிகச் சிறப்புற்று விளங்கிய இக்காலத்திலே சைவ சித்தாந்தம், விசிஷ்டாத்துவிதம் முதலிய' தத்துவக் கொள்கைகள் நாட்டிலே பரவின. அவை முதன்முதலாகச் செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ள நூல்களிலேயே வரலாயின. அந்நூல்களிற் காணப்படும் கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக விளக்குதற் பொருட்டு அவற்றிற்கு உரைகள் வகுக்கப்படலாயின. தத்துவக் கொள்கைகளைத் தருக்க முறைப்படி விளக்க வேண்டியிருந்ததனாலே தமிழ் உரைநடை ஒரு புது வழியில் விருத்தியடையலாயிற்று என்று தமிழ் உரைநடை வளர்ச்சிக்கான இக்காலச் சூழலை அறிஞர் ஆராய்ந்து கூறுவர்.

இவ்வுரை நூல்கள் எழுந்த காலச்சூழலை 'மீட்சி இயக்கம்' என்று கூறும் அறிஞரின் கருத்தும் இங்கு எண்ணுதற்குரியதாகும்.

இடைக்காலத்தில் வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமி:ழிற் குடிபுகுந்தன. பல்வேறு நல்லியல்புகளும், தமிழில் வந்தமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீய தன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம், நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்துபோயின; அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கி விட்டன. அக்காலத்துக் கல்வியாளர் சிலர் சங்கத்தமிழின் மீதும் அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின் மீதும் பொதுமக்கள் பற்றுக்கொண்டு கற்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணினர். இதனால் சங்கத்தமிழுக்கு மீட்சி இயக்கம் **(Return to Classicism)** நிகழ்வதாயிற்று. இம்மீட்சி இயக்கத்திற்கு அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும், அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன. ஒரு வலுவான இலக்கிய இயக்கத்தின் விளைவாகவே தோன்றிய, இந்த இயக்கம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிச் சுமார் மூன்று நூற்றாண்டுகள்வரை தமிழ் இலக்கிய உலகில் சக்தியுடன் இயங்கியது என்பர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

Koviloor Digital Library

இக்காலத்தை ஒட்டியே சற்று முன்னும் பின்னுமாக வேதாந்த தத்துவங்கட்கு வடமொழியில் சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரால் சூத்திரங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றிற்குப் பல பேருரைகள் எழுந்தன. வைணவ நூல்களுக்கு மணிப்பிரவாள உரைகளும் மலர்ந்தன.

இவ்வாறு வடமொழி உரைகள் பல எழுந்ததை ஒப்பிட்டுப் பார்த்தால் இக்காலத்திலேயே இரு மொழிகளிலும் உரைநூல்கள் தோன்றி வளர்ந்தன என்பது புலனாகும்.

குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப் பசி' தலையெடுக்கின்றபொழுது, தங்கள் பழம்பெரும் நூல்களுக்குத் தங்கள் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தர அக்காலத்திய அறிஞர்கள் முயலுகின்றனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்றபொழுதும், பழமையில் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் அவர்கள் தங்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதுகின்றனர். எனவே இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்களின் சிந்தனை வளர்ச்சியே உரையெனலாம்.

இடைக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர் சிறந்து விளங்கிய பண்டைக்கால நூல்களுக்கு உரைகள் எழுதுவதன் மூலமே தங்கள் ஆராய்ச்சிக்கு உருவம் கொடுத்தனர். உரை எழுதுவதை அரிய இலக்கிய ஆக்க முயற்சியாகவே கருதித் தமிழ்ப் புலவர் அதைக் கையாண்டனர்.

எனவே பண்டையோர் நூல்களுக்கு உரையெழுதும் முயற்சிகளை இலக்கிய ஆராய்ச்சியாகவும், இலக்கிய ஆக்க முயற்சியாகவுமே கருதினர் என்பது புலனாகும்.

தொல்காப்பியர் உரையின் வகைகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தி உரைப்பர். அவை காண்டிகை உரை, விருத்தி உரை என்பன. இறையனார் அகப்பொருள் உரை கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என நான்கு வகைகளைக் குறிக்கின்றது. நம்பியகப் பொருள் இந்நான்கு வகைகளையும் பின்வருமாறு விளக்குவது உளங்கொளத்தக்கது.

"அவற்றுள் கருத்து உரைத்தலாவது, சூத்திரத்தின்
உட்கோள் உரைத்தல்,

கண்ணழித்தலாவது சூத்திரத்துள் சொற்றோறும்
பொருள் உரைத்தல்,

Koviloor Digital Library

பொழிப்புத் திரட்டலாவது சூத்திரத்துப் பொருளை
யெல்லாம் தொகுத்துரைத்தல்,

அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை
செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து
விரித்துரைத்தல்.''

யாப்பருங்கல விருத்தியுரையும் உரைகள் பத்துவகைக் குற்றங்களின்றியும், பத்துவகை அழகுகள் பொருந்தியும் எழுவகை மதங்கள் பொருந்தியும் அமைதல் வேண்டும் என்பதனை,

முத்திறத்தானும், மூவிரு விகற்பினும்
பத்து விதத்தானும், பதின்மூன்று திறத்தானும்
எழுவகையானும், இரண்டு கூற்றானும்
வழுவு நனிநீங்க, மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத்துரைப்பது சூத்திர உரையே

என்னும் நூற்பாவால் உரை இலக்கணத்தை நன்கு விரித்துக் காட்டும்.

இவற்றுள் முத்திறம் என்பது பொழிப்பு, அகலம், நுட்பம் என மூன்று வகைப்படும்.

மூவிரு விகற்பமாவது எடுத்துக்காட்டல், பதம் காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், விடுதல் ஆகியனவாம்.

பத்துவிதமாவன,

சொல்லே சொற்பொருள் சோதனை மறைநிலை
இலேசே எச்சம் நோக்கே துணிபே
கருத்தே செலுத்தலென் றீரைங் கிளவியும்
நெறிபட வருவது பனுவல் உரையே

என்னும் நூற்பாவால் விளக்கப்படுகின்றன.

பதின்மூன்று திறமாவன, சூத்திரம் தோன்றல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடம் காட்டல், உதாரணம் காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல் என்பன.

எழுவகை பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், பதப்பொருள் உரைத்தல், ஏற்புழிக்கோடல், எண்ணல் என்பன.

Koviloor Digital Library

இரண்டு கூறாவன தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல் என இவை.

பத்துவகை வழுக்களாவன, குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயன் இன்மை ஆகியன. இவ்வழுக்கள் இன்றி உரை அமைக்கப்படல் என்று மேலும் வலியுறுத்தும்.

உரை, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசை உடைமை, ஆழமுடைத்தாதல், உலகமலையாமை, முறையின் வைத்தல், விளங்குதாரணத்தாகுதல் ஆகிய மாண்புகள் பொருந்தியிருத்தல் வேண்டும் என்று கூறும்.

எழுவகை ஆசிரிய மதங்களையும்கொண்டு உரை அமையும் என்று உரைக்கும், அவை உடன்படல், மறுத்தல், பிறர் தம் மத மேற்கொண்டு களைதல், தாஅனாட்டித் தனாது நிறுத்தல், இருவர் மாறுகோள் ஒருதலை துணிதல், பிற நூற்குற்றம் காட்டல், ஏனைப் பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல் என்பன.

இவை உரை இலக்கணத்தினைப் பற்றிய யாப்பருங்கல விருத்தியுரையின் கொள்கைகளாம். நன்னூலார் கூறும் இலக்கணத்தினையே இவ்வுரை விரித்துரைக்கின்றது எனலாம்.

இங்ஙனம் முன்னோர் நெறியில் யாப்பருங்கல விருத்தியுரை, இறுதியில்,

'எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளவற்றுள் யாதானும் ஒருவகையாற் கேட்போர் உணர்வு புலன் கொள்ளுமாற்றால் எடுத்துக்கொண்ட சூத்திரப் பொருள் உரைக்க வேண்டும்'

என்றுரைப்பது எண்ணுதற்குரியதாகும்.

இங்ஙனம் கூறிய உரைப்பண்புகள் அனைத்தும் இலக்கண நூற்பாக்களுக்கு உரியன எனினும் இப்பண்புகளே பொதுவாக இலக்கிய உரைகளுக்கும் பெரிதும் பொருந்தும் எனலாம். சான்றாக இவ்விலக்கண நூல்களுக்கு முன்னர்த் தோன்றிய அற இலக்கியமாகிய நாலடியாரும் ஒரு நூலின் உரை எவ்வாறு அமைந்து விளங்கவேண்டும் என்பதனைக் கீழ்வருமாறு சுட்டுகிறது:

Koviloor Digital Library

பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் பழிப்பி
னிரையாமோ சேர்க்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலிற்கு நன்று

இச்செய்யுளுக்கு உரை எழுதிய பதுமனார் திரண்ட பொருளைச் சொல்லலும் விரித்துரைத்தலும், கடாவும் விடையுமாகச் சொல்லுதலும், இலேசான பொருளை உரைத்தலும் என உரையியல்புகளைக் கூறுவதும் உளங்கொளத்தக்கது.

இத்தகைய உரைப் பின்புலங்களைக் கண்டறிந்து உரையாசிரியர்கள் பழஞ்சங்கச் செய்யுட்களுக்கு உரைகண்டுள்ளனர். இன்றைய சூழலில் காலத்திற்கேற்றவாறு உரையினை எளிமைப்படுத்தி உரை எழுதவேண்டியது இன்றியமையாததாகும். இவ்வகையில் சங்க இலக்கியம் முழுமைக்கும் எளிய உரை எழுதும் திட்டத்தை மேற்கொண்டுள்ள என்.சி.பி.எச். புத்தக நிறுவனத்தாரின் பெருமுயற்சி வரவேற்கத்தக்கது.

சங்க இலக்கியம் பழந்தமிழரின் அரிய பண்பு நலனையும், சமூக வரலாற்றையும் காட்டும் காலப் பெட்டகம். சங்க இலக்கியம் முழுவதையும் உரையோடு பதிப்பிக்கும் அரிய முயற்சியில் என்.சி.பி.எச். நிறுவனம் நன்கு திட்டமிட்டு இப்பொழுது சுமார் 8000 பக்கங்களில் பல தொகுதிகளாக வெளிக்கொணர்வது பெரிதும் பாராட்டத்தக்கது.

தமிழறிஞர் பலரையும் இப்பணியில் ஈடுபடுத்தி அவர்களுடைய அரிய உழைப்பால் இத்தொகுதிகள் வெளிவருகின்றன. அறிஞர்கட்கும், பொதுமக்கட்கும், மாணவர்க்கும் ஒருசேரப் பயன்படுமாறு வடிவமைத்து இத்தொகுதிகளை உருவாக்கியுள்ளனர்.

இந்நூலுக்கு உரையெழுதிய ஆசிரியப் பெருமக்கள் பலரும் பல்லாண்டு காலம் மாணவர்க்குச் சங்க இலக்கியத்தைக் கற்றுத்தந்தவர்கள். அவர்களுடைய பட்டறிவும் புலமையும் இவ்வுரையில் நன்கு புலனாகின்றன.

அனைவர்க்கும் நன்கு புரியுமாறு எளிய நடையில் உரையை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. பொழிப்புரையும், கருத்து விளக்கங்களும், சொல்லாய்வு நுட்பமும் படிப்போர்க்கு மூலத்தை நன்கு புரிந்துகொள்வதற்கு உதவியாய் அமைகின்றன. சிற்சில புதிய விளக்கங்களும் இவ்வுரையில் காணக்கிடப்பது உரையாசிரியர்களின் நூற்புலமையைக் காட்டுவன.

Koviloor Digital Library

சங்க இலக்கி .ப்பதிப்பு வரலாற்றில் இத்தொகுதிகள் தனித்த வரவேற்பைப் பெறும். தமிழ் இலக்கியத்திற்கு மேலும் செழுமைசேர்க்கும் அரிய தொகுதிகள்.

பழம் உரையாசிரியர்களின் பின்புலத்தில் இத்தொகுதிகள் புதிய விளக்கம் கண்டு உரைப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியப் பெருமக்களின் உரையை நன்கு கூர்ந்து ஆராய்ந்து உரைக்கு மேலும் செழுமைசேர்த்த முதன்மைப் பதிப்பாசிரியர்களின் பணியும் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

என்.சி.பி.எச். நிறுவனம் பல்லாண்டுகளுக்கு முன் சங்க இலக்கிய மூலத்தை (மர்ரே பதிப்பு) மறுபதிப்புச் செய்து வெளியிட்டுத் தொண்டாற்றியது. தொடர்ந்து பின்னர் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலான நூல்களுக்கு எளிய உரை எழுதி வெளியிட்டது.

இப்பொழுது அரியபெரிய முயற்சியை மேற்கொண்டு ஏறத்தாழ இருபது தொகுதிகளில் சங்க இலக்கியத்தை உரையோடு வெளியிட்டுப் பழந்தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளது. இவ்வரிய பணிக்குத் துணைநின்ற நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவருக்கும், மேலாண்மை இயக்குநருக்கும், அலுவலர்க்கும் தமிழ்கூறு நல்லுலகத்தின் நன்றியும் பாராட்டும் என்றும் உரியன.

சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றில் இத்தொகுதிகள் புதுவரவாக – நல்வரவாகத் திகழும். தமிழ்மக்கள் இத்தொகுதிகளை ஏற்றுப் போற்றுவார்களாக.

இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
19-11-2003.

இ. சுந்தரமூர்த்தி

Koviloor Digital Library

பதிப்பு முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் காலப்பழமை மிக்கன. தமிழர்தம் அறிவுவீறு, வினைத்திறம், வாழ்வியல் நலம், உள்ளச்செம்மை ஆகியன எல்லாம் அவ்விலக்கியங்களால் அறியப்பெறுகின்றன. ஒவ்வோர் எழுத்தும், அசையும், சீரும், அடியும் பற்பல பொருள்களை விரிக்கும் நிலையும் செறிவுற அமைந்த அப்பழஞ் செய்யுட்களை இன்று உரையின்றிப் பலராலும் பயில இயலாது. ஏன்? அந்நூல்கட்கு அமைந்த பழைய உரைகளும் இன்று விளங்கிக் கொள்ளப்பெறா. உள்ளுறை, இறைச்சி, குறிப்பு, அங்கதம் எனப் பற்பல பொருண்மைப் புதைவுகள் அச்செய்யுட்களில் பழந்தமிழ் உரையாசிரியர்கள் அகழ்ந்து அகழ்ந்து காட்டியும் விளக்கிக் கூறியும், ஒப்புமை உரைத்தும், மேற்கோள் சுட்டியும், இலக்கண அமைப்பைப் புலப்படுத்தியும் தத்தம் உரைகளில் கல்வி வித்தகம் காட்டினர். அப்பெருமக்கள் கூறிய உரையும், விளக்க நுட்பங்களும் அனைவராலும் உணர்ந்துகொள்ள இயலா. இன்றோ அந்தப் புத்தகங்களும் கிடைக்கப்பெறா நிலை! என்செய? இழப்பு குறித்து அவலித்துக் கண்ணெகிழ்ந்து அடங்குவதால் தமிழ் தழைக்குமா? இக்கால எளிய நிலையினர் ஏற்கவும், பழந்தமிழ் உரைகாரர்களின் பொருள் நுட்பம் புலப்படவும், சங்க நூற்கள் பதினெட்டுக்கும் உரை காண எண்ணிற்று "நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்". சங்க இலக்கியம் இக்கால மக்களின் இல்லமெலாம் பரவவேண்டும் எனவும், உலகெங்கும் பண்டைத்தமிழ் இலக்கியம் கற்க அவாவுநர் யார்க்கும் கையகத்து எளியதாய் அவ்விலக்கியம் கிடைக்க வேண்டுமெனவும், இந்நிறுவனம் எண்ணி ஒரு முன் வெளியீட்டுத் திட்டம் வரைந்து செயற்பட்டது.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையில் இருபது, சிந்தாமணி ஆகிய நூல்கட்கெல்லாம் விருத்தி கண்ட விச்சைவலான் நச்சினார்க்கினியனோ இன்று உள்ளான்! அத்தகு கல்விக்கும் ஒயா உழைப்பிற்கும் இக்காலப் பின்னோக்கு வாழ்வியல் இடமளிக்குமா? பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சௌரிப்பெருமாள் அரங்கனார், உ.வே. சாமிநாதையர், இரா. இராகவய்யங்கார்,

Koviloor Digital Library

இ. வை. அனந்தராமையர் (குறிப்புரை) ஔவை துரைசாமிப்பிள்ளை, பரிமேலழகர், ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, பொ. வே. சோமசுந்தரனார், அருளம்பலவனார் போன்ற பெரியோரெல்லாம் தம் அறிவான் உழுது ஆற்றலால் வளர்த்த உரைப்பயிர் போலவும் இக்காலத்தும் இயலுமா? இவ்வினாக்கட் கெல்லாம் விடைகாணும் முயற்சியில் எம் பதிப்புக்குழு செவ்விதின் முயன்று கண்டனவே இவ்வுரை இணர். பல்லாண்டுகள் ஆசிரியப் பணியில் தோய்ந்தும் அறிவாராய்ச்சியில் அமிழ்ந்தும், தாமின்புறுவது உலகின்புறக் கண்டு உவந்தும் நிற்கும் பெருமக்களிடம் இப்பணிகளை ஒப்புவித்தோம். பழைய உரைகளைத் தழுவியும் வேண்டுழி எளிமை செய்தும், சுருங்கக் கூறுமிடத்துச் சுருங்கக் கூறியும் விளக்கம் வேண்டுமிடத்து விளக்கியும், சொற்பிரித்தும், எடுத்துக்காட்டியும் இலக்கணக் குறிப்புரைத்தும் இப்பேராசிரியர்கள் உரை கண்டுள்ளனர்.

நற்றிணை	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
குறுந்தொகை	–	முனைவர் வி. நாகராசன்
ஐங்குறுநூறு	–	முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
பதிற்றுப்பத்து	–	முனைவர் அ. ஆலிஸ்
பரிபாடல்	–	முனைவர் பெ. சுப்பிரமணியன்
		முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
		முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
கலித்தொகை	–	முனைவர் அ. விசுவநாதன்
அகநானூறு	–	முனைவர் இரா. செயபால்
புறநானூறு	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
		முனைவர் அ. விசுவநாதன்
		முனைவர் வி. நாகராசன்
		முனைவர் இரா. ஆரோக்கியசாமி
		முனைவர் க. திலகவதி
		முனைவர் வெ. சத்திய நாராயணன்

Koviloor Digital Library

பத்துப்பாட்டு முதற் பகுதி – முனைவர் இரா. மோகன்

பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி – முனைவர் வி. நாகராசன்

இந்நூலில் அருஞ்சொல் நிரல்கள் பத்து நூல்களுக்கும் பின்னிணைப்பாக அமைந்துள்ளன. இந்நிரல்களை ஆக்கியோர் திரு. வெ. சத்தியநாராயணனும் திருமதி பிருந்தாஸ்ரீயும் ஆவர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மக்கள் கல்வியிலும், மாணவர் கல்வியிலும் ஆர்வம் மிகக் கொண்டது. பன்னூறு வெளியீடுகளைக் கொணர்ந்து நாடெங்கும் அறிவுப்புனல் பரக்க ஆக்கம் செய்யும் அரிய நிறுவனம். இந்நிறுவனத்தார் சங்க இலக்கியங்களை மீண்டும் வெளிக்கொணர்வது பாராட்டுக்குரிய நற்பணியாகும். நிறுவனத்தின் தலைமை இயக்குநர் மதிப்புறு **ஆர். நல்லகண்ணு** அவர்களுக்கும், மேலாண் இயக்குநர் மதிப்புறு **ஆர். இராதாகிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்கும் இம்முயற்சியில் அவர்க்குத் துணைபுரிந்த முன்னாள் செயலாளர், மறைந்த **மே. சுப்பிரமணியன்,** மண்டல நிர்வாகி, **தி. இரத்தினசபாபதி,** கிளை நிர்வாகி ச. சரவணன் ஆகியோர்க்கும் அச்சுப்பணி செய்தளித்த அனைத்து நிறுவனத்தினர்க்கும் தலைமைப் பதிப்பாசிரியர்கள் எனும் முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய செம்பதிப்புத் திட்டம் பதினெண் கீழ்க்கணக்கிற்கும் தொடர உள்ளது. தமிழ் மக்கள் இவற்றின் பயன்கொள்ள வேண்டுகிறோம்.

முனைவர் அ. மா. பரிமணம்
முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
(தலைமைப் பதிப்பாசிரியர்கள்)

Koviloor Digital Library

குறுந்தொகை மூலமும் உரையும்

உரை பற்றிய முன்னுரை

கடைச் சங்ககாலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை நானூறு அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் நூலாகும். இந்நூலின் பாடல்கள், நான்கடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையவை. ஆனால் ஒன்பதடியில் உள்ள 307, 391 ஆகிய இரு பாடல்களும் இத்தொகையில் இடம்பெற்றுள்ளன. 'நல்ல குறுந்தொகை' என்ற அடையுடன் இந்நூல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. தொகை நூல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பெற்றதாக இந்நூல் கூறப்படுகின்றது. இந்நூலின் பாடல்கள் பல, பல உரையாசிரியர்களால் பல்வேறு உரை விளக்கங்களில் மேற்கோளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலின் 165 செய்யுட்களே மேற்கோளாகப் பயன்படுத்தப் பெறாதவை. இறையனார் களவியல் உரையாசிரியர், குறுந்தொகை நானூறு என்று இந்நூலைக் குறிப்பிடுகின்றார். ஆனால் கடவுள் வாழ்த்து நீங்கலாக இந்நூலில் 401 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இத்தொகை நூலைத் தொகுத்தவர் பெயர் பூரிக்கோ என்றும், இத்தொகை பாடியோர் இருநூற்றைவர் என்றும் பழங்குறிப்பு ஒன்று காணப்படுகின்றது. இந்நூலில் உள்ள பத்துப் பாடல்களின் ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை. குறுந்தொகையின் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை வகுத்தார் என்றும், எஞ்சிய இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வழங்கினார் என்றும் நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால் உணரலாம். ஆனால் அவ்விருவர் உரையும் இன்றுவரை நமக்குக் கிடைத்தில. பெயர் அறியப்படாத சில பாடலகள், அப்பாடல்களில் அமைந்துள்ள தொடர்களால் குறிக்கப்பட்டுள்ளன.

1915–இல், திருக்கண்ணபுரம், திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கனார் என்பவர், திணைக் குறிப்புக்களுடன் உரையில்லாத பாடல்களுக்குப் புதிய உரை தந்து குறுந்தொகையைப் பதிப்பித்தார்.

1937–ல், டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறுந்தொகை மூலமும் உரையும் என இந்நூலை மிகச் சிறந்த ஓர் ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிட்டார். கூற்று, கூற்று விளக்கம், மூலம் பிரதிபேதம், பழைய கருத்து,

Koviloor Digital Library

ஆசிரியர் பெயர், பதவுரை, முடிவு, கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி எனப் பன்னிரு கூறுகளாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வொரு பாடலுக்கும் விரிவான விளக்கவுரை தந்துள்ளார். நூல் முகப்பில் முகவுரை, நூலாராய்ச்சி, பாடினோர், வரலாறு ஆகியவற்றையும், நூல் முடிவில் செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியவற்றையும் பெற்று இவருடைய பதிப்பு விளங்குகின்றது.

1946–இல் மகாவித்துவான், ரா. ராகவையங்கார் குறுந்தொகையின் முதல் 111 பாடல்களுக்குத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஆய்ந்து கண்ட விளக்கவுரை குறுந்தொகை விளக்கம் என்னும் நூலாக அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகத் தோன்றியது. இந்நூலின் எஞ்சிய பாடல்களுக்கு அவர் கையெழுத்துப் பிரதியாக எழுதி வைத்திருந்த உரைப்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை வெளியீடாக 1993–இல் தோன்றியது.

1957–இல் சென்னை, மர்ரே ராஜம் அவர்களின் பதிப்புக் குழுவினரால் பல பதிப்புக்களோடு ஒப்புநோக்கி, தக்க பாட வேறுபாடுகளைக் கண்டறிந்து யாவரும் உணர்ந்து கொள்வதற்கு எளிதாகச் சந்தி பிரித்து, பொருட்போக்கிற்கு ஏற்பச் சந்தி குறியீடுகளைப் பெற்று, திணை, பாடல், கூற்று என வகுக்கப்பெற்று ஒரு பதிப்பு வெளிவந்தது.

1955–இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் அவர்களைக் கொண்டு இந்நூலை விரிவான விளக்கவுரையுடன் வெளியிட்டது. இவ்வுரை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் உரையைப் பின்பற்றியதாகும்.

சென்னை மர்ரே ராஜம் பதிப்பினை ஏற்று, சந்தி பிரித்த மூலபாடத்தை நூலாக வெளியிட்ட நியூ செஞ்சுரி நூல் வெளியீட்டாளர், சங்க இலக்கியங்களை யாவரும் அறிந்து பயன்கொள்ளும் வண்ணம், உரை விளக்கத்துடன் வெளியிடுகின்றனர். அப்பணியின் ஒரு பகுதியாக அமைந்ததே 'குறுந்தொகை – மூலமும் உரையும்' என்ற இவ்வெளியீடாகும். இவ்வுரையமைப்பு, திணை பாகுபாடு, சந்தி பிரித்து எழுதப்பட்ட பாடலின் மூல பாடம், பாடற் பொருள், ஆசிரியர் பெயர், உரைப்பகுதி, விளக்கம், அருஞ்சொற் பெயர், உரைப்பகுதி, விளக்க்ம், அருஞ்சொற்பொருள்,

Koviloor Digital Library

மேற்கோள், பொருள் முடிபு என்ற அமைப்பினைப் பெற்று, பாடினோரும் பாடல்களும், பாடப்பட்டோர், சிறப்புப் பெயர் முதலிய பாடல் முதற்குறிப்பு அகராதி என்ற பின்னிணைப்புக்களுடன் வெளிவருகின்றது. இவ்வுரைப்பகுதி டாக்டர். உ.வே. சாமிநாதையர், மகாவித்துவான் ரா. ராகவையங்கார் ஆகியோர் உரைகளை அடியொற்றி வழங்கப்பட்டுள்ளது. மேற்கோள் பகுதிகள் மிக விரிவாக வழங்கப்பெறாமல், சிலவே சுட்டப்பட்டுள்ளன. தொல்காப்பிய இலக்கண மரபுகள் இவ்வுரையில் பல இடங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தமிழ் ஆர்வலர்களும் ஆய்வு மாணவர்களும் பயன்கொள்ளத் தக்கவாறு இவ்வுரைப்பகுதி எழுதப்பெற்றுள்ளது.

இந்நூல் பலரால் பல காலமாகப் பயிலப்பட்டு வருதலால், எழுதுவோராலும் கேட்போராலும் பிறழ உணர்ந்து கொள்வதற்கு ஏதுவாதல் கூடும். ஆதலின் இந்நூலில் பாட வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களும், மகாவித்துவான் ரா. ராகவையங்கார் அவர்களும் அத்தகைய பாட வேறுபாடுகளைத் த ம் உரைப்பகுதிகளில் விரிவாகக் கூறியுள்ளனர். இப்பதிப்பு, அத்தகைய பாட வேறுபாடுகள் யாவற்றையும் சுட்டிக் கூறாமல், ஒரோவழி ஒரிரண்டு பாட வேறுபாடுகளை மர்ரே ராஜம் பதிப்பிற்கு ஏற்ப விளக்கி உரைப்பதாய் அமைகின்றது.

முதல், கரு, உரிப்பொருள்களால் பொருள் சிறந்து விளங்கும் அகநானூறு போலன்றி, உரிப்பொருளால் பொருள் சிறந்து விளங்கும் இக்குறுந்தொகைப் பாடல்களின் பொருளமைதிக்கு ஏற்ப, திணை உணரப்பட்டுள்ளது. திணை, கைகோள், கூற்று, கேட்போர், பயன், மெய்ப்பாடு, எச்சம் ஆகிய அகப்பொருள் மரபுகளைக் கருத்தில்கொண்டு இந்நூலின் பாடல்கள், கற்போர்க்கு எளிதில் புலனாகும் வண்ணம் சிறுசிறு தொடர்களால் விளக்கப்பட்டுள்ளன. வேறுபட்ட இடங்களில் வாழும் வெவ்வேறு மனிதர்களிடம் காணப்படும் உணர்ச்சி வேறுபாடுகள் பலவாக இருத்தலர்ல் குறுந்தொகையின் நானூற்று ஒரு பாடல்களும் வெவ்வேறு அகப்பொருள் மாந்தர்களின் வெவ்வேறு உணர்வுகள் என்பது இவ்வுரை விளக்கத்தால் புலப்படும். அகப்பாடல்களில் அமைந்துள்ள சில வரலாற்றுக் குறிப்புக்களும், உள்ளுறை, இறைச்சி ஆகியனவும் இவ்வுரையால் உணரக் கிடப்பன.

Koviloor Digital Library

இந்நூலின் உரையமைப்பிற்கு உரிய வடிவம் தந்து, அரிய கருத்துக்களைக் கூறி, வேண்டும் திருத்தம் செய்து வழங்கிய முனைவர் **கு.வெ. பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கு நான் உரைக்கும் நன்றி சொல்லில் அடங்காது.

இரண்டு ஆண்டுகளாய் நடைபெற்றுவரும் இப்பணியில் உடனிருந்து படிஎடுத்தும், குறிப்பு எழுதியும் உதவிய என் துணைவியார் திருமதி மதுரம் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள் உரியன.

மூலமும், உரையுமாக இந்நூலை அழகாக அச்சுக்கோவை புரிந்த திருச்சிராப்பள்ளி பிரிண்ட் லேண்ட் உரிமையாளர் திருவாளர் **எஸ். தங்கதுரை** அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள் உரியன.

சங்க இலக்கியத் தொகுதிகளை உரை விளக்கத்துடன் பதிப்பித்து வெளியிடும் அரும்பணியினைத் தலையாய பணியாக ஏற்று உதவும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், **திரு. ஆர். இராதாகிருஷ்ணமூர்த்தி** அவர்கள், **தலைமை இயக்குநர், திரு. ஆர். நல்லகண்ணு** அவர்கள், **திரு. தி. இரத்தினசபாபதி, மண்டல மேலாளர்**, திருச்சிராப்பள்ளி, **திரு.ச. சரவணன், கிளை மேலாளர்**, தஞ்சாவூர் ஆகியோர்க்கு என் நன்றி என்றும் உரியது.

வி. நாகராசன்

Koviloor Digital Library

குறுந்தொகை

கடவுள் வாழ்த்து

தாமரை புரையும் காமர் சேவடி,
பவழத்து அன்ன மேனி, திகழ்ஒளி,
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்,
சேவல்அம் கொடியோன் காப்ப,
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

பாரதம் பாடிய பெருந்தேவனார்.

பொருள் :

தாமரை மலரைப் போன்ற யாவர்க்கும் விருப்பத்தைத் தரும் சிவந்த அடிகளையும், பவழத்தைப் போன்ற செம்மேனியின் கண் திகழும் ஒளியினையும், குன்றிமணியைப் போன்ற செந்நிற ஆடையினையும், கிரௌஞ்சம் என்ற குன்றின் நடு இடம் பிளக்குமாறு எறிந்த செந்நிறம் பொருந்திய ஒளிவீசும் நீண்ட வேலினையும் உடைய, சேவல் கொடி ஏந்திய முருகப்பெருமான் காத்தலால், உலகம் இன்பமுள்ள வாழ்நாளைப் பெறுவதாயிற்று.

விளக்கம் :

உலகம் உய்ய முருகப் பெருமானை வாழ்த்துவதாக இப்பாடலுக்கு உரை கொள்ளப்படும். முருகவேள் காத்தலால், உலகம் இன்னலின்றி இனிய வாழ்வு பெறுவதைக் கூறிய ஆசிரியர், உயிர்கள், அத்தகைய இறையருளை மறவாது போற்றுதல் வேண்டும் என்பதை இப்பாடலால் உணர்த்தியுள்ளார். வேலும், கொடியும் ஏந்திச் செம்மேனியனாய்த் திகழும் முருகப் பெருமானின் இத்திருவுருவத்தை எடுத்துக்காட்டி, அவனை வழிபட்டு எல்லாப் பயன்களும் எய்துமாறு உலகோர்க்கு உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது.

'கடவுள் ஒண் பூ' எனப் பாராட்டப் பெறுவதும், மங்கலமாகக் கூறப்படுவதும், சரவணப் பொய்கையில் முருகன் தோன்றிய இடமாதலும் ஆகிய சிறப்புக்களையுடைய தாமரை முதற்கண் கூறப்பட்டது. பிறவிப் பிணிக்கு மருந்தாதல் கருதித் திருவடியை முதற்கண் கூறினார்.

Koviloor Digital Library

மருதத்துத் தாமரை, நெய்தல் நிலத்துப் பவழம், முல்லையின் குன்றிமணி, குறிஞ்சியின் குன்று ஆகியவற்றைக் கூறுவதன்மூலம் நானிலப் பாகுபாடு குறிக்கப்பட்டது. இந்நால்வகை நிலமும், ஆண்டு உறையும் நல்லோர் காரணத்தால் முருகப் பெருமானால் காக்கப் பெறுவதும் உணர்த்தப்பட்டது.

குறுந்தொகை என்னும் இத்தொகை நூல், இன்பம் நுதலியது ஆகலின், அதற்கு ஏற்ப, முருகக் கடவுள் காத்தலால், உலகம் இன்பமுடைய வாழ்நாளைப் பெற்று மகிழ்ந்ததாகக் குறிக்கப்பட்டது. இத்தொகை நூல், களவும் கற்புமாகிய இருவகை ஒழுகலாறுகளை விளக்கும் அகநூலாதலின், அவ்விரு வகை ஒழுக்கத்தையும் உலகிற்குக் காட்டிய முருகப்பெருமானை ஆசிரியர், நூன்முகத்தே நினைத்துப் போற்றியுள்ளார். முருகன், களவு மணத்தால் வள்ளி நாயகியையும், கற்பு மணத்தால் தெய்வயானையாரையும் மணம் புரிந்து கொண்டனன்.

அன்பால் நினைவார்க்கு 'மடிதற்று முந்துறும்' சிறப்பால் உடுக்கையோடு சேவடியுடைய வடிவும், தீயவரை அழித்தற்கு ஏற்ப வேல் ஏந்திய தோற்றமும், உலகு வைகறையில் துயில் எழுந்து இறையருளைப் பெறக் கூவி அழைத்தற் சிறப்பால் சேவல் ஏந்திய கொடியுடைய வடிவும் ஈண்டு நினைக்கப்பட்டன. சேயோன் என்ற பெயரோடு பொருந்துமாறு திருவடியும், மேனியும், உடுக்கையும், வேலும் செந்நிறம் உடையனவாய்க் குறிக்கப்பட்டன. அங்கியங் கடவுளின் வடிவாகக் குறிக்கப்படும் சேவலும் செந்நிறம் உடையதாகக் கொள்ளப்படும். முருகப் பெருயான், கிரௌஞ்சம் என்னும் பறவையின் வடிவம் கொண்ட தாருகனைக் கொன்ற வேற்படையுடையவன். சத்தியால் வழங்கப்பட்ட அவ்வேற்படை, சூரபதுமனை இருகூறாக்கிய வழி, அவன் சேவலாகிய ஒரு கூற்றினைக் கொடியாகவும், மயிலாகிய மற்றொரு கூற்றினை ஊர்தியாகவும் கொண்டனன். முருகவேள் வடிவங்களில் இருகைகளையுடைய வடிவமே சாத்துவிக வடிவம் என்றும், அவ்வடிவில் வலக்கையில் வேலும், இடக்கையில் கோழிக் கொடியும் வைத்து வழிபடுதல் நன்று என்றும் குமார தந்திரம் என்னும் நூல் குறிப்பதாக ரா. இராகவையங்கார் எடுத்துக் காட்டியுள்ளார். பவழத்தன்ன மேனியையும், திகழ் ஒளியையும் என உ.வே. சாமிநாதையர் இரு தொடராக்கி உரை வகுத்துள்ளார்.

Koviloor Digital Library

வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிய மூன்றனுள் இப்பாடல், வருபொருள் உரைத்தலில் அடங்கும். 'ஏமவைகல் எய்தின்று' என இறந்தகாலத்தால் கூறினும், 'ஏம வைகல் எய்தும்' என எதிர் காலத்திற்கும் ஏற்ப உரை கொள்ளப்படும்.

சொற்பொருள் :

புரையும், அன்ன, ஏய்க்கும்	–	உவம உருபுகள்.
காமர்	–	அழகிய (யாவர்க்கும் விருப்பம் நல்கும்)
பக	–	பிளக்கும்படி
ஏமம்	–	இன்பம்
வைகல்	–	வாழ்நாள்
ஏம வைகல்	–	பிறவித் துன்பம் சாராத நாட்கள்
நெஞ்சு	–	நடு இடம்
சேவல்	–	கோழிச் சேவல் (மயில் சேவலும் ஆம்)

மேற்கோள் :

1. "சிறப்புடைய பலவற்றினும் தாமரை உயர்ந்ததாகலின் அஃது உவமையாகக் கூறப்பட்டது"
   தொல்காப்பியம், உவம இயல், 3, இளம் பூரணர்.
2. "கடவுள் ஒண்பூ" பெரும்பாணாற்றுப்படை, 290.
3. "நின் ஈன்ற நிறை இதழ்த் தாமரை" பரிபாடல், 8.
4. "நின்னிற் சிறந்த நின் தாள் இணையவை"
   பரிபாடல், 4.
5. "உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்"
   திருமுருகாற்றுப்படை, 4.
6. "மாய அவுணர்த் தடித்த வேல்" பரிபாடல், 5.
7. "ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர்ஒளி"
   திருமுருகாற்றுப்படை, 3.
8. "பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ"
   திருமுருகாற்றுப்படை, 122.

Koviloor Digital Library

9. "செய்யன், சிவந்த ஆடையன்"

திருமுருகாற்றுப்படை, 206.

10. "குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து"

திருமுருகாற்றுப்படை, 266.

11. "கோழி ஓங்கிய வென்று அடு விறல் கொடி"

திருமுருகாற்றுப்படை, 38.

12. "யாழ் கெழு மணி மிடற்று அந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே"

அகநானூறு, கடவுள் வாழ்த்து.

13. "இஃது, எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள்"

யாப்பருங்கலக் காரிகை உரை, ஒழிபியல், 9.

14. "எழுத்து முதலாக வந்து, ஈண்டிய அடிகள்
எல்லாவற்றானும், நாட்டியவாறு கண்டு கொள்க"

தொல்காப்பியம், செய்யுளியல், 74. இளம்பூரணர்.

பொருள் முடிவு :

அடியினையும், மேனியையும், உடுக்கையினையும், வேலையும், சேவற் கொடியையும், உடைய முருகப் பெருமான் காத்தலால் உலகு, ஏம வைகலை எய்தியது.

Koviloor Digital Library

குறுந்தொகை

1. குறிஞ்சி

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை,
கழல் தொடி, சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக் காந்தட்டே.

தோழி கையுறை மறுத்தது. **திப்புத்தோளார்.**

பொருள் :

போர்க்களம், குருதி பாய்தலால் செந்நிறமுடைய களமாயிற்று. அசுரர்களைக் கொன்று, அவர்கள் குலத்தில் ஒருவரும் இல்லையாகச் செய்த குருதியால் சிவந்த திரண்ட அம்பினையும், சிவந்த கொம்புகளைக் கொண்ட யானையையும், கழல இட்ட வீர வளையலையும் உடையவன் முருகன். அவனுடைய இம்மலை, கொத்துக்களாகப் பூத்து விளங்கும் சிவந்த மலர்களைக் கொண்ட காந்தளை உடையது.

விளக்கம் :

கொல்லுதல், அம்பின் வினையாகவும், தேய்த்தல், யானையின் வினையாகவும் கொள்ளப்படும். அம்பு எய்தலும், யானையைக் கடாவுதலும் ஆகிய வீரம் தோன்றக் கையில் **வீரவளையம்** அணியப்பட்டது.

போர்க்களம், அம்பு, யானையின் கோடு, காந்தள் ஆகிய யாவும் செந்நிறம் உடையனவாகக் கூறப்பட்டுள்ளன. முருகனும் செந்நிறம் உடையவன் ஆதலின் சேஎய் எனப்பட்டான். வீரத்தொடியும் செந்நிறம் உடைய மாணிக்க மணிகளால் அமைந்தது எனவும், குன்றமும் செந்நிறம் உடையது எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்துவதாகும்.

தீயவரை அழித்தல், நல்லவரை வாழ்வித்தல் ஆகிய தெறலும், அருளலும் இப்பாடலால் உணர்த்தப்பட்டன. அவுணரைக் கொன்று தேய்த்தபடியே, படையொடும் யானையோடும் போந்து தேவர்க்கு அருளிய நிலையில் கையில் **வீரவளையம்** அணிந்த முருகனின் திருக்கோலம், அவனுடைய படை வென்றியையும், கொடை வென்றியையும் குறிப்பதாகும். போர்க்களம், செங்களமாக மாறியமை, முருகன் தாருகனுடன் நிகழ்த்திய போரின் விளைவாகும். முருகப்

Koviloor Digital Library

பெருமானுக்கு யானை ஊர்தியும் உண்டென்பது இப்பாடலால் உணர்த்தப்பட்டது. காந்தள், முருகப் பெருமானுக்கு உகந்த மலராகும். அது, வண்டுகளும் மொய்க்காத சிறப்புடையதாகும்.

இப்பாடல், தலைவன் தந்த கையுறையைத் தோழி மறுத்தது என்னும் கருத்தை விளக்குவதாகும். 'கடவுள் காந்தள்', ஆதலின், தெய்வம் சூடுவது எனக்கூறி தோழி, தலைவன் தந்த கையுறையை ஏற்கவில்லை. கடவுட்கு உரிய குருதி நிறமுடைய இக்காந்தள் பூவினை நினக்குத் தந்தவர் யார் எனத் தாயர் முதலியோர் ஐயுற்று வினவுவர் எனத் தோழி கூறி மறுத்தனள். வேலனும் வெறியாடும் காலத்தன்றிப் பறியாத பூவினைப் பறித்து நினக்குத் தந்தவர் யார் என வினவப்படும் எனக் காட்டி மறுத்தனள். இம்மலைப் பகுதியில் மிகுதியாக வளர்ந்துள்ள இம்மலரினை ஒருவரும் சூடாத போது, இவள் சூடினால், சூடியது பூப் பற்றியன்று, சிறந்தான் ஒருவன் தந்தமையால் என அயலாரால் உய்த்துணரப்படும் எனக்காட்டி மறுத்தனள். குன்றத்துக் காந்தள் செந்நிறம் உடையது எனக் கூறி, நீ கையுறையாகத் தந்த இப்பூ, நின் உடல் வெப்பத்தால் கரிந்து காட்டுகின்றது என்றும், இதனைத் தலைவி காணின் ஆற்றாமையால் வருந்துவாள் என்றும் மறுத்தனள். தோழி, தலைவியிடம், 'யான் செங்காந்தள் பூக்கொய்து கொண்டு வருவல்; ஆண்டுத் தெய்வம் உடைத்து; நீ வருதல் தகாது', எனக் கூறி அவளைக் குறியிடத்து உய்த்து நீங்கியதாகவும் இப்பாடலுக்குப் பொருள் கொள்ளப்படும்.

காந்தள் பூவினால் யாம் குறையுடையேம் அல்லேம் எனத் தலைவனுக்கு உணர்த்தியவழி இப்பாடல், கூற்றெச்சமாகவும், சேஎய் குன்றம் காந்தட்டு, அது காண்பாயாகில் காண் எனத் தோழி தலைவியைக் குறியிடம் உணர்த்திய வழிக் குறிப்பெச்சமாகவும் இப்பாடல் பேராசிரியரால் விளக்கப்பட்டுள்ளது. (தொல்காப்பியம் செய்யுளியல், 206). 'யாம் காந்தள் பூவினால் குறைவிலம்' எனச் சொல்லெச்சத்திற்கு இப்பாடலை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டுவர் (தொல்காப்பியம் எச்சவியல், 45) 'வெற்ப' என்ற விளி, குறிப்பினால் வருவித்து உரைக்கப்பட்டதாக இளம் பூரணர் கூறுவர் (தொல்காப்பியம், செய்யுளியல், 207)

இப்பாடல் ஆசிரியர், தீப் புத்தேளார் எனப் பாடபேதம் கொண்டு, அவரை அங்கியங் கடவுள் என்ற பெயரினராக ரா. இராகவையங்கார் கருதுவர். செவ்வேளை வாழ்த்திய பாடலுக்குப் பின், குறுந்தொகையின் முதல் பாடலாக, அவன் வீரத்தையும் ஈரத்தையும் உணர்த்தும் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. முருகனின் குன்றம், அவனுடைய அடையாளப்

Koviloor Digital Library

பூவாகிய காந்தள் பூவினால் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள் :

கொன்று	–	வருத்தி எனவும் ஆம்
தேய்த்த	–	இல்லையாக்கிய
செங்கோல் அம்பு	–	வளைவின்மையை உடைய அம்பு; செந்நிறமுடைய அம்பு.
கோல்	–	திரட்சி
செங்கோடு	–	டகைவரைக் குத்திச் சிவந்த கொம்பு
கழல் தொடி	–	கழல அணிந்த வீர வளையம்
சேஎய்	–	செந்நிறம் உடையவன். செய்யோன் என்பதன் சிதைவு – நச்சினார்க்கினியர்
குருதிப்பூ	–	சிவந்த நிறமுடைய பூ, குருதி போன்ற நிறமுடைய பூ எனினும் அமையும்.
காந்தட்டு	–	காந்தளை உடையது

மேற்கோள் :

1. "அங்குசம் கடாவ ஒரு கை" திருமுருகாற்றுப்படை,110
2. "செறுநர்த் தேய்த்து, செல்சமம் முருக்கி"
திருமுருகாற்றுப்படை, 99.
3. "கடுஞ்சின விறல் வேள், களிறு ஊர்ந்தாங்கு"
பதிற்றுப்பத்து, 11:6
4. "பிணி முக ஊர்தி ஒண் செய்யோனும்" புறநானூறு,56
5. "சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங் காந்தள்"
திருமுருகாற்றுப்படை,43.
6. "வேலன், வெறியாட்டயர்ந்த காந்தளும்"
தொல்காப்பியம், புறத்திணைஇயல், 5.
7. "குருதி ஒப்பின் கமழ் பூங் காந்தள்"
நற்றிணை, 399.

Koviloor Digital Library

8. "பல் துடுப்பு எடுத்த அலங்கு குலைக் காந்தள்"

அகநானூறு, 108.

பொருள் முடிவு :

அம்பும், யானையும், கழல் தொடியும் உடைய சேஎய் குன்றம், பூவினையுடைய காந்தளை உடையது.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 70021
Date of purchases:
Call Number:

2. குறிஞ்சி

கொங்கு தேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்,
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே?

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழி, தலைமகளை இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், நாணின் நீக்குதற் பொருட்டு, மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள் மாட்டு நிகழ்த்திக் கூடி, தனது அன்பு தோன்ற நலம் பாராட்டியது. இறையனார்

பொருள் :

பூக்களில் உள்ள மணத்தை ஆராய்ந்து உண்ணுகின்ற வாழ்க்கையினையும், அகத்தே சிறகுகளையும் உடைய வண்டே. எனக்கு இன்பம் தருவதைக் கூறாமல், நீ உண்மையென அறிந்த ஒன்றனை என் வினாவிற்கு விடையாகக் கூறுவாயாக. எழுமையும் என்னோடு பழகுதல் பொருந்திய நட்பினையும், மயிலின் இயல்பாகிய சாயலையும், நிரையாய்ச் செறிந்த பற்களையும் உடைய இவ்வரிவையின் கூந்தலைப்போல, நீ அறியும் மலர்களுள் நறுமணம் உள்ள மலர்களும் உளவோ? (இரா. அவ்வாறு இருப்பின் எனக்கு உரைப்பாயாக.)

விளக்கம் :

தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என இயற்கைப் புணர்ச்சிக்குப்பின், தன் அன்பு வெளிப்படுமாறு, தலைவியின் நலம் பாராட்டுவதாக இப்பாடல் அமைகின்றது.

நல்ல மணத்தை நாடிச் செல்லும் உயர்ந்த சாதி வண்டு, தும்பி என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. ஊன்தேர் வாழ்க்கைப் பறவையினங்களின் வேறுபட்டு விளங்கும் கொங்குதேர் வாழ்க்கைத் தும்பியைத் தலைவன் அழைத்து வினவுவதாக இப்பாடல் அமைகின்றது. சொல்லும் ஆற்றல் தும்பிகட்கு இல்லையாயினும், உவகை என்னும் உணர்வு மிக்கவழி தலைவன், இவ்வாறு சொல்லாடுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஊன் தேர் வாழ்க்கைப் பறவைகள் புறத்தே சிறகுடையன. இவை அகத்தே சிறகுடையன. யாண்டும் பறந்து செல்வதற்கு ஏற்ப விளங்கும் அவற்றின் சிறகுகளைத் தலைவன் சிறப்பித்துக் கூறினான். உயிர்கட்கு இன்னல் செய்யாத வாழ்க்கையும்,

Koviloor Digital Library

நறும்மணம் தேரும் வாழ்க்கையும் தும்பியிடம் காணப்படுவதறிந்து பாராட்டினான். இளவேனில் பருவத்தில் வண்டுகள, மலர்களில் உள்ள தேனை நாடிப் பறந்து செல்லும் இயல்புடையன.

தங்கள் நட்பு, பிறவிகள் தோறும் தொடர்வதால் முற்பிறப்பில் பயின்றது, இப்பிறப்பிற்கு உரியதாகத் தொடர்ந்துள்ளது எனத் தலைவன் குறிப்பிட்டான். பயிலாத பொருள்களைக் கண்டவழி அருவருத்து நிற்கும் பயிர்ப்பு என்னும் குணத்தையுடையவள் தலைவி, ஆதலின், பயின்றது பொருந்திய நட்பு எனத் தங்கள் உறவினைத் தலைவன் சிறப்பித்துக் கூறினன். 'காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்', ஆதலின் உள்ளப் புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி ஆகியன நிகழ்வதற்கு முன் தோன்றிய நட்பு, சிறப்பித்துக் கூறப்பட்டது.

தலைவி, மயில் போன்ற சாயல் உடையவள். தலைவன், தலைவியைக் கண்ட நிலம், குறிஞ்சியாதலின், ஆண்டு உள்ளதோர் மயிலோ எனத் தலைவியைக் கண்டவழி ஐயுற்ற நிலையை நினைந்தனன். பொழிலிடை அவள் உலவிய வழி, அவள் அசைந்து வந்த நடையின் இயல்பறிந்து 'மயிலியல்' எனப் பாராட்டினான். தலைவியின் முறுவல் குறிப்பு, இயற்கைப் புணர்ச்சிக்கு ஏதுவாக இருந்தமை நினைந்து, அவளுடைய பற்களின் அழகினைப் பாராட்டினான். 'வாலெயிறு ஊறிய நீர்', சுவைத்து மகிழ்ந்த நினைவு தோன்ற 'செறிஎயிறு' எனப் பாராட்டினான். ஊற்றுணர்வுடைய பிற உறுப்புகளின் வேறாக விளங்கும் கூந்தலைக் கூறி, அதன் மணத்தைவிட மணம் உள்ள மலர்களை நீ அறிந்தனையோ என வண்டினை வினவுமுகத்தான், தலைவன் அவளுடைய பிற உறுப்புக்களையும் சிறப்பித்தனன். "கூந்தலே கூறியது, அதுவே பாயலாகத் தான் கிடந்தமை பற்றி", என ரா.இராகவையங்கார் விளக்கியுள்ளார். தலைவன், தலைவியின் மெய்தொட்டுப் பயிறலுக்கு ஏதுவாகிய வண்டினைப் பலமுறை விலக்கிய போதும், கூந்தலின் இயற்கை மணத்தால் அது நீங்காமல், நிற்றலை அறிந்தமையால் 'நின்னை வினவுவேன்' என வண்டிற்குக் கூறினான். நீ அறியும் கூந்தலைப் போல, நீ அறியும் பூக்களுள் நறியவும் உளவோ எனத் தும்பியை வினவினான். 'மொழிமோ', என்ற சொல், சினக்குந போல, அஃறிணைப் பொருளைப் பார்த்துக் கூறியதாகும். வண்டுகள் கூறும் மொழியை அறிந்திருந்தமையால், சீவகன் அதனால் வண்டுகளை அழைத்தான் என்ற நச்சினார்க்கினியர் உரைப்பகுதி ஈண்டு நினைக்கத்தக்கது. (சீவகசிந்தாமணி : 892 – 893) கூந்தலைப் போல, மணம் உள்ள மலர்கள் உள்ளன எனக் கூறினால், அவற்றைக் கொணர்ந்து இவள் கூந்தலில்

Koviloor Digital Library

புனைவேன் என்றும்; பிற ஒவ்வா மலர் புனைந்தால், அவை இவள் கூந்தலின் மணத்தைப் பெறுமேயன்றி, அவற்றால் இவள் கூந்தலுக்கு யாதொரு பயனும் இல்லை என்றும்; பல மலர்கள் கூடிய வழியும் இவள் கூந்தல் மணத்திற்கு அவை ஈடாகா எனவும் தலைவன் தலைவியின் நலம் பாராட்டினான். தலைவியின் கூந்தலுக்கு உரியவன் ஆதலின், கூந்தலை முற்பட நினைத்தான். 'மயிலியல்' மயில்நடை எனக் கொண்டு அவள் அடிமுதல், கூந்தலின் நறியவும் உளவோ என முடிவரை தன் உள்ளம் பிணித்த அவளுடைய இயற்கை அழகினைப் பாராட்டியதாகவும் கருத இடமுள்ளது.

இப்பாடல் ஆசிரியர், இறையனார் என்பவர். ஆலவாய் இறையனார், தருமி என்னும் பிரமசாரிக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்த சிந்தாசமுத்தி அகவல் என இப்பாடலைத் தமிழ்நாவலர் சரிதை கூறுகின்றது. சிவபெருமான், மதுரையில் ஒரு புலவனாய்ச் சங்கமேறித் தருமி என்னும் அந்தணன் பொருட்டுப் பாடிய பாடல் இது எனத் திருவிளையாடல் புராணம் குறிப்பிடுகின்றது.

சொற்பொருள் :

கொங்கு	–	மணம், தேனும் ஆம்
அம் சிறை	–	அகத்தேயுள்ள சிறகு. அழகிய சிறகும் ஆம்
தும்பி	–	உயர்ந்த சாதி வண்டு.
அரிவை	–	பெண். பருவம் குறித்த சொல் அன்று
மயிலியல்	–	மயிலின் இயல்பாகிய சாயல், மென்மை
பயிலியது	–	பயின்றது
செழீஇய	–	உரிமையுடைய
செழீஇயநட்பு	–	வளர்ந்து ஓங்கிய நட்பு
இயல்	–	நடையும் ஆம்
கண்டது	–	உண்மை என அறிந்தது
காமம்	–	இன்பம்
நறிய	–	மணம் உடைய மலர்கள்

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "தாது உண் பறவை" அகநானூறு, 4.
2. "நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி"
குறுந்தொகை, 239.
3. "அஞ்சிறை வண்டின் அரிக்கணம்"
திருமுருகாற்றுப்படை, 76.
4. "கை வள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்"
குறுந்தொகை, 199.
5. "நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே"
புறநானூறு, 113.
6. "இவள் ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே"
குறுந்தொகை, 225.
7. "நொந்தனை ஆயின் கண்டது மொழிவல்"
குறுந்தொகை, 273.
8. "முன்னிலை யாக்கல், சொல்வழிப்படுதல்,
நன்னயம் உரைத்தல், தம் நிலை உரைத்தல்"
தொல்காப்பியம், களவியல் 10. நச்சினார்க்கினியர்.

பொருள் முடிவு :

தும்பி, நீ அறியும் பூக்களில், இவள் கூந்தலைப் போல நறியவும் உளவோ? – மொழிவாயாக.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 1793

Koviloor Digital Library

3. குறிஞ்சி

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே – சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்த வழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

தேவகுலத்தார்

பொருள் :

கரிய கொம்புகளில் பூத்து விளங்கும் குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு, மலைப் பகுதியில் பெரிய தேனை வண்டுகள் தொகுத்தற்கு இடனாகிய நாட்டையுடைய தலைவனொடு யான் கொண்ட நட்பு, சொல்லப்புகுங்கால் நிலத்தைவிட அகலத்தால் பெரிது; நினையப் புகுங்கால், வானத்தைவிட உயர்ச்சியால் மிக்கது; உள்புகுந்து எல்லை காணப் புகுங்கால், கடலைவிட ஆழத்தால் அளவிடற்கு அரிது.

விளக்கம் :

தலைவன், தலைவியின் இல்லத்து அருகே சிறைப்புறமாக வந்து நின்றனன். தோழி, தலைவியை அவன் மணம் செய்து கொள்வதற்காக, அவன் இயல்புகளை இகழ்ந்து கூறியவழி தலைவி, தலைவன் இயல்புகளைப் புகழ்ந்து கூறுதல் இப்பாடலின் நோக்கமாகும்.

தலைவனொடு தலைவி கொண்ட நட்பு, மொழி, மனம், மெய் என்ற மூன்றானும் அளந்து காணற்கு அரிது என்பதைப் பெரிது, உயர்ந்தன்று, ஆரளவின்று என்ற சொற்கள் உணர்த்தும். நிலம், வான், நீர் என்ற மூன்று பொருள்கள் ஈண்டு அளக்கலாகாமைக்கு எடுத்துக்காட்டப்பட்டன. நிலம், வான், நீர் ஆகியவை வெவ்வேறாகப் பெருகி விளங்குவன. தலைமக்கள் நட்பு, ஒரே இடத்தில் பெருகி விளங்குவது. இவை மூன்றும் இணைந்த வழியே பயன் பெறுதல் கூடும். நிலம், நீரின்றிப் பயன்படாது. வான், மேல் நின்ற அளவில் பயன்படாது. கடல், சூழ்ந்து நின்றாலும் பயன் தருவதில்லை. மேகங்கள், கடல் நீரை உண்டு, நிலத்தில் பொழிதலால் உயிர்கள் இன்புறுகின்றன. இம்மூன்றன் சேர்க்கை போல, தங்களுடைய நட்பும் இயைந்த நட்பு எனத் தலைவி கூறினள். நட்பின் அளவுப் பெருக்கம் ஒன்றே கருதி இவை உவமிக்கப் பெறவில்லை. அவற்றின் சேர்க்கையும், பயன்பாடும் கருதியே இவை

Koviloor Digital Library

உவமிக்கப்பட்டன. போஷகமாகிய உணவு நல்கும் நிலத்தினையும், தாரகமாகிய நீர் நல்கும் வானையும், போக்கியமாகிய மணி முதலியன நல்கும் கடலையும் எடுத்துக்காட்டி, அம்மூன்றனையும் இந்நட்பு ஒன்றே நல்க வல்லது எனச் சிறப்பித்தனள் என இப்பாடலுக்கு ரா.இராகவையங்கார் உரை வகுத்துள்ளார். நிலம், பயன் தராமையும்; வானம், பெய்யாது போதலும்; நீர், தன் நீர்மை குன்றுதலும் கூடும். ஆனால் இந்நட்பு, எஞ்ஞான்றும் பயன்பட்டுப் பின்னரும் தொடர்ந்து வரும் சிறப்புடையதாகும். நட்பு, தலைவனின் அயன்மையால் பயன்தராது கழிதல் கண்டு தோழி தலைவனின் இயல்புகளைப் பழித்துக் கூறியவழி, தலைவி அவனைப் பாராட்டுவதாக இப்பாடல் அமைகின்றது. நிலனும், வானும், நீரும் தக்க பருவத்தில் இயைந்து பயன்படுவது போல, நட்பும் வரைந்து கொள்ளும் நாளில் பயன்படும் எனத் தலைவி கருதியதாகவும் கருத இடமுள்ளது.

வண்டுகளால் பெருவரையின் உச்சியில் தொகுக்கப் பெறும் தேனிறால் எனக் காட்டுவதன் மூலம், பால்வரை தெய்வத்தால் இழைக்கப்பட்ட தங்கள் நட்பினைத் தலைவி சிறப்பித்துக் கூறினள். பால்வரை தெய்வம் போல, இப்பாடலிலும், வண்டு என்ற எழுவாய், தோன்றாமல் உள்ளது. பூவில் உள்ள தேன், வண்டுகளால் இழைக்கப் பெறவில்லையென்றால் பயன்படுவதில்லை. அதுபோல, தனித்தனியே விளங்கிய தலைவன் தலைவியரின் வாழ்வு, பால்வரை தெய்வத்தால் கூட்டப் பெற்ற வழி, இல்லறவாழ்வாய்ச் சிறப்புற்றுப் பலரும் போற்றப் பயன்படுவதாகும்.

இப்பாடல், தன் கண் தோன்றிய பெருமை காரணத்தால் தோன்றிய வியப்பு என்னும் மெய்ப்பாடாகும். வண்டு, குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல, வழிமுறையால் பெருக வேண்டிய நட்பு, கண்ணுற்ற ஞான்றே நிலத்தின் அகலம் போலவும், வானின் உயர்ச்சி போலவும், கடலின் ஆழம் போலவும் ஒருகாலே பெருகிற்று எனப் பேராசிரியர் இப்பாடலை எடுத்துக் காட்டுவர். (தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், 7.)

சொற்பொருள் :

தேவகுலம்	–	கோயில்
நீர்	–	கடல்
வான்	–	ஆகாயம், மேகம்
கருங்கோல்	–	கருமை நிறமுடைய கொம்பு. வலிய கொம்பும் ஆம்

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 70021
Date of purchases:
Call Number:

உயர்ந்தன்று – உயர்ந்தது

அளவின்று – அளவினையுடையது

நாடன் – குறிஞ்சி நிலத் தலைவன்

மேற்கோள் :

1. "நிலத்தினும் பெரிதே, நேர்ந்தவர் நட்பே"
தொல்காப்பியம், களவியல், 20. நச்சினார்க்கினியர்

2. "கடலினும் பெரிது, எமக்கு அவருடை நட்பே"
ஐங்குறுநூறு, 184.

3. "ஞாலத்தின் மாணப் பெரிது" திருக்குறள், 102.

4. "நன்மை, கடலின் பெரிது" திருக்குறள், 103.

5. "வான் உயர் தோற்றம் எவன் செய்யும்"
திருக்குறள், 272.

6. "கருங்கோல் குறிஞ்சி, நும் உறைவு இன் ஊர்க்கே"
அகநானூறு, 308.

7. "நெடு வரைப் பெருந்தேன்" குறுந்தொகை, 60.

8. "கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்"
ஐங்குறுநூறு, 183.

9. "திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே"
புறநானூறு, 104.

10. "மை வரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது
ஆகலானும்... இந்நிலங்களை இவ்வாறு குறியிட்டார்"
தொல்காப்பியம், அகத்திணையியல், 5.

11. "நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவும்,
தேனும், இறைச்சிப் பொருள"
தொல்காப்பியம், பொருளியல், 33.

12. "உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்,
பெருமையில் திரியா அன்பின் கண்ணும்"
தொல்காப்பியம், கற்பியல், 6. இளம்பூரணர்

பொருள் முடிவு :

நாடனொடு கொண்ட நட்பு; பெரிது, உயர்ந்தது, அளவினது.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No.
Date of purchase:
Call Number:

4. நெய்தல்

நோம், என் நெஞ்சே; நோம் என் நெஞ்சே:
இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி,
அமைதற்கு அமைந்த நம் காதலர்
அமைவு இலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே.

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

காமம் சேர் குளத்தார்

பொருள் :

கண்ணுக்குக் காவலாகிய இமைகளைத் தீய்க்கும் கருவியைப் போன்ற வெம்மையுடைய என் கண்ணீரினைத் தம் கையால் தடுத்து, நாம் உயிர் தாங்கி வாழ்வதற்காகப் பிரியாது தங்கிய, நம்மிடம் காதலுடைய தலைவர், இப்பொழுது நம்மிடம் தங்குதல் இலர் என்று நின்னால் சொல்லப்படும் தன்மை நினைந்து என் நெஞ்சு முக்காலும் வருந்துவதாயிற்று.

விளக்கம் :

தலைவன் பிரிவிற்கு ஆற்றாமல் தலைவி வருந்துவாள் எனத் தோழி எண்ணி வருந்தினள். அதனை அறிந்த தலைவி, தோழியிடம், தான் வருந்துவது தலைவன் செயலுக்காக அன்று என்றும், அவள் கூறிய சொல்லுக்காகவே என்றும் கூறினள்.

பிரிவாற்றாமையால் வரும் கண்ணீராதலால் வெம்மையுடையதாகக் கூறப்பட்டது. தலைவன், இயற்கைப் புணர்ச்சிக்கண் நின்னைப் பிரியேன் எனத் தலைவியிடம் கூற, அவள், அப்பொழுது பிரிவு என்ற ஒன்று உண்டு என நினைத்து, உள்வெதும்பி, இமை தீய்ப்பன்ன கண்ணீர் வடித்த அளவில், தலைவன் அதனைத் தன் கையால் துடைத்து ஆற்றுவித்தனன். அச்செயலைத் தலைவி ஈண்டு நினைத்தனள். "நோவல், அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து" என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகர், யான் ஆற்றேனாகின்றது, அவர் வாராமைக்கு அன்று என்றும்; அவர் கொடியர் என நின்னால் கூறப்படுவதற்கு என்றும் வகுத்த உரை, ஈண்டு நினைக்கத் தக்கது. தலைவன் தன் நெஞ்சத்து இருத்தலை அறிந்து தலைவி ஆற்றியிருந்தனள். ஆயினும் அவனை 'அமைவிலர்' எனத் தோழி குறிப்பிட்ட சுடுசொல் கேட்டு தலைவியின் நெஞ்சு தானே வருந்துவதாயிற்று. யான், அவன் செயல் எண்ணி ஆற்றியிருப்பினும்,

Koviloor Digital Library

என் நெஞ்சு, நீ உரைத்தமை கண்டு ஆற்றாது வருந்தாநின்றது எனத் தலைவி கூறினள்.

களவொழுக்கத்தான் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமை நிறுத்தல் என்பதற்கு இப்பாடலை இளம் பூரணர் எடுத்துக் காட்டாய்க் கூறியுள்ளார். (தொல்காப்பியம், களவியல், 20) ஈண்டு உணர்த்தப்படும் பிரிவு, களவுக் காலத்தில் தலைவன் கொண்ட வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிவாகும். ஆனால், அள்ளூர் நன்முல்லையார் பாடிய பாடல், தலைவன் பரத்தமையை முனிந்த தலைவியின் கூற்றாக உள்ள பாடலாகும். (குறுந்தொகை, 202.)

அழாஅல் என்று நம் அழுத கண்ணீர் துடைத்தவர், மீண்டும் அருள்வாா என எண்ணி ஆற்றியிருப்பேன் எனத் தலைவி குறித்தனள். 'நோம், என் நெஞ்சே' என மூன்று முறை வந்த அடுக்கு, ஆற்றாமையின் மிகுதியைக் குறிப்பதாகும்.

இப்பாடல் ஆசிரியர், காமம் சேர் குளத்தார் என்பவர். பிரிந்தாரைக் காமத்தில் சேர்க்கும் குளம், புகார் நகரில் இருந்ததாகப் பட்டினப் பாலை குறிப்பிடும். (இருகாமத்து இணை ஏரி – பட்டினப்பாலை, 38)

சொற்பொருள் :

நோம் – நோகும், வருந்தும்

தாங்கி – தடுத்து

அமைதற்கு – நாம் ஆற்றியிருப்பதற்கு (உயிர் தாங்கி வாழ்வதற்கு)

மேற்கோள் :

1. "நோம் என் நெஞ்சே" குறுந்தொகை, 202.
2. "இவட்கு மருந்தன்மை நோம் என் நெஞ்சே"
   ஐங்குறுநூறு, 59.
3. "அழாஅல் என்று நம் அழுதகண் துடைப்பார்"
   குறுந்தொகை, 82.
4. "மா இதழ் புரையும் மலிர்கொள் ஈர் இமை
   உள்ளகம் கனல, உள்ளுதொறு உலறி,
   பழங்கண் கொண்ட கலிழ்ந்துவீழ் அவிர் அறல்
   வெய்ய உகுதர" அகநானூறு, 19.

Koviloor Digital Library

5. “நம் மறந்து அமைகுவன் ஆயின், நாம் மறந்து,
உள்ளாது அமைதலும், அமைகுவம் மன்னே”

ஐங்குறுநூறு, 36.

பொருள் முடிவு :

அமைந்த காதலர், அமைவிலர் ஆகுதலால் என் நெஞ்சு, வருந்துவதாயிற்று.

Koviloor Digital Library

5. நெய்தல்

அதுகொல், தோழி! காம நோயே?
வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை,
உடைதிரைத் திவலை அரும்பும் தீம்நீர்,
மெல்லம் புலம்பன் பிரிந்தென,
பல்இதழ், உண்கண் பாடு ஒல்லாவே.

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

நரிவெரூஉத் தலையார்

பொருள் :

மருதநிலத்திலிருந்து வந்து, நெய்தல் நிலத்தில் துணையின்றித் தங்கும் குருகு, மீன் உண்டு தன் நிலத்தையும் மறந்து உறங்குதற்குக் காரணமாகிய புன்னை மரங்களில், கரையை உடைக்கின்ற அலையின் திவலைகள் பட்டமையால் அரும்புகள் மலரும். இத்தகைய இனிய நீரினையுடைய மென்புலமாகிய நெய்தல் நிலத்திற்கு உரியவன் பிரிந்தான் என்று பல பூக்களைப் போன்ற மையுண்ட கண்கள் துயிலுதலைப் பொருந்தாவாயின. காமநோய் என்பது அத்தன்மையதோ.

விளக்கம் :

மருதமும் நெய்தலும் மென்புலமாதலின், ஈண்டு நெய்தல் கொள்ளப்பட்டது. கடல் நிலம், மென்பால் எனவும் கூறப்படும். தலைவன், தன் கண்களை விட்டுப் பிரியாமல் இருந்த போதிலும், பிரிந்தான் என எண்ணிக் கண்கள் துயில் பெறாவாயின. புறப்பொருள்களைக் காட்டவல்ல கன்கள், தம்மிடத்தில் உள்ள தலைவனைக் காணமாட்டாது வருந்தி, அவன் பிரிந்தான் எனத் துயில் கொள்ளவில்லை. காமநோய் என்பது இத்தகைய காணமாட்டாத் தன்மையை ஆக்க வல்லதோ எனத் தலைவி வினவுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கடற்கரையைச் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் என்பதைக் குறிப்பிட 'தீநீர் மெல்லம் புலம்பு' என்றார். உலகம் இனிய நீர் உண்பதற்குக் காரணமாகிய மென்புலத்திற்கு உரியவன், தன் பிரிவினால் தலைவி வருந்தப் பொறான் என்ற குறிப்பு இப்பாடலில் உணர்த்தப்படுகின்றது.

குருகும், நாரையும் மருத நிலத்துப் பறவைகள். அயல்நாட்டவரும் வந்து துய்த்து உறங்குவதற்குக் காரணமாகிய பெருமனையுடையான் என்றும்; அம்மனை, கடல் தரும் செல்வத்தால் சிறந்து விளங்குவது

Koviloor Digital Library

என்றும் கருதி தலைவி, ஆண்டுச்சென்று தான் உறங்கப் பெறாமை எண்ணி வருந்தினள். துணையில்லாமையால் தனித்து உறங்கப் பெறாத தன்நிலையுடன், செல்வத்தால் பொலிவு பெற்ற மனையில் இனிது உறங்கும் தலைவனின் நிலையை ஒப்ப நோக்கி வருந்தினள். தலைவன், தன்னை வரைந்து ஒழுக நினையாமல், தனித்து உறங்கும் நிலையை எண்ணி வருந்துவதாகவும் பொருள் கொள்ளப்படும். பிரிந்தென என்ற எச்சம், பிரிவின் அண்மைக் காலத்தைச் சுட்டுவதாகும். அது என்ற சுட்டு, கண் உறங்காமையைச் சுட்டுவதாகும். செய்யுளாதலின் சுட்டுப் பெயர் முற்கூறப்பட்டது. (தொல்காப்பியம் – கிளவியாக்கம்,39) தன் நாட்டில் குருகு இனிது உறங்குவதற்குக் காரணமாகிய தலைவன், தலைவியின் உறங்காமைக்குக் காரணன் ஆயினன் என்ற குறிப்பு, இப்பாட்டலில் அமைந்துள்ளது. திவலை பட்டுப் புன்னை அரும்பும் எனக் கூறுதல், தலைவன் தலையளி பெறாது தலைவி வருந்தும் நிலையைக் குறிப்பதாகும்.

சொற்பொருள் :

வதி குருகு	–	மருத நிலத்திலிருந்து நெய்தல் நிலத்திற்கு வந்து துணையின்றி வதியும் குருகு
உடைதிரை	–	கரையை உடைக்கும் அலை, கரையால் உடைபடும் அலை.
புலம்பு	–	கடற்கரை
பல் இதழ்	–	பல இதழ்களையுடைய தாமரை
உண்கண்	–	உண், உவம உருபு. தாமரை போன்ற கண்; மையுண்ட கண்ணும் ஆம்.
பாடு	–	படுதல், முகிழ்த்தல்
மெல்லம் புலம்பன்	–	மென்புலமாகிய நெய்தல் நிலத் தலைமகன்

மேற்கோள் :

1. "தண் கடல் படப்பை மென் பாலனவும்"

பதிற்றுப்பத்து, 30.

2. "துறைவன், நெஞ்சத்து உண்மை அறிந்தும்
என் செயப்பசக்கும் தோழி, என் கண்ணே"

ஐங்குறு நூறு, 169.

Koviloor Digital Library

3. "ஓங்கு திரை வெண்மணல் உடைக்கும் துறைவற்கு"
ஐங்குறுநூறு, 113.

4. "பொதும்பர்த் தனிக் குருகு உறங்கும் துறைவற்கு"
ஐங்குறுநூறு, 114.

5. "நன்மலை நாடன் பிரிந்தெனப்
பல் இதழ் உண்கண் பாடு ஒல்லாவே" *ஐங்குறுநூறு, 216.*

6. "பிரிந்தவழிக் கலங்குதல்"
தொல்காப்பியம், களவியல், 20. இளம்பூரணர்.

7. "வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கூறியது"
தொல்காப்பியம், களவியல், 21. நச்சினார்க்கினியர்

8. "வான் கடல் பரப்பில், தூவற்கு எதிரிய
மீன் கண்டன்ன மெல் அரும்பு ஊழ்த்த
முடவு முதிர் புன்னை" *அகநானூறு, 10.*

9. "நாடற்குத் துயில் துறந்தனவால், தோழி, என்கண்ணே"
குறுந்தொகை, 186.

பொருள் முடிவு :

தோழி, புலம்பன் பிரிந்தென, கண் பாடு ஒல்லா, காம நோய் அது கொல்.

Koviloor Digital Library

6. நெய்தல்

நள்ளென்றன்றே, யாமம்; சொல் அவிந்து
இனிது அடங்கினரே, மாக்கள்; முனிவு இன்று,
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே.

வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது. பதுமனார்

பொருள் :

இரவுப் பொழுதின் நடுக்கூறாகிய யாமப்பொழுது நள் என்ற ஓசையுடையதாக உள்ளது. மக்கள் பேச்சொழிந்து, வெறுப்பின்றி இனிமையாக உறங்குகின்றனர். அகன்ற இடத்தையுடைய உலகத்திலுள்ள உயிர்களும் இனிது துயில்கின்றன. நிச்சயமாக யான் ஒருத்தியே துயிலாது உள்ளேன்.

விளக்கம் :

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்தவழி, யாவரும் துயிலும் நள்ளிரவில் தான் மட்டும் துயில் வராமல் வருந்துவதாகத் தலைவி தோழிக்கு உரைப்பதாய் இப்பாடல் அமைகின்றது. இரவின் நள் என்ற ஓசை, மாக்கள் சொல் அவிந்து அடங்கியமையால் தலைவியால் கேட்கப்படுவதாயிற்று. மாக்கள் என்ற சொல், தன் துயரை அறியாது, தன்னை எஞ்ஞான்றும் வைதுகொண்டிருக்கும் தாயரைக் குறித்தது. அவர்கள் வசைமொழிகள் கூறாமல், சொல்லொழிந்து அடங்கிய செயல், தனக்கு இனிதாயிற்று என்பதால் 'இனிது அடங்கினர்' என்றாள். இனிது என்ற சொல், அவ்வினிமை, அவர்கள் உறங்கும் காலம் மட்டும் இனிமையாயிற்று என்பதைக் குறிப்பதாகும்.

'மாக்கள் அடங்கினர்', என்பதால், தனக்குப் பகையாகிய தாயர் முதலியோர் உறங்குவதையும்; 'உலகம் துஞ்சும்' என்பதால், தொடர்பில்லாத அயலார் உறங்குவதையும் கூறிய தலைவி, 'ஓர்யான் துஞ்சாதேன்' எனத் தன் நட்பாகிய தோழியும் உறங்குதல் எவ்வகையானும் ஏற்புடையதன்று என்பதைக் குறித்தனள். இது நாகரிகமாகத் தோழியை நெருங்கிக் கூறியது, என ரா. இராகவையங்கார் கூறுவர். மாக்கள் அடங்கியமை, தனக்கு நன்றும் அன்று. தீதும் அன்று. ஆனால் உசாத்துணையாய் விளங்க வேண்டிய தோழியும் உறங்கியமை தனக்குத் தீதேயாம் என்பதைத் தோழி

Koviloor Digital Library

உணரும்படி கூறினாள். பகை, நட்பு, நொதுமல் என முத்திறத்தவரும் உறங்கும் நிலை இதனால் குறிக்கப்பட்டது. உறங்குவோரைக் கணக்கிட்டுக் கழித்தவழி உறங்காது எஞ்சியவள் தலைவி ஒருத்தியே. உறங்காதவரை எண்ணும் போதும், தலைவி ஒருத்தியே உறங்காதவளாக உள்ளாள். ஓர் யான் என்பதை வினைத் தொகையாக்கி, ஓர்கின்ற யான் எனப் பொருள் கொண்டு, யாமம் நள் என்பதை ஓர்கின்ற யான் ஒருத்தியே துஞ்சாதேன் எனப் பொருள் உரைத்தலும் கூடும்.

தலைவன், தன் அயன்மையால், உறங்காத எனக்குத் துணையாக வந்திலன் எனத் தலைவி வருந்தினாள். இளம்பூரணர், 'அவன் வயின் பரத்தமை' என்பதற்கு இப்பாடலை எடுத்துக்காட்டுவர். (தொல்காப்பியம், களவியல்,20.)

சொற்பொருள் :

நள் – யாமத்தில் எழும் நள் என்ற ஓசை
நளி – செறிவு (உரிச்சொல்) இருள் செறிந்த

யாமம் – இரவின் நடுக்கூறு (பதினைந்தாம் நாழிகையை இறுதியாக உடைய இடை இரா.)

மாக்கள் – ஐயறிவுடைய தாயர் முதலியோர்.

நனந்தலை – அகன்ற இடம். நன – அகலம் (தொல்காப்பியம் உரியியல், 78.)

மன்ற – உறுதியாக
'மன்ற என் கிளவி தேற்றம் செய்யும்'
தொல்காப்பியம், இடையியல், 17.

துஞ்சும் – துயிலும்

மேற்கோள் :

1. "பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமம்"
குறுந்தொகை, 244.

2. "ஏதில் மாக்கள்" குறுந்தொகை, 89.

3. "ஒலி அவிந்து அடங்கி, யாமம் நள்ளெனக்
கலிகெழு பாக்கம் துயில் மடிந்தன்றே"
நற்றிணை, 303.

Koviloor Digital Library

4. “நள்ளென் யாமத்தும் கண்படை பெறேஎன்”

நற்றிணை, 178.

5. “ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர்யான் ஆகுவது எவன்கொல்”

அகநானூறு, 82.

6. “கொன்னூர் துஞ்சினும் யாம் துஞ்சலமே”

குறுந்தொகை, 138.

பொருள் முடிவு :

யாமம் நள்ளென்றன்று. மாக்கள் அடங்கினர். உலகமும் துஞ்சும், யான் ஒருத்தியே துயிலாதேன்.

Koviloor Digital Library

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No. 11793

7. பாலை

வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார் கொல்? அளியர் தாமே – ஆரியர்
கயிறு ஆடு பறையின் கால்பொரக் கலங்கி,
வாகை வெண்நெற்று ஒலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னியோரே.

செலவின்கண் இடைச் சுரத்துக் கண்டார் சொல்லியது.

பெரும்பதுமனார்

பொருள் :

கழைக் கூத்தர்கள், மூங்கிலின் மேல் கட்டிய கயிற்றின்மேல் ஏறிநின்றி ஆடும்போது கொட்டப்படும் பறை ஒலியைப் போல, மேல்காற்று வீசும்போது நிலை கலங்கி, வாகை மரத்தின் வெண்ணிற நெற்றுக்கள் ஒலி எழுப்பும். அத்தகைய மூங்கில் செறிந்த பாலைநிலப் பரப்பில் கடந்து செல்ல நினைத்து வருபவர்களுள், கையில் வில்லை ஏந்திய இவ்வாடவன் கால்களில் வீரக்கழல்கள் உள்ளன. வளையணிந்த கைகளையுடைய இம்மகளின் மெல்லிய அடிகளின் மேல் சிலம்புகள் உள்ளன. இந்நல்லோர் யாவரோ? இவர்கள் அளிக்கத்தக்கவர்.

விளக்கம் :

உடன் போக்கில் செல்லும் தலைமக்களின் நிலையறிந்து, இடைச் சுரத்தின்கண் கண்டோர் வருந்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

உடன் போக்கினுள் எதிர்கொள்ள இருக்கும் இடையூறுகளை நீக்குவதற்குத் துணையாகத் தலைவன், வில் ஏந்தியவனாய் முன்சென்றனன். நெறிகாட்டித் தலைவியைக் காத்துச் செல்கின்றமையின் தலைவனை முற்பட நினைந்தார். பகைவரை வென்று அவர்தம் தலைவடிவு பதித்த கழலினை இடக்காலிலும், தம் குடிக்குரிய கழலினை வலக்காலிலும் அணியும் மரபு இருந்தது. தலைவன், தலைவியை வரைந்து கொள்ளவில்லை என்பது, அவள் காலில் இருந்த சிலம்பினால் அறியப்படும். திருமணத்திற்கு முன் பெற்றோர்கள் அணிந்த சிலம்பை நீக்கும் சடங்கு அந்நாளில் இருந்தது. பாலை நிலத்தில் நடத்தலாற்றா மென்மை கருதித் தலைவியின் கால்கள் 'மெல்லடி' எனப்பட்டன. தலைவி, தலைவனுடன் செல்வதால் வளை கழலாமையால்,

Koviloor Digital Library

'தொடியோள்' எனக் குறிககப்பட்டனள். தலைவனின் கால், வலிய என்பதால், தலைவியின் அடி, 'மெல்லடி' எனப்பட்டது. இருவரும் நடத்தற்கு உரியரல்லர் என்பதும், தேரூர்ந்து செல்லுதற்கு உரியர் என்பதும் அவர்கள் தோற்றத்தால் அறியப்பட்டன. தலைவியின் கால்களில் சிலம்பு கழிக்கப் டெ'றாமை கண்டு, இவர்களை மணமகனும் மணமகளுமாகத் துணியப் பெறாமையால், இவர்கள் தமக்குள் என்ன உறவுடையவர்களோ எனக் கண்டோர் ஐயுற்றனர். தலைமக்களின் தூய்மை, அன்பு, உவகை முதலியவற்றை, அவர்கள் முகக்குறிப்பால் அறிந்தமையின் 'நல்லோர்' என்றனர். வில்லோன், தொடியோள் எனத் தலைவனையும் தலைவியையும் தனித்தனியே பிரித்துக் கண்ட இவர்கள், முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனால் இணைந்து செல்வது கண்டு 'நல்லோர்' என்றனர். 'யார் கொல்' என்பதற்குக் கண்டோர் செவிலித் தாயிடம், இவ்வாறு செல்லும் இவர்கள் நினக்கு என்ன உறவுடையர் என வினவியதாகவும் பொருள் கொள்ள இடமுள்ளது. வேய் பயில் அழுவத்தை இனிதாகக் கொண்டு நடந்து செல்லும் இவர்கள், ஊரவரும், அயலாரும் உரைக்கும் அலர்மொழிகளை வெறுத்தவரோ என்று வினவியதாகவும் கொள்ளலாம்.

ஆரிய நாட்டில் உள்ள ஒருவகைக் கூத்து ஆரியக் கூத்து எனப்படும். விலக்கு உறுப்புக்கள் பதினான்கனுள், ஒன்றாகிய சேதம் என்பது இருவகைத்து என்றும், அதன் ஒருவகையே ஆரியக் கூத்து என்றும் அடியார்க்கு நல்லார் கூறுவர். (சிலப்பதிகாரம்.3.12.25) இடருற்றார் கூவி அழைத்தாலும் கேளாதபடி, வாகையின் நெற்றுக்கள் ஒலிப்பதையும், புகுதற்கும் கடத்தற்கும் இயலாதவாறு மூங்கில் புதர்கள் மண்டிக் கிடப்பதையும், அவைகளும் வேனில் வெம்மையால், கடுவளி வீசுவதால் உரசித் தீப்பற்றுதலும் கூடும் எனவும் பாலை நிலத்தின் கொடுமை நினைக்கப்பட்டது. கழலும் சிலம்பும் ஒலிப்பச் சென்றாலும், அவ்வொலி பிறரால் கேட்டதற்கு இயலாதவாறு வாகையின் நெற்றுக்கள் ஒலிப்பன என்று கண்டோர், தலைவியை நாடி வந்த செவிலியை இடைச் சுரத்துக் கண்டு கூறினர்.

கொடிய பாலை நிலத்தில் கழலும் சிலம்பும் ஒலிக்கச் சென்ற இந்நல்லோரைக் கண்டு, கலங்கி அறிவற்ற வாகையும் ஒலிக்கும் என 'அன்புறு தகுவந இறைச்சியுள் சுட்டும்' குறிப்பும் இப்பாடலில் அமைந்துள்ளது. அஃறிணைப் பொருளே, இவர்கள் நிலைகண்டு வருந்தும் போது, கண்டோர் வருத்தம் கூறவேண்டாவாயிற்று.

Koviloor Digital Library

சொற்பொருள் :

வில்லோன்	–	கையில் வில் உடையவன்.
தொடியோள்	–	கையில் வளையல் அணிந்தவள்.
நல்லோர்	–	குடியினும், வாழ்க்கையினும் நன்மை நிரம்பியோர்.
யார் கொல்	–	எவ்வினை மேற்கொண்டவரோ, தம்முள் எத்தகைய உறவுடையவரோ? நினக்கு என்ன உறவுடையவரோ.
ஆரியர்	–	கழைக் கூத்தர்.
அழுவம்	–	பாலை நிலப்பரப்பு.
முன்னியோர்	–	கருதிச் செல்பவர்.

மேற்கோள் :

1. செவிலித்தாய்க்குக் கண்டோர் கூறியதற்கு மேற்கோள்.
தொல்காப்பியம், செய்யுளியல், 163. பேராசிரியர்.
2. இடைச் சுரத்துக் கண்டோர் கூறியதற்கு மேற்கோள்.
தொல்காப்பியம், அகத்திணையியல், 40. இளம்பூரணர்.
3. "ஆய்கழல், சேயிழை வெள்வேல் விடலை"
குறுந்தொகை, 15.
4 "காலன, புனை கழல்" புறநானூறு, 100.
5. "பெயர்ந்து போகுதி, பெரு மூதாட்டி
சிலம்பு கெழு சீறடி சிவப்ப
இலங்கு வேல் காளையொடு இறந்தனள் சுரனே"
தொல்காப்பியம், அகத்திணையியல், 40. நச்சினார்க்கினியர்.
6. "அத்த வாகை, அமலை வால் நெற்று,
அரியார் சிலம்பின் அரிசி ஆர்ப்ப
கோடை தூக்கும் கானம்" குறுந்தொகை, 369.
7. "வாடல் உழிஞ்சில் விளை நெற்று, அம்துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்பக்
கோடை நீடிய அகன் பெருங் குன்றம்"
அகநானூறு, 45.

பொருள் முடிவு :

அழுவம் முன்னியோர், யார் கொல், அளியர்.

Koviloor Digital Library

8. மருதம்

கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறி, தம் இல்,
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும், தன்புதல்வன் தாய்க்கே.

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ஆலங்குடி வங்கனார்

பொருள் :

வயல் அருகில் உள்ள மாமரத்தின் முற்றி வீழ்ந்த இனிய பழத்தைப் பொய்கையிலுள்ள வாளைமீன்கள், கவ்வி உண்பதற்கு இடனாகிய மருத நிலத் தலைமகன், எம்முடைய வீட்டில், எம்மை வயப்படுத்துவதற்காகப் பெருமொழிகளைக் கூறிச் சென்று, தம்முடைய வீட்டில், முன் நிற்பவர் கையையும், காலையும் தூக்கும்போது, தானும் தூக்குகின்ற கண்ணாடியுள் தோன்றும் பாவையைப் போல, புதல்வனை ஈன்ற தன்னுடைய மனைவிக்கு அவள் விரும்பிய செயல்களைச் செய்வான்.

விளக்கம் :

தலைவி தன்னைப் பழித்துக் கூறினாள் என்பதை அறிந்த காதற்பரத்தை, தலைவன் தன்னுடைய மனைவிக்கு அஞ்சி ஒழுகுவதாக அவள் சுற்றத்தார் கேட்குமாறு கூறுவதாக இப்பாடல் அமைகின்றது.

மாமரம், தன்னை வைத்துப் போற்றுவார்க்குப் பயன்படாமல், ஒரு முயற்சியும் செய்யாத அருகில் உள்ள வயலில் துள்ளித் திரியும் வாளை மீனுக்கு வருந்தாமல் எளிதில் பயன் துய்க்கப் பயன்படுவதாயிற்று. தலைவனும் தன்னைப் பேணும் தலைவிக்குப் பயனின்றிப் பரத்தைக்கு எளிதில் பயன் நுகர ஏதுவாயினன். தலைவன், காதற் பரத்தையர் இல்லத்தில் அவர்களைப் பெருமைப்படுத்தும் புகழ்மொழிகளைக் கூறினன். அவன் எத்துணைப் பெருமொழிகள் கூறியபோதிலும் பரத்தையர் மனை, தலைவனின் மனை ஆவதில்லை. எனவே 'எம் இல்' என்றாள். மனையறம் பூண்டு ஒழுகற்பாலளாகிய தலைவி தன் மகனுடன் உறையும் இல்லம் தலைவனுடைய இல்லம் ஆதலின், "தம்

Koviloor Digital Library

இல்" எனப்பட்டது. மகப்பேறு பெற்ற தலைவி, தன் மகனைப் பேணுதற்கு உரியளேயன்றித் தன் போல இன்பத்திற்கு உரியள் அல்லள் என்பதைப் "புதல்வன் தாய்" என்று கூறி இகழ்ந்தனள். பரத்தையிடம் இன்பத்தைப் பெற விரும்பிய தலைவன், அவளை மகிழ்விப்பதற்காகப் பெருமொழிகளைக் கூறினான். ஆனால் தான் இன்பம் துய்த்தற்கு உதவாத தலைவியிடம், அவளிட்ட தொழில்களையெல்லாம் உணர்ச்சியின்றிச் செய்தனன். தலைவன், இருந்தும், நடந்தும் செய்யும் எல்லாத் தொழில்களையும் செய்பவன் என்பதைக் 'கையும் காலும்' எனக் குறித்தாள். தன்னுடைய மனையில் அவனுக்குப் புதல்வர்ப் பேறு வாய்த்தாலும் அம்மகவு, அவன் மகவாகக் கொள்ளப்படுவதில்லை.

"பழன வாளை கதூஉம் ஊரன்", என்ற தொடர் தலைவியர்க்குரிய தலைவரைக் கிடைத்தபோதெல்லாம் பெற்று இன்பம் நுகரும் பரத்தையரின் இயல்பைக் குறிப்பதாகும். பரத்தை, தலைவியைத் தலைவனின் மனைவி என்ற சொல்லால் கூடக் குறிப்பிட விரும்பாமல், 'புதல்வன் தாய்' எனக் கூறினள். இப்பாடல், காதற் பரத்தை தலைவியின் முதுமையை இகழ்ந்ததாகப் பொருளுரைக்கப்படும். தலைவி ஏவிய தொழில்களைச் செய்தமையே, அவள் செருக்குக் கொள்ளக் காரணமாயிற்று எனக் கருதித் தலைவனைப் பரத்தை இகழ்ந்தனள். "இனிதுறு கிளவியும், துனியுறு கிளவியும் உவம மருங்கில் தோன்றும் என்ப", என்பதால் இப்பாடல், இனிதுறு கிளவி பற்றி வந்த உள்ளுறை உவமம் எனப் பேராசிரியர் விளக்குவர். (தொல்காப்பியர், உவமஇயல், 28.) இப்பாடலைக் காமக் கிழத்தியர் தலைவனை இகழ்ந்தது என இளம் பூரணரும், இல்லிடத்திருந்து தலைவனும், தலைவியும் ஊடியும், கூடியும், உணர்த்தியும் செய்த தொழில்களைக் கேட்டு காமக் கிழத்தி இகழ்ந்தது என நச்சினார்க்கினியரும் விளக்குவர். (தொல்காப்பியம், கற்பியல், 10.)

சொற்பொருள் :

கதூஉம்	–	பற்றும்
எம் இல்	–	பரத்தை மனை
தம் இல்	–	தலைவன் மனை
ஊரன்	–	மருத நிலத்துத் தலைமகன்
பெருமொழி	–	பெருமைப்படுத்தும் மொழி
தீம்பழம்	–	இனிய பழம்
ஆடி	–	கண்ணாடி

Koviloor Digital Library

மேவன – விரும்பியன

மேற்கோள் :

1. "நறுவடி மாஅத்து விளைந்து உகு தீம் பழம்"

ஐங்குறுநூறு, 61.

2. கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த் தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்.

குறுந்தொகை, 164.

3. "புதல்வன் தாய் அவன் புறங் கவைஇனளே"

குறுந்தொகை, 359.

4. "மாசில் கற்பின் புதல்வன் தாய்" *அகநானூறு, 6.*

பொருள் முடிவு :

ஊரன், எம் இல் பெருமொழி கூறித் தம் இல்லில் புதல்வன் தாய்க்கு அவள் மேவன செய்வான்.

Koviloor Digital Library

9. நெய்தல்

யாய் ஆகியளே மாஅயோளே -
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயின ளே;
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின். மானும்
தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும்மே.

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. கயமனார்.

பொருள் :

மாமை நிறம் உடையவள் என் தாய் ஆயினள். பொருத்துதல் அமைந்த செப்பின்கண், துணை ஏதுமின்றித் தனியே வைக்கப்பட்ட, ஒருவர் சூடாத மலர்களைப் போல, இவள் உடல் வாடினள். பசிய இலைகளுக்கிடையே வளர்ந்துள்ள, உயர்ந்த திரட்சியையுடைய தண்டினைக் கொண்ட நீலமலர், பல இனங்களாக விளங்கும் மீன்களைக் கொண்ட உப்பங்கழியின்கண், நீர் அலை பெருகுந்தோறும், ஆழமான குளத்தில் மூழ்கும் மகளிரின் கண்போலத் தோற்றமளிக்கும். இத்தகைய குளிர்ந்த நீர்த்துறைக்கு உரிய தலைவன், தன்னைப் பேணாமை யேயன்றிப் பரத்தையைப் பேணும் கொடுமையை நம்முன் புலப்படுத்த நாணமுற்றுத் தன்னுள் மறைத்தனளாய் உரையாடுவாள்.

விளக்கம் :

தலைமகளுடைய ஊடலைத் தீர்க்கும் வாயிலாகத் தோழி செயற்படுவதை இப்பாடல் உணர்த்துவதாகும். "தோழி தானே, செவிலி மகளே", (தொல்காப்பியம், களவியல், 34) ஆதலின், யாய் என்ற சொல், தோழியின் தாயாகிய செவிலியைக் குறிக்கும். தன்னுடைய குற்றத்தையும் பொறுத்துத் தன்னிடம் உரையாடும் பொறையுடைமை கருதி தோழி, தலைவியைத் தாய் என்றனள். தலைவி இளையளாயினும், அறிவு முதிர்ச்சியால் தன்னை வளர்த்த தாய் போன்றனள் எனவும் குறித்தாள். தலைவனிடம் ஊடல் கொள்ளப் பல காரணங்கள் இருந்தபோதும், அவற்றைத் தன் மனத்தில் கொள்ளாமல், தோழி வாயிலாக வந்தமையை ஏற்றுக் கொண்டனள்.

Koviloor Digital Library

கொடியிலும் இல்லாமல், பறித்துச் சூடுவார் தலையிலும் இல்லாமல், காற்றுப் புகாத செப்பில் அடைத்து வைக்கப்பட்டுக் கிடக்கும் மலர் போலத் தலைவியின் தோற்றம் இருந்தது. கொடிய காட்டில், உயர் மரத்தில் பூத்த பூவும் ஒருவர் சூடாது கழியும். ஆனால், ஈண்டுக் கூறப்பட்டது, ஒருவர் சூடுவதற்காகப் பறிக்கப்பட்ட, காற்றுப் புகாமலும், மணம் புறத்தே செல்லாமலும் செப்பின் கண் அடைக்கப்பட்டிருக்கும் பூவைக் குறிப்பதாகும். நீர் நிலையில் மகளிர் குளிக்கும் போது, கண்களின் இமை மூடியும், மேலெழும் போது இமை திறந்தும் காணப்படுவது போல, கடல் நீர், உப்பங்கழிகளில் உள்ளே புகும் போது நெய்தல் மலர்களின் இதழ்கள் குவிந்தும், வற்றும் போது இதழ்கள் விரிந்தும் மகளிரின் கண்கள் போல் தோற்றமளிக்கும். கண்களல்லாத நெய்தல் மலர்கள், கண்களைப் போல் தோன்றுகின்றன. இது, பரத்தையர் தலைவனுக்குக் கண்போல் விளங்குவதைக் குறிப்பதாகும்.

இப்பாடலை, வாயிலாகப் புக்காருள், பாடினி பாணற்கு உரைத்தது என உரையாசிரியர்கள் கருதுவர். (தொல்காப்பியம், செய்யுளியல், 201. பேராசிரியர்; செய்யுளியல், 199. நச்சினார்க்கினியர்.)

நெய்தலும், இள மீனும் மகளிர் கண் போல் விளங்குவதாகவும் பொருள் கொள்ளுதல் கூடும். ஓதம் மல்குதலால் இக்காலம், மாலைக் காலம் எனவும், அக்காலத்து நெய்தல் மலரும் எனவும், அம்மலர்களின் அருகே மீன்கள் துள்ளித் திரியும் எனவும், ரா. இராகவையங்கார் விளக்குவார். சிறப்பில்லாத நெய்தல் மலர், சிறப்புடைய மகளிரின் கண்கள் போல் விளங்குவதால், பரத்தையர் சிறப்புடைய தலைவியைப் போல தலைவனால் விரும்பப்படுவதைக் குறித்தார். தலைவன் கொடுமையைக் கூற நாணி மறைத்த போதிலும், தலைவியின் ஆற்றாமையை அவள் உடல் மெலிவு கொண்டு தோழி அறிந்தனள்.

சொற்பொருள் :

யாய்	–	கற்புக் கடம் பூண்டவள், தாய், செவிலி.
மாயோள்	–	இளமைக்கு இயல்பாகிய மாமை நிறமுடையவள் மாமை – மாந்தளிர் போன்ற அழகிய நிறம்.
மடை	–	மடுத்தல், பொருத்துதல்
பெய்யாப் பூ	–	ஒருவர் சூடாத பூ

Koviloor Digital Library

சாயினள்	–	மெலிந்தனள் "ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்" தொல்காப்பியம், உரியியல். 34
பாசடை	–	பசிய இலை.
கணை	–	திரட்சி
நெய்தல்	–	நீல மலர்
கொடுமை	–	தன்னைப் பேணாமையேயன்றிப் பரத்தையைப் பேணும் கொடுமை
கரப்பு	–	கரத்தல், மறைத்தல்
ஆடும்	–	சொல்லாடுவாள்
ஓதம்	–	கடல் அலை
கயம்	–	ஆழமான குளம்
துறைவன்	–	நெய்தல் நிலத் தலைமகன்

மேற்கோள் :

1. தலைமகளைப் பேணாத ஒழுக்கத்தினால்
நாணிய பொருண்மைக்கண் தோழி கூற்று

தொல்காப்பியம், கற்பியல், 7.

2. "அகம் புகல் மரபில் வாயில்கள் உரைத்தல்"

தொல்காப்பியம், கற்பியல், 11.

3. சாஅய் நோக்கினளே, மாஅயோளே"

குறுந்தொகை, 132.

4. "பெய்யாது வைகிய கோதை போல மெய் சாயினள்"

நற்றிணை, 11.

5. "வைகவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்"

கலித்தொகை, 68.

6. "ஒண் நுதல் மகளிர் ஓங்கு கழிக்குற்ற
கண்நேர் ஒப்பின் கமழ் நறு நெய்தல்"

நற்றிணை, 283.

Koviloor Digital Library

7. "இருங்கழி மலர்ந்த கண் போல் நெய்தல்"

அகநானூறு, 170.

8. "தன் எவ்வம் கூரினும், நீ செய்த அருளின்மை
என்னையும் மறைத்தாள் என் தோழி"

கலித்தொகை, 44.

பொருள் முடிவு :

மாஅயோள் மெய் சாயினள்; துறைவன் கொடுமை நாணிக் கரப்பாடும்; ஆதலின் அவள் யாய் ஆயினள்.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

10. மருதம்

யாய் ஆகியளே விழவு முதலாட்டி;
பயறு போல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே.

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. ஓரம் போகியார்

பொருள் :

தலைவன் செல்வம் பெற்று விழாக்கோலம் பூண்டு மகிழ்தற்குக் காரணமாய தலைவி, தாயாக விளங்குகின்றாள். மணம் வீசும் மலர்களைக் கொண்ட காஞ்சி மரத்தின் பயற்றங்காய் போன்ற பூங்கொத்துக்களில் உள்ள அழகிய மகரந்தத் துகள், தங்கள் மேனியிலும், உழுகின்ற பகட்டின் மேலும், வயலிலும் படும்படியாக நிலத்தை உழுபவர்கள் வளைப்பர். இத்தகைய வளம் பொருந்திய மருத நிலத்துத் தலைமகனுடைய கொடுமையை நாம் அறியாதவாறு மறைத்தனள் ஆகலின், அவன் நாணும்படி அவனை எதிர்கொள்ள வருகின்றாள்.

விளக்கம் :

காஞ்சி மரத்தின் பூக்கள், மாலை கட்டினாற் போல, அதன் மென்மையான கிளைகளில் பூத்துக் குலுங்கும். நிலத்தை உழுபவர், வயல் வரப்புக்களில் நடப்பட்டுள்ள இம்மரத்தின் கிளைகளை எளிதில் வளைத்துப் பூக்களை உதிர்ப்பதற்கு ஏற்றவாறு, இம்மரங்கள் குறைந்த உயரம் உடையவை. இம்மரம், 'குறுங்கால் காஞ்சி' என்று கூறப்பெறும். இம் மலர்களின் மகரந்தத் துகள் வயல்களுக்கு எருவாகப் பயன்படுவதால், ,உழவர் இம்மரத்தின் பூக்களை வயலில் உதிர்ப்பர். உழவுத் தொழில் முடித்து மீளுங்கால், காஞ்சியின் துகள் தம்மீது படிந்தமை தோன்ற தம் மனைக்கண் புகுவது போலத் தலைவனும் பரத்தையர் மனையிலிருந்து இன்பம் நுகர்ந்து தம் மனைக்குத் திரும்பும் போது, அவர்கள் செய்த குறிகள் தம் உடலில் தோன்றப் புகுவன். உழவன் தலைவனாகவும்; உழுபகடு பாணனாகவும், உழுநிலம் சேரியாகவும்; காஞ்சி மரம் பரத்தையாகவும்; உழுதொழில் அவரொடு இன்பம் நுகர்வதாகவும்; உழவர் உடலில் வீழ்ந்து கிடக்கும் தாது, அவர்கள் செய்த குறியாகவும்; உழவர் பகட்டுடன் வீடு திரும்புதல், பாணனை வாயிலாகக் கொண்டு தலைவன் தன் இல்லம் அடைவதாகவும் உள்ளுறை கொள்ளப்படும்.

Koviloor Digital Library

தலைவன் விழாக் கோலம் பூண்டு ஒழுகக் காரணமாய் விளங்குபவள் தலைவி. ஆயினும், தலைவன், அவளை மகிழ்வித்து மகிழாது, அவள் உள்ளம் வருந்துமாறு அவளைப் பிரிந்து சென்று, பரத்தையரை மகிழ்வித்துக்கூடி, அவர்கள் நிகழ்த்திய அடையாளங்களுடன் தன் மனைக்குத் திரும்பினான். இச்செயல், 'காஞ்சி ஊரன் கொடுமை', எனப்பட்டது. தலைவனின் இப்புறத்தொழுக்கத்தைப் பிறர்க்குப் புலனாகாமை மறைத்த தலைவி, தலைவனே தன் செயலுக்கு நாணமடையுமாறு அவனை விரைந்து எதிர்கொண்டு வரவேற்றனள். கொடுமையை மறைத்தலும், பொறுத்தலும், ஏற்றலும் ஆகிய இயல்புகளைத் தலைவியிடத்துக் கண்ட தோழி,அவளைத் தாய் எனப் பாராட்டினள்.

'விழவு முதலாட்டி' என்ற சொல், தலைவன் தலைவியை மணம் செய்து கொண்ட பின்னரே, தலைவனுக்குச் செல்வம் பெருகியதைப் புலப்படுத்தும். தான் கொடுமை செய்த போதிலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல், எதிர் கொண்டு வரவேற்ற செயல், தலைவற்கு நாணத்தைத் தருவதாகும். 'நாணிய' என்ற சொல், தோழி நாணமுறும் படி எனவும பொருள்படும். வாயில் நேர்தல் முறையன்று எனத் தோழி மறுத்தவழியும், தலைவன் கொடுமை கண்டு இகழாமல் அவனை ஏற்றுக் கொண்ட தலைவியின் செயல், தோழிக்கு நாணத்தைத் தருவதாயிற்று. காஞ்சிப் பூக்களின் தாது பயற்றங்காய் போல வண்ணமும், வடிவும், அளவும் கொண்டு கொத்துக்களாய் விளங்குவன.

சொற்பொருள் :

பயறு	–	பயற்றங்காய்
இணர	–	பூங்கொத்துக்களையுடைய
படீஇயர்	–	படுவதற்காக
வாங்கிய	–	வளைத்த
ஊரன்	–	மருத நிலத் தலைமகன்
நாணிய	–	நாணமுறும்படி
முதலாட்டி	–	முதன்மையை ஆள்பவள்
வரும்	–	வருதல் ஏற்றுக் கொள்ளுதல் என்ற பொருள் தரும்
தாது	–	மகரந்தத் துகள்

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "யாயாகியளே மாஅயோளே" *குறுந்தொகை, 9.*

2. "குறுங்கால் காஞ்சிக் கோதை மெல் இணர்ப்
பொன் தகை நுண்தாது உறைப்ப"
அகநானூறு, 341.

3. "ஓரான் வல்சிச் சீறில் வாழ்க்கை,
பெருநலக் குறுமகள் வந்தென
இனி விழவாயிற்று என்னும் இவ்வூரே"
குறுந்தொகை, 295.

4. "ததைந்த காஞ்சி" பதிற்றுப்பத்து, 23.

"விளையாட்டு மகளிர், மலரும் தளிரும், முறியும், தாதும், பூவும் கோடலால் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சி" உரைப்பகுதி.

5. "கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்கால் காஞ்சி" *சிறுபாணாற்றுப்படை, 178.*

6. "காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்து"
கலித்தொகை, முல்லைக்கலி, 8.

பொருள் முடிவு :

விழவுமுதலாட்டி, ஊரன் கொடுமை கரந்தனள் ஆதலின், அவன் நாணும்படி வாராநின்றனள்.

Koviloor Digital Library

11. பாலை

கோடு ஈர் இலங்கு வளை நெகிழ, நாளும்
பாடு இல கலிழும் கண்ணொடு புலம்பி,
ஈங்கு இவண் உறைதலும் உய்குவம்; ஆங்கே
எழு, இனி – வாழி, என் நெஞ்சே! – முனாது,
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நல்நாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்,
வழிபடல் சூழ்ந்திசின், அவருடை நாட்டே

தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது. மாமூலனார்

பொருள் :

சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட, முன்கையில் விளங்கும் வளையல்கள், உடல் மெலிவினால் நெகிழுமாறு, தலைவன் வரைவிடை வைத்துச் சென்ற ஒவ்வொரு நாளும் உறக்கமில்லாமல் கலங்கி அழும் கண்ணொடு, தனிமைத் துயரால் நாம் இங்கு வருந்திக் கிடத்தலினின்று தப்புவோம். என் நெஞ்சே! நீ வாழ்வாயாக. நீ அவனுடைய நாட்டிற்குச் செல்ல இப்பொழுதே முற்பட்டு எழுவாயாக. கஞ்சங் குல்லையைத் தலைமாலையாக அணிந்த வடுகருடைய பகைப்புலம், வலிய வேற்படையையுடைய கட்டி என்பவனுடைய நல்ல நாட்டிற்கு அப்பால் உள்ளது. நம் மொழி பேசாது வேற்று மொழி பேசப்படும், அந்நாட்டில் தலைவன் இருப்பினும், அவனை நாடிச் செல்லும் உன்னைத் தொடர்ந்து வருதலை யான் துணிந்துள்ளேன்.

விளக்கம் :

தலைவன் பிரிவினை ஆற்றாத தலைவி, தோழி கேட்பத் தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் இப்பாடல் அமைகின்றது. ''காமக் கிழவன் உள்வழிப்படல்'', (தொல்காப்பியம், களவியல், 22) என்ற பகுதிக்கு இப்பாடலை இளம் பூரணர் எடுத்துக் காட்டுவர். களவுக் காலத்தில் தலைவன், வரைவிடை வைத்துப் பிரிந்தவழி, ஆற்றாமை மிகுதியால் தலைவன் யாண்டுளனாயினும் அவனைக் காண வேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்த தலைவி, தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் இப்பாடல் விளக்கப்படும். ''மொழி பெயர் தேஎத்தராயினும்'', என்ற தொடர், அப்பகுதிகட்கு அவன் செல்லாமை குறித்தது. கட்டியின் நன்னாட்டிற்கு

Koviloor Digital Library

அப்பால், வடுகரின் பகைப்புலம் உள்ளதாக முன்பொருகால் தோழி கூறியது கொண்டு, தலைவி கூறினள். அத்தகைய மொழி பெயர் நாடுகளும், பகைப்புலமும் தாம் செல்லுதற்கு உரிய அல்ல என அறிந்தும், ஆண்டுச் செல்ல விரும்புவ்தாகத் தலைவி கூறினள். இதனால் கட்டியின் நாடு, பகைப்புலமோ, மொழிபெயர் நாடோ அன்று என்பது அறியப்படும். கட்டி என்பவன், சேரன் படைத்தலைவருள் ஒருவன் என்பதும், பாணன் என்பானைத் துணைக் கொண்டு உறையூரை ஆண்ட தித்தனுடன் போர் உடற்றப்புகுந்து, தித்தனின் நாள் அவையில் எழுந்த கிணைப்பறையின் ஒலிகேட்டுப் போர் செய்யாது ஓடினன் என்பதும் அகநானூற்றில் குறிக்கப்பட்டுள்ளன. (அகநானூறு, 226.) கட்டியின் நாடு தமிழகத்தைச் சார்ந்த பகுதியாகும். வடுகர் நாடும் மொழி பெயர் தேஎம் என உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவர்.

வளை நெகிழ்தலும், கண் கலிழ்தலும் கண்டு அன்னை இடித்துரைப்பாள். ஊரவர் அலர் தூற்றுவர். இக்கொடுஞ் செயல்களால் வருந்தித் தனிமைத் துயரால் தவிக்கும் தலைவி, தன் நெஞ்சினைத் துணையாகக் கொண்டு, தலைவனை அடைய விரும்பினள். கட்டி என்னும் குறுநில மன்னனை மாமூலனார், பரணர், குடவாயிற் கீரத்தனார் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். தலைவன் ஆண்மையும் உணர்வும் உடையன் ஆதலின், அவன் மொழிபெயர் தேயமாயினும் செல்ல வல்லவன் என்பது குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

கோடு	–	சங்கு
புலம்பி	–	தனிமைத் துயரால் வருந்தி
முனாது	–	முற்பட உள்ள
குல்லை	–	கஞ்சங் குல்லை என்னும் செடி
வடுகர்	–	வேங்கடத்தின் வடக்கே வாழ்பவர். வீரம் மிக்கவர். வேட்டைத் தொழில் புரிபவர். நாய்களை உடன்கொண்டு செல்பவர்.
கட்டி	–	கங்க நாட்டின் தலைவன்
மொழி பெயர் தேஎம்	–	வேற்று மொழி வழங்கும் நாடு
வழிபடல்	–	தலைவன் உள்ள இடத்திற்குச் செல்லுதல்

Koviloor Digital Library

மேற்கோள்:

1. "கடற் கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை"
   ஐங்குறுநூறு,194
2. "கோடீர் இலங்கு வளை" *குறுந்தொகை,31*
3. "கோடீர் இலங்கு வளை நெகிழ்ந்து, நாளும் பாடில கலிழ்ந்து பனி ஆனாவே" *குறுந்தொகை, 365*
4. "கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர் வல்லாண் அருமுனை" *அகநானூறு, 107*
5. "துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி."
   அகநானூறு,44
6. "போர் அடு தானைக் கட்டி" *அகநானூறு,226*
7. "கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர் நெடும் பெருங்குன்றம்"
   நற்றிணை,212
8. "வேங்கடத்து உம்பர் ..... வடுகர் தே எத்து"
   அகநானூறு,213
9. "வடுகர் .... மொழிபெயர் தேஎம்" *அகநானூறு,295*

பொருள் முடிவு :

நெஞ்சே! உய்குவம் எழு அவருடைய நாட்டு, வழிபடல் சூழ்ந்திசின்.

Koviloor Digital Library

12. பாலை

எறும்பி அளையின் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடுவில் எயினர், பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப, அவர்தேர் சென்ற ஆறே;
அதுமற்று அவலம் கொள்ளாது,
நொதுமல கழறும் இவ்அழுங்கல் ஊரே.

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஓதலாந்தையார்.

பொருள் :

எறும்புப் புற்றுக்களைப் போன்ற, குறுகிய, பலவாகிய சுனைகளையுடைய பாறைகள் உள்ளன. அப்பாறைகள், கொல்லனது உலைக் கூடத்திலுள்ள பட்டடைக் கல்லைப் போல வெம்மையுடையவை. வளைந்த வில்லினை ஏந்திய வேட்டுவர், அப்பாறையின் மேல் ஏறித் தங்கள் அம்புகளைத் தேய்த்துக் கூர்மையாக்குவர். தலைவனுடைய தேர் சென்ற வழி, இத்தகைய பாலை நிலத்தில் கவர்த்த பல வழிகளையுடையது. என்போல அவ்வழியைப் பற்றித் துயரம் கொள்ளாமல், இந்த ஆரவாரத்தினையுடைய ஊரானது என்னை அயலாகக் கருதி இடித்துரைக்கும்.

விளக்கம் :

தலைவியின் பிரிவாற்றாமை கருதித் தோழி வருந்தியவழித் தலைவி, அவட்குத் தன்னிலையை விளக்குவதாக இப்பாடல் அமைகின்றது. சுனைகள் பலவாகவும், சிறியனவாகவும், குழிந்தும் காணப்படுதலால், அவற்றை எறும்பின் புற்றுக்கள் போல உள்ளனவாக உவமித்தார். "உலைக்கல் அன்ன பாறை" என்பதால், ஆண்டுள்ள சுனைகளும் நீரற்றுக் காணப்படுதல் குறித்தார். வேட்ர்கள், எறும்பின் அளையைத் தோண்டிப் பெறும் புல்லரிசியை உணவாகக் கொள்வர். சேய்மையில் வருவோரைத் தெரிந்து கொண்டு அவர்களுடைய கைப்பொருளை வவ்வி, ஆறலைத்து, வாழ்வை நடத்தும் வேடர் ஆதலின், அவர்கள் வழிவருவாரைக் கொல்வதற்கு ஏற்றவாறு தங்கள்

Koviloor Digital Library

கருவிகளைச் செப்பம் செய்துகொள்வர். கொல்வதற்கு ஏற்ப அமைந்திருத்தலால், வில்லின் வளைவு கூறப்பட்டது. அன்றியும் வழிச் செல்வார்க்கு அவர்கள் இழைக்கும் கொடுமைபற்றியும் 'கொடு வில் எயினர்' எனப்பட்டனர். தலைவன் சென்ற நெறியில் உணவளிப்பது எறும்பின் புற்று, நீர் தருவது அறுநீர்ச் சுனை, உறைவிடம் உலைக்கல் அன்ன பாறை, வாழ்வோர், அம்புகளைத் தேய்த்துத் தீட்டும் வேட்டுவர் எனத் தலைவி இடையூறுகளை எண்ணிக் கலங்கினள். வழியின் வெம்மையும், மயக்கமும், ஆறலை கள்வர் அச்சமும் தலைவியின் துயரத்திற்கு ஏதுவாயின. இவற்றை அறியாது, தோழி தன்னை அயலவர் போல் இடித்துரைத்தல் தகாது எனத் தலைவி கூறினள். வழியின் கொடுமையை எண்ணி வருந்தியமை அறியாத தோழி, தலைவன் பிரிவு எண்ணிக் கலங்குவதாகக் கூறுதல் தக்கதன்று என்றனள். 'ஊர்' என்பது ஈண்டுத் தோழியைக் குறிப்பதாகும். தன்னோடு ஒருபடித்தாயுள்ளவள், தன்னோடு வருந்தாமல் தன்னை அயன்மையில் வைத்து இகழ்தலால் தலைவி தோழியை தனக்குத் தொடர்பில்லாதவள் போல், 'ஊர்' என அயன்மையில் குறிப்பிட்டாள். அருஞ்சுரத்துச் சென்ற தலைமகன், நோயின்றித் திரும்ப வேண்டும் என்ற தலைவியின் வேட்கை இதனால் புலப்படும். "அவர் சென்ற ஆறே" என்பது மற்றொரு பாடம்.

சொற்பொருள் :

எறும்பி	–	எறும்பு
அளை	–	புற்று, வளை
உலைக்கல்	–	கொல்லன் உலைக் கூடத்தில் உள்ள அடைகல்
எயினர்	–	வேட்டுவர்
கவலைத்து	–	கவர்த்த வழிகளை உடையது.
ஆறு	–	நெறி
மாய்த்தல்	–	தீட்டுதல், கூராக்குதல்
நொதுமல்	–	அயல்

மேற்கோள் :

1. தோழியை ஊர் எனும் வழக்கு –
   "யான் எவன் செய்கோ, பொய்க்கும் இவ்வூரே"
   (ஐங்குறுநூறு, 154) என்பதன் உரையில், ஊர், தோழியை நோக்கியதாக உரை.

Koviloor Digital Library

2. "மட்டம் பெய்த மணிக் கலத்தன்ன இட்டு வாய்ச் சுனைய" குறுந்தொகை,193
3. "நுங்கின், தடிகண் புரையும் குறுஞ்சுனை" கலித்தொகை,108
4. "கவலை யாத்த அவல நீளிடை" குறுந்தொகை, 224
5. "ஈங்கு யான் தாங்கிய எவ்வம், யாங்கு அறிந்தன்று இவ் அழுங்கல் ஊரே" குறுந்தொகை,140
6. "கொடுவில் எயினர்" பட்டினப்பாலை,266
7. "மீன் கண் அற்று அதன் சுனையே" புறநானூறு,109
8. "கானுயர் மருங்கின் கவலையல்லது வானம் வேண்டா வில் ஏர் உழவர்" அகநானூறு,193
9. "கொல்லன் விசைத்தெறி கூடமொடு பொரூஉம் உலைக்கல் அன்ன வில்லாளன்னே" புறநானூறு,170

பொருள்முடிவு :

அவர் சென்ற ஆறு, எயினர் பாறை ஏறி, பகழி மாய்க்கும் கவலைத்து என்ப. ஊர், அவலம் கொள்ளாது கழறும்.

Koviloor Digital Library

13. குறிஞ்சி

மாசு அறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒரு தலைச் சேக்கும் நாடன்
நோய் தந்தனனே – தோழி!
பசலை ஆர்ந்த, நம் குவளை அம் கண்ணே"

தலைவன் தோழியிற் கூட்டம் கூடி, ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது. கபிலர்

பொருள் :

தோழி! மேல்படிந்துள்ள புழுதி நீங்கும்படி பாகனால் கழுவப் பெற்ற யானையைப் போல, பெருமழையினால் தாக்கப்பட்ட சருச்சரையையுடைய பெரிய துறுகல்லின் குளிர்ச்சியையுடைய ஒரு புறத்தே நம்முடன் தங்கிய நாடன், நம்மை நீங்கிப் பிரிவுத் துயரைத் தந்தனன். அதனால் குவளை போன்ற நம் கண்களில் பசலை படர்ந்தது.

விளக்கம் :

தலைவன் பிரிவினால் தலைவிக்கு ஏற்பட்ட பசலைநோய் இங்குக் குறிக்கப்படுகின்றது. யானை, தன் தலையிலும், உடலிலும் தானே புழுதியை வாரி இறைத்துக் கொள்ளும். அதன் உடலில் உள்ள புழுதி முற்றிலுமாகக் கழுவப் பெற்றமை போல, பெருமழை பெய்து, துறுகல்லின் மாசெல்லாம் அகன்றது. பிரிவாற்றாமையால் நேர்ந்த காமநோய், தலைவியின் உடல்மெலிவிற்குக் காரணமாயிற்று. பெரும் பெயலால் உழந்த துறுகல் போல், தலைவி ஊரவர் அலர் மொழிகளால் மிகவும் மெலிந்தனள். தலைவனைப் பிரிவதற்கு முன், குவளை போன்றிருந்த கண்கள், அவன் பிரிவிற்குப் பின் பசலையால் மூடப்பட்டன. துறுகல்லில் உள்ள மாசு, மழை நீரால் கழுவப் பெற்றது. ஆனால், தலைவன் பிரிவால் கண்களில் பசலை வளர்வதாயிற்று.

'ஒய் தந்தனன்" எனப் பாடம் கொண்டு ரா. இராகவையங்கார் தலைவன் தன் அருகினின்றும் நீங்கிய அளவில் கண்களில் பசலை பரவியது என உரை கொண்டார். ஒய்தருதல் – நெருங்காது ஒழிதல் என்றும், கண்ணில் தப்புதல் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. பைதல் ஒருதலை என்பதற்கு எதுகையாக ஒய்தந்தனன் என்பதே பொருந்திய பாடமாகும். அதுபோல குவளை என்ற அடிக்கு ஏற்ப, பயலை என்ற இன எதுகையுடைய பாடமே ஏற்புடைத்து.

Koviloor Digital Library

துறுகல் என்பது, தலைவியின் மனைப்புறத்தே இருக்கும் சிறிய பாறையாகும். தோழியிற் கூட்டத்தின்கண் தலைவன், தலைவியைப் பெற்று மகிழ இப்பகுதியே ஏற்றதாக இருந்தது. பெய்ல் உழந்த துறுகல்லின் ஒருதலைச் சேக்கும் எனத் தோழியிற் கூட்டம் நிகழ்ந்த இடமும் காலமும் சுட்டப்பட்டன. தலைவன் தன் கண்ணில் தப்பிய அளவிலேயே பசலை பூத்த கண்கள், அவன் வினைமுடித்து மீளும் வரை எங்ஙனம் ஆற்றியிருக்கும் என வருந்தினாள். நான் மறைத்தாலும், என் கண்கள் தம் பசலையால் அவன் பிரிவைப் புலப்படுத்திவிடும் என்றாள். கழிந்தமைக்கு வருந்தியமையால், குவளைக் கண் எனத் தலைவி தன் கண்களைக் கூறிக் கொண்டமை தற்புகழ்ச்சியாகாது, தலைவி, தோழி ஆகிய இருவரும் தம்முள் வேற்றுமை இலர் ஆதலின் 'நம் கண் எனத் தோழியையும் உளப்படுத்திக் கூறினாள். இப்பாடலை ஆற்றொழுக்காகக் கொண்டு யானை தங்கியது போலத் தங்கினான் என்றும் அது நீங்கியது போல் நீங்கினான் என்றும், கருத இடமுள்ளது. ஒரு கலை சேக்கும் என்ற பாடத்திற்கு, துறுகல் புறத்தே, வருந்திய மான் ஒன்று தங்கும் எனப் பொருள் உரைக்கப்படும். தலைவன், இரவுக் குறியில் தலைவியைப் பெற்றமை இதனால் உணர்த்தப்பட்டது.

சொற்பொருள் :

மாசு	–	புழுதி
பெயல்	–	மழை
பிணர்	–	நால்வகை ஊறுகளில் ஒன்று, இதனை ஜர்ஜ்ஜரா என்பர் வடமொழியாளர். தமிழில் சருச்சரை என்பர். இக்காலத்துச் சுர சுரப்பு எனப்படும். உ.வே. சாமிநாதையர்
துறுகல்	–	உருண்டைக் கல்
பைதல்	–	குளிர்ச்சி
சேக்கும்	–	தங்கும்
நாடன்	–	தலைவனைக் குறிக்கும் சொல்

Koviloor Digital Library

நோய் – *காமநோய்*

பசலை – *பொன்நிறம், பிரிவினால் உடலில் தோன்றும் நிற வேறுபாடு*

மேற்கோள் :

1. "பாங்கி தலைவனை இயற்பழித்தது"
தொல்காப்பியம், களவியல்,23 இளம்பூரணர், நச்சினார்க்கினியர்)

2. "பனிப்படு பைதல் விதலைப் பருவத்து" *பரிபாடல்,11:75*

3. "துறுகல் நண்ணிய ஆறுஇவர் படப்பை" *அகநானூறு,272*

4. "உவக்காண் எம் காதலர் சென்றார், இவக்காண் எம் மேனி பசப்பு ஊர்வது" *திருக்குறள்,1185*

5. "செயலையம் தளிரேய்க்கும் எழில் நலம், அந்நலம் பயலையால் உணப்பட்டு பண்டைநீரொழிந்தக்கால்"
கலித்தொகை பாலைக்கலி,14

6. "கண்ணும், தோளும், தண் நறுங் கதுப்பும் பழநலம் இழந்து பசலை பாய" *நற்றிணை,219*

7. "சாயலும் நாணும் அவர்கொண்டார், கைம்மாறா நோயும் பசலையும் தந்து" *திருக்குறள்,1183*

பொருள் முடிவு :

தோழி! நாடன் நோய்தந்தனன், அதனால் நம் கண்கள் பசலை ஆர்ந்தன.

Koviloor Digital Library

14. குறிஞ்சி

அமிழ்து பொதி செந்நா அஞ்ச வந்த
வார்ந்து இலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே! பெற்றாங்கு
அறிகதில் அம்ம, இவ்வூரே! மறுகில்
'நல்லோள் கணவன் இவன்', எனப்
பல்லோர்கூற யாஅம் நாணுகம் சிறிதே.

'மடன் மா கூறும் இடனுமாருண்டே' என்பதனால் தோழி குறை மறுத்துழி, தலைமகன் 'மடலேறுவல்' என்பது படச் சொல்லியது.

தொல் கபிலர்

பொருள் :

அமுதத்தின் இனிமை நிரம்பிய, செவ்விய நாக்கு, அஞ்சுதற்குக் காரணமாக முளைத்த, நேராக விளங்கும் கூர்மையான பற்களையும், சிலவாகிய சொற்களையும் உடைய தலைவியை யான் மடலேறிப் பெறுவேனாகுக. அவ்வாறு பெற்றதனை, இதுகாறும் அறியாத இவ்வூரில் உள்ளவர் அறிவாராக. இந்நல்லாளுடைய கணவன் இவன் என்று, இவ்வூரில் உள்ள பலரும் கூற, யானும் என் காதலியும் சிறிது பொழுது நாணமடைவோம்.

விளக்கம் :

தோழியால் குறைமறுக்கப்பட்ட தலைவன், தன்னை நலியச் செய்தவள் இவள் எனப் பலரும் அறிய மடலேறுவேன் எனத் தோழிக்குக் கூறினன். 'வால் எயிறு ஊறிய நீர்', ஈண்டு அமிழ்து எனப்பட்டது. பற்களின் கூர்மையால் நா அஞ்சிச் சில சொற்களைக் கூறுதலின், 'சின்மொழி அரிவை' எனப்பட்டாள். தலைவன், இயற்கைப் புணர்ச்சி முதலியவற்றான் உண்டும், கேட்டும் நுகர்ந்த இன்பங்களை நினைவு கூர்ந்தான். அரிவை என்ற சொல், ஈண்டுப் பருவம் குறியாது பெண் என்ற அளவில் நின்றது. பெறுகதில், அறிகதில் என்னும் சொற்களில் உள்ள தில் என்ற இடைச்சொல் விழைவுப் பொருளை உணர்த்திற்று. மடலேறத் துணிந்த போதே நாணத்தை முற்றத் துறந்தமையால், சிறிது நாணுகம் என்றான். நாணம் பெரிதாயினும் சிறிது பொழுதே நிற்றலால், 'சிறிது' எனப்பட்டது. தலைவன், தன் உருவத்தையும் தன் காதலியின் உருவத்தையும் எழுதிய ஓவியத்தைக் கையிலேந்தி, மடல்மாவின் மீது ஏறி, மறுகில் செல்ல, ஊரார் அதுகண்டு, 'இன்னாள் கணவன் இவன், என அறிவர். ஊரார்க்கு அறிவிக்க மடல் ஒன்றே சிறந்த கருவி எனத்

Koviloor Digital Library

தான் கண்டதாகத் தோழியிடம் கூறினான். களவுக் காலத்தில் இயற்கைப் புணர்ச்சியின் போது தலைவியைப் பெற்றதைப் போல, இப்பொழுதும், தோழியின் துணை ஏதுமின்றிப் பெறுவேன் என்றான். காப்புக் கைமிக்க காரணம் காட்டி, இரவுக் குறி மறுத்துச் சேட்படுத்தியமையால், தலைவன் தோழியின் துணையை விலக்குவதாயினன். மடலைத் துணையாகக் கொண்டான். இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கூடி மகிழ்ந்தமை அறியாத இவ்வூர், மடலேறுவதால் நல்லோள் கணவன் இவன் என அறியப்படுதலைத் தலைவன் விரும்பினான். தலைவனை மடல்மாமேல் ஏற்றுவித்த நல்லோள் இவள் என ஊரார் தலைவியைப் பழிப்பர் என்பதால் தலைவிக்கு நாணம் தோன்றும். அந்நாணமும், பெற்றோர் அவளை அவள் விரும்பியவனுக்கே மணம் முடித்துக் கொடுத்தலால் சிறிது பொழுதே காணப்படும்.

இந்த நல்லோளின் கணவன், இவன் என்று முன்பு அம்பலாகவும் அலராகவும் இவ்வூரால் அறியப்பட்டது. மடலேறியபின் பலராலும நன்கு அறியப்பட்டுவிடும். 'பலரும் மறைத்துக் கூறிய காலத்துப் பெரும்பொழுது நாணமடைந்த நாம், மறுகில் பல்லோர் வெளிப்படையாகக் கூறச் சிறிது பொழுது நாணுவோம்', என்றனன். தலைவியை 'நல்லோள்' என்றல் இகழ்ச்சிக்குறிப்பு.

சொற்பொருள் :

வந்த	–	எழுந்த
வார்தல்	–	நேராதல் (உரிச்சொல்)
வைஎயிறு	–	கூரிய பற்கள்
பெறுக	–	மடல் ஏறிப் பெறுவேனாக
மறுகு	–	வீதி

மேற்கோள் :

1. "தோழி, நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமாருண்டே"
தொல்காப்பியம், களவியல்,11

2. "செறி எயிற்று அரிவை" குறுந்தொகை,2

3. "சில மெல்லியவே கிளவி" குறுந்தொகை,70

4. "முள் உறழ், முளை எயிற்று அமிழ்து ஊறும் தீநீரை"
கலித்தொகை, பாலைக்கலி, 4

Koviloor Digital Library

5. "இன்னள் செய்தது இது என முன் நின்று
அவள் பழி நுவலும் இவ்வூர்" குறுந்தொகை, 173

6. "மறுகின் ஆர்க்கவும் படுப" குறுந்தொகை, 17

7. "என்னை, மடல் மாமேல் மன்றம் படர்வித்தவள்"
கலித்தொகை, நெய்தற்கலி,24

பொருள் முடிவு :

யான் பெறுக. ஊர் அறிக. யாம் சிறிது நாணுகம்.

Koviloor Digital Library

15. பாலை

பறைபட, பணிலம் ஆர்ப்ப, இறை கொள்பு
தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றிய
நால் ஊர்க் கோசர் நல்மொழி போல,
வாய் ஆகின்றே – தோழி! – ஆய் கழல்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

உடன்போயின பின்றை, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள். நிற்ப, செவிலித்தாய், நற்றாய்க்கு அறத்தொடு நின்றது. ஔவையார்

பொருள் :

பழைய ஆலமரத்தின் அடியில், மக்கள் கூடும் பொதுமன்றத்தின் கண், தாம் சொன்ன சொல் பிழையாமல், நான்கு ஊர்களைச் சார்ந்த கோசர் என்ற குடியினர் வந்து தோன்றினர். அவர்களுடைய பிழையாத வாய்மொழி போல, காலில் ஆய்ந்து கட்டிய கழலினையும், செம்மையாகிய இலைபோன்ற வடிவுடைய வெள்ளிய வேலினையும் ஏந்திய தலைவனொடு, பலவாகத் தொக்க வளையல்களை அணிந்த முன்கையையுடைய மடந்தை, ஒரு மனையில் தங்கியமையால் அவர்கள் கொண்ட நட்பு உண்மையாயிற்று.

விளக்கம் :

தலைவி, தன் சுற்றத்தாரைப் பிரிந்து தலைவனுடன் உடன்போக்கில் சென்றனள். தோழி, தலைவியின் கற்புநெறிப்பட்ட செயலைத் தன்தாயிடம் கூறி அறத்தொடு நின்றனள். அவள், தான் அறிந்த தலைவியின் நிலையை நற்றாய்க்கு உரைத்தனள்.

பறையும், சங்கும் மங்கலநாளில் முழங்குவன, பலர் கூடுதற்கு ஏற்ப நிழலும் இடமும் உடைமையால், ஆலமரத்தின் அடியில் பொதுமக்கள் கூடும் மன்றங்கள் இருந்தன. பறைபடப் பணிலம் ஆர்ப்ப மண நாளில் பலரும் விருந்துண்டு செல்வதற்கு ஏற்ற வளமனையுடையவன் தலைவன் என்பது குறிக்கப்பட்டது. கோசர் என்பவர், மோகூர்ப் பழையனுடைய அவையத்து விளங்கிய ஒருவகை வீரர், இக்குடியினர், நான்கு ஊர்களில் வாழ்ந்தவராதலின் நாலூர்க் கோசர் எனப்பட்டனர். வாய்மொழிக் கோசர் என்றும், ஒன்றுமொழிக் கோசர் என்றும் இவர்கள் பாராட்டப் பெற்றனர். தம் குலப் பெண்ணைக் கொன்றமைக்காக, நன்னனைக் கொன்ற சூழ்ச்சித் திறம் உடையவர்.

Koviloor Digital Library

''கொடுப்போரின்றியும் கரணம் உண்டே, புணர்ந்துடன் போகிய காலையான" (தொல்காப்பியம், கற்பியல்) என்ற நூற்பா குறிப்பிடுவது போல். உடன்போக்கில் இருவரும் மணம் செய்து கொண்டமை தோன்ற ''நட்பு, வாயாகின்று'' எனக் கூறப்பட்டது. மோகூர்ப்படை மோரியர் படைக்குப் பணியாமை காரணமாக, மோகூர்ப் பழையனுக்குப் படை உதவி புரிய வருவோம் எனக் குறிப்பிட்டநாளில், குறிப்பிட்ட இடத்தில் படையுடன் வந்து பழையனுக்கு வெற்றி வாங்கித் தந்தவர், நாலூர்க் கோசர் ஆவர். இச்செய்தி, அகநானூற்றிலும் குறிக்கப்பட்டுள்ளது. (அகநானூறு, 25)

செய்லை வெள்வேல் விடலைபொடு எனப்பாடம் கொண்டு, செயலை மாலையை மார்பில் அணிந்த தலைவன் என்றும்; தொடுவளை மடந்தை எனப்பாடம் கொண்டு, உடன் செல்லுதலால் வளை நெகிழாது, வளை செறிந்த முன்கையுடைய மடந்தை என்றும் ரா. இராகவையங்கார் உரை வகுத்துள்ளார். செவிலியும் நற்றாயும் தோழியும் தலைவியும் போன்றவராதலின் செவிலித்தாய் நற்றாயைத் 'தோழி' என விளித்துக் கூறினள்.

சொற்பொருள் :

பட	–	ஒலிக்க
பணிலம்	–	சங்கு
இறைகொள்பு	–	தங்குதல்
தொன்மூதாலத்து	–	பழைய ஆலமரத்துப் பழைய பொதியில் (மூதாலத்துத் தொல் பொதியில்)
பொதியில்	–	பொது இடம், அம்பலம்
நாலூர்க் கோசர்	–	நான்கு ஊர்களில் வாழ்ந்த கோசர் என்னும் பிரிவினர்; நான்கு பிரிவினராய கோசர்,நாலூர் என்னும் ஊரினராய கோசர்
விடலை	–	மறவன், பாலை நிலத்தலைமகன்

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "உடன்போயபின், செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றமை"

தொல்காப்பியம், களவியல், 24 நச்சினார்க்கினியர்

2. "ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே"

குறுந்தொகை, 73

3. "துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன் மூதாலத்து அரும் பணைப் பொதியில்"

அகநானூறு,251

4. "வாய்மொழி நிலைஇய, சேண் விளங்கு நல்இசை
வளங்கெழு கோசர்" *அகநானூறு,205*

5. "வில்லோன் காலன, கழலே" *குறுந்தொகை,7*

6. "சேயிலை, வெள்வேல்
மதியுடம்பட்ட மைஅணல் காளை"

அகநானூறு,221

பொருள் முடிவு :

விடலையொடு மடந்தை நட்பு, கோசர் நன்மொழி போல வாயாகின்று.

Koviloor Digital Library

16. பாலை

உள்ளார் கொல்லோ – தோழி! கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர்நுதி புரட்டும் ஓசை போல,
செங்காற்பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?

பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாமைகண்டு, தோழி கூறியது. பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள் :

ஆறலை கள்வர், இரும்பைத் தலையிடத்தே கொண்ட தங்கள் அம்புகளின் கூர்மையை அறிய நகத்தால் அவற்றின் நுனியை நெருடுவர். அவ்வோசையைப் போல, செவ்விய கால்களையுடைய ஆண்பல்லி, தனக்குத் துணையாகிய பெண்பல்லியை அழைக்கும் ஒலி விளங்கும். இத்தகைய பல்லிகள் தங்கியுள்ள, அழகிய அடிப்பகுதியைக் கொண்ட கள்ளிச் செடிகள் மிகுந்த காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர் நம்மை நினையாரோ (நினைப்பார்).

விளக்கம் :

தலைவன், தலைவியின் ஆற்றாமையை எண்ணி விரைந்து வருவான் எனத் தோழி உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. அம்புகளின் நுனிப்பகுதி, இரும்பினால் அமைக்கப்படுவன. பலகாலும், வழிப்போவாரை எய்து கொன்றமையால் அவற்றின் நுனி மழுங்கும். எனவே, கள்வர் அவற்றைச் செப்பம் செய்தனர். கள்ளியில் உள்ள ஆண்பல்லி, தன் துணையை அழைக்கும் என்ற தொடர், அன்புறு தகுவந இறைச்சியுள் சுட்டல்; எனப்படும். யாண்டும் தாவிச் சென்று, விழாது நிற்கும் வலிமை பற்றிப் பல்லியின் கால் சிறப்பிக்கப்பட்டது. பொருந்திய இல்லத்தை அகன்று சென்றவன் காதலன் என்பதைக் குறிப்பினால் கொள்ளவைத்தார். 'அம் கால்' என்பது, கள்ளியின் அடிப்பகுதியைக் குறிக்காமல், 'அழகிய பொழுது' எனக் காலத்தைக் குறிப்பதாக ரா. இராகவையங்கார் கருதுவர். தாமே தலைவியை நினையாத போதும், கள்ளியங்காடு, அவளை நினைப்பதற்குரிய செவ்வியை உருவாக்கியதாகக் கொள்ளலாம். பாலை நிலத்தில் கள்வர், அம்பின் நுனியைத் தேர்ந்து கொள்ளும் ஒலியைக் கேட்டு, தம் வீரத்தால் தலைவியைப் பற்றிய சிந்தனைதோன்றாமலிருந்தாலும், பல்லியின்

Koviloor Digital Library

துணையை அழைக்கும் குரல் கேட்டு நினையாமல் இரார் என்ற குறிப்பு இப்பாடலால் உணர்த்தப்படுகின்றது. பல்லி, தன்னுடைய துணையை அழைக்கும் ஒலியைத் தன் மனையிடத்துப் பலகால் கேட்டவர் ஆதலின், இடைச் சுரத்தில் பல்லி எழுப்பும் ஒலியின் வேறுபாடு உணர்ந்து உறுதியாக நம்மை அடைவார் என்ற குறிப்பும் புலப்படும்.

சொற்பொருள் :

உள்ளுதல்	–	நினைத்தல்
பொன்	–	இரும்பு
பகழி	–	அம்பு
செப்பம்	–	கூர்மை
செப்பம் கொண்மார்	–	உருவக் குத்தும் கூர்மையைக் காணும் பொருட்டு
உகிர்	–	நகம்
பயிர்தல்	–	அழைத்தல்
இறத்தல்	–	நீங்குதல்

மேற்கோள் :

1. "உகிர் நெரி ஓசையில் பொங்குவன" அகநானூறு, 267
2. "பொன் இயல் புனை தோட்டியான்" புறநானூறு, 14
3. "கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்" குறுந்தொகை,12
4. "புலம்பு தருகுரல, புறவுப் பெடை பயிரும் அத்தம்" குறுந்தொகை, 79
5. "உள்ளார் கொல்லோ தோழி" குறுந்தொகை, 232
6. "கள்ளி முள் அரைப் பொருந்தி, செல்லுநர்க்கு
உறுவது கூறும் சிறு செந்நாவின்
மணி ஓர்த்தன்ன தெண்குரல்
கணிவாய்ப் பல்லிய காடு இறந்தோரே" அகநானூறு,151

பொருள் முடிவு :

தோழி, பல்லி துணை பயிரும் காடு இறந்தோர், உள்ளார் கொல்லோ?"

Koviloor Digital Library

17. குறிஞ்சி

மாஎன மடலும் ஊர்ப; பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப – காமம் காழ்க் கொளினே.

தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன், தோழி குறைமறாமல் கூறியது. **பேரெயின் முறுவலார்**

பொருள் :

காமநோய் முதிர்கின்றபோது, ஊரும் குதிரை என, ஊராத பனைமடலை ஊர்வர். சூடும் பூவென ஒருவரும் சூடாத குவிழ்ந்த அரும்புகளையுடைய எருக்க மாலையை அணிந்துகொள்வர். தெருவில் பலரால் ஆராவரிக்கவும் படுவர். தம் கருத்து முற்றுப்பெறாத நிலையில் சாகவும் துணிவர்.

விளக்கம் :

தலைவன், தோழியிற் கூட்டத்தால் தலைவியைப் பெற மேற்கொண்ட உத்தியே 'மடலேறுவல்' என்பதாகும். இதனைத் தன் கூற்றாகக் கூறாமல், உலகின் மேல் வைத்து, காம முதிர்ச்சியுடையார் இவ்வாறு செய்வர் எனத் தோழிக்கு உணர்த்தினான்.

காமம் மிக்க தலைவன், பனை மடலால் குதிரையை அமைத்து, அதன் மீது ஏறி, தான் விரும்பிய காதலியின் ஓவியத்தையுடைய கொடியைக் கையில் ஏந்தி, ஊரார் அறிய வீதிகளில் வருதல் மடலேறுதல் எனப்படும். இக்காட்சியைக் காண்பார், இன்னானொடு, இன்னாட்கு உறவுள்ளமை அறிந்து வெளிப்படையாக அலர் மொழிவர். அக்கொடுமை கண்டு நாணும் தலைவியின் பெற்றோர், அவளை அவனுக்கே மணமுடிப்பர். மடலேறுதல், ஏறிய மடல்திறம்' எனப் பெருந்திணைப் பாற்படும்.

காமம் என்ற நோய் மரத்தில், தோன்றிய விதையை உட்கொள்பவர், அறிவு பிறிதாகி மயங்குவர். காமம் என்ற மரம். எட்டி மரம் போன்றது. இம்மரத்தின் விதை, உண்டார் மனத்தைக் கலங்கச் செய்யும் தன்மையுடையதாகும். "கா்மம் என்ற நோய் மரத்தின் விதையை நான் உட்கொண்டுள்ளேன். இதற்கு மருந்து நின் தோழியின் தோள் நலம் உண்டலே, அது கிடைத்திலது ஆயின் சாவேன்" எனத்

Koviloor Digital Library

தோழியை அச்சுறுத்துவதாகத் தலைவன் கூற்று குறிக்கின்றது. காமம் முதிர்ந்து வயிரம் பாய்ந்தது போல் ஆயிற்று என்றோ, காமம் என்ற கனியில் விழுங்குவதற்குத் தடையாகக் காழ் தோன்றிவிட்டது என்றோ பொருள் கூறுதல் தகாது என ரா. இராகவையங்கார் விளக்குவர். ஊராத குதிரையை ஊரும் குதிரையாகவும், சூடாத பூவினைச் சூடும் பூவாகவும் எண்ணுமாறு அறிவினைத் திரித்தலாலும்; பிறர் ஆர்த்த போதும் நாணாத உணர்வினைத் தந்து சாவினையும் அடைவித்தலாலும் 'காழ்' என்ற சொல்லிற்கு விதை என்றே பொருள் கொள்ளப்பட்டது.

காமம், காழ்க் கொளின் ஊர்ப, சூடுப, மறுகில் படுப, ஆர்க்கப்படுப, பிறிதும் ஆகுப என, தாமரை, மா, முல்லை, அசோகு நீலம் என்ற மன்மதனுடைய ஐந்து மலரம்புகளாலும் ஏற்படும் ஐவகை அவத்தைகளும் உணர்த்தப்பட்டன. நினைவும் சொல்லும் ஒன்றிய நிலை – சுப்பிரயோகம் – ஊர்தல்; வேறுபட்ட நிலை – விப்ரயோகம்–சூடுதல்; சோகம் – மறுகில் படுதல்; மோகம் – ஆர்க்கப்படுதல்; மரணம் – பிறிதும் ஆதல். குவிமுகிழ் எருக்கு என்ற அடை, மலர்தலே இல்லாது குவிந்துள்ள முகிழ்களையுடைய எருக்கு என உணர்த்தும்.

சொற்பொருள் :

மா	–	குதிரை
மடல்	–	பனை மடலால் செய்யப்பட்ட குதிரை (ஆகுபெயர்)
பிறிது	–	சாதற்குரிய செயல்
காழ்	–	விதை

மேற்கோள் :

1. "காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி" திருக்குறள்,1131

2. "தோழி, நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமாருண்டே"
தொல்காப்பியம், களவியல்,11

3. "ஆராக் காமம் அடூஉ நின்று அலைப்ப
இறுவரை வீழ்நர்" அகநானூறு,322

4. "மா என மதித்து மடல் ஊர்ந்தாங்கு" நற்றிணை, 342

Koviloor Digital Library

5. "மடல் மா மேல் மன்றம் படர்வித்தவள்"

கலித்தொகை, 106

6. "குவி இணர்ப் புல்இலை எருக்கம்" *புறநானூறு, 106*

7. "மடலே, காமம் தந்தது; அலரே,
மிடை பூ எருக்கின் அலர் தந்தன்றே" *நற்றிணை,152*

பொருள் முடிவு :

காமம் காழ்க்கொளின், மடலும் ஊர்ப, கண்ணியும் சூடுப, ஆர்க்கவும் படுப; பிறிதும் ஆகுப.

Koviloor Digital Library

18. குறிஞ்சி

வேரல் வேலி வேர்க் கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே – சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே!

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, வரைவு கடாயது. கபிலர்

பொருள் :

மூங்கிலை வேலியாக உடைய, வேரில் பழக்குலைகளை உடைய பலாமரங்கள் செறிந்த மலைப்பக்கத்து நாடனே. நின்நாட்டுப் பக்கமலையில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொம்பில், பெரிய பழம், தன்னைத் தாங்கும் எவ்வகைப் பற்றுக் கோடுமின்றித் தானே பழுத்துத் தொங்குவது போல, இத்தலைவியின் உயிராகிய கொம்பு, மிகவும் சிறியதாய் உள்ளது. அதன்கண் விளங்கும் காமநோய் என்னும் பழமோ மிகவும் பெரியதாய் உள்ளது. அந்நிலையை அறிந்தவர் நின்னையன்றி யார் உளர்? (ஒருவரும் இலர்) எனவே, அவளை நுகர்வதற்குரிய காலத்தை நீ உடையை ஆகுக.

விளக்கம் :

இரவுக் குறிக்கண் தலைவனை எதிர்ப்பட்ட தோழி, தலைவியின் நிலை கூறி அவளை மணம் செய்து கொள்ள வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. பலர்மரத்தினைக் காப்பதற்கு இயற்கை வேலியாக மூங்கில் புதர்கள் உள்ளன. தலைவியின் நாணமும், நிறையும் அவளைக் காத்து நிற்றல் இதனால் உணர்த்தப்படுகின்றது. வேரில் பழுக்கும் பலாவின் வேறாகக் கொம்பில் பழுக்கும் பலாவும் கூறப்பட்டுள்ளது. வேரில் பழுத்தால், அதன் பழங்களைத் தரை தாங்கும். கொம்பில் பழுத்தலால், எவ்வகைப் பற்றுக்கோடும் இன்றி வீழும் நிலையில் உள்ள பழத்தின் செவ்வியறிந்து, பறித்து நுகர்வோரைப் போல, தலைவியின் நிலையறிந்து அவளை மணம் செய்து கொள்ளுதல் வேண்டும் என்பது குறிக்கப்பட்டது. சிறுகொம்பு எனத் தலைவியின் இளமையும், மென்மையும் உணர்த்தப்பட்டன. "உயிர்தவச் சிறிது, காமமோ பெரிதே", என்ற தொடரால், காமம் என்பது, உயிரில் தோன்றி வளரும் உணர்வு எனக் குறிக்கப்பட்டது. பழம், தன் அளவின்றி மேலும் முதிர்ந்தால்,

Koviloor Digital Library

தன்னைத் தாங்கியுள்ள கிளையையும் முரித்துக், கீழே விழுந்து பயன்படாது ஒழியும். அதுபோலத் தலைவியின் காமமும், மிகுமாயின், தங்களுக்குப் பயன்படாமல், அவள் உயிரைக் கெடுத்து ஒழியும்.

களவுக் காலத்துத் தலைவன் நுகர்ந்த நலம், பிறர் வேலியகத்து விளங்கும் வேர்ப்பலவின் கனியை உண்டது போன்றது என்றும், கற்புக் காலத்தின் நுகர்ச்சி, தம் மனைக் கண் பழுத்த கொம்பின் பலவினைச் செவ்வியறிந்து பறித்து நுகர்வதோடு ஒக்கும் என்றும் குறிப்பிட்டு வரைந்து கோடலின் இன்றியமையாமையைத் தோழி உணர்த்தினாள். தலைவனுக்கு நாட்டமில்லாத மணம் செய்து கொள்ளுதல் குறித்துக் கூறுங்கால், அவன் மனம் ஏற்குமாறு கூற வேண்டுதலின், தோழி, முதலில், 'செவ்வியை ஆகுமதி' என்றும், நின்னையன்றிச் 'செவ்வியறிந்து நுகரவல்லார் யார் உள்ர் என்றும் அவன் மகிழுமாறு கூறினள். கனிகள் கீழே விழாத வேர்ப்பலாவினைத் தன் நாட்டில் கண்டறிந்த தலைவனுக்குக் கொம்பில் தொங்கும் பலவின் கனியைக் குறிப்பிட்டுத் தலைவியின் நிலையைத் தோழி உணர்த்தியதாகவும் கருதலாம். கனி, வீழ்வதற்கு முன், மரத்திற்கு உரியார் அறிந்து பயன்கொள்வது போலத் தலைவி உயிர்நீப்பதன்முன் உரிய நாளில் மணம் செய்து கொள்க எனத் தோழி கூறினள். 'உயிர் தவச் சிறிதே என்ற தொடரால், உயிரை அணு என்றும், சிற்றுயிர் என்றும் கூறும் வழக்கு புலனாகின்றது.

சொற்பொருள் :

வேரல்	–	சிறு மூங்கில்
வேலி	–	வாழ்முள் வேலி
சாரல்	–	பக்க மலை
கோடு	–	கொம்பு
செவ்வி	–	தலைவியை வரைந்து கொள்ளும் பொழுது

மேற்கோள் :

1. "தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உறையாது"
   தொல்காப்பியம், உவம இயல்,26
2. "இப்பாடல், நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு எடுத்துக்காட்டு"
   தொல்காப்பியம், செய்யுளியல், 112 இளம்பூரணர்.
3. இப்பாடல், ஆசிரியப்பா, ஐந்தடியால் வந்தது".

Koviloor Digital Library

தொல்காப்பியம், செய்யுளியல், 158 பேராசிரியர்

4. "முந்தூழ் வேலிய மலை கிழவோற்கே"
குறுந்தொகை,236

5. "செவ்வேர்ச் சினைதொறும் தூங்கும்
பயம் கெழுப்லவின்" *நற்றிணை,77*

6. "காமம் பெரிதே, களைஞரோ இலரே" *நற்றிணை, 335*

7. "பெரிதே காமம், என்னுயிர் தவச் சிறிதே"
கலித்தொகை, 137

8. "மலரினும் மெல்லிது காமம், சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்" *திருக்குறள், 1281*

பொருள் முடிவு :

நாட, இவள் உயிர் தவச் சிறிது, காமம் பெரிது, அஃது அறிந்திசினோர் யார். செவ்வியை ஆகுமதி.

Koviloor Digital Library

19. மருதம்

எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழியர் நெஞ்சே! மனைமரத்து
எல்லுறும் மௌவல் நாறும்
பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே?

உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண், தலைமகன் சொல்லியது.

பரணர்

பொருள் :

நெஞ்சே! நீ வாழ்வாயாக. எவ்வி என்னும் வள்ளல் இறந்தமையால் பாணர்கள் வறுமையுடையராயினர். அவர்களுடைய பொற்பூ அணியப் பெறாத வறிய தலையைப் போல, நீயும் பொலிவிழந்து வருந்துவாயாக. மனைத் தோட்டத்தில் உள்ள மரத்தின் மீது படர்ந்த, ஒளியுடைய முல்லைமலரின் மணம் கமழும் பலவாகிய கரிய கூந்தலையுடைய இவள், நமக்கு எத்திறத்தில் உறவுடையளோ?

விளக்கம் :

தலைவியின் ஊடலைத் தீர்க்க, உரைத்த மொழிகள் பயனின்றிக் கழிந்தவழி, தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

வேள் எவ்வி என்பவன், மிழலைக் கூற்றத்து ஓர் அரசன். உழுவித்து உண்ணும் வேளாளர் மரபினன். கடற்கரைப் புறத்து நீழல் ஊர் என்ற ஊரினன். பாணர்க்குப் பொற்பூ அளித்துப் புரந்தவன். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் கொல்லப்பட்டவன். வெள்ளெருக்கிலையார் என்ற புலவர், இவன் இறந்தவழிப் பாடிய கையறுநிலைச்செய்யுள் புறநானூற்றில் காணப்படுகின்றது. தங்கள் அறிவின் திறமையை மதித்துப் போற்றிய அவன் இறந்தமையால் பாணர்கள் தங்கள் யாழை முறித்தனர். பாணர்களின் யாழ்க் கல்வி, புரப்போரின்மையால் வறுமையுற்றதாகக் கொண்டு, வறுமை யாழ்ப்பாணர் என்ற பாடத்தை ஏற்று ரா. இராகவையங்கார் விளக்குவர். பொற்பூச் சூட்டும் அவனை இழந்தமையால் பாணர்கள் பொருளாலும் வறுமையுற்றனர். அப்பாணர்களின் பொலிவிழந்த தலைபோல, நெஞ்சே, நீயும் உடல்

Koviloor Digital Library

மெலிந்து, உள்ளம் தளர்ந்து வருந்துக எனத் தலைவன் கூறினன். தலைவியைப் பெறாமைக்கு எவ்வியின் இழப்பையும், அதனால் வருந்தும் பாணர் நிலைக்குத் தன் நெஞ்சின் நிலையையும் உவமித்தான்.

மனைமரத்தில் இரவில் பூத்த பூ, ஒருவரும் சூடாமல் மணம் நாறுதல் போல, தலைவியின் கூந்தலும் தம்மால் அடையப் பெறாது மணம் வீசுதல் குறித்தான். தன் நெஞ்சையும் உளப்படுத்தி 'நமக்கு யாரளோ?' என்றான். மகளிர், முல்லையை இல்லத்துத் தோட்டத்தில் நட்டு வைப்பர். தங்கள் கற்பு நெறிப்பட்ட வாழ்வின் அடையாளமாக முல்லை மலரைச் சூடுவர். பனிச்சை, கொண்டை, துஞ்சை, ஓதி, அளகம் என ஐவகையாகக் கூந்தல் முடிக்கப் பெறுதல் குறித்துப் 'பல் இருங் கூந்தல்' எனப்பட்டது. தலைவி, முன் நாளில் இருந்தது போலன்றித் தனக்கு அயலாக வேறுபட்டு நிற்றலால் 'யாரளோ' என்றான். நெஞ்சு, கேட்கும் இயல்பு இல்லாதது. ஆயினும் உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல் கூறும் வழுவமைதி இலக்கணப்படி நெஞ்சை நோக்கிக் கூறுவதாகக் குறிக்கப்பட்டது. மனைமரம் – மனைக்கண் உள்ள மரம். இது நொச்சி போன்ற மரங்களைக் குறிக்கும். மரத்தில் முல்லைக் கொடியைப் படரவிடுவர். எளிதில் பறித்துச் சூடுவதற்கு இயலாதவாறு, அதன் மலர்கள் மரத்தின் மேல் பூத்திருத்தல் போலத் தலைவியும், தன்னால் நுகரப்படுவதற்கு அரியளாய் நின்றனள் என வருந்தினான்.

மௌவல் போல மணம் வீசும் கூந்தலையுடையாள் எனத் தலைவியின் கூந்தலின் இயற்கை மணத்தைப் பாராட்டினான்.

சொற்பொருள் :

எல் – ஒளி (உரிச்சொல்) இரவும் ஆம்.

மௌவல் – முல்லை

இனைமதி – வருந்துவாயாக

மேற்கோள் :

1. "உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைவன் புலத்தல்"

தொல்காப்பியம், கற்பியல், 15, இளம்பூரணர், நச்சினார்க்கினியர்

2. "துன்பத்துப் புலம்பல்"

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,22 பேராசிரியர்

Koviloor Digital Library

3. "இரும்பாண் ஒக்கல் தலைவன், பெரும் பூண்
போரடு தானை எவ்வி மார்பின்,
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே"
அகநானூறு,233

4. "உடைமதி வாழிய நெஞ்சே" *அகநானூறு,123*

5. "மயிலடி இலைய மாக்குரல் நொச்சி மனை நடு
மௌவலொடு ஊழ்முகை அவிழ" *நற்றிணை,115*

6. "எவ்வி வீழ்ந்த செருவில், பாணர்
கைதொழுஉ மரபின், முறித்திடூஉப் பழிச்சிய
வார் உயர் வணர் மருப்பு" *அகநானூறு,115*

7. "அரிவை கூந்தலின், நறியவும் உளவோ,
நீ அறியும் பூவே" *குறுந்தொகை, 2*

பொருள் முடிவு :

நெஞ்சே, கூந்தல் நமக்கு யாரளோ, ஆதலின், பாணர் தலைபோல இனைமதி.

Koviloor Digital Library

20. பாலை

அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து,
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக!
மடவம் ஆக, மடந்தை நாமே!

செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கோப்பெருஞ்சோழன்.

பொருள் :

தோழியே! தொடர்பிலார் மாட்டுத் தோன்றும் அருளையும், தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் அன்பையும் துறந்து, பொருள் தேடும் நோக்கம் ஒன்றே உடையராக நம்மைப் பிரிந்து செல்லும் காதலர், அறிவுடையவராயின் அத்தகைய ஆற்றலையுடைய அவர், அறிவுடையவரே ஆகுக. அவரைப் பிரிந்திருப்பதற்கு உரிய ஆற்றலில்லாத நாம், அறிவில்லேம் ஆகுக.

விளக்கம் :

தன் துயர்கண்டு இரங்காமையானும், தம்மைக் காவாமல் நீங்கியமையானும் அருளும் அன்பும் நீக்கியவர் எனத் தலைவி தலைவனிடம் குறைகண்டனள். தன்னைத் தொடர்பில்லாதவளாகத் தலைவன் நினைத்தால், தொடர்பிலார் மாட்டுத் தோன்றும் அருள் இல்லாதவனாகக் கருதப்படுவான். தன்னைத் தொடர்புடையவள் எனக் கொண்டும் பிரிய நினைத்தால், சார்ந்தவர் துயர்களையும் அன்பு என்ற உணர்வு இல்லாதவனாகக் கருதப்படுவான். இருவகையிலும், அவன் செய்த செயல் அறிவுடைமையாகாது. அவ்வுலக இன்பத்திற்கு ஏதுவாகிய அருளும், இவ்வுலக இன்பத்திற்கு ஏதுவாகிய அன்பும் துறந்து, அவ்வுலகிற்குப் பயன்படாததும், இவ்வுலகில் நிலையில்லாததும் ஆகிய பொருளை எண்ணிப் பிரிபவர் அறிவுடையராக இருத்தல் இயலாது. அருளும் அன்பும் துறந்து, பொருள் வயின் செல்லும் அறிவை விட, அருளும் அன்பும் உடையராய்த் துணையொடு வதியும் மடமை உயர்ந்தது என்பதைத் தலைவி உணர்த்தினாள். பெண் என்ற பொதுமைபற்றிய அருளோ, மனைவி என்ற சிறப்புப் பற்றிய அன்போ தலைவனிடம் இல்லாமை குறிக்கப்பட்டது, 'உரவோராயின்' என்ற சொல், அவர் உரவோர் ஆகாமை குறித்தது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அருள் – தொடர்பிலார் மாட்டுத் தோன்றும் பரிவுணர்ச்சி

அன்பு – தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் காதல்

உரவோர் – அறிவுடையவர்.

மடவம் – அறிவில்லாத யாம். அறிவில்லேம்.

மேற்கோள் :

1. "அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு" புறநானூறு,5

2. "நறுநுதல் நீத்துப் பொருள் வயின் செல்வோய்
உரனுடை உள்ளத்தை" கலித்தொகை,12

3. "பொருள்வயின் அகறல் அன்பன்று"
கலித்தொகை,2

4. "அருளிலாளர் பொருள் வயின் அகல"
அகநானூறு, 305

5. "உரவோர் எண்ணினும், மடவோர் எண்ணினும்"
பதிற்றுப்பத்து,73

6. "அருள் என்னும் அன்பு ஈன்குழவி" திருக்குறள்,757

7. "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" திருக்குறள்,755

பொருள் முடிவு :

"மடந்தை! பிரிவோர் உரவோர் ஆகுக. நாம் மடவம் ஆகுக".

Koviloor Digital Library

21. முல்லை

வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடைஇடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பிற் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம், கார் எனக் கூறினும்,
யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே.

பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, 'அவர் வரல் குறித்த பருவ வரவின் கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு என்று தன்னுள்ளே கவன்றாட்கு, அவளது குறிப்பு அறிந்த தலைமகள், 'கானம் அவர் வரும் கார்காலத்தைக் காட்டிற்றாயினும், யான் இது கார்காலம் என்று தேறேன், அவர் பொய் கூறாராகலின்' எனத் தான் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது. ஓதலாந்தையார்.

பொருள் :

தோழி! வண்டுகள் ஒலிக்க, நெருங்கிப் பூத்த நீண்ட பூங்கொத்துக்களைத் தழைகளுக்கிடையே இட்டு, பொன்னால் புனைந்து செய்யப்பட்ட அணிகலன்களைச் சுற்றிக் கட்டிய மகளிரின் கூந்தலைப் போல, கொன்றைமரங்கள் புதிய பூக்களுடன் பொலிந்து தோன்றும். அவைகளையுடைய காடு, கார்ப்பருவம் இது என்று தானே வாய்திறந்து கூறினாலும், அவர் சொன்ன சொல் தேறிய யான், தெளியேன். ஏனெனில் அவர் பொய்ம்மொழியைக் கூறார்.

விளக்கம் :

கொன்றை மலர்ந்தமையே கார்காலம் வந்தமையை அறிவிக்குமாயினும், கானமும் வாய்திறந்து கார்ப்பருவத்தின் வருகையைக் கூறுகின்றது. தலைவன் கார்காலத்தில் வருவதாக உரைத்த மொழியைத் தெளிந்த தலைவி, இவற்றை ஏற்க உடன்படவில்லை, தலைவன் பொய்வழங்காதவன் ஆதலின், கூறாத கானம், கார்ப்பருவத்தின் வருகையைக் கொன்றை மரம், மகளிர் கூந்தலைப் போல் தோன்றுவது காட்டி மருட்டிற்று. தன்னைப் போலக் காதலன் கூறும் மொழிகளைக் கேட்கும் பேறுபெறாத கொன்றைகள் பூத்தமை அறிந்து, கானம் தலைவியிடம் கார்ப் பருவத்தின் வருகையை உரைத்தலால், அப் பொய்ம்மொழிகளைத் தலைவி இகழ்ந்தனள். கொன்றைகள், கார்காலத்தில் செறிந்த பூக்களுடன் கொத்துக்களாகக் கொடிபோல் பூப்பன. புதுப்பூ என்றமையால், கார்ப்பருவத்தின் தொடக்கம் கூறப்பட்டது. கொன்றை மரத்திற்கு மகளிரும், தழைக்கு

Koviloor Digital Library

அவர்தம் கூந்தலும், பூங்கொத்துக்களுக்குப் பொன்அணிகளும் உவமையாயின. கானம் கூறுதல், 'என்னா மரபின் எனக் கூறல்', என்ற மரபு வழுவமைதியாகும். (தொல்காப்பியம், எச்சவியல், 26) கொன்றையொடு கானமும் சேர்ந்து கூறினும், தன்னால் ஏற்க இயலாது என்றனள். கொன்றை மரங்கள் அறியாமையுடைய ஆதலின் அவை புதுப் பூ விட்டு, கானம் கார் எனக் கூறுமாறு மகளிர் கூந்தலைப் போல் தோன்றின என்றாள். அவை, மலர் சூடி, அணி புனைந்த வழியும் மகளிர் ஆகாமை போல, கானமும் கொன்றை மலர்ந்து கார்ப்பருவம் எனத் தோன்றினும் கார்காலம் அன்று எனத் தெளிந்தனள்.

சொற்பொருள் :

பட	–	ஒலிக்க
தகைந்த	–	செறிந்த
இணர்	–	பூங்கொத்து
இழை	–	அணிகலன் (காசு மாலை)
அவர்	–	தலைவர் (பண்டறி சுட்டு)
தேறேன்	–	தெளியேன்

மேற்கோள் :

1. "பருவம் கண்டுழியும், பொய் கூறார் எனத் தலைவி ஆற்றியிருந்தமை"
தொல்காப்பியம், அகத்திணையியல்,14 நச்சினார்க்கினியர்

2. "வண்டு படத் ததைந்த கண்ணி" அகநானூறு,1

3. "இழையணி மகளிரின் விழைதகப் பூத்த
நீடு சுரி இணர, சுடர்வீக் கொன்றைக்
காடு கவின் பூத்த" நற்றிணை,302

4. "பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்பு சேர் கொடி இணர் ஊழ்த்த" குறுந்தொகை,66

பொருள் முடிவு :

கொன்றைக் கானம், கார் எனக் கூறினும், அவர் பொய்வழங்கலர் ஆதலின், யானோ தேறேன்.

Koviloor Digital Library

22. பாலை

நீர்வார் கண்ணை நீ இவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே? – சாரல்
சிலம்பு அணி கொண்ட வலம்சுரி மராஅத்து
வேனில் அம்சினை கமழும்
தேம்ஊர் ஒண்ணுதல்! – நின்னொடும் செலவே.

செலவுக் குறிப்பறிந்து ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. சேரமான் எந்தை.

பொருள் :

பிரிவுத் துயரால், நீர் இடையறாது ஒழுகும் கண்களை உடையவளாய், நீ இங்கு தங்கியிருக்க, நின்னைப் பிரிந்து செல்லும் ஆற்றல் உடையவர் யார் உளர்? மலைப் பக்கம், தனக்கு அழகாகக் கொண்ட, வலமாகச் சுரிந்து விளங்கும் வெண்கடம்பின் மலர்கள் வேனில் காலத்தில் மலர்ந்து மணம் வீசும். அம்மலரின் மணம் கமழும், ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே. தலைவன் செலவு நின்னொடு உடன்போக்கில் செல்வதாகவே அமையும்.

விளக்கம் :

தலைவன், தனித்துச் செல்லான், நின்னையும் உடன்கொண்டு செல்வான் எனத் தோழி, தலைவிக்கு ஆறுதல் மொழிந்தாள், தலைவன் பிரிவினால், தலைவி ஆற்றாமை மிக்குக் கண்ணீர் வடித்தல் இயல்பாகலான், 'நீர்வார் கண்ணை' என்றாள். வேனில் – தலைவன் பிரிந்து செல்லும் காலமும், கடம்பு மலரும் காலமும் ஆகிய இளவேனிலைக் குறித்தது. தலைவியின் நுதலின் இயற்கை மணத்தையும், விளக்கத்தையும் குறிப்பிடத் 'தேமூர் ஒண்ணுதல்' என்றாள். உத்தம மகளிரின் நுதல் இயற்கை மணமுடையது என்பதை 'நறுநுதல்' என இலக்கியங்கள் கூறும். திலகம் முதலியவற்றான் மணம் செறிந்த நுதல் என்றும் கூறலாம். பிரிவினால் கண்ணீர் பெருகுதல், உடன்சேறலால் ஒண்ணுதல் கமழ்தல் என்ற இரண்டையும் அறிந்தால், பிரிவினை ஏற்றுப் போகும் துணிவு யாருக்கு உண்டு என வினவி, ஒருவர்க்கும் இல்லை என்பதைத் தலைவியின் உள்ளம் கொள்ள வைத்தனள். உடன் போக்கினால் தலைவிக்கு வெய்ய பாலையும் இனிதாதல், நுதல் மணம் கமழ்தலால் புலப்படும், தலைவி, உடன் செலவின் கண் கடம்பின் மலர் சூடிச் செல்வள் எனக் குறிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

தேம் – வண்டு, தேன்,

வலம்சுரிமராஅம் – வலப்புறமாக இதழ் சுரிந்த வெண் கடம்ப மலர்.

சாரல் சிலம்பு – தாள் வரையையுடைய சிலம்பு.

பிரிகிற்பவர் – பிரிய உடன்படுவார், கிற்றல் – உடன்படுதல்.

மேற்கோள் :

1. "நெடுங்கால் மராஅத்துக் குறுஞ்சுனை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற" ஐங்குறுநூறு,383

2. "வலஞ்சுரி மராஅம் வேய்ந்து நம்
மணம் கமழ் தண்பொழில் மலரும் பொழுதே"
ஐங்குறுநூறு,348

3. "வலஞ்சுரி மராஅத்துச் சுரம் கமழ் புதுவீ"
அகநானூறு,83

4. "திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்"
திருமுருகாற்றுப்படை,24

5. "யாரோ பிரிகிற்பவரே, குவள்ளை
நீர்வார் நிகர்மலர் அன்ன நின்
பேர் அமர் மழைக்கண் தெண்பனி கொளவே"
நற்றிணை,391

பொருள் முடிவு :

ஒண்ணுதல், நீ இவண் ஒழியப் பிரிகிற்பவர் யார்? செலவு நின்னொடும் ஆம்.

Koviloor Digital Library

22. பாலை

நீர்வார் கண்ணை நீ இவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே? - சாரல்
சிலம்பு அணி கொண்ட வலம்சுரி மராஅத்து
வேனில் அம்சினை கமழும்
தேம்ஊர் ஒண்ணுதல்! - நின்னொடும் செலவே.

செலவுக் குறிப்பறிந்து ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. **சேரமான் எந்தை.**

பொருள் :

பிரிவுத் துயரால், நீர் இடையறாது ஒழுகும் கண்களை உடையவளாய், நீ இங்கு தங்கியிருக்க, நின்னைப் பிரிந்து செல்லும் ஆற்றல் உடையவர் யார் உளர்? மலைப் பக்கம், தனக்கு அழகாகக் கொண்ட, வலமாகச் சுரிந்து விளங்கும் வெண்கடம்பின் மலர்கள் வேனில் காலத்தில் மலர்ந்து மணம் வீசும். அம்மலரின் மணம் கமழும், ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே. தலைவன் செலவு நின்னொடு உடன்போக்கில் செல்வதாகவே அமையும்.

விளக்கம் :

தலைவன், தனித்துச் செல்லான், நின்னையும் உடன்கொண்டு செல்வான் எனத் தோழி, தலைவிக்கு ஆறுதல் மொழிந்தாள், தலைவன் பிரிவினால், தலைவி ஆற்றாமை மிக்குக் கண்ணீர் வடித்தல் இயல்பாகலான், 'நீர்வார் கண்ணை' என்றாள். வேனில் - தலைவன் பிரிந்து செல்லும் காலமும், கடம்பு மலரும் காலமும் ஆகிய இளவேனிலைக் குறித்தது. தலைவியின் நுதலின் இயற்கை மணத்தையும், விளக்கத்தையும் குறிப்பிடத் 'தேமூர் ஒண்ணுதல்' என்றாள். உத்தம மகளிரின் நுதல் இயற்கை மணமுடையது என்பதை 'நறுநுதல்' என இலக்கியங்கள் கூறும். திலகம் முதலியவற்றான் மணம் செறிந்த நுதல் என்றும் கூறலாம். பிரிவினால் கண்ணீர் பெருகுதல், உடன்சேறலால் ஒண்ணுதல் கமழ்தல் என்ற இரண்டையும் அறிந்தால், பிரிவினை ஏற்றுப் போகும் துணிவு யாருக்கு உண்டு என வினவி, ஒருவர்க்கும் இல்லை என்பதைத் தலைவியின் உள்ளம் கொள்ள வைத்தனள். உடன் போக்கினால் தலைவிக்கு வெய்ய பாலையும் இனிதாதல், நுதல் மணம் கமழ்தலால் புலப்படும், தலைவி, உடன் செலவின் கண் கடம்பின் மலர் சூடிச் செல்வள் எனக் குறிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

தேம் – வண்டு, தேன்,

வலம்சுரிமராஅம் – வலப்புறமாக இதழ் சுரிந்த வெண் கடம்ப மலர்.

சாரல் சிலம்பு – தாள் வரையையுடைய சிலம்பு.

பிரிகிற்பவர் – பிரிய உடன்படுவார், கிற்றல் – உடன்படுதல்.

மேற்கோள் :

1. "நெடுங்கால் மராஅத்துக் குறுஞ்சுனை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற" ஐங்குறுநூறு,383

2. "வலஞ்சுரி மராஅம் வேய்ந்து நம்
மணம் கமழ் தண்பொழில் மலரும் பொழுதே"
ஐங்குறுநூறு,348

3. "வலஞ்சுரி மராஅத்துச் சுரம் கமழ் புதுவீ"
அகநானூறு,83

4. "திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்"
திருமுருகாற்றுப்படை,24

5. "யாரோ பிரிகிற்பவரே, குவன்ள
நீர்வார் நிகர்மலர் அன்ன நின்
பேர் அமர் மழைக்கண் தெண்பனி கொளவே"
நற்றிணை,391

பொருள் முடிவு :

ஒண்ணுதல், நீ இவண் ஒழியப் பிரிகிற்பவர் யார்? செலவு நின்னொடும் ஆம்.

Koviloor Digital Library

23. குறிஞ்சி

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே;
இன்னும், பாடுக, பாட்டே - அவர்
நல் நெடுங் குன்றம் பாடிய பாட்டே.

கட்டுக் காணிய நின்றவிடத்து, தோழி அறத்தொடு நின்றது.

ஔவையார்.

பொருள் :

தெய்வங்களையும், குலத்தோரையும் அழைத்துப் பாடுகின்ற கட்டுவிச்சியே. சங்கு மணிகளால் ஆகிய கோவையைப் போன்ற வெண்ணிறமுடைய, நல்ல, நீண்ட, கூந்தலையுடைய கட்டுவிச்சியே. பாட்டுக்களைப் பாடுக. இன்னும் பாட்டுக்களைப் பாடுக. நீ பாடிய பாட்டுக்களுள், அவருடைய நல்ல நெடிய குன்றத்தைப் புகழ்ந்து பாடிய பாட்டையே மீண்டும் பாடுக.

விளக்கம் :

தலைவன் குன்றத்தைக் கட்டுவிச்சி ஏன் பலமுறை பாடவேண்டும். எனச் செவிலித்தாயின் உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவித்து அறத்தொடு நிற்றல் தோழியின் நோக்கமாகும். கட்டுவிச்சி, தெய்வங்களையும் கட்டுக் கேட்போரின் இரு மரபினரையும் அழைத்துப் பாடும் இயல்பினள். நரை மூதாட்டியராயின், அவர்கள் கூறுவன பலரால் ஏற்கப் பெற்றுப் பாராட்டைப் பெறும். பாடுக பாட்டே என்பதால், அப்பாட்டின் இனிமை ஒன்றையே தாங்கள் கேட்க விரும்புவதாகவும், அதன் பொருள் பொய்ப்பது ஒருதலை என்றும் கட்டுவிச்சியிடம் உணர்த்தினாள். பாட்டே பாடுக; குன்றம் பாடிய பாட்டே பாடுக; இன்னும் பாடுக என முக்காலும் கூறியமை இவளைப் பசப்பித்த தலைவர் அவர், என்பதைத் தாய்க்கு உணர்த்துவதற்காகவே. தலைவன், தலைவியின் தாய்வழி வந்தவன் என ரா. இராகவையங்கார் விளக்குவர். கட்டுவிச்சியே, தலைவனை அறிந்து கூறுதல் இயலாது. இருவழி மரபும் பாடப்பட்ட வழி, தலைவனின் குன்றம் குறித்த பாடல் பாடப்பட்டது. அப்பொழுது தோழி, கட்டுவிச்சியை இடைமறித்து, அக்குன்றம் பற்றிய பாடலையே பல்கால் பாடுமாறு வேண்டினள்.

தலைவியின் காம நோயின் உண்மைக் காரணத்தை அறியமாட்டாத தாயர், அதனை அறிய விரும்பிக் கட்டுப்பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லையிட்டு, எண்ணி, அதனால்

Koviloor Digital Library

புலப்படும் நிமித்தங்களை அறிந்து கூறுவள். இவர்கள் தெய்வம் ஏறிக் குறி கூறுதலும் உண்டு, பிற்காலக் கலம்பகங்களில் குறம் என்ற உறுப்பாகவும், குறவஞ்சி என்ற இலக்கிய வகையாகவும், நிமித்தம் கூறுதல் வளர்ச்சியுற்றது. கட்டுவிச்சி அணிந்த சங்கு மாலைகளே, அவளுடைய வெள்ளிய கூந்தலுக்கு உவமையாயிற்று. அடர்த்தி, வெண்மை, நீட்சி, சுரிந்த தன்மை ஆகியவற்றால் இவ்வுவமை ஏற்ப அமைந்துள்ளது. "பயனில் மூப்பில் பல்சான்றீரே", (புறநானூறு,95) என்பது போல், அவளுடைய நரைவெண் கூந்தல் இகழ்ச்சியைக் குறிப்பதாகும். 'அவர் குன்றம் பாடிய பாட்டே பாடுக', என்ற வழி, அவர் யார் எனத் தோழியைச் செவிலி ஐயுற்று வினவுவாள். வினவின் அவள் எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், கூறுதல். உசாவுதல், ஏதீடு தலைப்பாடு எனப் பலவகையான் அறத்தொடு நிற்பாள்.

சொற்பொருள் :

அகவல் மகள்	–	கட்டுவிச்சி
அகவல்	–	அழைத்தல்
மனவு	–	சங்குமணி
அவர்	–	தலைவர் (நெஞ்சறி சுட்டு)

மேற்கோள் :

1. "கட்டும் கழங்கும் இட்டுரைப்பார் கண்ணும்; தோன்றும் ஓரை அகவல் ஓசை"

தொல்காப்பியம், செய்யுளியல்,81 பேராசிரியர்

2. "கட்டினும், கழங்கினும் வெறிஎன இருவரும் ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"

தொல்காப்பியம், களவியல்,24

3. "அகலுள் ஆங்கண் அறியுநர் வினாய்"

குறிஞ்சிப்பாட்டு,7 நச்சினார்க்கினியர்.

4. "கட்டுக் காணிய நின்ற இடத்துந் தோழி அறத்தொடு நின்றது. அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும்"

தொல்காப்பியம், பொருளியல்,12 நச்சினார்க்கினியர்.

5. "வெண்கடைச் சிறுகோல் அகவல் மகளிர்"

குறுந்தொகை, 298

பொருள் முடிவு :

அகவல் மகளே, பாடுக. இன்னும் பாடுக. குன்றம் பாடிய பாட்டே பாடுக.

Koviloor Digital Library

24. முல்லை

கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ?
ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து,
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய, கொடியோர் நாவே,
காதலர் அகல கல்லென்றவ்வே.

பருவம் கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது. பரணர்.

பொருள் :

வேம்பின் கரிய காம்புகளில் உள்ள, ஒள்ளிய மலர்களின் புதுவருவாயானது, என்னுடைய தலைவன் இல்லாமையால், நுகரப் பெறாமல், பயனின்றிக் கழியுமோ? தலைவன் என்னை அகன்றமையால் அது குறித்துக் கொடுமையுரைக்கும் மகளிரின் நாக்குகள், தாம் குழைவின்றி, அலர் கூறி, யாற்றின் அருகில் உயர்ந்து வளர்ந்துள்ள வெள்ளிய கொம்புகளையுடைய அத்தி மரத்தின், ஏழு நண்டுகள் பற்றிக் குழைந்த ஒரு பழத்தைப் போல யான் வருந்தும்படி கல் என்ற முழக்கத்தை உடையவாயின.

விளக்கம் :

வேம்பு பூக்கும் இளவேனில் பருவம், தலைவன் வினைமுடித்து வருவதாகக் கூறிச் சென்ற பருவமாகும். பாண்டியரும், அவர்படையும் சூடும் சிறப்பால் 'ஒண்பூ' எனப்பட்டது. தலைவன் இல்லாமையால், வேனிற் பருவப் புதுவருவாயும் தலைவியால் நுகரப் பெறாதாயிற்று. பூப்பருவம் கழிந்து, காய்ப்பருவம் வந்தும், அவர் வந்திலர் எனத் தலைவி வருந்தினாள். பிரிவுத் துயரால் மெலிந்தமையோடு, ஏழு நண்டுகள் மிதித்த ஒரு பழம் போலக் 'கொடியோர்' நாவினால் கூறும் அலர்மொழிகளால் மேலும் மெலிவுற்றனள். பல நண்டுகள் பற்றுவதற்கு ஏற்ப இருத்தல், 'யாற்று அயல் எழுந்த' என்னும் அடைமொழியால் உணர்த்தப்பட்டது.

கொடியோர் என்று, தோழியையும், ஏவல் மகளிரையும் குறித்தாள். வேம்பு பூக்கும் பருவத்து வந்திலர் எனப் பழிதூற்றுவோராதலின் அவர்களைக் 'கொடியோர்' என்றாள். தன் காதலனைக் கொடியன் என உரைப்போரே கொடியர் என்றும், அவ்வாறு கூறுவோர் நாக்குகள், பலகால் பழிதூற்றலால், குழையாது கல்லைப்போல்

Koviloor Digital Library

வலியவாயன என்றும் பொருள் கொள்ளுதல் கூடும். 'கழியும் கொல்' என்ற சொல், கழியாது என்பதையும், அவர் தாம் குறித்த வேனிற்பருவத்து வருவார் எனவும் கொண்ட தலைவியின் நம்பிக்கையைக் காட்டுவதாகும். நண்டுகள், கனியின் அழகு சிதைய மிதித்தமை போல, தலைவனும் தலைவியின் நலம் சிதைய நீங்கினன் என்பது குறிக்கப்பட்டது. 'எழு குளிர்' என்ற தொடரில் உள்ள ஏழு என்ற சொல், பன்மையைக் குறிப்பதாகும். 'குளிறு' எழுதுவோர் பிழையாதல் கூடும்.

'அன்னை, என்னை என்றலும் உளவே' என்ற மரபுப்படி (தொல்காப்பியம், பொருளியல், 52) தலைவனைத் தலைவி என் ஐ என்று கூறுதலும் உண்டு. "நான், எழு குளிர் மிதித்த பழம் போலாயினேன், ஆனால் கொடியோர் நாவோ, கல் என்று ஆயிற்று; என்றாள். கொடியோர் கூறும் அலர் மொழிகளால் தலைவி வருந்தியமையும், பழி கூறுவோர் நாக்குகள் கல் என ஆயினமையும் இதனால் கூறப்பட்டன.

சொற்பொருள் :

கொடியோர்	–	பொதுப்பெயர், உயர்திணையில் ஆண் ஒழித்து நின்றது.
அதவம்	–	அத்தி
குளிர்	–	நண்டு
யாணர்	–	புதுவருவாய் (உரிச்சொல்)
கல்என்றல்	–	ஒலிக்குறிப்பு, ஆரவாரித்தல் கல்போல உறுதியுடையதாதல்
கொல்	–	இரக்கக் குறிப்பு. (இளவேனிலில் உடன் இருக்க வேண்டிய தலைவன் பிரிந்து சென்றான் என்ற இரக்கக் குறிப்பு)

மேற்கோள் :

1. "வேம்பின் மலை வான் பூச்
சுரி ஆர் உளைத் தலைப் பொலியச் சூடி"
குறுந்தொகை,281

2. "அவரோ வாரார், தான் வந்தன்றே,
வேம்பின் ஒண் பூ உறைப்பத்
தேம்படு கிளவியர் தெளிக்கும் பொழுதே" ஐங்குறுநூறு,350

Koviloor Digital Library

3. "உதிர்ந்த கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டு
வீழ் துணைக்கு இடூஉம் அலவன்" *அகநானூறு,380*

4. "அதவத் தீங்கனியன்ன, செம்முகத்
துய்த்தலை மந்தி"
நற்றிணை,95

5. "ஊஉர் அலர் எழ, சேரி கல்லென"
குறுந்தொகை, 262

பொருள் முடிவு :

"ஒண் பூ யாணர் கழிவது கொல்லோ? காதலர் அகலுதலால் குழைய கொடியோர் நா கல் என்றது".

Koviloor Digital Library

25. குறிஞ்சி

காலச்சுவடு
தனையறிது

யாரும் இல்லை; தானே கள்வன்
தான்அது பொய்ப்பின், யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே.

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கபிலர்

பொருள் :

தோழி, தலைவன், என்னைக் களவில் மணந்த காலத்தில் சான்றாவார் ஒருவரும் இலர். தலைவனாகிய கள்வன் ஒருவன் தான் இருந்தனன். அவன், களவுக் காலத்தில் செய்தசூளுறவினின்றும், தப்புவானாயின், யான் யாது செய்ய வல்லேன். ஓடுகின்ற நீரில் செல்லும் ஆரல்மீனின் வருகையை, உண்பதற்காகப் பார்த்திருக்கும், தினையின் அடியைப் போன்ற, சிறிய, பசிய கால்களையுடைய நாரையும் இருந்தது.

விளக்கம் :

தலைவன், 'நின்னிற் பிரியேன்' என்ற சூளுறவினைப் போற்றாமையைத் தலைவி நினைந்தனள். களவுக் காலத்தில் பிறர் அறியாதவாறு வந்து, தன்னுடைய நலத்தை நுகர்ந்து சென்றவன் ஆதலின் அவனைக் 'கள்வன்' என்றாள். அவனை நேரில் கண்டு, சூள் பொய்த்தமை கூறிக் கேட்டாலும், அவன் கூறியமைக்குச் சான்றாவார் ஒருவரும் இலர். சான்றாதற்குப் பயன்படாத ஆண்டிருந்த நாரை கூட, தன் உணவின் பொருட்டு ஆரல்மீனை நோக்கியவண்ணம் இருந்தது. அது, தலைவனுடைய சூளுறவினைக் கேட்டிராது; என் செய்கேன் எனத் தலைவி கலங்கினாள்.

ஆரல் பார்க்கும் குருகினைக் கூறியமையால், களவிற் கூட்டம் நீர்த்துறையின் அருகே நிகழ்ந்தமை நினைக்கப்பட்டது. கொலை சூழ் குருகாதலின், அதுவும் தன்பால் அருள்தோன்றச் சான்று உரைக்காது எனக் கருதினள். குருகின் காலைத் தினைத்தாளொடு உவமித்தது, அது, அவ்விடத்தை விட்டுப் பெயராது நிற்றல் பற்றியாகும். குருகு, ஆரல் மீனைப் பார்த்தது, யாரும் தன்னைப் பார்த்தார்களோ எனச் சுற்றிலும் பார்த்தனள். குருகு, ஆரல் மீனைப் பார்த்தலையே கண்டாள். குருகு பாராதாயினும், கேட்டிருக்கும். அது பேச வல்லதாயின், தான் கேட்ட சூளுறவினைக் கூறுதல் கூடும் என்பது குறிப்பெச்சமாகும். யான் உயிர் துறப்பதல்லது, யாது செய்ய வல்லேன் எனக் கலங்கினாள். களவன்

Koviloor Digital Library

என்ற சொல்லிற்கு நடுச்சொல்வோன் எனப் பொருள்கொண்டு, செயல் நிகழ்ந்த களத்தில் சான்றாவான், தலைவன்என ரா. இராகவையங்கார் விளக்குவர். கள்வன், பொய்த்தல் இயல்பாகலின், கள்வன் என்பதே சரியான பாடம் என்றார் அவர். பல்லோர்க்கு நடுச்சொல் கூறும் தலைவன், தன்னிடம் பொய்ப்பின் எவன் செய்கோ எனத் தலைவி வருந்தினாள்.

சொற்பொருள் :

அது - நெஞ்சறி சுட்டு (சூள் உரைத்தமை போன்ற செயல்கள்)

ஆரல் - ஆரல் மீன்

குருகு - நாரைவகை

மேற்கோள் :

1. "நேரிழை முன்கை பற்றி நுமர்தர
நாடு அறி நன்மணம் அயர்கம்" குறிஞ்சிப்பாட்டு,208

2. "அவன் புணர்வு மறுத்தல்"
தொல்காப்பியம், களவியல்,21 இளம்பூரணர்

3. "இவன் என் நலம் கவர்ந்த கள்வன்,
இவன் என் நெஞ்சம் நிறையழித்த கள்வன்"
முத்தொள்ளாயிரம்,102

4. "தான் உற்ற சூள் பேணான் பொய்த்தான் மலை"
கலித்தொகை,41

5. "நும்மோரன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண்டு உளதோ? இவ்வுலகத்தானே" அகநானூறு,286

6. "பணை எழில் மென்தோள் அணைஇய, அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
கள்வனும், கடவனும், புணைவனும் தானே".
குறுந்தொகை,318

7. "இரைதேர் வெண்குருகு அல்லது, யாவதும்
துன்னல் போகின்றால் பொழிலே" குறுந்தொகை, 113

பொருள் முடிவு :

தான் மணந்த ஞான்று, யாரும் இல்லை; கள்வன் தானே; தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ; குருகும் உண்டு.

Koviloor Digital Library

26. குறிஞ்சி

அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கு எழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்,
தன் கண் கண்டது பொய்க்குவது அன்றே –
தேக் கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்
வரை ஆடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும், அக்கொடியோ னையே.

நற்றாயும், செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு, "இஃது எற்றினான் ஆயிற்று" என்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்து, 'தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம்' என்று கூறக்கேட்டு, தோழி அறத்தொடு நின்றது.

கொல்லன் அழிசி

பொருள் :

அரும்புகள் ஏதுமின்றி மலர்ந்த, கரிய அடிப் பகுதியை உடைய வேங்கை மரத்தின் மேற்பகுதியில் வளர்ந்துள்ள பெரிய கிளைகளில் தங்கியுள்ள மயிலானது, மலர்களைக் கொய்யும் இளமகளிரைப் போலக் காட்சியளிக்கும். இத்தகைய குறிஞ்சிநிலத் தலைவன் இத்தலைவிக்குத் தகுதியில்லாதவன் என்பது போலக் கட்டுவிச்சி, தலைவியின் நோய் தெய்வத்தால் வந்தது எனத் தீமை பயக்கும் மொழிகளை உரைத்தனள். மா மரத்தின் இனிய கனியை உண்ணுகின்ற, முள்ளைப் போன்ற கூரிய பற்களையும், செவ்விய வாயினையும் உடையனவாம், மலைகளில் விளையாடுகின்ற வலிய குட்டியின் தந்தையாகிய கடுவனும், அக் கொடியவனாகிய தலைவனை அறியும். அது, தன் கண்ணால் கண்ட நிகழ்ச்சியைக் கண்டிலன் எனப் பொய் கூறாது.

விளக்கம் :

தலைவியின் நோய்க்குத் தெய்வம் காரணமன்று, தலைவனே காரணம் என உரைத்துத் தோழி அறத்தொடு நிற்பதாக இப்பாடல் அமைகின்றது. மகளிர் வேங்கை மலர்களைப் பறித்துச் சூடுதல் இயல்பு. வேங்கை மரத்தின் மேல் மயில் அமர்ந்துள்ள தோற்றம், பல்லோர் அறியத் தலைவி தலைவனை மணந்து கொள்ள விரும்பும் வேட்கையைச் சுட்டுவதாகும் மயில், பூக்கொய்யும் மகளிர் போல் தோன்றினும் உண்மையில் மயிலாதல் போலத் தலைவனும் தகான்

Koviloor Digital Library

போலத் தோன்றினும் தக்கவனே என்ற குறிப்புப் பொருள் இப்பாடலில் அமைந்துள்ளது.

தலைவன் தக்கோனாயினும், தகுதியில்லாதவன் போல் தலைவியைப் புறக்கணித்தல் உணர்த்தப்பட்டது. தலைவியின் காமநோய், பிறிதோர் தெய்வத்தால் ஆயிற்று எனக் கட்டுவிச்சி கூறுதல், தலைவியின் கற்பு நெறிக்கு இழுக்காகும் எனக் கருதித் 'தீது மொழிதல்' என்றாள். தலைவன் வரைவு நீட்டித்தமையால் அவனைத் தோழி 'கொடியோன்' என்றாள். கொடியோனை ஒரு விலங்காகிய கடுவனே அறிந்துள்ள போது, தெய்வம் ஏறிய கட்டுவிச்சி அறியாதது எத்துணை மடமை எனத் தோழி கருதினள். கடுவன் குட்டிகள் மாங்கனிகளைத் தின்று விளையாடிய இடம், தலைவன் தலைவியொடு களவில் கூடிய இடம் எனக் குறித்தாள். அவர்களுடைய நட்பு, அவற்றின் வாழ்க்கை போல இல்லறத்தால் சிறப்புற வேண்டும் என விரும்பினாள்.

தலைவன், துறந்தான் போலவும், மறந்தான் போலவும் தகுதியின்றி நடந்துகொண்டான் எனக் கருதிய தலைவி, தன் உயிரைத் துறக்கவும் முற்பட்டனள். தலைவிக்கு இத்தகைய துன்பம் விளைவித்த அக்கொடியோனை அக்கடுவனும் அறியும். அதன் குட்டிகள், கனி உண்டிருந்தமையானும், விளையாடிக்கொண்டிருந்தமையானும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கடுவனும் அறியும் என்ற உம்மை, தோழியாகிய தனக்கும் தெரியும் என்பதைப் புலப்படுத்தும்.

சொற்பொருள் :

மேற்கு	–	மேல்
தோகை	–	மயில் (ஆகுபெயர்)
நாடன்	–	பொதுப்பெயர் (குறிஞ்சிநிலத் தலைமகன்)
பறழ்	–	குட்டி
துவர் வாய்	–	சிவந்த வாய்

மேற்கோள் :

1. "கருங்கால் வேங்கை வீ உகு துறுகல்" குறுந்தொகை,47
2. "செறிதொடி உற்ற செல்லலும் பிறிது எனக்
கான் கெழு நாடன் கேட்பின்
யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிதே"
அகநானூறு, 98

Koviloor Digital Library

3. "முதுவாய்ப் பொய்வல் பெண்டிர்" அகநானூறு, 98

4. "அரும்பு அற மலர்ந்த ஆய் வீ மராஅத்து"
அகநானூறு, 257.

5. விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்"
ஐங்குறுநூறு, 297.

6. "அறி கரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை"
குறுந்தொகை,184

பொருள் முடிவு :

நாடன், தகான் போலத் தீது மொழியினும், அக் கொடியோனைக் கடுவனும் அறியும். ஆதலின் கண்டது பொய்க்குவதன்று

Koviloor Digital Library

27. பாலை

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும் –
திதலை அல்குல் என் மாமைக் கவினே'.

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

வெள்ளி வீதியார்.

பொருள் :

நல்ல பசுவின் இனிய பால், அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், பசுவினைப் புரப்போருடைய கறக்கும் பாத்திரத்திலும் கொள்ளப் படாமல், பயனின்றி மண்ணில் சிந்தி அழிந்தாற்போல வரி படர்ந்த அல்குலையுடைய என்னுடைய, மாமையாகிய பேரழகு, எனக்கு அழகு தருவதாகவோ, என் தலைவனுக்கு இன்பம் பயப்பதாகவோ இல்லாமல், பசலையால் விரும்பி உண்ணப்படுகின்றது.

விளக்கம் :

தலைவன் பிரிவினால் தலைவி அழகழிந்து, பசலை பூத்தமை கூறப்பட்டது. கன்று, உண்டற்கே உரிய பால் ஆதலின், அது முற்கூறப்பட்டது. கன்று உண்டு எஞ்சிய பாலையே கலத்தில் கொள்வர். ஆதலின் அச்செயல் பிற்கூறப்பட்டது. தலைவியின் நலம், பாலினைப் போல, தானும் நுகர்ந்து, தலைவனாலும் நுகரப் பெறுவதற்கு உரியது என்பது இதனால் விளக்கப்பட்டது. மண்ணில் சிந்திக் கெடுதல், பசலையால் உண்ணப்பட்டு அழிவதற்கு உவமையாயிற்று. பசலை, என் மாமைக் கவினை உண்ண விரும்புகின்றது எனத் தலைவி, கூறுதல், அதனைக் காத்துக் கொள்ள இயலாமை கருதியாகும்.

சொற்பொருள் :

கலம் – பால் கறக்கும் பாத்திரம்

திதலை – தேமல், வரிகளாய் இடையில் தோன்றுவது.

மாமை – மாந்தளிர் போன்ற அழகு. ஆம்பல் நார் உரித்த தண்டு, ஈங்கைக் கொடியின் தளிர், அசோகின் தளிர் ஆகிய உவமைகள்.

பசலை – பிரிவிடை உடலில் தோன்றும் பொன்னிறமான நிற வேறுபாடு.

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "கறவை கன்று ஆர்த்திக் கலநிறை பொழிம்"

மணிமேகலை, 12

2. "தனக்கு அமைந்தன்று இவள் மாமைக் கவினே"

ஐங்குறுநூறு, 103

3. துறைவர்க்கு இனிய மன்ற என் மாமைக் கவினே

ஐங்குறுநூறு, 146

4. "இனிப் பசந்தன்று என் மாமைக் கவினே"

ஐங்குறுநூறு, 35

5. "பசலை பாய்தல்" என்ற மெய்ப்பாடு"

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் பேராசிரியர், 22

6. உண்டதற்குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே

தொல்காப்பியம், பொருளியல், 1[illegible]

7. "இது வெள்ளி வீதியார் பாட்டு. இது தம் பெயர்கூறின் புறமாம் என்று அஞ்சி வாளாது கூறினார்"

தொல்காப்பியம், அகத்திணையியல், 54 நச்சினார்க்கினியர்.

8. "மிக நலம் பெற்றாள், தமியள் மூத்தற்று"

திருக்குறள். 1007.

பொருள் முடிவு :

பால் நிலத்து உக்காங்கு, மாமைக் கவின், பசலை உணீஇயர் வேண்டும்

Koviloor Digital Library

28. பாலை

முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன், யானும்: ஓர் பெற்றி மேலிட்டு
'ஆஅ! ஒல்' எனக் கூவுவேன் கொல்? –
அலமரல் அசைவளி அலைப்ப, என்.
உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே.

வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஔவையார்.

பொருள் :

சுழன்று அசைந்து வீசும் தென்றல் காற்று என்னை வருத்துகின்றது. என் துன்பத்திற்குக் காரணமாகிய காமநோயின் கொடுமையை உணராமல் இவ்வூராரும் கவலையின்றித் தூங்குகின்றனர். அவர்கட்கு என் நிலையை அறிவிப்பதற்காக, யான் முட்டுவேனா? தாக்குவேனா? ஏதோ ஒரு காரணத்தை மேலிட்டுக் கொண்டு 'ஆ' என்றும் 'ஒல்' என்றும் ஒலி எழுப்பிக் கூப்பிடுவேனா? எதைச் செய்வது என்று அறியேன்.

விளக்கம் :

முட்டுதல் – உடம்பால் தீண்டுதல், தாக்குதல் – கருவிகளால் தாக்குதல். பாம்பு, பாம்பு என்றோ, கள்வன் கள்வன் என்றோ ஒலி எழுப்பி உறங்குவோரைத் திடீரென விழித்தெழச் செய்தல், பெற்றி மேலிட்டுக் கூறுவதாகும். ஊர் துஞ்சுவதைக் கூறி, தான் துஞ்சாமையைப் புலப்படுத்தினாள். ஊர் தூங்குவது கண்டு, என் நிலை உரைத்தற்கு இயலாமல், நான் தரையில் அல்லது சுவரில் முட்டிக் கொள்வேனா, தாக்கிக் கொள்வேனா எனக் கூறியதாகவும் பொருள் கொள்ளப்படும். தன் காம நோய் கண்டு வருந்தாமையோடு, தென்றல் வருத்துவதும் கண்டு ஊர், கவலையின்றித் துயில்வது கண்டு வெகுண்டனள். 'மூட்டுவேன் கொல்' எனப் பாடம் கொண்டு நினைவு மூளச் செய்தல் மனத்தின் செயலாகவும், தாக்குதல், உடம்பின் செயலாகவும், கூவுதல், வாயின் செயலாகவும் விளக்கி, மனம், மெய், மொழி என்ற மூன்றானும் தான் கொண்ட முயற்சிகளைத் தலைவி குறிப்பிடுவதாக ரா. இராகவையங்கார் உரை வகுத்துள்ளார். முட்டுதலும், தாக்குதலும் உடம்பின் வினையாதலாலும், தொடை இனிமை சிந்ததலானும், முட்டுவேன் என்ற பாடம் சரியன்று என்றார். தென்றல் தன்னைத் துன்புறுத்துவதாகவும்,

Koviloor Digital Library

அத்தென்றலே ஊர்மக்களை வருடித் துயில் கொள்ளச் செய்வதாகவும் தலைவி கருதினாள்.

சொற்பொருள் :

உயவு	–	உயா (வருத்தம்) "உயாவே, உயங்கல்"
	–	தொல்காப்பியம், உரியியல், 71
நோய்	–	காம நோய்
தாக்குதல்	–	தீண்டுதல் – உடம்பால் விரையத் தீண்டுதல்
கூவுதல்	–	வாயினால் கூவுதல்.
ஊர்	–	செவிலி, நற்றாய் முதலியோர்
'ஆ', 'ஒல்'	–	ஒலிக் குறிப்புச் சொற்கள்

மேற்கோள் :

1. "ஓர் யான் மன்ற துஞ்சாதேனே" குறுந்தொகை,6
2. "பெருங்காடு உளரும் அசைவளி போல" குறுந்தொகை, 273
3. "தைவரல் அசைவளி, மெய் பாய்ந்து உறுதரச்
   செய்வுறு பாவை அன்ன என்
   மெய் பிறிது ஆகுதல்" குறுந்தொகை, 195

பொருள் முடிவு :

அறியாது அலைப்ப, அறியாது துஞ்சும் ஊரை, முட்டுவேனோ, தாக்குவேனோ, கூவுவேனோ ஒரேன்

Koviloor Digital Library

காலக்கெடு — உணர்த் தலைவன் கூற்று — நெஞ்சுக்குக் கூறியது.

29. குறிஞ்சி

நல் உரை இகந்து, புல் உரை தாஅய்,
பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,
அரிது அவாவுற்றனை – நெஞ்சே! நன்றும்
பெரிதால் அம்ம, நின்பூசல், உயர் கோட்டு
மகவுடை மந்தி போல
அகன்உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

இரவுக் குறி மறுக்கப்பட்ட தலைமகன், 'இவர் எம்மைமறுத்தார்' என்று வரைந்து கொள்ள நினையாது, பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது. **ஔவையார்.**

பொருள் :

நெஞ்சே! நன்மை தரும் மொழிகளின் நீங்கிப், புல்லிய பழிச்சொற்கள் பரவி மழை நீரை ஏற்றுக் கொண்ட சுடப்படாத பசுமண்ணாலாகிய பாண்டத்தைப் போல, உள்ளத்தினால் தாங்க இயலாத துன்ப வெள்ளத்தில் நீந்தி பெறுதற்கரிய ஒன்றனைப் பெற விரும்பினாய். உயர்ந்த மரக்கிளையில் உள்ள தன் குட்டியைத் தழுவிக் கொள்ளும் மந்தி போல, நின் கருத்தைத் தழுவி ஏற்றுக் கொண்டு நின் குறையை நிறைவேற்றுவோரைப் பெறுவாயாயின், உன்னுடைய ஆரவாரம் மிகவும் நன்றாக இருக்கும்.

விளக்கம் :

தலைவன் வரும் வழியின் ஏதங்கள் குறித்தும், அலர் பரவியமை குறித்தும், தோழி இரவுக் குறி மறுத்து, அவனை மணம் செய்து கொள்ளுமாறு வேண்டினள். தன் குறை மறுக்கப்பட்ட வழி, தலைவன் தன் நெஞ்சினை நோக்கிக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. மழை நீரை பசு மட்கலத்துள் பெய்து, கரையாமல் தாங்க முயல்வாரைப் போன்றது தன்னுடைய முயற்சி என்றும் பசுமட் கலம் அழிதல் ஒருதலை ஆதலின் காமத்தால் தன் நெஞ்சு அழிதலும் ஒருதலை என்றும் தலைவன் வருந்தினன். நெகிழும் பசுமட் கலம் கொண்டு மழைநீர் வெள்ளத்தை நீந்த நினைப்பார் செயல் போல, தலைவன் காம வெள்ளத்தைத் தன் நெகிழும் மனத்தால் நீந்த முற்பட்டமை போன்றது எனவும் பொருள் கொள்ளலாம். தலைவன் களவில் நீட்டிக்க விரும்புதல், பெருமையைத் தரும் நல்லுரைகளை இகழ்ந்தமைக்கும், சிறுமையைத் தரும் புல்லுரைகளை ஏற்றமைக்கும் காரணமாயிற்று. ஏற இயலாத மரக்

Koviloor Digital Library
ALAGAPPA UNIVERSITY. KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 70021
Date of purchases:
Call Number:

கிளைகளில் ஏறும் போது, மந்திகள், தம் குட்டிகளைக் கீழே விழாதவாறு அணைத்துச் செல்லும். மந்தியின் செயல்போல, நம் குறைகளைக் கேட்டு, நீக்கப் பெறுவாரைப் பெறின் நன்று, அவ்வாறு நமக்கு வாய்க்கப் பெறவில்லையே, என் செய்வது எனத்தன் நெஞ்சை நோக்கிக் கூறினன். தலைவியை விரைந்து வரைந்து கொள்ளவேண்டும் எனக் கூறிய தோழியின் நல்லுரையை நினையாமல், களவு நீட்டிக்க விரும்புதல் புல்லுரைக்கு ஏதுவான செயலாயிற்று. களவிற் கூட்டம் நீட்டித்தல், பழிக்கு இடனாவது எனக் காட்டித் தோழி வரைவு வேண்டினள்.

சொற்பொருள் :

அரிது – அரிதாகிய இரவுக்குறி

நல்லுரை – தன் இரவுக்குறிக்குத் தோழி உடன்படுதல்

புல்லுரை – இரவுக் குறி மறுத்து வரைவு கடாவுதல்

தாஅய் – பரவி

கேட்குநர் – கேட்டு நிறைவேற்றுபவர்.

பூசல் – ஆரவாரம்

நன்றும் – மிகவும்

மேற்கோள் :

1. கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
   பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்" அகநானூறு, 112
2. "மக முயங்கு மந்தி, வரை பாய" பரிபாடல், 15.
3. "ஈர் மண் செய்கை, நீர்படு பசுங்கலம்
   பெருமழை பெயற்கு ஏற்றாங்கு" நற்றிணை, 308
4. "பசுமட் கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று"
   திருக்குறள்,600
5. "வருந்தினை வாழி என் நெஞ்சே" அகநானூறு, 19
6. "தோழியால் வரைவு கடாவப்பட்ட பின்னரும்
   தலைவன் களவொழுக்கம் வேண்டிக் கூறியது"
   தொல்காப்பியம், களவியல், 17 இளம்பூரணர்

பொருள் முடிவு :

நெஞ்சே! நீ, பசுமட் கலம் போல, நீந்தி, அவாவுற்றனை! நின் பூசல் கேட்குநர்ப் பெறின் நன்றும் பெரிது.

Koviloor Digital Library

30. பாலை

கேட்டிசின் வாழி – தோழி! – அல்கல்,
பொய்வலாளன் மெய் உற மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட, ஏற்று எழுந்து,
அமளி தைவந்தனனே; குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியென்; மன்ற அளியென் யானே!

அவர் நின்னை வரைந்து கோடல் காரணத்தால் பிரியவும், நீ ஆற்றியிராது, ஆற்றாயாகின்றது என்?' என வினாய தோழிக்குத் தலைமகள், 'யான் ஆற்றியுள்ளேனாகவும், கனவு வந்து என்னை இங்ஙனம் நலிந்தது' எனக் கூறியது. கச்சிப் பேட்டு நன்னாகையார்.

பொருள் :

தோழி! கேட்பாயாக பொய்யை மெய்போலக் கூறுவதில் வல்லவன் என்னுடைய உடம்பின் ஊற்றின்பத்தைப் பெறுவதற்காக, இராக் காலத்தில் பொய்யாகிய கனவில் வந்து மயக்கியதை உண்மை நிகழ்ச்சி போல் நினைத்தேன். என் மயக்கம் நீங்கித் துயிலெழுந்து, சேக்கையில் அவன் இருப்பதைக் கையால் தடவிப் பார்த்தேன். வண்டுகளால் உழக்கப்பட்ட குவளை மலரைப் போல நிலைகுலைந்த யான், அவரைக் காணாது, தனித்தவளாய் ஆயினேன். உறுதியாக யான் ஒருத்தியே இரங்கத் தக்கவள்.

விளக்கம் :

தலைவி தன் காதலனைக் கனவில் கண்டு, நனவில் காணப் பெறாது கலங்கினாள். தலைவன், தான் குறிப்பிட்ட நாளில் தலைவியை மணம் புரிய வராமல் நீட்டித்தமையாலும் கனவில் வந்தும் நனவில் காணப்பெறாது மறைந்தமையாலும், தலைவி, அவனைப் 'பொய்வலாளன்' என்றாள். அதுவே அவள் நிலை குலைவிற்குக் காரணமாயிற்று. கனவு, கனவில் மெய்யாகவும், நனவில் பொய்யாகவும் ஆயிற்று என்றாள். தலைவி, தோழி வாயிலாக வரைவு வேண்டிய நிலை இப்பாடலால் புலப்படும். கனவினால் தலைவி, இன்பம் இழந்து வருந்தியமைக்கு, வண்டுகளால் உழக்கப்பட்ட குவளை மலர் உவமையாயிற்று.

சொற்பொருள் :

மரீஇய – பொருந்துவதற்கு

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

சாஅய் – மெலிந்து, நிலை குலைந்து,

அல்கல் – இராப் பொழுது

ஏற்றெழுதல் – துயில் உணர்ந்து எழுதல்

வாய் – மெய்ம்மை

தைவருதல் – தடவுதல்

மேற்கோள் :

1. “வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்று ஏக்கற்ற உலமரல்” அகநானூறு, 39

2. “கனவில் காணும் இவளே
நனவில் காணாள் நின் மார்பு” ஐங்குறுநூறு, 234

3. “அல்கல் கனவுகொல் நீ கண்டது”
கலித்தொகை, 90

4. “கனவும் உரித்தால் அவ்விடத்தான”
தொல்காப்பியம், பொருளியல்,3

பொருள் முடிவு :

தோழி, கேட்டிசின், பொய்வலாளன் மரீஇய பொய்க்கனா மருட்ட, எழுந்து, அமளி தைவந்தனன். தமியேன் அளியேன்.

Koviloor Digital Library

31. மருதம்

மள்ளர் குழீஇய விழவினானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டும் காணேன், மாண் தக்கோனை;
யானும் ஓர் ஆடுகள மகளே; என்கைக்
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும், ஓர் ஆடுகளமகனே.

நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

ஆதிமந்தி

பொருள் :

மாட்சிமை பொருந்திய தகுதியுடைய என் தலைவனை, வீரர்கள் கூடி எடுக்கும் வில்விழாவின் கண்ணும், மகளிர் தத்தமக்குரிய மள்ளரைத் தழுவியாடுகின்ற துணங்கைக் கூத்தின்கண்ணும், இவையல்லாத பிற இடத்தும் தேடியும் காணக் கிடைத்திலேன். யானும், ஆடுகின்ற களத்திற்குரிய ஒருமகளே. என் கையிலுள்ள, சங்கறுத்துச் செய்யப்பட்ட வளையல்களை நெகிழச் செய்த, பெருமை பொருந்திய தலைவனும் ஆடுகின்ற களத்திலுள்ள ஒருவனே.

விளக்கம் :

வேற்று வரைவுவரின், அதனை மாற்றுவதற்காகத் தலைவி, தோழிக்கு அறத்தொடு நின்றனள். மகளிர், தமக்குரிய ஆடவரைத் தழுவி ஆடும் கூத்து, துணங்கை எனப்படும். ஈண்டு, பரத்தையரொடு ஆடும் துணங்கை சுட்டப்பட்டது. வீரர்கள், விழாக் காலங்களில் விளையாட்டுப் போர் நிகழ்த்துவர். அந்நாளில், மகளிர்க்குத் தலைக்கை தந்து ஆடும் கூத்து, துணங்கை எனப்பட்டது. தலைவன் இருக்கும் இடத்திற்குச் செல்லத் தகாத கற்புடையாட்டியாகிய தான், ஆண்டும் செல்ல நேர்ந்தமை கூறினாள். ஆதலின் தன்னை ஓர் ஆடுகள மகள் எனக் குறித்தாள். ஆடுகள மகளிரே, இல்லத்தின் நீங்கிய பல இடங்களுக்கும் செல்லுதற்கு உரியர். காதலனை, அவர் போல் பல இடங்களுக்கும் சென்று, தேடியமையால் 'கடைகழி மகள் ஆயினேன்'. என வருந்தினாள். பெருமை பொருந்திய தலைமகனும், தன்னால் பரத்தையர் சேரி போன்ற துணங்கை நடைபெறும் இடங்களில் தேடப்பட்டமையால், அவனும் ஓர் ஆடுகள மகன் ஆயினன் என்றாள். தலைவன், தன் பிரிவால் தன்னையும் இழித்தான். என்னையும் இழித்தான் எனத் தலைவி கலங்கினாள்.

Koviloor Digital Library

இப்பாடல், ஆதிமந்தியார், தம் கணவன் ஆட்டனத்தியைக் காவிரிப் புனல் விழாவில் இழந்தவழி தேடிச் சென்ற போது கூறியதாகப் புறப்பாடல் போல அமைந்திருந்தாலும், அகப்பாடலாகவே கொள்ளப்படும். 'பெயர் கூறின் புறமாம் என்றஞ்சி வாளா கூறினார்", என நச்சினார்க்கினியர் (தொல்காப்பியம், அகத்திணையியல்,54) இப்பாடலைக் குறிப்பிடுவர். வெள்ளிவீதியார், தம் செயலுக்கு, ஆதிமந்தியின் அவலத்தைச் சான்றாகக் குறிப்பிடுவர். (அகநானூறு.45) எழுவர் பத்தினிப் பெண்டிருள் ஒருவராக, ஆதிமந்தியார் கண்ணகியால் கூறப்படுவதாகச் சிலப்பதிகாரபு் கூறும். (சிலப்பதிகாரம். வஞ்சினமாலை)

யானும் ஆடுகள மகள் என்பது, அவனொடு துணங்கை அடியதையும், குரிசிலும் ஓர் ஆடுகளமகன் என்பது, அத்துணங்கைக்குத் தான் தலைக்கை தந்து ஆடியதையும் குறிப்பதாக உவே. சாமிநாதையர் கூறுவர். தலைவன் ஒருவன், தன்னொடு நட்புப் பூண்டமை கூறி, நொதுமலர் வரைதல் அறனன்று எனத் தலைவி அறத்தொடு நின்றனள், மாண் தக்கோன், பீடு கெழு குரிசில் என்பன, தலைவனைத் தலைவி உயர்த்திக் கூறும் மொழிகள்.

சொற்பொருள் :

மள்ளர்	–	வீரர்
விழவு	–	வில்விழா
துணங்கை	–	ஆடவரும் மகளிரும் தழுவியாடும் கூத்து
கோடு	–	சங்கு
குரிசில்	–	ஆடவரில் மேம்பட்டவன்

மேற்கோள் :

1. "மாயோன் மேய ஓண நன்னாள்
மறங்கொள் சேரி, மாறு பொரு செருவில்
மாறாது உற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும் புகல் மறவர்"

மதுரைக் காஞ்சி, 591–6

2. "பழுப்புடை இருகை முடக்கி அடிக்கத்
துடக்கிய நடையது துணங்கையாகும்"

திருமுருகாற்றுப்படை, 56 நச்சினார்க்கினியர் மேற்கோள்

Koviloor Digital Library

3. "முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்"

அகநானூறு 336

4. "மள்ளர் அன்ன மரவம் தழீஇ
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்"

அகநானூறு, 400

5. "ஆட்டனத்தியைக் காணிரோ ...
காதலற் கெடுத்த ஆதிமந்தி போல" *அகநானூறு, 236*

6. "இது, காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு"

தொல்காப்பியம், அகத்திணையியல், 54. நச்சினார்க்கினியர்

7. "காமக் கிழவன் உள்வழிப் படினும்"

தொல்காப்பியம், களவியல், 22. நச்சினார்க்கினியர்

8. "முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்பு வல் ஏற்றின் தலைக்கை தந்து நீ
நளிந்தனை வருதல் உடன்றனள் ஆகி"

பதிற்றுப்பத்து, 52

பொருள் முடிவு :

மாண் தக்கோனை, விழவினும், துணங்கையினும், யாண்டும் காணேன், யானும் ஆடுகள மகள். குரிசிலும் ஓர் ஆடுகள மகன்.

Koviloor Digital Library

32. குறிஞ்சி

காலையும், பகலும், கையறு மாலையும்,
ஊர் துஞ்சு யாமமும், விடியலும், என்று இப்
பொழுது இடை தெரியின் பொய்யே காமம்;
மா என மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே;
வாழ்தலும் பழியே – பிரிவு தலைவரினே.

பின்னின்றான் கூறியது. அள்ளூர் நன் முல்லையார்.

பொருள் :

செயலறவு தோன்றாத காலைப் பொழுதும். பகற்பொழுதும், செயலறவினை உண்டாக்கும் மாலைப் பொழுதும், ஊரார் உறங்குகின்ற நள்ளிரவுப் பொழுதும், ஒருவரும் துஞ்சாத விடியற் பொழுதும் என இவ்வைந்து பொழுதுகளின் இயல்புகளை ஆராய்ந்து நோக்கும்போது, காமம், பொய் என்பதே பொருந்துவதாகும். காமக் கூட்டத்திற்கு இத்தகைய பொழுதுகளானும், இடத்தானும், பிரிவு நேர்ந்து இடையீடு பட்டுழி, குதிரை என்று பார்க்கின்றவர்கள் இகழுமாறு மடலூர்தலால். தெருக்களில் பலர்முன் தோன்றி, அனைவரும் அறிய என்குறையை எடுத்துரைத்தலும் அவட்குப் பழியைத் தருவதாகும், அங்ஙனம் ஊர்ந்து என் குறையைக் கூறாமல் உயிர்வாழ்தல் எனக்குப் பழியைத் தருவதாகும்.

விளக்கம் :

தோழியை இரந்து, பின்நின்ற தலைவன், மடலேறுவதே தனக்கு உற்றதோர் வழியாகத் தோன்றுவதாகத் தோழியிடன் கூறினன்.' ஊர் துஞ்சு யாமம்' என்பதால் தான் துஞ்சப் பெறாமை குறித்தான். பிரிந்தார்க்கு மாலை மட்டுமே செயலறவினைத் தோற்றுவிக்கும். ஆனால் எல்லாப் பொழுதுகளுமே தலைவியைப் பெறாத தலைவனுக்குச் செயலறவினைத் தோற்றுவித்தன. தலைவியைப் பெறுதற்குரிய இடம் அறியப் பெறாமையால், மடலொடு மறுகில் தோன்றுவேன் என்றும், காலத்தைப் பொருட்படுத்தாமையால், உயிர் வாழேன் என்றும் உணர்த்தினான். இதனால், மடலூர்ந்தால் உயிர் வாழ்வேன் என்று கூறி, அச்செயல் தலைவிக்கும், தனக்கும், குடிக்கும் பழியாகும் என்றும் குறிப்பினால் புலப்படுத்தினான். தலைவன் மடலூர்ந்தால் தலைவி உயிர் வாழாள் என்ற குறிப்பும் உணர்த்தப் பட்டது. உண்மையான பிரிவு என்பது தலைவன், தலைவியின் உள்ளத்தில் இல்லை என்பதும், காலமும், இடமுமே அவர்களைப்

Koviloor Digital Library

பிரித்தன என்பதும் இதனால் புலப்படும். தோழி, இடமும், காலமும் ஏற்பனவாய் இல்லை என உணர்த்திச் சேட்படுத்தியவழி, ஊர் மக்களால் தூற்றப்படும் மடலேறுதலும் தனக்கு இனிதாகும் என உணர்த்தினான். 'ஊரார் பழியுரைக்க மடலேறுதல் பழியென உணர்த்தும் தோழிக்கு, உயிர் வாழ்தலும் தனக்குப் பழியே என்றனன்.

இப்பாடலில், இரவின் முதற் கூறு தவிர, நாளின் ஏனைய ஐந்து கூறுகள் சுட்டப்பட்டுள்ளன. சிறுபொழுது ஐந்து என்பது ஒரு சாரார் கொள்கையாகும் (தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, நம்பியகப் பொருள்) தலைவன், ஆற்றாமை மிகுதியால், 'காமம் பொய்' என்றான்.

சொற்பொருள் :

கையறு மாலை	–	செயலறவினைத் தோற்றுவிக்கும் மாலைப் பொழுது
இடைதெரிதல்	–	செவ்வி அறியப்படுதல்
மா	–	குதிரை
மடல்	–	பனை ஒலையால் செய்யப்பட்ட குதிரை (ஆகுபெயர்)
தெற்றென	–	தெளிவாக

மேற்கோள் :

1. "மறுகின் ஆர்க்கவும் படுப" குறுந்தொகை, 17
2. "சாக்காடு என்ற மெய்ப்பாடு"
தொல்காப்பியம், களவியல், 9
3. "துஞ்சு ஊர் யாமத்தும் துயில் அறியலரே"
ஐங்குறுநூறு, 13
4. "பிரிவு அரிதாகிய தண்டாக் காமம்"
குறுந்தொகை, 57
5. "போழ்து இடைப்படாமல் முயங்கியும் அமையார்"
கலித்தொகை,4
6. "காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்" திருக்குறள், 1227

பொருள் முடிவு :

பொழுது இடை தெரியின் காமம் பொய், பிரிவு தலைவரின் தூற்றலும் பழியே, வாழ்தலும் பழியே.

Koviloor Digital Library

33. மருதம்

அன்னாய்! இவன் ஓர் இள மாணாக்கன்;
தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே.

வாயிலாகப் புக்க பாணன் கேட்ப, தோழியை நோக்கி தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது. – படுமரத்து மோசிகீரன்.

பொருள் :

என்னிடம் தாய்போல் அன்பு செலுத்தும் தோழியே. இப்பாண்மகன், பல மாணாக்கர்களில் கல்வியைக் கற்கத் தொடங்கியுள்ள வயதில் இளைய ஒரு கற்றுச் சொல்லியாவான், தான் பிறந்த ஊரிலுள்ள அவைக்கண் ஏறிநிற்கும் காலத்தில், இவன் எத்தன்மை உடையவனாய் விளங்குவானோ. இரந்து உண்ணும் உணவினால், முற்ற வளராத உடம்பினையுடைய இவன், தன்னுடைய முதுமைக் காலத்தில், பலரழைத்து இவனை விருந்தாக ஏற்றுக் கொள்வதோடு, யானை, குதிரை, தேர் ஆகியவற்றில் ஊர்ந்து செல்லும் தலைமையுடையவனும் ஆவன்.

விளக்கம் :

பாண்மகனின் தோற்றம், இளமையில் பொலிவிழந்து காணப்பட்ட போதிலும், அவனுடைய சொல்வன்மை, கேட்டார்ப் பிணிக்கும் தகையிவாய் இருந்தது. தன் ஊரல்லாத, பிற ஊராகிய தலைவியின் ஊரில், ஆற்றலொடு விளங்கும் இவன், தன் ஊராகிய பரத்தையர் ஊரில் எத்தகைய ஆற்றலொடு விளங்குவானோ எனத் தலைவி பாண்மகனின் புலமை கண்டு வியந்தனள். பாண்மகனின் மழபுலமை கண்டு, அவன் முது புலமையைத் தலைவி அளந்து கண்டனள். ஊர் மன்றத்தில் பாணன் தங்குவது வழக்கம். வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் இப்பாண்மகன், தன் புலமைத் திறத்தால், அரசர்கள் பால் வரிசை பல பெற்று சிறப்பிக்கப் பெறுவான் என்றனள். தலைவி, தோழியிடம் கூறிய இம்மொழிகள், பாணனால் தலைவனுக்கு உணர்த்தப்படும், தலைவனும் தலைவியைப் பெறுவான் என்ற குறிப்பு இப்பாடலால் புலப்படும்.

சொற்பொருள் :

இளமாணாக்கன் – ஊர்மன்றம் ஏறாது, கை ஓலை பிடிக்கும் கற்றுச் சொல்லி

Koviloor Digital Library

மன்றம்	-	பொது இடம் (அவை)
செம்மலன்	-	தலைமையுடையவன்
இரந்து ஊண்	-	இரந்து பெற்று உண்ணும் உணவு
நிரம்பாமை	-	பொலிவு பெறாமை

மேற்கோள் :

1. "மை ஆடல், ஆடல் மழபுலவர்" *பரிபாடல், 11:88.*

"கல்வி தொடங்கின அளவு ஆதலின் மழபுலவர் என்றார்" *பரிமேலழகர்உரை*

2. "களிறுமன்றே, மாவுமன்றே
ஒளிறுபடைப் புரவிய தேருமன்றே
பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர் தமதெென"
புறநானூறு, 135

3. "பாணன் சொல்வலிமைக்குத் தோற்று வாயில் நேர்ந்தாள்"
தொல்காப்பியம், கற்பியல், 6 நச்சினார்க்கினியர்

4. "அன்னை, என்னை என்றலும் உளவே"
தொல்காப்பியம், பொருளியல், 52

5. "மன்றம் சேர்ந்து மறுகு சிறைபாடும் வயிரிய மாக்கள்"
பதிற்றுப்பத்து 23

பொருள் முடிவு :

அன்னாய், இளமாணாக்கன் ; என்னன் கொல்லோ, செம்மலன்.

Koviloor Digital Library

34. மருதம்

ஒறுப்ப ஓவலர், மறுப்பத் தேறலர்,
தமியர் உறங்கும் கௌவை இன்றாய்,
இனியது கேட்டு இன்புறுக, இவ்வூரே! –
முனாஅது யானைபங்குருகின் கானலம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்பு இசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை அன்ன எம்
குழைவிளங்கு ஆய்நுதல் கிழவனும் அவனே.

வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழிகிழத்திக்குச் சொல்லியது **கொல்லிக் கண்ணன்.**

பொருள் :

அழகிய கடற்கரைப்பகுதியில் உள்ள வண்டாழ்ங்குருகின் பெரிய தொகுதியானது, பகைவர்களைக் கொன்ற போர்வீரர்களின், வெற்றி முழக்கத்தைக் கேட்டு, அஞ்சுதற்கு இடனாகக் குட்டுவனுடைய மரந்தை என்னும் கடற்கரைப் பட்டினம் விளங்குவதாகும். அந்நகரைப் போன்ற, கூந்தலால் அழகு பெற்று விளங்குகின்ற தம் அழகிய நெற்றிக்கு தாயர் மறுப்பதற்கும், வரைவு உடன்படுவதற்கும் முன்பிருந்தே உரிமையுடைவன், இத் தலைவியை மணம் முடிக்கவரும் தலைவன் ஆவன். விட்டு நீங்காத தாயர் முதலியோர் தலைவியை வைது ஒறுத்தனர். களவில், தலைவியின் புணர்ச்சியுண்மையறியாது, அவனுக்கு மணம் முடித்துத் தர மறுத்தனர். தலைவனைக் கூடப் பெறாது, தமியராய் உள்ளவர், உறங்குவதற்குக் காரணமாகிய கடுஞ்சொற்களை இவ்வூர் மொழிந்தது. அவை யாவும் இனி இல்லையாய்ப் போக, இவ்வூரில் உள்ளவர், அவன் வரைந்து கொள்ளவரும் இனிய மணமுழவின் இசை கேட்டு, மகிழ்ச்சியடைவாராக.

மாந்தை என்பது, சேர நாட்டின் கடற்கரைப் பட்டினங்களில் ஒன்று. வளம் செறிந்த இவ்வூர், தலைவியின் எழில் நலத்திற்கு இலக்கியங்களில் சான்றாகக் கூறப் பெறுவதாகும். பொதிய மலைப் புறத்து, ஆஅய் அண்டிரனுக்குரியதாகிய மரந்தை என்பது, இது அன்று, தலைவியின் உறுப்புகளைத் தோழி தன்னுடையனவாக உரிமை பற்றிக் கூறும் மரபு உண்டு (தொல்காப்பியம், பொருளியில், 27) எனவே, 'எம் ஆய்நுதல் கிழவன்' என்றாள். தலைவன், களவில் பிரிந்து சென்றபோது தலைவியின் அளகமும், நுதலும் நீவிச் சென்றமை ஈண்டு நினைக்கப்பட்டது. வீரர்களின் ஆர்ப்பொலி கேட்டுப் பறவைகள்

Koviloor Digital Library

அஞ்சுவதுபோலத் தலைவன், வரைவு மலிந்தமை கேட்டு ஊராரின் ஆர்ப் பொலி அடங்கும் நிலை குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

ஓவலர்	–	ஓவுதல் – நீங்குதல், விட்டுநீங்காத தாயர்
கௌவை	–	ஆரவாரம், கடுஞ்சொற்கள்
இனியது	–	வரைவு மலிந்தமை குறித்த இனிய சொற்கள்
முனாஅது	–	முற்பட
ஆய்நுதல்	–	நுணுகிய நுதலையுடையாள் (அடையடுத்த ஆகுபெயர்)
யானையங் குருகு	–	யானை பிளிறுவது போல ஒலி எழுப்பும் ஒரு வகைப் பறவை, தாழ்ந்து பறப்பது; ஆனைச் சாத்தன் எனவும் கரிக்குருவி எனவும் வண்டாழ்ங்குருகு எனவும் கூறப்படுவது. இதனைத் திரு ஓணம் என்னும் நாளின் பறவை எனச் சோதிட நூல் குறிக்கும்.
மள்ளர்	–	களம் கொள்ளும் போர் வீரர்
குட்டுவன்	–	குட்ட நாட்டிற்கு உரியவன், சேர மன்னரின் மரபுப் பெயர்களில் ஒன்று.
குழல்	–	ஐவகையாக முடிக்கப்பெறும் கூந்தலின் ஒருவகை. பனிச்சை என்றும் கூறுவர்

மேற்கோள் :

1. "மல்லல் நீர் மாந்தையார், மாக் கடுங்கோக் கோதைக்கு" — முத்தொள்ளாயிரம், 82.
2. "களங்கொள் மள்ளரின் முழங்கும்" — அகநானூறு, 227
3. "குஞ்சரங் குரல குருகு" — அகநானூறு, 145
4. "ஒறுப்ப ஓவலை, மறுப்ப நில்லலை" — அகநானூறு, 342

Koviloor Digital Library

5. "குரங்கு உளைப் புரவிக் குட்டுவன்
மாந்தையன்ன எம்நலம் தந்து சென்மே"

அகநானூறு,376

பொருள் முடிவு :

நுதல் கிழவனும் அவனே. இவ்வூர், இனிய கேட்டு இன்புறுக.

Koviloor Digital Library

35. மருதம்

நாண்இல மன்ற, எம் கண்ணே –நாள் நேர்பு
சினைப் பசும் பாம்பின் சூல் முதிர்ப்பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ
நுண் உறை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழலே.

பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது

– **கழார்க் கீரன் எயிற்றி.**

பொருள் :

தலைவன் பிரிந்த நாளில் உடன்பட்டு, கருப்பத்தினையுடைய பச்சைப் பாம்பின் முட்டைகளின் முதிர்ச்சியைப் போன்ற, திரண்ட கரும்பினது குவிந்த அரும்புகள் மலரும்படி, நுண்ணிய மழை பொழிந்து, பின்னர் சிறுசிறு துளியாக பெய்கின்ற, குளிர்ச்சியாக வீசும் வாடைக் காற்றினையுடைய கூதிர் காலத்தும், பிரிந்துறையும் தலைவர் பொருட்டு அழுதலால், எம்முடைய கண்கள், உறுதியாக நாணம் இல்லாதனவே.

விளக்கம் :

தலைவன் தன்னைப் பிரியும் நாளிலேயே, அதற்கு உடன்படாமல் கண்கள் மறுத்திருக்க வேண்டும். அவ்வாறு அவை செய்யாது, அவன் பிரிந்த பின்னர், அவர் பிரிந்துறையும் நாட்களையும், வழியின் ஏதங்களையும், வாராமையையும் குறித்துக் கலங்குதல் நாணமற்ற செயல் என்றாள். கார்ப்பருவம் தொடங்கும் நாளிலேயே வருவதாகக் கூறிய அவர் மொழியை எண்ணி, வாடை வந்தும் வந்திலரே எனக் கலங்கினாள். பிரியும் நாளில், அவர் ஒருவர் காண அழாமல் இருந்த கண்கள், பிரிந்த பின்னர் பலர் காண அழுதல் நாணமற்ற செயல் என்றாள். ஒரு செயலை இடனறிந்து செய்து பயன் கொள்ள அறியாமல், இடனில் பருவத்துச் செய்து வருந்துவது நாணமற்ற செயல், என்று குறித்தனள். மழை பெய்து, கரும்பின் பொதி அவிழ்வது போல, தலைவன் பிரிவு குறித்து ஊரார் உரைக்கும் கடுஞ்சொற்கள் தன்னைத் துன்புறுத்துவதை உணர்த்தினாள். தலைவி, தன்னுடைய ஆற்றாமையைக் கண்கள் மேல் ஏற்றிக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. வாடைக் காலத்தும் என்ற உம்மை, பிரிந்தது முதல் அழுதமை குறித்தது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

கனைத்த – பருத்த

அழிதுளி – பெரிய துளி

சூல் – கரு (முட்டை)

உறை – மழை.

நாணுதல் – தம் செயலுக்கு வருந்துதல்.

மேற்கோள் :

1. "வண்ணம் பசந்து புலம்புறு காலை,
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி,
புணர்ந்த வகையான் புணர்க்கவும் பெறுமே"
தொல்காப்பியம், பொருளியல், 8

2. "பெரும் பெயல் அழிதுளி பொழிதல் ஆனாது"
அகநானூறு, 214

3. "சொல்லா முன்னர் நில்லா ஆகி
நீர் விலங்கு அழுதல் ஆனா" *குறுந்தொகை, 256*

4. "பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பின் துவலை கற்ப" *நெடுநல்வாடை 19–20*

5. "நீடு கழைக் கரும்பின் கணைக்கால் வெண்பூ
கோடைப் பூளையின் வாடையொடு துயல்வர"
அகநானூறு, 217

பொருள் முடிவு :

நாள் நேர்பு, பிரிந்திசினோர்க்கு அழுதலால் எம் கண்கள் நாணில.

Koviloor Digital Library

36. குறிஞ்சி

துறுகல் அயலது மாணை மாக் கொடி
துஞ்சு களிறு இவரும் குன்ற நாடன்,
நெஞ்சு களனாக, 'நீயலென் யான்' என
நற்றோள் மணந்த ஞான்றை, மற்று – அவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ – தோழி! – நின்வயினானே?

'வரைவிடைவைத்துப் பிரிய ஆற்றாள்', எனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது. பரணர்.

பொருள் :

துறுகல்லின் அயலே வளர்ந்துள்ள, மாணைக் கொடியானது, அதன்மீது படர்ந்து பற்றுக் கோட்டினைப் பெறாமல், அதனருகில் உறங்கிக் கிடக்கும் யானை மேல் படர்ந்து வளரும். அத்தகைய, நாட்டிற்கு உரியவன், தன் நெஞ்சத்தினையே தனக்குரிய சான்றாகக் கொண்டு, நின்னிற் பிரியேன் எனத் தலைவியின் நலம் பொருந்திய தோள்களைத் தழுவிய போது உரைத்தனன். அவன் உரைத்த, கெடாத அவ்வுறுதி மொழிகள், நின் திறத்து வருத்தமடைவதற்குக் காரணமாக அமையுமோ?

விளக்கம் :

களவுக் காலத்தில் தலைவியொடு கூடிய தலைவன் உரைத்த சூளுரைகள் பொய்த்தபோது, தலைவி, தோழிக்கு ஆறுதல் மொழிவதாக இப்பாடல் அமைகின்றது. தோழியே, எஞ்ஞான்றும் தலைவிக்கு ஆறுதல் கூறுவாள். ஆனால், இப்பாடல், தலைவி, தோழிக்கு ஆறுதல் கூறுவதாக உள்ளது.

மாணைக் கொடி, தன்னருகே இனிது உறங்கிக் கிடக்கும் யானை மீது படர்வதைக் கூறியமை, களவில் தலைவி, தலைவனைத் தழுவிக் கிடந்தமையைச் சுட்டுவதாகும், துறுகல் அருகே உறங்கும் யானை போலத் தலைவனும், களவிற் கூட்டம் முடித்துக் கிடப்பது குறிக்கப்பட்டது. மாணைக் கொடி, துறுகல்லிற்கும் யானைக்கும் வேறுபாடறியாது படர்ந்தமை போல, பெயராத பற்றுக் கோடு உடையான் என எண்ணிப் பெயர்ந்த தலைமகனை அணைத்து மகிழ்ந்த தன்னுடைய ஏமாற்றத்தைப் புலப்படுத்தினாள். யானை, துயில் நீங்கி எழுந்தவழி, கொடி பற்றுக்கோடு இல்லாமல் தவிப்பது போல தலைவன் புணர்ந்து

Koviloor Digital Library

நீங்கிய வழி வருந்தும் தலைவி நிலை இருந்தது. படர்ந்தவழித் தழைத்த கொடிகள், யானை நீங்கிய வழி வாடுதல் போல், காமக் கூட்டத்தால் பொலிவு பெற்ற தலைவியின் எழில் நலம், அவன் பிரிவினால் நலிவுறுதல் உணர்த்தப்பட்டது.

தன்னைத் தழுவியதும், அவன் வஞ்சின மொழிகளை மெய் என ஏற்றதும், சூளுரை பொய்த்து வாராமையும் தன் தீவினை என எண்ணித் தலைவி கலங்கினாள். தலைவன் செயல்களால் விளையும் துன்பங்கள், தன் அளவினவே என்றும், அவை தோழியை எவ்வகையிலும் இடர் செய்வதில்லை என்றும் தலைவி கூறினள். தோழிக்கு அவை துன்பம் செய்தல் உண்மையாயின், தோழி அவற்றை அறிந்து, வஞ்சினம் பொய்யாதவாறு மணம் முடிக்க முயல வேண்டும் என்றனள். தலைவன், வஞ்சினம் பொய்த்தலால் அவனுக்கு வரும் ஏதம் குறித்துத் தலைவி அஞ்சினாள்.

சொற்பொருள் :

துறுகல்	–	உருண்டைக்கல்.
மாணை	–	ஒருவகைக் கொடி
தோள் மணத்தல்	–	அவையல் கிளவி
தாவா	–	கெடாத
இவர்தல்	–	படர்தல்
நீயலன்	–	நீப்பேன் அல்லேன் (பிரியேன்)
வஞ்சினம்	–	பிரியேன் என்ற சூளுரை
நோய்	–	வருந்துவதற்குக் காரணம்

மேற்கோள் :

1. "துறுகல் யானையிற் தோன்றும்" — குறுந்தொகை, 279
2. "நெடுஞ் சேணாட்டர் ஆயினும் நெஞ்சிற்கு அணியர்" — குறுந்தொகை, 228
3. "தோள் மாறுபடூஉம் வைகல்" — குறுந்தொகை, 101.
4. "ஏமுறு வஞ்சினம் வாய்மையில் தேற்றி" — குறிஞ்சிப்பாட்டு, 210

Koviloor Digital Library

5. "பணை எழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த" *குறுந்தொகை, 318*

6. "நல்ல சொல்லி, மணந்து, இனி
நீயேன் என்றது. எவன்கொல் அன்னாய்!"
ஐங்குறுநூறு, 22

7. "அளித்து, அஞ்சல் என்று, அவர் நீப்பின், தெளித்த சொல்
தேறியார்க்கு உண்டோ தவறு"
திருக்குறள், 1154

பொருள் முடிவு :

தோழி! நாடன் மணந்த ஞான்றை அவன் வஞ்சினம் உரைத்தது, நின் வயின் நோயோ.

Koviloor Digital Library

37. பாலை

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்;
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின – தோழி! – அவர் சென்ற ஆறே.

தோழி, 'கடிது வருவர்' என்று ஆற்றுவித்தது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பொருள் :

தோழி! தலைவர் நின்னிடத்தில் மிக்க விருப்பம் உடையவர், அவர், நின்மாட்டுத் தலையளி செய்தலும் உடையர். அவர் நின்னைப் பிரிந்து சென்ற நெறிகள், பெண் யானையின் பசியை நீக்குவதற்காகப் பெரிய கையையுடைய ஆண்யானையானது, மெல்லிய கிளைகளை யுடைய யா மரத்தின் பட்டையை உரித்து, அதன் நீரை அப்பிடி பருகச் செய்யும் அன்பைப் புலப்படுத்தற்கு இடமாக உள்ளன.

விளக்கம் :

இடைச் சுரத்தின் கண், அன்பை வெளிப்படுத்தும் காட்சிகளைக் கண்டு, விரைந்து வருவர் எனத் தோழி, தலைவிக்குக் கூறுவாள். பிரிந்து செல்வதற்கு முன்பே, தலைவி மாட்டு அன்புடைய காதலர், அன்புடைய காட்சிகளைக் கண்டவழி பேரன்புடையராவர் எனத் தோழி கூறினள். கொம்புகளால், யாமரத்தின் பட்டையை உரிக்காமல், கைகளால் உரித்தல் கூறியது அதன் மென்மையைக் கருதியாகும். களிறு, தன் பசியைப் போக்கிக் கொள்ள நினையாமல், தன்னுடைய பிடியின் பசியைப்போக்க முயலுதலைக் கண்டு, தலைவன் பேரன்புடையவனாய்த் திரும்புதல் ஒருதலை என்றாள். தலைவன் சென்ற வழிகள், இத்தகைய அன்புடைய காட்சிகளைக் கொண்டவை என்பதை 'ஆறு அன்பின' எனக் குறித்தார். நல்கலும் நல்குவர் என்ற உம்மை, பிரிந்த நாள் தொட்டு நல்காமையைக் குறித்ததாகும். சினைகள் வேனில் வெம்மையில் வற்றியமையால், யானைகள் யாமரத்தின் பட்டைகளை உரித்தன. பட்டைகளை உரிப்பதற்கு ஏற்ற கருவியாதலால் யானையின் பெருங்கை குறித்தார். தலைவனும் வினை முடித்துத் தன் மனை திரும்பித் தலைவியை இன்புறுத்துவான் என்பது குறிப்புப் பொருளாகும்.

சொற்பொருள் :

நசை – விருப்பம்

Koviloor Digital Library

வேழம் - களிறு

பொளிக்கும் - உரிக்கும்

நல்கல் - தலையளி செய்தல்

யாஅம் - பாலை நிலத்து ம்ரம்.(யா மரம்) மரத்தின் பட்டை, நீர்ப் பசை மிக்கது.

மேற்கோள் :

1. "சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தட மருப்பு யானை" குறுந்தொகை, 255

2. "அன்புறு தகுவந இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை ஆகும் வருந்திய பொழுதே"
தொல்காப்பியம். பொருளியல், 37

3. "யாரினும் இனியன், பேரன்பினனே"
குறுந்தொகை, 85

4. "உம்பல் அகைத்த ஒண்முறி யாவும்"
மலைபடுகடாம், 429

5. "யானைதன், கொல்மருப்பு ஒடியக் குத்திச் சினம் சிறந்து,
இன்னா வேனில் இன்துணை ஆர
முளிசினை யாஅத்துப் பொளி பிளந்து ஊட்டப்
புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்"
அகநானூறு, 335.

பொருள் முடிவு :

நசை பெரிதுடையர் நல்குவர், அவர் சென்ற ஆறு அன்பின.

Koviloor Digital Library

38. குறிஞ்சி

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில் ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்றநாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி – தோழி! – உண்கண்
நீரொடு ஒராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே.

வரைவு நீட்டித்த வழித் தலைமகள், தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது. *கபிலர்.*

பொருள் :

காட்டில் உள்ள மயிலானது, பாறையில் ஈன்ற முட்டைகளைக் கருங்குரங்கின் விளையாடும் குட்டிகள், உருட்டி விளையாடுவதற்கு இடனாகிய குன்ற நாடனின் நட்பு, அவன் பிரிவினால், மை தீட்டப் பெற்ற கண்களின்றும் பெருகும் நீரொடு, என்றும் ஒரே நிலையில், அப்பிரிவை நினைத்து வருந்தாமல் பொறுத்துக் கொள்ளும் வலிமையுடையோர்க்கு எஞ்ஞான்றும் மிகவும் நன்மையுடையதாய் விளங்கும்.

விளக்கம் :

தலைவனுடைய பிரிவினைத் தாங்கும் ஆற்றல் தனக்கு இல்லாமையைப் பொதுமைப்படுத்தித் தலைவி கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. குன்ற நாடன் கேண்மை, ஆற்றல் வல்லுவோர்க்கு நன்று என்று கூறிய தலைவி, அவ்வாற்றல் தனக்கு இல்லாமையைப் புலப்படுத்தினாள். 'மஞ்ஞை, கான அறை ஈன்முட்டையைக் கருங்குரங்கின் விளையாடும் குட்டி, வெயிலில் உருட்டும் எனப் பொருளுரைத்தலும் கூடும், மயிலின் முட்டை, நிழலில் கிடந்து, உள்ளே உள்ள குஞ்சு வருந்திச் சாகாமல், தம் நினைப்பின்றிக் குரங்கின் குட்டி செய்த செயல், அடை காத்தது போல் வெம்மையைத் தந்து, குஞ்சு வெளிவர ஏதுவாயிற்று எனவும் கொள்ளலாம். சிறிய விலங்கு கூடத் தான் அறியாமலேயே நன்று புரியும் நாடன் எனத் தலைவனின் நட்பு, 'பிரிந்த நாளினும் சிறந்து தண்ணளி உடைத்தாதல் கூறப்பட்டது. வெயில் உருட்டும் என்பதால், நிழலில் ஈன்றது என்பதும், குருளை உருட்டும் என்பதால் அடை காக்கும் மயில் ஆண்டில்லை என்பதும் உணரப்பட்டன. தலைவன் பிரிந்தவுடன், கண்ணீரும் பிரியுமாறு, அவனை மனத்தால் நினையாமல் உயிர் தாங்கிக் கொள்ள இயலுமாயின் நட்பு, நன்மையுடையதாக நினைக்கப்படும். அவ்வாறு தாங்குபவர்

Koviloor Digital Library

யாவரும் உலகின் இன்மையால் நட்பு, தீதாகின்றது. 'தலைவனை உள்ளுவதால் தான், உயிர் வாழ்கிறேன், அன்றேல் இறந்துபடுவன்', எனக் குறித்தாள். முட்டையைக் குருளை உருட்டும் நாடன் ஆகியும், தான் பிள்ளைப் பேறு எய்த வரைந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துகின்றான், எனக் கவன்றாள். முட்டையைக் குருளை உருட்டும் விளையாட்டு நீட்டித்தால், அதனுள் இருக்கும் குஞ்சு இறந்துபடுதல் போல், தலைவன் வரையாது நீட்டிப்பது, தனக்கு இடர் விளைவிப்பதாக ஆகும் என உணர்த்தினாள். தலைவன் கேண்மை, உடன் இருக்கும் போது நன்மை தருவதாகவும், பிரிந்த வழித் துன்பம் தருவதாகவும் உள்ளது. மயில் அடை காத்தற்குரிய முட்டை, அவ்வாறு காக்கப்படாமல் பாறையில் தனித்துக் கிடந்தது, குரங்கின் குட்டியால் விளையாட்டுப் பொருளாய் உருட்டப்பட்டது. தலைவன் உடனிருந்து இன்புறுத்தற்குரிய தலைவி, அவன் பிரிவினால் துன்புறுவதோடு, நகையாடுவதையே தொழிலாகக் கொண்ட ஊரார் பழிச் சொல்லிற்கும் ஆளாக நேர்ந்தனள் என்பது குறிப்புப் பொருளாகும்.

சொற்பொருள் :

முசு	–	கருங்குரங்கு
அறை	–	பாறை
குருளை	–	குட்டி
தணப்ப	–	பிரிய
ஓராங்கு	–	ஒருபடித்தாக, என்றும் மாறாமல்

மேற்கோள் :

1. "துறுகல் கல்லா மந்தி கடுவனோடு உகளும்"
ஐங்குறுநூறு, 277

2. "விளையாடும் வன் பறழ்" குறுந்தொகை, 26

3. "குருளை என்னும் இளமைப் பெயர், குரங்கிற்கு இலேசினால் கொள்ளப்பட்டது".
தொல்காப்பியம், மரபியல்,14. பேராசிரியர்

4. "அரிதாற்றி அல்லல் நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்" திருக்குள், 1160

பொருள் முடிவு :

குன்ற நாடன் கேண்மை, ஆற்றல் வல்லுவோர்க்கு என்றும் நன்று.

Koviloor Digital Library

தலைவி கூற்று - உவமை அணி

39. பாலை

'வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை, அருஞ்சுரம்' என்ப – நம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே.

'பிரிவிடை, 'ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்கு, 'யாங்ஙனம் ஆற்றுவேன்?' எனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது.

ஔவையார்.

பொருள் :

தோழி நம் முலையிடைக் கிடந்து துயிலும் தூக்கத்தை வெறுத்தவர், பிரிந்து சென்ற வழியானது, வெம்மையான, வலிமையுடைய விரைவான காற்று, மரக்கிளைகளில் வீசுவதால், வாகை மரத்தின், நெற்றுக்களின் முற்றிய வற்றல்கள் ஒலித்தற்கு இடனாக உள்ள மலைகளையுடைய சுரமாகும் என்று கூறுவர்.

விளக்கம் :

தலைவன் சென்ற நெறியருமை நினைந்து தலைவி ஆற்றாளாயினாள். பாலை நிலத்தில் காற்று வெம்மையாகவும், வலிமையாகவும், வேகமாகவும் வீசுதல் குறிக்கப்பட்டது. தான் சென்றறியாத பாலை நிலம் ஆதலின், 'அருஞ் சுரங்களையுடையது' எனத் தலைவன் கூறியதைக் கொண்டு கூறினள். இன்பம் துய்த்து ஈண்டு இராமல், கொடிய பாலையில் செலவு மேற்கொண்டு துயருற்று, வருந்துகிறாரே எனக் கலங்கினள். குன்றுகளும் உடைகின்ற பாலைநிலம்; கள்வர்கள் அலைத்தலையுடைய பாலைநிலம்; வாகை நெற்றுக்கள் ஒலிக்கும் பாலைநிலம் எனத் தலைவன் சென்ற சுரம், கேடு பயப்பதாய் விளங்குவதைத் தலைவி எண்ணி வருந்தினாள். வாகை வெண்ணெற்று ஒலித்தலால், வழிச் செல்வார் கூவியழைத்தாலும், கேட்டற்கு அரிய சுரம் என்றும், அவ்வொலி கேட்டு ஆறலை கள்வர் ஏதம் புரிவர் என்றும் உணர்த்தப்பட்டது.

முலையிடைக் கிடந்தும், பிரிவர் என்ற குறிப்பால் தலைவியால் ஊடி முனியப்பட்டவர் என்றும், முயங்கி நீத்தமையால் முனியப்பட்டவர் என்றும்; மார்பிடைக் கிடந்து பிரிந்து செல்லும் அரிய செயலைச் செய்தவர் என்றும்; முலையிடைத் தட்பத்தை முனிந்து அருஞ்சுரத்தின் வெப்பத்தை விரும்பியவர் என்றும்; தன் உடம்பு தலைவியின்

Koviloor Digital Library

மார்பிடைக் கிடக்கும் போதே பொருள் மேல் உள்ள காதலால் பிரிதலை நினைத்துத் தலைவியை உள்ளத்தால் முனிந்தவர் என்றும் 'முலையிடை முனிநர்' என்ற தொடர் பலவாறு விளக்கப்படும்.

சொற்பொருள் :

முனிநர் – வெறுத்தவர்

பொங்கர் – மரக்கிளை

உழிஞ்சில் – வாகை

சுரம் – பாலைநிலம்

மேற்கோள் :

1. "வழியருமை கேட்டவழித் தலைவி கூறியது"
தொல்காப்பியம், கற்பியல்,6 நச்சினார்க்கினியர்
2. "விலங்கு வெங்கடுவளி எடுப்ப" அகநானூறு, 71
3. "வாகை வெண்நெற்று ஒலிக்கும் வேய்பயில் அழுவம்"
குறுந்தொகை,7
4. "உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி" கலித்தொகை, 75
5. "இடை முலைக் கிடந்தும் நடுங்கலானீர்"
குறுந்தொகை, 178
6. "வளி மிகின் வலியும் இல்லை" புறநானூறு, 51

பொருள் முடிவு :

முனிநர் சென்ற ஆறு, அருஞ்சுரம் என்ப.

Koviloor Digital Library

40. குறிஞ்சி

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், 'பிரிவர்' எனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு, தலைமகன் கூறியது.

செம்புலப் பெயனீரார்.

பொருள் :

என் தாயும், நின்தாயும் என்ன உறவினர்? என் தந்தையும், நின் தந்தையும் எம்முறையில் உறவுடையார்? யானும் நீயும் எக்குடிவழியைச் சார்ந்தவராக அறிதல் கூடும்? செம்மண் நிலத்தில் பெய்யும் மழை நீரைப் போல, நம்முடைய நெஞ்சங்கள் தாமாக அன்பு கலந்தன.

விளக்கம் :

ஊழ்வினையால் உருவாக்கப்பட்ட இவ்வுறவு, பிரிவின்றி எஞ்ஞான்றும் தொடர்வது எனக் காட்டித் தலைவன் தலைவியின் அச்சத்தைப் போக்குவதாக இப்பாடல் அமைவதாகும். செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர், அம்மண்ணொடு கலந்து, அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று, தன் தன்மை மாறி ஒன்றுபடுவது போல, இருவர் உள்ளங்களும் தம்முள் கலந்து ஒன்றாயின. நெஞ்சு கலந்தமைக்குச் செம்புலப் பெயல் நீரை உவமை கூறிய சிறப்பால், இப்பாடலின் ஆசிரியர், செம்புலப் பெயல் நீரார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். நெஞ்சம் கலந்தன என்பது, உள்ளப் புணர்ச்சியைக் குறித்தது. மழை பெய்வதற்கு அந்நிலம், யாதொரு முயற்சியும் செய்திற்றிலதாயினும், நிலம் குளிர்ந்தவழி ஆண்டுச் செல்லும் மேகமும் குளிர்ந்து மழையைத் தரும். தலைவன் ஊழ்வினைப் பயனால், தலைவியைப் பெற்று மகிழ்ந்தமைக்கு இவ்வுவமை கூறப்பட்டது. மழையை ஏற்கும் செம்புலத்தின் நெகிழ்ச்சி, தலைவன் அன்பினை ஏற்ற தலைவியின் நிலைக்கு உவமையாயிற்று. மேகம் வானிலும், செம்புலம் தரையிலும் வெவ்வேறு இடங்களில் இருப்பினும், உரிய காலம் அமையும் போது செம்புலம், மழைநீரைப் பெறுகின்றது. வெவ்வேறு இடங்களைச் சார்ந்த இத் தலைமக்கள் உறவும், ஊழினால் விதிக்கப்பட்ட காலத்தில் வந்து பொருந்துகின்றது. செம்புலப்

Koviloor Digital Library

பெயல் நீர் போல, வேறுபட்ட இரு உள்ளங்கள், ஒன்றாய்க் கலந்தன. இவ்வுறவு, பிரிவின்றி இயைந்த துவரா நட்பாகத் தொடரவல்லது எனக் கூறித் தலைவன் தலைவிக்கு ஆறுதல் மொழிந்தனன்.

சொற்பொருள் :

யாய் – என்தாய்

ஞாய் – நின்தாய்

கேளிர் – உறவினர்

பெயல்நீர் – மழைநீர்

மேற்கோள் :

1. "காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"

இறையனார் களவியல்,2

2. "பிரிவர் எனக் கருதிய தலைவியின் குறிப்பறிந்து, தலைவன் கூறியது"

தொல்காப்பியம், களவியல், 10 நச்சினார்க்கினியர்

3. "நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும்"

திருக்குறள் 452

4. "நிலத்தொடு நீர் இயைந்தன்னார்" திருக்குறள், 1323

5. "யாய் என்பது, தன்மையொடு ஒட்டுதலின், முறைப்பெயர் எனினும் உயர்திணையாம்"

தொல்காப்பியர், பெயரியல்,26 நச்சினார்க்கினியர்

பொருள் முடிவு :

யாயும் ஞாயும் யாராகியர்; எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்; யானும் நீயும் எவ்வழி அறிதும்; நெஞ்சம் கலந்தன.

Koviloor Digital Library

41. பாலை

காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் – தோழி! – அவர் அகன்ற ஞான்றே.

பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.
அணிலாடு முன்றிலார்.

பொருள் :

தோழி. காதலர் நம் பக்கத்தில் உள்ள போது, மிகவும் மகிழ்ச்சியுற்று, விழாக் கொண்ட பேரூர் போல மிகவும் விருப்பத்தையுடைவளாக விளங்குவேன். பாலை நிலத்தில் காணப்படும் அழகிய குடிகளையுடைய சிற்றூரில், உறைவோர் அனைவரும், அவ்வூரைவிட்டு நீங்கிச் சென்ற போது ஆங்குள்ள, அணில் விளையாடும் முற்றத்தையுடைய தனிமை பொருந்திய வீட்டினைப் போல, அவர் என்னைப் பிரிந்த அன்றே பொலிவிழந்து வருந்துவேன்.

விளக்கம் :

காதலர் தன்னுடன் உறையும் போது, சீறூரில் வாழ்ந்தாலும், அதனையே விழாக் கோலம் பூண்ட பேரூர் போல விரும்பி மகிழ்வதாகவும்; அவன் தன்னைப் பிரிந்த அன்றே, மக்கள் நீங்கிய அணில் விளையாடும் முற்றத்தையுடைய தனிமையைத் தரும் பாழ்மனையைப் போலப் பொலிவிழந்து தோற்றுவேன் என்றும் தலைவி தன்நிலையை உரைத்தனள். காதலர் அருகில் உள்ளபோது சாறு கொள் ஊர் போல் விளங்கிய யான், அகன்ற போது, அணிலாடும் தனிமனைபோல் ஆயினமைக்குக் காரணம் யாது எனத் தோழியிடம் உரைப்பதாகவும் பொருள் கொள்ளலாம். 'அலப்பென்' என்ற சொல்லை அலப்பு, என் எனப்பிரித்தவழி இப்பொருள் புலப்படும். மக்கள் நீங்கியமையால், குழந்தைகள் விளையாடும் இல்லம் போல் மகிழ்ச்சி நிறைந்ததாக இல்லாமல், அணில் விளையாடி அச்சத்தையும், தனிமையையும் தோற்றுவிப்பதாக அவ்வில்லம் அமைவதைக் குறிப்பிட்டாள். மக்கள் நீங்கிய இல்லத்தை 'அணில் ஆடு முன்றில்' எனச் சிறப்பித்துப் பாடியமையால், இப்புலவர், அணிலாடு முன்றிலார்

Koviloor Digital Library

என்று சிறப்புப் பெயர் பெற்றார். ஆறலை கள்வரின் கொடுமையாலும், இயற்கையின் சீற்றத்தாலும், கோல் கோடும் அரசினாலும் நிகழும் அச்சங்களால், ஊரில் வாழ்வோர் இடம் பெயர்ந்து வேற்றிடங்களுக்குச் செல்லுவர்.

சொற்பொருள் :

உழையர் – அருகில் உள்ளவர்

சாறு – விழா

மன்ற – தேற்றமாக (உரிச்சொல்)

அத்தம் – பாலைவழி

அலப்பென் – வருந்துவேன்

புலப்பில் – தனிமைத்துயரைத் தோற்றுவிக்கும் இல்லம்

மேற்கோள் :

1. "பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு,
ஆற்றுவல் என்பது படக் கூறியது"
தொல்காப்பியம், கற்பியல்,6 நச்சினார்க்கினியா

2. "விழவு மேம்பட்ட என் நலனே" குறுந்தொகை, 125.

3. "உழையிற் பிரியின் பிரியும்,
இழையணி அல்குல் என் தோழி கவினே"
கலித்தொகை, 50.

4. "உண்டல் அளித்து என் உடம்பே, விறல் போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத்திருந்த தனிமகன் போன்றே" நற்றிணை, 153

5. "புல்லென்ற களம் போலப் புலம்பு கொண்டு
அமைவாளோ" கலித்தொகை,5

6. "நல்குநர் புரிந்து நலன் உணப்பட்டோர்,
அல்குநர் போகிய ஊர் ஓரன்னர்" கலித்தொகை,23

பொருள் முடிவு :

தோழி, காதலர் உழையராகப் புகல்வேன், அகன்ற ஞான்று அலப்பேன்.

Koviloor Digital Library

42. குறிஞ்சி

காமம் ஒழிவது ஆயினும் - யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட! - எம்
தொடர்பும் தேயுமோ நின்வயினானே?

இரவுக் குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்ப்பாட்டான் மறுத்தது - **கபிலர்.**

பொருள் :

நடு இரவின் கண், தொகுதியையுடைய மேகங்கள், மழையைப் பெய்தமை தோன்ற, மலை முழைஞ்சுகளில் பிற்றை நாளிலும் அருவிகள் ஒலிக்கும் மலைநாடனே. நீ மெய்யுற்றுத் துய்க்கும் இன்பம், இரவுக்குறி வாய்க்கப் பெறாமையால், ஒருகால் நீங்குவதாயினும் நின்னிடத்து யாம் கொண்ட நட்பும் குறையுமோ?

விளக்கம் :

தோழி, இரவுக்குறியை உடன்பட்டாள் போலச் சொல்லமைதியும், மறுத்தாள் போலப் பொருளமைதியும் உடையதாக இப்பாடல் அமைகின்றது. 'தேயுமோ' என்ற சொல்லின் ஓகாரம், தேயாது வளரும் என்பதைக் குறித்தது. காமம் ஒழிவதாயினும் என்ற தொடரில் உள்ள உம்மை, தலைவியை இரவுக் குறியில் பெறுதல் அருமை உடைத்து எனக் குறிப்பதாகும்.

இரவில் பலரறிய மலையில் பெய்த மழை, பகலில் பலரால் அறியப்பட்டு, அருவிகளாய் வெளிப்படுவது போலத் தலைவனின் மறையிற் புணர்ச்சியும், தலைவியின் மெய் வேறுபாட்டினாலும், பல்கால் தலைவன் வருகையாலும் புலப்பட்டு அலர்பரவ ஏதுவாயிற்று. முதல்நாள் இடையாமத்தில் பெய்த மழை, பிற்றை நாளிலும் அருவியாகத் தொடர்ந்து ஒழுகுவது போல, காமக் கூட்டத்தால் பெற்ற தொடர்பு, இரவுக் குறி இடையீடு போன்றவற்றால் தடைப்பட்டாலும் நீங்காது தொடரும் எனத் தோழி குறிப்பிட்டாள். உடம்பு பற்றிய காமம், காலத்தாலும், இடத்தாலும் இடையீடு பட்ட போதிலும், உயிரோடு தொடர்புடைய நட்பு எஞ்ஞான்றும் அழியாது தொடரும் எனத் தோழி வரைந்து எய்தும் கூட்டத்தின் சிறப்பினைக் கூறினள். தருக்க நூல் கூறும் வழியளவையின் வகைகளாகிய பொது, எச்சம், முதல் என்னும் மூன்றனுள், 'யாமத்து மழை வீழ்ந்ததால் அருவி இயம்பும்' என அறிதல்,

Koviloor Digital Library

எச்சத்தின் பாற்படுவதாகும்.

சொற்பொருள் :

காமம் – *மெய்யுறு புணர்ச்சி*

கருவி மாமழை – *மின், இடி முதலியவற்றையுடைய மழை*

விடரகம் – *மலையிடத்தேயுள்ள வெடிப்புக்களும் குகைகளும்*

மேற்கோள் :

1. "பிரியினும் பிரிவதன்றே நின்னொடு மேய
மடந்தை நட்பே" *ஐங்குறுநூறு, 297*

2. "நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே"
நற்றிணை, 22

3. "மால்வரை இழிதரும் தூவெள் அருவி,
கல் முகைத் ததும்பும்" *குறுந்தொகை, 95*

4. "கல்யாறு ஒலிக்கும் விடர் முழங்கு இரங்கு இசை"
மலைபடுகடாம், 324

5. "கருவி மாமலைத் தத்தங்
கருவி மாமழை சிலை தரும் குரலே" *குறுந்தொகை, 94*

பொருள் முடிவு :

நாட! காமம் ஒழிவதாயினும், நின்வயினான் எம் தொடர்பும் தேயுமோ?

Koviloor Digital Library

43. பாலை

'செல்வார் அல்லர்' என்று யான் இகழ்ந்தனனே;
'ஒல்வாள் அல்லள்' என்று அவர் இகழ்ந்தனரே;
ஆயிடை, இருபேர் ஆண்மை செய்த பூசல்,
நல் அராக் கதுவியாங்கு, என்
அல்லல் நெஞ்சம் அலமலக்குறுமே'

பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது — ஔவையார்.

பொருள் :

தோழி, தலைவர் நம்மைப் பிரிந்து செல்லமாட்டார் எனக் கருதி, யான் அவர் செலவினை விலக்காமல் சோர்ந்திருந்தேன். அவர், நம் பிரிவினை இவளுக்கு அறிவித்தால், அதற்கு உடன்படாள் எனக் கருதி, என்னிடம் சொல்லாமல் சோர்ந்திருந்தார். இருவர் தங்களுடைய பேராற்றலை வெளிப்படுத்தச் செய்யும் போர் நிகழும் அவ்விடத்தில், ஒருவரை நல்ல பாம்பு தீண்டினாற்போல, என் நெஞ்சத்தைப் பிரிவுத் துன்பம், மிகவும் கலக்கமுறச் செய்தது.

விளக்கம் :

தலைவன் தன்னிடத்து நீங்கா அன்புடையவன் ஆதலால், அவன் தன்னைப் பிரியான் என உறுதியாக நம்பினாள். அந் நம்பிக்கையால், அவன் பிரிவினைத் தடுக்கும் எண்ணம் தோன்றாதாயிற்று. பிரிவு என்றால் இன்னது என அறியாதவள், தன் காதலியாதலின், பிரிவு உரைத்தால் அவளால் தாங்கிக் கொள்ள இயலாது எனத் தலைவன் மறந்திருந்தனன். முதற்கண் அறியப்படாமல், நஞ்சு தலைக்கு ஏறியபின் பாம்பு தீண்டியமை அறியப்படுதல் போல், தலைவியின் மெலிவிற்குக் காரணம் தலைவன் பிரிவு என அறியப்படுவதாயிற்று. 'இருபேர் ஆண்மை' என்பதற்கு, ., 'இரண்டு பெரிய ஆண்மைகள்' என இவ்விருவரின் நம்பிக்கையையும் துணிவினையும் பொருளாக் கூறலும் உண்டு. அவர் நம்மைப் பிரியார் என்ற ஊக்கத்தைத் தலைவிக்கும், இவட்குச் சொல்லாமலே பிரிவோம் என்ற துணிவினைத் தலைவற்கும் உண்டாக்கியமை 'இரு பேராண்மை' என்ற தொடரால் புலப்படும். பாம்பினால் பற்றப்பட்டாருக்கு, அதன் நஞ்சு அவர் உயிர் போமளவும் துன்புறுத்துவது போல, தலைவி, பிரிவுத் துயரால் வருந்துவதாகக் கூறினள். அவள், தங்கள் இருவரின் இகழ்ச்சி எண்ணியும் வருந்துவதாகக் கூறினள். பிரிவினால் அல்லலும், அறியாமையால்

Koviloor Digital Library

கலக்கமும் அடைந்தமை தோன்ற, 'அல்லல் நெஞ்சம், அலமலக்குறும்' என்றாள்.

சொற்பொருள் :

பேர்	–	பெயர், பெரிய
நல் அரா	–	பொல்லாங்குக்கு நல்லதாகிய பாம்பு,
அலமலக்குறுதல்	–	அழிதல்,கலக்கமுறுதல்.
அல்லல்	–	பிரிவுத்துன்பம்
இகழ்தல்	–	செய்வன செய்யாது சோர்ந்து இருத்தல்
நாமம்	–	அச்சம் (உரிச்சொல்)

மேற்கோள் :

1. "பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே"
திருக்குறள், 1190.

2. "வேறுபட வந்த உவமத் தோற்றம்"
தொல்காப்பியம், உவம இயல், 33 பேராசிரியர்

3. "ஒல்லேம் என்றதன் தப்பல்
சொல்லாது அகறல் வல்லுவோரே" *குறுந்தொகை, 79*

4. "அரவுறு துயரம் எய்துப" *ஐங்குறுநூறு, 173*

5. "ஆண்மை இருபாற்கும் ஒக்கும்"
தொல்காப்பியம், கிளவியாக்கம், 56 சேனாவரையர்.

6. "துன்புறு பொழுதினும், எல்லாம் கிழவன்
வன்புறுத்தல்லது சேறல் இல்லை"
தொல்காப்பியம், கற்பியல், 43

பொருள் முடிவு :

யான், செல்வார் அல்லர் என இகழ்ந்தேன். அவர், ஒல்வாள் அல்லள் என இகழ்ந்தார். ஆயிடை செய்த பூசலால் என் நெஞ்சம் அலமலக்குறும்.

Koviloor Digital Library

44. பாலை

காலே பரிதப்பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே;
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற. இவ் உலகத்துப் பிறரே.

இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.

– வெள்ளி வீதியார்

பொருள் :

இருகால்களும் நடந்து, நடந்து செலவு தடுமாறின. இரு கண்களும், தேடிப் பார்த்துத் தனக்குரிய புலமாகிய ஒளியை இழந்தன. அகன்ற, பெரிய ஆகாயத்தின்கண் விளங்கும் விண்மீன்களைக் காட்டிலும் பலராய ஆடவர் இவ்வுலகத்தில் உள்ளனர்.

விளக்கம் :

செலவு அயர்தற்கு உரியரல்லாத, செவிலியர் தெருவில் நடந்து செல்ல நேர்ந்தமை பற்றி, செய் கருவிகள் ஐந்தனுள் காலின் தளர்ச்சி முற்கூறப்பட்டது. நோக்கி, நோக்கி என்ற அடுக்கிற்கு ஏற்ப, நடந்து நடந்து எனப் பொருளுரைக்கப்பட்டது. தன் கண்ணொளி போன்ற காதலர்களைக் காணாமல், பிறரையும் காணும் ஒளித்தன்மையைக் கண்கள் இழந்தன என்றாள். செயற் கருவிகளில் ஒன்றாகிய காலும், அறிகருவிகளில் ஒன்றாகிய கண்ணும் கூறப்பட்டவேனும் ஏனைய கருவிகளும் செயலடங்கியமை குறிக்கப்பட்டது. வானத்து விண்மீன் போல், இடைச் சுரத்துச் செல்வோர் பலர் இருந்தபோதிலும், உவா மதி போன்ற தலைவனைக் காணேன் எனக் கலங்கினாள்.

வெள்ளி வீதியார் தன் காதலனைத் தேடிச் சென்று வருந்திப் பாடிய இப்பாடல், புறமேனும், சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாமையின் அகப்பாடலாகவே கொள்ளப்படும். ஒரு செவிலித்தாய் உடன்போக்கில் சென்ற தன் மகளையும் அவன் காதலனையும் தேடி நடக்கலாற்றாத கால்களோடும், பார்க்கலாகாத கண்களோடும் வருந்திப் புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மீனினும் பலர் இவ்வுலகத்து உள்ளனர். ஆனால் ஞாயிறும், திங்களும் அனைய தலைவனையும், தலைவியையும் கண்டிலேன் என்றாள். 'வள்ளி' என்ற சொல்லிற்குத் திங்கள் எனப் பொருள் கொண்டு திங்களின் நீரின் தண்மையும், பெண் தன்மையும் உடைமை (தொல்காப்பியம்.புறந்திணை !இயல், 33) என நச்சினார்க்கினியர் விளக்குவர்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

பரி	–	நடை
வாள்	–	ஒளி (உரிச்சொல்)
அகல்இரு விசும்பு	–	தன்னை ஒழிந்த ஏனைய நான்கு பூதங்களும் அகன்று, விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்
மீன்	–	வடமீன்
மன்ற	–	தேற்றம் (இடைச்சொல்)

மேற்கோள் :

1. "வெள்ளி வீதியைப் போல, நன்றும் செலவு அயர்ந்திசினால் யானே" *அகநானூறு, 147*
2. "நீளிடை அத்தம் நோக்கி, வானத்து கண்ணும் காட்சி தௌவின" *நற்றிணை, 397*
3. "வாள் அற்றுப் புற்கு என்ற கண்ணும், அவர் சென்ற நாள் ஒற்றித் தேய்ந்த விரல்" *திருக்குறள்,1261*
4. "வானத்து மீன்கண் அற்று, அதன் சுனையே" *புறநானூறு, 109*
5. "அகல் இரு விசும்பின் பாய் இருள் பருகி" *பெரும்பாணாற்றுப்படை, 1*

பொருள் முடிவு :

கால், பரி தப்பின; கண், வாள் இழந்தன; பிறர் பலர்.

Koviloor Digital Library

45. மருதம்

காலை எழுந்து, கடுந்தேர் பண்ணி,
வால் இழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன், 'எல்லினன் பெரிது' என
மறுவரும் சிறுவன் தாயே;
தெறுவது அம்ம, இத்திணைப் பிறத்தல்லே.

தலைமகற்குப் பாங்காயினார் வாயில் வேண்டிய வழி, தோழி, வாயில் நேர்ந்தது. – **ஆலங்குடி வங்கனார்.**

பொருள் :

வளம் பொருந்திய ஊரின் தலைவன், விரைந்து செல்வதற்கு உரிய தேரினை ஒப்பனை செய்து அதில் ஏறி, தூய அணிகலன்களையுடைய பரத்தையர்களைத் தழுவச் சென்றனன். அப்பரத்தையர் சேக்கையை விட்டு விடியலில் துயிலெழுந்தான். அம்மகளிரைத் துய்த்த அடையாளங்கள் தன் உடம்பில், பெரிதும் வெளிப்பட்டுத் தோன்றுமாறு தன் இல்லத்தை அடைந்தான். அதனைக் கண்டு, அவன் சிறுவனுக்குத் தாயாகிய தலைவி, இவ்வுயர் குடியில் பிறத்தல் இவ்வாறெல்லாம் இடருறத் தக்கது போலும் என உள்ளம் கலங்கினாள்.

விளக்கம் :

தலைவனுக்கு நண்பர்களாய் உள்ளவர்கள், தோழியிடம், தலைவி ஊடல் நீங்கித் தலைவனை ஏற்றுக் கொள்ள வேண்டிய போது, தோழி உடன்பட்டுக் கூறுதல் இப்பாடலின் நோக்கமாகும். தலைவி, கற்புநெறி நிற்பவளாதலின், அவள் தலைவன் பிழையை மறந்து ஏற்றுக் கொள்ளுவாள் என்பது இப்பாடலால் உணர்த்தப்படும்.

பரத்தையரை அடைய நினைக்கும் தலைவனின் வேட்கை மிகுதியைச் சுட்ட, அவன் விரைந்து செல்லும் தேரில் சென்றமை கூறப்பட்டது. அவர்கள், தன்னுடைய தகுதியை அறிய வேண்டும் என்பதற்காகத் தேரினை ஒப்பனை செய்து சென்றனன். அப்பரத்தையரும், இவன் பால் பொருள் நாட்டம் உடையவராய், அணிபுனைந்து நின்றனர் என்பது 'வாலிழை மகளிர்' என்ற அடை மொழியால் புலப்படும். தலைவன் தந்த செல்வம் அவர்கள் அணிகள் பல புனைவதற்கு ஏதுவாயிற்று. வளம் பொருந்திய ஊர்த்தலைவன் எனக் கூறி, அவன் செல்வம் பலர்க்கும் பயன்படுதல் குறித்தார். பரத்தையர் அணிந்த அணிகள் தூயனவேயன்றி, அவர்கள் தூயரல்லர் என்பது

Koviloor Digital Library

'வாலிழை மகளிர்' என்ற தொடரால் அறியப்படும். அவர்கள் தலைவனை மயக்குதல், தங்கள் இழையாலல்லது, தம் இயற்கை அழகால் அன்று என்பது உணர்த்தப்பட்டது. அப்பரத்தையர் பலர் என்பது தோன்ற 'மகளிர்' எனப் பன்மையால் குறித்தார். தலைவன் பரத்தையரைத் தழுவச் சென்றனனேயன்றி, பரத்தையர் தம் உள்ளத்தால் அவனைத் தழுவ விரும்பவில்லை என்பது, 'தழீஇய சென்ற ஊரன்' என்ற தொடரால் புலப்படும். தலைவன், தான் இருந்த இல்லில் தலைவியைத் தனித்திருக்கச் செய்து நீங்கினான் என்பது, 'சென்ற ஊரன்' என்ற தொடரால் உணர்த்தப்படும். பொருட் பெண்டிர்க்கு வாரி இறைக்கும் செல்வ வளம் உடையவன் என்பது, 'மல்லல் ஊரன்' என்ற அடை மொழியால் புலனாகும். 'காலை எழுந்து' என்ற தொடரால், அவன் இரவெல்லாம் பரத்தையர் மனையில் தங்கியமை அறியப்படும். தலைவன், தலைவியைத் 'தன் பெண்டு' என உரிமைபற்றி நினைத்திருப்பின், அவளொடு கூடி இன்பம் துய்த்திருப்பான். 'சிறுவன் தாய்' என்ற தொடர், புதல்வர்ப் பயந்து, உரிமை கொள்ளும் நிலை பரத்தையர்க்கு இல்லாமையை உணர்த்திற்று. தோழி, தலைவியின் உயர் குலப் பிறப்பைக் கூறி, தலைவனால் விரும்பப்பட்ட பரத்தையரின் இழிபிறப்பை உணர்த்தினாள். இதனால், பரத்தையர் துய்த்த சின்னங்கள் தோன்ற வருதல் தக்கதன்று என வாயில் நேர்ந்தனள். தலைவியின் முன்னர், பரத்தையர் செய்த அடையாளங்களுடன் தோன்றுதல், அவட்குப் பிரிவுத் துன்பத்தை விட மிகவும் வருத்தத்தைத் தருவது என உணர்த்தினாள். உயர்பிறப்பு, இத்தகைய இழிவுகளை எல்லாம் பொறுத்துக் கொள்ளாது என்பது தலைவனுக்கு உணர்த்தப்பட்டது. பரத்தையிற் பிரிந்த தலைவன், தனக்கு ஆண்மகவு பிறந்தது அறிந்து, காண வருதலும்; இல்லுறை மகளிர் தம் தலைவரின் செயல் மறந்து, ஏற்றுக் கொள்ளுதலும் உலகியல்பாகும்.

சொற்பொருள் :

மல்லல்	–	வளமை (உரிச்சொல்)
ஊரன்	–	மருதநிலத் தலைமகன்
எல்	–	விளக்கம் (உரிச்சொல்) இலங்குதல்
மறுகுதல்	–	சுழலுதல்
தெறுவது	–	துயரம் தருவது

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகற்சிக் கண்ணும்" *தொல்காப்பியம், கற்பியல், 9*

2. "குடிப் பிறத்தலைப் பொறுத்தலாகிய மெய்ப்பாடு"

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், 12

3. "தோழி, தலைவியை உயர்த்திக் கூறுதல்"
தொல்காப்பியம் பொருளியல், 46

4. "நிறை தார் மார்பன், நெருதல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன், இத்தெரு இறப்போன்"

அகநானூறு, 66

5. "யாணர் ஊர, தூயர், நறியர் நின் பெண்டிர்"
ஐங்குறுநூறு, 70

6. "சிறுவர்ப் பயந்த நன்றி சான்ற கற்போடு எம்பாடு
ஆதல் அதனினும் அரிதே" *நற்றிணை, 330*

7. "நேரிழை நல்லாளை நெடுநகர்த் தந்து, நின்
தேர்பூண்ட நெடு நன்மான் தெண்மணிவந்து எடுப்புமே"

கலித்தொகை, 70

8. "மாய மகிழ்நர் பரத்தைமை நோவேன் தோழி,
கடன் நமக்கு எனவே" *கலித்தொகை,75*

9. "தகவுடை மங்கையர், சான்றாண்மை, சான்றார்
இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்"

பரிபாடல், 20

பொருள் முடிவு :

கடுந்தேர் பண்ணி, மகளிர்த் தழீஇச் சென்ற ஊரன், காலை எழுந்து, பெரிது எல்லினன் எனச் சிறுவன் தாய் மறுவரும். இத்திணைப் பிறத்தல் தெறுவது.

Koviloor Digital Library

46. மருதம்

ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி,
இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும், புலம்பும்
இன்றுகொல் – தோழி! – அவர் சென்ற நாட்டே!

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு கிழத்தி ஆற்றுவல் என்பது படச் சொல்லியது — மாமிலாடன்.

பொருள் :

தோழி, ஆம்பல் பூவின் வாடலைப் போன்ற குவிந்த சிறகுகளையுடைய வீட்டின்கண் தங்கும் குருவிகள், முற்றத்தில் உலர்த்திய புழுக்கலை உண்டு, பொது இடத்திலுள்ள நுண்ணிய புழுதியில் குடைந்து விளையாடி, தன்னுடைய குஞ்சுகளோடு வீட்டின் இறைப்பின் கண் தங்கியிருக்கும். பிரிந்தார்க்குத் துன்பத்தைத் தரும் இத்தகைய மாலைக் காலமும், தனிமையும் தலைவர் பிரிந்து சென்ற நாட்டில் இல்லையோ?

விளக்கம் :

தன்னுடைய பிரிவுத் துயரம் தலைவற்கும் உண்டு ஆதலால் அவர், விரைந்து வருவார் எனத் தலைவி ஆற்றியிருத்தல் இப்பாடலில் பொருளாகும். காடுகளிலும் பிற இடங்களிலும் பறக்கும் குருவிகளின் வேறாக மனை உறை குருவியின் வாழ்க்கை ஈண்டு குறிக்கப்பட்டது. தனக்குரிய இடத்தில், பிள்ளைகளோடு உண்டு, விளையாடி, வதியும் பறவையின் வாழ்க்கையைப் பல்கால் கண்ட தலைவி, தலைவனும் தன்னோடு வாழவேண்டும் என்ற வேட்கையுடையவள் ஆயினாள். மாலையும் இன்று கொல், புலம்பும் இன்று கொல் எனத் தனித்தனியே கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. தலைவன் தன்னோடு உடனுறைந்த போது, மாலையும் புலம்பும் வருத்துவதைக் கண்டறியாமையால், அவர் இருக்கும் இடங்களில் எல்லாம் மாலையும் புலம்பும் இல்லை போலும் என நினைத்தாள். அவ்வாறு இல்லையாயின் ஆண்டுச் சென்று உறைதலே தக்கது என்றும், தலைவன் உள்வழிச் சேறல் கற்புடைப் பெண்டிர்க்கு அழகன்று என்றும், மாலையும் புலம்பும் நலிய

Koviloor Digital Library

வருந்திவாழ்வதே நம் வாழ்வின் நியதி என்றும் பலவாறு அவள் உள்ளம் வருந்துவதாயிற்று. பறவைகள் தாங்கள் வதியும் வீட்டின்முன், முற்றத்தில் உலர்த்தப்பட்ட உணவினை உண்கின்றன. வீட்டின் முன் உள்ள இடத்தில் விளையாடி மகிழ்கின்றன. வீட்டின் முன், கூரைக்கு அடியே உள்ள இறைப்பில் தம் பிள்ளைகளோடு தங்கி இனிது துயில் கொள்கின்றன. அத்தகைய வாழ்வு தனக்கு அமையப் பெறாமை எண்ணித் தலைவி வருந்துவாளாயினாள். நம் தலைவரோ, நம்மை நீத்து, நம்மொடு மகிழாமல், நெடுந்தொலைவு சென்று, தங்கியுள்ளார் எனக் கலங்கினாள். காலத்தாலும் இடத்தாலும் ஏற்படும் பிரிவுத் துயரம் மனை உறை குருவிக்கு இல்லாமையை எடுத்துக்காட்டி, அதனை உணர்ந்த தலைவன் தன்னைக் காண வரவேண்டும் என விரும்பினாள். உணவு, விளையாட்டு, உறைவிடம், உடனுறை வாழ்க்கை, உறக்கம் ஆகிய யாவும், தலைவன் பிரிவினால் பெறப் பெறாமை குறித்து, மனை உறை குருவியின் வாழ்க்கை நினைக்கப்பட்டது.

சொற்பொருள் :

சாம்பல்	–	வாடல்
குரீஇ	–	குருவி(இயற்கை அளபெடை)
எரு	–	உலர்ந்த சாணம்
தாது	–	புழுதி
இறை	–	தங்குதல்
பள்ளி	–	சேக்கை, தங்கும் இடம்
புன்கண்	–	ஒளியிழத்தல்
புலம்பு	–	தனிமை (உரிச்சொல்)
அவர்	–	நெஞ்சறி சுட்டு. (தலைவர்)

மேற்கோள் :

1. "பிள்ளை, பறவையின் இளமைப்பெயர்"
தொல்காப்பியம், மரபியல்,4

2. "மனை உறை குரீஇ, கறை அணல் சேவல்"
புறநானூறு,318

3. "தாது எரு ததைந்த முற்றம்" மலைபடுகடாம்,531

Koviloor Digital Library

4. “காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்து”
கலித்தொகை,103

5. “மனை உறை புறவின் செங்கால் சேவல்,
இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,
இரவும் பகலும் மயங்கிக் கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப” *நெடுநல்வாடை,45*

6. “முடங்கல் இறைய தூக்கணங் குரீஇ”
குறுந்தொகை,374

7. “பையுள் மாலை” *குறுந்தொகை, 195*

8. “புன்கண் மாலையும், புலம்பும் முந்துறுத்தே”
நற்றிணை,89

பொருள் முடிவு :

‘தோழி, அவர் சென்ற நாட்டு, மாலையும், புலம்பும் இன்று கொல்’

Koviloor Digital Library

47. குறிஞ்சி

கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை – நெடுவெண் நிலவே!

இரா வந்து ஒழுகுங்காலை, முன்னிலைப் புறமொழியாக நிலவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது. – நெடுவெண் நிலவினார்.

பொருள் :

நெடும் பொழுது ஒளிவழங்கும் வெண்ணிலாவே. கரிய அடிப்பகுதியையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் உதிர்ந்து காணப்படும் பாறை, பெரிய புலியின் குட்டி போலக் காட்சியளிக்கும் காட்டின் கண், பல இடையூறுகளுக்கு அஞ்சாது இரவின் கண் வரும் தலைவரது களவொழுக்கத்திற்கு, நீ நன்மை செய்வாயல்லை. (தீமையே செய்கின்றனை)

விளக்கம் :

தோழி, தலைவனுக்கு இரவுக்குறி மறுத்து, வரைந்து கொள்ள வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. புலியேயன்றிப் புலியொடு அதன் தாயும் தந்தையும் சுற்றமும் அக்காட்டில் உலவும் என்றும் காட்டின் அச்சமிகுதியை உணர்த்தினாள். தலைவியை இரவுக் குறியில் பெற்று இன்பம் நுகர்தல் ஒன்றே நோக்கமாக வருதலால் இடைவழியில் தோன்றும் இடையூறுகளுக்கு அவன் அஞ்சவில்லை. நிலவு களவிற்கு நல்லது அன்று என்று கூறி, கற்பிற்கு நன்மை பயப்பதை உணர்த்தினாள். கரணத்தின் வரைந்தார் நெடுவெண் முற்றத்தில் நிலவுப் பயன் கொள்ளும் இயல்பு ஈண்டு நினைக்கப்பட்டது. காட்டில், மலர் உதிர்ந்த பாறைகளைப் புலிக்குருளை எனப் பொய்யே காட்டுவை; இரவுக்குறியில் மனைப் புறத்தே தங்கி, இன்பம் துய்க்கும் காதலர்களைப் பலரும் அறிய மெய்யே காட்டுவை. ஆதலால் 'நீ நல்லை அல்லை' என்றாள், இரவில், தாய், நாய் ஆகிய இடையூறு செய்வன எல்லாம் துயின்று நன்மையே செய்ய, நீ மட்டும் துயிலாது, வருவோரைக் காட்டிக் கொடுத்தல் நன்றன்று என்றாள். நெடும் பொழுது கழிந்து மறையும் நிலவு, அப்பொழுதே மறைந்தால் நன்று எனக் கருதினாள்.

காட்டில் தலைவன் வரும்போது, நிலவின் ஒளியால், மலர் உதிர்ந்து கிடக்கும் பாறைகளைக் கண்டு, தலைவன் புலிக்குருளை என அஞ்சுதலும் கூடும். இவ்வாறு தலைவனின் அச்சத்திற்கும், ஊரார் அலர் உரைப்பதற்கும், தலைவியின் ஆற்றாத் துயரத்திற்கும், தலைவன் இன்பம்

Koviloor Digital Library

நுகராமைக்கும் காரணமாக விளங்குவதால் நிலவினைத் தோழி 'நல்லை அல்லை', என்றாள். தம்மால் விரும்பப்படாது, களவில் வெறுக்கப் படுவதாய்த் துன்பமே தரும் நிலவினை, 'நெடுவெண் நிலவு' எனச் சிறப்பித்துக் கூறியமையால், இப்பாடலாசிரியர், 'நெடுவெண் நிலவினார்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். தனக்கு நன்மையை நாடி வரும் தலைவன், எனக்குத் தீமை புரிகின்றான் என உணர்த்தி வரைவு கடாவினாள்.

சொற்பொருள் :

குருளை – புலிக்குட்டி

வீ – மலர்

துறுகல் – உருண்டைக்கல்; கற் செறிவு

எல்லி – எல் – இரவு

மேற்கோள் :

1. "இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே"
தொல்காப்பியம், உவம இயல், 22, பேராசிரியர்.

2. "குறிஞ்சியுள் வேனில் வந்தது"
தொல்காப்பியம் அகத்திணையியல்,12 நச்சினார்க்கினியர்

3. "தலைவி நிலவு வெளிப்பட வருந்தியது"
தொல்காப்பியம், களவியல், 16

4. "முட்டுவயின் கழறல்"
தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், 23

5. "அரும்பு வாய் அவிழ்ந்த கருங்கால் வேங்கைப்
பொன் மருள் நறுவீ கல்மிசைத் தாஅம்" நற்றிணை,257

6. "அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத் தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும் புலி வரிப்புறம் கடுக்கும்" புறநானூறு,202

7. "தொல்லைத் திங்கள் நெடுவெண் நிலவின்
மணந்தனன்மன் நெடுந்தோளே" குறுந்தொகை, 193

பொருள் முடிவு :

நெடுவெண் நிலவே, காட்டிடை எல்லி வருநர் களவிற்கு நல்லை அல்லை

Koviloor Digital Library

48. பாலை

'தாதின் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு' என
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பின் இனை பெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசை ஆகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ, காதலர் தமக்கே?

பகற்குறிக்கண் காணும் பொழுதிலும் காணாப் பொழுது பெரிதாகலின், வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு, தோழி சொல்லியது. **பூங்கணுத்திரையார்.**

பொருள் :

பூந்தாது முதலிய பொடிகளால் செய்யப்பட்டு, மிக்க குளிர்ச்சியையுடைய பனியில், துயிலவிடப்பட்ட விளைபாட்டுப் பாவையானது, காலை வெயிலில் கிடந்து வருந்தும் நிலைகண்டு, நீ செயலற்றுக் கிடக்கும் நிலையை நீக்குக எனத் தன்னுடன் விளையாடும் மகளிர் கூறுவர். அதனைக் கேட்ட பின்னரும், இவ்வாறு பெரிதும் துன்புற்று வருந்தும், நல்ல நுதலையுடைவளது பசலை நீங்கும்படி, அப்பசலை தான், தலைவனிடம் இவளுக்கு விருப்பமாகும் ஒரு சொல்லைக் கூறுதற்கு உடன்படாதோ.

விளக்கம் :

பிறர் எல்லார்க்கும் தலைவியின் மெலிவிற்குக் காரணம், தலைவன் பிரிவுதான் எனப் பறைசாற்றும் பசலை, அதனை உண்டாக்கிய காதலனுக்குத் தான் நீங்குவதற்காக ஒரு சொல் கூறாதோ, எனக் குறிப்பிட்டுத் தோழி, தலைவனை வரைந்து கொள்ளும்படி வேண்டினள். சொல்லா மரபின் சொல்வது போலக் கூறுதல் என்ற மரபு ஈண்டு குறிக்கப்பட்டது. பசலை, தாமாகக் கூறும் இயல்பற்றது. கூறும் இயல்பு வாய்க்கப்பெற்றாலும், தலைவி மாட்டு தான் வாழ்வதற்கு வழிவகுத்துள்ள தலைவனிடமே சென்று கேட்காது, தானே நினைந்து செய்ய வேண்டியதை ஆயத்தார் கூறியும் தலைவி மறந்தனள். உணவும் அருந்தாது, பாவை விளையாட்டில் நாட்டமுடைய தலைவி, ஆயம் சொல்லக் கேட்டும், பாவையைப் போற்றாதவள் ஆயினள். அதற்குரிய காரணத்தை ஐயுற்று வினவிய ஆய்த்தார்க்குப் பசலை, உரைக்கும்.

Koviloor Digital Library

ஆய்த்தார்க்கு உரைத்த பசலை, தலைவர்க்கு உரைக்காதோ என்றனள். மறைக்கப்படாத உறுப்பாகிய நுதலில் பசலை தோன்றி, யாவர்க்கும் உரைப்பதாயிற்று என்பதைக் குறிப்பிட 'நன்னுதல் பசலை' என்றார். பசலை, எஞ்ஞான்றும், தலைவன் தன்னுடைய காதலியைப் பிரிவதையே விரும்பும் என்றும்; தான் தலைவியை விட்டு நீங்குவதை என்றும் விரும்பாது என்றும் தோழி உணர்த்தினாள். பனியில் கிடந்து அழகுடன் விளங்கிய பாவை வெயிலில் கிடந்து உலர்ந்து வாடுவது போலத் தலைவனைக் கூடி மகிழ்ந்த தலைவி, அவன் பிரிவினால் ஆற்றாமை உடையவளாய் விளங்குவது குறிக்கப்பட்டது. பசலை நீங்குவதற்குக் காதலர் ஒரு சொல்லாகிய 'வரைவேன்' என்பதைச் சொல்லாரோ எனத் தோழி வினவினாள்.

சொற்பொருள் :

தாது	–	மலர்களின் மகரந்தத்துகள் போன்றவை
இனை	–	வருத்தம்
பசலை	–	பிரிவினால் தோன்றும் நிற வேறுபாடு.
ஒருசொல்	–	ஒப்பற்ற சொல் – வரைவேன் என்றல்
ஓரை ஆயம்	–	விளையாட்டு மகளிர்.

மேற்கோள் :

1. "தாது செய் பாவை" அகநானூறு,392
2. "செய்யுறு பாவை" குறுந்தொகை, 195
3. "ஓரை மகளிர்" குறுந்தொகை, 401
4. "பசைஇப் பசந்தன்று நுதலே" குறுந்தொகை,87
5. "பல்லோர் அறியப் பயந்தன்று நுதலே" ஐங்குறுநூறு, 58

பொருள் முடிவு :

ஆயம் கூறக் கேட்டும், உழக்கும் நன்னுதலின் பசலை நீங்க, ஒரு சொல் காதலர் தமக்கு இசையாது கொல்.

Koviloor Digital Library

49. நெய்தல்

அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை ஆயினும்,
நீ ஆகியர் எம் கணவனை;
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே.

தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக் கண்டவழி அவ்வாற்றாமை நீங்குமன்றே; நீங்கியவழி பள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது.

அம்மூவனார்.

பொருள் :

அணிலின் பற்களைப் போல் கூரிய வளைந்த முட்களைக் கொண்ட, தாதுக்களை மிகுதியாக உடைய கழிமுள்ளியையும், நீலமணியைப் போன்ற கருநிறமுடைய நீரினையும் உடைய கடற்கரைப் பகுதியின் தலைவனே. இப்பிறப்பு மாறி, மறுபிறப்பு வருவதாயினும், நீ என் கணவன் ஆகுக. நின் மனம் ஒத்தவள் யான் ஆவேன் ஆகுக.

விளக்கம் :

தலைவன் தலைவியரின் அன்புடைமை பிறவி தோறும் தொடரும் என்பது ஈண்டுக் கூறப்பட்டது. இம்மை மறுமை பற்றிய சிந்தனையும், மறுபிறப்புப் பற்றிய சிந்தனையும், வினைப்பயன் தொடர்வது பற்றிய சிந்தனையும் சங்ககால மக்களிடம் காணப்பட்டமை இப்பாடலால் அறியப்படும்.

'நீயாகியர் என் கணவனை' என்ற தொடரால் யானாகியர் நின் மனைவி' என்பது, தானே புலப்படும். மனைவியாக இருப்பினும், நெஞ்சு நேர்பவளாம் பேறு பரத்தைக்கே வாய்க்கப் பெறும் ஆதலால், தலைவி தலைவனிடம், மனைவி என்ற தகுதியோடு, நெஞ்சு நேர்பவளாம் தகுதியும் வாய்க்கப் பெற வேண்டும் என வேண்டினாள். கற்புடை மகளிர், பிறர் நெஞ்சு புகார் ஆதலின், தன்நெஞ்சில் நேர்பவனாய் அவன் விளங்குதல் கூறாமலே பெறப்படுவதாகும். மறுமையிலாவது, தலைவன், பரத்தையர்க்கன்றி தனக்கே உரியனாக வேண்டும் என விரும்பினாள். இம்மையினும், தலைவன் பரத்தையர்க்குக் கணவன் ஆகான் என்பதும், அவர் அவனுக்கு மனைவி ஆகார் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டன, இம்மையில், தலைவன் நெஞ்சில் பரத்தையர் உள்ளனரேயன்றிப் பரத்தையர் நெஞ்சில் இவன் இல்லாமையும் குறிக்கப்பட்டது.

Koviloor Digital Library

'மணிக்கேழ் அன்னம்' எனப் பாடம் கொண்டு, காரன்னம், கழிகளில் உள்ள முண்டகத்தின் தாதுக்களால், தம்முடைய புலவு நாறிய தன்மை நீங்கி, பொன்நிறமும் மணமும் பெற்றுப் பொலிந்தன எனப் பொருள் உரைக்கப்படும். இதனால், பரத்தையரும், தலைவனைச் சார்ந்து தம் இழிவு நீங்கிச் செல்வத்தால் பொலிந்து மிக்குத் தோன்றுவர் என்பது குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

கொங்கு – தேன், மகரந்தத் தாது

முண்டகம் – கழி முள்ளிச் செடி

கேழ் – நிறம்

மணி – நீலமணி

சேர்ப்பன் – நெய்தல் நிலத் தலைவன்

நெஞ்சு நேர்பவள் – உள்ளம் பொருந்துபவள்

மேற்கோள் :

1. "அளியளோ அளியள் எம் நெஞ்சு அமர்ந்தோளே" குறுந்தொகை, 56

2. "மணி மருள் மலர முள்ளி" அகநானூறு, 236

3. "மறுமை உலகத்தும் மன்னுதல் பெறுமே" குறுந்தொகை, 199

4. "எழுதுங்கால் கோல் காணாக் கண்ணே போல் கொண்கன் பழிகாணேன் கண்ட இடத்து" திருக்குறள் 1285

5. "தலைமகன் நலம் பாராட்டிய வழித் தலைவி கூறியது" தொல்காப்பியம், கற்பியல், 6 இளம்பூரணர்

6. "தலைவிக்குச் சாக்காடு எனும் மெய்ப்பாடு வந்தது" தொல்காப்பியம், களவியல், 9 நச்சினார்க்கினியர்

7. "காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்" தொல்காப்பியம்,6 நச்சினார்க்கினியர்

பொருள் முடிவு :

சேர்ப்ப. மறுமையாயினும் நீ என் கணவன் ஆகியர். நின் நெஞ்சு நேர்பவள் யான் ஆகுக.

Koviloor Digital Library

50. மருதம்

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறை அணிந்தன்று அவன்ஊரே; இறை இறந்து
இலங்கு வளை நெகிழ, சாஅய்ப்
புலம்பு அணிந்தன்று அவர் மணந்த தோளே.

கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

குன்றியனார்

பொருள் :

வெண்சிறு கடுகினைப் போன்ற சிறிய பூக்களையுடைய ஞாழல் மரத்தின் பூ, அழகிய மருத மரத்தின் வாடியு பூக்களுடன் பரவி தலைவனுடைய ஊரில் உள்ள நீர்த்துறையை அழகு செய்தது. அவர் தழுவிய என்னுடைய தோள், விளங்கும் வளையல் தோள் சந்தினைக் கடந்து நெகிழுமாறு மெலிந்து தனிமையை அழகாகப் பெற்றது.

விளக்கம் :

தலைவன் தன்னைப் புறக்கணித்தமையால் தோள் மெலிந்து, வளை நெகிழ்ந்தன என வாயில்களுக்குத் தலைவி கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. ஞாழலும், மருத மலர்களும் நீர் நிலையில் பரவிக்கிடப்பன கண்டு, நீர் கொள்ளும் பலரால் தலைவன் பரத்தையொடு புனலாடிய செயல் அறியப்பட்டது, அந்நீர் நிலைக்கு நீர் முகக்க வந்த தலைவியின் உடல் மெலிவு, தலைவன் பிரிவினால் நேர்ந்தமையும் பலரால் அறியப்பட்டது, துறை, பரத்தையர் கழித்தெறிந்த மலர்களால் அழகு பெற்றது என்றும்; தன்னுடைய தோள், அவனில்லாத தனிமை என்னும் அழகு பெற்றது என்றும் கூறித் தலைவன் செயலைப் புலந்தனள். தலைவன் பரத்தமை கண்டு, 'அவன் ஊர்' என வேறுபட நோக்கினள். தலைவன் சார்ந்த பொருளாகிய துறை, பொலிவு பெறுதல் இயல்பே. ஆனால், தலைவன் சாராத பொருளாகிய தோள் பொலிவு பெறுதல் பொருந்தாது. ஆயினும், நாகரீகமாகத் தலைவி, தன் தோள்கள் தனிமைத் துயரால் பொலிவு பெற்றன என்றாள். 'அவன் ஊர்' என்பது, பரத்தையர் சேரியைக் குறித்தலால், தலைவி உறையும் ஊர் அவன் ஊராகாமை உணர்த்தப்பட்டது. துறையில் நீர் தோன்றாமல், ஞாழலும், மருதமலர்களும் தோன்றுதல் போல், தன்னுடைய தோள்களும் தமக்கு இயல்பாகிய அழகின்றி, வளை நெகிழ்ந்து மெலிந்து புலம்பே தோன்ற நின்றன என்றாள். 'செவ்வீ மருதின்' என்றும் பாடம் கொள்ளப்படும்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

ஐயவி	–	வெண்சிறுகடுகு
ஞாழல்	–	சுரபுன்னை (குங்கும மரம்)
செம்மல்	–	வாடல்
வீ	–	மலர்
தாஅய்	–	பரந்து
இறை	–	முன்கை (தோளின் கீழ்ப்பகுதி)
சாஅய்	–	நுணுக்கம் (மெலிவு)
அணிதல்	–	பிறர் கண் கொளப் பூணுதல்.

மேற்கோள் :

1. "வாங்கு இறைப் பணைத்தோள், எல்வளை மகளிர்"
– குறுந்தொகை,365

2. "கொடி விளங்கு இறைய தோள்" குறுந்தொகை, 367

3. "நுதல் பசப்பு இவர்ந்து, திதலை வாடி,
நெடுமென் பணைத்தோள் சாஅய், தொடி நெகிழ்ந்து
இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும் எனச்
சொல்லின் எவனாம் தோழி" குறுந்தொகை, 185

பொருள் முடிவு :

ஞாழல், செம்மலொடு தாஅய் அவர் ஊரின் துறை அணிந்தன்று, அவர் மணந்த தோள் புலம்பு அணிந்தன்று.

Koviloor Digital Library

51. நெய்தல்

கூன் முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூல்அறு முத்தின் காலொடு பாறித்
துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை
யானும் காதலென்; யாயும் நனி வெய்யள்;
எந்தையும் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே.

வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி வரைவு மலிவு கூறியது. குன்றியனார்.

பொருள் :

வளைந்த முள்ளையுடைய கழிமுள்ளியின், பனிக்காலத்தில் பூத்த கரியமலர், கோத்த நூல் அற்ற முத்துக்களைப் போல, காற்றினால் சிதறி வீழ்ந்து, நீர்த்துறைகள் தோறும் தூயமணற்பரப்பினை, அழகுடையதாக ஆக்கும். இத்தகைய நெய்தல் நிலத் தலைவனிடம் யானும் காதலுடையேன். நம் தாயும் மிக்க விருப்பமுடையவள். தந்தையும் அவனுக்கே மணம் முடித்துக் கொடுக்க, அவன் வரைவொடு வருதலை விரும்புவான். இயல்பாகவே பழிச்சொல் கூறும் இவ்வூரும், வரைவொடு வரும் சேர்ப்பனை நின்னொடு களவில் தொடர்புறுத்திச் சிறுசொல் உரைப்பதாயிற்று.

விளக்கம் :

முண்டகத்தின் மலர், காற்றினால் சிதறுண்டு வீழ்ந்து, மணற் பரப்பை அழகு செய்தாற்போல, தலைவியும் தெய்வத்தான் உய்க்கப்பட்டு, தலைவனொடு கூடி இல்லற இன்பம் நுகர்வாள் என்பது குறிக்கப்பட்டது. தலைவன், வரைவு மலிதல் கூறியமையால், நீர்த்துறைகள் யாவும் மலர்களால் அழகு பெற்று மணக்கோலம் பூண்டமை குறித்தாள். 'யானும் காதலென்' என்ற தொடர், சேர்ப்பன் நின்னை மணம் முடித்தலைக் காண யானும் வேட்கையுடையேன் எனப் பொருள்படும். வதுவைநாள் வரை ஆற்றியிருத்தல் வேண்டும் எனத் தோழி, தலைவிக்குக் கூறினள். இருமுது குரவர் தாமே சென்று மகட் கொடை நேரும் தலைவனின் குடிப்பிறப்பின் உயர்ச்சி கண்டு தோழி, 'யானும் காதலென்' என்றாள். கொடுப்பக் கொள்வது கற்பாதலின், அவ்வாறு மகட் கொடை நேரும் உரிமை உள்ளவன் தலைவியின் தந்தை என்பதால், 'எந்தையும் கொடீஇயர் வேண்டும்' என்றாள். முண்டகத்தின் மலர், கை வருந்தப்

Koviloor Digital Library

பறிக்கப் படாமல் காற்றினால் உதிர்ந்து எளிதில் கொள்ளுமாறு மணற் பரப்பில் கிடத்தல் போல், தலைவனின் வரைவு, அரிதினில் பெறத் தேவையின்றி, தலைவன் முயற்சியால் எல்லோருடைய உடன்பாட்டையும் பெற்றது எனக் குறித்தாள். 'அவனொடும் ஒழிமே' என்ற பாடம் கொண்டு, அவனொடு தொடர்புபடுத்தி அம்பல் உரைத்த ஊர், தலைவன் வரைவு மலிந்தமையால் அம்மொழிகளை ஒழிவதாயிற்று என்று உரை வழங்குதல் பொருட் சிறப்புடையதாகும்.

சொற்பொருள் :

கூன் – வளைந்த

கூர்ம்பனி – உடலைக் குன்னாகச் செய்யும் பனிக்காலம்

அம்பல் – சிலர், அறிந்து கூறும் மொழி.
சொல் நிகழாது முகிழ் முகிழ்த்தல்

கால் – காற்று

பாறி – சிதறி

சேர்ப்பன் – நெய்தல் நிலத் தலைமகன்

வெய்யள் – விருப்பம் உடையவள்

மேற்கோள் :

1. "வதுவை முடியுமளவும் ஆற்றும்படித் தலைவியைத்
தோழி வற்புறுத்துதல்"
தொல்காப்பியம், களவியல், 24. நச்சினார்க்கினியர்.

2. "நூல் அறு முத்தின் தண்சிதர் உறைப்ப"
குறுந்தொகை, 104.

3. "எந்தையும் எதிர்ந்தனன் கொடையே, அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியும்"
அகநானூறு, 282.

4. "சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற" நற்றிணை, 149.

5. "யாமே, ... தண்துறை ஊரன் வரைக.
எந்தையும் கொடுக்க என வேட்டேமே"
ஐங்குறுநூறு, 6.

Koviloor Digital Library

6. "அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்
அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்"

தொல்காப்பியம், களவியல், 49.

பொருள் முடிவு :

சேர்ப்பனை யானும் காதலென், யாயும் வெய்யள், எந்தையும் கொடீஇயர் வேண்டும். அம்பல் ஊரும் அவனொடு மொழியும்.

Koviloor Digital Library

52. குறிஞ்சி

ஆர் களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே,
நரந்தம் நாறும் குவைஇருங் கூந்தல்,
நிரந்து இலங்கு வெண்பல், மடந்தை!
பரிந்தனென் அல்லெனோ இறைஇறையானே?

வரைவு மலிவு கேட்ட தலைமகட்குத் தோழி, முன்னாளில் தான் அறத்தொடு நின்றமை காரணத்தால் இது விளைந்தது என்பதுபடக் கூறியது.

பனம்பாரனார்.

பொருள் :

நரந்தம் பூவின் மணம் கமழும், அடர்த்தியாக விளங்கும் கரிய கூந்தலையும், வரிசையாக விளங்கும் வெண்ணிறப் பல்லினையும் உடைய மடந்தையே. தன்பால் பொருந்திய யானைகள், மிதித்தமையால் ஏற்பட்ட குழிகளில் நீர் நிரம்பிக் காணப்படும். இம்மலைப் பகுதியில் தெய்வத்தால் ஆவேசம் வந்துற்றவள் போல், நீ, நம் கற்புக்கு ஏதம் வருமோ என அஞ்சி நடுங்குதலைக் கண்டு, அவ்வருத்தத்தைப் பொறாத யான், சிறிது சிறிதாக, அவ்வப்போது, இரக்கத்தால் வருத்தமுற்றேனன்றோ.

விளக்கம் :

செவிலித்தாய் வெறியாட்டு எடுத்தவழி, தோழி, தான் அறத்தொடு நின்றமையை நினைவு கூர்ந்தாள். குவை இருங்கூந்தலும், நிரந்து இலங்கு வெண்பல்லும் தலைவி, மணம் செய்து கோடற்குரிய பருவம் எய்தியமை குறித்தது. 'ஆர்களிறு மிதித்த நீர் திகழ் சிலம்பு', என்பது, தலைவன் இரவுக் குறியில் வந்த போது எதிர் கொண்ட ஏதம் சுட்டியது. களிறு மிதித்த பள்ளங்கள், நீர்நிரம்பி, வருவோர்க்கு நீர் உண்ணப் பயன்படுதல் போல, தலைவனின் களவொழுக்கம், ஊரார் அலர் மொழிகளால் வரைந்து கோடற்கு ஏதுவாயிற்று என்ற குறிப்புப் பொருள் உணர்த்தப்பட்டது. தலைவன் வரும் வழியின் இடையூறுகளாலும், தாயர் வெறியாட்டு எடுத்தலானும், காப்பு மிகுதியாலும், ஊரவர் கூறும் அலர் மொழிகளாலும் தலைவி, தெய்வம் ஏறியவள் போல் நடுங்கியமை உணர்த்தப்பட்டது. தலைவியின் கூந்தலின் மணம், நரந்தம் பூவின் மணம் போன்றதாகக் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

சொற்பொருள் :

நரந்தம்	–	நரந்தம் பூ (ஆகுபெயர்) நரந்தம் புல்
நிரந்து	–	வரிசையாக
சிலம்பு	–	மலை
சூர்	–	தெய்வம்
பரிதல்	–	வருந்துதல்
இறை	–	சிறிது

மேற்கோள் :

1. "நரந்தம் நாறு இருங்கூந்தல்", கலித்தொகை, 54.

2. "குவளை நாறும் குவை இருங் கூந்தல்
ஆம்பல் நாறும் தேம்பொதித் துவர் வாய்"
குறுந்தொகை, 300.

3. "சூர் உறு மஞ்ஞையின் நடுங்க" குறிஞ்சிப்பாட்டு, 169.

4. "விலங்கு மலைக் கவாஅன் கரும்பருடு பாத்தியன்ன
பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே"
குறுந்தொகை, 262.

5. "மூப்புடை முதுபதி தாக்கணங்கு உடைய"
அகநானூறு, 7.

6. "முலையே, முகிழ் முகிழ்த்தனவே, தலையே
கிளைஇய மென்குரல் கிழக்கு வீழ்ந்தனவே,
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின,
சுணங்கும் சிலதோன்றினவே" குறுந்தொகை, 337.

பொருள் முடிவு :

மடந்தையே நீ, நடுங்கல் கண்டு, யான் பரிந்தனென் அல்லெனோ.

Koviloor Digital Library

53. மருதம்

எம் அணங்கினவே – மகிழ்ந! முன்றில்
நனை முதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்,
வேலன் புனைந்த வெறிஅயர் களம்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன,
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை,
நேர்இறை முன்கை பற்றி,
சூரர மகளிரோடு உற்ற சூளே.

வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.

கோப்பெருஞ்சோழன்.

பொருள் :

தலைவனே. இல்லத்தின் முன்னே உள்ள, அரும்பு முதிர்ந்த புன்க மரத்தின் மலர்கள் உதிர்ந்து பரவிக் கிடக்கும் வெள்ளிய மணற்பரப்பு, வேலனால் அழகுபெற அமைக்கப்பட்ட வெறியாட்டு நிகழ்த்தப் பெறும் இடங்கள் தோறும், செந்நெல்லின் வெள்ளிய பொரியைச் சிதறினாற் போன்ற தோற்றத்தைத் தரும். மணல் மேடுகள் செறிந்த நம் ஊரில் உள்ள அகன்ற அந்நீர்த்துறையில், நுண்ணிய, மூட்டுவாயுடன் விளங்கும் கையின் முற்பகுதியைப் பற்றிக் கொண்டு, தெய்வமகளிரை முன்நிறுத்தி நீ கூறிய சூளுரைகள் எம்மைத் துன்புறுத்தின.

விளக்கம் :

மணல் மேடு, தலைவன் தலைவியுடன் விளையாடிய இடம். வியன் துறை, தலைவன் சூரர மகளிரை முன் நிறுத்திச்சூள் உரைத்த இடம். தலைவியிடம், தெய்வம் சான்றாக 'நின்னை விரைவில் வந்து மணம் முடிப்பேன்' எனக் கையைப் பற்றிக் கூறிய சூளுரைகள், வரைவு நீட்டித்தமையால் பொய்யாயின. முன்கை பற்றி உற்ற சூள் எனவும், சூரர மகளிரோடு உற்ற சூள் எனவும், அவை, ஒன்றல்ல பல எனவும், தலைவி உரைத்தனள். சூள் பொய்த்தவனுக்கு, அத்தெய்வங்களால் ஏதம் நிகழும் என அஞ்சினள். தலைவன் சூளுரைத்த இடமே, தாயர் வெறியாட்டு எடுத்த இடமுமாயிற்று எனக் குறித்தனள். "சூளுரைகள் எம்மை வருத்தின. சூளுரைத்த உன்னை வருத்தவில்லை. அதனால் நீ களவு நீட்டித்தலை விரும்புகின்றனை" எனத் தலைவனுக்குக் குறிப்பால் தோழி புலப்படுத்தினாள். 'சூள் கேட்ட தன்னையும், சூள் உரைத்த தன்னையும் அவ்வுரைகள் வருத்துதல் தகும் என்றும், என் வாய்க் கேட்ட தோழியை வருத்துதல் வியப்பாக உள்ளது' என்றும் இப்பாடலைத் தலைவி கூற்றாக்கி நச்சினார்க்கினியர் விளக்குவர்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அணங்கின – வருத்தின

மகிழ்நன் – மருதம், நெய்தல் ஆகிய நிலங்களின் தலைவன்

நனை – அரும்பு

உற்ற சூள் – வகுத்து உரைத்த சூள்கள்

வெறி அயர்தல் – மறியறித்துக் குரவையாடி முருகனுக்கு வழிபாடு செய்தல்

வேலன் – வேல் ஏந்தி ஆடுபவன், படிமத்தான், வெறியாட்டு எடுப்பவன் முருகு மெய்ந் நிறுத்தி ஆடுபவன்

வியன்துறை – அகன்ற நீர்த்துறை

மேற்கோள் :

1. "தீராத் தேற்றத்தைப் பின்னொருகால் தலைவி
தேர்ந்து தெளிவொழித்துக் கூறியது"
தொல்காப்பியம், களவியல், 10. நச்சினார்க்கினியர்.

2. "வேலன் தைஇய வெறிஅயர் களனும்"
திருமுருகாற்றுப்படை, 222.

3. "நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறிஅயர் களத்தினில் தோன்றும்" குறுந்தொகை, 318.

4. "பொரி உரு உறழப் புன்கு பூ உதிர"
கலித்தொகை, 33.

5. "வெண்பொரி சிதறி" திருமுருகாற்றுப்படை, 231.

6. "அரிய வஞ்சினம் சொல்லியும், பன்மாண்
தெரிவளை முன்கை பற்றியும்." அகநானூறு, 175.

7. "நேரிறை முன்கை பற்றி நுமர் தர
நாடறி நன்மணம் அயர்கம்" குறிஞ்சிப்பாட்டு, 231.

பொருள் முடிவு :

மகிழ்ந. எம் ஊர் வியன் துறையில், நீ மகளிரொடு உற்ற சூள், எம் அணங்கின.

Koviloor Digital Library

54. குறிஞ்சி

யானே ஈண்டையேனே; என் நலனே
ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
கானயானை கைவிடு பசுங்கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு, ஆண்டு ஒழிந்தன்றே.

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச்சொல்லியது.
மீனெறி தூண்டிலார்.

பொருள் :

யான் மட்டும் ஈங்கு உள்ளேன். தினைப் புனத்தில் தினையைக் காவல் புரிபவர், விடுகின்ற கவண் ஒலிக்கு அஞ்சிக் காட்டுயானை கைவிட்ட பசிய மூங்கிலானது, மீனைக் கவர்ந்து கொண்ட தூண்டிலைப் போல, மேலே செல்வதற்கு இடமாகிய கானக நாட்டின் தலைவன் என்னை நீங்கிய பொழுதே, என்னைப் பிரியாத என் நலமும் நீங்கியது.

விளக்கம் :

தலைவன் பிரிவினால் தலைவி நலனழிந்து வருந்தியமை இப்பாடலால் உணர்த்தப்பட்டுள்ளது. யானை, மூங்கிலை உண்பதற்காக விரும்பி வளைத்தது. தினைப் புனங் காப்பவர் எழுப்பிய கவண்ஒலி கேட்டு அஞ்சி அதனைக் கைவிட்டது. மீன் பிடிப்பவன், மீன் அகப்பட்டவுடன் விசையுடன் தூண்டிலை மேலே தூக்குவான். அத்தூண்டில் நிமிர்வது போல யானை கைவிட்ட மூங்கிலும் நிமிர்ந்து மேலே செல்லும். நிமிரும் மூங்கிலுக்கு மீன் எறி தூண்டிலை உவமை கூறிய சிறப்பால் இப்பாடலாசிரியர் மீன்எறி தூண்டிலார் என்ற சிறப்புப்பெயர் பெற்றார்.

மீனை எறிந்த தூண்டில் என்னாமல், மீனால் எறியப்பட்ட தூண்டில் என எறிதலை மீனின் வினையாக்கி ரா. இராகவையங்கார் உரை வகுத்துள்ளார். தூண்டிலில் இரையை மீன் விழுங்கி, அதில் அகப்படுதலும் உண்டு. அகப்படாது இரையை எறிந்து தப்பிப் போதலும் உண்டு. மீனெறி தூண்டில் என்ற தொடரில் எறிதல் மீனின் வினையேயன்றி தூண்டிலின் வினை ஆகாது. மீன், இரையை எறியாதவரை வளைந்து கிடக்கும் கோல், எறிந்தவுடன் நிமிர்வதையே இவ்வுவமை குறிக்கின்றது. அவனைக் கொள்ளற்கு இருந்த என் நலம், அவனால் கொள்ளப்பட்டது என்ற பொருளும் இவ்வுவமையால்

Koviloor Digital Library

புலப்படும். யானை வளைக்கும் போது வளைந்து, அது கைவிடத் தானும் தூண்டில் போல் நிமிரும் எனக் கூறுதல். தலைவனும் தன் நெஞ்சத்து அன்பு வந்துற்ற போது நெகிழ்ந்தும், அன்பற்ற காலத்தில் மறந்தும் ஒழுகுகின்றான் என்ற குறிப்புப் பொருளையும் தருவதாகும். இப்பாடலில் ஐந்தடியும், எதுகைத் தொடையாக அமைந்துள்ளது.

சொற்பொருள் :

தூண்டில்	–	விழுங்கிய மீன் அகப்படும்படிச் செய்யப்பட்டு, இரை கோத்த வளைந்த வாயினையுடைய, இரும்பினால் ஆகிய கருவி. இது நாணின் இறுதியில் பிணிக்கப் பட்டு நாணின் தலைப்புப் பகுதி, மூங்கில் கோலின் நுனியில் கட்டப்படுவது
கழை	–	மூங்கில்
மீன் எறி தூண்டில்	–	மீனை எறிந்த தூண்டில், மீனால் எறியப்படும் தூண்டில்
நிவக்கும்	–	நிமிரும்
ஏனல்	–	தினை

மேற்கோள் :

1. "மாட்டின்றி வந்த செய்யுள்"
தொல்காப்பியம், செய்யுளியல், 212. பேராசிரியர்.

2. "பேராசிரியரும், இப்பாட்டில் மீனெறி தூண்டில் என்ற தனை ஏனை உவமம் என்றார்"
தொல்காப்பியம், அகத்திணையியல், 46. நச்சினார்க்கினியர்

3. "தினை மேய் யானை இனன் இரிந்து ஓடக்
கல் உயர் கழுதின் சேணோன் எறிந்த
வளைவாய்க் கவணின் கடுவெடி ஒல்லென"
அகநானூறு, 392.

4. "யானே, ஈண்டையேனே, என் நலனே,
ஆனா நோயொடு கானலஃதே" குறுந்தொகை, 97.

Koviloor Digital Library

5. "சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்"

ஐங்குறுநூறு, 278.

6. "தூண்டில் பொன்மீன் விழுங்கியற்று."

திருக்குறள், 931.

7. தலை வலித்து யாத்த,
"நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇ
கொடுவாய் இரும்பின் மடிதலைப் புலம்பப்
பொதி இரை கதுவிய போழ்வாய் வாளை"

பெரும்பாணாற்றுப் படை, 284 – 87.

பொருள் முடிவு :

யான் ஈண்டையேன், என் நலன் நாடனொடு ஆங்கு ஒழிந்தன்று.

Koviloor Digital Library

55. நெய்தல்

மாக் கழி மணிப்பூக் கூம்ப, தூத்திரைப்
பொங்கு பிதிர்த் துவலையொடு மங்குல் தைஇ,
கையறவந்த தைவரல் ஊதையொடு
இன்னா உறையுட்டு ஆகும்
சில்நாட்டு அம்ம – இச்சிறுநல் ஊரே.

'வரைவொடு புகுதானேல் இவள் இறந்துபடும்' எனத் தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது. **நெய்தல்கார்க்கியர்.**

பொருள் :

பெரிய உப்பங்கழிகளில் உள்ள நீலமணி போன்ற நிறத்தையுடைய நெய்தல் மலர்கள் கூம்பவும், தூய அலைகள் உடைந்து சிதறும் நீர்த்திவலைகளோடு மேகங்கள் வீசவும். தலைவனைப் பிரிந்தார்க்குச் செயலறவினைத் தோற்றுவிக்கும் அவர்கள் உடல் முழுவதும் தடவும் வாடைக் காற்றொடு, உள்ளத்திற்கும் இன்னாமையைத் தருகின்ற இச்சிறிய நல்ல ஊரில் உயிரோடு கூடிவாழும் வாழ்க்கை, சிலநாட்களேயாகும்.

விளக்கம் :

தலைமகன் சிறைப்புறத்தானாகக் கேட்கும் அணிமையில் நின்றவழி, அவன் விரைவில் வந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தத் தோழி கூறியதாக இப்பாடல் உள்ளது. தலைவன் வாராவிடில், தலைவி உயிர்வாழாள் என்பது அவற்கு உணர்த்தப்பட்டது. நெய்தல் பூக் கூம்புதலால் மாலைக்காலம் குறிக்கப்பட்டது: இவ்வூர் இன்னாத உறையுளை உடையது என, ஊரின் மேல் வைத்துக் கூறினாலும், தலைவனின்றிச் சின்னாளே இவள் உயிர்வாழ்வள் என்பது உண்ர்த்தப்பட்டது. அச்சிலநாட்களும், தலைவன் வருவான் என்ற நம்பிக்கையால் கழிவன. இன்னாமையும், சிலநாள் வாழ்க்கையும் ஊரின் குறையாகா என்பதைக் குறிப்பிட 'நல் ஊர்' என்றனள். களவில் தலைவனொடு இன்பம் துய்க்க உதவிய சிறிய நன்மை கருதி, இவ்வூர், 'சிறு நல் ஊர்' எனப்பட்டது. "இன்னா உறையுள் சின்னாள் வாழ்க்கைத்தாகும்" என்பது உலகியலாகும். வாடைக் காற்று, அலை நீர்த் திவலைகளோடு, மழைத் திவலைகளையும் வீசிப் பிரிந்தோர்க்கு அல்லல் செய்வது நினைக்கப்பட்டது. நெய்தல் மலர்

Koviloor Digital Library

கூம்புதல், அலைகளை எறிதல், மேகங்கள் வீசி எறிதல் ஆகிய இயற்கையின் செயல்கள் தலைவியின் பிரிவுத் துயரை மிகுவிப்பன.

நெய்தலின் முதல், கரு, உரி என்ற முப்பொருளும் இப்பாட்டில் சிறப்புற அமைந்துள்ளது. இப்பாடல் ஆசிரியர், நெய்தலைச் சிறப்பித்துப் பாடியமையால் நெய்தல் கார்க்கியார் எனப்பட்டார். இவர் கார்க்கிக கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும், இவர் ஓர் அந்தணர் என்றும் ரா. இராகவையங்கார் குறிப்பிடுவர்.

சொற்பொருள் :

மாக்கழி	–	கரிய உப்பங்கழி
மணிப்பூ	–	நீலமணி போன்ற நிறமுடைய நெய்தற்பூ.
மங்குல்	–	மேகம்
உறையுட்டு	–	உறையுளை உடையது
அம்ம	–	இடைச் சொல் – கேட்பித்தல் பொருண்மை "அம்ம கேட்பிக்கும்" தொல்காப்பியம், இடையியல், 28.

மேற்கோள் :

1. "இன்னா உறையுட்டு ஆயினும்
ஒருநாள் உறைந்திசினோர்க்கும், வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி" அகநானூறு, 200.

2. "ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருமின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே" குறுந்தொகை, 197.

3. "ஊதை தூற்றும் கூதிர் யாமம்" குறுந்தொகை, 86.

பொருள் முடிவு :

இச்சிறு நல் ஊர், சின்னாட்டு.

Koviloor Digital Library

56. பாலை

வேட்டச் செந்நாய் கிளைத் தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில்நீர்
வளையுடைக் கையள், எம்மொடு உணீஇயர்,
வருக தில் அம்ம, தானே;
அளியளோ அளியள், என் நெஞ்சு அமர்ந்தோளே.

தலைமகன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்ற வழி, இடைச் சுரத்தின் பொல்லாங்கு கண்டு, கூறியது.

சிறைக்குடி ஆந்தையார்.

பொருள் :

வேட்டை மேற்கொண்டு சென்ற செந்நாய், தன் கால்களால் நிலத்தைத் தோண்டி, உண்டு, எஞ்சியதாகிய, காட்டு மல்லிகையின் சருகுகளால் மூடப்பட்ட, அழுகல் நாற்றத்தையுடைய சிலவாகிய நீரை, வளையணிந்த கையையுடையவளாய், எம்மொடு சேர்ந்து உண்பதற்கு என்னுடன் வருவாளாகுக: அவ்வாறு உடன்வந்தால் என் நெஞ்சத்தில் விரும்பித் தங்கியுள்ள அத்தலைவி, மிகவும் இரங்கத்தக்கவள்.

விளக்கம் :

தலைவன் உடன்போக்கிற்கு இசையாமல், தனியே செல்கின்ற போது, இடைச் சுரத்தில் அவன் கண்ட கொடிய காட்சிகள், அவன் உள்ளத்தைப் பெரிதும் வருத்துவன ஆயின. 'பாலை நிலத்தின் இத்தீமைகளைக் கண்டால், தலைவி பெரிதும் வருந்துவாள் எனத் தலைவன் தோழியிடம் கூறினன். தன்னைப் பிரிவதால், பிரிவுத்துயரத்தைத் தாங்க இயலாதவள் என்றும் உடன் வருவதால் பாலைநிலக் கொடுமைகளைத் தாங்க இயலாதவள் என்றும் கருதித் தலைவன், 'தலைவியின் நிலை மிகவும் இரங்கத்தக்கது', என்றான். தலைவியைப் பிரிந்தாலும், அவள் எஞ்ஞான்றும் தன் நெஞ்சத்தில் விளங்குவதை 'நெஞ்சு அமர்ந்தோள்' என்ற சொல்லால் தோழிக்கு உணர்த்தினான்.

செந்நாய் – நாயின் வகைகளில் ஒன்று. மான், பன்றி, முயல் ஆகியவற்றை வேட்டம் ஆடுவதில் ஆற்றல் உடைமை தோன்ற 'வேட்டச் செந்நாய்' என்று அடையுடன் கூறப்பட்டது. காட்டு மல்லிகையின் சருகுகள் வீழ்ந்து கிடந்தமையால் நாற்றம் தோன்றி நீர், பருகுவதற்குப் பொருந்தாது ஆயிற்று. 'ஒருவர் உண்ட மிச்சில்

Koviloor Digital Library

பருகலாகாது,' அதனினும் நாய் உண்ட மிச்சில் என இழித்துரைக்கப்பட்டது. குறைவாகவும், நாற்றம் உடையதாகவும், செந்நாய் உண்ட மிச்சிலாகவும், நீர் இருத்தல் குறிக்கப்பட்டது. பருகுவதற்குப் பயன்படும் உறுப்பாதலால், தலைவியின் கை ஈண்டு நினைக்கப்பட்டது.

பசி தணிய செந்நாய் உண்ட உணவின் மிச்சிலும், தாகம் தணிய அவை உண்டு எஞ்சிய நீருமே அப்பாலை நிலத்தில் கிடைப்பன எனத் தலைவன் சுட்டினான். பிரிவு என்ற உரிப்பொருட்கு ஏற்ப, பாலையின் தீமைகள் குறிக்கப்பட்டுள்ளன.

மகளிரைச் சிறை காக்கும் குடி, சிறைக்குடி என்றும், இப்பாடல் ஆசிரியர் அவ்வூரினர் என்றும் ரா. இராகவையங்கார் கூறுவர்.

சொற்பொருள் :

வேட்டம்	–	விருப்பம்; வேட்டையாடுதல்
குளவி	–	காட்டு மல்லிகை
சின்னீர்	–	சிறிதளவாகிய நீர்
கிளைத்து	–	கால்களால் தோண்டி
மிச்சில்	–	எச்சம் (எஞ்சிய பொருள்)
தில்	–	இடைச்சொல் – விழைவுப் பொருள்

மேற்கோள் :

1. "ஒட்டியல் பிழையா வயநாய்" அகநானூறு, 182.
2. "களவில் தலைவன் உடன் கொண்டு போகத் துணிந்தது"
   தொல்காப்பியம், அகத்திணை இயல், 44. இளம்பூரணர்.
3. "கற்பில், தலைவன் தோழி கேட்பக் கூறியது"
   தொல்காப்பியம், கற்பியல், 5. நற்றினார்க்கினியர்.
4. "பசி அட முடங்கிய பைங்கண் செந்நாய்
   மாய வேட்டம் போகிய கணவன்" நற்றிணை, 103.
5. "நோய் பசி செந்நாய் உயங்கு மரை தொலைச்சி
   ஆர்ந்தன ஒழித்த மிச்சில், சேய் நாட்டு
   அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சியாகும்" நற்றிணை, 43.

Koviloor Digital Library

6. "உவலைக் கூவல் கீழ, மானுண்டு எஞ்சிய கலுழிநீரே"

ஐங்குறுநூறு, 203.

பொருள் முடிவு :

தான், எம்மொடு உணீஇயர் வருக, தில்,
எம் நெஞ்சு அமர்ந்தோள், அளியள்.

Koviloor Digital Library

57. நெய்தல்

"பூ இடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு,
உடன்உயிர் போகுகதில்ல – கடன் அறிந்து,
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே"

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள், தோழிக்குச் சொல்லியது
சிறைக்குடி ஆந்தையார்.

பொருள் :

தமக்கிடையே பூ ஒன்று இடைப்புகுந்து, ஒன்றை ஒன்று காணமுடியாமல் மறைப்பதாயினும், ஓர்யாண்டு கழிந்தது போல, நீரில் வாழ்கின்ற மகன்றில் பறவைகளின் சேர்க்கை விளங்குவதாகும். ஒருயிர் இரண்டு உடல்களுடன் வாழ்வது போல் நாங்கள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தலைவன் பிரிந்த போது, அவரின் வேறாக, ஓர் உயிர், ஓர் உடலில் வாழ்வது போன்ற இழிவு நேர்ந்து விடும். அவ்விழிவினின்றும் நீங்குவதற்காகப் பிரிதற்கு அருமையுடைய, துய்த்தல் அடங்காத காமத்துடன் கடப்பாடு அறிந்து, காதலர்ப் பிரிந்தவுடன் என் உயிரும் உடன் நீங்குவதாகுக. அதுவே என் விருப்பமாகும்.

விளக்கம் :

காப்புக் கைம்மிக்கவழி, ஆற்றாமையால் வருந்தும் தலைவி, தோழிக்கு உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்தலை விடச் சாதலே தக்கது எனத் தலைவி கருதினாள்.

மகன்றில் பறவை, நீரில் வாழ்வது, ஆணும் பெண்ணுமாய் இணைபிரியாது வாழ்வது. சிறிது பிரிந்தாலும் துயராற்றாது. இது ஓர் மருதநிலப் பறவை. பல பிறவிகளாய்த் தொடர்ந்து வரும் நட்புடைய யாங்கள் நெஞ்சினாலும், உயிராலும் ஒன்று பட்டிருப்பினும், கடமையை ஆற்றுவதற்காக இருவேறு உடம்புகள் உடையேம் எனத் தலைவி குறித்தாள். களவில், தலைவனொடு கூடி இருவரும் ஒருவராய் இருந்தமையையும் நினைத்தனள். 'உடனுறையும் நாளில் உயிர் நீங்கப் பெற்றால் மீண்டும் நட்புடையவராய்ப் பிறப்போம் என ஒருவர் இறக்கும் போது உள்ள நினைப்பே, அடுத்த பிறவியிலும் தொடரும் என்ற

Koviloor Digital Library

வழக்கினை நினைத்தனள். நச்சினார்க்கினியர், இப்பாடலைத், தலைவன் கூற்றாகக் கூறுவர். தலைவி, தலைவனொடு நீர்த்துறையில் களவுக் காலத்துக் கூடி மகிழ்ந்தமை தோன்ற, தான் கண்ட மகன்றிலின் செயலை நினைத்தனள்.

சொற்பொருள் :

இருவேம்	–	எப்பொழுதும் இரட்டையாய்ச் சேர்ந்து விளங்கும் பான்மையேம்
ஒருவேம்	–	தனித்து, ஓருயிராக நிற்கும் யாம்.
காமம்	–	மெய்யுறு புணர்ச்சி
தண்டாக் காமம்	–	அடங்காத காமம்
தில்	–	விழைவு (இடைச்சொல்)
கடமை	–	கற்புக் காலத்து இல்லறக் கடமை
உயல்	–	உய்தல் (தொகுத்தல் விகாரம்)

மேற்கோள் :

1. "தன் நிலை உரைத்தல், பிரிவச்சம்" தலைவன் கூற்று
   தொல்காப்பியம், களவியல், 10. நச்சினார்க்கினியர்.

2. "குறுங்கால் மகன்றில் அன்ன
   உடன் புணர் கொள்கைக் காதலோரே"
   ஐங்குறுநூறு, 381.

3. "மகன்றில் அன்னர்ப் புணர்ச்சி" பரிபாடல், 8 44.

4. "நூல் இடை விலங்கினும், கவவுப் புலந்து உறையும் கழிபெருங்காமம்" அகநானூறு, 361.

5. "நினக்கு யான் உயிர் பகுத்தன்ன மாண்பினேன்"
   நற்றிணை, 128.

6. "துணை பிரி மகன்றில் ஒத்தாள்"
   சீவக சிந்தாமணி, 302.

பொருள் முடிவு :

ஒருவேம் ஆகிய புன்மையினின்று யாம் உய்வதற்கு,
உடன் உயிர் போகுக தில்ல.

Koviloor Digital Library

58. குறிஞ்சி

இடிக்கும் கேளிர்! நும்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல
பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே!

கழற்றெதிர் மறை, வெள்ளி வீதியார்.

பொருள் :

இடித்துரைக்கும் கேண்மையுடையீர், நும்மிடம் யான் குறையிரந்து வேண்டுவது ஒன்று உண்டு. அதனை நும் குறையாக ஏற்று, என் ஆகம் உருகாமல் நிறுத்தலைச் செய்ய, வல்லீராயின், எனக்கு மிகவும் நன்மையுடையது. (வேறு எவையும் நன்மை தருவன ஆகா)

கதிரவன் காய்வதால், வெம்மையுற்ற பாறையின் ஒரு புறத்தே வைக்கப்பட்ட, கை இல்லாது, கண் மட்டும் கொண்டு வாய் பேச முடியாத ஊமை ஒருவனால் காக்கப்படும் வெண்ணெய்த் திரள் போல, இக்காம நோய், உடல் முழுவதும் பரவுதலால், என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

விளக்கம் :

வேனில் வெம்மைய ய், பாறையில் வைக்கப்பட்ட வெண்ணெய் உருகிப் பரவிப் பாழாதல் கண்டு, ஊமன், தன்னுடைய கைக்குறையால் அதனைப் பிறிதோர் இடத்தில் வைக்க நினைத்தாலும், அவனால் இயலாது. வாய் பேசாமையால், அவன் பிறரைத் துணைக்கு அழைத்தலும் இயலாது. தன் கண் எதிரிலேயே, அப்பொருள் பாழ்படுவதைப் பார்த்து வருந்துதல் ஒன்றே அவனால் இயலும். அதுபோலத் தன்னுடைய காம நோயை, அடக்கிக் கொள்ளும் ஆற்றலும், பிறரிடம் வெளியிடும் துணிவும் இல்லை எனத் தலைவன் பாங்கனுக்குக் கூறினான். பாங்கனுடைய கை, தலைவியின் கைபோலத் தனக்கு இன்பம் செய்யாமையின் கையில்லாதவன் என்றும், தன் பொருட்டு தலைவியைப் பெற எவ்வகை உறுதியும் வழங்காமையால் ஊமன் என்றும், தன் துயர் கண்டு நீக்க முயலாமல், பார்த்து மகிழ்வதால், கண்ணிற் காக்கும் என்றும் குறிப்பிட்டான். கை, கால், கண் ஆகிய எல்லா உறுப்புக்களைப் பெற்றிருந்தும், நீ என்னுடைய காமத்தின்

Koviloor Digital Library

மெலிவைப் போக்க உதவவில்லையே என்ற குறிப்பும் புலப்படும். 'நும் குறை, ஆகம் நிறுக்கல் ஆற்றினோ நன்று; மற்று இல்ல' எனப் பிரித்துப் பொருள் கூறுதல் பொருத்தமாக உள்ளது.

சொற்பொருள் :

கேளிர்	–	கேண்மையுடையவர் (விளி)
குறை	–	இன்றியமையாத காரியம்
வெவ் அறை	–	வெம்மையுடைய பாறை
உணங்கல்	–	உலர வைக்கப்படும் பொருள் – வற்றல்
நோய்	–	காம நோய்
நோன்று	–	பொறுத்து

மேற்கோள் :

1. "மெய் பரந்து எவ்வம் கூர்ந்த ஏமுறு துயரம்
வெம்மையில் தான் வருத்துறீஇ" *நற்றிணை, 279.*

2. "பாங்கன், பார்ப்பானாகலின் பன்மை வாசகத்தால் கூறினார்" *இறையனார் களவியல், 3. உரை.*

3. "பார்ப்பான், கேட்போனாகத் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது"
தொல்காப்பியம், செய்யுளியல், 196. பேராசிரியர்.

4. "கழற்று எதிர்மறை"
தொல்காப்பியம், களவியல், 11. நச்சினார்க்கினியர்.

5. "வெண்ணெய்ப் பாவை வெந்துடன் வெயிலுற்றாங்கு"
சீவக சிந்தாமணி, 1532.

6. "மெய் உருகிக் கண் உருகி, நெஞ்சு உருகிக் காமவெயில்
வெண்ணெய்ப் பாவைபோல் மெலிகின்றாரே"
சீவக சிந்தாமணி, 682.

பொருள் முடிவு :

கேளிர் நிறுக்கலாற்றின் நன்று.
இந்நோய் பரந்தன்று. நோன்று கொளற்கு அரிது.

Koviloor Digital Library

59. பாலை

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத்து அகல்வாய்க் குண்டு சுனைக்
குவளையொடு பொதிந்த குளவிநாறு நறுநுதல்
தவ்வென மறப்பரோ – மற்றே; முயலவும்,
சுரம்பல விலங்கிய அரும்பொருள்
நிரம்பா ஆகலின் நீடலோ இன்றே.

பிரிவிடை அழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது

மோசி கீரனார்.

பொருள் :

ஒரு கண் மாக்கிணையை இயக்குகின்ற, தாளத்தையுடைய, பாணர் முதலிய இரவலர்களைப் பாதுகாக்கின்ற அரசனின் அதலை என்னும் குன்றத்தின்கண், அகன்ற வாயினையுடைய ஆழமான சுனைகளில் பூத்த குவளை மலர்களோடு சேர்த்துக்கட்டிய காட்டு மல்லிகையின் மணம் வீசுகின்ற நின்னுடைய நல்ல நெற்றியைத் தலைவர் மறப்பாரோ. பலநாள் வருந்தி முயன்றாலும், பாலை நிலங்கள் பல குறுக்கிட, அவற்றைக்கடந்து தேடும் கிடைத்தற்கரிய பொருள், முற்றவும் கைகூடா. எனவே அப்பொருள்களைப் பெற்றே மீண்டு வருவேன் எனக் கருதித் தலைவன் அந்நாட்டில் நீட்டித்துத் தங்கமாட்டார்.

விளக்கம் :

தலைவன், தலைவிமேல் உள்ள காதல் மிகுதியால், பொருள் வேட்கை கொண்டு தங்குதல் இலர் என்றும், விரைவில் மீளுவர் என்றும் தோழி ஆற்றுவித்தாள். அரலைக் குன்றம் எனப் பாடம் கொண்டு, அம்மலைநாடு நள்ளி என்னும் கடையெழு வள்ளல்களில் ஒருவனுக்கு உரியது என ரா. இராகவையங்கார் கருதுவர்.

நின் நறுநுதலை நீவிப் பிரிந்தவர், அதன் அழகையும், மணத்தையும் எண்ணி விரைந்து வருவார் எனத் தோழி உரைத்தனள். விரும்பிய பொருள் யாவும் பெற்றே மீளுதல் என்பது, யாவர்க்கும் அரிய செயல் ஆதலின், அதனை உணர்ந்த தலைவர் விரைவில் திரும்புவார் என்றனள். தலைவியின் அருமையை உணர்த்த மலையில் விளங்கும் குளவியும், ஆழமான சுனையில் உள்ள குவளையும் கூறப்பட்டன.

Koviloor Digital Library

சொற்பொருள் :

பதலை	–	ஒரு க்ண் மாக்கிணை என்னும் பறை
பாணி	–	தாள ஒழுங்கு
அதலை	–	ஒரு குன்றின் பெயர்
குண்டு	–	ஆழம்
குவளை	–	காட்டுமல்லிகை; மலைப்பச்சை
சுரம்	–	பாலைவழி

மேற்கோள் :

1. "சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது,
ஒழிந்தோர் எல்லாம் உண்ணாதும் செல்லார்"
கலித்தொகை, 10.

2. "நொடிதரு பாணிய பதலை" மலைபடுகடாம், 11.

3. "இல்லோர் ஒக்கல் தலைவன்" புறநானூறு, 95.

4. "குளவி கடிபதும் கமழும் கூந்தல்" நற்றிணை, 346.

5. "கடவுள் கற்சுனை அடை இறந்து அவிழ்ந்து
பறியாக் குவளை மலர்" நற்றிணை, 34.

6. "தீ நீர்ப் பெருங்குண்டு சுனை பூத்த குவளை"
புறநானூறு, 116.

7. "பொருள் வயின் நீடலோ இலர், நின்
இருள் ஐங்கூந்தல் இன்துயில் மறந்தே"
அகநானூறு, 233.

8. "கண்ணும், நுதலும் நீவி முன்நின்று
பிரிதல் வல்லிரோ" நற்றிணை, 71.

பொருள் முடிவு :

குளவியொடு குவளை நாறும் நுதல் மறப்பரோ.
பொருள் நிரம்பா ஆகலின், நீடலோ இன்றே.

Koviloor Digital Library

60. குறிஞ்சி

குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்,
உட்கை சிறுகுடை கோலி, கீழ் இருந்து,
சுட்டுபு நக்கியாங்கு, காதலர்
நல்கார் நயவார் ஆயினும்,
பல்கால் காண்டலும், உள்ளத்துக்கு இனிதே.

பிரிவிடை ஆற்றாமையான் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

பரணர்.

பொருள் :

குறுகிய தாளினையுடைய கூதளங்கொடி, காற்றால் அசைகின்ற நெடிய மலையில் தொடுக்கப்பட்ட பெரிய தேனடையைக் கண்ட, காலின்மையால் எழுந்து நிற்றற்கு இயலாது அமர்ந்திருக்கும் முடவன், தன்னுடைய உள்ளங்கையைச் சிறிய உண்கலத்தைப் போலக் குழித்துக் கொண்டு, அம்மலையின் கீழ் இருந்தபடியே, அத்தேன் கூட்டை மற்றைக் கைவிரலால் சுட்டிக்காட்டி தன் உள்ளங்கையை நாவினால் நக்கி இன்புற்றாரைப்போல, நம் காதலுக்கு உரியவர் அத்தேன் போலத் தன்னைத் தருதலும் செய்யாது, நம்மை விரும்புதலும் செய்யார் ஆயினும், பல காலங்களில் அவரைக் கண்ணால் கண்டிருத்தல் நம் உள்ளத்திற்கு இனிமை தருவதாய் உள்ளது.

விளக்கம் :

முடவன் தேனைக் கையில் ஏந்தியது போலவும், அத்தேனைச் சுவைத்து இன்புறுவது போலவும் நினைத்துக் கொண்டு, வெறுங்கையை நக்கி இன்பமடைகின்றான். இதனால், தலைவனைக் கண்ட அளவிலேயே அவனை மெய்யுறுவதால் பெறப்படும் இன்பம் என் உள்ளத்து உண்டாயிற்று எனவும், அதுவும் தலைவன் பிரிவினால் இல்லையாயிற்று எனவும் குறிக்கப்பட்டது. தலைவன் தன் பரத்தமையால், தலைவிக்கு நல்காமையும், நயவாமையும் உடையன் ஆயினான். உடம்பிற்கு இனியதை உதவிற்றிலர் ஆயினும், அவரைப் பலமுறை பலகாலங்களில் காணுதல் உள்ளத்திற்கு இன்பமாக உள்ளது என்றனள். கண்ட அளவிலேயே தனக்கு உள்ளத்துள் இன்பம் தோன்றுவதாகக் கூறிய தலைவி, தலைவர் விரும்பும் பரத்தையர்க்கு மெய்யுற்றாலும் உள்ளம் இனிப்பதில்லை என்பதனைக் குறிப்பால் புலப்படுத்தினாள். கூதளங் கொடி, காற்றில் நிலையின்றி அசைவதால்,

Koviloor Digital Library

அதனைப் பற்றிக் கொண்டு மலையில் ஏறமுடியாமையும், முடவன் ஆதலின் அதற்குரிய வலியின்மையும் உணர்த்தப்பட்டன. முடவன் சுவைத்துப் பெறும் இன்பத்தைவிட, தலைவி கண்டே பெறும் இன்பம் சிறந்ததாக வேறுபடுத்திச் சுட்டப்பட்டுள்ளது.

சொற்பொருள் :

கூதளி – கூதளங் கொடி (செடி என்றும், மரம் என்றும் கூறப்படும் உ.வே. சாமிநாதையர்) இதன் மலர் பொன்னிறமுடையது. கூதிர்ப்பருவத்தில் அலர்வது. கூதளம் எனவும், கூதாளம் எனவும் வழங்கப்படும். வெண் கூதாளம் என்ற வகையும் உண்டு.

தேன் – தேன் கூடு

கோலி – குழித்து

நயத்தல் – அன்புற்று நோக்குதல்

குடை – பனை ஓலையால் செய்யப்பட்டு, நீர் எடுப்பதற்கும், பருகுவதற்கும், உணவுப் பொருள் வைப்பதற்கும் உரிய கருவி.

மேற்கோள் :

1. "கூதள மூறிலைக் கொடி" அகநானூறு, 255.

2. "வெண் கூதாளத்து அம் தூம்பு புதுமலர்"
குறுந்தொகை, 282.

3 "துனிநீர் கூட்டமொடு துன்னார் ஆயினும்
இனிதே காணுநர் காண்டழி வாழ்தல்"
நற்றிணை, 216.

4. "வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்"
கலித்தொகை, 23.

5. "பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமைவில கண்" திருக்குறள் 1283.

பொருள் முடிவு :

காதலர், நல்கார், நயவார் ஆயினும் முடவன் நக்கியாங்குக் காண்டல் இனிது.

Koviloor Digital Library

61. மருதம்

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையில்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல,
உற்று இன்புறேஎம் ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம், செறிந்தன வளையே.

தோழி, தலைமகன் வாயில்கட்கு உரைத்தது. தும்பிசேர் கீரன்.

பொருள் :

தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டிய சிறிய தேரினை ஏறிச் செலுத்தி இன்பமடையாவிட்டாலும், சிறுவர்கள், அதனைக் கையால் இழுத்து இன்பம் காண்பர். அதுபோல, நல்ல தேரினையும், பொய்கைகளையும் உடைய ஊர்த் தலைவனை மெய்யுற்று இன்பமடையாவிட்டாலும், அவன் நட்பினை மேலும் மேலும் வளர்த்து இன்பமடைந்தோம். அதனால் கைவளையல்கள், கழலாமல் கையில் செறிந்தன.

விளக்கம் :

ஊரனுக்கு அரியளாக இருந்தபோது, பரத்தை போல உற்று இன்புற்றனள். எளியளாக ஆகியவழி, இளையோர் போலக் கேண்மை செய்து இன்புற்றனள். இருவழியும் தலைவி இன்பமே பெற்றதாகத் தோழி உரைத்தனள். உற்று இன்புறுவதால் செறியும் வளையல்கள், கேண்மை செய்தவழியும் செறிவனவாயின. உற்றுப் பெறும் இன்பத்தைக் கேண்மை செய்தே பெற்றனம் எனத் தோழி தலைவியின் ஆற்றாமை மிகுதி தோன்றக் கூறினள். களவுக் காலத்து அரியளாக இருந்த தலைவி கற்புக் காலத்து எளியளாயின நிலையைக் குறிப்பிட்டாள். ஊரன் கேண்மையை யாம் செய்து இன்புற்றனம் எனக் கூறி, நம் கேண்மையை அவன் செய்து இன்புறாமை குறித்தாள். பரத்தையர்க்கு ஊர்ந்து இன்புறும் பெருந்தேர் போன்றவன், எமக்கு ஈர்ந்து இன்புறும் வையம் போலாயினன் என்றாள். யாவரும் தோயும் நீர் நிலை போன்றவன் என அவனுடைய பரத்தமை ஒழுக்கத்தைக் குறிக்கப் 'பொய்கை ஊரன்', என்றனள். தலைவன், பரத்தையுடன் தேரேறிப் புனலாடச் சென்றமை தோன்ற, 'நற்றேர்ப் பொய்கை ஊரன்' என்றாள். பரத்தையர் செய்யும் செயல்கள் தலைவனுக்கு அருமையாகவும், தாங்கள் செய்யும் செயல்கள் எளிமையாகவும் கொள்ளப்படும் நிலையைத் தோழி வாயில்களுக்குச் சுட்டிக் காட்டினள்.

Koviloor Digital Library

பரத்தையர், தலைவனை மெய்யுற்றுப் பெறும் இன்பத்தைத் தலைவி, அவனை நினைத்து, அவன் நட்பினைப் பெருக்குவதால் அடைவதாகத் தோழி குறித்தனள். மெய்யுறு புணர்ச்சியை இடையீடின்றிப் பெறத்தகும் கற்புவாழ்வில் வாழ்ந்த போதும், களவுக் காலத்திற்குரிய உள்ளப் புணர்ச்சியே பெற்றமை குறித்தாள். தலைவன் வாராதிருந்த போதும், வந்தது போன்ற இன்பத்தைப் பெற்றேம் ஆதலின், அவன் வந்து பெறக் கடவது ஒன்றும் இல்லை எனப் புலந்து வாயில்களிடம் கூறினள். தலைவன் நற்றேர் ஊரன் ஆதலின், அவனோடு தொடர்புடைய பொருளே உவமிக்கப்பட்டது. சிறுமாவையம், தலைவனாகவும்; சிறுவர் தலைவியாகவும்; ஈர்ந்து இன்புறுதல் நட்பினைப் பெருக்கும் தலைவியின் எளிய செயல்களாகவும்; ஊர்ந்து இன்புறுதல், பரத்தையரின் மெய்யுற்று இன்பம் நுகர்தலாகவும் அமைய உவமப் பொருள் விரித்துப் பொருளுரைக்கப்படும். ஊரற்கு எண்மை செய்து எனப் பாடம் கொண்டு, உணவிடுதல், வாய் பூச நீர் வழங்குதல் ஆகிய பணிவிடைகளைச் செய்து என ரா. இராகவையங்கார் விளக்கம் தருவர்.

சொற்பொருள் :

சிறுமா வையம் – சிறிய குதிரை பூட்டப் பெற்ற சிறிய தேர்

வையம் – வண்டியும் ஆம்

ஊரன் – மருத நிலத் தலைவன்

கேண்மை – நெஞ்சில் பயின்ற நட்பு

மேற்கோள் :

1. “நச்சச் சிறார் நச்சப் புனைந்த
ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்”
பெரும்பாணாற்றுப்படை, 248 – 9.

2. “பொற்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்
முக்கோல் சிறுதேர்” பட்டினப் பாலை, 24 – 5.

3. “கால்வல் தேர், கையின் இயக்கி, நடை பயிற்றா
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும் என் உயிர்” கலித்தொகை, 81.

4. “ஐதே கம்ம மெய்நோய் நட்பே”
குறுந்தொகை, 401.

Koviloor Digital Library

5. "அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத்து இரக்கத்தானும்"

தொல்காப்பியம், பொருளியல், 9.

பொருள் முடிவு :

உற்று இன்புறேமாயினும், ஊரன் கேண்மை செய்து இன்புற்றனம். அதனால் வளை செறிந்தன.

Koviloor Digital Library

62. குறிஞ்சி

கோடல், எதிர்முகைப் பசுவீ முல்லை,
நாறுஇதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ,
ஐதுதொடை மாண்ட கோதை போல,
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது; முயங்கற்கும் இனிதே.

தலைமகன் இடந்தலைப்பாட்டின் கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது. **சிறைக்குடி ஆந்தையார்.**

பொருள் :

காந்தள் மலரையும், தோற்றிய அரும்புகளிலிருந்து உண்டாகிய செவ்வி மலர்களாகிய முல்லைப்பூக்களையும், மணம் கமழும் இதழ்களையுடைய குவளைமலர்களோடு இடையிடையே பொருந்துமாறு கலந்து, அழகாகத் தொடுத்தலால் மாட்சிமை பெற்ற மாலையைப் போல, நறுநாற்றத்தையுடைய தலைவியின் மேனி, தளிரைக் காட்டிலும் மென்மையும், நிறமும் உடையது. தழுவுதற்கும் இனிமையுடையது.

விளக்கம் :

இயற்கைப் புணர்ச்சியில், தலைவியைப் பெற்று இன்புற்றது போல, இடந்தலைப் பாட்டின் கண்ணும் அவளைப் பெற்று மகிழ விரும்பிய தலைவன், தன் நெஞ்சிற்கு உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. 'நெஞ்சே' என்பது, வருவித்து உரைக்கப்பட்டது. மூக்கிற்கு நறுமையும், கண்ணிற்கும் மனத்திற்கும் நன்மையும் தருதலால் 'நறிய நல்லோள் மேனி' என்றான். தலைவியின் மேனி, காந்தளாகிய கைகளும், முல்லை எதிர் முகையாகிய பற்களும், குவளையாகிய கண்களும் இவற்றை இடையிட்டுத் தொடுத்தாற் போன்ற மாலை போல் விளங்குவதைக் குறித்தான். தலைவியின் உடலில் தோன்றும் இயற்கை மணம் குறிக்கப்பட்டது. ஏனைய உறுப்புகளை விடக் கண்ணின் சிறப்புக் கருதி மூன்றன் உருபு 'ஒடு' என்பது குவளையொடு என உயர்சொல்லின் பின் கூறப்பட்டது. ஏனைய உறுப்புக்கள் போலன்றி, யாண்டும் ஊற்றின்பம் பயத்தலால், அவள் மேனியைத் தளிரை விட இன்பம் தருவதாக உரைத்தான். காண்பதற்கு இனிதாகும் தளிரைப் போலன்றி, வாடாமையும், குழையாமையும் உடைய மேனி சிறந்து விளங்குவதாய்க் கருதினான். தலைவி, இயற்கைப் புணர்ச்சியின் போது தன்னைத்

Koviloor Digital Library

தழுவிய கைகளையும், அதற்கு முன் அவள் கொண்ட முறுவலையும் அதற்கு முன் மதியுடம்பட்ட நோக்கினையும் முறையே நினைந்தவன், கோடல், முல்லை, குவளை என ஆண்டுள்ள மலர்களை உருவகம் செய்து, தலைவியின் உடல் முழுதும் தனக்குத் தந்த இன்பம் நினைத்து தளிரினும் சிறந்ததாக அவள் மேனி விளங்குவதை எண்ணி மகிழ்ந்தான்.

சொற்பொருள் :

கோடல் – காந்தள்

எதிர்முகை – தோன்றும் அரும்பு

ஐது – அழகாக (ஐ–வியப்பு–உரிச்சொல்)

கோதை – மாலை

முறி – தளிர்

வாய்வது – வாய்த்தலை உடையது

முயங்குதல் – தழுவுதல்

பசுவீ – செவ்வி மலர் (பசுமை–நிறமன்று)

மேற்கோள் :

1. "பிரிந்துழிப் பெருகிய சிறப்பின்கண் தலைவன் கூற்று"
தொல்காப்பியம், கற்பியல், 5. இளம்பூரணர்

2. "புணர்ந்துழி மகிழ்ந்தது"
தொல்காப்பியம், அகத்திணையியல்,14. களவியல், 6. நச்சினார்க்கினியர்.

3. "பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே"
ஐங்குறுநூறு, 97.

4. "இனையள் என்று, அவள் புனை அளவு அறியேன்"
குறுந்தொகை, 70.

பொருள் முடிவு :

நல்லோள் நறிய மேனி, முறியினும் வாய்வது, முயங்கற்கும் இனிதே.

Koviloor Digital Library

63. பாலை

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்கு
அம் மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!

பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது

உகாய்க்குடி கிழார்

பொருள் :

அறம் பெற ஈதலும், இன்பம் பெறத் துய்த்தலும், ஆகிய காரியங்கள், அவற்றின் காரணமாகிய பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை. ஆதலின், பொருள் தேடுவதற்குரிய செயல்களை, ஏனைய தொழில்களை விடச் சிறப்புடையதாக நீ மிகவும் நினைத்தனை. அதனைத் தேடுவதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய, நம் காதலியும் உடன் வருவாளோ? அவளின்றித் தனியாக என்னைச் செல்லவிடுவாயோ? நெஞ்சே! யாது நின் கருத்து எனக் கூறுக.

விளக்கம் :

ஈட்டிய பொருளால் பெறக் கடவதாகிய இன்பத்தை எண்ணி, இப்போது, தலைவியோடு பெற்றுவரும் இன்பத்தை இழக்க ஒருப்படேன் எனத் தலைவன், தன் நெஞ்சிற்குக் கூறினான். தலைவி, தன்னுடன் வரவில்லை என்றால், அவளுடைய மாமை நிறம் சிதையும் ஆதலின், தனித்துச் செல்ல உடன்பட்டிலன். இல்லுறை மகளிர், மனை இறந்து, தம் தலைவர் வினைமேற் செல்லும் இடங்களுக்குச் செல்லார் என்பதால் 'அரிவையும் வருமோ', என நெஞ்சினை வினவினான். வறியோர்க்கு ஈந்து, எஞ்சியதை நுகர வேண்டும் என்ற கடப்பாடு பற்றி 'ஈதல்' முற்கூறப்பட்டது. தலைவன், தலைவியை உடன் கொண்டு சேறலும் இன்றிப் பிரிதலும் இன்றி வருந்துவதால், அவன் செலவழுங்கியமை புலப்படும். அச்செலவழுங்குதலும், தலைவியை ஆற்றுவித்துப் பிரிதலைப் பொருளாக உடையதாகும்.

சொற்பொருள் :

ஈதல் – வறியார்க்கு வேண்டுவன கொடுத்தல்

கைம்மிக – செய்வதின் மேலாக

மா – கரிய, மாமைநிறம்

Koviloor Digital Library

அரிவை – பருவம் குறியாது வாளா பெண் என்பதை உணர்த்திற்று

மேற்கோள் :

1. "செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு
உறும் இடத்து உய்க்கும் உதவி ஆண்மையும்,
இல் இருந்து அமைவோர்க்கு இல் என்று எண்ணி"
அகநானூறு, 231.

2. "செலவிடை அழுங்கல் செல்லாமையன்றே,
வண்புறை குறித்த தவிர்ச்சியாகும்"
தொல்காப்பியம், கற்பியல், 44.

3. "இன்மையது இளிவு"
தொல்காப்பியம், அகத்திணையியல், 41. நச்சினார்க்கினியர்.

4. "இசையும், இன்பமும், ஈதலும் மூன்றும்,
அசைவினர் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈன்ம் என"
நற்றிணை, 214.

5. "அரிதாய அறன் எய்தி, அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்,
புரிவுஅமர் காட்சியின் புணர்ச்சியும் தரும்"
கலித்தொகை, 11.

பொருள் முடிவு :

நெஞ்சே! செய்வினை எண்ணுதி அரிவையும் வருமோ? எம்மை உய்த்தியோ? உரைத்திசின்.

Koviloor Digital Library

64. முல்லை

பல் ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தென,
புன்தலை மன்றம் நோக்கி, மாலை
மடக்கண் குழலி அலம் வந்தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் – தோழி! – சேய்நாட்டோரே.

பிரிவிடை ஆற்றாமை கண்டு 'வருவர்' எனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது. **கருவூர்க் கதப்பிள்ளை.**

பொருள் :

தோழி! பலபசுக்கள், நெடிய வழியில் தம்மை நீங்கிச் சென்றன என்று அவையில்லாத பொலிவிழந்த இடத்தையுடைய மன்றத்தினைப் பார்த்து, மாலைப் பொழுதில் மடப்பம் பொருந்திய கண்ணையுடைய இளங்கன்றுகள், வருந்தின. அதுபோன்று தலைவருடைய வருகையை எதிர்நோக்கிய துன்பம் உடையவராக நாம் இருப்பது அறிந்தும், நெடுந்தொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்றுள்ள தலைவர், வாராமையால், தாம் குறித்த பருவத்திலும் சேயராகவே உள்ளார்.

விளக்கம் :

தலைவன் பிரியாது ஊரில் உள்ளபோதும், மாலையில் தம் இல்லம் வாரானாயின், அவனை நோக்கியவாறு காத்திருப்பாள். இவ்வாறு தலைவி வருந்துவதைப் பலமுறை உடனிருந்த காலத்தில் கண்டறிந்த தலைவர், இப்பொழுது இடத்தாலும் காலத்தாலும் சேயராய் உள்ளார். யான் எங்ஙனம் ஆற்றுவேன் எனத் தலைவி கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. பசுக்கள் நிறைந்த 'கருவூருள் ஆன்நிலை' என்ற ஊரைச் சார்ந்தவர் இப்புலவர் ஆதலின், தான் கண்ட காட்சியையே உவமம் ஆக்கி உரைத்தார் என ரா. இராகவையங்கார் கூறுவர். தலைவனும் இக்காட்சியை நாள்தோறும் கண்டவன் என்பது குறிப்புப் பொருளாகும். 'புன்தலை மன்று போல', அவர் இல்லாமையால் வீடு பொலிவிழந்தமையைக் குறித்தாள். கன்றுகள் மன்றினை நோக்கி வருந்துவதுபோல, தலைவியும் அவனில்லாத தன் இல்லத்தின் தனிமையை எண்ணி வருந்தினாள். அன்புக்கு எடுத்துக் காட்டாகத் தாய்ப் பசுவும் கன்றும் பல இலக்கியங்களில் சுட்டப் பெறும். கன்று, தன்னுடைய தாயை எதிர் நோக்கி ஆர்வத்துடன் காத்திருத்தல் போல கன்றின் தாய்ப் பசுவும் அதனைக் காண வேண்டும் என்ற ஆர்வம்

Koviloor Digital Library

உடையதாக விரைந்து கன்றை நோக்கி ஓடிவரும். இவ்வாறே தலைவனும் வினை முடித்த வழி, இடைச்சுர மருங்கில் தவிர்தல் செய்யானாய், தன் காதலியைக் காண வேண்டும் என்ற வேட்கையுடன் திரும்புவான் என்பது குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

மடக்கண்	–	மடப்பத்தையுடைய கண், தாயை நெடுநேரம் பிரிந்து பார்த்தறியாத கண்
குழவி	–	பசுவின் கன்று
அலம் வருதல்	–	வருந்துதல்
சேயர்	–	தொலைவில் உள்ளார்

மேற்கோள் :

1. "தாய் பிரிந்து யாத்த நெஞ்சு அமர் குழவிபோல
நொந்து, நொந்து இன்னா மொழிதும் என்ப"
அகநானூறு, 293.

2. "கடுஞ்சுரை நல் ஆன் நடுங்குதலைக் குழவி
தாய் காண் விருப்பின் அன்ன" குறுந்தொகை, 132.

3. "கறவை கன்று வயின் படர" குறுந்தொகை, 108.

4. "கன்று பயிர் குரல, மன்று நிறை புகுதரும்"
அகநானூறு, 14.

பொருள் முடிவு :

தோழி, சேய் நாட்டார் நோயேம் ஆகுதல் அறிந்தும் சேயர்.

Koviloor Digital Library

65 முல்லை

வன் பரற் தெள் அறல் பருகிய இரலை தன்
இன்புறு துணையொடு மறுவந்து உகள,
தான் வந்தன்றே, தளிதரு தண்கார்-
வாராது உறையுநர் வரல் நசைஇ,
வருந்தி நொந்து உறைய இருந்திரோ எனவே.

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கோவூர் கிழார்.

பொருள் :

தான் இன்புறுதற்குத் துணையாகிய பெண்மானுடன் வலிய பரல் கற்களினிடையே தேங்கியுள்ள தெளிந்த நீரைக் குடித்த ஆண்மான், மீளவும் தம் இடம் வந்து துள்ளி விளையாடும். இத்தகைய கார்காலத்தில், ஈண்டு வாராமல், சென்ற இடத்திலேயே தங்கியுள்ளவர், மீண்டு இங்கு வருதலை விரும்பி, உள்ளம் வருந்தி, உரையால் நொந்து, உடம்பு ஆண்டே தங்க, தலைவியை, உயிர் வைத்திருந்தீரோ எனக் கேட்பது போல், இடித்து, மழையைத் தரும் குளிர்ந்த மேகம் வந்தது.

விளக்கம் :

தலைவன் வருவதாக உரைத்த கார்ப் பருவம் வந்தும், அவன் வாராமையால் தலைவி மிகவும் ஆற்றாளாயினாள். கார் காலம் தன்னை நோக்கி, தலைவன் வாராமையால், 'வருந்தி, நொந்து, இருந்தீரோ' எனக் கேட்பதுபோல் உணர்ந்தனள். 'தெள் அறல் பருகிய இரலை' என்ற தொடர், மழைக்காலம் தொடங்குவதற்கு முன் வருவதாகக் கூறியவர், மழை பெய்து, நீர் நிலைகள் நிரம்பியும் வாராமை குறித்தது. ஒரு விலங்கிடம் உள்ள அன்பு கூட, தலைவனிடம் இல்லை என்பது, அவனுக்கு உணர்த்தப்பட்டது. தலைவரோ ஈண்டு வர முயலாது, ஆண்டு உறைகின்றார். வராத அவருக்காக, நீ வருந்தி, நொந்து, உறைதல் எற்றுக்கு எனக் கார்காலம் கேட்பதாகத் தலைவி கருதினாள்.

சொற்பொருள் :

பரல்	-	பருக்கைக் கற்கள்
இரலை	-	ஆண்மான்
துணை	-	பெண்மான்
உகள	-	விளையாட

Koviloor Digital Library

மறுவந்து – மீண்டும் வந்து

தளி – மழைத் துளி

கார் – மேகம், கார்ப்பருவம்

மேற்கோள் :

1. "குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்"
ஐங்குறுநூறு, 77.

2. "அறு கோட்டு இரலையோடு, மான் பிணை உகளவும்"
பட்டினப்பாலை, 245

3. "பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ, பிரியுமோ அவையே"
கலித்தொகை, 20.

4. "மடப்பிணை தழீஇத் திரிமருப்பு இரலை
புல் அருந்து உகள" *அகநானூறு, 14.*

5. "திரிமருப்பு இரலையொடு மடமான் உகள"
முல்லைப்பாட்டு, 99.

6. "அண்ணல் இரலை, அமர் பிணை தழீஇத்
தண்அறல் பருகித் தாழ்ந்து பட்டனவே"
அகநானூறு, 23.

பொருள் முடிவு :

உறையுநர் வரல் நசைஇ, இருந்திரோ எனக் கார் வந்தன்று.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

66. முல்லை

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை –
கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார்என மதித்தே.

பருவம் கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று' என்று வற்புறீஇயது.

கோவர்த்தனார்.

பொருள் :

பருத்த அடிமரத்துடன் விளங்கும் கொன்றை மரங்கள், உறுதியாக, அறியாமை உடையனவே. பரற்கற்கள் விளங்கும் பாலைநிலத்தில், கடத்தற்கரிய வழியைக் கடந்துசென்ற நம் காதலர், மீண்டு வருவதாகச் சுட்டிக் கூறிய பருவம் வருவதற்குள், பருவம் அல்லாத காலத்தில் பெய்யும் மழையைக் கார்காலத்து மழை எனக் கருதி, அவை, நெருக்கமாக சிறிய கொம்புகளில் கொடிமாலையாகப் பூங்கொத்துக்களை மலர்த்தின.

விளக்கம் :

தலைவன், வருவதாகக் கூறிய கார்ப்பருவம் வருவதற்குள் பூத்தமையால், தலைவர் பொய் வழங்கலர் என்ற நம்பிக்கையோடு, கொன்றையே அறியாமையுடையதாய் மலர்ந்தது என அதனை நோக்கித் தோழி இகழ்ந்து கூறினள். கொன்றைமரம் உடலால் பருமையுடையதாயினும், உள்ளத்தால் மடமையுடையதே என்றனள். நிலைத்த பருவ மழையன்றி, நிலையில்லாது நீங்கும் புது மழையாதலின் 'வம்ப மாரி' என்றனள். பருவத்தைத் தெரிவிக்கும் பொருள்கள் மேல் அறியாமையை ஏற்றிக் கூறும் மரபு உண்டு. கொன்றை மரம், பூக்களைத் தொடுத்தாற்போல, நீண்ட கொத்துக்களுடன், பொன்னிறப் பூக்களோடு கொடிபோலப் பூப்பதாகும். இப்பாடலின் ஆசிரியர், கோவதத்தன் என்று வேறு ஒரு பாடமும் உண்டு.

சொற்பொருள் :

மடவ – அறியாமையுடையன

தடவு – பெரிய – (தட–உரிச்சொல்)

"தடவும், கயவும், நளியும் பெருமை" தொல்காப்பியம், உரியியல், 24.

Koviloor Digital Library

அத்தம் – பாலை வழி

இணர் – பூங்கொத்து

வம்பமாரி – நிலையில்லாத மழை

"வம்பு நிலையின்மை" தொல்காப்பியம், உரியியல், 31.

நெரிதர ,– நெருங்கும் படி

மன்ற – தேற்றம் (இடைச்சொல்)

மன்ற என் கிளவி தேற்றம் செய்யும் (தொல்காப்பியம், இடையியல், 17.)

மேற்கோள் :

1. "தலைவிக்குத் தோழி, பருவம் அன்று என்றது"
தொல்காப்பியம், அகத்திணையியல், 42. இளம்பூரணர்.

2. "பருவம் அன்று எனத் தோழி படைத்து மொழிதல்"
தொல்காப்பியம், கற்பியல், 9. நச்சினார்க்கினியர்.

3. "புழல்கால் கொன்றை, கோடு அணி கொடி இணர்"
நற்றிணை, 266.

4. "கொன்றை கொடி இணர் ஊழ்ப்ப"
பரிபாடல், 8 : 24.

5. "கதுப்பின் தோன்றும் புதுப் பூங்கொன்றை
கானம் கார் எனக் கூறினும்
யானோ தேறேன், அவர் பொய் வழங்கலரே"
குறுந்தொகை, 21.

6. "கார் என்று அயர்ந்த உள்ளமொடு, தேர்வில்
பிடவும், கொன்றையும், கோடலும்,
மடவ ஆகலின் மலர்ந்தன பலவே" நற்றிணை, 99.

பொருள் முடிவு :

பருவம் வாரா அளவை, வம்ப மாரியைக் கார் என மதித்து, இணர் ஊழ்த்த. அதனால் கொன்றை மடவ.

Koviloor Digital Library

67. பாலை

உள்ளார் கொல்லோ – தோழி! – கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள் உகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்
நிலம்கரி கள்ளிஅம் காடு இறந்தோரே?

பிரிவிடை ஆற்றாத தலைமகள் தோழிக்கு உரைத்தது.

அள்ளூர் நன்முல்லையார்.

பொருள் :

தோழி! கிளி தன்னுடைய வளைந்த அலகிடத்தே பற்றிக் கொண்டுள்ள, வேம்பினது ஒள்ளிய பழம், புதிய நூலை நுழைக்கும் பொருட்டு, மகளிர் தங்கள் விரல் நுனிகளில் அழகாக விளங்கும் கூர்மையான நகங்களுக்கிடையே வைக்கப்பட்டுள்ள பொற்காசு போலக் காட்சியளிக்கும். நிலம் கரிந்துள்ள, கள்ளிச் செடிகள் மிகுந்துள்ள இத்தகைய காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர், நம்மை நினையாரோ.

விளக்கம் :

கிளியின் வளைந்த வாய்க்கு, மகளிர் விரல்களின் கூரிய நகங்களும்; வேப்பம் பழத்திற்கு, அவ்விரல்களுக்கு இடையே உள்ள காசும்; பழத்தை உண்பதற்காக வைத்திருத்தல், காசில் நாண் கோப்பதற்காக **வைத்திருத்தலும்** உவமங்களாயின. வண்ணம், வடிவு, செயல், என உவமம் விரித்துப் பொருளுரைக்கப்பட்டது. செம்மை யூட்டப்பட்ட மகளிர் நகம், கிளியின் அலகு போன்றதாக வடிவாலும், நிறத்தாலும் உவமையாயிற்று. 'நுழைப்பான்' என்ற சொல்லை, நுழைப்பதற்காக என எச்சமாக்காது, நுழைப்பவன் எனப் பெயராகக் கொண்டு, பொற் கொல்லன் எனவும், நாண் என்ற சொல்லிற்கு பொற்கம்பி எனவும் உ.வே. சாமிநாதையர் உரை கொண்டார். ஆண்பாலின் நகங்களுக்குக் கிளியின் அலகு உவமிக்கப்படும் மரபு இல்லை என ரா. இராகவையங்கார் கூறுவர். தம் அணிகலத்தின் பழைய நூல் பெருகும் போது, புது நூல் மாற்றுவதற்காக மகளிர் செய்யு ம் செயல் ஈண்டு நினைக்கப்பட்டது.

வேம்பின் ஒண்பூ மலர்ந்து உதிர்வதற்குள், இளவேனில் தொடங்கும் பருவத்தில் வருவதாகத் தெளிவித்துச் சென்றவர் வேம்பின் பழம் தொடங்கிய பின்னரும் வந்திலர் எனத் தலைவி ஆற்றாளாயினாள். தலைவன் சென்ற நாட்டில், இக்காட்சியை அவன்

Koviloor Digital Library

கண்டிருத்தல் கூடும் எனவும் தலைவி நினைந்தனள். கள்ளியம் காடு என்பதால், அக்காட்டில் பயன்தரும் மரம் ஏதும் இல்லாமை குறிக்கப்பட்டது. 'காடு இறந்தோர், உள்ளார்' எனத் துணிந்து, அதற்கு வேம்பின் பழமே சான்றாகும் எனத் தோழி கூறியதாகவும் கொள்ளலாம். இப்பாடலாசிரியர், பாண்டி நாட்டு அள்ளூர் என்னும் ஊரினர் என்பது, "கொற்றச் செழியன் பிண்ட நெல்லின் அள்ளூர்" (அகநானூறு–46) என்ற தொடரால் உணரப்படும்.

சொற்பொருள் :

நாண்	–	நூல்
நுழைப்பான்	–	நுழைப்பதற்காக
வள் உகிர்	–	கூரிய நகம்
பொலம் கலம்	–	பொன்னால் ஆகிய அணி
ஏய்க்கும்	–	உவம உருபு
பொலங்கல ஒரு காசு	–	பொற்காசு (இருபெயரொட்டு)

மேற்கோள் :

1. "நகை முக மகளிர், ஊட்டு உகிர் கடுக்கும்"
அகநானூறு, 317.

2. "கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள் உகிர்"
அகநானூறு, 34.

3. "வேம்பின் ஒண்பூ உறைப்பத்
தேம்படு கிளவியர் தெளிக்கும் பொழுதே"
ஐங்குறுநூறு, 350.

4. "வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ"
குறுந்தொகை, 24.

5. "காசின் அன்ன போது ஈன் கொன்றை"
குறுந்தொகை, 148.

6. "நாண்வழிக் காசு போலவும்"
இறையனார் களவியல், 2. (உரை)

7. "வளை வாய்க் கிள்ளை"
பெரும்பாணாற்றுப்படை, 300.

பொருள் முடிவு :

தோழி, காடு இறந்தோர் உள்ளார் கொல்.

Koviloor Digital Library

68. குறிஞ்சி

பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினம் கவரும்
அரும்பனி அற்சிரம் நீர்க்கும்
மருந்து பிறிது இல்லை அவர் மணந்த மார்பே.

பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது **அள்ளூர் நன்முல்லையார்.**

பொருள் :

குறும்பூழ்ப் பறவையின் கால்போல விளங்கும் செவ்விய வேர்ப்பகுதியை உடைய உழுந்தின், மிகவும் முதிர்ந்த உதிரும் நிலையில் உள்ள காய்களைக் கலையும் பிணையுமாகத் திரியும் மான் கூட்டங்கள் தின்பதற்காகக் கவரும். இத்தகைய பொறுத்தற்கு அரிய பனிக் காலத்தால் உண்டாகும் இக்காம நோயை நீக்கும் மருந்து, என்னைத் தழுவிச் சென்ற அவருடைய மார்பேயாகும். வேறு எதுவும் இல்லை.

விளக்கம் :

நிலத்தின் மேல் சிறிதளவே வெளித்தோன்றும் உழுந்தின் வேர்க்குக் குறும்பூழ்ப் பறவையின் கால் வண்ணத்தாலும், வடிவாலும், அளவாலும் உவமையாயிற்று. குரங்கு, யானை, மான் ஆகிய விலங்குகளும், அன்றில், புறா, மகன்றில் போன்ற பறவைகளும் ஆணும் பெண்ணுமாய் இணைந்து செல்லும் காட்சிகள், காதலர்க்குப் புணர்ந்த வழி இன்பத்தை மிகுவிப்பதற்கும்; பிரிந்த வழி, ஏக்கத்தால் கலங்குவதற்கும் ஏதுவாய் விளங்குவன. இவ்வாறு, காமத்திற்கு ஏதுவாதலை வட நூலார், 'உத்தீபன ஏது', என்பர். தன்னுடைய நோய், தலைவன் மணந்த மார்பு தணந்தமையால் ஏற்பட்டதேயன்றிப் பிறிதொன்றால் அன்று எனத் தலைவி கூறினள். தணந்தமையால் தோன்றிய இந்நோய்க்கு, அவன் மார்பைத் தழுவுதலே, மருந்தாகும் என்றாள். புலத்தில் விதைத்த உழுந்து, பூத்தற்கு முன் வருவதாகக் கூறிச் சென்ற தலைவர், அது முற்றிக் காய்த்து உதிரும் நிலையிலும் வந்திலர் என்பதைக் குறிப்பதாகும். மான்களிடம் காணப்படும் அன்பு கூட அவரிடம் இல்லாமை சுட்டப்பட்டது. இக்காட்சியைக் கண்ட வழி வாராதிருப்பாரல்லர் என்ற ஏக்கமும் புலப்படுத்தப்பட்டுள்ளது. முன்பு ஒருகால், அர்ச்சிரக் காலத்துப் பனியின் வருத்தம் ஏதும் இன்றி, அவருடன் கூடி மகிழ்ந்து இன்பம் துய்த்த நிலை நினைக்கப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அற்சிரம்	–	அர்ச்சிரம் – பனி – (ஆகுபெயர்)
அவர்	–	தலைவர் (நெஞ்சறி சுட்டு)
அரும்பனி	–	தீ மூட்டித் தணித்தற்கு அரிய பனி
உழை	–	கலையும் பிணவும்
பூழ்	–	குறும்பூழ்ப் பறவை, காடை

மேற்கோள் :

1. "இரும் பனிப் பருவத்த
மயிர்க்கால் உழுந்தின் அகல் இலை" நற்றிணை, 89.
2. "பற்று விடு விரலின், பயறு காய் ஊழ்ப்ப
அற்சிரம் நின்றன்றால் பொழுதே" அகநானூறு, 339.
3. "கடும்பனி அளைஇய அற்சிரக் காலை"
ஐங்குறுநூறு, 470.
4. "காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்
தண்பனி வடந்தை அற்சிரம்" ஐங்குறுநூறு, 223.
5. "ஊரன் மார்பே, பனித்துயில் செய்யும் இன்சாயற்கே"
ஐங்குறுநூறு, 14.
6. "மகிழ்நன் மார்பே வெய்யையால்"
குறுந்தொகை, 73.
7. "தன் நோய்க்குத் தானே மருந்து" திருக்குறள், 1102.

பொருள் முடிவு :

அற்சிரம் தீர்க்கும் மருந்து,
அவர் மணந்த மார்பே. பிறிதில்லை.

Koviloor Digital Library

69. குறிஞ்சி

கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றென,
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல்நாட! நடு நாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!

தோழி இரவுக் குறி மறுத்தது. **கடுந்தோட் கரவீரன்.**

பொருள் :

இருளில் தாவுதலையுடைய ஆண் குரங்கு, சாவினை அடைந்ததாக, கணவன் இல்லாமல் வருந்தும் கைம்மை வாழ்வினைப் பொறாத, தன் கணவனால் விரும்பப்பட்ட பெண் குரங்கு, தன் தொழிலை இனிக் கற்க வேண்டாத தன்னுடைய வலிய குட்டியைச் சுற்றத்தாரிடம் அடைக்கலப்படுத்தி, ஓங்கிய வரைகளையுடைய மலைப்பக்கத்தில் உச்சியினின்று கீழே வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்ளும். இத்தகைய மலைச் சாரலையுடைய நாட்டின் தலைவனே! நள்ளிரவில் என்னைக் காண்பதற்காக வருதலைத் தவிர்ப்பாயாக. அங்ஙனம் நீ வரின், நினக்குத் தீங்கு உண்டாகும் என எண்ணி வருந்துவோம். நீ, தீங்கின்றி வாழ்வாயாக.

விளக்கம் :

இருண்ட இடங்களில் தாவுதல் வல்ல குரங்கும், தப்பி வீழ்ந்து இறந்துபடும் நள்ளிரவுப் பொழுது எனத் தலைவன் வரும் பொழுதின் தீமை குறித்தாள். தலைவன் நாட்டுச் சாரலில் விலங்குகள் கூட, கைம்மையை ஏற்க உடன்படாமல், தம் உயிர் துறப்பதைக் கூறி, தலைவியின் ஆற்றாமை மிகுதியை உணர்த்தினாள். இரவுக் குறியில் தலைவன் இடையூறுகளைக் கருதிலன் ஆயினும், அவ்விடையூறுகளைத் தாங்கள் எண்ணி வருந்துவதாகக் கூறினள். 'வன் பறழ்', ஆதலின் அதற்கு அதன் தொழில்களைக் கற்பிக்க வேண்டாமை புலப்படும். இதனால், தாய் மந்தி ஆற்ற வேண்டிய கடமையும் இல்லாமை அறியப்படும். மந்தி, மரமேறுதல் முதலிய தொழில்களைத் தன்னுடைய பறழ் கற்கவில்லை என்பதையும் ஓராமல் உயிர் துறந்தது என உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவர். பெண் விலங்குகளும், தம் துணைக்குத் துன்பம் நேர்ந்தால் ஆற்றாது உயிர் துறப்பதை, நீ நின் நாட்டில் கண்டிருப்பாய் எனத் தோழி உணர்த்தியதாகவும் கொள்ளலாம். நீ வரையாது, வருதற்கு வருந்துவம் என்றும், இரவின் ஏதங்களை

Koviloor Digital Library

நினைத்து வருந்துவம் என்றும்; அம்மந்திபோல் இன்னும் உயிர் நீக்கப் பெறாமைக்கு வருந்துவம் என்றும்; நீ வருந்துவாய் என்று வருந்துவம் என்றும் தோழியின் உணர்வுகள் எல்லாம் விளக்குவதாக "வருந்துதும் யாமே" என்ற தொடர் அமைந்துள்ளது. கடுந்தோள் காவீரனார் எனப்பாடம் கொண்டு, காவைச் சுமத்தற்கு ஏற்ற தோள் வலிமையுடையவர் என இப்பாடலின் ஆசிரியர் பெயர் விளக்கப் பெறும். மந்தியின் கற்பு, அன்பு, கடமை ஆகிய உணர்வுகள் குறிப்புப் பொருள் பயப்பன.

சொற்பொருள் :

கருங்கண்	–	இருளால் கரிய இடம்; கரிய கண்ணும் ஆம்
தாக்கலை	–	தாவுதலையுடைய குரங்கு
பெரும் பிறிது	–	சாவு
காமர்	–	விருப்பம்
பறழ்	–	குட்டி
கல்லா வன் பறழ்	–	தன் தொழிலையன்றிப் பிற தொழிலைக் கல்லாத வலியகுட்டி
கிளை	–	சுற்றம்
செகுக்கும்	–	போக்கும்
நடுநாள்	–	நாளின் நடுப்பகுதி

மேற்கோள் :

1. "காப்பு வரையிறந்தது"
தொல்காப்பியம், களவியல், 24. இளம்பூரணர்.
2. "பெரும் பிறிது ஆகல் அதனினும் அஞ்சுதும்"
ஐங்குறுநூறு, 302.
3. "கருவிரல் மந்திக் கல்லா வன் பறழ்"
ஐங்குறுநூறு, 272.
4. "நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்"
புறநானூறு, 189.
5. "நடு நாள் வருதி, நோகோ யானே" நற்றிணை, 257.

பொருள் முடிவு :

நாட, நடுநாள் வாரல், யாம் வருந்துதும். வாழி.

Koviloor Digital Library

70. குறிஞ்சி

ஒடுங்கு ஈர் ஓதி, ஒண்நுதற் குறுமகள்
நறுந்தண் நீரள்; ஆர் அணங்கினளே;
இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்;
சில மெல்லியவே கிளவி;
அனை மெல்லியள் யான் முயங்குங் காலே.

புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ஓரம் போகியார்.

பொருள் :

தலையின் வலப்புறத்தும், இடப் புறத்தும் ஒடுங்கியும், நடுவில் நேராகவும் வகிர்ந்த கூந்தலையும், ஒளியுடைய நெற்றியினையும், உடைய இளையளாகிய தலைவி, நறுமையும் தண்மையும் தனக்குரிய இயல்பாகக் கொண்டவள். ஆயினும், பிரிந்த காலத்தில் எனக்குப் பொறுத்தற்கு அரிய வருத்தத்தைத்தருபவளாக உள்ளாள். அவளுடைய சொற்கள், சிலவாகவும், மென்மையுடையனவாகவும் உள்ளன. அவள், யான் தழுவும் போது, அத்தகைய மென்மையுடையவளாக விளங்குகின்றாள். அவளை, இத்தகையவள் என்று புனைந்துரைக்கும் எல்லை அறியேன்.

விளக்கம் :

தலைவியைத் தழுவும் போது, கூந்தலாலும், நுதலாலும், மெய்யெங்கும் பரவியுள்ள இளமையாலும் கண்ணிற்கும்; நறுமையால் மூக்கிற்கும்; தண்ணிய நீரின் தன்மையால் வாய்க்கும்; மெல்லிய சில சொற்கள் உரைத்தலால் செவிக்கும், மெல்லிய இயல்பினால் உடம்பிற்கும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல இன்பங்களையும் ஒருங்கே தந்தனள். அவளைத் தழுவாத போது பொறுத்தற்கரிய வருத்தத்தைத் தருபவளாக உள்ளாள். அதனால், அவளை இத்தகையவள் என்று முழுமையாக அளந்து கூறுதல் இயலாதாயிற்று. தலைவியைப் புனையப் புனைய, மேலும் புனைய வேண்டும் என்ற வேட்கை தோன்றுமேயன்றி, அவள் எழில் நலம் புனைந்துரையின் எல்லையில் அடங்காததாக விளங்குவதாகும். தலைவி, முயங்குங்கால் அணை மெல்லியளாகவும், முயங்காக்கால் ஆரணங்கினளாகவும் உள்ளாள் என அவளைப் பிரிந்து தான் உற்ற துன்பத்தைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அணை போல

Koviloor Digital Library

மெல்லியள் எனவும், மெய்க்கு இன்பம் செய்பவள் எனவும் பொருள்படும் 'அணை மெல்லியள்' என்ற பாடமே ஏற்புடையதாகும்.

சொற்பொருள் :

ஓதி	–	ஐவகைக் கூந்தல் பாகுபாட்டில் ஒன்றாகிய சுருள்
ஈர் ஓதி	–	சீமந்த ரேகை பட நடுவில் பிரித்து விடப்பட்ட கூந்தல்
குறுமகள்	–	ஆண்டில் குறிய மகள், இளையள்
நீரள்	–	நீர்மையுடையள்
கிளவி	–	சொல்
ஆரணங்கு	–	அவளன்றி வேறெதனாலும் நீங்கற்கு அரிய வருத்தம்

மேற்கோள் :

1. "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண் தொடி கண்ணே உள"

திருக்குறள், 1101.

2. "தலைவன் புணர்ச்சியால் மகிழ்ந்தது"

தொல்காப்பியம், களவியல், 11. இளம்பூரணர்.

3. "இடந்தலைப் பாட்டில் தலைவன் புணர்ச்சியால் மகிழ்ந்தது"

தொல்காப்பியம், களவியல், 11. நச்சினார்க்கினியர்.

4. "நறிய நல்லோள் மேனி" குறுந்தொகை, 62.

5. "ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே"

குறுந்தொகை, 84.

6. "அணை மருள் இன்துயில், அம்பணைத் தடமென்தோள்" கலித்தொகை, 14.

பொருள் முடிவு :

குறுமகள், நறுந்தண் நீரள், அணங்கினள்,
புனை அளவு அறியேன், சில மெல்லிய கிளவி,
அணையுங்கால் அனை மெல்லியள்.

Koviloor Digital Library

71. பாலை

மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே –
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை,
பெருந்தோள், நுணுகிய நுசுப்பின்,
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது. கருவூர் ஓதஞானி.

பொருள் :

மார்பில் தோன்றிய சுணங்கினையும், அழகிய பருத்த இளமையுடைய முலையினையும், பெரிய தோளினையும் நுண்ணிய இடையையும் உடைய, கற்கள் பொருந்திய கானவர் நல்கிய மகள், பிரிந்து போய்த் தேடிய பொருளால் அறம் செய்து, அவ்வுலகில் துய்ப்பது மருந்து என்றால் இவளே அம் மருந்து ஆவாள். அப்பொருளினால் இவ்வுலகில் துய்ப்பது செல்வம் என்றால், இவளே அச்செல்வம் ஆவாள்.

விளக்கம் :

தலைவியே பொருளாகவும், பொருளால் துய்க்கப் பெறும் இன்பமாகவும் விளங்குகிறாள் எனப் பொருள் தேட விழைந்த தன் நெஞ்சிற்குக் கூறி, இத்தகையாளைப் பிரியாமையே பொருள் எனக் கருதிச் செலவு தவிர்த்தனன். பொருளால் அறனும், பொருளும் இன்பமும் எய்தலாகும் என்று தன்னைப் பொருள் வேட்கையில் உய்த்த நெஞ்சிற்கு, அறப்பயனும், பொருட்பேறும், இன்பப் பயனும் தனக்குக் கானவர் நல்கிய மகளே என உரைத்தனன்.

பிணி நீங்க மருந்தாகவும், வறுமை நீங்கச் செல்வமாகவும், சுணங்கு, முலை, தோள், நுசுப்பு ஆகியவற்றால் இன்பப் பொருளாகவும் அவள் விளங்குவது சிறப்பிக்கப்பட்டது. கொழுநன் பிணிக்கு மருந்தாகத் தம் உடம்பை அறுத்துத் தர முயலும் குலமகளும், அவன் தளர்கின்றபோது, கூலிக்கு உழைத்து அவனைக் காப்பாற்றும் கற்புடையாட்டியும் தானேயாய் வாழும் பெண்ணை இன்றும் உலகியலில் காணலாம். மருந்து, வைப்பு, இன்பம் என மூன்றாகவும் முலை, தோள், நுசுப்பு என்ற மூன்றும் விளங்குவன. இவற்றை விடுத்துப் புறம் போந்து பொருள் தேடுவது எற்றுக்கு எனத் தலைவன் செலவழுங்கினான். சுணங்கின் அரும்பிய நிலை, நுசுப்பின் நுணுக்கம், தோளின் பருமை ஆகியவற்றைக் கூறுவதன் மூலம், அவற்றால் தான் பெற்ற இன்பத்தை

Koviloor Digital Library

நினைத்தனன். தோள் பெருத்தலும், இடை சிறுத்தலும் உத்தம மகளிர்க்கு அழகாகும். தலைவன் செலவழுங்கிய போதும், தலைவியை ஆற்றுவித்துப் பிரிவான் என்பதே பொருளாகும். 'எமக்கு' என்ற சொல் முன்னும் பின்னும் வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது.

சொற்பொருள் :

மருந்து	–	உண்டார்க்கு நீண்ட ஆயுளை நல்க வல்ல அமுதம்
வைப்பு	–	செல்வம், சேமநிதி
பகடு	–	பெருமை
சுணங்கு	–	தலைவியின் மார்பில் புள்ளிகளாய்த் தோன்றும் பொன்னிற அழகு
அரும்புதல்	–	பொன் போல் அரும்புதல்
கல்	–	மலை

மேற்கோள் :

1. "பொன் பொதிந்தன்ன சுணங்கின்" நற்றிணை, 26.
2. "தலைவன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது" இறையனார் களவியல், 51.
3. "சிறு குடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்" குறுந்தொகை, 95.
4. "பெருந்தோள், நுணுகிய நுசுப்பின், திருந்திழை அரிவை" அகநானூறு, 374.
5. "தோள்.......எனப் பெருகி,
நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுகி" கலித்தொகை, 108.

பொருள் முடிவு :

மகள், மருந்து எனின் மருந்து; வைப்பு எனின் வைப்பு.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

72. குறிஞ்சி

பூ ஒத்து அலமரும் தகைய; ஏ ஒத்து
எல்லாரும் அறிய நோய் செய்தனவே –
தேமொழித் திரண்ட மென்தோள், மாமலைப்
பரீஇ வித்திய ஏனல்
குரீஇ ஓப்புவாள், பெருமழைக் கண்ணே!

தலைமகன் தன்வேறுபாடு கண்டு வினாவிய பாங்கற்கு உரைத்தது.

மள்ளனார்.

பொருள் :

இனிய மொழியினையும், பருத்த மெல்லிய தோள்களையும் உடைய. பெரிய மலைப்பகுதியில் ஏற்ற செவ்வியறிந்து, விதைத்த தினையில் படியும் குருவிகளை ஓட்டுகின்றவளுடைய, மேகம் போன்ற குளிர்ச்சியைத் தரும் பெரிய கண்கள், தன்னை யான் காணும் போது, வனப்பினால் தாமரைப் பூவைப் போலவும், தான் என்னைக் காணும் போது கொல்லும் அம்பினைப் போலவும் உற்றாரேயன்றிப் பகைவரும் மற்றை அயலாரும் அறியும் வண்ணம், யான் சுழன்று தடுமாறுவதற்கு ஏதுவான பெரிய காமநோயைச் செய்தன.

விளக்கம் :

இயற்கைப் புணர்ச்சியின் பின்னர், தலைமகன் வேறுபாடு கண்டு, பாங்கன் ஐயுற்று, இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது என வினாவிய வழி, தலைவன் உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. தலைவியின் கண்களால் கட்டுண்ட தலைவனின் தடுமாற்றம் யாவராலும் அறியப்படுவதாயிற்று என்பதை, 'அலமருதற்குக் காரணமாகிய நோய் செய்தது' என்றான். அலமருதலைத் தலைவியின் கண்ணிற்கு ஏற்றி உரைப்பாரும் உளர். பூ ஒத்து, ஏ ஒத்து, அலமரும் தகைய நோய், செய்தன எனக் கொண்டு கூட்டி ரா. இராகவையங்கார் விளக்கம் தருவர். தலைவியின் கண்கள், இன்பத்தையும், துன்பத்தையும் ஒருங்கே தருவதை இத்தொடர் புலப்படுத்தும். மலர் போன்ற கண்கள், அம்புகள் போல் நோய் செய்தல் கொடுமையுடைத்து என்றான். தேமொழி, மென்தோள் என இயற்கைப் புணர்ச்சிக்கண் தான் பெற்ற இன்பத்தை நினைத்தனன். தலைவி வாயால் பாடியும், தோள்களால் வீசியும் குருவி ஓப்பிய காட்சியைக் கூறி, அவள் உள்ள இடத்தைப் பாங்கனுக்கு உரைத்தான். கண் பெரிதாக விளங்குதல், மகளிர்க்கு இலக்கணமாகக் கூறப்படும். தலைவியால் தான் பெற்ற கட்புல இன்பமும், செவிப்புல

Koviloor Digital Library

இன்பமும், ஊற்றின்பமும் நினைந்து, அவற்றை மீண்டும் பெற விரும்பிப் பாங்கனிடம் குறை இரந்து வேண்டினான். கண்கள் மட்டுமன்றித் தேமொழியும், மென்தோளும் துன்பத்திற்குக் காரணமாயின என உடம்படு புணர்த்திக் கூறினான்.

சொற்பொருள் :

பூ	–	தாமரைப் பூ
நோய்	–	காம நோய்
அலமருதல்	–	சுழன்று தடுமாறுதல்
ஏ	–	அம்பு
எல்லாரும்	–	பாங்கனைக் குறித்தது
பரீஇ	–	ஏற்ற செவ்வி அறிந்து
குரீஇ	–	குருவி (இயற்கை அளபெடை)
ஏனல்	–	தினை

மேற்கோள் :

1. "உளைக் குரல் சிறுதினை கவர்தலின், கிளை அமல்
பெருவரை அடுக்கத்துக் குரீஇ ஓப்பி"
அகநானூறு, 388

2. "தேம்பாய அவிழ்நீலத்து அலர்வென்ற அமர்உண்கண்
நிறம் பாய்ந்த .... கணையினும் நோய் செய்தல்
கடப்பன்றோ"
கலித்தொகை, 57.

3. "அலமரல் உண்கண்ணார்" கலித்தொகை, 73.

4. "கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே"
குறுந்தொகை, 129.

5. "சேந்தொத்து அலர்ந்த செந்தாமரையன்ன வாட்கண்"
சீவகசிந்தாமணி, 8.

பொருள் முடிவு :

குரீஇ ஓப்புவாள் கண், நோய் செய்தன.

Koviloor Digital Library

73. குறிஞ்சி

மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ;
அழியல் வாழி - தோழி! - நன்னன்
நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல.
வன்கட் சூழ்ச்சியும் .வேண்டுமால் சிறிதே.

பகற்குறி மறுத்து, இரவுக்குறி நேர்ந்து, அதுவும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது. பரணர்.

பொருள் :

தோழி! நீ வாழ்வாயாக. நமக்கு மகிழ்ச்சியைத் தரும் தலைவனுடைய மார்பினை, நீ எப்பொழுதும் அணைத்துக் கொள்ளும் விருப்பம் உடையவளாக உள்ளாய். நன்னனது காவல் மரமாகிய நறிய மாமரத்தை வெட்டி, அவனையும் போரில் கொன்ற, வஞ்சினத்தையுடைய கோசர் செய்த சூழ்ச்சியைப் போலத் துணிவுடன் செய்யப்படும் ஆராய்ச்சியும் சிறிதளவு வேண்டற்பாலதேயாகும். அதனால், தலைவனைப் பகலிலும், இரவிலும் வராமல் மறுத்ததற்கு நீ மனம் வருந்தற்க.

விளக்கம் :

களவொழுக்கத்தில் நின்ற தலைவி, பகலினும் இரவினும் தலைவன் மார்பினை அணைத்து மகிழும் இன்பத்தை விரும்பினாள். தலைவனை வரைந்து எய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகத் தோழி, அவனை வரைவு கடாவினாள். ஊரும், தன் ஐயரும் இக்களவொழுக்கத்தை அறிந்தனர் எனக் காட்டி பகற் குறியும்; தாயும், தமரும் அறிதல் காட்டி இரவுக் குறியும் மறுத்தனள். தான் மறுத்தது வரைதல் நோக்கத்தது ஆதலின், தலைவியை வாழ்த்தி, வருந்தற்க என ஆறுதல் கூறினள். தோழியின் கூற்று, அவ்விருவரிடம் அன்பு இல்லாதது போல் தோன்றினாலும், பிறிதொன்று குறித்தது என்பது, அவள் கூறிய கோசர் வரலாற்றினால் அறியப்படும். அச்சூழ்ச்சியும் சிறிய கால அளவே நிற்பது எனத் தலைவியை அதுவரை ஆற்றியிருக்குமாறு வேண்டினாள். கோசரின் சூழ்ச்சி, நாடறிந்த ஒன்றாதலின், தோழி அதனையே தன் செயலுக்கு உவமமாக்கிக் கூறினள்.

உண்டார்க்கு நீண்ட ஆயுளைத் தருவது என, நன்னன் என்ற குறுநில மன்னன், தன் நாட்டின் காவல் மரமாக ஒரு மாமரத்தை வளர்த்து

Koviloor Digital Library

வந்தான். காற்று வீசி, அம்மரத்திலிருந்து காய் ஒன்று, அருகில் ஓடிய ஆற்றில் வீழ்ந்தது. புனலாடுவதற்கு ஆற்றிற்குச் சென்ற கோசர் குலப்பெண் ஒருத்தி, அறியாமல் நீரில் அடித்து வரப்பட்ட அக்காயை உண்டனள். அப்பெண் செய்த தவற்றிற்காக நன்னன், 'ஒன்பதிற்று ஒன்பது' களிறுகளோடு, அவள் நிறை பொன்னால் செய்யப்பட்ட பாவையைக் கோசர் தந்தும் **பெறாமல்,** அவளைக் கொன்றனன். இக்கொடுமையைப் பொறாத கோசர், தம் மகளின் இறப்பிற்குக் காரணமாகிய மாமரத்தை அழித்து, நன்னனையும் பழிவாங்க எண்ணினர். பாடல் மகளிர்க்குப் பெண் யானைகளைப் பரிசாக வழங்கும் அகுதை தந்தையிடம், அகவல் மகளிரைப் பரிசு பெறக் கோசர்கள் அனுப்பினர். அவர்கள் பரிசு பெற்றுத் திரும்புங்கால், அவ்யானைகளை நன்னனுடைய காவல் மரத்தில் பிணிக்குமாறு வேண்டினர். நன்னன் ஊரில் இல்லாத நாளில், அவ்யானைகள், மரத்தை வேரொடு சாய்த்து அழித்தன. நன்னனும் ஊர் திரும்பி இதனை அறிந்து போர்புரிந்தான். அப்போரில் கோசர்களால் நன்னனும் கொல்லப்பட்டான். இதுவே கோசர் செய்த 'வன்கண் சூழ்ச்சி' யாகும்.

'நாட்டினுள் போக்கிய' எனப் பாடம் கொண்டு நன்னன் நாட்டில், கோசர் புகுந்த சூழ்ச்சி எனப் பொருள் கூறுவதும் உண்டு. 'தன் காவல் மரத்தின் ஒரு காயைத் தின்றமைக்காக, ஒரு பெண்ணையே கொன்ற நன்னன், அக்காவல் மரத்தை முழுவதும் தொலைத்த அகவல் மகளிரை யாது செய்வான், காணலாம்" என்பதே கோசரின் சூழ்ச்சியாகும்.

சொற்பொருள் :

ஒன்று மொழி – வஞ்சினம்

'இன்னது பிழைப்பின் இது ஆகியர்' என உரைக்கப்படும் மொழி; இரண்டு உரையாமல் ஒன்றையே மொழிதல்; ஒன்றையே கூறும் வாய்மை எனினும் அமையும்.

நன்னன் – கொண்கானம் கிழான் நன்னன்

மா – நன்னனுடைய காவல் மரம்

வெய்யை – விரும்புகின்றாய்
"வெம்மை, வேண்டல்"
தொல்காப்பியம், உரியியல், 36.

வன்கண் – அருளின்மை

சூழ்ச்சி – ஆராய்ச்சி

Koviloor Digital Library

"சூழ்தலும், உசாத்துணை நிலைமையில் பொலிமே"

தொல்காப்பியம், களவியல், 36.

மேற்கோள் :

1. "தோழி வன்புறை"

தொல்காப்பியம், களவியல், 24. இளம்பூரணர்.

2. "அரும்பனி அர்ச்சிரம் தீர்க்கும்
மருந்து பிறிது இல்லை, அவர் மணந்த மார்பே"

குறுந்தொகை, 68.

3. "ஆர்கலி வெற்பன் மார்பு நயந்து உறையும் யானே"

நற்றிணை, 104.

4. "நின் மலர்ந்த மார்பு, இவள் வயாஅ நோய்க்கே"

ஐங்குறுநூறு, 205.

5. "மலர்ந்த மார்பில் பாயல் துஞ்சிய வெய்யன்"

ஐங்குறுநூறு, 51.

6. "பெண் கொலை புரிந்த நன்னன்"

குறுந்தொகை, 292.

7. "இன் கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோல் அகவல் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மான
பிறிது ஒன்று குறித்தது, அவன் நெடும்புற நிலையே"

குறுந்தொகை, 298.

8. "வாய் மொழி நிலைஇய சேண்விளங்கு நல் இசை
வளம் கெழு கோசர்" அகநானூறு, 205.

பொருள் முடிவு :

தோழி! நீ மகிழ்நன் மார்பே வெய்யை.
சிறிது சூழ்ச்சியும் வேண்டும். அழியல்.

Koviloor Digital Library

74. குறிஞ்சி

விட்ட குதிரை விசைப்பின் அன்ன,
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாம் தற்படர்ந்தமை அறியான், தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்ப - நம்மாண் நலம் நயந்தே.

தோழி தலைமகன் தறை மறாதவாற்றால் கூறியது.

விட்ட குதிரையார்.

பொருள் :

நெடுநாள் பிணித்த கட்டு அவிழ்த்து விடப்பட்ட குதிரை, துள்ளியெழும் எழுச்சியைப் போல, வளைத்துப் பின் விட்டமையால் மேலெழுந்து மேகத்தைத் தீண்டும் பசிய மூங்கிலையுடைய மலைநாட்டிற்குத் தலைவன், யாம் தன்னை நினைத்து மெலிதலை அறியாதவனாகி, தானும் வேனிற்காலத்தில், பசுவினால் விரும்பப்பட்ட ஏறுபோல, நமது மாட்சிமையுடைய அழகினை விரும்பி மெலிந்தனன்.

விளக்கம் :

தலைவனுடைய குறையை மறுக்காமல், தலைவி ஏற்றுக் கொள்ளும் வகையில் தோழி உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. மூங்கில் வளர்ந்த இடம் மலைப் பகுதியாதலின், 'விசும்பு' மேகத்தை உணர்த்திற்று. இரவில் வளைந்து தானே எட்டப்படுவதாகவும், பகலில் வளைத்தாலும் நிமிர்ந்து மேற் செல்வதாகவும் உள்ள மூங்கிலைக் கூறியது, இரவுக் குறியில் கிடைத்த தலைவன், பகற்குறியில் கிடைத்தற்கு அரியனாகிய குறிப்பினை உணர்த்துவதாகும். வேனிற் காலத்தில், பசு, விடையை நினைத்து மெலிதலும், பசுவை நினைத்து விடை மெலிதலும், உலகியலாகும். இவ்வுவமை, களவுக் காலத்தில் காப்புக் கைம்மிகுதியால் தலைவனைப் பெறமுடியாது வருந்தும் தலைவிக்கும், தலைவியை அடையப் பெறாது வருந்தும் தலைவனுக்கும் ஏற்ப அமைந்துள்ளது. வேனில் வெம்மையால் துன்புறும் ஆனேறு, காம நோயால் துன்புறும் தலைவனைக் குறித்தது. 'விட்ட' என்ற உவமை அடை, பொருட்கும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. இயல்பாகவே நிமிர்ந்து நிற்கும் மூங்கில் போன்ற தலைமைப் பண்புடைய தலைவன், நம் பொருட்டு எளியனாய், நலம் நயந்து வந்தனன் என்றாள்.

மூங்கில் விசைத்து எழுதலுக்கு குதிரையின் துள்ளிச் செல்லும்

Koviloor Digital Library

செலவினைக் கூறியமையால், இவ்வாசிரியர் 'விட்ட குதிரையார்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். அன்றியும் கயிற்றின் | நீளம் கொண்டு, துள்ள விடாமல், கைவிடாத குதிரையை விட்ட குதிரை என்றமையால், இப்பாடலாசிரியர் இச்சிறப்புப் பெயர் பெற்றார் என்றும் கருதலாம்.

சொற் பொருள் :

விசைத்தல்	–	துள்ளி எழுதல்
விசும்பு	–	மேகம் (ஆகுபெயர்)
படர்தல்	–	நினைதல் (உரிச்சொல்)
சாயினன்	–	மெலிந்தனன் (உரிச்சொல்)
மாண்நலம்	–	தலைவியால் பெறலாகும் சிறந்த இன்பம்
என்ப	–	அசை நிலை

மேற்கோள் :

1. "புள்ளூ நிமிர்ந்தன்ன பொலம் படைக்கலிமா"
நற்றிணை, 75.

2. "ஏறு, உடன்நிலை வேட்கையின், மடநாகு தழீஇ"
அகநானூறு, 64.

3. "விடு விசைக் குதிரை, விலங்கு பரி முடுக"
அகநானூறு, 14.

4. "ஆ காண் விடையின் அணிபெற வந்து"
குறிஞ்சிப்பாட்டு, 136.

5. "துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து"
குறிஞ்சிப்பாட்டு, 235.

பொருள் முடிவு :

நாடன், யாம் தற் படர்ந்தமை அறியானாகி,
நம் நலம் நயந்து சாயினன்.

Koviloor Digital Library

75. மருதம்

நீ கண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ? –
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ!
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்! –
யார் வாய்க் கேட்டனை, காதலர் வரவே?

தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.

படுமரத்து மோசிகீரனார்.

பொருள் :

பாண! தலைவரது வருகையை நீ, கண்ணால் கண்டாயா? அன்றி அவரது வருகையைக் கண்டவர் சொல்லக் கேட்டறிந்தனையா? அங்ஙனம் பிறர் கூறக் கேட்டறிந்தனை ஆயின், யாருடைய வாயினால் உரைப்பக் கேட்டனை? கண்டது, கேட்டது என்னும் இரண்டனுள் ஒன்றைத் தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினோம். ஆதலின் மொழிவாயாக. கூறினால், நீயும், உனக்கு உரைத்தவரும் வெள்ளிய தந்தங்களையுடைய யானைகள் சோணையாற்றில் துளைந்து விளையாடும் பொன் மிகுந்த பாடலி புத்திரம் என்னும் நகரத்தைப் பெறுவீர்.

விளக்கம் :

பாணன் பொய்யுரைப்பதைத் தலைவி, பல முறை கண்டறிந்தவள் ஆதலின், பாணனை நோக்கி உண்மையுரைக்கும்படி வேண்டினாள். "நீ, தலைவன் வினைமுடித்து இல்லம் திரும்புவதைக் கண்டிருந்தால், அவரைத் தனியே விடுத்து, நீ மட்டும் வருதல் செய்யாய்; எனவே, கண்டவர் உரைக்கக் கேட்டவனாதல் வேண்டும்; அவ்வாறாயின் நினக்கு உரைத்தவர் யார்? நினக்கு உரைத்தவரும் உன்னைப் போல் பொய்யரோ? என்றாள். பாணன், 'கண்டார்க் கேட்டனம்' எனக் கூறியதாக அறிந்து, அவனிடம் 'யார் வாய்க் கேட்டனை', என்றாள். 'எனக்கு உரைத்த நீயும், நினக்கு உரைத்த பாணரும் யானை சோணையில் படியும் பொன் நிறைந்த பாடலி புத்திரத்தை அன்புப் பரிசாகப் பெறுவீர்', என்றாள். இருவரும் பொய்யர் என்பதால், தன்னால் வழங்கலாகாத பெருங் கொடையை வழங்குவதாகக் கூறினள். போரினால் வெல்ல இயலா வலிமையைக் குறிக்க யானைப் படையும், நீரரணைக் குறிக்க சோணை ஆறும் சுட்டப் பெற்றன. இப்புலவர் நாளில் பாடலி புரம் சிறந்து விளங்கியிருத்தல் வேண்டும். 'பொன்மலி பாடலி

Koviloor Digital Library

பெறீஇயர்', என்பது அளப்பரிய பெருங்கொடை பெறுக எனக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

சொற்பொருள் :

சோணை – ஒரு நதி, சோன் என வழங்கும். கங்கையின் கிளை நதி இது.

பாடலி – பாடலிபுத்திரம் மகத நாட்டின் தலைநகர். மௌரியப் பேரரசின் தலைநகரம்.

மேற்கோள் :

1. "பல் புகழ் நிறைந்த வெல்போர் நந்தர் சீர் மிகு பாடலி" *அகநானூறு, 265.*
2. "தலைவன் வருகின்றான் என்ற உழையர்க்குக் கூறியது" *தொல்காப்பியம், கற்பியல், 6 இளம்பூரணர்*
3. "தலைவன் வரவைத் தலைவி விரும்பிக் கூறியது" *தொல்காப்பியம், கற்பியல், 6. நச்சினார்க்கினியர்.*
4. "அமிழ்தம் உண்க நம் அயலிலாட்டி *குறுந்தொகை, 201.*

பொருள் முடிவு :

காதலர் வரவை நீ கண்டனையோ?
கேட்டனையோ? யார் வாய்க் கேட்டனை,
நசையினம் மொழிமோ, பாடலி பெறீஇயர்

Koviloor Digital Library

76. குறிஞ்சி

காந்தள் வேலி ஓங்குமலை நல்நாட்டுச்
செல்ப என்பவோ, கல்வரை மார்பர் –
சிலம்பில் சேம்பின் அலங்கல் வள்இலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇ,
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அற்சிரம் நடுங்கு அஞர் உறவே.

பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது. – **கிள்ளி மங்கலம் கிழார்.**

பொருள் :

குளிர்ந்த வாடைக்காற்று, மலைப் பக்கத்தில் உள்ள, சேம்பின் அசைதலையுடைய வளம்பொருந்திய இலையைப் பெரிய களிற்றின் செவியைப் போலத் தோன்றும்படி தடவி அசைக்கும். இத்தகைய மிக்க பனியையுடைய முன்பனிக்காலத்தில், நடுங்குவதற்குக் காரணமாகிய துன்பத்தை நான் அடையும்படி கற்களையுடைய மலை போன்ற மார்பினையுடைய தலைவன், காந்தள் வேலியாக வளர்ந்துள்ள, உயர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டிற்கு என்னைப் பிரிந்து செல்வார் என்று கூறுகின்றனையோ

விளக்கம் :

தலைவன் பிரிவினை முன்கூட்டியே உணர்ந்திருந்த தலைவி, அதனைத் தன்னிடம் உணர்த்திய தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. 'தலைவர் பிரிந்து செல்வதைத் தடுத்தல் செய்யாமல், நீயும் அயலாரைப் போல, அவர் பிரிவை உணர்த்தியது தக்கதன்று', எனத் தலைவி கூறினள். இயல்பாக வளர்ந்த காந்தளை வேலியாக உடைய மலைநாடு என்று தலைவன் செல்லும் நாட்டினைக் கூறுதல், தலைவன் தனக்கு உரைத்தமை, கொண்டு கூறியதாகும். தலைவன் தன்னுடன் உள்ளபோது வாடை வருத்தாமையை நினைந்தாள். காந்தள் மலர்ந்து தலைவற்கு வாடையின் வருகையை உணர்த்தும் என்ற குறிப்பு, அவன் அப்பருவத்தில் தன்னுடன் உறைதல் வேண்டும் என்ற விருப்பத்தைப் புலப்படுத்தும். தலைவனின் பொருள்மேல் கொண்ட காதல், அவனுடைய நெஞ்சத்தை வலியுடைத்தாக்கிற்று என்பதைக் குறிப்பிட, 'கல்வரை மார்பர்' என்றாள். பிரிவிற்கு உரியரல்லாத காலத்தில் பிரிவார் என்பதை, 'வாடை தூக்கும் வருபனி அற்சிரம்' என்ற தொடர் புலப்படுத்தும். வாடை மட்டுமன்றிச் சேம்பின் இலையும், களிற்றின் செவி

Koviloor Digital Library

போல அசைந்து பனிக்காற்றை மிகுவிப்பது கூறினாள். பனியின் வருகையால் தலைவியின் துயர் அறிந்து 'இனிச் செல்லார்' என்பதும், அவர் சென்றமை யான் அறிந்ததே என்பதும் தலைவி கூற்றால் புலப்படும். களிற்றின் செவிக்குச் சேம்பின் இலையும், அவற்றின் அசைவிற்கு,வாடையில் அதன் அசைவும் உவமையாகக் கொள்ளப்பட்டன.

சொற்பொருள்:

அற்சிரம்	–	முன்பனிக்காலம்
அலங்கல்	–	அசைதல்
வள்இலை	–	வளம் பொருந்திய இலை
மான	–	உவம உருபு
தூக்கும்	–	வீசும்
அஞர்	–	துன்பம்

மேற்கோள்:

1. "செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்
ஓடுவை மன்னால் வாடை நீ எமக்கே"
அகநானூறு,125

2. "தண்பனி அர்ச்சிரம் தமியோர்க்கு அரிதுஎனக்
கனவினும் பிரிவு அறியலரே" அகநானூறு,178

3. "கொடு மடல் தாழை
மாலை வேல் நாட்டு வேலியாகும்"
குறுந்தொகை,245

4. "களிற்றுச் செவியன்ன பாசடை" குறுந்தொகை,246

5. "தண்பனி வடந்தை அர்ச்சிரம்" ஐங்குறுநூறு,223

6. "வடந்தை தூக்கும் வருபனி அர்ச்சிரம்"
அகநானூறு,378

7. "அரும்பனி அர்ச்சிரம் தீர்க்கும்
மருந்து பிறிது இல்லை, அவர் மணந்த மார்பே"
குறுந்தொகை,68

பொருள் முடிவு:

"அர்ச்சிரக் காலத்தில், அஞர் உறக் கல்வரை மார்பர் செல்ப என்ப"

Koviloor Digital Library

77. பாலை

அம்மவாழி, தோழி! - யாவதும்
தவறு எனின் தவறோ இலவே - வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவல்இடு பதுக்கை
நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளிய ஆகிய தடமென் தோளே.

பிரிவின் கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மதுரை மருதன்
இளநாகனார்

பொருள் :

தோழி! நீ வாழ்க! ஒன்று கூறுவேன். கேட்பாயாக. கொடிய பாலை நிலத்து அருவழியில் இறந்த வழிப்போக்கருடைய உடல்களை மறைத்துத் தழையால் மூடப்பட்டுள்ள கற்குவியலானது, உயர்ந்த நல்ல யானைக்கு, அமைக்கப்பட்ட நிழலாகப் பயன்படும். இத்தகைய கடத்தற்கரிய பாலை நிலத்தில் என்னைப் பிரிந்து சென்ற தலைவர் திறத்து மெலிந்தனவாகிய என்னுடைய பெரிய மெல்லிய தோள்கள் தவறு உடையன என்று நீ கூறினால் சிறிதும் தவறு இல்லாதனவேயாம்.

விளக்கம் :

தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் துன்பம் கண்டு வருந்துதல் இயல்பாதலின், தலைவன் சென்ற வழியின் ஏதத்தை நினைத்துத் தான் வருந்துவதில் தவறில்லை என்று தலைவி கூறினாள். தலைவி, தன்னையும், தன்னுடைய தோளையும் வேறுபடுத்திக் கூறும் வழக்கு உண்மை இப்பாடலால் புலப்படும். பாலை நிலத்தில் செல்வோர்க்குப் பிணத்தை மூடிய கற்குவியலின் நிழலன்றிப் பிற நிழல் ஏதும் இல்லாமை குறித்தாள். அந்நிழலும் கொடிய யானைகள், தம் துணையுடன் தங்கும் இடங்களாயின. 'நல்யானை' என்ற அடை, துணையுடன் தங்கும் அதனுடைய அன்பினைக் குறிப்பதாகும். களவுக் காலத்தில் சிறிது பொழுதேனும் பிரிவதற்கு வருந்தும் தோள்கள், கற்புக் காலத்தில் நெடுங்காலம்பிரிவதற்கு எவ்வாறு உடன்பட்டனவோஎன்றனள். அதனால் அவை தவறுடையன என்றும், அவன் செலவு குறித்து மெலிந்தமையால் தவறு இல்லாதன என்றும் கூறினள். வெயிலின் கொடுமை, ஆறலை

Koviloor Digital Library

கள்வரின் அச்சம், பிணக் குவியலின் தோற்றம், துணையுடன் வதியும் யானையின் நிலை, தங்குவதற்கு வேறு நிழலின்மை ஆகிய அருஞ்சுரத்து ஏதங்களைத் தலைவி நினைத்தனள்,

சொற்பொருள்:

உலந்த – இறந்த

வம்பலர் – வழிச்செல்வோர்

உவல் – தழை

பதுக்கை – குவியல்

மேற்கோள்:

1. "சுரம்பல இறந்தோர், தாம்பழியுடையர் அல்லர் நாளும்
நயந்தோர்ப் பிணித்தல் தேற்றா வயங்குவினை
வாளோர் எல்வளை நெகிழ்த்த
தோளே, தோழி, தவறுடையவ்வே" அகநானூறு,267

2. "வடி நவில் அம்பின் ஏவல் ஆடவர்
ஆள் அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை"
அகநானூறு, 215

3. "நலங்கிளர் பணைத்தோள், விலங்கின செலவே"
ஐங்குறுநூறு,421

4. "வில் இட வீழ்ந்தோர் பதுக்கை" அகநானூறு,157

5. "அம்பின் விசையிட வீழ்ந்தோர்
எண்ணு வரம்பறியா உவல்இடு பதுக்கை"
அகநானூறு,109

6. "துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே,
அல்லன் என்றும் என் தடமென் தோளே"
ஐங்குறுநூறு,11

பொருள் முடிவு:

தோழி, கானம் சென்றோர்க்கு எளிய ஆகிய தோள்கள், தவறு இல.

Koviloor Digital Library

78. குறிஞ்சி

பெருவரை மிசையது நெடுவெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி,
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப -
நோதக் கன்றே - காமம் யாவதும்
நன்று என உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே.

பாங்கன் தலைமகற்குச் சொல்லியது. நக்கீரனார்.

பொருள் :

பெரிய மலையின் உச்சியில் உள்ளதாகிய நெடிய வெள்ளிய அருவி, அறிவு வாய்த்தலையுடைய கூத்தர்களின் முழவு ஒலிப்பதைப் போல ஒலித்துப் பக்கமலைகளில் கீழ் இறங்கி வீழும், இத்தகைய விளங்கும் மலைப் பகுதியின் தலைவனே. காமம் என்பது, தன்னைச் சிறிதும் நன்மையுடையது என உணரும் அறிவில்லாதவரிடத்தும் சென்று தங்குகின்ற பெரிய அறிவில்லாமையை உடையது. ஆதலின் அது வெறுக்கத்தக்கது.

விளக்கம் :

தலைவன் பாங்கனால் குறை முடித்துக் கொள்ள விரும்பி, அவனை அணுகிய வழி, அவன் காமத்தின் நிலைபேறின்மையை உரைத்து நீக்கி நிறுத்துதல் இப்பாடலின் நோக்கமாகும். தலைவியிடம் கொண்ட காமத்தைத் தவிர்வாயாக எனப் பாங்கன் வேண்டினான். தலைவனைப் பேதை என்று இகழாமல், பொதுவாகக் காமம் என்பது பேதைமை யுடைத்து எனக் கூறினான். மிக உயர்ந்த மலையில் உள்ள அருவி, மிகத் தாழ்ந்த நிலத்தில் வீழ்வது போல, பெருமையுடைய தலைவன் தன் பெருமையும் உரனும் நீத்துக் காமம் கொண்டது தகாது எனத் தலைவனுக்கு உணர்த்தப்பட்டது. காமம் தீதென உணரும் பார்ப்பனப் பாங்கன் ஆதலால், அவன் வழிக் குறை வேண்டிய தலைவன், அறிந்து கொள்ளுமாறு படர்க்கையில் வைத்துக் காமத்துப் பயனின்மையை உணர்த்தினான். மலையிலிருந்து கீழே அருவி இறங்குதல், தலைவன் தாழ்ந்து இரந்து பின் நிற்றலைப் புலப்படுத்தும். அருவிஒலி முழவொலி போல் முழங்குதலால், தலைவனின் களவொழுக்கம், பலராலும் அறியப்படும் என்பது உணர்த்தப்பட்டது. சேறலும், நிற்றலுமேயன்றிப் பயன் ஒன்றும் எய்தப் பெறாமையால், காமம்

Koviloor Digital Library

பேதைமை யுடையதாக இகழப்பட்டது. தலைவன், பாங்கனிடம் பலமுறை குறையிரந்து வேண்டுதல், அருவி, முழவுபோல இடையறாது ஒலிப்பதால் உணர்த்தப்படும்.

சொற்பொருள்:

முதுவாய்க் கோடியர் – அறிவு வாய்த்தலையுடைய கூத்தர். அறிவு முதிர்ந்த வாய்மையுடைய கூத்தர்.

ததும்புதல் – ஒலித்தல்

வெற்பன் – குறிஞ்சி நிலத் தலைவன்

காமம் – பெரு விருப்பம்.

மேற்கோள்:

1. "காம நோயுறாதார் மானமுடையார்"
   பரிமேலழகர் உரை, திருக்குறள்,1255

2. "பெருவரை இழிதரும் நெடுவெள் அருவி"
   அகநானூறு,358

3. "பாஃடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
   தோடு அமை முழவின் துதை குரலாக"
   அகநானூறு,82

பொருள் முடிவு:

வெற்ப, காமம் பெரும் பேதைமைத்து. நோதக்கன்று.

Koviloor Digital Library

79. பாலை

கானயானை தோல் நயந்து உண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை ஏறி, ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோதாமே - யாம் தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லாது ஏகல் வல்லுவோரே.

பொருள்வயின் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. குடவாயிற் கீரனக்கன்.

பொருள் :

யாம் தலைவன் பிரிவினைத் தாங்கப் பொறேம் என்று கூறிய தவற்றால், அவர் நம்மிடம் சொல்லாமல் நீங்குதலில் உறுதியுடையவராய் விளங்கினார். பொரிந்த அடிமரத்தையுடைய ஓமை மரத்தின் பட்டைகளைக் காட்டு யானைகள் விரும்பித் தின்னும். காற்று மோதுகின்ற அம்மரத்தின் நெடிய கிளைகளில் உள்ள அசைகின்ற வற்றிய கொம்பில் ஏறி, ஒய்யென, தனிமையையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தும் குரலை உடையனவாய், ஆண்புறாக்கள், பெண்புறாக்களை அழைக்கும். இத்தகைய பாலை நிலத்தில் அமைந்த அழகிய குடிகளையுடைய சிற்றூரில் அவர் தங்கினாரோ.

விளக்கம் :

பாலை நிலத்தில் உணவும் நீரும் இல்லாமல் வருந்தும் யானைகள், ஓமை மரத்தின் பட்டைகளை உரித்துத் தின்னும். ஆண்புறாக்கள், தம் இனத்தை அழைக்கும் குரல், தலைவன் உள்ளத்தில், தலைவியைக் காணவேண்டும் என்ற வேட்கையைத் தூண்டுவதாகும். தலைவன், தலைவியிடம் சொல்லாமல் பிரிந்து செல்வதும் உண்டு என்பது இப்பாடலால் புலப்படும். புலம்பு தரு குரலவாய்ப் புறாக்கள், தம் இனத்தை அழைக்கும் வருத்தம் கண்டு, வினை முடியாமல் திரும்பிவிடுவாரோ எனத் தலைவி அஞ்சியதாக இப்பாடலை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மேற்கோளாகக் காட்டுவர்.

'யாம் பிரியிற் பொறேம்' என்று கூறிய தவறு, தவறாகுமோ என்ற குறிப்பு உணர்த்தும். 'அகறல் வல்லியோர்' என்ற தொடர்,

Koviloor Digital Library

தலைவியின் மென்மையைக் குறிப்பதாகும். யாம் பிரிவினைத் தாங்குதல் இயலாது என்பது தவறாயின், அவர் சொல்லாது நீங்குதல் யாதாகும் என்று கருதினாள். தன்னுடன் சேக்கை கொள்ளப் பயின்றவர், தன்னை இல்லாமல், பாலைநிலச் சீறூரில் தனித்துத் தங்குதல் எங்ஙனம் இயலும் என்று நினைத்தனள். யானை தோல் நயந்து உண்டமை கூறியது, அந்நிலத்தில் உணவிற்கு அம்மரப் பட்டையும் கிடைத்தற்கு அரியது என்பதைக் குறிக்கும். புறாக்கள், தம் பெடையொடு களித்து மகிழும் குரலின் வேறாகப் புலம்புவிடுகுரல என அவை தம் இனத்தை அழைப்பதைக் கூறினார். "சேர்ந்தனர் கொல்லோ" என்ற ஐயத்தால், அவர் சீறூரில் தங்காது, தன்னைக் காண மீள்வரோ எனத் தலைவி கருதியதாகவும் கொள்ளலாம்.

சொற்பொருள்:

ஒல்லேம்	–	பொருந்தேம்
தப்பல்	–	தவறு
தோல்	–	மரத்தின் பட்டை
அலங்கல்	–	அசைதல்
உலவை	–	காய்ந்த மரக் கொம்பு
பயிரும்	–	அழைக்கும்
அத்தம்	–	பாலை வழி

மேற்கோள்:

1. "தலைவன் சொல்லாது பிரிதல்"
தொல்காப்பியம், கற்பியல்,43. நச்சினார்க்கினியர்

2. "புணர்ந்துடன் போகிய மனையோள் மனை இருந்து,
இடைச் சுரத்து இறைச்சியும், வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்"
தொல்காப்பியம், கற்பியல்,7

3. "புன்தாள் ஓமைய சுரன் இறந்தோரே"
குறுந்தொகை,260

Koviloor Digital Library

4. "கயந்தலை மடப்பிடி, உயங்கு பசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை"

நற்றிணை,137

பொருள் முடிவு:

சொல்லாது ஏகல் வல்லுவோர், சேர்ந்தனர் கொல்

Koviloor Digital Library

80. மருதம்

கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி,
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி,
யாம் அஃது அயர்கம் சேறும்; தான் அஃது
அஞ்சுவது உடையள் ஆயின், வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனை ஆன் பெருநிரை போல,
கிளையொடு காக்க, தன் கொழுநன் மார்பே.

தலைமகட்குப் பாங்காயினார்கேட்பப் பரத்தை சொல்லியது.

ஔவையார்.

பொருள் :

கூந்தலைப் போன்ற நெறிப்பினையுடைய ஆம்பலின் முழுமையான செறிந்த இலைகளைத் தழையாடையாக உடுத்தி, பெருவெள்ளம் வரப்பெற்ற பெரியநீர்த்துறையை விரும்பி, யாம் புனல்விளையாட்டைச் செய்வதற்காகச் செல்லாநின்றேம். தலைவி, தான் அங்ஙனம் தலைவனுடன் யான் புனல் விளையாடுவதைக் கண்டு, அஞ்சுவாளாயின், அவள், கொடியபோராகிய தேரின் நுகத்தைத் தாங்குபவன் தானேயாக நின்று வெல்லும் பலவாகிய வேற்படையையுடைய எழினியின், பகைப்புலத்திலுள்ள பெரிய பசுக்கூட்டங்களைப் போல, தன் கணவன் மார்பினைத் தன் பாங்காயினாரொடும் சேர்ந்து பாதுகாப்பாளாக.

விளக்கம் :

கிழத்தி, தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காமக் கிழத்தி சினம் கொண்டு கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. பரத்தையர், இளைஞர்களைக் கவர உடுத்தும் ஒருவகை ஆடை விசேடம், ஆம்பல் தழைகளால் புனையப் பெற்ற ஆடையாகும். தலைவி, தலைவனைத் தன்னிடத்திலிருந்து வெளிவிடாமல் காத்தல் அரிது. எத்துணை வலிமையுடன் காத்த போதிலும் எழினி, பகைவரின் பசுக் கூட்டங்களைக் கவர்தல் உறுதியாகும். அதுபோலப் பரத்தையரும், தலைவனைக் கவர்தல் உறுதியாகும். போர் என்பது நுகமாகவும், எழினி அதனை நடத்திச் செலுத்துபவனாகவும் உருவகம் செய்யப்பட்டது. பசுக்களின் உரிமையாளர் அவற்றைக் காக்க முயலுதலும், பகைநாட்டில் உள்ள வெட்சி மறவர் அவற்றை வலிமையுடன் கவர்ந்து செல்லுதலும் போர் முறையாகும். அதுபோலத் தலைவனுக்கு உரிய மனைவி, தம்

Koviloor Digital Library

சுற்றத்துடன் சூழ்ந்து, அவனைப் பிறர் கொள்ளாமல் காத்தபோதிலும், தம்மிடத்திலிருந்து அவனை மீட்டுச் செல்ல இயலாது எனப் பரத்தை உணர்த்தினாள். தலைவன் தனக்குப் புதியவனாய்த் தன் முயற்சியின்றிப் புனல் விளையாட்டில் கிடைத்த அருமை பற்றி 'பெரும் புனல் வந்த விருந்து' எனப் பரத்தை அவனைக் குறிப்பிட்டாள். தன் கணவனைப் பரத்தை கவர்ந்தனளே என்ற ஆற்றாமையைத் தலைவிக்குத் தருவதோடு, அவனைத் தனக்கே உரியவனாக ஆக்கிக் கொள்ளுவாளோ என்ற அச்சத்தையும் தன் செயல் தோற்றுவிக்கும் எனப் பரத்தை கூறினள். கிளையொடு சென்றும் பசுவை மீட்க முடியாது வென்ற எழினியின் செயல், யாவரும் அறிந்த ஒன்று என்பதால், அதனையே சான்றாகப் பரத்தை எடுத்துக் காட்டினாள். 'கிளையொடும் காக்க' என்ற வஞ்சினம், 'அவளால் காக்க இயலாது' என்பதைக் குறிப்பதாகும்.

சொற்பொருள்:

கூந்தல் ஆம்பல் – கூந்தலைப் போன்ற ஆம்பலின் நெளிவுகள்

அடைச்சி – உடுத்தி

சேறும் – செல்லுதும்

எழினி – அதியமான் நெடுமான் அஞ்சி

நுகம்பட – வலிமையுண்டாக.

கிளை – தலைமகட்குப் பாங்காயினார்

'விருந்து இறை விரும்பி – என்ற பாடத்திற்கு விருந்தாக வந்த தலைவனை விரும்பி எனப் பொருள்

மேற்கோள்:

1. "புனல் விளையாட்டின்கண் காமக் கிழத்தியர் கூற்று"
தொல்காப்பியம், கற்பியல்,10

2. "யாறும், குளனும், காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரியன் என்ப"
தொல்காப்பியம், கற்பியல்,50

3. "அளியதாமே சிறுவெள் ஆம்பல்,
இளையமாகத் தழை ஆயினவே" புறநானூறு,248

Koviloor Digital Library

4. "முனையூர்ப் பல்ஆ நெடுநிரை" நற்றிணை,400

5. "நின்கிளையொடும் போகென்று
தத்தம் கொழுநரைப் போகாமல் காத்து"
கலித்தொகை,109

பொருள் முடிவு:

யாம், துறை விரும்பிச் சேறும். தான் அஞ்சுவது உடையள் ஆயின் கொழுநன் மார்பைக் கிளையொடும் காக்க.

Koviloor Digital Library

81. குறிஞ்சி

இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறி,
பசுநனை ஞாழற் பல்சினை ஒருசிறைப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்;
உதுக் காண் தெய்ய, உள்ளல் வேண்டும் –
நிலவும் இருளும் போலப் புலவுத் திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணை எம் சிறு நல் ஊரே.

தோழியிற் கூட்டங் கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

வடம வண்ணக்கன் பேரிசாத்தன்.

பொருள் :

குறை வேண்டி நின்ற நின் சொற்களை ஏற்றுக் கொண்ட நான், நீ கூறிய சொற்களைத் தலைவியிடம் கூறினேன். அவளும் அவற்றைத் தெளிந்து, பசிய அரும்புகளையுடைய ஞாழல் மரத்தின், பல கிளைகளையுடைய ஒரு பக்கத்தில், இதுகாறும் போற்றிய புதியதாய் விளங்கும் தன் பெண்மை நலத்தை இழந்தமையால் உண்டான தனிமைத் துயரை உடையள் ஆயினாள். நிலவையும், அதனோடு உடன்நின்ற இருளும் போல, புலால் நாற்றம் வீசும் அலைகளையுடைய கடலும், அதன் கரையில் உள்ள சோலையும் காட்சியளிக்கும், மடல்கள் தாழ்ந்த பனை மரங்களையுடைய எம் சிறிய நல்ல ஊர், அதோ உள்ளது. காண்பாயாக. இனி, எம்மை மறவாது நினைக்க வேண்டும்.

விளக்கம் :

தோழியிற் கூட்டத்தின் பின்னர் வரைவு வேண்டித் தோழி, தலைவனிடம் பணிந்து கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. தலைவன் தோழியிற் கூட்டம் வேண்டி இரந்து பின்நின்று உரைத்த மொழிகளை, அவள் தலைவியிடம் கூறினள். தலைவியும், விரைந்து வரைய வருவதாகக் கூறிய தலைவன் மொழிகளைத் தோழி கூற ஏற்றுத் தெளிந்து புணர்ச்சிக்கு உடன்பட்டனள். அதனால், தலைவி தன் புதுநலன் இழந்தமையோடு, தனிமைத் துயரும் உறுவதாயினள். தோழி, தலைவனைச் சார்ந்து, இவள் நலனைத் தருதற்கு உரியவர் பிறரில்லை என்பதையும், இவள் தனிமைத் துயர் தீர்க்கும் துணை நீயே என்பதையும் எண்ணிப் பார்க்குமாறு வேண்டினாள். கடல், தலைவியுடன் ஆடுவதற்கும்; கானல் அவளைத் துய்த்து மகிழ்வதற்கும் இடனளித்தமை

Koviloor Digital Library

கூறினாள். புணர்ச்சியை நீட்டிக்க விரும்பிய தலைவற்குத் தோழி, இடம் உணர்த்தியதாகவும் இப்பாடல் பொருள் கொள்ளப்படும். 'மடல் தாழ்ந்த பெண்ணை' என, இருவரும் பிறர் அறியாதவாறு இன்பம் நுகர ஏற்ற இடம் எனக் குறியிடம் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. ஞாழல் மரம், இருவரும் களவில் கூடி மகிழ்ந்த இடத்தை உணர்த்திற்று. அலையின் பிறழ்ச்சியால், கடல் அலைகள் வெண்ணிறத்துடன், நிலவு போலவும், அடர்த்தியால் இருண்டு தோன்றுவதால் சோலை இருள் போலவும் உள்ளதாக நிரல் நிறையாக உவமம் கொள்ளப்பட்டது. கடற்கரை மணற்பரப்பு, நிலவு போலவும், கடல் இருள் போலவும் உள்ளதாக எதிர்நிரல்நிறையாகவும் உவமம் கொள்ளப்படும்.

சொற்பொருள்:

ஞாழல் – நெய்தல் நிலத்து ஒருவகை மரம்

பெண்ணை – பனைமரம்

நனை – அரும்பு

புலம்பு – நலன் இழந்தமையால் உண்டான தனிமை

மேற்கோள்:

1. "தோழியின் முடியும் இடனுமாருண்டே"
தொல்காப்பியம், களவியல்,30 நச்சினார்க்கினியர்

2. "பணிந்து பின்நின்றோனைப் பணிந்து வேண்டுதல்"
தொல்காப்பியம், களவியல்,23 நச்சினார்க்கினியர்

3. "பூவின் அன்ன நலம் புதிது உண்டு
கடிமலர்ப் புன்னைக் கீழ் காரிகை தோற்றாளை"
கலித்தொகை,135

4. "இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்"
குறுந்தொகை,123

5. "ஈகாண் தோன்றும், எம் சிறுநல்ஊரே" நற்றிணை,264

6. "உவக்காண் தோன்றும், எம்சிறுநல் ஊரே"
அகநானூறு,350

பொருள் முடிவு:

இவள், நலன் இழந்த புலம்பும் உடையள், எம் சிறுநல் ஊர் உதுக்காண், உள்ளல் வேண்டும்.

Koviloor Digital Library

82. குறிஞ்சி

வார் உறு வணர் கதுப்பு உளரி, புறஞ் சேர்பு,
'அழாஅல்' என்று நம் அழுத கண் துடைப்பார்;
யார் ஆகுவர்கொல்? – தோழி! – சாரல்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்சிரம் வாரா தோரே.

பருவம் கண்டு அழிந்த தலைமகள், 'வருவர்' என்று வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது. – கடுவன் மள்ளன்

பொருள் :

தோழி, மலைப்பக்கத்தில் உள்ள பெரிய தினைப் புனத்தில் குறவன், சிறிய தினையை அரிந்தபின், அதன் மறுகாலில் கொழுவிய அவரைக்கொடி பூக்கும். இத்தகைய பொறுத்தற்கு அரிய பனியையுடைய முன்பனிக் காலத்திலும் வாராத தலைவர், நம் நீண்டு சரிந்த கூந்தலைக் கோதிவிட்டு முதுகைச் சார்ந்து அழுதலை ஒழிக என்று கூறி, நம் அழுத கண்ணீரை முன்பு துடைத்தவர், இப்பொழுது எத்தன்மையுடையவரோ.

விளக்கம் :

தோழி, தலைவன் செய்த தலையளியை நினைவூட்டி ஆற்றுவித்தனள். தினைப் புனத்தில் விதைத்த அவரை, அதன் மறுதாளில் படர்ந்து, பூத்துக் காய்களை உண்டாக்கும். குறவன் ஒருமுறை விதைத்த தினையின் கதிர்களைப் பெற்று மகிழ்வதோடு, அவற்றின் மறுகாலில் விளையும் அவரைக் காய்களையும் பெற்று இன்பம் நுகர்வான். தலைவன் தலைவியை நீங்கிச் சென்று வினை முடித்த இன்பத்தைப் பெறுவதோடு, தலைவியுடன் உடன் உறையும் இன்பமும் நுகரற்பாலன் என்ற குறிப்புப் பொருளும் புலப்படும். புறம் சேர்பு கூந்தலை வருடி, முகம் சேர்பு கண்ணீரும் துடைத்த தலைவன் செயல் ஈண்டு நினைக்கப்பட்டது. துடைத்த போது நெகிழ்ந்த நெஞ்சினராகிய தலைவர், அரும்பனி அர்ச்சிரத்தும் நினையாமையால் வன்நெஞ்சினர் ஆயினார். அவரை முதற்பூப் பூக்கும் முன்பனியின் தொடக்கத்தில் வருவதாய்க் கூறிச் சென்றவர், அது, தினையின் மறுதாளில் மறுமுறை பூக்கும் பின்பனியிலும் வரவில்லை எனக் கலங்கினாள். தலைவனிடம் மென்மையும், வன்மையும் உடன் நிற்றல் கண்டு வியந்து வாராதோர் "யார் ஆகுவர்" எனப் புலந்தனள்.

Koviloor Digital Library

சொற்பொருள்:

வார்	–	நீண்ட
வணர்	–	வளைந்த
கதுப்பு	–	கூந்தல்
புறம்	–	முதுகு
கண்	–	கண்ணீர் (ஆகுபெயர்)
அற்சிரம்	–	முன்பனி

மேற்கோள்:

1. "வார் உறு வணர் ஐம்பால்" *கலித்தொகை,58*
2. "ஒலியல் வார் மயிர் உளரினள் கொடிச்சி"
அகநானூறு,102
3. "தாழ்இருங் கூந்தல் என் தோழியைக் கைகவியாச்
சாயல் இன் மார்பன், சிறுபுறம் சார்தர"
கலித்தொகை,42
4. "சிறுபுறம் கவையினனாக" *அகநானூறு,32*
5. "கொய்பதம் உற்றன. குலவுக் குரல் ஏனல்,
விளைதயிர்ப் பிதிர்வின் வீஉக்கு இருவி தொறும்
குளிர் புரை கொடுங்கால் கொண்டன அவரை"
மலைபடுகடாம்,108–10

பொருள் முடிவு :

தோழி, வாராதோர், முன்பு துடைத்தவர் இப்பொழுது யார் ஆகுவர் கொல்.

Koviloor Digital Library

83. குறிஞ்சி

அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ. அன்னை-
தம் இல் தமது உண்டன்ன சினை தொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை, 'வரும்' என்றோளே!

தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திய செவிலியைத் தோழி வாழ்த்தியது. வெண்பூதன்.

பொருள் :

தலைவன், தன்னுடைய வீட்டில் இருந்து, தன்னுடைய முயற்சியால் தேடிய பொருளில், தனக்கு உரிய ஒருபகுதியை உண்டாற்போன்ற இன்பம் உடைய, உயர்ந்த மலைகளையுடைய மலைநாட்டின் தலைவன் ஆவான். அம் மலைப் பகுதிகள், கொம்புகள் இனிய பழங்கள் தொங்குகின்ற பலா மரங்களை உடையவை. தலைவன், வரைதற்கு உரியவனாய் வருவான் என அன்னை மொழிந்தனள். எனவே, அவள், பெறுதற்கு அரிய அமிழ்தமே உண்ணும் உணவாகப் பெரும் புகழையுடைய துறக்க உலகத்தையே பெறுவாளாக.

விளக்கம் :

தலைவர், தலைவியை மணம் முடிக்க வருவார் என உரைத்த செவிலியைத் தோழி பாராட்டுவதாக இப்பாடல் அமைகின்றது. தலைவன், களவினால் பெறும் இன்பத்தைத் 'தம் இல் இருந்து, தமது பகுத்து உண்டது' போல் இன்பம் தருவது என மயங்கி வாழ்ந்தனன். களவின்பமே துறக்க உலகின் இன்பம் என வரைவு உடன்படாது களவு நீட்டிக்க விரும்பினன். தோழி, பகுத்துண்டார் பெறும் பயனை வரைந்து பெறுக என அவனை வரைவு கடாவினாள். 'பெரும் பெயர் உலகம்' களவினால் பெற இயலாது எனவும், வரைந்து இல்லறம் நிகழ்த்துவோருக்கே உரியது எனவும் தோழியால் உணர்த்த உணர்ந்த தலைவன், மணம் முடிக்க இசைந்தனன். அதனை விரும்பி ஏற்ற செவிலியும், 'பெரும் பெயர் உலகம் பெறுக' எனத் தோழி கூறினள். செவிலி அவ்வுலக இன்பம் பெறுக என்று கூறிய போதிலும், இவ்வுலக இன்பமும் பெறுக என்றே பொருளாகும். பலவின் பழம் சினைதொறும் தூங்கும் காட்சி, தலைவனுடைய இல்லம், மணந்து கொண்டு, இல்லறம்

Koviloor Digital Library

நிகழ்த்துதற்குரிய எல்லா இன்பங்களையும் உடைமையைச் சுட்டுவதாகும்.

சொற்பொருள்:

ஆர்பதம்	–	உணவு
பெரும் பெயர் உலகம்	–	மிக்க புகழையுடைய துறக்க உலகம்
தமது	–	தம் முயற்சியால் ஈட்டிய பொருள். ஆன்றோர் வகுத்த ஆறில் ஒரு பகுதி.

மேற்கோள் :

1. "தம் இல் இருந்து, தமது, பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" திருக்குறள்,1107
2. "அமிழ்தம் உண்க நம் அயலிலாட்டி"
குறுந்தொகை,201
3. "அம்ம வாழி தோழி, அன்னைக்கு உயர்நிலை
உலகமும் சிறிதால்" குறுந்தொகை,361
4. "ஆர்பதம் பெறுக, தோழி" குறுந்தொகை,389
5. "வேரும், முதலும், கோடும் ஓராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ் தாழ்வு அன்ன வீழ்கோட் பலவின்"
குறுந்தொகை,257
6. "சுரம் செல் கோடியர் முழவின் தூங்கி
முரஞ்சு கொண்டு இறைஞ்சின, அலங்கு சினைப் பலவே"
மலைபடுகடாம்,142–4

பொருள் முடிவு :

நாடனை வரும் என்றோளாகிய அன்னை, பெரும்பெயர் உலகம் பெறீஇயர்.

Koviloor Digital Library

84. பாலை

பெயர்த்தனென் முயங்க, 'யான் வியர்த்தனென்' என்றனள்;
இனி அறிந்தேன், அது துனி ஆகுதலே –
கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி,
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே.

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது. **மோசிகீரன்.**

பொருள் :

கழலுமாறு அணிந்துள்ள தோள் வளையினை உடையவன் ஆய் என்ற வள்ளல் ஆவன். அவனுடைய மலை, மேகங்கள் தவழும் பொதியில் மலையாகும். ஆண்டு வளர்ந்துள்ள வேங்கையின் மலர், காந்தளின் மலர் ஆகியவற்றின் மணத்தை உடையவளாய், ஆம்பல் மலரைவிட குளிர்ச்சியுடையவளாய் விளங்குபவள் தலைவி, அவளை யான் ஒருமுறை தழுவியதோடு அமையாமல், மீட்டும் தழுவும் போது, அதற்கு உடன்படாது, அவள் 'யான் வியர்த்தேன்' என்றாள். யான் அங்ஙனம் தழுவியது, அவளுக்கு வெறுப்பு உண்டாதற்குக் காரணமாயிற்று என்பதை, அவள் உரைத்த போது உணர்ந்திலேன். ஆனால், அவள் உடன்போக்கில் சென்ற இப்பொழுது அறிந்தேன்.

விளக்கம் :

தலைவி, உடன்போக்கில் சென்றவழி, செவிலித் தாய், தலைவி தன்னிடம் வெறுப்பைப் புலப்படுத்தியது தலைவன்மேல் உள்ள விருப்பினால்தான் என்பதை முன்னரே, தான் அறியாமை எண்ணி வருந்துவாளாயினாள். செவிலியர், தலைவியைத் தம் அருகில் துயிலச் செய்தல் வழக்கம். 'வியர்த்தனென்' என்ற தலைவியின் உரை', 'நீ முயங்கற்க என்ற குறிப்பை உணர்த்திற்று. அப்பொழுதே அறிந்திருந்தால் தலைவி விரும்பியதைச் செய்திருக்கலாம் என்ற செவிலியின் இரக்கம் இப்பாடலில் புலப்படுகின்றது. தலைவனைத் தழுவிய மார்பிற்குத் தாயின் அணைப்பு வெறுப்பைத் தருவதாயிற்று. தலைவியின் இவ்வுணர்வு, 'பயில்வு' எனப்படும். ''தலைவி, செவிலி முலையிடத்துத் துயில் வேண்டாது, வேறோர் இடத்தில் பயிறல்'', என இதனை நச்சினார்க்கினியர் விளக்குவர் (தொல்காப்பியம், களவியல்,23) வேங்கை, காந்தள் ஆகிய மலர்கள், பகற்குறியில் தலைவன் சூட்டிய மலர்கள் என்றும், தலைவி இயல்பாகவே அம்மலர்களின் மணம் உடையவள் என்றும் இருவகையாகவும் பொருள்கொள்ளப்படும். தலைவி, ஆம்பல் மலரை விடத் தண்ணியளாய் இருந்த போதிலும்,

Koviloor Digital Library

இரவுப் பொழுதில், அவன் நினைவினால் ஏற்பட்ட உடல் வெப்பம் காரணத்தால் 'வியர்த்தனென்' எனக் கூறியதாகவும் கொள்ளலாம். தன்னைப் பிரிவதற்காகவே, தலைவி விலகிச் சென்றனள் என்பதை அப்பொழுது உணரவில்லையே எனச் செவிலி ஆற்றாளாயினாள்.

ஆஅய் வேள் என்பவன், கடையெழு வள்ளல்களில் ஒருவன். பொதியில் மலைத்தலைவன். இரவலர்க்கு வரையாது ஈபவன், அவன் நல்லாட்சியால் அவன் நாட்டில் பருவமழை பொய்யாது பெய்யும் என்பது 'மழை தவழ் பொதியில்' என்ற தொடரால் குறிக்கப்பட்டது.

ஆம்பல் மலரினும் தண்ணியள், கொடிய பாலையில் செல்ல நேர்ந்ததே எனச் செவிலி வருந்தினள். தன்னுடைய முதுகுப் புறம் படுத்து உறங்கிக் கிடந்த தலைவியைப் பெயர்த்து, மார்புப் பகுதியால் முன்புறம் தழுவி உறங்கச் செய்தபோது, தலைவி அவ்வணைப்பைப் பொறாது 'வியர்த்தனென்' எனக் கூறியதாகவும் பொருள் கொள்ளப்படும்.

சொற்பொருள் :

முயங்குதல்	–	தழுவுதல்
பெயர்த்தனென்	–	மீண்டும்; அவளைத் தன் முகத்தை நோக்கித் திரும்பி
துனி	–	வெறுப்பு
மழை	–	மேகம்
நாறி	–	மணம் வீசி.

மேற்கோள் :

1. "பிற்றை ஞான்று, தலைமகளது போக்கு உணர்ந்து
செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய்
நெருநலை இவை செய்தது இது கருதிப் போலும்"
என்று கூறியது. இறையனார் களவியல் உரை,23

2. "உடன் போக்கிய செவிலி கவன்று உரைத்தது"
தொல்காப்பியம், அகத்திணையியல்,39 இளம்பூரணர்.

3. "குறுக வந்து, குவவு நுதல் நீவி
மெல் எனத் தழீஇயினேன் ஆக, என் மகள்
நன்னர் ஆகத்து இடைமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே" அகநானூறு,49

Koviloor Digital Library

4. “பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே”

ஐங்குறுநூறு,97

5. “நறுந் தண்ணீரள்” குறுந்தொகை,70

6. “ஐது தொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி” குறுந்தொகை,62

7. “பின்னு வீழ் சிறுபுறம் தழீஇ
அன்னை முயங்கத் துயில் இன்னாதே”

குறுந்தொகை, 353

பொருள் முடிவு :

தண்ணியள், யான் முயங்க வியர்த்தனென் என்றனள், அது, துனி ஆகுதல், இனி அறிந்தேன்.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

85. மருதம்

யாரினும் இனியன்; பேர் அன்பினனே –
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல் முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்,
தேம் பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே.

வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி, வாயில் மறுத்தது.

வடம வண்ணக்கன் தாமோதரன்.

பொருள் :

ஊரின் உள்ளிடத்தே வதியும் குருவியின், துள்ளுகின்ற நடையையுடைய ஆண்பறவையானது, கருப்பம் முதிர்ந்த தன் பெண்குருவி பொறையுயிர்த்தற்கு உரிய இடத்தை அமைப்பதற்காக, இனிய சாறு பொதிந்துள்ள, இனிய கோலையுடைய கரும்பின், மணம் வீசாத பூக்களைக் கோதி எடுக்கும். இத்தகைய புதுவருவாயுள்ள ஊருக்குத் தலைவன், தந்தை, தாய், மகவு, தோழி ஆகிய யாவரினும் மேம்பட்ட இனிமை செய்பவன் எனவும், சாவிற் சாகும் இயல்பால் பேரன்பினை உடையவன் எனவும் கூறப்படுதல் பாணன் வாய்ச் சொல் அளவில் அன்றி உண்மையில் அவன் அவ்வாறு இலன்.

விளக்கம் :

தோழி, பாணன் பொய்யுரைப்பதை நன்கு அறிந்தவள் ஆதலின், பாணன் வாய்ச் சொற்கள் நம்பிக்கைக்கு உரியன அல்ல எனக் குறிப்பிட்டு, வாயில் மறுத்தாள். பாணன் வாய் அளவில், தலைவன் இனியன் என்றும், அன்பினன் என்றும் கூறப்படுவான். ஆனால் அவன் மனத்தளவில் தலைவன் அவ்வாறு இலன் என்பது உணரப்பட்டது. காடு வாழ் குருவியின் வேறு தெரிய 'உள் ஊர்க் குருவி' ஈண்டு சுட்டப்பட்டது, அதன் வாழ்வு யாவரும் காண்டற்கு எளிதாகலான். இவை, ஆணும் பெண்ணுமாய் இணைந்து வாழ்பவை, பொறை உயிர்க்கும் இடம், மெத்தென விளங்க, அவை கரும்பின் பூக்களில் மெல்லியவற்றைத் தேர்ந்து கொள்ளும். பிறர்க்குப் பயன்படாத பூவை, அவை பயன்படுத்துவன. குருவிச் சேவலுக்கு உரிய இனிமையும், அன்பும் தன் காதலனிடம் இல்லாமை எண்ணித் தலைவி வருந்தினள். தலைவன், குருவியைப் போல, இனியனாகவும், பேரன்பினனாகவும் பரத்தையர் மாட்டு உள்ளமை கூறி, தன்மாட்டு அங்ஙனம் இல்லாமையைக்

Koviloor Digital Library

குறித்தாள். தம் ஊர்ப் பறவையினங்கள் கூட அன்பு பாராட்டி இயைந்து வாழும் வாழ்க்கை கண்டும், தலைவன் தன்னைப் புறக்கணிப்பது எண்ணிக் கலங்கினாள். 'யாணர் ஊரன்' என்ற அடைமொழி, அவன் பரத்தையர்க்குப் பயன்படுவதைக் குறிப்பதாகும்.

சொற்பொருள் :

குரீஇ	–	குருவி (இயற்கை அளபெடை)
சேவல்	–	ஆண்பாற் பெயர்
பேடை	–	பெண்பாற் பெயர்
ஈனில்	–	கருவுயிர்க்கும் இடம்
யாணர்	–	புதுவருவாய் (உரிச்சொல்)
ஊரன்	–	மருத நிலத் தலைவன்

மேற்கோள் :

1. நாடன் இன்ன நிலையன் பேரன்பினன் எனப்
பன்மாண் கூறும் பரிசிலர் நெடுமொழி
வேனில் தேரையின் அளியகாண்
விடுமோ தோழி என் நலனே" *நற்றிணை,348*

2. "மனை உறை குரீஇக் கறை அணல் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு, வயமான்
குரல் செய் பீலியின் இழைத்த குடம்பை"
புறநானூறு,318

3. "கரும்பின், வேல் போல் வெண்முகை பிரியத் தீண்டி
முதுக்குறை குரீஇ, முயன்று செய் குடம்பை"
நற்றிணை,366

பொருள் முடிவு :

ஊரன், பாணன் வாயே, இனியன், பேரன்பினன்.

Koviloor Digital Library

86. குறிஞ்சி

சிறைபனி உடைத்த சேயரி மழைக்கண்
பொறைஅரு நோயொடு புலம்பு அலைக் கலங்கி,
பிறரும் கேட்குநர் உளர்கொல்? - உறைசிறந்து,
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து,
ஆன்நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

வெண்கொற்றன்.

பொருள் :

வாடைக்காற்றின் மிகுதியால் மழைத் துளிகள் வீசித் தூவப்படுகின்ற கூதிர் காலத்தில் யாமப்பொழுதில், மாட்டு ஈ ஒலிக்குந்தோறும், அது தலையை அசைப்பதால், அதன் கழுத்தில் உள்ள, வளைவினையுடைய மணியின் நாக்கு, மெல்லிய ஓசையுடன் ஒலிக்கும். இமைகளில் தடுக்கப்பட்ட நீர் உடைந்து, துளித்துளியாக விழுகின்ற, செம்மையான கோடுகளையும், குளிர்ச்சியையும் உடைய கண்ணோடும், பொறுத்தற்கரிய காமநோயொடும் தனிமைத் துயரம் வருத்துதலால், அவ்வோசையைக் கேட்டு வருந்துவார் என்னையன்றிப் பிறமகளிரும் உள்ளனரோ.

விளக்கம் :

தனக்கு ஆறுதல் கூறுதற்குரிய தோழியும், யாமப் பொழுதில், அயர்ந்து உறங்குதலால், அவளும், பசுவின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணியின் ஓசையைக் கேட்டிலள். தலைவன் உடனிருத்தற்குரிய கூதிர்காலத்தில் தான்மட்டும் தனித்து இருந்து, ஆன்மணிக் குரலேயன்றிப் பிற ஆற்றுவிக்கும் குரல் ஏதும் கேட்கப் பெறாது வருந்துவதைத் தலைவி குறிப்பிட்டாள். கார்ப்பருவத்தில் வருவதாக உரைத்த தலைவன், கூதிர்ப்பருவத்தும் வந்திலனே எனக் கவன்றாள். யாவரும் துயிலும் யாமப்பொழுதில், மணியின் மெல்லிய ஓசைகூடப் பெரிதாய்த் தலைவிக்குத் துயர் தருவதாயிற்று.

சொற்பொருள்:

உறை - மழைத்துளி.

ஊதை - வாடைக்காற்று

Koviloor Digital Library

நுளம்பு – ஈ

உலம்புதல் – ஒலித்தல்

உளம்பும் – அசையும்

சிறைபனி – இமைகளால் தடுக்கப்பட்ட கண்ணீர்

நல்கூர் குரல் – பொருள் வறிதாகிய குரல்

மேற்கோள்:

1. "யாமம் கொளவரின் காமம்
கடலினும் உரைஇக் கரைபொழியும்மே"

அகநானூறு,128

2. "பொறை நில்லா நோயொடு" கலித்தொகை, 3

3. "உரவு உரும் உரறும் அரை இருள் நடுநாள்
நல்ஏறு இயங்குதோறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே"

குறுந்தொகை.190

பொருள் முடிவு:

'கூதிர் யாமத்து ஆன் உளம்பும் மணியின் குரலைக் கேட்குநர் பிறரும் உளர் கொல்'.

Koviloor Digital Library

87. குறிஞ்சி

'மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம்' என்ப, யாவதும்
கொடியர் அல்லர் எம் குன்றுகெழு நாடர்,
பசைஇப் பசந்தன்று நுதலே,
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று, தடமென் தோளே.

தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது. கபிலர்.

பொருள் :

ஊர்மன்றத்தில் உள்ள கடம்ப மரத்தில் உறைகின்ற, அச்சம் செய்தலில் பழமை வாய்ந்த கடவுள் கொடுமையுடையாரைக் கொல்லும்என்று கூறுவர், குன்றுகள் பொருந்திய நாட்டின் எம் தலைவர், சிறிதும் கொடுமையுடையாரல்லர். அவர் தம்மைப் பிரியலாகாது என்பதற்காக என்னுடைய நுதல், பசலை பூத்தது. பிரிந்தால் உள்ளம் நெகிழும் என்பதைக் காட்டுவதற்காக என்னுடைய பெரிய தோள்கள் மெலிந்தன.

விளக்கம் :

நுதல் பசந்தமையும், தோள் நெகிழ்ந்தமையும் தலைவன் பிரிந்தமையால் அல்ல எனவும், அவை தாமாகப் பசந்து நெகிழ்ந்தன எனவும் கூறி அவர் கொடியரல்லர் என்பதை உணர்த்தினாள். கொடியோரைத் தெறும் என்பதால் அத்தெய்வம் நல்லவரை வாழச்செய்யும் என்பது பெறப்படும். இப்பாடல், நல்லவரைக் காப்பதற்காகத் தலைவி, தெய்வத்திற்கு வழிபாடு நேர்ந்து கொள்வதைக் குறிப்பதாகும். கடம்ப மரம், தலைவன் நின்னிற் பிரியேன் என தெய்வத்தை முன்நிறுத்திச் சூளுரைத்த இடமாகும். தன் காதலன், சூளுறவு பொய்த்தமையால், அவரைக் கடவுள் தெறும் எனக் கருதிய தலைவி, தன் தலைவர். கொடியரல்லர் எனக் கூறி அவனைத் துன்புறுத்துதல் கூடாது என வழிபட்டனள். செங்கடம்பு முருகப் பெருமானுக்கு உகந்த மலராகும். ஊர் மன்றங்களில் உள்ள மரத்தில் தெய்வம் உறைவதாக மக்கள் நம்பினர்.

சொற்பொருள் :

மன்றம் – பலர் கூடும் ஊர் அம்பலம்

மராஅம் – செங்கடம்பு

Koviloor Digital Library

பேஎம் – அச்சம் (உரிச்சொல்)

தெறூஉம் – கொல்லும்

யாவதும் – சிறிதும்

பசைதல் – அன்பு செய்தல்

கடவுள் – முருகக் கடவுள்

மேற்கோள் :

1. "தெய்வம் அஞ்சல்" தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,24

2. "நுதல் பசப்பு இவர்ந்து, திதலை வாடி,
நெடுமென் பணைத்தோள் சாஅய்த்
தொடி நெகிழ்ந்து" குறுந்தொகை, 185

3. "செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை"
திருமுருகாற்றுப்படை, 51

4. "நல்லன் என்றி ஆயின்
பல்இதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ"
ஐங்குறுநூறு,170

5. "பெருந்தோள் நெகிழ, அவ்வரி வாடச்
சிறுமெல் ஆகம் பெரும்பசப்பு ஊர
இன்னேமாக எற்கண்டு நாணி" குறுந்தொகை,358

6. "நல் அரை மராஅத்த கடவுள்" மலைபடு கடாம், 395

பொருள் முடிவு :

கடவுள், கொடியோரைத் தெறூஉம் என்ப. எம்நாடர் கொடியர் அல்லர், என்நுதல் பசைஇப் பசந்தன்று, ஞெகிழத் தோள் நெகிழ்ந்தன்று.

Koviloor Digital Library

88. குறிஞ்சி

ஒலிவெள் அருவி ஒங்குமலை நாடன்,
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சொல்லும் துன் அருஞ் சாரல்,
நடுநாள் வருதலும் வரூஉம்,
வடுநாணலமே – தோழி! – நாமே.

இரவுக்குறி நேர்ந்த| வாய்பாட்டால்,தோழி தலைமகட்குச் சொல்லியது.

மதுரைக் கதக் கண்ணன்.

பொருள் :

தோழி, ஒலிக்கின்ற வெண்ணிறமான அருவிகளையுடைய, உயர்ந்த மலைகள் உள்ள நாட்டின் தலைவன், சிறிய கண்ணையுடைய பெரிய களிறு, வலிமையையுடைய புலியைத் தாக்கித் தன்னுடைய பழைய ஆற்றலை இழத்தற்கு இடமாக விளங்கும், மக்கள் செல்வதற்கு அரிய மலைச்சாரலின் வ்ழியே, இரவின நடுப்பகுதியாகிய யாமப் பொழுதில் வருதலைச் செய்வான். அவன், அங்ஙனம் வருதலால் உண்டாகும் குற்றத்திற்கு நாம் நாணம் கொள்ளமாட்டோம்.

விளக்கம் :

தலைவன், இரவுக் குறியில், பல ஏதங்களைக் கடந்து வரும்போது, தோழி தலைவியை அவனை ஏற்குமாறு வேண்டுதல் இப்பாடலின் நோக்கமாகும். வழியின் இடையூறுகளுக்கு அஞ்சாமல் அவன் வரும்போது, அவன் வருகையால் தோன்றும் குற்றங்களுக்கு நாணி நாம் மறுத்தல் அழகன்று எனத் தோழி உரைத்தனள். மலையிலிருந்து வீழும் அருவி, நிலத்தில் உள்ளார்க்குப் பயன்படுதல் போல, நெடுந்தூரம் கடந்துவந்த தலைவனும் தலைவிக்குப் பயன்படுவான் என்ற குறிப்பும் அமைந்துள்ளது. வயப்புலி, களிற்றைத் தாக்கும் எனப் பொருள் கொள்ளுதல் சிறப்புடையதாகும். இரவுக் குறியில் தலைவனை வரச் செய்த குற்றம் தமக்கு வருமே எனத் தோழி கருதியதாகவும், பகற்குறியில் அயலவர் தூற்றும் அலர் மொழிகளாகிய குற்றம், வருமே எனத் தோழி கருதியதாகவும், பொருள் கொள்ளக் கூடும். ஒலித்து வரும் அருவி போலத் தலைவன் வருகையும் அலரை உண்டாக்கும் எனத் தோழி கருதினாள்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

வய – வலி (உரிச்சொல்)

நடுநாள் – நாளின் நடுப்பகுதி. யாமம்

வடு – குற்றம்

முரண் – வலி

சொல்லும் – நீக்கும்

மேற்கோள் :

1. "பரியது, கூர்ங்கோட்டது, ஆயினும் யானை
வெரூஉம் புலி தாக்குறின்" *திருக்குறள், 599*

2. "பகற்குறி நேர்ந்த இடத்துத் தோழி, தலைவிக்குக் கூறியது." *தொல்காப்பியம், களவியல்,24 இளம்பூரணர்.*

3. "நடுநாள் என்னார் வந்து
நெடு மென் பணைத்தோள் அடைந்திசினோரே" *குறுந்தொகை,268*

4. "நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த
குறுக்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை" *குறுந்தொகை,141*

5. "படு கடுங் களிற்றின் வருத்தம் சொலிய" *அகநானூறு,8*

பொருள் முடிவு :

தோழி, மலைநாடன் வருதலும் வருஉம். நாம், வடு நாணலம்.

Koviloor Digital Library

89. மருதம்

பாஅடி உரல பகுவாய் வள்ளை
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப,
அழிவது எவன்கொல், இப் பேதை ஊர்க்கே? –
பெரும்பூண் பொறையன் பேஎம் முதிர் கொல்லிக்
கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்ன இம்
மெல்இயல் குறுமகள் பாடினள் குறினே.

தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது. தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லி வாயில் மறுத்ததூஉம் ஆம். பரணர்.

பொருள் :

அச்சம் மிகுவதற்குக் காரணமாகிய கொல்லி மலை பெரிய அணிகலனையுடைய சேரனுக்கு உரியது. கரிய கண்களையுடைய தெய்வத்தால் அம்மலையின் மேற்குப்புறத்தில் எழுதப்பட்ட நல்ல இயல்பையுடைய பாவையைப் போன்ற மெல்லிய இயல்புடையவள் தலைவி ஆவள். அவள், பரந்த அடிப்பகுதியை உடைய உரலில், பகுத்து வாயால் பாடும் வள்ளைப் பாட்டினைப்பாடி உலக்கையை ஓச்சி இடிக்கும் போது, அயலார் குறைகூறுதலும் செய்வர். இத்தகைய, அறிவின்மையையுடைய ஊரினர் கூறும் சொற்களுக்காக வருந்திப்பயன் என்ன?

விளக்கம் :

மகளிர், உரலில் நெல், சுண்ணம் ஆகியவற்றை இடிக்கும்போது, சோர்வு தோன்றாமைப் பொருட்டுத் தம்முள் பகுத்துப்பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு எனப்படும். இது, பல்வரிக் கூத்து என்ற பகுதியுள் அடங்கும் என அடியார்க்கு நல்லார் கூறுவர். இது உலக்கைப் பாட்டு என்றும் கூறப்படும். உலக்கை ஓச்சி இடிப்பவரின் அன்புக்கு உரியார் இப்பாட்டின் தலைவராக அமைவர். அரசனையும், தெய்வத்தையும் வள்ளைப்பாட்டில் வாழ்த்திப் பாடும் மரபு உண்டு. போர்க்களத்தில் கூழ்அடும் பேய்களும், இவ்வுலக்கைப் பாட்டைப் பாடுவதாகப் பரணி நூல்கள் கூறும் , வள்ளைப் பாட்டு, ஒரு தனி இலக்கிய வகையாகவும்

Koviloor Digital Library

வளர்ச்சியுற்றது.

கொல்லி மலை, வல்வில் ஓரி என்னும் வள்ளலுக்கு உரியது. காரி என்பவன், ஓரியைக் கொன்று, அம்மலையைச் சேரனுக்கு ஈந்தமையால் அது சேரனுக்கு உரியதாயிற்று. இம் மலையின் மேற்குப் பகுதியில், ஞாயிற்றின் கதிர் படுமாறு, மேற்கு நோக்கியதாகத் தெய்வத்தால் அமைக்கப்பட்ட பாவை ஒன்று இருந்ததாக நூல்கள் கூறுகின்றன. இப்பாவை, கொல்லிப் பாவை எனப்பட்டது. இது கண்டோரை மயக்கி, வீழ்த்தி உயிர்விடச் செய்யும் ஆற்றல் உடையதாகக் கூறப்பட்டது. அழியாத அழகுடைய தலைவிக்குக் கொல்லிப் பாவை உவமையாகக் கூறப்படும்.

தலைவி, வள்ளைப்பாட்டில், தலைவன் பெயரைக் கூறி இடித்தமை அறிந்து, ஊரார் அவனைத் தலைவியோடு தொடர்புபடுத்தி அலர் மொழிந்தனர். தலைவன் சிறைப்புறமாக வந்து நின்றபோது, தோழி தலைவிக்குக் கூறுவதைப் போல, அவனை வரைந்து கொள்ள வேண்டுதல் இவ்வள்ளைப்பாட்டின் நோக்கமாகும். தலைவியின் நிலையறிந்து வருத்தம் கொள்ளாதவர் ஆதலின் 'ஏதில் மாக்கள்' என்றாள். 'அழிவது எவன் கொல்' என்ற தொடர், இவ்வேதில் மாக்களின் கூற்று, அவர்கள் விருப்பப்படி துன்பத்தைத் தராமல், நன்மையே தருவதாகும் என்ற குறிப்பினைக் கொண்டதாகும். பலரும் கூடிப்பாடும் வள்ளையில், தலைவி, தலைவன் பெயரைக் கூறிப் பாடினால், இவ்வூர்க்கு என்ன இழப்பு வருதல் கூடும் என்றாள். நன்றும், தீதும் பகுத்துணராத பேதைமையுடைய இவ்வூர்க்கு இவள் பாடுவதால் என்ன தீமை வருதல் கூடும் என்றும், குறிப்பிட்டாள். தலைவன் இல்லாமையால், இழப்பு தனக்காக இருக்கும் போது இப்பேதை ஊர்க்கு என்ன அழிவு ஏற்பட்டு விட்டது எனத் தோழி வினவினாள்.

இப்பாடல், கற்பு வாழ்வில், பரத்தையரின் பாங்காயினார் கேட்பத் தோழி கூறுவதாகவும் பொருள் கொள்ளக் கிடப்பதாகும். தலைவி, தான்பாடும் வள்ளையில், தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தைக் குறித்துப் பாடினாளாயின், பேதைமையுடைய பரத்தையர் சேரிக்கு அதனால் வரும் அழிவுயாது எனக் கூறி வாயில் மறுத்ததாகவும் பொருள் உரைக்கப்படும். 'அழிவது எவன் கொல்' என்ற தொடர், தலைவியின் ஆற்றாமையைச் சுட்டுவதாகும்., கொல்லிப் பாவை யனைய தலைவியின் அழகு, துணையின்றிப் பயன்படாமல் கழிவது ஈண்டு சுட்டப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

பாஅடி	–	பரந்த அடிப்பகுதி
பகுவாய் வள்ளை	–	பகுத்து வாயால் பாடும் வள்ளைப்பாட்டு.
வள்ளை	–	உரல்பாட்டு, உலக்கைப் பாட்டு
ஏதில் மாக்கள்	–	அயலார், பரத்தை
நுவறலும் நுவல்ப	–	கூறுதலைச் செய்வர்
பெரும்பூண்	–	பேரணிகலன். சேரமன்னர் ஏழரசரை வென்று, அவர்தம் எழுமுடிகளால் ஆக்கிய பெரிய அணிகலனை மார்பில் அணிந்தனர்.
பொறையன்	–	சேரர் மரபுப்பெயர்
பேஎம்முதிர்,	–	அச்சம் மிகுதற்குக் காரணமாகிய
கருங்கண் தெய்வம்	–	கரிய கண்ணையுடைய தெய்வம். தேவ கணத்தில் ஒன்று, பூதம்

மேற்கோள் :

1. "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று, சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி,
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே"

அகநானூறு,209

2. "தான், என் இழந்தது இவ் வழுங்கல் ஊரே"

நற்றிணை,36

3. "தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்"

மலைபடுகடாம்,342

4. "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவா நாம்
வள்ளை அகவுவம் வா"

கலித்தொகை,42

5. "கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅயோளே"

அகநானூறு,62

Koviloor Digital Library

6. "பயம் கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன" *நற்றிணை,192*

பொருள் முடிவு :

குறுமகள் பாடினள் குறின், மாக்கள் நுவல்ப. இப்பேதை ஊர்க்கு அழிவது எவன்கொல்.

Koviloor Digital Library

90. குறிஞ்சி

எற்றோ வாழி? - தோழி - முற்றுபு
கறிவளர் அடுக்கத்து இரவில் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தென, பொங்கு மயிர்க்
கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக் கனி,
வரைஇழி அருவி உண்துறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்றே.

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது. **மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்.**

பொருள் :

தோழி, மிளகுக்கொடி வளர்ந்துள்ள மலைப்பக்கத்தில் இரவுப் பொழுதில் முழக்கத்தைச் செய்த, சூல் முற்றிய மேகங்கள், பெரிய மழைத் தாரைகளைப் பொழிந்தன. குளிரால் சிலிர்த்த மயிரினையுடைய ஆண்குரங்கு, சுளையைத் தோண்டி எடுக்கத் தீண்டியதால், மலர் மணம் கமழும் பலாப்பழம், மரத்திலிருந்து நழுவிக் கீழே வீழ்ந்தது. மலைப்பக்கத்தில் விழும் அருவி, அதனைப் பலரும் நீர் உண்ணும் துறையில் கொண்டுவந்து தந்தது. இத்தகைய வளம்பொருந்திய குன்றுகளையுடையவன் நட்பு, நின்னுடைய மெல்லிய தோள்களை மெலிவுறச் செய்தபோதிலும், அமைதியைத் தருவதாகவே உள்ளது. இஃது எத்தன்மைத்தோ?

விளக்கம் :

தலைவன் சிறைப்புறமாக இருக்கும் போது, அவன் வரைவு நீட்டித்தமையைச் சுட்டிக்காட்டி, விரைந்து வரைந்து கொள்ள வேண்டித் தோழி, தலைவிக்கு உரைப்பவள்போலத் தலைவனுக்கு உணர்த்துதல் இப்பாடலின் நோக்கமாகும். தலைவி, தலைவன் வரைவு நீட்டித்தமையால் மெலிந்தாள். அவன், தன்னை வரைந்து கொள்வான் என்ற துணிவால் அமைதியுற்றாள். புறத்தே மெலிவும், அகத்தே அமைதியும், கேண்மை ஒன்றே ஒரே காலத்தில் தருதல் வியப்பாக உள்ளது எனத் தோழி கூறினள்.

மரத்தில் இருந்த பழம், கலையினால் தொடப்பட்டமையால் கீழே வீழ்ந்தது. அதன் மணம் யாண்டும் பரவுவதாயிற்று, அதுபோலத் தலைவன் களவில் பெற்ற இன்பம், தலைவியின் உடல் மெலிவிற்கும், ஊர் அலர் உரைப்பதற்கும் ஏதுவாயிற்று.

Koviloor Digital Library

குளிரின் துன்பம் நீங்க, மிளகினைக் கறித்த குரங்கு, அதன் வேகத்தைத் தணிப்பதற்காகப் பலவின் கனியை உண்ண முற்பட்ட செயல், தலைவியை இயற்கைப் புணர்ச்சியில் பெற்று நுகர்ந்த தலைவன், களவிற் கூட்டத்தைத் தொடர விரும்பிய நிலையைப் புலப்படுத்தும்.

மலை உச்சியில் ஒருவர்க்கும் பயன்படாது பழுத்த பலவின் கனி, கலை தொட்டமையால், அருவியில் வீழ்ந்து, நீர்த்துறையில் வாழ்வோர்க்குப் பயன்பட்டமைபோல, தலைவியின் நலமும், தலைவனால் மணம் முடிக்கப்பெற்று இல்லறத்தில் யாவர்க்கும் விருந்தோம்பல் முதலிய அறச் செயல்களால் பயன்படும் என்ற குறிப்புப் பொருளும் கொள்ளப்படும்.

தலைவன் தலைவியர் பலாப்பழமாகவும், தோழியின் வரைவு கடாவுதல், குரங்கின் செயலாகவும், அருவியில் அப்பழம் வீழ்தல், வரைந்து கோடலாகவும், உண்துறையில் பலர்க்கும் பயன்படுதல், இல்லறப் பயனாகவும் குறிப்புப் பொருள் கொள்ளப்பட்டது.

தலைவனுடைய கேண்மை, தன் தோளை மெலிவித்ததாயினும், அது தனக்கு அமைதியைத் தருவதாயிற்று என்று எண்ணிய தலைவி, 'யான் ஆற்றவும், தான் மெலிதல் பொருந்தாது', என்றாள். கலை தொட வீழ்ந்த பலாப்பழம், மீண்டும் அருவியில் தரப்பட்டுப் பயன்பட்டமை போல, அலர் உரைக்கப்பட்டுப் பயன்படாமல் பிரிந்த போதிலும், வரைவினால் இல்லறத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு பயன்படுதல் குறித்ததாக இப்பாடலை நச்சினார்க்கினியர் விளக்குவர் (தொல்காப்பியம், பொருளியல்,9)

சொற்பொருள் :

எற்று	–	இரங்கற்குறிப்பு, இறந்தது – இடைச்சொல்
முற்றுபு	–	சூழ்ந்து
கறி	–	மிளகு
அடுக்கம்	–	பக்கமலை
மங்குல்	–	மேகம்
தொட	–	பலவின் சுளையைத் தோண்ட
இழுக்கிய	–	நழுவி வீழ்ந்த
உண் துறை	–	ஊரினர் நீர் உண்ணும் துறை.

Koviloor Digital Library

கலை - ஆண் குரங்கு

கேண்மை - நட்பு

சாய்த்தும் - மெலிவித்தும் (சாஅய்-உரிச்சொல்)

சால்பு - அமைதி

மேற்கோள் :

1. "கறி வளர் அடுக்கத்து ஆங்கண், முறி அருந்தி
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்"
குறுந்தொகை,258

2. "அருவி தந்த பழம் சிதை வெண்காழ்"
மலைபடுகடாம்,174

3. "நயந்தனை கொண்ட கேண்மை
பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே"
குறுந்தொகை,264

4. "சால்பு என்னும் திண்மை" *திருக்குறள்,988*

5. "அதிர் குரல் முதுகலை, கறி முறி முனைஇ"
அகநானூறு,182

பொருள் முடிவு :

தோழி, குன்ற நாடன் கேண்மை, தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்று. இஃது எற்றோ?

Koviloor Digital Library

91. மருதம்

அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற விளை கனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்,
பல ஆகுக, நின் நெஞ்சில் படரே!
ஓவாது ஈயும் மாரி வண்கை,
கடும் பகட்டு யானை, நெடுந்தேர், அஞ்சி
கொன்முனை இரவுஊர் போலச்
சில ஆகுக, நீ துஞ்சும் நாளே!

பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்க வழி, தன்வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழி, தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது, பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதூஉம் ஆம்.

ஔவையார்.

பொருள் :

பிணங்கிக் கிடக்கின்ற பிரப்பங்கொடியின், புறத்தே வரிகளையுடைய நன்றாக முற்றிய பழத்தை, ஆழமான நீரையுடைய குளத்தில் உள்ள கெண்டை மீன் கவ்வுதற்கு இடனாகிய குளிர்ந்த நீர்த்துறையையுடைய ஊர்த் தலைவனுக்கு, நீ மனைவியாக இருப்பின், நின் உள்ளத்தில் துன்பம் பலவாகுக. காலமும், இடமும், பெறுவார் தகுதியும் நோக்காமல் எப்பொழுதும் கொடுக்கும் மேகம் போல, கைம்மாறு கருதாமல் கொடுக்கும் வள்ளன்மையும், விரைந்த செலவினையுடைய ஆண்யானைகளையும், உயர்ந்த தேர்களையும் உடைய அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளலுடைய, அச்சத்தைத் தரும் போர்க்களத்தில் உள்ள இரவையுடைய ஊரிலுள்ளார் போல, நீ துயிலும் நாட்கள் சில ஆகுக.

விளக்கம் :

தலைவி, நெஞ்சை முன்னிலைப்படுத்தி, உணர்வுடையது போல் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. தலைவனுக்கு உடன்பட்டு அவனோடு கூடி மகிழ்ந்தால், பிரிவு என்ற ஒன்று தோன்றி மீண்டும் துன்புறுத்தும், அதனால் துயிலும் நாளும் சிலவாகும் எனத் தலைவி நினைந்தாள். போர்க்களம் உள்ள ஊரினர், அச்சத்தின் மிகுதியால் துயில் கொள்ளுதல் இயலாது.

Koviloor Digital Library

அதியமான் நெடுமான் அஞ்சி, கடையெழு வள்ளல்களில் ஒருவன், தகடூர் என்ற ஊரினன். ஔவையாரைப் பெரிதும் போற்றியவன்.

பிரம்பில் பழுத்த கனியைக் கெண்டை மீன் எளிதில் கவர்வது போலப் பரத்தையரும் அழகும், செல்வமும் நிறைந்த தலைவனை எளிதில் கவர்ந்து கொள்வர்.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனைத் தலைவி, கற்புக் கடமை உணர்ந்து ஏற்றுக் கொண்டவழி, தோழி, 'இத்துணைக் கொடுமையுடையவனை ஏற்றுக் கொண்டால், அவன் கொடுமைக்கு ஆளாகி மீண்டும் துன்புறுவாய்' எனக் கூறுவதாகவும், இப்பாடலுக்குப் பொருள் உரைக்கப்படும்.

அஞ்சியின் பகைப்புலத்து இரவு ஊர் போல, நின் நெஞ்சில் படர் பல ஆகுக, நீ துஞ்சும் நாள் சில ஆகுக என, 'கொன்முனை இரவு ஊர் போல' என்ற உவமை ஈரிடத்தும் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. நெஞ்சில் படர் பலவாயவழி, துஞ்சும் நாள் சில ஆதல் இயல்பேயாகும். இப்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் வீரமும், கொடையும் ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

சொற்பொருள் :

அரில் – கொடிப் பிணக்கு

பவர் – கொடி

குண்டு – ஆழம்

இலஞ்சி – குளம்

படர் – துன்பம்

இரவு ஊர் – இரவைஎன்னும் ஊரில் வாழ்பவர் (ஆகுபெயர்)

கொன் – அச்சப்பொருள் தரும் இடைச்சொல்

பெண்டு – மனைவி

மேற்கோள் :

1. "காணுங்கால் காணேன் தவறாய, காணாக்கால்
காணேன் தவறு அல்லவை"

திருக்குறள்,1286

Koviloor Digital Library

2. தான் மனையாளை ஒத்தலால், தன் போல்வார் தலைவனுக்கு மிகை எனக் குறித்த கோளின் கண் காமக் கிழத்தி கூறியது.

தொல்காப்பியம், கற்பியல்,10 இளம்பூரணர்.

3. "அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்"

குறுந்தொகை,364

4. "வானம் நாண வரையாது சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவிகை வண்மை" புறநானூறு,54

5. "கடும்பரிப் புரவி, நெடுந்தேர் அஞ்சி"

அகநானூறு,352

6. "பகைமுக ஊரின் துஞ்சலோ இலவே"

குறுந்தொகை,292

7. "துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே" புறநானூறு,31

8. "புலத்தல் ஒல்லுமோ, மனைகெழு மடந்தை"

அகநானூறு,316

பொருள் முடிவு :

நெஞ்சே, ஊரன் பெண்டினை ஆயின், நின் நெஞ்சில் படர் பல ஆகுக. நீ துஞ்சும் நாள் சில ஆகுக.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

92. நெய்தல்

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து-
அளியதாமே - கொடுஞ்சிறைப் பறவை,
இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரை கொண்டமையின் விரையுமால் செலவே.

காமம் மிக்க கழிபடர் கிளவியால், பொழுது கண்டு சொல்லியது

தாமோதரன்.

பொருள் :

கதிரவன் மறைந்த, அகன்ற இடம் பொருந்திய ஆகாயத்தில், வளைந்த சிறகுகளையுடைய பறவைகள், தாம் தங்குவதற்கு ஏற்பஉயர்ந்து விளங்கும், வழியின் அயலே வளர்ந்துள்ள கடம்ப மரத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டினுள் இருக்கும் தம் குஞ்சுகளின், வாயின் உட்பகுதியில் செருகுவதற்காக, இரையைத் தம் அலகினால் எடுத்துக் கொண்டமையால் விரைந்து செல்லும். இப்பறவைகளிடம் இயற்கையாக இவ்வன்பு உடைமையால், அவை இரங்கத்தக்கன.

விளக்கம் :

காம நோயைப் பொறாத தலைவி, காமம் மிக்க கழிபடர் கிளவியாக மாலைப் பொழுதினைக் கண்டு வருந்திக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. மாலைப் பொழுதில், பறவைகள் தம் கூடுகளுக்குத் திரும்பும். விரைந்து வருதற்கு ஏற்ப அவற்றின் சிறகுகள் உள்ளமை, 'கொடுஞ்சிறை' என்ற அடைமொழியால் உணர்த்தப்பட்டது. தாய்ப்பறவை, இரையைத் தம் குஞ்சுகளின் முன்வாயில் வைத்தால், நழுவி விழுந்துவிடும் என்பதால், வாயின் உள்இடத்தில் செருகுவதற்காக இரையுடன் வந்தன. குஞ்சுகள், தாயின் வருகையை நோக்கி வாயை அங்காந்த வண்ணம் இருத்தல் ஈண்டு உணர்த்தப்பட்டது. உள்வாயில் செருகுவதற்கு ஏற்ற சிறிய இரை என்பது, அவற்றின் விரைந்த செலவினால் புலப்படும். ஆணும், பெண்ணுமாகிய இரண்டும், தம் கூடுகளுக்கு மாலைப் பொழுதில் திரும்புதல் கூறப்பட்டது. இவை, காதல் செய்து, இன்புற்று, பிள்ளைப் பேறு எய்தி, தம் குஞ்சுகளை இனிது பாதுகாப்பது போலத் தானும் தலைவனை மணம் முடித்து, மகப்பேறு எய்தி, அதனை இனிது பாதுகாத்து மகிழ்தல் வேண்டும் எனத் தலைவி விரும்பினாள். புறத்து நிகழும் நிகழ்ச்சிகள் காமத்தை வளர்ப்பன என்பது,

Koviloor Digital Library

பறவைகளின் செயலால் உணர்த்தப்பட்டது. பறவைகளின் செயலை 'அளிய தாம்' என அறியாமையுடையனவாக்கித் தம் தலைவன் மிக அறிந்தவன் என எள்ளல் குறிப்பால் கூறியதாகவும் பொருள் கொள்ளுதல் கூடும். காலம், இடம் தெரிதலும், பிள்ளையை ஊட்ட அன்பின் விரைதலும், பறவையின் அறிவுடைமையைக் காட்டும்.

சொற்பொருள் :

படுதல்	–	மறைதல்
கொடுஞ்சிறை	–	வளைந்த சிறகு
இறை உறல்	–	தங்குதல்
மராஅம்	–	கடம்ப மரம்
பிள்ளை	–	குஞ்சுகள்
செரீஇய	–	செருவதற்காக

மேற்கோள் :

1. "இரங்கல் நிமித்தம் என்ற உரிப்பொருள்
தொல்காப்பியம், அகத்திணையியல்,14

2. "தலைவிக்குக் காமம் சிறத்தல்"
தொல்காப்பியம், களவியல்,20 நச்சினார்க்கினியர்

3. "இல் இறைப் பள்ளி, தம் பிள்ளையொடு வதியும்"
குறுந்தொகை,46

4. "புன்னை தடவுநிலை மாச்சினை புள் இறை கூரும்"
அகநானூறு,10

5. "கொடு மென்சிறைய கூர்உகிர்ப் பறவை"
குறுந்தொகை,352

6. "சொரிபுறம் உரிஞிய நெறிஅயல் மராஅத்து"
அகநானூறு,121

7. "தாய்ப் பயிர்ப் பிள்ளை வாய்படச் சொரியும்"
நற்றிணை,91

பொருள் முடிவு :

பறவை, செலவு விரையும், அளிய.

Koviloor Digital Library

93. மருதம்

நல் நலம் தொலைய, நலம் மிகச் சாஅய்,
இன்உயிர் கழியினும் உரையல், அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ?
புலவி அஃது எவனோ, அன்பிலங் கடையே?

வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது.

அள்ளூர் நன்முல்லையார்.

பொருள் :

நம்முடைய பெண்தன்மைக்கு இயல்பாகிய நல்ல நாணம் என்னும் நன்மை கெடவும், உடலின் அழகு மிகவும் நுணுகி அழியவும், எல்லாவற்றினும் இனிதாகிய உயிர் நீங்குவதாயினும், அவரை யான் புலந்ததாக உரையற்க. தலைவர், நமக்குத் தாயும் தந்தையும் அல்லரோ? அன்பு இல்லாத இடத்தில், ஊடல் கொள்வதால் விளையும் பயன்யாது?

விளக்கம் :

தலைவியைத் தோழி, புலத்தல் தகாது என்றும், தலைவன் பரத்தமையை மறந்து ஏற்கவேண்டும் என்றும் வேண்டிய போது, 'அன்பில்லாத இடத்தில் புலத்தலால் பயன் ஏதும் இல்லை', என்ற கருத்தைக் கூறி, தன்னுடைய அயன்மையைச் சுட்டினாள். இவ்வயன்மைக் குறிப்பு, தலைவி வாயில் மறுத்ததைக் குறிப்பதாகும். தலைவர் பெற்றோர் போலத் தன்னால் போற்றி மகிழ்தற்கு உரியரேயன்றி, அவர் மனைவிபோல் இருந்து இன்பம் துய்த்து மகிழ உரியரல்லர் எனத் தலைவி புலந்தனள்.

'நல் நலம்' என்பது பெண் தன்மைக்கு இயல்பாகிய நாணத்தைக் குறிப்பதாகும். 'நலம் மிகச்.சாஅய்' என்ற தொடரில் உள்ள நலம் என்ற சொல், தலைவி:யின் மேனி அழகை உணர்த்துவதாகும். ஒருவர், ஒருவரிடம் உரைப்பதற்கு நாணம் தடையாக நிற்றலால் தலைவி, உயிரினும் சிறந்த நாணம் அழியுமாறு தான் புலந்ததாகத் தலைவனிடம் கூறுதல் கூடாது எனத் தோழியிடம் வேண்டினாள்.பெற்றோர்க்கு இயல்பாகிய அன்பு, அவரிடம் இல்லாதபோது, புலத்தலால் யாதுபயன் விளையும் என்றனள். 'அல்லரோ' என்ற வினா, அல்லர் என்ற எதிர்மறைப் பொருளைத் தந்தது. தலைவர், நம் அளவில் பெற்றோர் போல அன்பு செய்தற்கு உரியரேயன்றி, மனைவி போலப் புலத்தற்கு

Koviloor Digital Library

உரியர் அல்லர் என்றாள். 'பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்வதற்கு நாணியதாக உரைப்பாய்; அந்நாணம் கெடப் புலந்ததாக உரையற்க' எனத் தோழியிடம் வேண்டினாள். ஒற்றுமையுடைய காதலர்மாட்டே புலத்தலால் பேரின்பம் ஏற்படும் என்றும், அஃது இல்லார் மாட்டுப் புலத்தலால் யாது பயன் என்றும் தலைவி வருந்தினள். பிரிதற்கரிய தொடர்புடைமையால் 'அன்னை' என்றும், அவர் ஆணைக்கு அடங்கி வாழ்தலால் 'அத்தன்' என்றும் குறிப்பிட்டாள். அன்புள்ள இடத்தில்தான் புலவியால் பயன்உண்டு என்பது இப்பாடலால் சுட்டப்பட்டது.

சொற்பொருள் :

நன்னலம் – சிறந்த நாணம்

அவர் – நெஞ்சறி சுட்டு (தலைவர்)

நலம் – உடல் அழகு.

சாஅய் – உள்ளதன் நுணுக்கம் (உரிச்சொல்)

அத்தன் – தந்தை

புலவி – அன்புடைய காதலர், குழையத் தழுவி இன்பம் துய்த்தற் பொருட்டு முன் நிகழ்வது.

மேற்கோள் :

1. "தலைவனைத் தலைவி காய்தற்கண் வந்தது"
தொல்காப்பியம், கற்பியல்,6 இளம்பூரணர்

2. "அன்பிலை, கொடியை என்றலும் உரியள்"
தொல்காப்பியம்,கற்பியல்,48 நச்சினார்க்கினியர்

3. "யாரையோ நிற் புலக்கேம்" அகநானூறு,46

4. "உயிரினும் சிறந்த நாணு நனிமறந்து
உரைக்கல் உய்ந்தனன்" நற்றிணை,17

5. நீரும் நிழலும் இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது" திருக்குறள்,1309

6. "நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும்"
திருக்குறள், 1162

பொருள் முடிவு :

உரையல், அவர் நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ? அன்பிலங்கடை புலவி எவன்.

Koviloor Digital Library

94. முல்லை

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச் சிவந்தனவே;
யானே மருள்வென்? - தோழி! - பானாள்
இன்னும் தமியர் கேட்பின், பெயர்த்தும்
என் ஆகுவர் கொல், பிரிந்திசினோரே?
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே.

'பருவம் கண்டு ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்கு, 'ஆற்றுவல்' என்பதுபடத் தலைமகள் சொல்லியது. கதக் கண்ணன்.

பொருள் :

தோழி! மிகுந்த குளிர்ச்சியையுடைய, மழைக் காலத்திற்குரிய, அறிவின்மையையுடைய செம்முல்லையின் அரும்புகள், தாம் சிவந்து தோன்ற வேண்டிய காலத்திற்கு முன்பே, மிகச் சிவப்பாய் உள்ளன. அதனைக் கண்டு, இது கார்ப்பருவம் வந்தமைக்கு உரிய அடையாளம் என யான் மயங்குவேனோ. (மயங்கேன்) ஆயினும் என்னைப் பிரிந்திருப்பவராகிய தலைவர், இன்னும் என்பால் வாராமையால் தமியராகவே உள்ளார். அருவிகள் பெரிய மலையிலிருந்து குதித்து வீழும்படி, தொகுதியையுடைய கரிய மேகங்கள், முழங்கும் ஓசையை நடுஇரவில் கேட்பாராயின், முன்னரே பிரிவினால் வருந்தும் அவர் மீண்டும் எந்த நிலையை உடையவராக ஆவாரோ?

விளக்கம் :

தலைவன் கார்ப்பருவத்து இடிமுழக்கத்தைக் கேட்டு, தன்னை நினைத்து, வினை முடிக்காமல் மீண்டு விடுவானோ எனத் தலைவி வருந்துவதாக இப்பாடல் அமைகின்றது. மாரிக்காலத்தில் மலரவேண்டிய செம்முல்லையின் அரும்புகள், வானம் இடித்த அளவிலேயே மலர்ந்தன என்பதால், அவை அறியாமையுடையன என்றாள். இடிக்குரல் கேட்பின், அன்பு மிகுதியால் தன்னை நினைத்து மீள்வரோ, கடமை உணர்வால் வினைக்கண் தங்குவரோ, இரண்டனுள் ஒன்று துணிய இயலாது என்மனம் மயங்குகின்றது எனக் குறித்தாள். காரின் முழக்கத்தை இருவரும் ஒருங்கு இருந்து கேட்டல் இனிது என்றும், தமியராய்க் கேட்பின் இன்னாது என்றும் கருதினாள். தலைவன் தன்னிடம் வருவதாகக் கூறித் தெளிவித்த சொல்லைக் காப்பதற்காக, வினை

Koviloor Digital Library

முடிக்காமலேயே திரும்புவானோ எனக் கலங்கினாள். முல்லை பூக்கும் பருவத்தில் வருவதாகத் தலைவர் கூறிச் சென்றமை ஈண்டு நினைக்கப்பட்டது.

சொற்பொருள் :

பித்திகம்	–	பிச்சி, செம்முல்லை
பானாள்	–	நடுயாமம் (பால்+நாள்)
மாரி	–	மழைக்காலம்
மா மலை	–	பெரிய மலை
சிலைத்தல்	–	இடித்தல்
கருவி	–	தொகுதி
மருள்வென்	–	மயங்குவேன்

மேற்கோள் :

1. மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயல் அருநிலைய, பெயல் ஏர் மண முகை
செவ் வெரிந்" அகநானூறு,42

2. "வயவுப் பெடை அகவும் பானாட் கங்குல்"
குறுந்தொகை,301

3. "தத்துற்று .... இமும் என இழிதரும் அருவி"
திருமுருகாற்றுப்படை,305–16

4. "மழை முழங்கு கடுங்குரல்" குறுந்தொகை, 396

5. "வெம் முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் உயிராத் தூக்கிய பொருளே"
அகநானூறு,265

6. "மாரிப் பித்திகத்து நீர்வார் கொழு முகை"
குறுந்தொகை,168,222

பொருள் முடிவு :

தோழி, பித்திகத்து அரும்பு மிகச் சிவந்தன, யானே மருள்வென், பிரிந்திசினோர் இன்னும் தமியர்; மழைக் குரல் கேட்பின் என் ஆகுவர்.

Koviloor Digital Library

95. குறிஞ்சி

மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல் முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே.

தலைமகன் பாங்கற்கு உரைத்தது. கபிலர்.

பொருள் :

பெரிய மலையிடத்திலிருந்து, தூய வெண்மை நிறத்தையுடைய அருவிகள் விழும். அவை, பாறைகளின் வெடிப்புகளில் பட்டு ஒலிக்கின்ற, பலமலர்களையுடைய மலைச் சாரலில் உள்ள சிற்றூரில் வாழ்கின்ற குறவனுடைய பெரிய தோளையுடைய சிறுமியின், நீரோடு ஒரு தன்மைத்தாய் விளங்கும் என்னுடைய வலிமையை மாய்த்தது.

விளக்கம் :

தலைவன், பாங்கனிடம், தன்னால் காணப்பட்டவள் யாவள் என்பதையும், அவளால், தான் உற்ற இடுக்கண் எத்தகையது என்பதையும் கூறித் தன்னுடைய குறைமுடிக்குமாறு வேண்டினான். தலைவியின் தூய, மென்மைக்கு ஏற்ப, அவள் மலையில் வீழும் அருவிநீர் உவமிக்கப்பட்டது. தலைவியின் தோளைத் தழுவிப் பெற்ற இன்பத்தை நினைந்து, 'பெருந்தோள்', என்றான். மென்மை, வன்மையை மாய்த்தது வியப்பாக உள்ளது எனத் தன்பாங்கனிடம் கூறினன். தான் இயற்கைப் புணர்ச்சியில், அவளைத் தழுவிய இடமாதலின் 'பன்மலர்ச் சாரலை' நினைந்தான். 'தோழ' என்ற விளி, ஈண்டுக் குறிப்பினால் கொள்ளப்பட்டது. பகையை அழிக்கும் தீயின் அன்ன என் வலிமை, நீரின் அன்ன மென்மையுடைய குறுமகளால் அழிக்கப்பட்டது என நண்பனுக்குத் தன் இளிவரவினை உணர்த்தினான்.

சொற்பொருள் :

கல்முகை – பாறைகளின் வெடிப்புக்கள்

ததும்பும் – ஒலிக்கும்

உரன் – வன்மை

சாயல் – உடல் முழுவதும் உள்ள மென்மை

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "புதுநிறை வந்த புனலஞ் சாயல்" *மலைபடுகடாம்,61*
2. "நீரினும் இனிய சாயல்" *புறநானூறு,105*
3. "தீ முரணிய நீரும்" *புறநானூறு,2*
4. "தீ எழுந்தன்ன திறலினர்" *திருமுருகாற்றுப்படை,171*
5. "அடல் மாமேல் ஆற்றுவேன், என்னை
   மடல் மாமேல் மன்றம் படர்வித்தவள்"
   கலித்தொகை, 141

பொருள் முடிவு :

குறமகளது சாயல், என் உரன் அவித்தது.

Koviloor Digital Library

96. குறிஞ்சி

'அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யான் எவன் செய்கோ? என்றி; யான் அது
நகை என உணரேன் ஆயின்,
என் ஆகுவை கொல்? நன்னுதல்! நீயே.

தலைமகனை இயற்பழித்துத் தெருட்டும் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது. அள்ளூர் நன்முல்லை.

பொருள் :

நல்ல நெற்றியை உடையாய். அருவியால் வளரும் வேங்கை மரங்களையுடைய மலைநாட்டிற்கு உரியவன் திறத்து, யான் யாது செய்யக் கூடும் எனக் கூறி, அவனை இயற்பழித்தாய். நீ உரைத்ததை, நான் நகைப் பொருட்டாகக் கொள்ளவில்லையென்றால் நீ யாதாகுவையோ?

விளக்கம் :

தோழி, தலைமகனுடைய இயல்புகளை இகழ்ந்து கூறிய வழி, தலைவி அதனை மறுத்துப் பாராட்டி உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. வரைந்து கொள்ள வேண்டித் தோழி தலைவனை இகழ்ந்து கூறினள். தலைவன் மேல் உள்ள நம்பிக்கையின் மிகுதியாலும், அன்பின் மிகுதியாலும், தோழியின்கூற்று தலைவிக்கு வெறுப்பைத் தருவதாயிற்று. தோழி கூறிய மொழிகள் நகைப் பொருட்டாயின் தன்னால் ஏற்கத் தக்கன என்றும், உணர்ந்து கூறியனவாயின், தன்னுடைய ஒறுத்தலுக்கு ஆளாக நேரும் என்றும் குறிப்பிட்டாள். அருவி, தன்னைச் சார்ந்து வளர்ந்துள்ள வேங்கை மரத்தைக் குறைவின்றிக் காத்து, வளம் பெறச் செய்வது போலத் தலைவனும் தன்னைப் போற்றுவான் எனத் தலைவி இயற்பட மொழிந்தனள்.

வேங்கை மரம், அருவி தன்னிடம் வந்த வழிப் பயன் கொள்ளுமேயன்றித் தானே அதனிடம் சென்று பயன் கொள்ளாது. அவ்வருவியைத் தன்னிடம் வரச் செய்தலும் இயலாது. அது போல, நம் காதலரும், நம்மை நாடிப் பகலினும், இரவினும் வந்தவழி இன்பம் நுகர்வதல்லது, நாமே சென்று பயன் கொள்வதோ அவரை நம்பால் வருவித்தலோ இயலாது எனக் கூறி, தோழி இயற்பழித்தனள். ஒருகால் பெருகியும், ஒருகால் வற்றியும் வரும் மலையருவி போலத் தலைவனும், வந்தும், வாராமலும் ஒழுகுவான். யாமும் வேங்கைபோல, வந்தவழி

Koviloor Digital Library

இன்பம் துய்த்தும், வாராத வழி ஆற்றியும் இருப்பதல்லது, தனித்து ஒன்றும் செய்ய இயலாதவர் ஆவோம் எனத் தோழி குறித்தனள். 'எவன் செய்கோ' என்ற வினா, தலைவன் தலைவியை மணம் முடிக்க வாராமையால், தோழியின் செயலறவினைப் புலப்படுத்துவதாகும்.

சொற்பொருள் :

நன்னுதல் – விளி

என்றி – என்று கூறுகின்றாய்

அது – பண்டறி சுட்டு

நகை – நகைமொழி (ஆகுபெயர்)

மேற்கோள் :

1. "தலைவன் வரைதலை விரும்பி இயற்பழித்த
தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது"
தொல்காப்பியம், களவியல்,16 நச்சினாக்கினியர்

2. "கறங்கு வெள் அருவிப் பிறங்கு மலைக் கவாஅன்
தேம் கமழ் இணர வேங்கை" அகநானூறு,118

3. "தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?"
குறுந்தொகை,25

பொருள் முடிவு :

நன்னுதல் – நாடற்கு யான் எவன் செய்கோ என்றி. யான் அது நகை என உணரேன் ஆயின் நீ என் ஆகுவை?

Koviloor Digital Library

97. நெய்தல்

யானே ஈண்டையேனே; என் நலனே
ஆனா நோயொடு கானலஃதே,
துறைவன் தம் ஊரானே;
மறை அலர்ஆகி மன்றத்தஃதே,

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. **வெண்பூதி.**

பொருள் :

யான்மட்டும் தனித்து இவ்விடத்தில் உள்ளேன். என்னுடைய பெண்மை நலம், என்னைவிட்டு நீங்காத வருத்தத்துடன் கடற்கரைச் சோலையிடத்தே உள்ளது. நீர்த்துறைகள் உள்ள ஊரின் தலைவன், தம்முடைய ஊரின்கண் உள்ளான். எம்மிடைத் தோன்றிய மறைபொருளாகிய நட்பைப் பற்றிய செய்தியானது, பலரும் அறியும் பழிமொழியாக ஊரம்பலத்தே உள்ளது.

விளக்கம் :

வரைந்துகொள்ளாமல் பிரிந்திருந்தமையால் தலைவி தனிமைத் துயருற்றாள். கடற்கரைச் சோலையில் தலைவன் அவள் நலம் நுகர்ந்து நீத்தமை கருதி, 'என் நலன் கானலில் உள்ளது', என்றாள். வரைந்தால் அவன் ஊர்க்குப் புகப்பெறலாம், அஃது இன்மையால், தன் இல்லத்தில் தனித்திருப்பதாகக் கூறினள். தன்னையும், தன்னுடைய பெண்மை நலத்தையும் வேறாகப் பிரித்து நோக்கி, 'என் நலன், நீங்காத நோயுடன் கானலில் உள்ளது' எனக் கூறிய போதிலும், தலைவி நோயினால் துன்புறுவதாகவே கொள்ளப்படும். தலைவன், தலைவி, தன்னுடைய இல்லத்தில் தனித்து இருப்பதையும், அவள் அழகு, கானலில் நோயொடு கிடப்பதையும்; அறிந்தும், தம் ஊரில் உறவினர் சூழ தன்னை நினையாது மகிழ்ச்சியாக உள்ளான் எனத் தலைவி கலங்குவாளாயினள்.

சொற்பொருள் :

நலன்	–	பெண்மை நலன், அழகு
நோய்	–	காம நோய்
கானல்	–	கடற்கரைச் சோலை
துறைவன்	–	நெய்தல் நிலத் தலைமகன்

Koviloor Digital Library

மறை – களவு, பிறர் அறியாமல் தலைவியின் நலனைக் களவில் நுகர்ந்த செயல்

அலர் – அம்பலின் மிகுதி, பலரால் அறியப்படுதல்.

மேற்கோள் :

1. "சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழி தலைவி இரங்கிக் கூறியது" தொல்காப்பியம், களவியல்.20

2. "மாட்டின்றி வந்த செய்யுள்"
தொல்காப்பியம், செய்யுளியல்,211, பேராசிரியர், நச்சினார்க்கினியர்.

3. "இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே உளனே
என் நலனே தண்ணந் துறைவனொடு
கண்மாறின்றே" குறுந்தொகை,125

4. "பெருங்களிறு வாங்க முரிந்து நிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசின் தோழி, அவர் உண்ட என் நலனே"
குறுந்தொகை,112

5. "உட் கரந்து உறையும் உய்யா அரும்படர்"
குறிஞ்சிப்பாட்டு,11

6. "அலரும் மன்று பட்டன்றே" அகநானூறு,201

7. "காமம், மறை இறந்து மன்று படும்" திருக்குறள்,1138

பொருள் முடிவு :

யான், ஈண்டையேன், என் நலன், கானலஃது, துறைவன், தம் ஊரான், மறை, மன்றத்து.

Koviloor Digital Library

98. முல்லை

'இன்னள் ஆயினள் நன்னுதல் என்று, அவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே,
நன்றுமன் - வாழி - தோழி! - நம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர்சில கொண்டே.

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கோக்குளமுற்றன்.

பொருள் :

தோழி, நம்முடைய தோட்டத்தில், நீர் ஒழுகுகின்ற பசுமையான புதரைப் பற்றுக் கோடாகக் கொண்டு, படர்ந்து தழைத்த, மழைக் காலத்தில் மலரும் பீர்க்கின் மலர்கள் சிலவற்றைக் கையில் ஏந்தி, தலைவரிடம் நெருங்கச் சென்று, நல்ல நெற்றியையுடைய தலைவி, இம்மலரைப் போன்ற பசலையை அடைந்தாள் என்று சொல்லுவாரைப் பெற்றால் மிகவும் நல்லது.

விளக்கம் :

தலைவி, தலைவன் பிரிவினால் பசலை நோயுற்று மெலிந்தமை கூறுதலும், அவனிடம் தூது அனுப்பத் துணிந்தமை கூறுதலும் ஆகிய மெய்ப்பாடுகள், இப்பாடலால் உணர்த்தப்பட்டன. கார்ப்பருவத்தில் புதர்கள் தோறும், மழை பெய்து நீர் பெருகியமையும், பீர்க்குப் பூத்தமையும் கூறி, தலைவன் வருவதாகத் தெளிவித்த பருவ வருகையை அவனிடம் தூது அனுப்பி உணர்த்த விரும்பினாள். 'துன்னச் சென்று', என்ற தொடர் மறைபிறர் அறியலாகாமையை உணர்த்திற்று. நுதலில் படர்ந்த பசலை, அவன் பிரிவை யாவர்க்கும் அறிவிப்பதாயிற்று. பீர்க்கின் மலர்களை அவனிடம் காட்டுவாரைப் பெற்றால் நன்று என்ற தொடர், அவன் சென்ற செலவு சேய்மைக்கண் அன்று என்பதைப் புலப்படுத்தும். பீர்க்கு, புதரைப் பற்றுக்கோடாகக் கொண்டு படர்வதைக் கூறித் தன்னுடைய பற்றுக் கோடின்மையைக் குறித்தாள். களவில், தூதுவிடுதல் புலனெறி வழக்கமன்று.

சொற்பொருள் :

படப்பை - தோட்டம்

பீரம் - பீர்க்கு, பீர் -அம் சாரியை பெற்றது

Koviloor Digital Library

நன்னுதல் – தலைவி – அடையடுத்த ஆகுபெயர்

புதல் – புதர்

கலித்த – தழைத்த

அவர் – நெஞ்சறி சுட்டு

மேற்கோள் :

1. "குறித்த பருவம் கழிந்தது என்னும் பொருண்மை விளக்கிற்று"

தொல்காப்பியம், உவம இயல்,1
பேராசிரியர்.

2. "நுதலே, பீர் இவர் மலரின் பசப்பு ஊர்ந்தன்றே"

நற்றிணை,197

3. "நுதல் இறை கொண்ட அயல் அறி பசலை"

அகநானூறு,235

4. "பொன்போல் பீரமொடு புதல் புதல் மலர"

நெடுநல்வாடை,14

5. "இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும் எனச்
சொல்லின் எவனாம் தோழி" குறுந்தொகை,185

6. "மென் தோள், ஆய்கவின் மறைய,
பொன் புனை பீரத்து அலர் செய்தன்றே"

ஐங்குறுநூறு,452

பொருள் முடிவு :

தோழி, பீரத்து அலர் சில கொண்டு, அவர் துன்னச் சென்று, இன்னள் ஆயினள் என்று செப்புநர்ப் பெறின் நன்று.

Koviloor Digital Library

99. முல்லை

உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி,
நினைந்தனென் அல்லெனோ பெரிதே? நினைந்து,
மருண்டனென் அல்லனோ, உலகத்துப் பண்பே?
நீடிய மராஅத்த கோடு தோய் மலிர் நிறை
இறைத்து உணச் சென்று அற்றாங்கு,
அனைப் பெருங்காமம் ஈண்டு கடைக்கொளவே.

பொருள் முற்றிப் புகுந்த தலைமகன், "எம்மை நினைத்தும் அறிதிரோ? என்ற தோழிக்குச் சொல்லியது. **ஔவையார்.**

பொருள் :

வினைவயின் யான் இருந்தபோது, இடைவிடாது நும்மை நினைத்தேன் அல்லவா? அங்ஙனம் எண்ணியதோடமையால் மீண்டும் மீண்டும், செய்யும் பொருளினும் நும் காம இன்பமே பெரிது என நினைவு கூர்ந்தேன் அல்லவா? உயர்ந்த கடம்ப மரத்தின் கிளையைத் தொட்டவாறு பெருகும் மிக்க வெள்ளம், நெடுந்தூரம் சென்று, ஆண்டு உள்ளார் கையால் இறைத்து உண்ணும் அளவு குறைந்து, பின் வற்றினாற்போல, அப்பெரிய காமநோய், யான் வினைமுடித்து வருதலால் முடிவடையும்படி, உலகத்து இயல்பை எண்ணி மயங்கினேன் அல்லவா?

விளக்கம் :

பிரிந்திருந்த நாளில் எம்மை நினைத்தீரோ என்று வினாவிய தோழிக்கு, வினைமுற்றி மீண்ட தலைமகன் கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. தலைவியைக் காணவேண்டும் என்ற வேட்கை இருந்த போதிலும், 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்று உலக இயல்பிற்கு அஞ்சி மீண்டு வந்திலன். நீங்கிய காமத்தனாய்ப் பிரிந்து சென்றவன், பெருகிய காமத்தனாய்த் திரும்புதல் கூறப்பட்டது. கடலின் நீர், மேகங்களால், மலை முகட்டில் பெய்யப் பெற்று. அருவியாய்ப் பெருகிக் கடலை மீண்டும் அடையும் போது இறைத்து உண்ணும் அளவினதாய் வற்றிவிடும். தலைவியால் உண்டாகிய காம வேட்கை, தலைவற்கு வினைமுற்றியவழிப் பெருகி, அவளை நேரில் கண்டவழி தீர்ந்துவிடும் எனத் தோழியிடம் கூறினான். காம வேட்கை வினைவயின் பிரியும் போது பெருகுவதில்லை. வினை செய்யும் இடத்திலும் நினைக்கப்படுவதில்லை. வினை முடித்த வழி, தலைவியை அடைய

Koviloor Digital Library

வேண்டும் என்ற வேட்கையைத்தவிர வேறு எவ்வகை உணர்வும் இருப்பதில்லை. தலைமகளை அடைந்த பின் அவ்வேட்கை தணிந்து விடும். இதுவே 'உலகத்துப் பண்பு' எனப்பட்டது. பரிமேலழகர், 'வினைவயின் பிரிவுழிக் காம இன்பம் நோக்காமையும், அது முடிந்துழி, அவ்வின்பமே நோக்குதலும், தலைமகற்கு இயல்பு, என்றார். (திருக்குறள், 1264).

சொற்பொருள் :

உள்ளுதல்	–	உள்ளத்தில் எண்ணுதல்
நினைத்தல்	–	மீட்டும், மீட்டும் எண்ணுதல்
மராஅம்	–	கடம்பமரம்
கோடு	–	கிளை
மலிர்நிறை	–	மிக்க வெள்ளம்
கடைக்கொள	–	முடிவுபெற

மேற்கோள் :

1. "எள்ளல் நோனாப் பொருள் தரல் விருப்பொடு
நாணுத் தளையாக வைகி" அகநானூறு,29

2. "மீட்டு வந்த தலைவனே இடைச் சுரத்து எம்மை
மறந்தீரோ என வினவிய தோழிக்குத் தலைவன்
கூற்று"

தொல்காப்பியம், கற்பியல்,5 நச்சினார்க்கினியர்.

3. "கிழவி நிலையே வினையிடத்து உரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்".

தொல்காப்பியம், கற்பியல்,45

பொருள் முடிவு :

உள்ளினென் அல்லெனோ; நினைந்தனென் அல்லெனோ; காமம் கடைக் கொள மருண்டனென் அல்லெனோ.

Koviloor Digital Library

100. குறிஞ்சி

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பரித்தென,
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனளே –
மணத்தற்கு அரிய, பணைப் பெருந் தோளே.

பாங்கற்கு உரைத்தது. அல்ல குறிப்பட்டு மீள்கின்றான், தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉம் ஆம். – கபிலர்.

பொருள் :

காந்தளை இயற்கை வேலியாக உடைய இச்சிறுகுடியில் வாழ்பவர், அருவியை உடைய பரந்த நிலத்தில் மலை நெல்லை விதைப்பர். அவற்றிடையே களையாக வளர்ந்துள்ள பருத்த இலையையுடைய காட்டு மல்லிகையையும், பசிய மரலையும் பறித்து எறிவர். தாங்கள் உணவின்றிப் பசிப்பாராயின், வன்கண்மையையுடைய யானையின் கொம்பை விற்று, அதன் விலையால் பெறப்படும் உணவை உண்டு வாழ்வர். இத்தகைய, வலிய வில்லையுடைய ஓரி என்னும் வள்ளலின், கொல்லி மலையின் மேற்குப் பகுதியில் எழுதப்பட்ட பாவைபோன்ற என் காதலி, காண்பவர்க்கு அறியாமை வருவதற்குக் காரணமாக விளங்குபவள். அவளுடைய மூங்கிலைப் போன்ற பருத்த தோள்கள், தழுவுதற்கு அரியன.

விளக்கம் :

காமத்தால் மடமை எய்துதல் தகாது என்று கழறிய பாங்கனுக்குத் தலைவன், தன்னை ஒருத்தி, கொல்லிப் பாவை போல மடமையுண்டாக்கினாள் என்றும், அவள் தோள்கள் தழுவுதற்கு அரியன என்றும் கூறித் தன்னுடைய குறையை முடிக்குமாறு வேண்டினான்.

மலைவாழ்மக்கள், அருவி சார்ந்த ஈரப்பசையுள்ள தம்நிலங்களில் மலைநெல்லை விதைப்பதையும், அவற்றின் களைகளை நீக்குவதையும், இப்பாடல் குறிப்பதாகும். அவர்களுடைய சிற்றூர் இயற்கை வேலியால் பாதுகாப்புடையன. தம் உணவின் பொருட்டு, யானைக் கொம்புகளை விற்பதும் உண்டு, வீரம் மிக்க வல்வில் ஓரி காத்தலால், அந்நிலப்பகுதி, பசியின்றி, அச்சமின்றி, வளம் சுரப்பதாயிற்று. இப்பாடல், கொல்லி

Koviloor Digital Library

மலையின் இயற்கை வளத்தையும், மக்கள் வாழ்க்கையையும் சுட்டுவதாகும்.

வல்வில் ஓரி – கடையெழு வள்ளல்களில் ஒருவன். மழவர் பெருமகன். கொல்லிமலைத் தலைவன். காரியால் கொல்லப்பட்டவன். ஒரு காலத்தில் பல பொருள்களில் ஊடுருவிச் செல்லுமாறு அம்பு எய்வதில் வல்லவன். இவனை வன்பரணர் பாடிய பாடல் புறநானூற்றில் உள்ளது. கடவுள் எழுதிய பாவை இவன் மலையில் இருந்தது.

தோழி குறிப்பிட்ட இடத்தில் வந்து அல்ல குறிப்பட்டு தலைவியைப் பெறாமல் நீங்கிய தலைவன், தன் நெஞ்சிற்குக் கூறுவதாகவும் இப்பாடலுக்கு உரை விளக்கம் தருவர்.

சொற்பொருள் :

ஐவனம்	–	மலைநெல்
குளவி	–	காட்டு மல்லிகை
மரல்	–	மருள் எனவும் வழங்கப்பெறும். ஒருவகைக் கற்றாழை
கடுங்கண்	–	தறுகண்மை
நொடுத்தல்	–	விற்றல்
மடவந்தனள்	–	அறியாமை மிகுதற்குக் காரணமாயினள்.
பணை	–	மூங்கில்

மேற்கோள் :

1. "மைபடு சிலம்பில் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும் நாடன்"
குறுந்தொகை,371

2. "உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடை மல்கு குளவியொடு கமழும் சாரல்"
புறநானூறு,90

3. "மகிழ்நொடை பெறாஅர் ஆகி, நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி" அகநானூறு,245

4. "கடுங் கண்ண கொல் களிற்றால்" புறநானூறு,14

Koviloor Digital Library

5. "கொல்லி .... கடவுள் எழுதிய பாவையின்
மடவதின் மாண்ட மாஅயோளே" அகநானூறு,62

6. "கொல்லியாண்ட வல்வில் ஓரி" புறநானூறு,158

7. "தீண்டலும் இயைவது கொல்லோ
நாறிரும் கூந்தல் கொடிச்சி தோளே"
குறுந்தொகை,272

பொருள் முடிவு :

(நான் கண்டு காமுற்ற மகள்) பாவையின் மடவந்தனள், அவள் தோள், மணத்தற்கு அரிய.

Koviloor Digital Library

101. குறிஞ்சி

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்,
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்,
இரண்டும் தூக்கின் சீர் சாலாவே -
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி,
மாண்வரி அல்குல், குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலொடு எமக்கே.

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது; (பொருள்) வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியதூஉம் ஆம்.

பருஉ மோவாய்ப் பதுமன்.

பொருள் :

விரிந்த அலைகளையுடைய பெரிய கடலால் சூழப்பெற்ற இப்பூவுலக இன்பமும், பெறுதற்கரிய சிறப்புக்களையுடைய தேவருலக இன்பமும், ஆகிய இரண்டனையும் தாமரைப் பூப் போன்ற, மையுண்ட கண்களையும், பொன்னைப் போன்ற நிறத்தினையும், அழகிய வரிகளையுடைய அல்குலையும் உடைய தலைவியினுடைய, தோளொடு தோள் மாறுபடத் துயிலும், அரைநாள் இன்பத்தொடு ஒருங்குவைத்து நிறைகாணின், எமக்கு அவை, வைகல் இன்பத்திற்கு நிறை ஆற்றா.

விளக்கம் :

இம்மை நுகர்ச்சிக்கு இவ்வுலகமும், தானம், தவம் முதலியவற்றால் பெறலாகும் மறுமை நுகர்ச்சிக்குப் புத்தேள் உலகமும் இடனாதல் கூறப்பட்டது. பொருளினும் காமம் வலிது எனக் கொண்ட; தலைவன் நெஞ்சத்தில் தோன்றிய உணர்வாக இப்பாடலை இளம்பூரணர் எடுத்துக் காட்டுவர். (தொல்காப்பியம், கற்பியல்,5). இம்மை மறுமை இன்பங்களை அளக்கும் துலாக்கோல் இன்மை குறிக்கப்பட்டது. உடலில் உயிர் உள்ள வரை, இவ்வுலகில் நுகரும் இன்பமும், நல்வினைப் பயன் உள்ளவரை, புத்தேள் உலகில் நுகரும் இன்பமும் வாய்க்குமேயன்றி அவை எஞ்ஞான்றும் நிலைத்த இன்பமாகா. வென்றியால் பெறும் இவ்வுலக இன்பமும், அறத்தான் பெறலாகும், புத்தேள் உலக இன்பமும் ஆகிய இரண்டும், காதலர் ஒத்த அன்பினால் எய்தும் இன்பத்திற்கு இணையாகா என்றான். விழித்தும் உறங்கியும் இவ்வுலகில் பெறும் இன்பம், இமையாமல் விழித்துப் பெறும் புத்தேள் உலகில் பெறும் இன்பம் ஆகிய இரண்டும், வினையொழிந்து தலைவியின் தோளில் துயிலும்

Koviloor Digital Library

இன்பத்திற்கு இணையாகா என்றனன். கண், மேனி, அல்குல், தோள் ஆகிய உறுப்புக்களின் சிறப்புக்களைக் கூறி, புத்தேள் உலகில் இத்தகைய நுகர்ச்சிக்குரிய கருவிகள் இல்லாமை குறித்தான். கண், மேனி, அல்குல் ஆகியவற்றை அடைமொழிதந்து சிறப்பித்துக் கூறிய தலைவன், தலைவியின் தோளுக்கு அடைமொழி ஏதும் இன்றிக் கூறியதன் நோக்கம், தோளினால் பெறப்படும் இன்பத்திற்கு உவமை எதுவும் கூற இயலாது என்ற கருத்துப் பற்றியதாகும்.

இவ்வுலகம், துன்பமும் இன்பமும் கலந்தது. புத்தேள் உலகம் இன்பமே நிறைந்தது.

தோள் மாறுபடுதல் – தலைவி வலத்தோளில் தன் இடத் தோளும், தலைவி இடத்தோளில் தன் வலத்தோளும் செறியக் கிடத்தல்.

சொற்பொருள் :

புத்தேள்	–	தேவர்
சீர்	–	நிறை
தூக்கின்	–	ஒப்பிட்டு ஆராய்ந்தால்
மேனி	–	நிறம்
குறுமகள்	–	இளையள்
படூஉம் வைகல்	–	துயிலுவதற்குரிய அரைநாள் இரவு.

மேற்கோள் :

1. "நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சிக்கண் தலைவன் கூற்று"
தொல்காப்பியம், கற்பியல்,5 நச்சினார்க்கினியர்
2. "தவத்தானும் தானத்தானும் அன்றிப் பெறலாகாச் சுவர்க்கம்"
இறையனார் களவியல் உரை,2
3. "பொன்னேர் மேனி நன்னலம் சிதைத்தோன்"
குறுந்தொகை,319
4. "பூப்போல் உண்கண், புலம்பு முத்து உறைப்ப"
முல்லைப் பாட்டு,23

பொருள்முடிவு :

எமக்கு, குறுமகள் தோள் மாறுபடூஉம் வைகலோடு, கடல் வளைஇய உலகமும், புத்தேள் நாடும் ஆகிய இரண்டும் தூக்கின் சீர் சாலா.

Koviloor Digital Library

102. நெய்தல்

உள்ளின், உள்ளம் வேமே; உள்ளாது
இருப்பின், எம் அளவைத்து அன்றே; வருந்தி
வான் தோய்வற்றே, காமம்;
சான்றோர் அல்லர், யாம் மரீஇயோரே.

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன்?' என்றது. ஔவையார்.

பொருள் :

காதலரை நினைத்தால், அவர் பிரிவு என்னும் தீயினால், நினைக்கின்ற என்மனம் வேகாநிற்கும். அவரை நினையாமல் உயிர் வைத்திருத்தல் எம்முடைய ஆற்றலுக்கு உட்பட்டதன்று. காமநோய் எம்மைச் சாகும்படி வருந்தச் செய்து, வானத்திலும் தோய்வது போன்ற பெருக்கத்தை உடையது. யாம் உள்ளம் பொருந்தியவர் நம்மை அருளாமையால் சால்புடையர் அல்லர்.

விளக்கம் :

என் துயரை அறியாமையால், அன்பின்மையும்; ஊரார் அலர் தூற்றுவதை எண்ணாது உறைதலின், நாணமின்மையும்; மனைவியுடன் உறையும் உலகியலை மறத்தலால், ஒப்புரவின்மையும்; தன் துயர் துடைக்க வாராமையால், கண்ணோட்டமின்மையும்; தான் குறித்த நாளில் வாராமையால், வாய்மையின்மையும் உடைமையால் தலைவர் சான்றோர் அல்லர் என்றாள். சான்றாண்மைக்கு உரிய இயல்புகளாகத் திருவள்ளுவர், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தனைக் கூறுவர். 'யாம் மரீஇயோர்', என்பதால், அவர் உள்ளம் பொருந்தாமை பெறப்படும். சான்றோராயின் பொருட் செல்வத்தை மதியார், அருட் செல்வத்தையே மதிப்பர். ஆதலால், தம்மால் விரும்பப் பெற்றவர் சான்றோர் அல்லர் என்றாள். காதலுடைய நினைப்பும் வருத்துகின்றது; அவனை நினையாமையும் வருத்துகின்றது. உயிர்நீத்து வானில் சென்றாலும் இக்காமம் ஆண்டும் வந்து வருத்தும். ஆதலின் யான் யாது செய்வேன் எனக் கலங்கினாள்.

சொற்பொருள் :

வற்று – வலிமையுடையது
சான்றோர் – சால்புடையோர்

Koviloor Digital Library

மரீஇயோர் – *உள்ளம் பொருந்தியோர்*

மேற்கோள் :

1. "காதல் கைம்மிகல்" என்ற மெய்ப்பாடு.
   தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,23 பேராசிரியர்.
2. "வழிபாடு மறுத்தல்"
   தொல்காப்பியம், களவியல்,20 நச்சினார்க்கினியர்
3. "உள்ளின் உள்நோய் மல்கும்" *குறுந்தொகை,150*
4. "உள்ளின் உள்ளம் வேமே", *நற்றிணை,184*
5. "அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடு
   ஐந்து சால்பு ஊன்றிய தூண்." *திருக்குறள்,983.*
6. "உள்ளினும் உள்ளம் சுடும்" *திருக்குறள்,1207*

பொருள் முடிவு :

உள்ளின் உள்ளம் வேம். உள்ளாதிருப்பின் எம் அளவைத் தன்று. காமம் வான்தோய்வற்று. மரீஇயோர் சான்றோர் அல்லர்.

Koviloor Digital Library

103. நெய்தல்

கடும்புனல் தொடுத்த நடுங்கு அளுர் அள்ளல்,
கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய்,
இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்
தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர், நம் காதலர்;
வாழேன் போல்வல் – தோழி! – யானே.

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

வாயிலான் தேவன்

பொருள் :

தோழி. விரைவாக ஓடிவரும் நீரினால் குவிக்கப்பட்ட கால் நடுங்குவதற்கு ஏதுவாகிய துன்பத்தைத் தருவது சேற்று நிலமாகும். அதில் நின்று, நாரை ஒன்று இரைதேடிக் கொண்டிருக்கும். அது முள்முருக்க மலரின் இதழைப் போன்ற மெல்லிய சிறகையும், செம்மை நிறமுடைய அலகையும் உடையது. அந்நாரைக்குத் துன்பம் உண்டாகும்படி தூவுகின்ற நீர்த்துளிகளையுடைய, பிரிந்தார் துயர் மிகுதற்குக் காரணமாகிய வாடைக்காற்றையுடைய கூதிர்காலத்திலும், பிரிந்து சென்ற நம்முடைய காதலர் வருவாரல்லர், யான் வாழ்வேனல்லேன்.

விளக்கம் :

இரைதேடும் முயற்சியையுடைய நாரைகளும் தம் முயற்சியைக் கைவிட்டு நீங்கும் வண்ணம், வழுக்கும் சேற்று நிலமும், நீர்த்துளிகளை வீசும் வாடைக் காற்றும் உள்ளன. ஆனால், 'நம் காதலர் மட்டும் தம் முயற்சியைக் கைவிட்டு ஈண்டு வந்திலர்', எனக் குறித்தாள். அவர் வருவதாக உரைத்த கார்ப்பருவம் முடிந்து, கூதிர்ப்பருவம் வந்த போதிலும் அவர் வந்திலர் எனக் கவன்றாள். நம் காதலை அவர் உடையர் என்று கூறி, அவர் காதலை யாம் பெற்றிலேம் என அருத்தாபத்தியால் குறித்தாள். இரைதேடும் நாரைக்கு எவ்வமாகத் துவலை தூற்றுதல் போல், தனக்கு எவ்வமாக வாடை துன்புறுத்துகின்றது என்றாள். தூதுபோதற்கு ஏற்றதாகத் தேர்ந்து கொண்டமையின் நாரையைக் குறிப்பிட்டாள். விரைந்து செல்வதற்கு ஏற்ப அதன் சிறகுகளும், உண்மை நிலையை உரைத்தற்கு ஏற்ப அதன் செவ்வாயும் தலைவியால் நினைக்கப்பட்டன. பிரிவுக்காலம் நீட்டித்தமையால் 'வாழேன்' என்றாள்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அஞர்	–	துன்பம்
அள்ளல்	–	சேறு
கவிர்	–	முள்முருக்கு
தூவி	–	மெல்லிய சிறகு
எவ்வம்	–	துன்பம்
துவலை	–	நீர்த்துளி
போல்வர், போல்வல்	–	ஒப்பில் போலி. உரையசை.

மேற்கோள் :

1. "மட நடை நாரை, பதைப்ப ஒழிந்த
செம் மறுத் தூவி" ஐங்குறுநூறு,156
2. "இரைதேரும் தடந்தாள் நாரை" நற்றிணை,91
3. "இன்னாது எறிக்கும் வாடை" குறுந்தொகை,110

பொருள் முடிவு :

தோழி. நம் காதலர் வாடையும் வாரார் – யான் வாழேன்.

Koviloor Digital Library

104. பாலை

அம்ம வாழி, தோழி! காதலர்,
நூல் அறு முத்தின் தண்சிதர் உறைப்ப,
தாளித் தண்பவர் நாள்ஆ மேயும்
பனிபடு நாளே, பிரிந்தனர்;
பிரியும் நாளும் பல ஆகுபவே!

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது. 'சிறிய உள்ளிப் பெரிய மறக்கவேண்டாவோ?' என்ற தோழிக்குக் கிழத்தி கூறியதூஉம் ஆம். காவன் முல்லைப் பூதனார்.

பொருள் :

தோழி. வாழ்க. ஒன்று கூறுவன், கேட்பாயாக. நம் காதலர், கோத்த நூல்அற்ற முத்துக்களைப் போல, குளிர்ந்த பனித்துளிகள் துளிக்க, தாளிப்புல்லின் குளிர்ந்த கொடியை, ஆனினங்கள் விடியலில் மேயும், தான் வருவதாகக் கூறிய பனியுடைய நாளில் பிரிந்து உறைவாராயினார். இனிப் பிரிந்து உறையும் ஒவ்வொரு நாளும், பல நாட்களாக ஆதல் உறுதியாகும்.

விளக்கம் :

தலைவன் வரும் நாட்களின் எண்ணிக்கை சிறிய என அறிந்து, அவன் வாராது பிரிந்த நாட்களின் எண்ணிக்கை பல என்பதை மறக்க வேண்டும் எனத் தோழி உணர்த்திய வழி அவர் வாராது கழியும் ஒவ்வொரு நாளும், வாராது கழிந்த நாட்களைவிடப் பலவாகத் தோன்று கின்றன, என்றாள். அவர் இல்லாமையால் பனிபடு நாளில் யான் வாழேன், இறந்துபடுவல் என்றாள்.

பனித்துளி தம்மீது பட்ட போதும், அதனைப் பொருட்படுத்தாது பசுக்கூட்டங்கள் தம் தொழிலில் முனையுமாறு போலத் தலைவனும், பனிபடு நாளில், தம் வினையில் ஈடுபாடுகொண்டு பிரிந்து உறைந்தனன். பனித்துளி, ஒன்றோடொன்று தொடர்பின்றித் தனித்தனியே வீழும் காலம் ஆதலின், அதற்கு நூல் அற்ற முத்துக்கள் உவமம் ஆயின. பனிக் காலத்தில் அறுகம்புல்லின் நுனியில் பனித்துளி படிந்து காணப்படும் இயற்கையின் அழகு சுட்டப்பட்டுள்ளது.

தலைவன் செய்த தலையளியை நினைத்துக் கொடுமையை மறக்குமாறு கூறிய தோழிக்குத் தலைவி, தன் ஆற்றாமையை உரைப்பதாகவும் இப்பாடலுக்குப் பொருள் உரைக்கப்படும்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அம்ம – இடைச்சொல் – கேட்பித்தற்கண் வந்தது.
படுதல் – தோன்றுதல்
தாளி – ஒருவகை அறுகம் புல்
சிதர் – பனித்துளி
உறைப்ப – துளிக்க
பவர் – கொடி
நாள் – நாட்காலை

மேற்கோள் :

1. "அள்ளிலைத் தாளி கொய்யுமோனே" புறநானூறு,252
2. "தலைவிக்கு ஒருபொழுது, ஓர் ஊழிபோல் நெடிதாகிய வாடையாய்" நச்சினார்க்கினியர், நெடுநல்வாடை
3. "அம்ம வாழி தோழி" குறுந்தொகை,77
4. "நூல் அறு முத்தின் காலொடு பாறி" குறுந்தொகை,51
5. "பனிப்பவர் மேய்ந்த மா இரு மருப்பின்
மலர்த் தலைக் காரான்"
நற்றிணை,391
6. "ஒருநாள் எழுநாள் போல்| செல்லும் சேட் சென்றார்
வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு" திருக்குறள்,1269

பொருள் முடிவு :

தோழி. காதலர் பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியும் நாளும் பல ஆகுப.

Koviloor Digital Library

105. குறிஞ்சி

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று, நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பு ஆகின்றே.

வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

நக்கீரர்.

பொருள் :

குறவனுக்குரிய தோட்டத்தின்கண் விளைந்த பொன்னைப் போன்ற சிறிய தினையில், சுற்றத்தாருடன் புதிது உண்டற்காகக் கடவுளுக்குப் பலியாக இட்ட வளம் பொருந்திய கதிரைக், கடவுட்கு இட்டது அறியாமல், அதன் செழுமைகண்டு உண்ட மயில், தெய்வம் ஏறி ஆடுகின்றவள் வெறியாடுகின்ற அழகினைப் போல, உள்ளம் வெந்து, உடல் நடுங்கும். இத்தகைய, தெய்வங்கள் உறையும் மலை நாட்டினையுடையவனது நட்பு, நீர் மிக்க கண்களால், அயலார் பலராலும் நினைப்பதற்குக் காரணமாயிற்று.

விளக்கம் :

தெய்வத்திற்குப் படைக்கப்பட்ட தினைக் கதிரைத் தான் உண்ணுதல் தகாது என்ற அறிவின்றி, கண்ணுக்கு இனிய அதன் செழுமைகண்டு மயில் உண்டது. மலைநாடன், தன்னுடன் நட்புச் செய்தற்கு அருமையும், பெருமையும் உடையவன் என அறியாது, தலைவி கண்ணும் மனமும் கவரும் அவன் வளமைகண்டு நட்புச் செய்தனள். வெறியுற்ற மகள், ஆடுமாறுபோல, மயில் நடுங்கிற்று. தலைவியும் நீர்மலி கண்ணொடு, அவன் வரைவு நீட்டித்தவிடத்துக் கலங்குவாளாயினள். மயிலின் நிலை பலராலும் அறியப்பட்டமை போலத் தலைவியின் களவும் பலரால் நினைக்கப்பட்டு அலராயிற்று.

தினைப் புனத்தில், பலகதிர்களில், சில கதிர்களைத் தெய்வத்திற்கு என இட்டுவைத்தல் மரபு. தலைவனின் களவு நீட்டித்த செயல், தலைவியின் நீர் மலிந்த கண்ணிற்கும், ஊரார் அறிந்து அலர் மொழிவதற்கும் ஏதுவாயிற்று.

Koviloor Digital Library

சொற்பொருள் :

புனவன்	–	புனத்தை முயன்று ஆக்கியவன்
துடவை	–	தோட்டம்
கடி	–	புதுமை (உரிச்சொல்)
கடி உண் கடவுள்	–	குறவர், கிளையுடன் புதிது உண்டற்குக் காரணமாகிய கடவுள்.
குரல்	–	தினைக் கதிர்
ஆடுமகள்	–	தெய்வம் ஏறி ஆடுபவள்
வெறி	–	வெறியாட்டு
வனப்பு	–	தோற்றம்
சூர்	–	தெய்வம், அச்சம்
கேண்மை	–	நட்பு

மேற்கோள் :

1. "வரைவு இடை வைத்த காலத்து வருந்திய தலைவி தானே கூறியது" தொல்காப்பியம், களவியல்,21 இளம்பூரணர்.
2. "புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை" குறுந்தொகை,133
3. "வெறிகொள் பாவையிற் பொலிந்த" அகநானூறு,370
4. "சூர் நசைந்தனையையாய் நடுங்கல் கண்டே" குறுந்தொகை,52
5. "சூர் உறு மஞ்ஞையின் நடுங்க" குறிஞ்சிப்பாட்டு,169
6. "சிறுதினை முந்துவிளையாணர் நாட்டுதிது உண்மார்" புறநானூறு,168
7. "மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால், எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து" திருக்குறள்,1180

பொருள் முடிவு :

மலைநாடன் கேண்மை, கண்ணொடு நினைப்பாகின்று.

Koviloor Digital Library

106. குறிஞ்சி

புல்வீழ் இற்றிக் கல் இவர் வெள்வேர்
வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்
தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று – வாழி, தோழி! – நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு,
'தான் மணந்தனையம்' என விடுகம் தூதே.

தலைமகன் தூதுகண்டு, கிழத்தி தோழிக்குக் கூறியது. கபிலர்.

பொருள் :

தோழி, நீ வாழ்வாயாக. புல்லிய வெண்ணிற விழுதுகளைக் கொண்ட, கல்லில் படரும் இற்றி மரத்தின் வேர்கள், மலையிலிருந்து வழிகின்ற அருவியைப் போலத் தோன்றும், இத்தகைய நாட்டின் தலைவனின் குற்றமில்லாத உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட சொல், நம்மிடம் தூதாக வந்தது. யாமும், நெய் பெய்யப்பட்ட தீ, கிளர்ந்து எழுந்து அதனை ஏற்றுக் கொள்வது போல, அத்தூதினை ஏற்றுக்கொண்டு, அவன், நம்மை மணந்த நாளின் தன்மையம் எனத் தூதுவிடுவோம்.

விளக்கம் :

நெஞ்சின் மிக்கது வாய் சோர்ந்து சொல்லாக வெளிப்படும் ஆதலின், தலைவன் தன்பால் உண்மையிலேயே அன்புடையவன் என்பதை அவன் தூதுரை கொண்டு உணர்ந்தனள். தூது உரைப்பானைக் கூறாமல், தூது உரையைக் கூறினாள், அதுவே தான் விரும்புவதாகலின்.

இற்றியின் விழுதுகள், மலையில் படர்ந்து அருவி போலத் தோன்றும். ஒன்று மற்றொன்றாகத் தோன்றுதல் தலைவனும் நம்மால் உள்ளவாறு அறியப்படாமல் மாறித் தோன்றுவான் என்ற தலைவியின் குறிப்பினை உணர்த்தும். அவன், தன்கண் அன்புடையவனாய்த் தலையளி செய்து, அன்பிலனாய்ப் பிரிந்தமை குறித்தாள். இற்றி மரம், புறத்தே இலை, கோடு முதலியவற்றோடு வளர்ந்து புறப்பட்ட போதிலும், தனக்கு இடனாகிய மலையை விடாது தன் விழுதுகளால் பற்றிக் கொள்கின்றது. தலைவனும், புறத்தே பரத்தமை மேற்கொண்டு ஒழுகினும், தனக்கு இடனாகிய மனையை விடாது தூதுமொழியால் பற்றிக் கொண்டனன். தீயில் நெய் பெய்யப்பட்ட போது, அத்தீயானது மேல் நோக்கி எழுந்து, நெய்யை ஏற்றுக் கொண்டு, தான் அவியாது நிற்றல்

Koviloor Digital Library

போல, நாமும் தலைவனின் தூதுமொழிகளை ஏற்று, மனம் தளராமல் ஆறுதல் அடைவோம் எனத் தலைவி குறித்தனள். கொடுப்பக் கோடல் கற்பாதலின், தலைவி தன் காதலனைத் தீமுன்னர்க் கைப்பற்றிய கரண நிகழ்ச்சியை ஈண்டு நினைந்தனள். கற்புநெறி மேற்கொண்ட அவள், தன் கணவனின் புறத்தொழுக்கத்திற்கு நாணி, அவனை வெறாமல் அவன் தூது அனுப்பிய வழி ஏற்றுக் கொண்டனள். இப்பாடலை இளம்பூரணர், களவிற்கு உரியதாக உரைப்பர்.

சொற்பொருள் :

புல் – புல்லிய

வீழ் – விழுது

இவர் – படர்தல்

இழிதல் – இறங்குதல்

கிளவி – சொல் – தூதுரை

மேற்கோள் :

1. "தூதுமுனிவின்மை" தொல்காப்பியம்,
களவியல்,21 இளம்பூரணர்

2. "களவினுள் நெய்பெய் தீயின் எதிர் கொள்ளலாகாமையின் தூது முனிவின்மை, கற்பிற்கு உரியது"
தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,23. பேராசிரியர்.

3. "தூது கண்டு தலைவி கூறியது".
தொல்காப்பியம், கற்பியல்,6 நச்சினார்க்கினியர்

4. "குறுங்கால் இற்றிப் புன்தலை நெடுவீழ்" அகநானூறு,57

5. "நெஞ்சு வாய் அவிழ்ந்தனர் காதலர்" அகநானூறு,129

6. "தெறல் அரும் கடவுள் முன்னர்த் தோற்றி
மெல் இறை முன்கைப் பற்றிய சொல்" அகநானூறு,369

பொருள் முடிவு :

தோழி. நாடன்கிளவி நம் வயின் வந்தன்று. யாமும் எதிர் கொண்டு தூதுவிடுகம்.

Koviloor Digital Library

107. மருதம்

குவி இணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணம்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத்து இல்எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்குஇரை ஆகி,
கடுநவைப் படீஇயரோ, நீயே - நெடு நீர்
யாணர் ஊரனொடு வதிந்த
ஏமஇன் துயில் எடுப்பியோயே!

பொருள் முற்றி வந்த தலைமகனை உடைய கிழத்தி காமம் மிக்க கழிபடர் கிளவியால் கூறியது. மதுரைக் கண்ணனார்.

பொருள் :

குவிந்த கொத்துக்களையுடைய செங்காந்தளின் ஒள்ளிய பூவைப் போன்ற, தொகுதியாக விளங்கும், சிவந்த கொண்டையையுடைய கோழிக் கூட்டங்களை வலிந்து கொள்ளும் சேவலே. நெடுங்கால தாமதத்தின் பின் புதுவருவாய்போல் வந்த ஊரனாகிய தலைவனோடு தங்கிய, இன்பத்திற்குக் காரணமான இனிய துயிலினின்றும் என்னை எழுப்பினை. இருள்செறிந்த இடையிரவின்கண் வீட்டில் உள்ள எலிகளை உண்ணும் பொருட்டுப் பார்த்திருக்கும் காட்டுப்பூனையின் குட்டிக்குப் பலநாள் இட்டு வைத்து உண்ணும் உணவாகி, நீ மிக்க துன்பத்தை அடைவாயாக.

விளக்கம் :

பொருள்முற்றித் தலைவன் தன் இல்லம் வந்தவழி, அவனுடன் கூடிமகிழ்ந்த தலைவி, இரவுபுலர்ந்தது கண்டு துயருற்றாள். விடியலின் வருகையை உணர்த்திய சேவலைக் கண்டு சினம் கொண்டனள். இயல்பாகக் கூவும் சேவலைக் கண்டு தன்னுடைய இனிய உறக்கத்தை எழுப்பக் கூவியதாக எண்ணி வெகுண்டனள்.

காட்டுப் பூனையின் குட்டிக்கு இல்லில் கிடைக்கும் எலியே, உணவாகப் போதுமானது. அதற்குச் சேவலே உணவாகக் கிடைத்தால், பலநாள் கவலையின்றி இட்டுவைத்து உண்ண இயலும். சேவல், கோழிக் கூட்டங்களை வலிந்து கொள்ளும் இயல்புடையது. ஒத்த காதலில் பயிலாதது. தலைவி, தலைவனின் இயல்புகளும் இவ்வாறு இருத்தலைக் குறிப்பினால் எண்ணினள். நெடும் பொழுது தலைவனுடன் கூடப் பெறும் தனது இன்பத்தைக் கெடுத்தமையால், அதனை, வெருகின் குட்டிக்கு நெடுநாள் இரையாக வேண்டும் என்றனள். அவ்வெருகின் குட்டிக்கு உன்னைக் கொன்று இரையாக்குவேன் என்று தலைவி குறித்ததாகவும் கொள்ளலாம். 'யாமத்துப் படீஇயர்' என்ற தொடர் அது

Koviloor Digital Library

யாமத்தில் தன் உறவைப் பிரித்தமையைச் சுட்டிற்று. 'கடு நவைப் படீஇயர்' என்ற தொடர், கடிய தண்டம் பெறுக எனவும் பொருள்படும்.

சொற்பொருள் :

இணர் – பூங்கொத்து
தோன்றி – செங்காந்தள்
கணம்கொள்சேவல் – கோழிக் கூட்டத்தை வலிந்து கொள்ளும் சேவல்
பிள்ளை வெருகு – காட்டுப் பூனையின் குட்டி
நெற்றி – சேவலின் கொண்டை
அல்கு இரை – பலநாள் இட்டுவைத்து உண்ணும் இரை
நவை – குற்றம், இறந்துபாடு
யாணர் – புதுவருவாய் (உரிச்சொல்)
ஏமம் – இன்பம்
எடுப்புதல் – எழுப்புதல்
நெடுநீர் – நெடுங்காலத் தாமதம். ஆழமான நீரும் ஆம்

மேற்கோள் :

1. "கொய்ம் மலர தோன்றிபோல், சூட்டுடைய சேவலும்"
சீவகசிந்தாமணி,73

2. "நள்ளென்றன்றே யாமம்" குறுந்தொகை,6

3. "கொடுவாய்ப் பேடைக்கு அல்கு இரை தரீஇய"
அகநானூறு,3

4. "குவி அடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊன் நசைப் பிணவின் உயங்கு பசி களைஇயர்,
தளிர் புரை கொடிற்றின், செறிமயிர் எருத்தின்
கதிர்த்த சென்னிக் கவிர்பூ அன்ன,
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்" அகநானூறு,367

பொருள் முடிவு :

சேவல்! துயில் எடுப்பியோய். நீ கடுநவைப் படீஇயர்

Koviloor Digital Library

108. முல்லை

மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படர, புறவில்
பாசிலை முல்லை ஆசு இல் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று;
உய்யேன் போல்வல் – தோழி – யானே.

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

வாயிலான் தேவன்.

பொருள் :

தோழி. மேகங்கள் தவழ்ந்து திரிதற்கு இடனாகிய மலையைச் சார்ந்த சிற்றூரின்கண், புறத்தே மேய்வதற்காகச் சென்ற பசுக்கள், தம் கன்றுகளை நினைத்து வரும்படியாக முல்லை நிலத்தில், பசிய இலைகளையுடைய முல்லையின், குற்றமில்லாத சிறந்த வெண்ணிறமலர், செக்கர் வானின் அழகினைக் கொண்டது. இக்கார்ப் பருவத்து மாலைப் பொழுதில் தலைவர் வாராமையால் யான் உயிர்வாழேன்.

விளக்கம் :

கார்ப்பருவத்தின் வருகையைக் கண்ட தலைவி, தலைவன் வாராமையால் ஆற்றாளாயினாள். மேகங்கள் வானில் தவழ்தல், கார்ப்பருவத்தில் நிகழ்வது. கறவை, தம் கன்றுகளை நாடி அடைதலும், புறவில் முல்லை பூத்தலும் மாலையில் நிகழ்வன. கறவை, மாலையில் தம் கன்றைநாடி வருவதைக் கண்ட தலைவி, தான் மகப்பெற்று, இங்ஙனம் அன்பு செய்வதற்கு ஏதுவாகிய காதலர் வாராமையை நினைந்தாள். முல்லை, பெண்கள் தம் கற்பிற்கு அடையாளமாகச் சூடும் மலராகும். தலைவனைப் பிரிந்தமையால், அம்மலர் சூடப் பெறாது கழிதல் நினைந்தாள். முல்லையின் வெண்ணிற மலர்கள் விண்மீன்களாகவும், செம்புலம், செக்கர் வானமாகவும் தோற்றி, யாண்டும் கார்ப்பருவத்தின் காட்சியே தனக்குத் தெரிவதாகத் தலைவி நினைந்தாள். இம்மாலையிலும் ஒருகால் அவர் வருதல் கூடும் என்ற நசையால், தான் உயிர்வாழ்வதாகக் குறித்தாள். 'யானே' என்ற சொல்லின் ஏகாரம், பிரிநிலையாய், 'அவர் என்னை நீத்து உய்யும் வலிமையுடையார்' என்பதைக் குறித்தது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

கறவை	–	பசு
புறவு	–	முல்லை நிலம்
செவ்வி	–	அழகு
வான் பூ	–	வெண்ணிற மலர்
போல்வல்	–	உரையசை, ஒப்பில் போலி.

மேற்கோள் :

1. "மால்வரை மழை விளையாடும் நாடன்" குறுந்தொகை,263
2. "ஆன்கணம், கன்று பயிர் குரல, மன்றுநிறை புகுதர" குறிஞ்சிப்பாட்டு, 217-8
3. "கன்றுபயிர் குரல, மன்றுநிறை புகுதரும்" அகநானூறு,64
4. "வாரார் போல்வர், நம் காதலர்,
வாழேன் போல்வல் தோழி யானே" குறுந்தொகை,103
5. "முல்லை, வாழியோ முல்லை, நீ,
நின் சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை" குறுந்தொகை,162

பொருள் முடிவு :

தோழி. முல்லை வான்பூச் செவ்வான் செவ்வி கொண்டன்று. யான் உய்யேன்.

Koviloor Digital Library

109. நெய்தல்

முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங் கிளை
புணரி இகுதிரை தரூஉம் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்,
இன்னது மன்னோ, நல்நுதல் கவினே!

தலைவன் சிறைப்புறமாக, தலைவி வேறுபாடு கண்ட புறத்தார், அலர் கூறுகின்றமை தோன்ற, தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது

நம்பி குட்டுவன்.

பொருள் :

முள்ளைப் போன்ற கால்களையுடைய இறாமீனின், வளைந்த முதுகினையுடைய பெரிய இனத்தை, கடலில் தாழும் அலை, கொண்டு வந்து தருதற்கு இடனாகிய துறையை உடைய தலைவன், உடன் இருந்த நாளிலும் நின் நல்ல நுதலின் அழகு, இவ்வாறு பிறர் அறியும்படித்தாய் வருந்துவதற்கு உரியதாயிற்று.

விளக்கம் :

தலைவன் வரைந்து கொண்டாலன்றித் தலைவியின் வருத்தம் நீங்கப் பெறாது என, அவன் சிறைப்புறத்தானாகத் தோழி, அவனுக்கு உணர்த்துமுகத்தான், தலைவிக்குக் கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. தலைவன், தன்னுடன் இருந்த நாளில் புணர்ச்சியின் மகிழ்ந்தாளாயினும், பிரிதற் குறிப்பு என்ற அச்சத்தால் பிரியாதவழியும் ஒருபடித்தாக வருந்தினள். இத்தகைய மென்மையுடையவளைப் பிரிந்து தனிமைப் படுத்துதல் தகாது என்றும், அவளைப் பிரியாமல் உடனுறைதற்குரிய வினையாகிய வரைவினை மேற்கொள்ள வேண்டும் என்றும் தோழி, சிறைப்புறத்திருந்த தலைவன் அறியக் கூறினள். தலைவன், நுதலை நீவியமையும், அதன் பொலிவிழந்த தன்மையும் உணர்த்த நுதலைச் சிறப்பித்தாள். கடலை இன்றியமையாத இறாமீனைக் கடல் அலை வெளியே தள்ளிப் பலரும் அறியச் செய்தாற்போல, தலைவனை இன்றியமையாத தலைவியை, அவனுடைய வரைவு நீட்டித்தல் புறந்தள்ளிப் பலரும் அறியும்படி செய்தது என்ற குறிப்புப் பொருள் உணர்த்தப்பட்டுள்ளது.

சொற்பொருள் :

முடங்கு – வளைந்த

Koviloor Digital Library

புறம்	–	முதுகு
பெருங்கிளை	–	பெரிய, மீனின் இனம்
புணரி	–	அலை
இகுதிரை	–	தாழும் அலை
துறைவன்	–	நெய்தல் நிலத் தலைவன்

மேற்கோள் :

1. "முடங்கு புற இறவின் மோவாய் ஏற்றை
   எறிதிரை தொகுத்த எக்கர்" — நற்றிணை,211
2. "பிரிவு அஞ்சும், புன்கண் உடைத்தால் புணர்வு" — திருக்குறள், 1152

பொருள் முடிவு :

"துறைவன் புணரிய இருந்த ஞான்றும்
நன்னுதல் கவின் இன்னது மன்"

Koviloor Digital Library

110. முல்லை

வாரார் ஆயினும், வரினும், அவர் நமக்கு
யார் ஆகியரோ – தோழி! – நீர
நீலப் பைம்போது உளரி, புதல
பீலி ஒண்பொறிக் கருவிளை ஆட்டி,
நுண்முள் ஈங்கைச் செவ்அரும்பு ஊழ்த்த
வண்ணத் துய்ம்மலர் உதிர, தண்ணென்று
இன்னாது எறிதரும் வாடையொடு
என் ஆயினள்கொல் என்னாதோரே?

பருவம் கண்டு அழிந்த தலைமகள், தோழிக்கு உரைத்தது; தலைமகனைக் கொடுமை கூறித் தலைமகளைத் தோழி வற்புறுாஇயதூஉம் ஆம். கிள்ளிமங்கலம் கிழார்.

பொருள் :

தோழி. நீரில் உள்ள, மலரும் செவ்வியையுடைய அரும்பினை மலரச்செய்து; புதர்களில் உள்ள மயில்பீலியின் ஒள்ளிய கண்களைப் போன்ற கருவிளை மலர்களை அசைத்து; நுண்ணிய முள்ளையுடைய ஈங்கையின் செந்நிறமுடைய அரும்புகளின் நிறத்தையும், துய்யையும் உடைய மலர்களை உதிர்த்து, குளிர்ச்சியுடையதாகித் துன்பத்தைத் தருவதாய் வீசுகின்ற வாடைக் காற்றினால், நம் காதலி எத் தன்மையுடையவளாக ஆவாளோ என்று நினைந்து கவலையுறாத தலைவர், வாராவிடினும், வந்தபோதிலும் அவர் நமக்கு எத்தகைய உறவினர் ஆவர்.?

விளக்கம் :

தலைவன் குறித்த பருவம் கடந்தவழி, தலைவி ஆற்றாமை மிக்கு வருந்துவதாக இப்பாடல் அமைகின்றது. கூதிர்ப்பருவம் தொடங்குவதற்குமுன் வருவதாகக் கூறிச் சென்றவர், வினை முற்றாமையின் வாரார் ஆயினும், கொடிய இப்பருவத்தில் தனிமைத் துயரால் நம் காதலி எவ்வாறு உள்ளாளோ என ஓர் அன்புச் சொல்லையாவது தூதுவிடுத்துக் கூறியிருக்கலாம். வாடைக்காற்று தன்னைக் கொன்றொழித்த பின்னர், அவர் வருதலால் எப்பயன் விளைதல் கூடும் எனத் தோழிக்குக் கூறினள்.

Koviloor Digital Library

மலர்களை மட்டும், உளரி, ஆட்டி, உதிர்த்து வீசிய வாடை, தன் அளவில் உடல் முழுவதும் இன்னாமை செய்வதாய் உள்ளது எனக் குறித்தனள். நீர நீலம், புதல கருவிளை, நுண்முள் ஈங்கை என இம் மூன்றனையும், பாதுகாப்பும் பற்றுக்கோடும் உள்ளமை தோன்ற அடையுடன் கூறினார். தன்க்குப் பாதுகாப்பும், பற்றுக்கோடும் இல்லை என்பதைப் புலப்படுத்தினாள். தலைவன் தன்னை நாடி வாரார் ஆயின் பகைவர் என்றும்; இறந்துபாட்டின்பின் வந்தால் நொதுமலர் என்றும் கருதினாள். இதனால் அவர் நமக்கு நண்பர் அல்லர் என்பதும் பெறப்பட்டது. எனவே, அவர் நமக்கு எவ்வகையில் உறவாதல் கூடும் எனப் புலந்து கூறினள்.

சொற்பொருள் :

உளரி	–	அசைத்து
ஆட்டி	–	அலைத்து
துய்	–	மென்மை
போது	–	மலரும் பருவத்து அரும்பு

மேற்கோள் :

1. "பருவம் கண்டு அழிந்து தலைவி கூறியது"

தொல்காப்பியர், கற்பியல்,6

2. "வாடை தூங்கும் வருபனி அற்சிரம்
நம் இல் புலம்பின் தம்ஊர்த் தமியர்
என் ஆகுவர்கொல், அளியர்தாம் என
எம்விட்டு அகன்ற சின்நாள் சிறிதும்
உள்ளியும் அறிதிரோ ஓங்கு மலை நாட" அகநானூறு,78

3. "வீழ்வாரின் இன்சொல் பெறாது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்" திருக்குறள்,1198

4. "வாராதோர் நமக்கு யாஅர்" அகநானூறு,50

5. "ஈங்கைத் துய்த்தலைப் புதுமலர்" நற்றிணை,193

6. "மணிப்பொறிக் குடுமிய பீலிமஞ்ஞை" நற்றிணை,357

Koviloor Digital Library

7. "வறிதால் இகுளை என்பாக்கை, இனிஇவர்
வரினும் நோய்மருந்து அல்லர்"

நற்றிணை,64

பொருள் முடிவு :

தோழி. என் ஆயினள்கொல் என்னாதோர்
வாரார் ஆயினும், வரினும் யாராகியர்

Koviloor Digital Library

111. குறிஞ்சி

மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்
'வென்றி நெடுவேள்' என்னும்; அன்னையும்
அது என உணரும் ஆயின், ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந்தன்ன
கேழ்இருந் துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக – தோழி! – நம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே!

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு, வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச்சொல்லுவாளாய், தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தீன்மதிநாகன்

பொருள் :

தோழி. நின்னுடைய மெல்லிய தோளை மெலியச் செய்த துன்பத்தை, வெறியாடும் வேலன், வெற்றியையுடைய நெடிய முருகவேளால் வந்தது என்று கூறுவான். நம் தாயும், அவர் மொழிந்ததனையே உணர்குவள் ஆயின், அப்பொழுது தன்னுடைய கை சேற்றினில் மறைந்து தோன்றும் கரிய பெண்யானை போல விளங்கும் கரிய நிறம் உடைய செறிந்த பாறையையுடைய நாடன், நம் இல்லில் உள்ளோர், பெருநகைப்பிற்கு உரிய செய்கை கண்டு நாணும் பொருட்டு, வேலன்மேல் ஆவேசித்து முருகப்பெருமான் வருவதற்குச் சிறிது முன்பாகவே விரைந்து வருவானாக.

விளக்கம் :

தலைவியின் உடல்மெலிவு அறிந்து, செவிலி, வேலனை அழைத்து வெறியாட்டு எடுத்தனள். அப்போது, தலைவியின் நிலைமையினைச் சிறைப்புறமாக உள்ள தலைவனுக்குத் தோழி உணர்த்துவதாக இப்பாடல் அமைகின்றது. முருகக் கடவுளுக்கு உரிய வேலைக் கையில் ஏந்தி, ஆவேசமுற்று, ஆடுபவன் வேலன் ஆவன். இவனைப் படிமத்தான் என்றும் கூறுவர், தலைவியின் நோய், முருகனால் நேர்ந்தது என்று கூறும் வேலன் சொல்லைத் தாய் உடன்படுவாள். தலைவியின் நோயின் காரணம் அறிந்தவர் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவருமே ஆதலின், வெறியாடு களத்திற்குத் தலைவன் வருதலைத் தோழி விரும்பினாள். தலைவனின் வருகை, வீட்டில் இருப்போருக்குப் பெருநகையாய் இருக்கும் எனத் தோழி

Koviloor Digital Library

குறிப்பிட்டாள். துறுகல், கையை மறைத்துக் கொண்டுள்ள பெண்யானை போல மயங்கத் தோன்றுதல், தலைவன் தந்த துயரும் முருகன் தந்த துயராக மயங்கக் கொள்ளப்பட்டமை குறிப்பதாகும்.

சொற்பொருள் :

செல்லல் – துன்பம் (உரிச்சொல்)

வேலன் – படிமத்தான், வேலை ஏந்தி ஆடுபவன்

அது – பண்டறி சுட்டு

கூழை – சேறு

கேழ் – நிறம்

வல்லே – விரைந்து

நெடுவேள் – நெடுவேளால் ஆகிய நோய் – ஆகுபெயர்

மேற்கோள் :

1. வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்" நற்றிணை,34
2. "வேலன், முருகு என மொழியும்" ஐங்குறுநூறு, 245
3. "பிடி, துஞ்சுவன்ன பாறை" கலித்தொகை,108
4. "கரும்பு உணக் களித்த புகர்முக வேழம்
இரும்பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழூஉம்" ஐங்குறுநூறு,239
5. "மாசு அறக் கழீஇய யானைபோலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்"
குறுந்தொகை,13

பொருள் முடிவு :

தோழி, செல்லலை, வேலன் நெடுவேள் என்னும்; அன்னையும் அதுஎன உணருமாயின், மலைநாடன்காணிய சிறிது வல்லே வருக.

Koviloor Digital Library

112. குறிஞ்சி

கௌவை அஞ்சின் காமம் எய்க்கும்;
எள்அற விடினே உள்ளது நாணே;
பெருங்களிறு வாங்க முரிந்து நிலம்படாஅ
நாருடை ஒசியல் அற்றே -
கண்டிசின், தோழி! - அவர் உண்ட என் நலனே.

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஆலத்தூர் கிழார்.

பொருள் :

பிறர் கூறும் பழிச் சொற்களுக்கு அஞ்சுவதாயின், காமம் மெலிவடையும், பிறர் இகழ்ந்து கூறுதல் அற்றுப் போகுமாறு காமத்தை விட்டுவிட்டால், எனக்குத் துணையாக என்னிடம் நாணம் மட்டுமே எஞ்சிநிற்கும். தலைவன் நுகர்ந்த என்பெண்மை நலன், பெரிய களிறு, தான் உண்பதற்காக வளைக்க வளைந்த, நிலத்தைத் தீண்டாத, பட்டையையுடைய, ஒடிந்த மரக்கொம்பு போன்றது. இதனைக் காண்பாயாக.

விளக்கம் :

தலைவியின் உடல் வேறுபாடு கண்டு ஊரார் கூறும் அலர்மொழிகளுக்கு அவள் அஞ்சினால், காமத்தைத் துறத்தல் வேண்டும். காமம் முற்றிலும் நீக்கினால் நாணம் ஒன்றே எஞ்சிநிற்கும். தன்னிடம் பெண்மை நலனும், கற்பும் அழிந்துவிடும். அப்பெண்மை நலனும், தலைவனால் முன்னமே உண்ணப்பட்டமையால், அது தன்னிடம் உயிர் தாங்கியிருக்கும் அளவே உள்ளது என்றாள். 'இடைமகன் எறிந்த இன்னா மரம் போல' களிறு, தான் உண்பதற்காக வளைத்த மரக்கொம்பு, முற்றிலும் மரத்திலிருந்து நீங்கிவிடாமல் மரத்தில் சிறிதளவே ஒட்டி உயிர் வைத்துக் கொண்டிருக்கும். அதுபோல, தலைவனால் உண்ணப்பட்ட தலைவியின் எழில்நலம், தன்னுடைய பண்டைய நிலைமையைப் பெறாவிட்டாலும், முற்றிலும் அழிந்தொழியாமல், தலைவன் வரைந்துகொள்ள வருவான் என்ற நம்பிக்கையில் நீங்காமல் உள்ளது என்றாள். பெருங்களிறு, தலைவனுக்கு உவமையாயிற்று. 'உள்ளது, நாணே', என்ற தொடரால், கற்பும் போகும் நிலையில் உள்ளது என்பது குறிக்கப்பட்டது. நாணத்தைப் போக்கியாவது, கற்பினைக் காத்துக் கொள்ள வேண்டும் என விரும்பினாள்.

Koviloor Digital Library

நார்இருத்தலால் மரக்கொம்பு, அற்றுக் கீழே விழவில்லை. தன்னுடைய மெல்லிய நாணத்தைக் கொண்டு, அவனுடைய வலிமையைத் தடுத்து நிறுத்துதல் இயலாது எனக் கருதினள்.

சொற்பொருள் :

கௌவை – ஊரார் உரைக்கும் பழிச் சொற்கள்

எய்க்கும் – மெலிவடையும்

எள் – எள்ளுதல், இகழ்தல் – முதனிலைத் தொழிற்பெயர்

வாங்க – வளைக்க

நார் – பட்டை

ஓசியல் – ஓடிந்த கொம்பு (ஆகுபெயர்)

மேற்கோள் :

1. "நாணே உள்ளது, கற்புப்போம் என்றலின், மறுத்துஎதிர் கோடலாம்" *தொல்காப்பியம், களவியல்,20 நச்சினார்க்கினியர்*
2. "காமம் விடு ஒன்றோ, நாண்விடு நன்னெஞ்சே
   யானோ பொறேன் இவ்விரண்டு" *திருக்குறள், 1247*
3. "நலிதரும் காமமும், கௌவையும் என்று இவ்
   வலிதின் உயிர் காவாத் தூங்கியாங்கு என்னை
   நலியும் விழுமம் இரண்டு." *கலித்தொகை,142*
4. "எய்த்த நோய்தணி காதலர்" *அகநானூறு,22*
5. "உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
   செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"
   தொல்காப்பியம், களவியல்,23
6. "பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
   மாண்நலம் சிதைய" *அகநானூறு,120*

பொருள் முடிவு :

தோழி. கௌவை அஞ்சின் காமம் எய்க்கும். விடின் நாணே உள்ளது. அவர் உண்ட நலன், ஓசியல் அற்று, கண்டிசின்

Koviloor Digital Library

113. மருதம்

ஊர்க்கும் அணித்தே, பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே, பிறுகான் யாறே;
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல் போயின்றால், பொழிலே; யாம் எம்
கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும்பேதையே.

பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினால் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது.

மாதீர்த்தன்.

பொருள் :

ஊர்க்கு அணிய இடத்தில் பொய்கை உள்ளது. சிறிய காட்டாறு, அப்பொய்கைக்குத் தொலைவில் இல்லை. (அண்மையில்தான் உள்ளது). அவ்வாற்றங்கரையில் உள்ள சோலை, அவ்வாற்றில் இரையைத் தேடுகின்ற வெள்ளிய நாரையன்றி, வேறு எவ்வுயிரும் அடைதல் இல்லாதது. நாங்கள் எங்கள் கூந்தலில் சூட்டுவதற்காகச் செங்கழுநீர் மலர்களைப் பறிக்கச் செல்கின்றோம். பெரிய பேதைமையையுடைய தலைவி, அவ்விடத்தும் வருவாள்.

விளக்கம் :

தோழி, தலைவனுக்கு ஆற்றங்கரைப் பொழிலைத் தலைவியைச் சந்திக்கும் குறியிடமாகக் கூறினள். அக்குறியிடத்தில் இரையைத் தேடும் நாரையைத் தவிர, பிற எவ்வுயிரும் இல்லாமைகாட்டி, அவர்தம் களவு ஒருவர்க்கும் புலப்பட இயலாமை குறித்தாள். கான்யாறும், பொழிலும், செங்கழுநீர் ஓடையும் காதலர் சந்திப்பதற்கு ஏற்ற சூழலை வழங்குவதை உணர்த்தினாள். ''தலைவியைக் குறியிடத்துக் காணின், அவள் நின்வயத்தள் ஆவள்; அன்றேல் என்னுடன் பூப்பறிக்க வருவள்'', எனத் தலைவனுக்குக் குறிப்பிட்டாள். பொய்கைக் கரை ஊர்க்கு அணிமையில் இருத்தலால், அதனைக் குறியிடமாகக் கொள்ளுதல் இயலாது. குறியிடம் தலைவி உள்ள இடத்தின் சேய்மையில் இருத்தலும் தகாது. தாய், பூக்கொய்யத் தலைவியையும், தோழியையும் புறத்தே அனுப்புதல் உண்டு. பூக்கொய்வதாக ஓர் ஏதுக்கூறி தலைவியைக் குறியிடத்து உய்த்துத் தோழி நீங்குதலும் உண்டு. கூந்தலில் இட்டுப் பிசைந்து, நீராடுவதற்காக, எரு மண்ணை எடுத்துவரத் தலைவியும், தோழியும் ஆற்றின் புறத்தே செல்லும் நிலையை இப்பாடல் உணர்த்துவதாக

Koviloor Digital Library

உ.வே.சாமிநாதையர் விளக்கம் தருவர். மகளிர் தம் கூந்தலின் எண்ணெய்ப் பசை, சிக்கு ஆகியவற்றை நீக்குவதற்காகக் களிமண்ணைத் தேய்த்து நீராடும் வழக்கத்தை அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

சொற்பொருள் :

பொய்கை	–	மக்கள் ஆக்காத நீர்நிலை
துன்னல்	–	அடைதல்
பொழில்	–	சோலை
குருகு	–	நாரை
கூழை	–	கூந்தல்
எருமணம்	–	செங்கழுநீர் மலர்; எருவாகிய மண் (களிமண்)
சேறும்	–	செல்லுதும்

மேற்கோள் :

1. "பகற்குறி நேர்ந்தது", தொல்காப்பியம், களவியல்,24 இளம்பூரணர்
2. "நின்மாட்டு இவளும் பெரும் பேதுற்றனள்" அகநானூறு,310
3. "ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகும் உண்டு" குறுந்தொகை,25
4. "தோழியின் முடியும் இடனுமார் உண்டே"
தொல்காப்பியம், களவியல்,30
5. "வம்பு விரித்தன்ன, பொங்குமணல் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்,
மெய்புகுவு அன்ன கைகவர் முயக்கம்,
அவரும் பெறுகுவர்" அகநானூறு,11

பொருள் முடிவு :

பொய்கை, ஊர்க்கும் அணித்து, யாறு, சேய்த்தும் அன்று, பொழில், யாவதும் துன்னல் போகின்று, யாம் சேறும். பெரும் பேதை ஆண்டும் வருகுவள்.

Koviloor Digital Library

114. நெய்தல்

நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி,
நின்குறி வந்தனென், இயல்தேர்க் கொண்க! –
செல்கம்; செல வியங்கொண்மோ – அல்கலும்,
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும், என்மகள் நுதலே

இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது. பொன்னாகன்

பொருள் :

இயலும் தேரினையுடைய கடற்கரைப் பகுதிக்குத் தலைவனே. நெய்தல் மணற்பரப்பில், வண்டல் பாவையைக் கண்துயிலச் செய்து, நீ இருக்கும் இடத்திற்கு வந்தேன். ஆரல் மீனை அருந்தியதால் நிறைந்த வயிற்றினையுடையவாகிய நாரைகள், என் மகளாகிய வண்டல்பாவையின் நெற்றியை மிதித்துச் செல்லும். பொழுது சாய்ந்தமையால் யானும், தலைவியும் செல்வோம். ஆதலால் அவளை என்னுடன் செல்லுமாறு நீயே ஏவுவாயாக.

விளக்கம் :

தலைவன் வந்த தேரின் மணியோசை, 'நின்குறி', எனப்பட்டது. தலைவன் தலைவியை ஏவுதல் செய்யானாயின், அவள், பொழுது மறைந்தாலும், தலைவனைவிட்டுப் பிரியாள். 'அல்கலும்' என்ற சொல், அல்கலும் செல்கம் என்றும், அல்கலும் மிதிக்கும் என்றும் இருவழியும் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. வண்டல் பாவையை, நெய்தல் மணலில் கிடத்தி வந்தமைபோலத் தலைவியைத் தோழி தலைவனிடம் இருத்தி வந்தனள். பாவையின் உருவத்தில் தனக்குள்ள அன்பு தோன்ற அதனை, 'என் மகள்', என்றாள். நாரைகள். ஆரல்மீனைத் தின்று, வயிற்றின் பொறையோடு மிதிப்பதால், ஈரமணலில் இடப்பட்ட வண்டற்பாவையின் உருவம் சிதையும். நெய்தல் மலர்களை மெத்தெனப் பரப்பி, அதன்மீது கிடத்தப்பட்ட பாவை என்றும் பொருள் கொள்ளலாம். 'பொழுது கழிந்ததாகலின், வயிறு புடைக்க உண்டு, தம் கூடுகளுக்குத் திரும்பும் நாரையின் கால்கள் பட்டு வண்டற்பாவை சிதைதலும் கூடும். அதனால், நீ குறிதெரியாது மயங்குதலும் கூடும். எனவே பொழுது கழிவதற்கு முன்னே அவளை அனுப்புக', என்றாள். தலைவனிடம், வண்டற்பாவை உள்ள இடத்தில் அவளை விடுத்து நீங்குமாறு தோழி கூறினாள். நாரையால் மிதியுண்டு அழகழியும் பாவைபோலத் தலைவன் பிரிவால் தலைவியின் நலன் அழிவதும் குறிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

கொண்கன்	–	நெய்தல் நிலத் தலைவன்
அல்கலும்	–	பொழுது குறைதலும் (பகல் குறைந்து, இரவு வருதல்)
வியம்	–	ஏவல்
வண்டல் பாவை	–	வண்டலால் செய்யப்பட்ட பாவை.
இயல் தேர்	–	இயலும் தேர் (வினைத்தொகை)
அருந்த	–	ஆர்ந்த (குறுக்கும் வழிக்குறுக்கல்)
பாவை	–	பஞ்சாய்க் கோரையால் செய்யப்பட்ட பாவையும் ஆம்.

மேற்கோள் :

1. "புள் ஒலிக் கேட்டொறும்,
தேர் மணித் தெள் இசை கொல்
என ஊர்மடிகங்குலும் துயில் மறந்ததுவே" நற்றிணை, 287

2. "வண்டல் பாவை, வரிமணல் அயர்ந்தும்" அகநானூறு,330

3. "இனமீன் ஆர்ந்த வெண்குருகு மிதித்த
வறுநீர் நெய்தல்போல வாழாள்" நற்றிணை,183

4. "தாதில் செய்த தண்பனிப் பாவை" குறுந்தொகை,48

பொருள் முடிவு :

கொண்க. பாவை கிடப்பி வந்தனென். என்மகள் நுதல், நாரை மிதிக்கும். செல்கம். செல வியம் கொண்மோ.

Koviloor Digital Library

115. குறிஞ்சி

பெருநன்று ஆற்றின், பேணாரும் உளரே?
ஒருநன்று உடையள் ஆயினும், புரிமாண்டு,
புலவிதீர அளிமதி – இலை கவர்பு,
ஆடுஅமை ஒழுகிய தண்நறுஞ் சாரல்,
மென்நடை மரையா துஞ்சும்
நன்மலை நாட! – நின் அலது இலளே.

உடன்போக்கு ஒருப்படுத்து மீளும் தோழி, தலைமகற்குக் கூறியது.

கபிலர்

பொருள் :

பிறர் தாம் விரும்பிய பெருநன்மையை, ஒருவர் செய்தால் அந்நிலையில் அவரைப் போற்றாதவர் உளரோ. இல்வாழ்க்கையில் தலைவனுக்குத் தலைவி ஆற்றும் இரு நன்மைகளில், அறம் என்ற ஒன்று மட்டும் உடையவளாக இருந்தாலும், விரும்புதல் சிறந்து, இவள் தன்னையே நொந்து கொள்ளும் நிலை நீங்கப் பேணுவாயாக. உதிர்ந்த இலைகளைப் பற்றி உண்டு, அசைகின்ற மூங்கில்கள் வளர்ந்துள்ள குளிர்ச்சியும், நறுமணமும் உடைய மலைப்பக்கத்தில், மெல்லிய நடையையுடைய மரையான், தங்கி வாழ்தற்கு இடமான நல்ல மலைநாடனே. நீ இவளை அளிப்பாயாக. அளிப்பதற்கு நின்னைத் தவிர வேறு ஒன்றையும் தன்நெஞ்சில் கொள்ளாதவள் இவள்.

விளக்கம் :

தலைவி, தலைவனுக்குச் செய்யும் நன்மை, அறமும் இன்பமும் என இருவகைப்படும். மகப்பயக்கும் நன்மை 'ஒரு நன்று' எனப்படும். 'மகப்பேறு அளித்துப் பயன்படுபவர் குலமகளிர், ஈன்று பயன்படாதவர் பொதுமகளிர்" (ஐங்குறுநூற்று உரை, பாடல்,4) நடை மெலிந்த முதுமை நிலையிலும், மரையான் இனிது உண்டு, மலைச்சாரல் நிழலில் உறங்குதல் போல தலைவியும் நின்னிடம் கிடைத்தது இனிது உண்டு. நின் நிழலில் வாழ்வாளாகுக' எனத் தோழி குறித்தனள். அளிப்பதற்கு உன் அருளையே எதிர்நோக்கி வாழ்பவள் என்றும், வேறு எதனையும் வேண்டாதவள் என்றும் தோழி உணர்த்தினாள். செய்ந்நன்றி மறவா உலக இயல்பு கூறி, தோழி ஓம்படை கூறினள்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

நன்று	–	நன்மை
ஒருநன்று உடைமை	–	இல்லறம் ஆற்றும் தன்மை
கவர்தல்	–	விலங்குகள் இரைதேடி உண்பதைக குறிக்கும் வழக்குச் சொல்
புலத்தல்	–	தன்னை வெறுத்துக் கூறுதல்
புரிமாண்டு	–	விரும்புதல் சிறந்து
மென்நடை	–	தளர்ந்த நடை

மேற்கோள் :

1. "மரை ஆ மரல் கவர" கலித்தொகை,6
2. "நேரிழை மகளிர் உணங்கு உணாக் கவரும் கோழி" பட்டினப்பாலை,22–3
3. "பாங்கி தலைவனுக்கு ஓம்படை கூறியது" இறையனார் களவியல் உரை,23
4. "ஆடு அமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்" அகநானூறு,82
5. "துளங்கு நடை மரை ஆ" அகநானூறு,3
6. "தம் இன்று அமையா, நம்நயந்து அருளி" நற்றிணை,1
7. "புலவுவாய்ப் பாண" பெரும்பாணாற்றுப்படை,22
8. ஈன்று நாள் உலந்த மென்நடை மடப்பிடி" அகநானூறு,85

பொருள் முடிவு :

மலை நாட, பெரு நன்றாற்றின் பேணாரும் உளரே, ஒருநன்று உடையள் ஆயினும் அளிமதி. நின்னலது இலள்.

Koviloor Digital Library

116. குறிஞ்சி

யான் நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்,
வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல் வார்ந்தன்ன,
நல்நெறியவ்வே, நறுந் தண்ணியவே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இளங்கீரன்.

பொருள் :

யான் விரும்பித் தங்கப் பெற்றவளுடைய, வண்டுகள் வந்து மொய்த்தற்கு இடனாகிய கூந்தல் வகைகள், வளமை பொருந்திய, சோழரது உறையூரின் பெரிய நீர்த்துறைகளில் நுண்ணிய கருமணலில் நீர் நின்றுவடிந்தாற்போல், நீண்டு வடிந்த, நல்ல நெறிப்பையுடையன. நல்ல மணமும், தண்மையும் உடையன.

விளக்கம் :

கூந்தல், ஐவகைப் பகுப்புக்களாக முடிக்கப் பெறுதலின், நறிய, தண்ணிய எனப் பன்மை முடிவு கொண்டது. 'வளம் கெழு' என்ற அடைமொழி, உறையூருக்கு ஏற்றி உரைக்கப்படும். இயற்கைப் புணர்ச்சியில், தலைவன், தலைவியின் கூந்தலாகிய மெல்லணையில் துயின்றமை நினைந்து, அக் கூந்தலின் சிறப்புக்களைப் பாராட்டினன். சேய்மையில் கண்டபோது, அதன் காட்சியின்பம் கருதி, 'நல்நெறிய' என்றும்; நெருங்கிய வழி, பின்னின்று முகர்ந்து பெற்ற இஃபம் கருதி, 'நறிய' என்றும்: கலந்தவழிப் பெற்ற ஊற்றின்பம் நினைந்து 'தண்ணிய' என்றும் பாராட்டினான். இயற்கைப் புணர்ச்சிக்கு ஏதுவாகத் தலைவன், தலைவியின் கூந்தலின் வண்டுகளை ஓச்சிப் பின்நின்ற நிலை, ஈண்டு நினைக்கத்தக்கது. ஊற்றுணர்ச்சி இல்லாத கூந்தல் வழங்கும் இன்பமே, இத்தகையது என்றால், அவளுடைய ஏனைய உறுப்புக்கள் தரும் இன்பம் எத்துணைச் சிறப்புடையனவோ என உய்த்துணர வைத்தனன். தலைவியின் பேரழகும், இன்பமும் தோன்ற, ஈண்டுச் சோழர்களின் உறந்தையின் காவிரி நீர்த்துறை குறிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அறல்	–	அற்றுச் செல்லும் நீர் (ஆகுபெயர்) கருமணலும் ஆம்.
உறந்தை	–	உறையூர்
பெருந்துறை	–	காவிரி நீர்த்துறை
நெறி	–	நெளிவு, நீரோட்டத்தினால் மணலில் ஏற்படும் சுவடு
தேம்	–	வண்டு
வார்தல்	–	நீண்டு ஒழுகுதல் (உரிச்சொல்)

மேற்கோள் :

1. "நெறி இருங் கதுப்பு" குறுந்தொகை,190
2. "நெறிபடு கூந்தல்" குறுந்தொகை,199
3. "தண்ணிய கமழும் தாழ் இருங் கூந்தல்" நற்றிணை,137
4. "குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல், மெல் அணையேமே" குறுந்தொகை,270
5. "தேம்பாய் கூந்தல் குறும்பல மொசிக்கும்
வண்டு கடிந்து ஓம்பல் தேற்றாய்" அகநானூறு,257
6. "தெள் அறல் பருகிய இரலை" அகநானூறு,65

பொருள் முடிவு :

யான் நயந்து உறைவோள் கூந்தல்,
நல் நெறிய, நறுந் தண்ணிய

Koviloor Digital Library

117. நெய்தல்

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞ்ஞெண்டு
கண்டல் வேர்அளைச் செலீஇயர், அண்டர்
கயிறுஅரி எருத்தின், கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக!
சிறியவும் உள ஈண்டு, விலைஞர் கைவளையே.

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது

குன்றியனார்

பொருள் :

மாரிக்காலத்து ஆம்பல் மலரைப் போன்ற தோற்றத்தையுடைய, கொக்கின் பார்வையைக் கண்டு அஞ்சிய துன்பத்தையுடைய, ஈரமான உடலையுடைய நண்டு, தாழையின் வேரில் உள்ள தன்னுடைய வளைக்குள் செல்லும் பொருட்டு, இடையரால் பிணிக்கப்பட்டுள்ள கயிற்றை அறுத்துச் செல்லும் எருதினைப்போல, விரைந்து செல்லும். இத்தகைய, நீர்த்துறைகளையுடைய தலைவன், இங்கே விரைந்து வரைவொடு மனம் பொருந்தி வாரானாயினும் அமைக. விலை கூறி விற்பவர், கைகளில், சிறிய வளையல்களும் இங்கு உள்ளன.

விளக்கம் :

கொக்கின் சிறகுகளில் அலைகளின் நீர்த்திவலைகள் படிதலால், அதற்கு மழையில் நனைந்த ஆம்பல் மலர் உவமமாயிற்று. தலைவன் வரைந்து கொள்ளாமல், களவு நீட்டித்தவழி, ஊரார் அலர் உரைக்க, தலைவியின் உள்ளத்தில் ஆற்றாமை மிகுவதாயிற்று. தலைவன் வருதலால் அலர் மிகும்; வாரான் எனின் உடல்மெலியும்; அச்சம் தோன்றும். உடல் மெலிவினால் வளை நெகிழ, அதனைப் பலர் அறிந்து கூறும் அலர்மொழியை வாராமல் தடுக்க, சிறிய வளையல்களை அணிந்து கொள்ளுவோம் என்றனள். களவினால் ஏற்படும் அச்சத்தையும், தலைவனைப் பெறாவிடின் ஏற்படும் ஆற்றாமையையும் நீக்க அவனை வரைந்து கொள்ளும்படி தோழி வேண்டினாள்.

கொக்கின் பார்வையை அஞ்சிய நண்டு, தாழையின் வேரடியில் உள்ள தன்வளைக்குச் செல்லுதலைக் கூறி, ஊரார் அலர்மொழிக்கு அஞ்சி, தலைவியை மணந்து கொண்டு, தன் இல்லத்தே இல்லறம் நடத்தும்படி வேண்டினாள். நண்டின் விரைந்த செலவிற்கு, கயிற்றை அறுத்துச் செல்லும் எருது உவமம் ஆயிற்று. ஒரு சிறிய நண்டு கூட, தனக்கு வரும் கேட்டை அறிந்து, அதிலிருந்து தப்புவதற்கு உரிய இடம்

Koviloor Digital Library

தேடித் தன்னுடைய வளையை நாடி ஓடுகின்றது. ஆனால் தலைவன், அயலார் உரைக்கும் அலர்மொழிகளிலிருந்து காக்க விரைந்திலன் என்றாள். வளை கழல, உடல் மெலிந்து நிற்கும் அந்நிலையினும், தலைவி, தன் துயரைத் தலைவனால் வந்தது என்று கூறவிரும்பாமல், சிறிய வளையல் அணிந்து மறக்க விரும்புவாள் எனத் தோழி, சிறைப்புறமாக நின்ற தலைவனுக்கு உணர்த்தினாள்.

சொற்பொருள் :

ஈர்ஞ் ஞெண்டு	–	குளிர் என்ற சொல்லால் வழங்கப்படுதல்
கண்டல்	–	தாழை
அண்டர்	–	இடையர்
துறைவன்	–	நெய்தல் நிலத் தலைமகன்
பார்வல்	–	பார்வை
கதழும்	–	விரைந்து செல்லும் (உரிச்சொல்)
பருவரல்	–	துன்பம்
அளை	–	வளை

மேற்கோள் :

1. "மாரிக் கொக்கின் கூரல் அன்ன
குண்டு நீர் ஆம்பல்" நற்றிணை,100

2. "இன்கண் உடைத்து அவர் பார்வல்" திருக்குறள்,1152

3. "பைங்கால் கொக்கின் புன்புறத்தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின"' குறுந்தொகை,122

4. "களி கவிர் சிதைய வாங்கிக் கொண்டு தன்
தாழை வேர் அளை வீழ்துணைக்கு இடூஉம்
அலவன்" அகநானூறு,380

5. "இரைதேர் வெண்குருகு அஞ்சி, அயலது
ஒலித்த பகன்றை, இருஞ்சேற்று அள்ளல்
திதிலையின் வரிப்ப ஓடி, விரைந்து தன்
நீர்மலி மண் அளைச் செறியும் ஊர"
அகநானூறு,176

பொருள் முடிவு :

துறைவன், வாராது அமையினும் அமைக. விலைஞர் கைவளை, சிறியவும் ஈண்டு உள.

Koviloor Digital Library

118. நெய்தல்

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை,
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,
'வருவீர் உளீரோ?' எனவும்
வாரார் – தோழி! – நம் காதலோரே.

வரைவு நீட்டித்தவழி, தலைமகள் பொழுதுகண்டு, தோழிக்குச் சொல்லியது.

நன்னாகையார்.

பொருள் :

தோழி! பறவைகளும், விலங்குகளும் தனிமைத் துயருடன் தங்க, நள் என்னும் ஓசையுடன் அன்பில்லாத மாலைக்காலம் வந்தது. அம்மாலைக் காலத்தில், விருந்தினர் பலரும் புகுகின்ற வீட்டின் வாயிலை அடைக்கக் கருதி, வினாவுகின்றவர், வீட்டினுள் புகுவதற்கு உரியீராய் வெளியே சென்று வந்தவர்கள் உள்ளீரா என்று அழைப்பவும், நம்பால் காதலையுடைய தலைவர் வாரார் ஆயினார்.

விளக்கம் :

பறவைகளும், விலங்குகளும் தம் இருக்கைகளை அடைவதைக் கண்ட தலைவி, தான் துணையொடு மாலையில் வதியப் பெறாமை எண்ணிக் கலங்கினாள். தலைவன், விருந்தினன் போல், பலருடன், தலைவி இல்லத்தில், மாலையில் புகுந்து உணவு உண்டு தலைவியோடு உடனிருத்தல் உண்டு என்பது இப்பாடலால் புலப்படும். பறவைகளைப் போலவும், விலங்குகளைப் போலவும் இரவில் புணர்ச்சியின்றிக் கிடக்கும் தன்னுடைய தனிமையை எண்ணி, மாலைப் பொழுதினை, 'அன்பில்லாத மாலைப்பொழுது' என இழித்துரைந்தனள்.

சொற்பொருள் :

புலம்பு	–	தனிமை
நார் இல்மாலை	–	அன்பு இல்லாத மாலைப் பொழுது
கடவுநர்	–	வினவுகின்றவர்
நள்	–	செறிவு (உரிச்சொல்) ஒலிக்குறிப்பு

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "புகாக் காலை புக்கெதிர்ப்பட்டுழிப்
பகாவிருந்தின் பகுதிக் கண்ணும்"
தொல்காப்பியம், களவியல்,16

2. "புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவை"
நெடுநல்வாடை,166

3. "வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலர்உண" *குறிஞ்சிப்பாட்டு,202*

4. "உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇயோனே" *புறநானூறு,234*

பொருள் முடிவு :

தோழி. மாலையில் கடவுநர், வருவீர் உளீரோ எனவும், நம காதலோர் வாரார்.

119. குறிஞ்சி

சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கானயானை அணங்கி யாஅங்கு –
இளையள், முளைவாள் எயிற்றள்,
வளையுடைக் கையள் – எம் அணங்கியோளே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், பாங்கற்கு உரைத்தது.

சத்தி நாதனார்.

பொருள் :

சிறிய, வெண்ணிறப் பாம்பின், அழகிய கோடுகளையுடைய குட்டியானது, காட்டு யானையை வருத்தினாற்போல, இளமையுடையவளும், மூங்கில் முளைபோன்ற ஒளியுடைய பற்களையுடைவளும், வளையலணிந்த கையையுடையவளுமாகிய ஒருத்தி, எம்மை வருந்தச் செய்தனள்.

விளக்கம் :

பாங்கனால் குறைமுடிக்கக் கருதிய தலைவன், சிரித்துத் தழுவி வருத்தும் தெய்வத்தைப் போல, ஒருத்தி தன்னை வருத்தினாள் எனக்

Koviloor Digital Library

கூறினான். பாம்பு, தோற்றத்தால் அழகிய கோடுகளையுடையதாயினும், செயலால் கொடிது எனக் குறிக்கப்பட்டது. பாம்பின்குட்டி, தன் எயிற்றால் வருத்தியது போலத் தலைவி தன் முறுவல்குறிப்பால் தலைவனை வருத்தினள். தீண்டி வருத்துதல், தலைவிக்கும் பாம்பின் குருளைக்கும் பொது இயல்பாகும். சிறிய பாம்பின் குருளை, பெரிய யானையை. வருத்தியதுபோல, மெல்லிய இளைய தலைவி, வலிமைவாய்ந்த, பெரிய, தலைவனை வருத்தியமை குறிக்கப்பட்டது. இயற்கைப் புணர்ச்சிக்கண்தான் துய்த்த தலைவியின் இளமையும், குறிப்பு அறிவித்த அவளுடைய முறுவலும், வடுக்கொள முயங்கிய அவளுடைய கைகளும் தன்னால் மறக்க இயலவில்லை என்றனன். அரவின் குட்டி, தீண்டியவுடன் அதன் நஞ்சு, யானையின் உடல் முழுவதும் பரவியமை போல, தலைவி தீண்ட தன் உடல் முழுவதும் காமநோய் பரவியது என்றான். வெள்ளரவு – பாம்பினுள் ஒருவகை. கோதுமை நாகம் என உ.வே.சாமிநாதையரும், கிருஷ்ண சர்ப்பத்தின் வேறு என ரா.இராகவையங்காரும் குறிப்பர்.

சொற்பொருள் :

அணங்குதல்	–	தீண்டி அச்சுறுத்துதல்
குருளை	–	இளமைப் பெயர், குட்டி (பாம்பிற்குச் சிறுபான்மை)
அவ்வரி	–	அழகிய கோடு

மேற்கோள் :

1. "தலைவன் உற்றது உரைத்தல்" இறையனார் களவியல்,3
2. "வளையள், முளைவாள் எயிற்றள், இளையள்,
   ஆயினும் ஆரணங்கினளே. ஐங்குறுநூறு,256
3. "தொடிக்கை வடுக்கொள முயங்கினை" அகநானூறு,142

பொருள் முடிவு :

இளையள், எயிற்றள், கையள், எம் அணங்கியோள்.

Koviloor Digital Library

120. குறிஞ்சி

இல்லோன் இன்பம் காமுற்றாஅங்கு
அரிது வேட்டனையால் – நெஞ்சே! – காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியாதோயே.

அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிந்தவழிக் கலங்கியதூஉம் ஆம்.

பரணர்

பொருள் :

நெஞ்சே. பொருள் இல்லாதவன், அப்பொருளால் பெறலாகும் இன்பத்தை விரும்புதல் போல, நீ எய்துதற்கு அரிய ஒன்றனை விரும்புகின்றாய். உன்னால் காதலிக்கப்பட்டவள், நினக்கு நல்ல இன்பத்தை வழங்குபவள் என்பதை அறிந்தாற்போல, நினக்கு எய்தற்கு அரியவள் என்பதை அறியவில்லை.

விளக்கம் :

பொருளில்லாத வறியவன், செல்வர் மனையில். அப்பொருளால் ஆகிய இன்பம், தெய்வ அருளால் கிடைத்தவழி, அத்துடன் அமைதியுறாமல், மீண்டும் அதனையே பெற்று நுகர விரும்புவான். பால்வரை தெய்வத்தால் கூட்டப்பட்ட இயற்கைப் புணர்ச்சியின் போது, தலைவி, தலைவனுக்கு 'நல்லள்' ஆக இன்பம் வழங்கினள். தலைவியை, எவ்வித முயற்சியும் இன்றி எளிதில் துய்க்கப் பெற்றமையால், அவளை 'அரியள்" என உணரான் ஆயினன். தலைவி 'நல்லள்' என்பதை இயற்கைப் புணர்ச்சி முதலாகிய கூட்டங்களால் தலைவன் அறிந்தனன்.

சொற்பொருள் :

இல்லோன் – பொருள் இல்லாதவன்

காதலி – நின்னால் காதலிக்கப்பட்ட தலைவி

வேட்டனை – விரும்பினை

அரியள் – எய்துதற்கு அரியவள்

நல்லள் – நன்மை தருபவள்

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "ஈதலும், துய்த்தலும் இல்லோர்க்கு இல்" குறுந்தொகை,63
2. "குறி பிழைத்தவழித் தலைவன் உள்ளத்திற்குச் சொல்லியது" தொல்காப்பியம், களவியல்,17 இளம்பூரணர்
3. "பொருள் இலார்க்கு இவ் உலகம் இல்லாகியாங்கு" திருக்குறள்,247
4. "உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி அரிது அவாவுற்றனை நெஞ்சே" குறுந்தொகை,29
5. "சேயள், அரியோள் படர்தி நோயை நெஞ்சே, நோய்ப்பாலோயே" குறுந்தொகை.128

பொருள் முடிவு :

நெஞ்சே. அரிது வேட்டனை. அறியாதோயே.

Koviloor Digital Library

121. குறிஞ்சி

மெய்யே, வாழி! - தோழி - சாரல்
மைப்பட்டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டொடு போகியாங்கு, நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம் பசந்தன, என்தட மென்தோளே.

இரவுக்குறி வரும் தலைமகன் செய்யும் குறி பிறிதுஒன்றனான் நிகழ்ந்து, மற்று அவன் குறியை ஒத்தவழி, அவ் ஒப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று, ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கியவழி, பின்னர் அவன் வரவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது. கபிலர்

பொருள் :

தோழி! தலைவன் இப்பொழுது வந்துள்ளான் எனக் கூறுதல் உண்மையோ? நீ வாழ்க. முன்பு, மலைப்பக்கத்தில் மைபட்டது போன்ற கரிய முகத்தையுடைய ஆண்குரங்கு, மரக்கொம்பு தன்னுடைய சுமையைத் தாங்கும்படியுள்ளதா என அறிந்து பாயாத தவற்றினால், அக் குரங்கினை ஏற்றுக் கொண்ட மரக்கொம்பு, முறிந்து அக்குரங்குடன் வீழ்ந்தது. இத்தகைய நாட்டைச் சார்ந்த தலைவன், தன்னுடைய குறியிடத்தை வாய்ப்பதாகச் செய்யாத தவற்றின் பொருட்டு, என்னுடைய பருத்த, மெல்லிய தோள்கள் பசலையை அடைந்தன.

விளக்கம் :

முசுக்கலை, கொம்பு தன் பாரத்தை ஏற்றுக் கொள்ளுமா என அறியாமல் பாய்ந்தமையால் கொம்பு முறிந்தது. அதுபோலத் தலைவன், தான் அறியும் வண்ணம் குறிசெய்யாத தவற்றால், தன் தோள்கள் பசந்தன எனத் தலைவி கூறினள். குரங்கின் நோக்கம் நிறைவேறாமையோடு, அதன் செயலால் கொம்பும் முறிந்தது. தலைவனின் தலைவியை நுகரும் நோக்கம் நிறைவேறாமையோடு, அவன் செயலால் தலைவி உடல்மெலிந்து, பசலை பூப்பதாயினள். குறி பிழைத்த தலைமகன் இன்றும் வந்தனனோ எனத் தலைவி, தோழியை வினவுவதாக இப்பாடல் பொருள் கொள்ளப்பட்டது. "ஏற்ற கோட்டு ஒடு போகியாங்கு' எனப் பிரித்து, 'ஒடு போதல்' என்பதற்கு 'முதுபுண்பட்டுப் போதல் என ரா.இராகவையங்கார் உரை வகுப்பர் அவர், 'மெய்ப்படு முதுபுண்' என்ற

Koviloor Digital Library

தொடர்க்கு (சீவகசிந்தாமணி,2881) நச்சினார்க்கினியர், 'உடம்பில உண்டாகிய ஒடு' என வகுத்த உரையை இக்கருத்திற்கு அரணாக எடுத்துக்கூறுவர்.

சொற்பொருள் :

மாமுகம்	–	கரியமுகம்
முசுக்கலை	–	கருங்குரங்கு – ஆண் இனம்
ஆற்றல்	–	பொறுத்தல்
தப்பல்	–	தப்புதல், தவறு
கோடு	–	மரக்கொம்பு
நாடன்	–	குறிஞ்சிநிலத் தலைவன்

மேற்கோள் :

1. "குறியின் ஒப்புமை மருடற்கண்ணும்"
தொல்காப்பியம், களவியல்,21

2. "அல்ல குறிப்படுதல்"
தொல்காப்பியம், களவியல்,42 நச்சினார்க்கினியர்

3. "தன்வயின் உரிமையும், அவன் வயின் பரத்தையும்"
தொல்காப்பியம், களவியல்,20

4. "மைப்பட்டன்ன மாமுக முசுவினம்" அகநானூறு,267

5. "கண்ணும் தோளும் ... பழநலம் இழந்து, பசலைபாய"
நற்றிணை,219

6. "வேய்புரை மென்தோள் பசலையும்" கலித்தொகை,39

7. "தாம் பழியுடையர் அல்லர், நாளும்
நயத்தோர்ப் பிணித்தல் தேற்றா வயங்கு வினை
வாளேர் எல்வளை நெகிழ்த்த
தோளே, தோழி, தவறுடையவ்வே" அகநானூறு,267

பொருள் முடிவு :

தோழி. மெய்யே? நாடன் தப்பற்கு
என்தோள் பசந்தன.

Koviloor Digital Library

122. நெய்தல்

பைங்காற் கொக்கின் புன்புறத்தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று, வாழியோ, மாலை!
ஒருதான் அன்றே; கங்குலும் உடைத்தே!

தலைமகள் பொழுது கண்டு அழிந்தது. ஓரம்போகியார்

பொருள் :

பசுமையான கால்களையுடைய கொக்கினது, புல்லிய புறத்தைப் போன்ற, ஆழமான நீர்நிலையில் உள்ள ஆம்பலின் மலர்களும் குவிந்தன. இனி, மாலைக் காலம் வந்தது. அது வாழ்வதாகுக. மாலைப் பொழுது மட்டும் தனியாக வரவில்லை. அது, தன்பின் வரும் யாமப் பொழுதினையும் துணையாக உடையது.

விளக்கம் :

ஆம்பல் மலர்வதற்குரிய மாலைப்பொழுது இன்னும் வரவில்லை. அது இன்னும் கூம்பியநிலையில் தான் உள்ளது. அதற்குள், மாலைப்பொழுது வரத்தொடங்கிவிட்டது. அதுவும், தனியே இருக்கும் தன்னை நலிவதற்காகத் தனியாக வராமல், தனக்கு ஒரு துணையாகக் கங்குலையும் அழைத்து வந்துள்ளது. கதிரவன் மறையத் தொடங்கிய எற்படு பொழுதிலேயே, மாலை வந்துவிட்டதாகவும், அதன்பின், இரவு வரப்போவதாகவும் எண்ணித் தலைவி ஆற்றாளாயினள். தனியிருப்பார்க்கு மாலையும், இரவும் செய்யும் வருத்தம் ஈண்டு குறிக்கப்பட்டது.

ஆம்பல், இரவில் மலர்வது; பகலில் கூம்புவது. ஆம்பல் மலராமல் கூம்பிய நிலையில் உள்ள பகற்பொழுதிலேயே தனக்குத் துன்பத்தைத் தரும் மாலை, வாழ்வதற்கு உரியது அன்று என்ற குறிப்பு, 'வாழியோ, மாலை', என்ற தொடரால் புலப்படும். ஆம்பல் மலர் குவிந்த நிலையில், மாலைப் பொழுது வாராமையை உணர்த்திய போதிலும், அடுத்து வரும் மாலை, ஆம்பல் மலரப்போவதை நினைவூட்டுவதாயிற்று. எற்பாடு, மாலை, இரவு ஆகிய யாவும் பிரிந்தார்க்கு இடர் செய்வன என்பது இப்பாடலால் குறிக்கப்பட்டது. சிறியகால அளவு நிற்கும் மாலை, நின்று இடர் செய்யும் கங்குலைத் துணையாகக் கொண்டு நலிதல் கூறினாள். குவிந்த ஆம்பல் மலருக்கு,

Koviloor Digital Library

அந்நீர் நிலைக்கண் நிற்கும் கொக்கின் சிறகு உவமிக்கப்பட்டமை, இடத்திற்கு ஏற்ற உவமம் ஆகும்.

சொற்பொருள் :

மாலை	–	இரவின் முதற்கூறு
கங்குல்	–	யாமம், இரவின் நடுக்கூறு
குண்டு	–	ஆழம்

மேற்கோள் :

1. "மாரி ஆம்பல் அன்ன கொக்கின்" குறுந்தொகை,117
2. கொக்கின் கூம்பு நிலையன்ன முகைய ஆம்பல்" நற்றிணை,280
3. "கடும்பகல் வருதி, கையறு மாலை" ஐங்குறுநூறு,183
4. "ஆம்பல் ஆய் இதழ் கூம்புவிட ....
துனைஇய மாலை, து!ன்னுதல் காணூஉ" குறிஞ்சிப்பாட்டு,223–230
5. "மதிநோக்கி அலர்வ ஆம்பல் வான்மலர்" கலித்தொகை,72

பொருள் முடிவு :

ஆம்பலும் கூம்பின இனி, மாலை வந்தன்று, ஒருதான் அன்று, கங்குலும் உடைத்து.

Koviloor Digital Library

123. நெய்தல்

இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்,
நிலவுக் குவித்தன்ன வெண்மணல் ஒருசிறை,
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப,
இன்னும் வாரார்; வரூஉம்,
பல்மீன் வேட்டத்து என்னையர் திமிலே.

பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி, அவன் சிறைப்புறத்தானாதல் அறிந்து, தலைமகட்குச் சொல்லியது.

ஐயூர் முடவன்

பொருள் :

இருள் செறிந்தாற்போன்ற ஈரமும், குளிர்ச்சியும் கொழுவிய நிழலும் உடைய நிலவினைத் தொகுத்து வைத்தாற்போன்ற வெண்மையான மணற்பரப்பின் ஒருபக்கத்தில், கரிய கிளைகளையுடைய புன்னைமரங்கள் அடர்ந்த அழகிய சோலை உள்ளது. அது ஒருவரும் இல்லாது தனிமைப்பட்டுக் கிடக்க, தலைவர் இன்னும் வந்தாரிலர், பல மீன்களை வேட்டையாடுதலையுடைய, தன்னுடைய தமையன்மார்கள் ஏறிச் சென்ற மீன்பிடி படகுகள் மீண்டு வந்துவிட்டன.

விளக்கம் :

புணர்தற்கு இனிய இருளை நிழலும், நிலவொளியை வெண்மணற்பரப்பும், மறைவிடத்தைப் புன்னைப் பொழிலும் தமக்குத் தந்து உதவியமையைத் தலைவி நினைந்தனள். இவ்வினிய சோலை, ஒருவரும் பயன்கொள்ள வராமையால் தனிமைப் பட்டு இருப்பதாகக் கூறி, தலைவன் எற்பாடு கழிந்து, மாலையிலும் வாராமையைக் குறித்தாள். தலைவன், இனிய பயன்கொள்ள வந்தாலும், மாலையில் தன்னுடைய தமையன்மார், மீன்வேட்டம் முடித்து, மீன்களுடன் வருவதாலும், அவற்றை வாங்குவதற்கு வணிகர் பலர் கூடுவதாலும், தான் அவனைச் சந்திக்க இயலாது எனக் கூறினள். தலைவன் சிறைப்புறமாக உள்ளபோது, தோழி கூறியதாக இப்பாடல் அமைகின்றது. பொழிலில், தலைவனைக் காணாது பகற்பொழுது முழுதும் தலைவி காத்திருந்தமை குறித்தாள். வேண்டியவர் வாராமல், வேண்டாதவர் வந்துள்ளனர் என அவற்குத் தலைவியின் ஆற்றாமையைப் புலப் படுத்தினாள்.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

சொற்பொருள் :

சிறை – புறம்

திமில் – மீன்பிடி படகு

என்ஐயர் – என் தமையன்மார்

கோடு – கிளை

மேற்கோள் :

1. "ஒருவழி தணத்தலின்கண் தோழி, தலைவிக்குக் கூறியது" தொல்காப்பியம், களவியல்,24 இளம்பூரணர்
2. "வேட்டம் வாயாது எமர் வாரலரே" நற்றிணை,215
3. "திரைச் சுரம் உழந்த திண்திமில் விளக்கின்
பன்மீன் கூட்டம் என்ஐயர் காட்டிய
எந்தையும் செல்லுமார் இரவே" அகநானூறு,240
4. "நிலவும், இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும், கானலும் தோன்றும்" குறுந்தொகை,81
5. "இணர் அவிழ் புன்னை எக்கர் நீழல்
புணர்குறி வாய்த்த ஞான்றை" குறுந்தொகை,299
6. "பெருங்கடல் வேட்டம் போகிய சிறுகுடிப்
பரதவர்" அகநானூறு,140
7. "விளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
திண்திமில் எண்ணும்" நற்றிணை,331

பொருள் முடிவு :

பொழில் புலம்ப, இன்னும் வாரார்
என் ஐயர் திமில் வரூஉம்

Koviloor Digital Library

124. பாலை

உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின், அகன்தலை,
ஊர்பாழ்த்தன்ன ஓமைஅம் பெருங்காடு
இன்னா என்றிர் ஆயின்,
இனியவோ – பெரும! – தமியோர்க்கு மனையே!

புணர்ந்துடன் போக நினைத்த தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பொருள் :

தலைவ. உப்பு வாணிகர் பலர் கூடிக் கடந்து சென்ற பக்கத்தினையும், விரிந்த இடத்தினையும் உடைய. மக்கள் குடியிருந்த ஊர், பாழ்பட்டது போன்ற தோற்றத்தினையுடைய ஓமை மரங்கள் வளர்ந்த பெரிய பாலைநிலங்கள், துன்பத்தைத் தருவன என்று கூறி எம்மைத் தனியே விடுத்துச் செல்லக் கருதுவீராயின், தலைவனைப் பிரிந்து தனியிருப்போருக்கு, வீடுகள் இனிமை தருவனவோ?

விளக்கம் :

தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லவேண்டும் என விரும்பிய தோழிக்குத் தலைவன், பாலைநிலத்தின் வழியருமையை உணர்த்தி மறுத்தனன். தனியிருப்போர்க்கு நேரும் துன்பத்தை விட உடன் இருப்போர்க்குப் பாலைநிலம் இன்னாமை தருவதன்று என்பதனைத் தோழி உணர்த்தினாள்.

உப்பு வாணிகர், தங்கள் பொருள்களுடன், கூட்டம் கூட்டமாகப் பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்து செல்வர். உப்பு வண்டிகளைத் தாம் தங்கும் இடங்களில் நிறுத்துவர். எருதுகளைத் தறிகளில் பிணிப்பர். இரவு தங்கி, உணவு உண்டு மகிழ்ந்து பிற இடங்களை நாடிச் செல்வர். அவர்கள், நீங்கிச் சென்ற இடம், ஊர், பாழ்பட்டது போல் காணப்படும். தலைவியை உடன் அழைத்துச் சென்றால், அவள் விழாக்கோலம் பூண்ட ஊர்போலப் பொலிவுடன் விளங்குவாள். தலைவியை விடுத்துச் சென்றால், அவள் தோற்றம், ஊர்பாழ்பட்டது போல் பொலிவின்றிக் காணப்படும். உப்பு வாணிகர், சேர்ந்து செல்லுதல் உமண் சாத்து எனப்படும். உடன் செல்லின் காடுகள் இனிய ஆகும். விடுத்துச் செல்லின் வீடுகளும் இன்னாத ஆகும்.

சொற்பொருள் :

Koviloor Digital Library

சொற்பொருள் :

உமணா	–	உப்பு வாணிகர்
கழிந்த	–	நீங்கிய

மேற்கோள் :

1. "ஊர் எழுந்தன்ன உருகெழு செலவின்
நீர் இல் அத்தத்து ஆரிடை மடுத்த
கொடுங்கோல் உமணர்" *அகநானூறு,17*
2. "உவர் எழு களரி ஓமையம் காட்டு" *நற்றிணை,84*
3. "பல் எருத்து உமணர் பதிபோகும் நெடுநெறி"
பெரும்பாணாற்றுப்படை, 65
4. "உமணர் உப்பு ஒய் ஒழுகை எண்ணுப மாதோ"
புறநானூறு,116
5. "ஆற்றிடை நும்மொடு, துன்பம் துணையாக நாடின்
அதுவல்லது, இன்பமும் உண்டோ எமக்கு" பாலைக்கலி,5
6. "இன்னாதன்றே அவரில் ஊரே" *நற்றிணை,216*

பொருள் முடிவு :

பெரும. காடு, இன்னா என்றிர் ஆயின்,
மனை, தமியோர்க்கு இனியவோ.

Koviloor Digital Library

125. நெய்தல்

இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே,
உளனே வாழி - தோழி! - சாரல்
தழைஅணி அல்குல் மகளிருள்ளும்
விழவு மேம்பட்ட என் நலனே, பழவிறல்
பறை வலம் தப்பிய பைதல் நாரை
திரைதோய் வாங்குசினை இருக்கும்
தண்ணம் துறைவனொடு கண்மாறின்றே.

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள், தோழிக்குக் கூறுவாளாய், தலைவன் சிறைப்புறமாகச் சொல்லியது.

அம்மூவன்.

பொருள் :

தோழி. மலைச் சாரலில் விளைந்த தழையினால் ஆகிய உடையை அணிந்த அல்குலையுடைய மகளிர் யாவருள்ளும் விழாவைப் போலச் சிறப்புடைய என்னுடைய பெண்மையின் நன்மை, பழைய ஆற்றலையுடைய சிறகின் வலிமையை இழந்த துன்பத்தையுடைய நாரை, அலைகள் தோய்கின்ற வளைந்த மரக்கிளையில் இருக்கும், குளிர்ந்த கடல் துறையையுடைய தலைவனோடு, என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. ஆனால், யான் மட்டும், விளங்குகின்ற வளையல்கள் நெகிழும்படி உடல்மெலிந்து இன்னும் உயிருடன் இருக்கிறேன்.

விளக்கம் :

அலைகள் தாமாகவந்து தமக்கு இரைதந்தால் அன்றி, சிறகுகளின் வலிமையின்மையால், நாரை எங்கும் சென்று இரைதேட இயலாது, அவை, அலைகளின் வருகையை எதிர்நோக்கி இருக்கும். அதுபோலத் தலைவியும் தன் அழகை இழந்து, தலைவனுடைய தண்ணளியை எதிர்நோக்கியுள்ளாள். அலைகளில் மீன் வரவில்லையென்றால் நாரை இறந்துபடும். தலைவன் வரைந்துகொள்ள வாரான் எனில், தலைவி இறந்துபடுவாள் என்பது குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

தழை	–	தழையாடை
விறல்	–	ஆற்றல்

Koviloor Digital Library

வலம்	–	வெற்றி
பறை	–	சிறகு
பைதல்	–	துன்பம்
வாங்கு	–	வளைந்த

மேற்கோள் :

1. "கோடீர் இலங்கு வளை நெகிழ" குறுந்தொகை,11
2. "தழையணி அல்குல் தாங்கல் செல்லா
நுழை சிறு நுசுப்பின்" குறுந்தொகை,159
3. "கடலங்கானல் ஆயம் ஆய்ந்த என்
நலம் இழந்ததனினும் நனி இன்னாதே" குறுந்தொகை,245
4. "பறை தபு முதுகுருகு" ஐங்குறுநூறு,180
5. "குணகடல் திரையது, பறைதபு நாரை" குறுந்தொகை,166
6. "யானே, ஈண்டையேனே, என்நலனே
கானக நாடனொடு ஆண்டு ஒழிந்தன்றே" குறுந்தொகை,54
7. "தம்மொடு தாமே சென்ற நலனும்" அகநானூறு,103

பொருள் முடிவு :

தோழி. என்நலன், துறைவனொடு கண்மாறின்று. யானே சாஅய் இன்னும் உளென்.

Koviloor Digital Library

126 முல்லை

"இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்
இவணும் வாரார்; எவணரோ?" என,
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகு முகை இலங்கு எயிறு ஆக
நகுமே - தோழி! - நறுந்தண் காரே

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஒக்கூர் மாசாத்தி

பொருள் :

செல்வத்தை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர், என்கண்ணும், தன்கண்ணும் உள்ள இளமையது அருமையை எண்ணிப் பார்த்திலர்; இவ்விடத்து இன்னும் ஈண்டு வந்திலர்; அவர் எவ்விடத்தில் உள்ளாரோ என நறிய தண்ணிய கார்காலம், மழையால் பாதுகாக்கப்பட்ட முல்லைக் கொடியினது தொகுதியான முகையைத் தன் விளங்கும் பற்களாகக் கொண்டு, நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றது.

விளக்கம் :

முல்லை, அரும்புகள் ஈன்று, கார்ப்பருவம் வந்தமையைத் தலைவிக்கு உணர்த்திற்று. முல்லையில் அரும்புகள் தோன்றுதல், கார்ப்பருவம் சிரிப்பது போன்றதாக உவமிக்கப்பட்டது. முல்லை அரும்புகளைக் காட்டிக் கார்ப்பருவத்தில் வருவதாகத் தன்னைத் தெளிவித்தமையைத் தலைவி நினைத்தனள். முல்லைக்கு மழையைத் தந்து காத்த மேகங்கள், தனக்கு இப்பொழுது பகையாய் வருத்துவதை எண்ணி அவள் வருந்தினள். முல்லை மலரின் நறுமையும், நீரின் தண்மையும் உடைய மேகங்கள் என்பது, நறுந்தண் கார் என்ற அடைமொழியால் உணர்த்தப்பட்டது. கார்ப்பருவம் வந்த பின்னும், தலைவன் வராமையால், தலைவி உயிரோடு உள்ளமையைச் சுட்டிக் காட்டி மேகங்கள், த்லைவியின் நிலை கண்டு சிரிப்பதாயிற்று. பொருள்தேட விழைபவர், இளமைப் பருவம் அருமையுடைத்து என்னும் எண்ணத்தைப் பொருந்தாதவராய் இருத்தல் வேண்டும். இளமை பொலிவு பெறுதற்குரிய வளத்தை விரும்பிச் சென்றவர், காலம் நீட்டித்தலால் அவ்விளமையே கழியும் நிலை ஏற்பட்டது எனக் கார்ப்பருவம் சிரிப்பதாயிற்று.

Koviloor Digital Library

சொற்பொருள் :

வளன்	–	செல்வம்
பெயல்	–	மழை
கார்	–	கார்ப்பருவம் (ஆகுபெயர்)

மேற்கோள் :

1. "முல்லை, நீ, நின் சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை நகுவை போலக் காட்டல் தருமோ? *குறுந்தொகை, 162.*
2. "முகைவாய் திறந்த நகைவாய் முல்லை" *அகநானூறு, 244.*
3. "இளமையிற் சிறந்த வளமையும் இல்லை,
   இளமை கழிந்த பின்றை, வளமை
   காமம் தருதலும் இன்றே" *நற்றிணை, 126.*
4. "மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகை ஊழ்ப்ப" *கலித்தொகை, 27.*
5. "பொருளில்லான் இளமைபோல் புல்என்றாள்" *கலித்தொகை, குறிஞ்சிக்கலி, 1.*

பொருள் முடிவு :

தோழி, சென்றோர் எவணரோ எனக் கார் நகும்.

Koviloor Digital Library

127. மருதம்

குருகு கொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வால்முகை வெரூஉம்
கழனிஅம் படப்பைக் காஞ்சி ஊர!
ஒருநின் பாணன் பொய்யன் ஆக,
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர், நீ அகன்றி சினோர்க்கே.

பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ஓரம் போகியார்.

பொருள் :

நாரை ஒன்று, தன்னைக் கவர்ந்து கொள்ள முனைந்த போது, அதன் வாயினின்றும் தப்பி நீருள் குளித்து மறைந்த கெண்டை மீன், அயலதாகிய நிறம் விளங்கும் தாமரையின் வெண்மையான அரும்பினைக் கண்டு, அதனையும் நாரை என அஞ்சுவதாயிற்று. இத்தகைய வயலையடுத்த தோட்டங்களில் காஞ்சிமரங்கள் வளர்ந்துள்ள ஊரின் தலைவனே. நின் பாணன் ஒருவன் பொய் பேசுகின்றவன் ஆகையால், மற்றுள்ள பாணர்கள் யாவரும் நீ அகன்றமையால் தனித்திருக்கும் மகளிர்க்குக் கள்வர் போலத் தோன்றுகின்றனர்.

விளக்கம் :

வாயிலாகப் புக்க பாணன், தலைவனைப் புகழ்ந்து கூறிய மொழிகள் யாவும் பொய்யாயினமையால் தலைவி, பாணனைப் 'பொய்யன்' என்றாள். தலைவன் புறப்பெண்டிர் பலருடன் கொண்ட தொடர்பு, 'நீ அகன்றி சினோர்க்கு' எனப் பன்மையால் குறிக்கப்பட்டது. குருகிற்கு அஞ்சி ஒளிந்த கெண்டைமீன், குருகு அல்லாத தாமரையின் முகையினை வடிவு, நிற ஒப்புமைகளால் குருகு எனக் கண்டு அஞ்சிற்று. அதுபோலத் தலைவனால் விடுக்கப்பட்ட பாணனின் பொய்யுரையைக் கேட்ட மகளிர், எல்லாப் பாணர்களுமே இசையும் சாதியும் ஒத்தல் கண்டு பொய்யுரைப்பவர் என அவர்களை வெறுப்பதாயினர். கள்வர் என்ற சொல், அற்றம் பார்த்து உடைமையைக் கவரும் கள்வர் போலத் தலைவியின் உடன்பாடின்றித் தலைவனைப் பரத்தையர் சேரிக்குப் பாணர், கவர்ந்து செல்வதைக் குறிப்பதாகும்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

குருகு	–	நாரை; கொக்கும் ஆம்
கெண்டை	–	மீன் வகை
உரு	–	நிறம்
படப்பை	–	தோட்டம்
ஊரன்	–	மருத நிலத் தலைவன்
தாமரை	–	வெண்தாமரை
குளித்தல்	–	மறைதல்
கள்வர்	–	பொய்யர்

மேற்கோள் :

1. "பொதி இரை கதுவிய போழ்வாய் வாளை
நீர் நணிப் பிரம்பின் ஒடுங்கு நிழல் வெரூஉம்"
பெரும்பாணாற்றுப்படை, 287–288.

2. "கருங்கால் குருகின் கோள் உய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம்" *நற்றிணை, 211.*

பொருள் முடிவு :

ஊர, நின் பாணன் பொய்யன் ஆக நீ அகன்றிசினோர்க்கு உள்ள பாணர் எல்லாம் கள்வர் போல்வர்.

Koviloor Digital Library

128. நெய்தல்

குண கடற் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன் துறை
அயிரை ஆர் இரைக்கு அணவந்தாஅங்குச்
சேயள் அரியோட் படர்தி;
நோயை – நெஞ்சே! – நோய்ப் பாலோயே

அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது; உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் கூறியதூஉம் ஆம்.

பரணர்.

பொருள் :

நெஞ்சே! கிழக்குக் கடல் அலைகளின் அருகில் உள்ள, முதுமையால் சிறகுகள் நீங்கப் பெற்ற நாரை ஒன்று, வலிமை வாய்ந்த தேரையுடைய சேரனது மேற்குக் கடற்கரையில் அமைந்த தொண்டி என்னும் கடல் துறையில் கிடைக்கும் அயிரை மீனாகிய உணவினைப் பற்றும் ஆசையால் தலையை மேலே தூக்கினாற்போல, நமக்கு நெடுந்தொலைவில் உள்ளவளும், பெறுதற்கு அரியவளுமாகிய தலைவியைப் பெறுவதற்கு நினைத்தாய். நீ, வருத்தத்தை உடையாய். நின்னையுடைய என்னையும் துன்பத்திற்கு ஆளாக்கும் இயல்பினையுடையாய்.

விளக்கம் :

கடல் அலைகளிடையே ஓடிப்பறந்து சென்று, இரையைத் தேடிப் பெற இயலாத நிலையில் உள்ள முதுநாரை, துறையின் முன்னர் நுளைச்சியர் உணங்க வைத்துள்ள அயிரை மீன் உணங்கலை உண்ண அவாவித் தலையை மேலே தூக்கிப் பார்க்கும் செயல், தலைவன் தலைவியைப் பெற நினைந்ததற்கு உவமையாயிற்று. நாரை அவாவி அண்ணாந்து நோக்கும் நிலையைக் குறிப்பிட 'குரை கடல்' என்ற பாடமே ஏற்றது என; ரா.இராகவையங்கார் குறிப்பிடுவர். அயிரை மீன், நுளைச்சியர் காவலில் உள்ளமை போல, தலைவி ஆயத்தார் காவலில் உள்ளமை குறிக்கப்பட்டது. தொண்டி, குடகடலில் சேரர்க்குரிய துறைமுகப்பட்டினம். முதுமையால் பறக்க இயலாத நாரை, காமத்தால் மெலிந்த தலைவனின் நெஞ்சிற்கு உவமையாயிற்று. அயிரை உணங்கலாகிய இரை, தலைவனைப் பிரிதலால் மெலிந்த தலைவியின் நலத்திற்கு உவமையாயிற்று. குணகடல் பகுதியில் வாழும் சிறகிழந்த

Koviloor Digital Library

முதுநாரை, குட கடலில் பொறையனது தொண்டியில் கிடைக்கும் அயிரை மீனை உண்ண அவாவினாற் போல, தலைவியின் நலனை நுகர விரும்பிய நெஞ்சின் நிலை உள்ளதாகத் தலைவன் கூறினாள்.

சொற்பொருள் :

குணகடல்	–	கிழக்குக்கடல்
பறை	–	சிறகு
படர்தி	–	நினைத்தி
பால்	–	பகுதி
பொறையன்	–	சேர மன்னர் மரபுப் பெயர்
அயிரை	–	ஒருவகை மீன்
அணவந்தா அங்கு	–	அண்ணாந்து பார்ப்பது போல

மேற்கோள் :

1. "பிறன்கண் தோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல்"
தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், 6. பேராசிரியர்

2. "ஒண் தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டியன்ன என் நலம்" குறுந்தொகை, 238.

3. "நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும்" குறுந்தொகை,166

4. "நயந்த நெஞ்சே, நோய்ப்பாலஃதே" ஐங்குறுநூறு,161

5. "யானே தோழி, நோய்ப்பாலேனே"
நற்றிணை,107

6. "வலைஞர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி" ஐங்குறுநூறு,180

பொருள் முடிவு :

நெஞ்சே! அரியோள் படர்தி
நோயை. நோய்ப் பாலோய்.

Koviloor Digital Library

129. குறிஞ்சி

எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ! கேளாய் அத்தை;
மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றியாங்குக்
கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே.

தலைமகன் பாங்கற்கு உரைத்தது. கோப்பெருஞ்சோழன்.

பொருள் :

என்பால் கெழுதகை அன்புடையாய். இளைஞர் இன்புறுதற்குக் காரணமாகிய நட்பினையுடையாய். நன்றும், தீதும் காணவல்ல அறிஞர்களின் தோழனே. கேட்பாயாக. கரிய கடலினிடையே, குளிர்ந்த, வளர்பிறையின் எட்டாம் நாளின் வெள்ளிய பிறைத் திங்கள் தோன்றினாற்போல, கூந்தலின் அயலாக விளங்கும் சிறிய நெற்றியானது, யானையைப் புதிதாக அகப்படுத்தல் போல, என்னை அகப்படுத்திப் பிணித்தது.

விளக்கம் :

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், தலைவன் பாங்கனால் தன்குறையை முடித்துக்கொள்ள விரும்பி, அவனிடம் தன்னுடைய வேட்கையை உரைத்தனன். 'எலுவ' என்ற சொல்லால் பொருளும்; 'சிறாஅர் ஏமுறு நண்ப' என்ற தொடரால் இன்பமும்; 'புலவர் தோழ' என்ற தொடரால் அறமும் ஆகிய மூன்று நிலைகளிலும் தனக்கு உற்ற துணையாகப் பாங்கன் விளங்குவதைக் குறிப்பிட்டுக் கூறினன். தலைவியின் கூந்தலாகிய கயிற்றால், அவளுடைய நுதலாகிய கட்டுத்தறியில், தன்னுடைய நெஞ்சம் என்னும் அகப்படாத யானை பிணிக்கப்பட்டதாகப் பாங்கனிடம் கூறினன். கரிய கூந்தலுக்குக் கடலும், பொலிவுடன் திகழும் நுதலுக்கு அட்டமித் திங்களும் உவமங்களாயின. பாங்கனை மகிழ்விப்பதற்காக எலுவ, நண்ப, தோழ எனப் பலவாறு விளித்தனன்.

சொற்பொருள் :

எலுவ	–	கெழுதகைப் பொதுச் சொல். விளி.
ஏமுறு	–	ஏமம் உறு. தொகுத்தல் விகாரம்

Koviloor Digital Library

எண்நாள் பக்கம் - வளர்பிறை - அட்டமித் திதி

பிணித்தற்று - பிணித்தன்று - வலித்தல் விகாரம்

புலவர் - அறிஞர்

அத்தை - முன்னிலை அசை

சிறாஅர் - காமம் எய்தினார் (சிறுமை - காமம்)

மேற்கோள் :

1. "தலைவன் பாங்கற்கு உற்றது உரைத்தது"
இறையனார் களவியல் உரை,3

2. "செருக்கும், சினமும், சிறுமையும் இல்லார்" திருக்குறள்,1031

3. "பிறை என, மதி மயக்குறூஉம் நுதலும்" குறுந்தொகை,226

4. "ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே, ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும் என்பீடு"
திருக்குறள்,1088.

பொருள் முடிவு :

எலுவ. நண்ப. தோழ. கேளாய்,
சிறுநுதல் எம்மைப் பிணித்தற்று.

Koviloor Digital Library

130. பாலை

நிலம் தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்;
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ? – நம் காதலோரே.

பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது; 'நீ' 'அவர் பிரிந்தார்' என்று ஆற்றாயாகின்றது என்னை? யான் அவர் உள்வழி அறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன்; நின் ஆற்றாமை நீங்குக!' எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது. தோழி தூது விடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றாமையால் கூறியதூஉம் ஆம்.

வெள்ளிவீதியார்

பொருள் :

நம் காதலர், கீழ் உலகில் வாழும் நாக உலகத்துக் கன்னியரை விரும்பி, நிலத்தை அகழ்ந்து காலினால் அவ்வுலகில் புகமாட்டார். வானுலகில் வாழும் அரமகளிரை விரும்பிக் காலால் தேவ உலகிற்கு ஏறிச் செல்லமாட்டார். இம் மண்ணுலகில், நீரர மகளிரை விரும்பி, அக்கரைக்கும் இக்கரைக்குமாகக் குறுக்கே கிடக்கின்ற பெருங்கடலில் காலால் நடந்து செல்லமாட்டார். நம் நாட்டிலும், பிறநாடுகளிலும், நம் ஊரிலும், பிற ஊர்களிலும், ஒவ்வொரு குடியாக முறையாகத் தேடினால் அகப்படாமல் தப்பி வேறிடத்தில் உள்ளவராய் ஆவரோ?

விளக்கம் :

இப்பாடல், வெள்ளிவீதியார், தன் காதலனைத் தேடிச் செல்லத் துனிந்த போது பாடியது என்பர். இப்பாடல் புறத்திணையேயாயினும், பின்னுள்ளோர், சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாமையான் அகத்திணைக்கு ஏற்ற துறையின் அமைத்துத் தொகை நூல்களில் கோத்தனர். இப்பாடலை நச்சினார்க்கினியர், இடைச் சுரத்துத் தலைவனையும் தலைவியையும் தேடிச் சென்ற செவிலியின் கூற்றாகக் கூறுவர் (தொல்காப்பியம், அகத்திணையியல்,37) தலைவன் தன்னிடத்துக் காதல் மிகுதியுடைமையால் நாக உலகின் பெண்கள், விண்ணுலக அரமகளிர், நீரர மகளிர் ஆகிய பெண்களை நாடிச் செல்லமாட்டார் என உறுதியாக நம்பினாள். தோழி, தலைவியிடம் தலைவன் உள்வழி அறிந்து கூறுவதாகக் குறிப்பிட்டு ஆற்றுவித்தனள்.

Koviloor Digital Library

நாடு, ஊர், குடி என்பன நிரலே கூறப்பட்டுள்ளன. நிலத்தில் புகுதல், வானில் இயங்குதல், நீரில் நடத்தல் ஆகிய சித்திகள் கைவரப் பெற்றவர் சாரணர் எனச் சமண சமயம் கூறும்.

சொற்பொருள் :

முந்நீர்	–	படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நீர்மையையுடைய கடல் (ஆகுபெயர்)
தொடுதல்	–	தோண்டுதல்
விலங்குதல்	–	குறுக்கிடுதல்
வானம்	–	துறக்கவுலகு (ஆகுபெயர்)
கெடுதல்	–	அகப்படாமை

மேற்கோள் :

1. "நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளிவீதியைப் போல நன்றும்
செலவு அயர்ந்திசினால் யானே" அகநானூறு,147

2. "நிலத்தில் குளித்து, நெடுவிசும்பு ஏறி
சலத்தில் திரியும் ஓர் சாரணர்" மணிமேகலை,24:46–7

பொருள் முடிவு :

நம் காதலோர் புகாஅர், ஏறார்,
செல்லார், தேரின் கெடுநரும் உளரோ?

Koviloor Digital Library

131. பாலை

ஆடு அமை புரையும் வனப்பின் பணைத் தோட்
பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆர் இடையதுவே; நெஞ்சே,
ஈரம்பட்ட செவ்விப் பைம் புனத்து
ஓர்ஏர் உழவன் போல
பெருவிதுப்பு உற்றன்றால், நோகோ யானே.

வினைமுற்றிய தலைமகன் பருவ வரவின்கண் சொல்லியது.

ஓரேருழவனார்

பொருள் :

அசைகின்ற மூங்கிலைப் போன்ற அழகினையும், பருமையையும் உடைய தோளினையும், பெரிய, அமர்ந்து நோக்கும் கண்ணினையும் பெற்ற தலைவி இருந்த ஊர், நெடுந்தொலைவில் அடைதற்கு அரிய இடத்தில் உள்ளது. எனது நெஞ்சு, மழைபெய்து ஈரம் உடைமையால், உழுதற்கு ஏற்ற செவ்வியையுடைய பசிய கொல்லையின்கண், ஒற்றை ஏரால் உழுபவன், மிகவும் முயன்று விரைதல் போல, பெருவிரைவு உடையதாகின்றது. அந்நெஞ்சின் விரைவிற்கு ஏற்ப என்னால் செல்ல முடியாமையால் யான் வருந்துவேன்.

விளக்கம் :

தலைவன், தலைவியின் தோளணையில் துஞ்சி மகிழ்ந்தவன் ஆதலின் தோளினையும், அவளுடைய நோக்கு எதிர் நோக்கி மகிழ்ந்தவன் ஆதலின் கண்ணினையும் நினைந்தனன். ஓர் ஏர் உழவன், நிலத்தில் ஈரம் காய்வதற்கு முன் பயன்கொள்ள விரைதல் போலத் தலைவியை உரிய பருவத்தே பெற்று மகிழ அவன் நெஞ்சு விரைந்தது. ஓர் ஏர், அதனால் உழப்படும் நிலம், உழுதற்கு ஏற்ற செவ்வி, நிலத்தையுடைய உழவனின் ஆர்வம், அவனுடைய முயற்சி ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறியமையால் இப்பாடல் ஆசிரியர், ஓர் ஏர் உழவனார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். தன் நெஞ்சு விரைந்த போதிலும், தான் அதனுடன் சேர்ந்து விரைந்து சென்று தலைவியைக் காண இயலாமையால் 'நோகோ, யானே', என்றனன். உழவன் நெஞ்சு விரைவது போல அவனுடைய ஏர் விரைவதில்லை. தலைவனுடைய நெஞ்சு விரைவது போல, அவனால் விரைந்து செல்ல முடியவில்லை.

Koviloor Digital Library

பருவம் வந்தவுடன் பயன் கொள்ளும் நிலை, உழவர்க்கும், தலைவனுக்கும் ஒத்த இயல்பாகும்.

சொற்பொருள் :

ஆடு – அசைதல்

அமை – மூங்கில்

பணை – பருத்த

செவ்வி – உரிய காலம் (பக்குவம்)

விதுப்பு – விரைவு

அமர்தல் – கண்டார் நெஞ்சொடு போர் புரிதல் (கலித்தொகை,75. நச்சினார்க்கினியர்)

கண்ணி – கண்ணையுடையவள்

மேற்கோள் :

1. "நெடுமென் பணைத்தோள் அடைந்திசினோரே" குறுந்தொகை,268

2. "நெடுஞ்சேண் ஆரிடை விலங்கும் ஞான்றே" அகநானூறு,3

3. "ஆடு அமைக் குயின்ற அவிர் தூளை" அகநானூறு,82

பொருள் முடிவு :

கண்ணி இருந்த ஊர், நெடுஞ்சேண் ஆரிடையது. நெஞ்சு, பெருவிதுப்புற்றன்று. யான் நோகோ.

Koviloor Digital Library

132. குறிஞ்சி

கவவுக் கடுங்குரையள்; காமர் வனப்பினள்,
குவவு மென் முலையள்; கொடிக் கூந்தலளே
யாங்கு மறந்து அமைகோ, யானே? – ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல் ஆன் நடுங்கு தலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன,
சாஅய் நோக்கினள் மாஅயோளே

கழற்றெதிர்மறை — சிறைக்குடி ஆந்தையார்.

பொருள் :

மாமைநிறம் உடைய தலைவி, என்னைத் தழுவுவதில் விரைவுடையவள். விருப்பத்தைத் தரும் அழகுடையவள். குவிந்த மென்மையான முலையினை உடையவள். ஒழுங்குடன் விளங்கும் கூந்தலை உடையவள். பக்கத்தில் மேயச் சென்ற, விரைந்து பால் சுரக்கும் மடியினையுடைய நல்ல பசுவின் நடுங்கும் தலையையுடைய கன்று, தன்னுடைய தாயைக் காணும் விருப்பத்தைப் போன்ற விருப்பம் உடைய மெலிந்த பார்வையையுடையவள். ஆதலால், அவளை எங்ஙனம் மறந்து தனியே பொருந்துவேன்.

விளக்கம் :

தழுவுதலும், வனப்பும், முலையும், கூந்தலும் பெண்டிர் யாவர்க்கும் பொதுவாயினும், தழுவுதலில் விரைவும், வனப்பில்அன்பும், முலையில் குவிதலோடு கூடிய மென்மையும், கூந்தலின் ஒழுங்கும் தன்காதலிக்கே உரிய சிறப்பு இயல்புகளாகத் தலைவன் நினைந்தனன். தான் விரும்பிய வண்ணமே தலைவியும் விரும்பியமை அவளுடைய விரைந்து தழுவுதலால் புலப்பட்டது. தலைவியின் மெய்ம் முழுதும் துய்த்து மகிழ்ந்தவன் ஆதலின், அவளுடைய வனப்பைப் பாராட்டினான். அதிலும் சிறப்பாக, இளமைக்கு அடையாளமாகிய குவிந்த மென் முலையினையும், பாயாகக் கிடந்த கூந்தலையும் அவனால் மறத்தல் இயலவில்லை. இயற்கைப் புணர்ச்சியின் பின், தலைவி ஆயத்தொடு புக்க போது, தலைவி தன் தலையைச் சாய்த்துத் தன் காமம் புலப்பட நோக்கியமை, தலைவனால் நினைக்கப்பட்டது. தழுவுதல் முதல் உறங்குதல் ஈறாக அவளொடு பெற்ற இன்பம், அவனால் மறக்க இயலாததாக்கியது. நல்லானாகத் தன்னையும், குழவியாகத் தலைவியையும் கூறியமை, தலைவியைக் காக்கும் கடப்பாடு தனக்கு உண்டு என்பதைக் குறிப்பதாகும். பிரிந்தவழி,

Koviloor Digital Library

அவளுடைய நோக்கம் தன் நெஞ்சில் நின்றமை தோன்ற, ‘சாஅய் நோக்கினள்’ என்றான்.

சொற்பொருள் :

கவவு	–	அகத்திடுதல், தழுவுதல் ‘கவ்வு, அகத்திடுமே’ (தொல்காப்பியம், உரியியல்,59)
கடுங்குரையயள்	–	கடுமையள். (குரை – அசைநிலை)
வனப்பு	–	பல உறுப்புத் திரண்டவழிப் பெறுவதோர் அழகு
குவவு	–	குவிந்த
கொடி	–	நீட்சி. ஒழுங்கு
ஞாங்கர்	–	பக்கம்
சுரை	–	சுரப்பு – மடிக் காம்பு
சாஅய்	–	உள்ளதன் நுணுக்கம் (உரிச்சொல்) மெலிவு.
மாஅயோள்	–	மாமை நிறம் உடையள்

மேற்கோள் :

1. “களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்”
தொல்காப்பியம், கற்பியல்,5
நச்சினார்க்கினியர்

2. “இன்னகை இளையோள் கவவ” அகநானூறு,314

3. “அருகு நோக்கம் என் ஆவி அலைக்குமே’
சீவகசிந்தாமணி,1306

4. “யாயாகியளே, மாஅயோளே” குறுந்தொகை,9

5. “கற்புத்தாள் வீழ்த்துக் கவுள்மிசைக் கை ஊன்றி நின்றனள்”
ஐந்திணை ஐம்பது,10

பொருள் முடிவு :

மாஅயோள், கவவுக் கடுங்குரையயள்,
வனப்பினள், முலையள், கூந்தலள்,
நோக்கினள், யான், யாங்கு மறந்து அமைகோ.

Koviloor Digital Library

133. குறிஞ்சி

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு, என்
உரம் செத்தும் உளெனே – தோழி! – என்
நலம் புதிது உண்ட புலம்பினானே.

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் சொல்லியது.

உறையூர் முதுகண்ணன் சாத்தன்.

பொருள் :

தோழி. தினைப்புனத்தை முயன்று ஆக்கியவன் தோட்டத்தில், பொன்போன்ற சிறிய தினையின் கதிர்களைக் கிளிகள், தம்வாயால் ஒடித்து உண்டமையால், தினையின் தாள்கள் குறுமையடைந்தன. அவை, பெரிய மழை பெய்தமையால் இலைகளோடு தழைத்தன. அதுபோல, தலைவர், என் நலத்தைப் புதிதாக உண்டு நீங்கிச் சென்றமையால் ஏற்பட்ட தனிமைக்கண், என் வலிமை நீங்கியபோதிலும், சாகாமல் இன்னும் உயிரோடு இருக்கின்றேன்.

விளக்கம் :

பெருமழை பெய்த பின்னரும், அதன் ஈரம் சில நாட்களுக்கு மண்ணில் நீங்காமல் இருப்பதால், தினையின் தாள்கள் தழைத்தன. தலைவன் தலையளி செய்து பிரிந்தபோதிலும், அவன் செய்த அன்பு, தன் நெஞ்சில் நீங்காமல் இருத்தலால், தன் உடல் வலிமை கெட்டும் உயிர்வாழ்வதாகத் தலைவி கூறினள். நலம் புதிது உண்டவன் அவ்வேட்கை ஆராமல் வருவான் என்றும், தன்னை வரைந்து கொள்ளுவான் என்றும் தலைவிகொண்ட நம்பிக்கை, அவள் உரன் அழிந்தும் உயிர்வாழ ஏதுவாயிற்று. தினையைப் புனவன், பொன்போல் போற்றினான் என்றும் பொருள் கொள்ளுதல் கூடும். தினைப் புனத்தைக் காத்தமை தோன்றத் தலைவி, தான் அறிந்த பொருளை உவமையாகக் கூறினள்.

சொற்பொருள் :

புனவன் – புனத்தை முயன்று ஆக்கியவன்

துடவை – தோட்டம்

Koviloor Digital Library

இருவி	–	அரிதாள்
கூழை	–	குறுமை
பெயல்	–	மழை
ஒலித்தல்	–	தழைத்தல்
குறைத்தல்	–	ஒடித்தல்
உரம்	–	வலிமை
செத்தும்	–	அழிந்தும்
நலம்	–	அழகு
புதிது	–	புதிதாகச் செய்த தலையளி.
புலம்பு	–	தனிமை
உண்ட புலம்பு	–	உண்டு நீங்கியமையால் ஏற்பட்ட தனிமை

மேற்கோள் :

1. "இதை முயல் புனவன்" அகநானூறு,146
2. "புனவன் துடைவைப் பொன்போல் சிறுதினை" குறுந்தொகை,105
3. "பிடிக்கை அன்ன, பிறங்கு குரல் ஏனல். குறுந்தொகை,360
4. "உரன் அழிந்து, ஈங்கு யான் தாங்கிய எவ்வம்" குறுந்தொகை,140
5. "தோள் பதிது உண்ட ஞான்றை" அகநானூறு,320
6. "பூவின் அன்ன நலம், புதிது உண்டு" நற்றிணை,15

பொருள் முடிவு :

தோழி. புலம்பினான் உரம் செத்தும் உளென்.

Koviloor Digital Library

134. குறிஞ்சி

அம்ம வாழி – தோழி! – நம்மொடு
பிரிவு இன்று ஆயின் நன்றுமன் தில்ல –
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி,
நிலம்கொள் பாம்பின், இழிதரும்
விலங்கு மலை நாடனொடு கலந்த நட்பே.

வரைவிடை ஆற்றாளாகிய தலைமகள். ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது. **கோவேங்கைப் பெருங்கதவன்**

பொருள் :

தோழி. கேட்பாயாக. சிறிய குன்றினிடையே வளர்ந்துள்ள, பருத்த நீண்ட தாளினையுடைய வேங்கை மரத்தின் பூக்களையுடைய அசைகின்ற கொம்புகள், பூ உதிர்ந்து தனித்திருக்குமாறு வீசி, கற்களை மோதி, ஒலித்து, விரைந்து விழுகின்ற அருவிகள், நிலத்தினை இடமாகக் கொண்டு ஊர்ந்து திரியும் பாம்பு போல வீழ்கின்றன. இத்தகைய ஒன்றற்கு ஒன்று குறுக்கிடும் மலைகளையுடைய மலைநாடனொடு, ஒருவர் கூட்டக் கூடுதலின்றி யான் உயிருடன் கலந்த நட்பானது, களவுபற்றிப் பிரிதல் இல்லையாயின் நன்மையுடைத்தாகும். இதுவே என் விருப்பம்.

விளக்கம் :

தலைவன் தலைவியரின் நட்பு, ஊழால் கூட்டப்படுதலால், உயிரில் கலந்த நட்பாய்ப் போற்றப்பட்டது. இந்நட்பு, களவில் உடன் உறைதற்கு ஆகாமையால் தலைவனை விரைந்து மணந்துகொள்ள வேண்டினாள். வேங்கைமரம் இன்புறுதற்குக் காரணமாகிய அருவியே, அதன் கிளைகளில் உள்ள பூக்கள் உதிரவும் காரணமாயிற்று. தலைவனும் தலைவியும் இன்புறுதற்குக் காரணமாகிய களவு, பிரிவு என்ற ஒன்று உடைமையானும், ஊரார் அறிந்து அலர் உரைத்தலானும், தலைவியின் நலம் கெட்டு வருந்துவதற்கு ஏதுவாயிற்று. அருவி, பாம்பு போலப் பிறிதொன்றாகத் தோன்றுதல், களவொழுக்கமும் அயலாரால் பிறழ உணரப்பட்டு ஐயுற ஏதுவாயிற்று. அருவியின் அருகில் வளர்ந்திருந்தமையால் வேங்கை மரம், உயர்ந்தும் பருத்தும், பூக்களுடன் பொலிந்தும் காணப்பட்டது. அருவி, நிலப் பரப்பில் இழிந்து

Koviloor Digital Library

வளந்தருவதாயினும், வேங்கையின் பூவை உதிர்த்துக், கல்லொட்டு மோதிப் பாம்பு போலத் தோன்றித் துன்பத்திற்கு ஏதுவாயிற்று. அதுபோல நாடனின் நட்பும், முடிவில் இன்பம் தருவதாயினும், இடையில் பிரிவினால் துன்பத்திற்குக் காரணமாயிற்று.

சொற்பொருள் :

வாழி	–	அசைநிலை
குறும்பொறை	–	சிறிய குன்று
தடைஇய	–	பருத்த
அலங்கு சினை	–	அசையும் மரக்கிளை
கதழுதல்	–	விரைதல்
இரங்கும்	–	ஒலிக்கும்
இழிதரும்	–	இறங்கும்
கதழ் வீழ் அருவி	–	கதழ்ந்து வீழும் அருவி.

மேற்கோள் :

1. "இன்பமும் துன்பமும் உடைத்தால், தோழி நம் களவே" நற்றிணை,304
2. "உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்" அகநானூறு,205
3. "குறும்பொறை அயலது நெடுந்தாள் வேங்கை" அகநானூறு,368
4. "பாம்பு என முடுகு நீர்" அகநானூறு,339
5. "பிரிவு அரிதாகிய தண்டாக் காமம்" குறுந்தொகை,57

பொருள் முடிவு :

தோழி. நாடனொடு கலந்த நட்பு,
பிரிவு அரிதாயின் நன்று.

Koviloor Digital Library

135. பாலை

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாள் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என,
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழாஅல் – தோழி! – அழுங்குவர் செலவே.

'தலைமகன் பிரியும்' என வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

பொருள் :

வினைசெய்தல், ஆடவர்க்கு உயிர் போன்றது. ஒளிபொருந்திய நெற்றியையுடைய, இல்லின்கண் உறையும் மகளிர்க்கு அவர்தம் கணவர் உயிர் போன்றவர் என நமக்குக் கூறியவர் நம் தலைவரே ஆவர். அதனால், அழுதலை ஒழிவாயாக. அவர் நின்னைப் பிரிந்து செல்லுதலைத் தவிர்வர்.

விளக்கம் :

ஈதலும், துய்த்தலும் இல்லோர்க்கு இல்லை ஆதலின், தம் உயிரையும் போற்றாது, அரிய பெரிய வினைகளை மேற்கொண்டு, அவற்றைச் செய்துமுடிக்கும் இயல்புபற்றி, வினைசெய்தல் ஆடவர்க்கு உயிர் எனப்பட்டது. ஆடவரின் இயக்கத்திற்கு அவர் முயன்று செய்யும் வினைகளே காரணமாய் அமைவன. தம் இல்லத்தைக் கடவாது, கற்பு நெறி நிற்கும் மனைவியர்க்குத் தனியே உயிர் என வேறாக நிற்பது ஒன்றில்லை. அவர்களைப் புரந்து, மகிழ்விக்கும் அவர்தம் கணவர், அவர்க்கு உயிரனையர். 'நமக்கு உயிராய் விளங்குபவர், தம் உயிரைப் பெரிதாகப் பொருட்படுத்தமாட்டார்' எனத் தலைவன் செலவழுங்குவதற்கு உரிய காரணத்தைத் தோழி கூறினள். கடைகழி மகளிரின் வேறு தெரிய 'மனையுறை மகளிர்' கூறப்பட்டனர். உயிர் உள்ள அளவும் வினைசெய்தல் ஆடவர்க்கு இலக்கணமாதலின், வினை, ஆடவர்க்கு உயிர் எனப்பட்டது. கணவனைப் பிரிந்து, அவன் வருகைக்காகக் காத்திருத்தல் மகளிர் இயல்பாதலின், அவர்க்கு ஆடவர் உயிர் எனப்பட்டனர். உரைத்தவர் வினைவேறு சொல்வேறு படாதவர் ஆதலின், அவர், தம் சொல்வழி நிற்பரேயன்றிப் பிரிதலைச் செய்யார் எனத் தோழி, தலைவிக்கு ஆறுதல் மொழிந்தனள்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அழாஅல் – அழுதலை ஒழிக

அழுங்குவர் – தவிர்வர்

மனை உறை மகளிர – மனைக்கண் இருந்து, கற்புநெறி நிற்கும் மகளிர்

மேற்கோள் :

1. "வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி" அகநானூறு,33
2. "இன் உயிர் அன்ன பிரிவரும் காதலர்" நற்றிணை,237
3. "காதலன்ன பிரிவு" அகநானூறு,339
4. "அழாஅல் என்று நம் அழுதகண் துடைப்பார்" குறுந்தொகை,82
5. "ஆழல் மடந்தை, அழுங்குவர் செலவே" நற்றிணை,391
6. "யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின் இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே" அகநானூறு,12

பொருள் முடிவு :

தோழி. உரைத்தோரும் தாமே. அழாஅல் செலவு அழுங்குவர்.

Koviloor Digital Library

136. குறிஞ்சி

'காமம் காமம்' என்ப; காமம்
அஃ்ணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானை
குளகு மென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்து, அது காணுநர்ப் பெறினே.

தலைமகன் பாங்கற்கு உரைத்தது. மிளைப் பெருங் கந்தன்.

பொருள் :

காமத்தை, உலகினர் காமம், காமம் என இழித்துக் கூறுகின்றனர். காமம் என்பது, புறத்தே நின்று தாக்கும் தெய்வமும் அன்று. உடலை மெலிவிக்கும் நோயும் அன்று, அது, பேயும் நோயும் போலக் காணப்படாததாய்ச் சிறுகிப் பெருத்தலும், பெருகிச் சிறுத்தலும் உடையதன்று. யானையானது, அதிமதுரத் தழையை மென்று தின்று அதனால் உண்டாகிய மதத்தைப் போலத் தாம் காணுநரைத் தமக்கு உரியராகப் பெற்றால், காமம் பெருகி, நீண்ட காலம் நிற்கும் இயல்புடையதாகும்.

விளக்கம் :

காமத்தின் இழிவினைக் கூறி இடித்துரைத்த பாங்கனுக்குத் தலைவன், காமத்தின் ஆற்றலை உலகியல்பில் வைத்துக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. இப்பாடலாசிரியராகிய மிளைப் பெருங்கந்தன் என்பவர், இந்நூலின் 204 ஆம் பாடலையும் பாடியுள்ளார். அப்பாடல், பாங்கன் வினாவுவதாகவும், இப்பாடல், அவ்வினாவிற்கு விடையாகவும் அமைந்துள்ளது.

அணங்கும், பிணியும் புறத்தே நின்று, உள்ளத்திலும் உடலிலும் புகுந்து துன்பம் செய்வன. ஆனால் காமம் என்பது, உள்ளத்திடத்தே கிடந்து, தனக்கு உற்ற காதலரைக் கண்டவழி, அதிமதுரத்தழையைத் தின்ற யானைக்கு மதம் பெருகுதல் போல், பெருகும் இயல்புடையது, என அவற்றிடை வேறுபாடு உணர்த்தப்பட்டது. காமம், கிழப்பசுவிற்கு விருந்தாற்றும் இளம்புல் போலன்றி, களிற்றுயானைக்கு மதம் பெருக்கும் அதிமதுரத்தழை போன்றது எனத் தலைவன், பாங்கனுக்குக் காமத்தின் வலிமையை உணர்த்தினான். 'பெறின்' என்ற எச்சம், 'நீ காணப்பெற்றாயல்லை; கண்டால், நீயும் இத்தன்மை அடைவாய்', என்ற குறிப்பினை உணர்த்தும். அடங்கிக் கிடக்கும் யானையின் மதம்,

Koviloor Digital Library

அதிமதுரத் தழையை மென்று தின்னத் தின்னப் பெருகுவதாயிற்று. அடங்கிக் கிடக்கும் காம உணர்வும், தமக்கு உரியாரைக் கண்டவழி வெளிப்பட்டுப் பெருகும் இயல்புடையதாகும்.

சொற்பொருள் :

அணங்கு	–	காமநெறியால் உயிர் கொள்ளும் தெய்வ மகள் பரிமேலழகர், திருக்குறள் உரை, 418
நுணங்கி	–	நுண்ணிதாகி
ஆள்மதம்	–	ஆளும் மதம் (வினைத்தொகை)
குளகு	–	தழை; அதிமதுரத் தழை (ஆகுபெயர்)
பாணி	–	செவ்வி, நெடும் பொழுது
பிணி	–	நோய்
கடுத்தல்	–	மிகுதல்
தணிதல்	–	குறைதல்

மேற்கோள் :

1. "சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண்டு உருவின் அணங்குமார் வருமே"
அகநானூறு,158

2. "நோய், நின் அணங்கு அன்மை அறிந்தும்" நற்றிணை,34

3. "நெடுந்தேர் பாணி நிற்ப" அகநானூறு,50

4. "கடாஅம் செருக்கிய கடுஞ்சின முன்பின் களிறு"
நற்றிணை,103

5. "நாகம் ஆறிய சினத்ததன்றி
அதிங்கத்தின் கவளம் கொண்டால்
பாவர்க்கும் விடுத்தல் ஆகாது.
சீவகசிந்தாமணி,750

பொருள் முடிவு :

காமம், காமம் என்ப. அது அணங்கும், பிணியும்
அன்று; கடுத்தலும் தணிதலும் இன்று;
காணுநர்ப் பெறின், பாணியும் உடைத்து.

Koviloor Digital Library

137. பாலை

மெல் இயல் அரிவை! நின் நல் அகம் புலம்ப,
நின் துறந்து அமைகுவென் ஆயின் - எம் துறந்து
இரலவர் வாரா வைகல்
பல ஆகுக! - யான் செலவுறு தகவே

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சம் உரைத்தது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பொருள் :

மென்மையான இயல்பினையுடைய அரிவையே. நின்னுடைய நல்ல உள்ளம் தனிமையால் வருந்த நின்னைப் பிரிந்து சென்று, பிரிந்த இடத்தில் உயிருடன் இருப்பேனாயின், யான் செல்லுதல், உற்ற தகுதியை உடையதாகும். அவ்வாறு நின்னைப் பிரிந்து யான் உயிருடன் வாழும் நாள் ஒவ்வொன்றும், என்னை நீங்கி இரவலர் வாராது, வசை விளைவித்து நிற்கும் பல நாள்கள் போல் துன்பமே தருவதாகுக.

விளக்கம் :

யான் செலவு, உறு தகவு என்றும் அவை இரவலர் வாராவைகல் போல் துன்பம் தருவதாகுக என்றும் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது. தலைவன், தலைவியைப் பிரிய இயலாமை கூறிய வழி, தலைவி, பிரிவு என்ற ஒன்று உண்டு எனக் கருதி ஆற்றாளாயினாள். அவ்வாற்றாமையைத் தணிப்பதற்காகத் தலைவன், அவளைப் பிரியாமையே தனக்குப் பொருள் எனக் கூறினன். தலைவி, தலைவன் பிரிவிற்கு அஞ்சுதலும், தலைவன் தலைவியைப் பிரிய அஞ்சுதலும் 'பிரிவு அச்சம்' எனப்படும். பிரிவாற்றாத மென்மை கருதி, 'மெல்இயல்' என்றான். 'இல்' என இரந்தோர்க்கும், இடனின்றி இரந்தோர்க்கும், தொலைவாகி இரந்தோர்க்கும் ஒன்று ஈயாமை இழிவினைத் தரும் என உணர்ந்து, வினை மேற் செல்லுதல் ஆடவர்க்கு உயிர் எனப் போற்றப்படுவதாயினும் தலைவன், தலைவியின் மெல்லிய இயல்பு கருதி அவளிடம் 'நின்னிற் பிரியேன்' என்றான். வினைமேற் சென்ற இடத்தில் தன்னை நாடி இரவலர் வாராத நாள்கள் எனப் பொருள் கோடல் ஏற்புடைத்தன்று. இல்லற நெறி நிற்போர்க்கு, இரவலர் வாரா வைகல் துன்பம் தருவது போல எனப் பொருள் கொள்ளுதல் பொருட் சிறப்புடையதாகும். 'அமைகுவென் ஆயின்' என்ற எச்சம், அமையேன் என்ற எதிர்மறைப் பொருள் தந்தது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அரிவை – பெண் (பருவம் குறித்த சொல் அன்று)

அகம் – உள்ளம்

வைகல் – நாள்

தகவு – தகுதி

செலவு – செல்லுதல்

புலம்ப – தனிமையால் வருந்த

துறந்து – நீங்கி

மேற்கோள் :

1. "தெளிவைப்படுத்தல்' தொல்காப்பியம், களவியல்,10 நச்சினார்க்கினியர்
2. "புரப்போர் புன்கண் கூர
   இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே" புறநானூறு,72

பொருள் முடிவு :

அரிவை, நின் அகம் புலம்ப, நின் துறந்து
அமைகுவென் ஆயின், செலவு உறு தகவு,
இரவலர் வாரா வைகல் பல ஆகுக.

Koviloor Digital Library

138. குறிஞ்சி

கொன் ஊர் துஞ்சினும், யாம் துஞ்சலமே –
எம்இல் அயலது ஏழில் உம்பர்
மயில் அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

குறிபிழைத்த தலைமகன் பிற்றை ஞான்று இரவுக்குறி வந்துழி, தோழி சிறைப்புறமாகக் கூறியது. இரவுக்குறி நேர்ந்ததூஉம் ஆம்.

கொல்லன் அழிசி

பொருள் :

எம்மனைக்கு அயலாக உள்ள மனைக்கு ஏழுமனையின் அப்பால், மயில் அடியைப் போன்ற இலைகளைய்டைய, கரிய பூங்கொத்துக்களைக் கொண்ட நொச்சியின், அழகுமிக்க மென்மையான கொம்புகள் உதிர்த்த, நீலமணிபோன்ற நிறத்கினையுடைய பூவின் ஓசையை மிகவும் கேட்டு, அலர் முதலியவற்றான் அச்சத்தைச் செய்யும் இவ்வூர் உறங்கியபோதிலும், யாம் உறங்கவில்லை.

விளக்கம் :

தலைவ்ன் சிறிது சேய்மையிலிருந்து தன் வருகையை ஒலி எழுப்பி உணர்த்தியிருந்தாலும், அவளைக் கண்டிருத்தல் கூடும். இரவுக் குறியில், தலைவன் உண்டாக்கும் ஓசைக்காகத் தலைவி இரவுமுழுதும் உறங்காது காத்திருந்து ஏமாற்றம் அடைந்தனள். ‘நொச்சிப் பூ உதிரும் ஓசையைக் கேட்ட யாங்கள், நீ செய்த குறியைக் கேளாதிருக்க வாய்ப்பில்லை’ எனக் குறியிடமும்; நொச்சியின் மலர்கள் உதிரும் நள்ளிரவுப் பொழுது எனக் காலமும் குறிப்பிட்டுத் தோழி, தலைவனுக்கு இரவுக்குறி நேர்ந்தனள். ஏழில் மலைக்கு அப்பால், எம்மனைக்கு அயலாக உள்ள நொச்சி என ‘ஏழில்’ என்ற சொல்லிற்கு ஒரு மலையின் பெயராக்கியும் பொருள் உரைத்தல் கூடும். நொச்சிப் பூ உதிரும் யாமப்பொழுதில் வருவதாய்க் கூறிய தலைவன், வந்திலன்.

சொற்பொரள் :

கொன் – பெருமை, அச்சம் (இடைச்சொல்)

Koviloor Digital Library

ஏழில் – ஏழு இல்லம் – நன்னன் என்பானுக்கு உரிய மலை. ஏழிலைப் பாலை என்னும் மரமும் ஆம்.

உம்பர் – அப்பால், மேல்

மா – கரிய

குரல் – பூங்கொத்து

ஊழ்த்த – உதிர்த்த

மணி – நீலமணி

பாடு – ஒலி

மேற்கோள் :

1. "இரவுக்குறி பிழைத்த வழி, தலைவிக்குக் கூற்று நிகழும்"
தொல்காப்பியம், களவியல்,16 நச்சினார்க்கினியர்

2. "நொச்சிப்பூ உதிர் நடுநாள்" கல்லாடம்,2:18

3. "மயிலடி இலைய மாக் குரல் நொச்சி
மனைநடு மௌவலொடு ஊழ் முகைஅவிழ" நற்றிணை,115

4. "கூடுதல் வேட்கையால், குறிபார்த்துக் குரல் நொச்சிப்
பாடு ஓர்க்கும் செவியோடு பைதலேன் யான் ஆக"
கலித்தொகை,45

5. "பாரத்துத் தலைவன், ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்" அகநானூறு,152

6. "நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே" குறுந்தொகை,6

பொருள் முடிவு :

ஊர் துஞ்சினும், யாம் பூவின்பாடு கேட்டுத் துஞ்சலம்.

Koviloor Digital Library

139. மருதம்*

மனை உறை கோழிக் குறுங்காற் பேடை,
வேலி வெருகினம் மாலை உற்றென,
புகும் இடன் அறியாது தொகுபு உடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளை பயிர்ந்தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல், வாழியர் ! – ஐய! – எம் தெருவே.

வாயில் வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

ஒக்கூர் மாசாத்தியார்

பொருள் :

ஐய ! இல்லின்கண் உறையும் கோழியினது, குறுகிய காலையுடைய பெடையானது, வேலிக்கு அயலில் உள்ள காட்டுப் பூனையின் கூட்டம், மாலைக் காலத்தில் இல்லில் வந்ததாக, அதற்கு அஞ்சிப் பாதுகாப்பாகப் புகுவதற்கு உரிய இடத்தை அறியாமல், சேர்ந்து ஒருங்கே கூடும்பொருட்டுத் துன்பத்தையுடைய குஞ்சுகளாகிய தம் இனத்தை அழைத்துக் கூவிற்று. அதுபோல, இன்னாததாகிப் பரத்தையரால் கூறப்படும் பழிமொழிகளோடு எம் தெருவிற்கு வருதலை ஒழிவாயாக.

விளக்கம் :

காட்டுப் பூனைகள், வேலிகளில் மறைந்து வாழ்வன. கோழிக்குஞ்சுகளை உணவாகக் கொள்வன. தன்னால் பாதுகாக்கப்பட்ட பிள்ளைகளை வெருகு கவருமோ என்ற அச்சத்தினால் கோழிப் பெடை கூவியது போல, தம்மிடம் வந்திருந்த தலைவனைத் தலைவி கவர்ந்து தன்பால் இருத்திக் கொள்வாளோ என்ற அச்சத்தினால், பரத்தையர் அம்பல் மொழிந்தனர்.

'கிளி பயிர்ந்தாங்கு' என்ற பாடம் கொண்டு, காட்டுப் பூனையின் வருகையைக் கண்ட வீட்டில் வளர்க்கப்படும் கிளி, கோழியோடுள்ள குஞ்சுகளைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு கூவிற்று எனப் பொருள் உரைத்தல் சிறப்புடையதாகும். கிளி, கூட்டில் இருப்பதால் காட்டுப் பூனையால் தனக்கு எவ்வகையிலும் ஏதமில்லை என உணர்ந்து, தம் இனமாகிய பிறவற்றின் துன்பத்தை நீக்கக் கருதிக் கூவிற்று. தலைவன், தனியே இருப்பின், இளையரை வவ்விக் கொள்வான் ஆதலின், அவர்கள் தம் தாயருடன் சேர்ந்து கொள்வதற்காகப்

Koviloor Digital Library

பரத்தையர்க்குப் பாங்காயினார் அம்பல் உரைத்தனர். பரத்தையரின் தாயரும் வெறுக்கும் பரத்தமை தலைவனிடம் காணப்பட்டதாகத் தோழி, வாயில் மறுத்தனள். இதனால் தலைவனிடம், இத்தகைய பழிமொழிகளுடன் தம் இல்லத்திற்கு வாரற்க என்றனள். தாயர், தம் மகளிரைத் தழுவிக் கொண்டனர் ஆதலின், தலைவன் புறத்தே சென்றும் எப்பயனும் இல்லை எனக் கூறி தோழி, அவனைக் காத்தனள். பேராசிரியரும், 'பைதல் பிள்ளைக் கிளி பயிர்ந்தாங்கு', என்ற பாடமே கொண்டார். (தொல்காப்பியம், மரபியல், 4.)

சொற்பொருள் :

வெருகு	–	காட்டுப் பூனை
பைதல்	–	துன்பம்
கிளை	–	சுற்றம்
பயிர்தல்	–	அழைத்தல்
அம்பல்	–	ஊரினர் கூறும் பழிமொழி, கேட்டினை உரைக்கும் ஆரவாரம்
வாரல்	–	வருதலை ஒழிக

மேற்கோள் :

1. "நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக்
காத்த தன்மையின் கண்ணின்று பெயர்த்தல்"
தொல்காப்பியம், கற்பியல், 9

2. "மனை உறை கோழியொடு"
பெரும்பாணாற்றுப்படை, 299

3. "குறியடி வெருகின் பைங்கண் ஏற்றை
....
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும்" அகநானூறு, 367.

4. "ஊர் முதுவேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை,
உயிர் நடுக்குற்றுப் புலாவிட்டு அரற்ற" புறநானூறு, 326

பொருள் முடிவு :

ஐய, அம்பலொடு எம்தெரு வாரல்; வாழியர்.

Koviloor Digital Library

140. பாலை

வேதின வெரிநின் ஓதி முது போத்து,
ஆறுசெல் மாக்கள் புள்கொள, பொருந்தும்
சுரனே சென்றனர், காதலர்; உரன் அழிந்து,
ஈங்கு யான் அழுங்கிய எவ்வம்
யாங்கு அறிந்தன்று - இவ் அழுங்கல் ஊரே?

பொருள் வயிற் பிரிந்த இடத்து, 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

அள்ளூர் நன்முல்லையார்.

பொருள் :

காதலர், கூரிய அர்வாளைப் போன்ற முதுகினையுடைய முதிய ஆண் ஓந்தியானது, வழிச் செல்லும் மாந்தர் நிமித்தமாகக் கொள்ளும்படி வலமாகச் செல்லும் அரிய பாலை வழியில் சென்றனர். அவர் பிரிவினால், யான் வலிமையழிந்து, இவ்விடத்தில் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டுள்ளமையை, கெடுதலையுடைய இவ்வூர் எவ்வாறு அறிந்தது?

விளக்கம் :

பாலைவழியில் செல்பவர்க்கு ஓந்தியைத் தவிர நிமித்தம் காண்டற்கு வேறு எப்பொருளும் இல்லாமை குறிக்கப்பட்டது. 'இவ்வூர், யான் தலைவன் பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கியுள்ளமை அறிந்ததேயன்றிப் பிரிந்து சென்ற சான்றோராகிய காதலரை அறியவில்லை,' எனத் தலைவி நினைத்தனள். காதலரைப் பிரிந்து, வலியழிந்து, அவர் வருவார் என்ற ஆசையால் துன்பத்தைத் தாங்கித் தான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தலைவி கூறினள். ஓந்தி, தன்னுடைய செயலை, நன்றாகக் கருதியதோ; தீதாகக் கருதியதோ; எத்தகைய நிமித்தத்தைக் காதலர்க்கு உரைத்ததோ; அறியேன், எனக் கலங்கினாள். 'முது போத்து' ஆதலின் அதன் நிமித்தம், தனக்கு நன்றாகவே அமையும் என்று நம்பினாள். ஓந்தி, நிமித்தம் காட்டித் தலைவன் செலவினைத் தடுத்த போதிலும், அவன் வினைமேற் கொண்ட காதலால் அதனை ஒரு பொருட்டாகக் கருதமாட்டான் என நினைத்தாள். காதலர் உரனுடன் வினை மேற் சென்றார் என்றும், தான் உரனழிந்து ஊர் அலர் உரைக்க வாழ்கின்றேன் என்றும் கருதினாள்.

சொற்பொருள் :

வேதினம் - ஈர்வாள்

Koviloor Digital Library

வெரிந்	–	முதுகு
ஓதி	–	ஓந்தி (இடைக்குறை)
போத்து	–	ஆண்பாற்பெயர்
புள்	–	நிமித்தம் (ஆகுபெயர்)
சுரன்	–	பாலை வழி
உரன்	–	வலிமை
எவ்வம்	–	துன்பம்
அழுங்கல்	–	கேடு, ஆரவாரம்
யாங்கு	–	எவ்வாறு
அறிந்தன்று	–	அறிந்தது.

மேற்கோள் :

1. "கற்புக் காலத்து உண்டாய அலர்" தொல்காப்பியம், கற்பியல்,12
2. "கானம் வெம்பிய வறம்கூர் கடத்திடை
   வேனில் ஓதி முதுபோத்து" நற்றிணை,186
3. "அளிதோ தானே, இவ்வழுங்கல் ஊரே" குறுந்தொகை,276
4. "ஒலியவிந்தன்று, இவ்வழுங்கல் ஊரே" அகநானூறு,70

பொருள் முடிவு :

காதலர் சுரன் சென்றனர். இவ்வூர், யான் தாங்கிய எவ்வம், யாங்கு அறிந்தன்று.

Koviloor Digital Library

141. குறிஞ்சி

"வளைவாய்ச் சிறுகிளி விளை தினைக் கடீஇயர்
செல்க" என்றோளே, அன்னை என, நீ
சொல்லின் எவனோ? - தோழி ! - 'கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த
குறுங்கை இரும்புலிக் கொலைவல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆர் இருள் நடுநாள் வருதி;
சாரல் நாட வாரலோ' எனவே.

இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சி, பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் அதுவும் மறுத்து, சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

மதுரைப் பெருங்கொல்லன்

பொருள் :

தோழி. தினைப்புனத்தில், பெரிய கையையுடைய வலிய யானையின் கடிய பகையால் வருந்திய, குறிய கைகளையுடைய கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலியானது, பசிய கண்ணையுடைய செந்நாய் அகப்படும் செவ்வியைப் பார்த்திருக்கும், யாரும் வழங்குதற்கு அரிய இருளையுடைய நடுயாமத்தில் வருகின்றாய். அங்ஙனம் வருதலை ஒழிவாயாக எனவும், வளைந்த அலகினையுடைய சிறிய கிளைகளை, விளைந்த தினையில் படியாமல் கடியும் பொருட்டு, நம் தாய் நம்மைச் செல்க என்றாள் எனவும், நீ, தலைவனுக்குக் கூறினால் வரும் குற்றம் யாது?

விளக்கம் :

கிளி, வளைவாய்ச் சிறுகிளி எனவும்; யானை, நெடுங்கை வன்மான் எனவும்; புலி, குறுங்கை இரும்புலி எனவும்; அதன் ஆண் இனம், கோள்வல் ஏற்றை எனவும்; நாய், பைங்கண் செந்நாய் எனவும்; இரவு, ஆர் இருள் நடுநாள் எனவும் அவற்றின் பயன்பாடு நோக்கி அடைமொழிகளால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

இரவுக் குறியில் வருவதால் வரும் ஏதங்களைச் சுட்டிக் காட்டித் தலைவனைப் பகலில் வருமாறு வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. புலி, செந்நாயை அகப்படுத்தும் செவ்வி பார்க்கும் நடுயாமம் எனத் தலைவன் இரவில் வருவதால் தோன்றும் ஏதம் குறித்துத் தலைவி

Koviloor Digital Library

அஞ்சினள். அன்னை, கிளி கடியத் தம்மை அனுப்பியதாகக் கூறுதல், பகற்குறி நேர்ந்தமையைக் குறிப்பதாகும். பகலிலும், கிளி கடியாமல் இருப்பின், அன்னை பிறரைக் காவலுக்கு அனுப்புதல் கூடும் என்பதால் அதனையும் மறுத்து, வரைந்து கோடல் வேண்டினாள்.

யானை கிட்டாத போது, புலி செந்நாயை அகப்படுத்தச் செவ்வி பார்க்கும் என்பது, இரவுக் குறி வாயாத போது, பகற் குறியில் பெறத் தலைவன் எதிர்பார்த்திருக்கும் வேட்கையைச் சுட்டுவதாகும். 'படுபதம் பார்க்கும்', என்பதற்கு உறங்கும் செவ்வி பார்க்கும் எனப் பொருள் கொண்டு, யானை கிட்டாத போது, புலி ஆனேறுகளை அடித்து உண்பதற்காக அவற்றின் காவலாக உள்ள செந்நாய் உறங்கும் செவ்வி பார்க்கும் என்று உரைத்தல் சிறப்புடையதாகும். மானை அடித்து உண்பதற்காகச் செந்நாய் உறங்கும் செவ்வி பார்க்கும் புலி என்றும் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள் :

கடீஇயர்	–	கடிவதற்காக
எவன்	–	யாது
நெடுங்கை வன் மான்	–	யானை
குறுங்கை	–	புலியின் முன் கால்கள்
ஏற்றை	–	ஆண்பாற்பெயர்
படுபதம்	–	உறங்கும் செவ்வி
ஆர்இருள்	–	வழங்குதற்கு அரிய இருள்
செந்நாய்	–	நாய் இனத்துள் ஒன்று

மேற்கோள் :

1. "பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்
அழிதலை வந்த சிந்தைக் கண்ணும்"
தொல்காப்பியம், களவியல்,21

2. "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிய"
தொல்காப்பியம், மரபியல்,50

Koviloor Digital Library

3. “வளை வாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்”
பெரும்பாணாற்றுப்படை,300

4. “அன்னை, சிறுகிளி கடிதல் தேற்றாள் இவள் எனப்
பிறர்த்தந்து நிறுக்குவள் ஆயின்
உறற்கு அரிதாகும் அவன் மலர்ந்த மார்பே” அகநானூறு,28

5. “விளியறி ஞமலி” அகநானூறு,140

6. “சிலம்பின், ஆகொள் வயப்புலி ஆகும் அஃது என”
அகநானூறு,2

7. “செந்நாய் வெரீஇய புகர் உழை ஒருத்தல்” அகநானூறு,219

8. “சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன் முரண் சோரும் துன்னரும் சாரல்” குறுந்தொகை,88

பொருள் முடிவு :

தோழி. "சாரல் நாட, நடுநாள வருதி, வாரல், எனவும், அன்னை செல்க என்றோள் எனவும் சொல்லின் எவன்.

Koviloor Digital Library

142. குறிஞ்சி

சுனைப்பூக் குற்றுந் தொடலை தைஇ,
புனக்கிளி கடிபும் பூங்கட் பேதை
தான் அறிந்தன்றோ இலளே - பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம் பின்னும், தன் உழையதுவே !

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது. தோழிக்குத் தலைமகன் தன்குறை கூறியதூஉம் ஆம்.

கபிலர்

பொருள் :

நள்ளிருளில் துயில்கொள்ளும் யானையைப் போல, பெருமூச்சுவிட்டு என் உள்ளம் புணர்தற்கு முன்னரேயன்றிப் புணர்ந்த பின்னரும் தன்னிடம் இருப்பதை, சுனையில் மலர்ந்த பூக்களைப் பறித்து, அவற்றை மாலையாகக் கட்டி, தினைப்புனத்தில் கதிரை உண்ணவரும் கிளிகளை ஓட்டுகின்ற பூப்போன்ற கண்களையுடைய பேதையாகிய தலைவி, அறிந்தனளோ, அறிந்திலளோ.

விளக்கம் :

தன்னுடைய உள்ளம், தலைவியிடம் உள்ளது என்பதைப் புணர்தற்கு முன் புகுமுகம் புரிதலால் அறிந்தவன் ஆதலின், புணர்ந்த பின்னரும் அவ்வாறு இருத்தலை அறிந்தனளோ, அறிந்திலளோ எனக் கவன்றான். தலைவி, புணர்ந்த பின்னரும் முன்புபோல் குற்றும், தைஇயும், கடிந்தும் ஒழுகுதலான் தன்னை அவள் நினையாமை குறித்தான். தான் அவளைப் போல ஒருவினையும் செய்யாமையால், தன் உள்ளம் அவளிடமே உள்ளதாகக் கூறினான். அழகிய கண்களால் தன்னை பேதைமையுறச் செய்தமையால், அவளைப் பேதை என்றான். பேது செய்தவள், பேதை எனப்பட்டாள். பேதையாதலின் அவள் தன்துயர் அறிந்திலள் என்றான். ஆயத்தாரிடைச் சென்ற போது, அவள் தன்னை நோக்கிய நோக்கத்தை நினைத்து, 'பூங்கண் பேதை' என்றான். உள்ளத்திற்கு உயிர்த்தல் முதலியன இல்லையாயினும், 'உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல், நெஞ்சொடு புணர்த்துக் கூறும் மரபு பற்றி உள்ளத்தின் செயல் கூறப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

குறுதல்	–	பறித்தல்
தொடலை	–	மாலை
பால் நாள்	–	நடு இரவு
பள்ளி யானை	–	துயிலும் யானை
உயிர்த்தல்	–	பெறுதற்கு அருமை குறித்து நெடு மூச்சு விடுதல்.

மேற்கோள் :

1. "கழிய காவி குற்றும்" குறுந்தொகை,144
2. "ஆம்பல் குறுநர் நீர்வேட்டாங்கு" குறுந்தொகை,178
3. "பள்ளி யானையின் உயிரா அசைஇ" குறுந்தொகை,359
4. "பள்ளி யானையின் வெய்ய உயிரா" நற்றிணை,253

பொருள் முடிவு :

என் உள்ளம் தன் உழையது. பேதை அறிந்தனளோ, இலளோ.

Koviloor Digital Library

143. குறிஞ்சி

அழியல் – ஆயிழை! – அன்புபெரிது உடையன்;
பழியும் அஞ்சும், பயமலை நாடன்;
நில்லாமையே நிலையிற்று ஆகலின்,
நல்இசை வேட்ட நயனுடைய நெஞ்சின்
கடப்பாட்டாளனுடைப் பொருள் போலத்
தங்குதற்கு உரியது அன்று, நின்
அம்கலும் மேனிப் பாஅய பசப்பே.

வரைவிடை வைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது.

மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்

பொருள் :

ஆராய்ந்து அணிந்த அணிகலன்களை உடையாய். பயனைத் தரும் மலைநாட்டிற்கு உரிய தலைவன், நின்னிடம் அன்பு மிகுதியாக உடையவன். நின்னைக் களவில் நுகர்ந்து, வரையாது ஒழுகும் பழியையும் அஞ்சுபவன். பல்லாற்றானும் நில்லா உலகத்தில் நிலையாக உள்ளது, நிலையாமை ஒன்றேயாகும். ஆதலின் உலகம் நன்று எனக் கொண்ட புகழை விரும்பும் ஒழுகலாற்றினையுடைய உள்ளத்தோடு கூடிய ஒப்புரவாளன் ஈட்டிய பொருள் போல, நினது அழகு ஒழுகும் மேனியின்கண் பரவிய பசலை, நிலையாகத் தங்குவதற்கு உரியதன்று. ஆதலின் நீ வருந்தற்க.

விளக்கம் :

தலைவி தலைவனைப் பிரிந்து வருந்துவதைப் போலத் தலைவனும் தலைவியைப் பிரிந்து வருந்துவான் எனத் தோழி ஆற்றுவித்தனள். ஒரு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தல் பழியொடு படரும் செயல் என அறிந்து தலைவன் அஞ்சினான்.

பல்வேறு நிலையாமைகளை விளக்கும் புறத்திணை, காஞ்சித் திணையாகும். இவ்வுலகில் நிலைத்திருப்பது, நிலையாமை ஒன்றே. அதனை உணர்ந்து தலைவன், உலகம் நன்றெனக் கொள்ளும் புகழ் வருவதற்குரிய செயல்களைச் செய்வான். கைம்மாறு கருதாத கடப்பாட்டு உணர்வு அவன் உள்ளத்தில் காணப்படுவதாகும். தாளாற்றித் தந்த பொருளை யாவர்க்கும் வரையாது வழங்குவான். அப்பொருள் ஈட்டியது

Koviloor Digital Library

அறியாது, பிறர்க்கு ஈதலால் விரைந்து நீங்கிவிடும். தலைவன் தலைவியை மணந்து கொள்ள விரைந்து வருதலால், தலைவியின் பசலை நோய் விரைவில் நீங்கிவிடும். பசலையின் நீக்கத்திற்குக் கடப்பாட்டாளனின் செல்வம் நீங்குதல் உவமையாக்கப்பட்டது. அழகு ஒன்றே நிலைத்துத் தங்குவது எனவும், பசலை தங்குவதற்கு உரியதன்று எனவும் தோழி கூறினள். தலைவியின் மேனி பொலிந்து தோன்றுவதற்கு ஒப்புரவாளனின் செல்வம் பொலிந்து தோன்றுதல் உவமையாகவும் கொள்ளப்படும். பொதுவாகக் கடப்பாட்டாளன் இயல்பு கூறப்பட்ட போதிலும், தலைவன் ஒப்புரவாளனாகவும், இசைபட வாழ்பவனாகவும் விளங்கும் திறம், குறிப்பால் உணர்த்தப்பட்டது.

சொற்பொருள் :

அழியல்	–	வருந்தற்க
பயம்	–	பயன்
இசை	–	புகழ்
நயன்	–	ஒழுகலாறு, ஈரம், அன்பு, நன்மை
கடப்பாட்டாளன்	–	தவிராது செய்யும் ஒப்புரவாளன்
பாய	–	பரவிய (உரிச்சொல்)
பசப்பு	–	பசலை
கலுழ்தல்	–	ஒழுகுதல்

மேற்கோள் :

1. "நில்லா உலகத்து நிலைமை" *பொருநர்ஆற்றுப்படை,176*
2. "தவிரும் தன்மைய அல்ல என்பது, கடப்பாடு என்னும் பெயரானே பெறப்பட்டது." *பரிமேலழகர் உரை, திருக்குறள்,211*
3. "இரந்தோர்க்கு ஈயாது, ஈட்டியோர் பொருள் போல் பரந்து வெளிப்படாதாகி" *அகநானூறு,276*
4. "இசைபட வாழ்பவர் செல்வம் போலக் காண்தொறும் பொலியும் கதழ்வாய் வேழம்" *நற்றிணை,217*
5. "அருள் வல்லான் ஆக்கம் போல் அணிபெறும்" *கலித்தொகை, குறிஞ்சிக்கலி,2*

Koviloor Digital Library

6. "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ்
நிறீஇத் தாம் மாய்ந்தனரே" புறநானூறு,165

7. "பாசியற்றே பசலை, காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே" குறுந்தொகை,399

பொருள் முடிவு :

ஆயிழை. நாடன் அன்பு பெரிதுடையன்.
பழியும் அஞ்சும். நின்மேனி பசப்பு,
தங்குதற்கு உரியது அன்று.

Koviloor Digital Library

144. பாலை

கழிய காவி குற்றும், கடல
வெண்தலைப் புணரி ஆடியும், நன்றே
பிரிவுஇல் ஆயம் உரியது ஒன்று அயர,
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் - அவ்வழிப்
பரல்பாற் படுப்பச் சென்றனள் மாதோ -
செல்மழை தவழும் சென்னி
விண்உயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே!

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்.

பொருள் :

உப்பங்கழிகளில் பூத்த காவிமலர்களைப் பறித்தும், கடலின் வெண்ணிறமான தலைப்பகுதியையுடைய அலைகளில் விளையாடியும், மிகத் தன்னோடு பிரிதலில்லாத ஆயமகளிர், தத்தமக்குரிய விளையாட்டினைப் புரியவும், இவ்விடத்தில் பொருந்துதலை உடன்படாதவளாய் விரைந்து செல்லும் மேகங்கள் தவழும் உச்சியையுடைய வானத்தளவு உயர்ந்த விளக்கத்தையுடைய, குறுக்கிடும் மலைகளைக் கொண்ட நாட்டில் அக் கொடிய பாலைநிலத்தின் பரற்கற்கள், தன் அடியின் அழகினைச் சிதைக்கும் வண்ணம் சென்றனள்.

விளக்கம் :

தலைவி தலைவன் மேல் காதலால், தன்னை எஞ்ஞான்றும் பிரியாத ஆயமகளிரைப் பிரிந்து செல்லவும் துணிந்தனள். ஆயத்தார் தலைவிக்குக் கோலம் செய்யுங்கால், அவளுடைய அடிகளுக்குச் செம் பஞ்சுக் குழம்பு ஊட்டுவர். அத்தகைய கால்கள், பாலைநிலத்தில் நடத்தல் எங்ஙனம் கூடும் எனச் செவிலி வருந்தினள். புணரி ஆடுதல் தலைவி நெய்தல் நிலத்தவள் என்பதும், மலைநாட்டிற்குச் சென்றனள் என்பதால் தலைவன் குறிஞ்சி நிலத்தவன் என்பதும் உய்த்துணரப்பட்டன.

சொற்பொருள் :

காவி - நீலமலர்

பிறங்கல் - விளங்குதல்

Koviloor Digital Library

புணரி	–	புணர்ந்துவரும் அலை (ஆகுபெயர்)
செல்	–	மேகம்
விண்	–	ஆகாயம்
சென்னி	–	உச்சி
விலங்குதல்	–	குறுக்கிடுதல்
ஆயம்	–	ஆயமகளிர் (விளையாட்டு மகளிர்)

மேற்கோள் :

1. "கழிப்பூக் குற்றும்" அகநானூறு,330
2. "வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி." அகநானூறு,20
3. "தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்" அகநானூறு110
4. "விலங்கு மலை நாடனொடு கலந்த நட்பே" குறுந்தொகை,134
5. "பாத்தியன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல் முரம்பு ஆகிய பயமில் கானம்"
அகநானூறு,5

பொருள் முடிவு :

ஆயம் அயர, இவ்வழிப்படுதலும் ஒல்லாள். விலங்கு மலைநாட்டில் அவ்வழிச் சென்றனள்.

Koviloor Digital Library

145. நெய்தல்

உறைபதி அன்று, இத்துறைகெழு சிறுகுடி –
கானல்அம் சேர்ப்பன் கொடுமை எற்றி,
ஆனாத் துயரமொடு வருந்தி, பானாள்
துஞ்சாது உறைநரொடு உசாவாத்
துயில் கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே.

வரைவிடை ஆற்றாது தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கொல்லன் அழிசி

பொருள் :

கடல் துறையையுடைய இச்சிற்றூர், நாம் தங்கியிருத்தற்கு உரிய ஊர் அன்று. கடற்கரைச் சோலையையுடைய தலைவனுடைய, விரைந்து வரைவொடு வருவல் எனச் சொல்லி நீங்கி, அங்ஙனம் செய்யாது நிற்கும் கொடுமையை நினைந்து; அமையாத உள்ளத்துடன் உடல் வருந்தி; பாதியிரவிலும் துயில் கொள்ளாமல்; பக்கத்தில் உறைபவரிடம் யாது நேர்ந்தது என்று கூட வினவாத தூக்கத்தை மட்டும் கண்களில் கொண்ட அறிவற்ற மாக்களொடு நெடிய இரவுப் பொழுதினையும் இவ்வூர் உடைத்தாயிற்று.

விளக்கம் :

இவ்வூர், பிறர் துன்பம் கண்டு வருந்தும் அருள் உள்ளம் அற்றவர்களைக் கொண்டது. நெடிய இராப் பொழுதினை உடையது. தலைவி, தலைவன் சொல் பிழைத்த கொடுமை கண்டு உள்ளம் கலங்கினாள். உடல்மெலிந்தாள். யாவரும் உறங்கும் நடு இரவிலும் உறக்கம் கொண்டிலள். தலைவனின் கொடுமையோடு ஊரின் அயன்மையும் அவளை மிகவும் துன்புறுத்தின. அவனொடு மகிழ்ந்து இன்பம் துய்த்த துறையும், சோலையும் இப்பொழுது துன்பத்தைத் தருவன ஆயின. ஊர், தன் துயர் குறித்து உசாவாமையோடு, உறங்குதலும் செய்தலால் அவள் வெறுப்பு மிகுவதாயிற்று. உசாத்துணையாக விளங்க வேண்டிய தோழியே, தன் துன்பம் அறியாது உறங்குதலால், அவள் தான் வாழும் ஊரையே முனிந்து 'உறைபதி அன்று' எனக் கூறவும் முற்பட்டாள். தலைவன் இல்லாத ஊர், தலைவிக்கு உறைவதற்கு உரிய ஊராகத் தோன்றவில்லை. தலைவியின், இவ்வுணர்வு 'புலம்பித் தோன்றல்' எனப்படும். இச்சிறுகுடியில், முன்பு

Koviloor Digital Library

இன்பத்தைத் தந்த துறையும், கானலும், மாக்களும்,தலைவன் பிரிந்தவழி தனக்குத் துன்பமே செய்தலால், இவ்வூர், 'உறைபதி அன்று', என முனிந்து கூறினள்.

சொற்பொருள் :

எற்றி	–	நினைந்து (உரிச்சொல்)
கொடுமை	–	பிரிவின் கண் நீட்டித்தல். அயன்மை.
உறைநர்	–	தலைவி
மாக்கள்	–	தோழி
உசாவா	–	வினவாத
கானல்	–	கடற்கரைச் சோலை.

மேற்கோள் :

1. "தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பு ஆடும்மே"

குறுந்தொகை,9

2. "நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே"

குறுந்தொகை,6

3. "கொடியார் கொடுமையிற் தாம் கொடிய, இந்நாள்
நெடிய கழியும் இரா" திருக்குறள்.1158

பொருள் முடிவு :

இச்சிறுகுடி, துயில்கண் மாககளொடு நெட்டிரா உடைத்து. உறைபதி அன்று.

Koviloor Digital Library

146. குறிஞ்சி

அம்மவாழி! தோழி! - நம்ஊர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ? -
தண்டுடைக் கையர், வெண்தலைச் சிதவலர்,
'நன்று நன்று' என்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும், ஆங்கணது அவையே.

தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி, 'வரைவு மறுப்பவோ?' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.

வெள்ளிவீதியார்

பொருள் :

தோழி. கேட்பாயாக. முதுமைக் காலத்தில் மெய்யைத் தளராமல் தாங்குவதற்குப் பிடித்த கோலினையுடைய கையையும், நரைத்த தலையையும், அதன் கண் கட்டிய தலைப்பாகையையும் உடைய தலைவற்குத் தமராய் உள்ளவர், நீவிர் கொணர்ந்து தந்த பொருள் மிகப்பெரிது என்று கூற, அவையில் உள்ளோர், இன்றைக்குக் கொணர்ந்த பொருள் பெரிதுதான் என ஏற்றுக் கொண்டனர். இந்நிலையில், நம்முடைய ஊரில், களவில் புணர்ந்து பிரிந்தவரைக் கற்புநெறியில் சேர்ப்பிக்கின்றவர் இருந்தனரோ?

விளக்கம் :

'இன்று பெரிது', என்பதால், முன்னர்த் தந்த பொருள் குறைவானது என்பது புலப்படும். களவியல் உரையாசிரியர் இப்பாடலை வரைவு மறுத்தற்கு எடுத்துக்காட்டாய்க் கூறுவர். அவ்வாறாயின், இவ்வூரில் புணர்ந்தோரைப் பிரிப்போர் உள்ளனரேயன்றிப் பிரிந்தோரைப் புணர்ப்போர் உள்ளனரோ எனப் பொருள் உரைக்கப்படும். தோழி, தலைமகனுடைய தமர் இன்று நன்று என ஏற்றுக் கொண்டமை கூறி, தலைமகளை வரைவு உடன்பட்டமை கூறினாள். தலைவியை மணம் முடிக்கத் தமர், பொருளோடு வந்து மணம் பேசிய போது, அவர் நன்று நன்று எனக் கூறி அளித்த வழி, மகட் பெற்றார், இன்று பெரிது என உவந்து ஏற்றமை இப்பாடலால் குறிக்கப்பட்டது. இருந்தனர் கொல்லோ என ஐயுற்ற தலைவிக்கு, இருந்தனர் எனத் தோழி கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. பெரியோரை மணம் பேச விடும் மரபு இப்பாடலால் புலப்படும்.

Koviloor Digital Library

சொற்பொருள்:

தண்டு	–	முதுமையில் மெய்யைத் தாங்கப் பிடிக்கும் கோல்
வெண்தலை	–	நரைத்த தலை
சிதவலர்	–	கிழிந்த ஆடை. தலைக் கட்டு
மாக்கள்	–	வரைபொருள் கொண்டு வருபவர்
வாழி	–	அசைநிலை
நன்று	–	பெரிது (உரிச்சொல்)

மேற்கோள் :

1. "தமர் வரைவு மறுப்பரோ எனக் கவன்றாட்குத் தோழி கூறியது"
தொல்காப்பியம், களவியல்,23 நச்சினார்க்கினியர்
2. "தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி" புறநானூறு,243
3. "கற்றார், மற்றும் கட்டுரை வல்லார், கவி என்னும்
நற்றேர் மேலோர் நால்வரை விட்டாற்கு அவர் சென்றார்"
சீவகசிந்தாமணி,1054
4. "பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்" குறுந்தொகை,156
5. "கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
நரை மூதாளர்" அகநானூறு,377

பொருள் முடிவு :

அவை, மாக்களொடு இன்று பெரிது என்னும்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்.

Koviloor Digital Library

147. பாலை

வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன
மயிர் ஏர்பு ஒழுகிய அம்கலும் மாமை,
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல,
இன்துயில் எடுப்புதி – கனவே! –
எள்ளார் அம்ம துணைப் பிரிந்தோரே.

தலைமகன் பிரிந்த இடத்துக் கனாக்கண்டு சொல்லியது.

கோப்பெருஞ்சோழன்

பொருள் :

கனவே! வேனிற்காலத்தில் மலரும் பாதிரிமரத்தின் இதழ்கள் உட்புறம் வளைந்த பூவில் உள்ள மயிரினைப் போன்று, மயிர் எழுந்து, படர்ந்த அழகு ஒழுகும் மாமை நிறத்தினையும், நுண்ணிய வேலைப்பாடுடைய அணிகலன்களையும் உடைய தலைவியைக் கொண்டுவந்து தந்ததுபோல, இனிய துயிலினின்றும் எழுப்புகின்றாய். தம் துணையைப் பிரிந்தோர் நின்னை இகழார்.

விளக்கம் :

தன் காதலியைக் கொண்டு வந்து கனவில் காட்டியதற்காகத் தலைவன் அதனைப் பாராட்டினான். கனவு, உண்மையில் தலைவியைத் தந்திலது, ஆதலின் 'தந்தோய் போல' என்றான். 'எள்ளார்' என்ற சொல், புகழ்வர் என்னும் பொருள் உணர்த்தும். கனவு, துயில் நீங்குவதற்குக் காரணமாயிற்று. ஆயினும் அதனை இகழாது, தலைவியைக் காட்டியமையால் புகழ்ந்தனன். காதலியைக் காட்டும் கனவை யாரும் இகழார் எனத் தன் உணர்வினை உலகின்மேல் வைத்துக் கூறினான். மாமையால் தலைவியின் இயற்கை அழகும், பூணினால் அவள் செயற்கை அழகும் சுட்டப்பட்டன. துணையைப் பிரிந்தோர், கனவில் மருட்டிய நின்னை எள்ளார் என்பதால், நின்னால் ஏமாற்றப்பட்ட என்னையே எள்ளுவர் என்றும் குறித்தான். தலைவியைக் களவில் துய்த்த இடமும், அவள் நலமும் தோன்றப் பாதிரி மரமும், அதன் மலரின் துய்யும் நினைக்கப்பட்டன. காமம் மிக்க கழிபடர் கிளவியாதலின் தலைவன் கனவினை அழைத்து உரைக்கும் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

கூன்	–	வளைந்த
மலர்	–	ஆகுபெயராய், பாதிரி மலரின் துய்யை உணர்த்திற்று.
மடந்தை	–	தலைவி (பருவம் குறித்த சொல் அன்று)
எடுப்புதல்	–	எழுப்புதல்
எள்ளார்	–	இகழார்

மேற்கோள் :

1. "பராரைப் பாதிரி குறுமயிர் மாமலர்" நற்றிணை,337

2. "எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று
ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல"
பொருநர் ஆற்றுப்படை,6–7

3. "மடந்தை மாண்ட நுடங்கு எழில் ஆகத்து
அடங்கு மயிர் ஒழுகிய அவ்வாய்" மலைபடுகடாம், 31–2

4. "காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்
பாசிலை ஒழித்த பராரைப் பாதிரி
வள்இதழ் மாமலர்". பெரும்பாண் ஆற்றுப்படை,3–5

5. "முதிரா வேனில், எதிரிய அதிரல்
பராரைப் பாதிரி, குறுமயிர் மாமலர்" நற்றிணை,118

6. வேனில் பாதிரிக் கூனி மாமலர்" அகநானூறு,257

பொருள் முடிவு :

கனவே. இன்துயில் எடுப்புதி. துணைப்பிரிந்தோர் எள்ளார்.

Koviloor Digital Library

148. முல்லை

செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலம்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போது ஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்,
'கார் அன்று' என்றி ஆயின்,
கனவோ மற்றுஇது? வினவுதல் யானே.

பருவம் கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று' என்று வற்புறுத்த, தலைமகள் சொல்லியது.

இளங்கீரந்தையார்

பொருள் :

செல்வத்தோடு பிறந்த சிறுபிள்ளைகளின், சிறிய அடிகளில் பொலிவுபெற விளங்கும் பொன்னால் செய்யப்பட்ட, தவளையின் வாய்போன்ற வாயினையுடைய சிறு சதங்கையில் அமைந்துள்ள காசுகளைப் போல, கொன்றை மரம் மொட்டுக்களை ஈன்றது. கொன்றையின் முகைகளும், குருந்தின் முகைகளும், பெருந்தண்மையால் மழைபெய்யும் காலம் என்று அறிந்தும், மழைபெய்யாமையால் மலராமல் திகைத்தன. இத்தகைய காலத்தைக் கார்காலம் அன்று என்று நீ கூறுவாயாகில், யான் காணும் இக்காட்சி கனவோ, நனவோ, நின்னை யான் வினவுகின்றேன்.

விளக்கம் :

கிண்கிணி, சிறுவர்களின் காலில் அணியப்படும் ஒருவகை அணிகலன். தவளையின் வாய்போல் பிளந்து காணப்படுவது. ஒலிப்பதற்குரிய பரல் இடுவதற்காக அதன் வாய் அமைக்கப்படும். பரல்களாய் விளங்கும் பொற்காசுகளின் வடிவம், கொன்றைப் போது போல் பொன்னிறமாகவும், உருண்டும் அழகுடன் விளங்கும்.

தலைவன், கொன்றை, போது ஈனும் பருவத்தில் வருவதாகக் கூறித் தலைவியைப் பிரிந்து சென்றனன். அவை போது ஈன்றவுடன், தலைவி அதனைக் கண்டு, கார்காலம் வந்தது என நினைத்தாள். தோழி, கொன்றையும், குருந்தும் மலராமையைக் காட்டி, கார்ப்பருவம் இன்னும் வரவில்லை என ஆற்றுவித்தனள். தோழியின் சொல் கேட்ட தலைவி, தான் காண்பன கனவா, அன்றி நனவா என வினவினள். கொன்றையும்

Koviloor Digital Library

குருந்துமே, கார்ப்பருவமோ அன்றோ என ஐயுற்று மயங்கும்போது, தலைவி மயங்குதல் கூறவேண்டாவாயிற்று.

சொற்பொருள் :

பொலம்	–	பொன்
காசு	–	பொன்னால் செய்யப்பட்ட பரல்
போது	–	மலர்வதற்கு முந்தைய நிலை
அலம் வருதல்	–	அலமருதல், சுழலுதல்
என்றி	–	என்று கூறுகின்றாய்
கிண்கிணி	–	சிறிய சதங்கை
கனவோ	–	பொய்யோ.

மேற்கோள் :

1. "சிறுகிழி, கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்செய் பேழை மூய் திறந்தன்ன
காசுஎதிர் புறவினதுவே"
குறுந்தொகை,233

2. "தேரை வாய்க் கிண்கிணி" கலித்தொகை,86

3. "கிண்கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டு"
புறநானூறு,77

4. "அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்"
நற்றிணை,250

பொருள் முடிவு :

கொன்றை குருந்தொடு அலம்வரு காலையும் கார் அன்று என்றியாயின், கனவோ, யான் வினவுவன்.

Koviloor Digital Library

149. பாலை

அளிதோ தானே – நாணே. நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்து உக்காஅங்கு,
தாங்கும் அளவைத் தாங்கி,
காமம் நெரிதரக் கைந் நில்லாதே.

உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

வெள்ளிவீதியார்.

பொருள் :

நாணம் இரங்கத்தக்கது. காமம் உற்ற நம்மொடு மிக நெடுங்காலம் உடன் இருந்து வருந்தியது. இனி, அது, வெள்ளிய பூவினையுடைய கரும்பினால் அமைக்கப்பட்ட நீர் ஓங்குவதற்காக இட்ட மணலையுடைய சிறிய கரையானது, இனிய நீர் பெருகிய வழி அழிந்து வீழ்ந்தாற்போல, தடுக்கும் வலிமையுள்ளவரை தடுத்து நிறுத்தி, காமம் பெருகி உடைத்தபோது, ஒழுங்கிற்கு உட்பட்டு நில்லாது.

விளக்கம் :

வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த அணைபோலக் கரும்பின் கழிகளைப் பயன்படுத்துதல் உண்டு. வெள்ளம் மிகப் பெருகியவழி, கரும்பினால் அமைக்கப்பட்ட கரையும் கரும்போடு அடித்துச் செல்லப்படும். காமம் பெருகியவழி,தனக்குக் காவலாக இருந்த நாணம் நீங்கியதொடு, தன்னுடைய பெண்மை ஒழுக்கமும் சாய்ந்தது எனத் தலைவி கூறினள். கரும்பின் சிறைவழிப் பெருகும் நீர் ஆதலின், 'தீநீர்' எனப்பட்டது. நீரின் பெருக்கத்தை நோக்கும்போது, அதனைத் தடுக்கும் சிறை, சிறியதாய்த் தோன்றுதலால் 'சிறுசிறை' எனப்பட்டது.

வெள்ளிவீதியார், தன் கணவனைத் தேடி மனைப்புறம் செல்லும்போது கூறிய பாடலாக இப்பாடல் கொள்ளப்படும். இப்பாடல் புறமேயாயினும், சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாமையின், அகத்திணைக்கு ஏற்ப, உடன்போக்கு உணர்த்தியவழி, ஒரு தலைவி கூறியதாகப் பின்னுள்ளோர், தொகை நூலில் அகப்பாடலாகத் தொகுத்தனர்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

அளிது	–	இரங்கத்தக்கது
தீநீர்	–	தீவிய நீர், இனிய நீர்
உழத்தல்	–	வருந்துதல்
வான்	–	வால், வெண்மை
சிறை	–	கரை
உக்காங்கு	–	உகுந்தமை போல
கை	–	ஒழுக்கம்
நாண்	–	பெண்டிற்கு இயல்பாகிய தன்மை
வீந்து	–	வீய்ந்து என்பதன் மரூஉ

மேற்கோள் :

1. "அளிதோ தானே பாரியது பறம்பே" *புறநானூறு,42*

2. "சிறையும் உண்டோ, செழும் புனல் மிக்குழி
நிறையும் உண்டோ, காமம் காழ்க் கொளின்" *மணிமேகலை,5, 19–20*

3. "சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டே, மலர்க இவ்வூரே" *நற்றிணை,15*

4. "மிருபெயல், உப்புச் சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காமம் நண்ணி" *அகநானூறு,208*

5. "காமம் கைம்மிகச் சிறத்தலின், நாண் இழந்து" *அகநானூறு,266*

6. "வெள்ளி வீதியைப் போல, நன்றும்
செலவயர்ந்திசினால் யானே" *அகநானூறு,147*

பொருள் முடிவு :

நாண், நனி நீடு உழந்தன்று, கைந்நில்லாது. அளிது.

Koviloor Digital Library

150. குறிஞ்சி

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின், உள்நோய் மல்கும்;
புல்லின், மாய்வது எவன்கொல்? – அன்னாய்!

இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது. மாடலூர் கிழார்

பொருள் :

அன்னை போன்றவளே! தினைப் புனத்தில், மரத்தின் உச்சியில் அமைக்கப்பட்ட பரண் மேலிருப்பவன், கொளுத்தி எறிந்த நறியபுகையினையுடைய விடுகொள்ளிகள் ஆகாயத்தில் விளங்கும் விண்மீனைப்போல இடங்கள் தோறும் ஒளிவிடும். இத்தகைய, மலைகள் உயர்ந்து விளங்கும் நாட்டின் தலைவனுடைய, பூசிய சந்தனம் புலர்வதற்கு இடனாகிய மார்பினைப் பிரிந்து யான் நினைத்த அளவிலேயே உள்ளத்தின்கண் காமநோய் பெருகுகின்றது. அங்ஙனம் நினையாது, தழுவினால் நோய் பெருகுவதற்கு மாறாக, நீங்குவதன் காரணம் யாது?

விளக்கம் :

இரவுப் பொழுதில், காட்டுப்பன்றி, யானை முதலிய விலங்குகள் தினைப்புனத்தைப் பாழ்படுத்தாமைப் பொருட்டு, காவல்புரிவோர், உயர்ந்த பரணில் அமர்ந்து கொள்ளிகளை வீசி எறியும் செயல் ஈண்டுக் கூறப்பட்டது. தலைவன் இரவுக் குறியில் விடுகொள்ளியின் ஒளியில் வருவதாலும், சந்தனம் பூசி வருவதாலும் பலரால் அறியப்பட்டு அலர் எழும் சூழல் உருவாகும் எனத் தலைவி கவன்றனள். கானவர் வீசும் கொள்ளிகளால், இரவுக் குறியில் வரும் தலைவற்கு ஏற்படும் ஏதம் குறித்து வருந்தினாள். தலைவனின் காம வெப்பத்தினால் உடலில் பூசிய சந்தனம், புலர்வது குறிக்கப்பட்டது. கொள்ளிகள், வானமீன் போல் இமைக்குமாயினும், அவற்றின் நறும்புகையால் அவை சந்தனக் குச்சிகள் என உணரப்பட்டன. பலரும் காணும் விண்மீன் போலத் தலைவன்

Koviloor Digital Library

வருகையும் பலரால் அறியப்படும் எனத் தலைவி வருந்தினாள். விலங்குகளை நோக்கி வீசி எறிந்த கொள்ளிகள், தலைவன் வருகையைப் புலப்படுத்தியமை போலத் தலைவியின் நலம் துய்க்க வரும் தலைவன் செயல், ஊர் அலர் உரைக்க ஏதுவாயிற்று என்ற குறிப்புப் பொருளும் புலப்படுத்தப்பட்டுள்ளது. குளிர்தற்கு உரிய சாந்தும், புலர்வதற்கு உரிய மார்பு என்பதால், தழுவியவழிக் காமம் தணிவதும், பிரிவில் நினைத்தவழிக் காமம் வெம்மை மிக்கு வருத்துவதும் குறிக்கப்பட்டன.

சொற்பொருள் :

சேணோன் – உயரத்தில் இருப்பவன், தினைப் புனத்தில் மரத்தின் மேல் அமைக்கப்பட்ட பரண்மேல் இருப்பவன்.

மாட்டிய – மடுத்து எரித்த

ஞெகிழி – கடைக்கொள்ளி

வானமீன் – விண்மீன்

அகலம் – மார்பு

நோய் – காமநோய்

மல்கும் – பெருகும்

அன்னாய் – தோழியைத் தலைவி 'அன்னை' எனக் கூறும் மரபு, (தொல்காப்பியம், பொருளியல்,52)

மேற்கோள் :

1. "அவன் அளி சிறப்பினும்" தொல்காப்பியம், களவியல்,20
2. "கழுதில் சேணோன்" மலைபடுகடாம்,243
3. "கலி கெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலி அஞ்சு இதணம்" குறிஞ்சிப்பாட்டு,40–41
4. "குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின், அம்புகை" புறநானூறு,108
5. "ஏனலம் சிறுதினைச் சேணோன் கையதைப்
பிடிக்கை அமைந்த கனல்வாய்க் கொள்ளி" அகநானூறு,73.

Koviloor Digital Library

6. "உள்ளின் உள்ளம் வேமே" *குறுந்தொகை,102*

7. "கானவர் எறிந்த கடுஞ்செலல் ஞெகிழி" *நற்றிணை,393*

8. "ஆரம் நாறும் மார்பினன்" *குறுந்தொகை,161*

பொருள் முடிவு :

அன்னாய், நாடன் மார்பு, உள்ளின் நோய் மல்கும். புல்லின் மாய்வது எவன்?

Koviloor Digital Library

151. பாலை

வங்காக் கடந்த செங்காற் பேடை
எழால் உற வீழ்ந்தென, கணவற் காணாது,
குழல் இசைக் குரல குறும்பல அகவும்
குன்று உறு சிறுநெறி அரிய என்னாது,
'மறப்பு அருங்காதலி ஒழிய
இறப்பல்' என்பது, ஈண்டு இளமைக்கு முடிவே.

பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

தூங்கலோரி

பொருள் :

தன் துணையாகிய ஆண் அருகில் இல்லாமல் நீங்கிய, செந்நிறக் கால்களையுடைய, பெண் பறவை, தன்னுடைய கணவனைக் காணாமையால், அது புல்லூறு என்றும் பறவையால் பற்றி எடுத்துச் செல்லப்பட்டு இறந்தது என நினைத்து, குழலின் இசை போன்ற குரல்களையுடைய குறியவும் பலவுமாகிய ஒலிகளால் கூப்பிடும். இத்தகைய சிறிய வழிகள் செல்லுதற்கு அரியன என்று எண்ணாமல், நம்மால் மறத்தற்கு இயலாத குணங்களையுடைய காதலியைப் பிரிந்து, சிறு நெறிகளைக் கடந்து செல்வேன் எனக் கூறுதல், கிடைத்த இளமைக்கு முடிவு செய்வதாகும்.

விளக்கம் :

இடைச் சுரத்துத் தலைவன், பறவையும் விலங்குகளும் அன்புற்று வாழும் காட்சிகளை மீண்டும் நினைத்துப் பார்த்தல், 'நிகழ்ந்தது நினைத்தல்', எனப்படும். அவ்வாறு நினைத்துப் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குக் கூறுதல் செலவழுங்குதலை நோக்கமாக உடையதாகும். இப்பாடல், தலைவன் நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கூறிச் செலவழுங்கிய பாடலாகும்.

வங்காப் பறவையின் பெண் இனம், தன்னுடைய கணவனைச் சிறிது பொழுது காணாத போதும் பெரிதும் வருந்துவதாயிற்று. அக்காட்சியைக் கண்ட தலைவன், தன் மறப்பருங்காதலி, குன்றுகெழு சிறுநெறியில் தான் சென்றால், எவ்வாறெல்லாம் வருந்துவாளோ என எண்ணிச் செலவு தவிர்ந்தனன். தன் காதலியை நீங்காது என்றும் உடனுறைதலே இளமைக்குத் தக்கது என நினைத்தான். பொருள்மேல் செல்லும் ஒவ்வொரு நாளும், இருவர் இளமையும் பயனின்றிக் கழியும்

Koviloor Digital Library

என்பதை உணர்ந்தான். 'முடிவு' என்ற சொல், இழந்த இளமையை மீட்டும் பெறமுடியாது என்பதைக் குறிப்பதாகும்.

சொற்பொருள் :

வங்கா	–	ஒருவகைப்பறவை. (வக்கா எனவும் வழங்கப்பெறும்)
பேடை	–	பெண்பாற்சொல்
எழாஅல்	–	புல்லூறு என்னும் பறவை
இறப்பல்	–	நீங்குவல்
சிறுநெறி	–	ஒடுக்கமான வழிகள்
கணவன்	–	அஃறிணைக்கண் வந்த முறைப் பெயர்

மேற்கோள் :

1. "எருவைச் சேவல் ஈண்டு கிளை பயிரும்" அகநானூறு,161
2. "இனிதுடன் கழிக்கின் இளமை
   இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே" ஐங்குறுநூறு,415
3. "இளமையும் தருவதோ, இறந்த பின்னே" கலித்தொகை,15
4. "மயிலும், எழாலும் பயிலத் தோன்றும்"
   தொல்காப்பியம், மரபியல்,43
5. "வரை சேர் சிறு நெறி" அகநானூறு,123
6. "மறப்பருங்காதலி இவள் ஈண்டு ஒழிய
   இறப்பத் துணிந்தனிர்" கலித்தொகை,2
7. "பூ இடைப் படினும், யாண்டு கழிந்தன்ன
   நீர் உறை மகன்றில் புணர்ச்சிபோல
   பிரிவு அரிதாகிய தண்டாக் காமம்" குறுந்தொகை,57

பொருள் முடிவு :

நெஞ்சே. சிறுநெறி அரிய என்னாது, காதலி ஒழிய, இறப்பல் என்பது, இளமைக்கு முடிவு.

Koviloor Digital Library

152. குறிஞ்சி

யாவதும் அறிகிலர், கழறு வோரே-
தாய்இல் முட்டை போல, உட்கிடந்து
சாயின் அல்லது, பிறிதுஎவன் உடைத்தே?
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம் காதலர் கையற விடினே.

வரைவு நீட்டித்தவழி, ஆற்றாளாகிய தலைமகள், 'நீ ஆற்றுகின்றிலை' என்று, நெருங்கிய தோழிக்குச் சொல்லியது. கிள்ளிமங்கலம் கிழார்

பொருள் :

தன்னை நினையும் தாய் யாமையைப் பார்த்து வளரும் பார்ப்பினைப் போல, தம்மை நினையும் தலைவரைப் பல்கால் காண்டலால் காமம் வளரும் தன்மையுடையது. நம்மிடத்துக் காதலையுடைய தலைவர், நாம் செயலறும்படி நம்மைப் பிரிந்து வரையாது ஒழுகுவராயின், தாயில்லாத முட்டையுள், பார்ப்பின் கரு அசையாது கிடந்து அழிவது போல உட்கிடந்து மெலியினன்றி, வேறு என்ன பயன் உடையதாகும். ஆதலின், என்னை இடித்துரைப்பார் சிறிதும் அறிகிலர்.

விளக்கம் :

தாய்முகம் நோக்கி வளரும் யாமைப் பார்ப்பு போல, கரணத்தொடு கூடிய கற்பு வாழ்வில், இடைவிடாது தலைவன் முகம் நோக்கி மகிழ்ந்து வளரும் இயல்புடையதாகக் காமம் உவமிக்கப்பட்டது. கரு, தன்னைப் பார்ப்பாக ஆக்குவதற்கு உரிய தாய் இல்லையெனில், தான் புதையுண்ட மணலில் கிடந்தும், முட்டையுட்கிடந்தும் அழிவது போல, தன்னை மனைக் கிழத்தியாக்குவதற்குரிய வரைவு இல்லையெனில் தலைவி, தன் இல்லத்தில் உடல் மெலிந்து அழிவது ஒருதலை என்பது குறிக்கப்பட்டது.

யாமை, முட்டையை மணலுள் ஈன்று, பிறர் அறியாது மறைத்துவைக்கும் இயல்புடையது. யாமை, நினைத்து, முட்டையுட் கருவினைப் பார்ப்பாக வெளிப்படுத்தும் என்ற வழக்கு ஈண்டு சுட்டப்பட்டுள்ளது. அவ்யாமையே நினைந்து உதவினாலன்றி, முட்டையுட்கிடக்கும் கரு, பார்ப்பாகி, யாமையாதல் இயலாது. 'கழறுவோர்' எனத் தோழியின் அயன்மை கருதித் தலைவி, அவளைப் படர்க்கையால் குறிப்பிட்டாள். தலைவியின் வாழ்க்கை வரைவினால்

Koviloor Digital Library

பொலிவு பெறுவதையும், இடைவிடாத அவன் தலையளியால் வளர்ந்து சிறப்புப் பெறுவதையும் இவ்விரு உவமைகளால் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

சொற்பொருள் :

யாவதும் – சிறிதும்

சாயின் – மெலியின் (சாஅய் – உரிச்சொல்)

பார்ப்பு – இளமைப் பெயர் (தவழ்வனவற்றிற்கும் வரும்
– (தொல்காப்பியம், மரபியல், 26)

கையற – செயலற

மேற்கோள் :

1. "யாமை இளம் பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசினாஅங்கு" ஐங்குறுநூறு,44

2. "நிறைச் சூல் யாமை மறைத்து ஈன்று புதைத்த
கோட்டுவட்டு உருவின் புலவு நாறு முட்டை
பார்ப்பு இடன் ஆகும் அளவை, பகுவாய்க்
கணவன் ஓம்பும்" அகநானூறு,160

3. "காமம் தாங்குமதி என்போர், தாம் அஃது
அறியலர் கொல்லோ, அனை மதுகையர் கொல்"
குறுந்தொகை,290

பொருள் முடிவு :

காமம், காதலர் விடின், சாயின் அல்லது, பிறிது எவன் உடைத்து. கழறுவோர் யாவதும் அறிகிலர்.

Koviloor Digital Library

153. குறிஞ்சி

குன்றக் கூகை குழறினும், முன்றிற்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்,
அஞ்சுமஞ்மன்; அளித்து – என் நெஞ்சம்! – இனியே,
ஆர் இருட் கங்குல் அவர் வயின்
சாரல் நீள்இடைச் செலவு ஆனாதே.

வரையாது நெடுங்காலம் வந்து ஒழுகுகின்றுழி, 'நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்கு, 'அவர் வரவு நமது ஆற்றாமைக்குக் காரணம் ஆம்,' எனத் தலைமகள் கூறியது.

கபிலர்

பொருள் :

முன்பெல்லாம், குன்றின் கண் வாழும் கூகை, தன்னுடைய பெடையைக் கூவியழைத்தாலும், முன்றிலில் உள்ள பலா மரத்தின் பெரிய கிளைகளில் ஆண்குரங்கு தாவி விளையாடினாலும், என் நெஞ்சு அச்சத்தை அடையும். இனி, இக் களவுக் காலத்தில், செல்லுதற்கு அரிய இருளையுடைய இரவில், மலைச்சாரலில் உள்ள நெடுவழியில் அவருடன் துணையாகச் செல்லுதலை நெடுநாட்களாக ஒழியாது. அது இரங்கத்தக்கது.

விளக்கம் :

என் நெஞ்சு அளிக்கும் இயல்புடையது ஆதலின், அவருடன் களவுக்காலத்தில் செலவு நீங்காததாய் உள்ளது,' எனத் தலைவி கூறினள். பொழுது மறைவதற்கு முன் தலைவியின் நெஞ்சு, அஞ்ச வேண்டாத தற்கெல்லாம் அஞ்சிற்று. கங்குல் பொழுதில், இடையூறுகள் மிகுந்த மலைச்சாரல் வழியாகத் தலைவன் வரும் போதும், மீண்டு செல்லும் போதும், அவனைக் காத்துச் செல்வதற்காகத் துணையாக உடன் சென்றது. வரையாது வந்தொழுகும் எல்லா நாளிலும் செல்ல வேண்டுதலின் 'நீள் இடை' என்றாள். நீண்ட வழியாதலானும், மலைச்சாரலில் புலி, யானை, பாம்பு முதலிய விலங்குகளின் அச்சத்தாலும், தலைவன் இரவுக் குறியில் வரும் ஏதம் குறித்துத் தலைவி அஞ்சினள். இரவுக் குறி வாராமை வேண்டுதல் இதன் பயனாகும்.

Koviloor Digital Library

சொற்பொருள் :

இனி	–	இக் களவுக்காலத்தில், இக் கங்குற் பொழுதில்
நீள் இடை	–	நீண்ட பொழுது, நீண்ட வழி
குழறுதல்	–	கூகை தன் இனத்தை அழைத்தல்
உகளுதல்	–	விளையாடுதல்
அஞ்சுமன்	–	'மன்' கழிவுப்பொருள் தரும் இடைச்சொல்
கலை	–	ஆண் குரங்கு
கூகை	–	பேராந்தை

மேற்கோள் :

1. "நெஞ்சம், இருளிடை மிதிப்புழி நோக்கி, அவர்
தளரடி தாங்கிய சென்றது இன்றே" *அகநானூறு,128*
2. "மந்தி, கடுவனோடு உகளும்" *ஐங்குறுநூறு,277*
3. "பராரை வேம்பின் படுசினை இருந்த
குராஅல் கூகையும் இராஅ இசைக்கும்
ஆனா நோய் அட வருந்தி" *நற்றிணை,218*
4. "வெருவர, மன்ற மராஅத்த கூகை குழறினும்,
நெஞ்சு அழிந்து அரணம் சேரும்" *அகநானூறு,158*

பொருள் முடிவு :

என் நெஞ்சம், அஞ்சுமன். இனி, அவர் வயின் செலவு ஆனாது. அளித்து.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

154. பாலை

யாங்கு அறிந்தனர் கொல் – தோழி! – பாம்பின்
உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவிர் அமையத்து,
இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளி,
பொறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய் அம் கவட்டுத்
தயங்க இருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பின் கானம்
பிரிந்து சேண் உறைதல் வல்லுவோரே?

பொருள் வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து, தலைமகள் தோழிக்கு உரைத்தது.

மதுரைச் சீத்தலைச்சாத்தன்

பொருள் :

தோழி. பாம்பின் தோல்கள், மேல் நிமிர்ந்து நின்றாற்போல, வெம்மையான கானலுடன் கோடையின் நண்பகற் பொழுது விளங்குவதாகும். அக்காலத்தில், புள்ளிகளுடைய மயிர் விளங்கும் கழுத்தினையும், குறுக நடையிடும் அடியினையும் உடைய பெண் புறாவானது, பொரிந்த அடிப்பகுதியையுடைய கள்ளியின், வெடித்த காயையுடைய, அழகிய இலையில் விளங்கும்படி இருந்து, தன்னுடைய தனிமை தோன்றும்படி, இரையை விரும்பி மேல் எழுந்து பறந்து சென்ற தன்னுடைய சேவலை நினைத்துக் கூவும். இத்தகைய, கடத்தற்கு அரிய வழியையுடைய ஊர்களைக் கொண்ட பாலை நிலத்தைக் கடந்து, நெடுங்காலம் சேய்மைக்கண் தங்க வல்லவர், அவ்வாறு பிரிந்து உறையும் வலிமையை யாங்ஙனம் அறிந்தனர்.

விளக்கம் :

பாலையில் வேனிற்காலத்து நண்பகற் பொழுதில் கதிரவனின் கொடிய கதிர்கள் எறிக்கும் தோற்றம், 'பாம்பின் உரித்த தோல் நிமிர்ந்து நின்றது போல' என உவமிக்கப்பட்டது.

தன்னுடைய பெடையையும், பார்ப்பினையும் அருத்திய சேவல், தான் உண்பதற்காக இரையை விரும்பிப் பறந்து சென்றது. அந்நிலையில், தனிமையைப் பொறாத பெண்புறா, தன்னுடைய துணையை அழைக்கும் சுரம் என அக்காட்டில் தோன்றும் அன்புறுதக்க காட்சியைத் தலைவி நினைத்தனள். அருஞ் சுரத்தில் தங்குவதற்குக் கள்ளியன்றி வேறு மரம் இல்லாமையால், 'கள்ளியம் கவடு' கூறப்பட்டது.

Koviloor Digital Library

அம்மரநிழலிலும் தங்க இயலாமையைப் 'பொரிகால் கள்ளி' எனக் குறித்தார். காய்கள் வெடித்துத் தம்மைப் பறந்து ஓடச் செய்யாமை கருதி 'விரிந்த காயையுடைய கள்ளி' என்றார். புறாவும் தன்னுடைய துணையைப் பிரிய இயலாத காலம் எனக் குறிப்பிட்டு, அக்காலத்தில் தன்னைப் பிரிந்து தலைவரால் சேண் நாட்டில் எங்ஙனம் தங்க முடிந்தது எனத் தலைவி வருந்தினாள். சேவல் இரை வேட்டு எழுந்தாற்போலத் தலைவன் பொருள் வேட்டுச் சென்றனன். பேடை, கள்ளியில் தனித்திருந்து கூவுதல் போலத் தலைவியும் இல்லத்துத் தனித்திருந்து ஆற்றாளாயினாள். பெடையின் கழுத்தின் அழகினையும் நடையின் இனிமையையும் கண்டு மகிழ, ஆண்டு சேவல் இல்லாமை போலத், தன்னுடைய நலனை நுகரும் தலைவனும் ஈண்டு இல்லை என்பது குறிக்கப்பட்டது. 'யாங்கு அறிந்தனர்' என்ற தொடர், அவ்வலிமை தனக்கு இல்லாமையை உணர்த்திற்று.

சொற்பொருள் :

உரி	–	உரிக்கப்பட்ட தோல் (ஆகு பெயர்)
உருப்பு	–	வெம்மை
சேவல்	–	ஆண்பாற் பெயர் -- புறவினை உணர்த்திற்று
பெடை	–	பெண்பாற் பெயர்
கவடு	–	கிளை
வைப்பு	–	ஊர்
கானம்	–	பாலை நிலம்
சுரம்	–	வழி
சேண்	–	சேய்மை – காலம் குறித்தது.

மேற்கோள் :

1. "சேய் நாட்டுப் பிரிந்து .... சேண் உறைநர்"

   அகநானூறு,59

2. "கவைமுள் கள்ளி, காய்விடு கடு நொடி.
   துதை மென் தூவித் துணைப் புறவு இருக்கும்
   அத்தம்"

   குறுந்தொகை,174

3. "தலைவி, தலைவனின் பிரிதல் வன்மையைப் பின்னும் கேட்டற்கு அவாவுதல்"

   தொல்காப்பியம், கற்பியல்,6
   நச்சினார்க்கினியர்

Koviloor Digital Library

நச்சினார்க்கினிய

4. "நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் மண்டிலம்"

அகநானூறு,31

5. "வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்
நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் அம்காட்டு"

அகநானூறு,11

பொருள் முடிவு :

தோழி. கானம் பிரிந்து உறைதல் வல்லுவோர் யாங்கு அறிந்தனர்.

Koviloor Digital Library

155. முல்லை

முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக் குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந்தன்றே; 'மெழுகு ஆன்று
ஊது உலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம் பயில் இறும்பின் ஆர்ப்ப, சுரன் இழுடி,
மாலை நனிவிருந்து அயர்மார்
தேர் வரும் என்னும் உரை வாராதே.

தலைமகள் பருவம் கண்டு அழிந்து சொல்லியது.

உரோடகத்துக் கந்தரத்தன்

பொருள் :

தரிசாகக் கிடந்த பழைய கொல்லையை, உழுததனாலாகிய நிறைந்த மகிழ்ச்சியையுடைய உழவர், காலையில் விதைப்பதற்காகச் சிறிய கூடைகளில், விதைகளை எடுத்துச் சென்றனர். மாலையில் அவர்கள் வீடு திரும்பும் போது, அவற்றில் போதுகள் நிறையுமாறு மாலைப் பொழுது தானாக வந்தது.

உரு அமைப்பதற்குப் பயன்பட்ட மெழுகு, உருகி இல்லையாக, ஊது உலையில் பொன் பெய்து உருவாக்கிய பிளந்த வாயினையுடைய தெள்ளிய மணிகள், மரங்கள் செறிந்து வளர்ந்த குறுங்காட்டில் ஒலிக்கும்படி, அருவழியைக் கடந்து, விருந்து மிகப் புரியும் பொருட்டு, தலைவருடைய தேர் வருகின்றது என்று கூறும் உரை வந்திலது.

விளக்கம் :

நச்சினார்க்கினியர், தொல்காப்பியக் கற்பியல் உரையுள் (நூற்பா, 6.) இப்பாடலைத் தலைவி, பொழுது கண்டு மகிழ்ந்தது எனக் குறிப்பிடுதல், எழுதியோர் பிழைப்பாதல் வேண்டும். பொழுது கண்டு அழிந்தது எனத் துறையுள் கூறியதே பொருந்துவதாகும்.

விதையைச் சொரிந்த வட்டி, போதொடு வருதல், தலைவியின் காதலை உரைத்த தூது, தலைவனின் காதல் உரையுடன் வருவதைக் குறிப்பதாகும். ஆனால், தலைவனின் தேர் வரும் என்ற உரைமட்டும் கேட்கப் பெறாமையால் தலைவி ஆற்றாளாயினாள்.

தேரில் கட்டப்பட்ட மணிகள், இரும்பை உருக்கி, அரக்கினால் வடிவமைக்கப்பட்ட அச்சுக்களில் ஊற்றி உருவாக்கப் பெற்றவை.

Koviloor Digital Library

தலைவனின் தேர்மணி ஓசையைத் தான் கேட்காமையோடு, பிறரும் கேட்டிலர் எனக் குறித்தாள். அதனால் 'உரை வாராதே' எனக் கலங்கினாள். தலைவனின் தேர்மணி ஓசையைக் கேட்கும் அவாவினால் தலைவி ஆற்றியிருந்தனள். மாலைப் பொழுது வந்ததும், அவள் ஆற்றாமை மிகுவதாயிற்று. அதனால் மனமழிந்து, 'பொழுதோ வந்தது, உரை வாராது' எனக் கவன்றனள்

வினை முடித்த காதலர், மீண்டு வரும் நாளில், விருந்தயரும் மரபும், உழவர் ஆரவாரம் செய்து மழை வேண்டும் மரபும் இப்பாடலால் புலப்படும்.

சொற்பொருள் :

முதை	–	மூத்த, தரிசாகக் கிடந்த
ஆர்கலி	–	மகிழ்ச்சியில் தோன்றும் ஆரவாரம்
உழவர்	–	முல்லை நிலத்தவர்
வட்டி	–	சிறிய ஓலைக் கடகம்
போது	–	மலரும் பருவத்து அரும்பு
மெழுகு	–	அரக்கு
ஆன்று	–	இல்லையாய்ப் போக
இறும்பு	–	குறுங்காடு
இழிபு	–	இறங்கி
விருந்து	–	புதிதாக இடும் உணவு
அயர்மார்	–	அயர்பவர், தலைவர்

மேற்கோள் :

1. "ஞாயிறு படம் கெடத் தெறுதலின்
அருவி ஆன்ற பெருவரை மருங்கின்" அகநானூறு,91
2. "திருந்து வேல் அண்ணற்கு விருந்திறை சான்ம்"
மலைபடுகடாம்,319
3. "அரும்பெறல் காதலர் வந்தென விருந்து அயர்பு"
குறுந்தொகை,398
4. "வித்தொடு சென்ற வட்டி." நற்றிணை,210

Koviloor Digital Library

5. “விதையர் கொன்ற முதையல் பூழி”

நற்றிணை,121

6. “வருமிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி”

குறுந்தொகை,279

7. “வினை கலந்து வென்றீக வேந்தன், மனை கலந்து
மாலை அயர்கம் விருந்து” திருக்குறள்,1268

பொருள் முடிவு :

பொழுதோ வந்தன்று. விருந்து அயர்மார்
தேர் வரும் என்னும் உரை வாராதே.

Koviloor Digital Library

156. குறிஞ்சி

பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? மயலோ இதுவே.

கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.

பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்

பொருள் :

பார்ப்பனக் குல மகனே! பார்ப்பனக் குல மகனே! சிவந்த பூக்களையுடைய பலாச மரத்தின், நல்ல பட்டையை நீக்கிய கோலினை ஒரு கையில் உயர்த்திப் பிடித்து, மற்றொரு கையில் கரகத்தை ஏந்தி, விரதம் முடித்து உண்ணும் உணவினையுடைய பார்ப்பனக்குல மகனே. காதால் கேட்டுப் பயில்வதன்றி, எழுதாக் கல்வியாகிய வேதத்தினை அறிந்து கூறும் நின் உபதேச மொழிகளில், முற்பிறப்பில் கூடிப் பிரிந்த காதலரை மறுபிறப்பில் கூட்டுவிக்கும் உபாயமும் கூறப்பட்டுள்ளதோ, உளது என்றால், இஃது, அவ்வேதம் விலக்கிய மயல் எனப்படும் காமமாகுமோ?

விளக்கம் :

அந்தணனாகிய பாங்கன், அரசனாகிய தலைவனை நோக்கி, 'நீ விரும்பியது, வேதத்தால் விலக்கிக் கூறப்படும் மயக்கம் ,' என்று கூறினன். தலைவன் அவனை நோக்கி, வேதத்தில் முற்பிறப்பில் பிரிந்தவரை, இப்பிறப்பில் கூட்டுவிக்கும் உபாயம் இருக்குமாயின், அது வேதத்தால் விலக்கப்பட்ட மயக்கம் எனக் கூறுதல் பொருந்தாது, என்றான். பிரிந்தோரைப் புணர்க்கும் மொழிகள், வேதத்துள் இதோபதேசம் எனப்படும். அவை மருந்து போல் பயன் தருவன. தலைவன், தான் விரும்பிய காதலி பிறவிகள் தோறும் தன்னொடு உடன் வருபவள் எனக் கூறி, அவளை இன்றித் தான் வாழ்தல் இயலாது என்பதை உணர்த்தினான்.

புணராமைக்கு உரிய தடைகளை நீக்கி உதவுதலால், 'வேதத்தின் அம்மொழிகள் மருந்து போன்றன என்றான். பிரிந்தோரைப் புணர்க்கும் மந்திரங்கள் வேதங்களில் உள்ளன என்றும், அவற்றை வல்லார் வாய்க்

Koviloor Digital Library

கேட்டு உணர்க என்றும் ரா. இராகவையங்கார் கூறுவர். எழுதாக் கற்பின் இன் சொலுள்ளும் எனப் பிரித்து, வேதத்தின் இதோபதேசப் பகுதி எனப் பொருள் கோடல் பொருந்துவதாகும். முக்கால் அழைத்துக் கூறுதல், வழக்கில் காணப்படுவதாகும்.

இடித்துரைப்பதை விடுத்து, கற்ற கல்வியின் வழி, பிரிந்தோரைப் புணர்க்கும் மருந்தறிந்து, தலைவியைச் சேர்த்து வைப்பாயாக என்ற குறிப்பு புலப்படுத்தப்பட்டுள்ளது.

சொற்பொருள் :

முருக்கு	–	புரசு, பலாசு – முள் முருக்கின் வேறாய மரம்
நார்	–	பட்டை
தண்டு	–	கோல்
கமண்டலம்	–	கரகம்
படிவம்	–	விரதம்
எழுதாக் கற்பு	–	எழுதாக் கல்வி. வேதம்
மயல்	–	மயக்கம்
மருந்து	–	உபாயம்
மகன்	–	முறைமை சுட்டாத பெயர்
சொலுள்ளும்	–	சொல்லுள்ளும் (தொகுத்தல் விகாரம்)

மேற்கோள் :

1. "காம நிலை உரைத்துத் தேர் நிலை உரைத்தல்"
தொல்காப்பியம், கற்பியல்,36

2. "நூலே, கரகம், முக்கோல், மணையே
ஆயுங்கலை அந்தணர்க்கு உரிய" தொல்காப்பியம், மரபியல்,70

3. "படிவப் பார்ப்பான்" முல்லைப்பாட்டு,37

4. "பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ"
குறுந்தொகை,146

5. "நாருடை ஒசியல் அற்றே" குறுந்தொகை,112

பொருள் முடிவு :

பார்ப்பன மகனே! நின் சொல்லுள்ளம் மருந்தும் உண்டோ? இது மயலோ.

Koviloor Digital Library

157. மருதம்

'குக்கூ' என்றது கோழி; அதன் எதிர்
துட்கென்றன்று என் தூஉ நெஞ்சம் -
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.

பூப்பு எய்திய தலைமகள் உரைத்தது. அள்ளூர் நன்முல்லையார்.

பொருள் :

கோழி, குக்கூ என்று கூவிற்று. எனது தோளை மணந்த காதலரைப் பிரியச் செய்யும் வாளைப் போல வைக்றைப் பொழுது வந்தது. அதனால், என் தூய நெஞ்சம் துட்கென அச்சம் கொள்வதாயிற்று.

விளக்கம் :

வைகறை என்ற சொல்லை, வை கறை எனப் பிரித்து, வைதற்கு உரிய பூப்பு எனப்பொருள் கொண்டு ரா. இராகவையங்கார் கொண்ட உரை ஏற்புடையதாகத் தோன்றுகின்றது.

தோளைத் தழுவிய காதலரைப் பிரிக்கின்ற வாள் போன்றதாகலின், பூப்பு, வையப்படுவதாயிற்று. தலைவி, பூப்புத் தோன்றியமையை மறைபொருளாக, 'வைகறை வந்தன்று' எனக் குறித்தாள். வைகறையில் வைதற்கு உரிய கறை வந்தது எனப் பொருள்படுமாறு அத்தொடர் அமைந்துள்ளது.

மனையுறை கோழி, தூய்மையல்லாதவற்றை உணரவல்லது எனச் சுக்கிர நீதியும் கூறுகின்றது. (முதல் அத்தியாயம், 326 - 329). எனவே மனையுறை கோழி, என்றும் இயம்பும் மாண்குரல் இயம்பாது, வேறுபட்டு குக்கூ எனக் குறுகிய குரலால் தலைவி பூப்பு எய்தியமையை வெளிப்படுத்திற்று. கோழி, விடியலின் வருகையை உரைப்பதாயின் அதனை வைது கூறியிருப்பாள். ஈண்டுக் கோழியைப் புலந்து கூறாமல், வாள் போல் வந்த பூப்பினைப் புலந்தனள்.

நச்சினார்க்கினியரும், முந்நாளைப் பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு என இப்பாடலை மேற்கோளாகக் காட்டுவார். கூடிய ஞான்றுப் பிரிதல் எல்லா நாளினும் வைகறைக்குப் பொருந்துவதாகும். இப்பாடலைப் பூப்பிடைப் பிரிவு எனத் துறை கொண்டமைக்கு ஏற்ப, வைகறை என்ற சொல்லிற்கு வைதற்கு உரிய பூப்பு எனப் பொருள் உரைக்கப்பட்டது.

Koviloor Digital Library

உடலுள் ஒளித்து நின்று, வாய்த்துழி, காதலர் இருவரையும் வேறுபடுத்தற்குப் புறப்படுதலால், பூப்பு வாள் போன்றதாக உவமிக்கப்பட்டது. வளியிடை போழப்படாத முயக்கினைப் போழ்தலால், பூப்பு, வாள் எனப்பட்டது.

பூப்புக் காலமாகிய மூன்று நாட்களும், தலைவன், தலைவியின் சொல்கேட்கும் அணிமையில் இருத்தலன்றி அவளுடன் அளவளாவுதல் அறமன்று. அதனால், பூப்பு, காதலனைப் பிரிப்பதாகக் கூறப்பட்டது. 'தூய நெஞ்சம்' என்ற தொடர், உடல் தூயதல்லாமையை உணர்த்தும்.

சொற்பொருள் :

கூ – கூவுதல்

குக்கூ – விரைந்து கூவுதல்

துட்கு – துண் – ஒலிக்குறிப்பு, அச்சம்

வைகறை – வை, கறை – வைதற்கு உரிய பூப்பு
வைகறைப் பொழுதும் ஆம்

தூஉ – தூய, துய்த்தற்கு உரிய

மேற்கோள் :

1. "தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழிக்கூற்று நிகழ்தல்" தொல்காப்பியம், கற்பியல்,6இளம்பூரணர்

2. "முந்நாள் பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு வந்துழித் தலைவி கூறியது" தொல்காப்பியம், களவியல்,31 நச்சினார்க்கினியர்

3. "மனைச் செறி கோழி மாண்குரல் இயம்பும்"
அகநானூறு,122

4. "பிள்ளை வெருகிற்கு அல்கு இரையாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே
யாணர் ஊரன் தன்னொடு வதிந்த
ஏமஇன் துயில் எடுப்பியோயே" குறுந்தொகை,107

Koviloor Digital Library

5. "அரிவை தோளிடைத் துஞ்சிக்
கழிந்த நாள் இவண் வாழும் நாளே"

குறுந்தொகை,323

பொருள் முடிவு :

கோழி. குக்கூ என்றது. வைகறை வந்தன்று என நெஞ்சம் துட்கென்றது.

Koviloor Digital Library

158. குறிஞ்சி

நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆர் அளி இலையோ நீயே? பேர் இசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணைஇலர், அளியர், பெண்டிர்; இஃது எவனே?

தலைமகன் இரவுக்குறி வந்துழி, அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. ஔவையார்

பொருள் :

உயர்ந்த மலைப்பக்கத்தில் வாழும் பாம்புகள் இறந்துபடும்படி ஒலிக்கும் மிக்க வேகத்தையுடைய இடியேற்றினது, முழக்கத்தோடு கூடி, சினக்கும் ஓசையொடு கலந்து காற்றோடு வந்த நிறைந்த நீராகிய சூலையுடைய பெரிய மழையே. நீ எல்லா மலைகளிலும் சிறந்து புகழுடன் விளங்கும் இமய மலையையும் அசைக்கின்ற வலிமையையுடையை. நீ நிறைந்த அருள் உடையை அல்லையோ. துணையில்லாதவர்களும், பிறரால் அளிக்கத்தக்கவர்களும் ஆகிய பெண்பாலரிடத்து இவ்வலிமையைக் காட்டுவதால் யாதுபயன் உடைத்து.

விளக்கம் :

மழையில்லாமலும் உயிர்கள் நெடும் பொழுது வாழ்தல் கூடும். ஆனால் காற்று இல்லாமல் சிறிது பொழுதும் வாழ இயலாது. ஆதலால் உயிரெல்லாம் காக்கும் கருணை தன்பால் இல்லையோ எனக் காற்றினைத் தலைவி வினவினாள். எப்பொழுதும் எல்லா உயிர்களையும் வாழ்விக்கும் காற்று, இப்பொழுது சினம் கொண்டு வீசுதலால், 'ஆரளி இலையோ' எனத் தலைவியால் வினவப்பட்டது. தன்னொடு பகைத்தவரைத் தாக்குதல் தக்கது என்றும், துணையின்றித் தனித்து வாழும் பெண்டிரை நலிதல் தகாது என்றும் கூறினள். பேராசிரியர் இப்பாடலை, வாடைக்காற்றை நோக்கிக் கூறியதாகப் பொருள் கொண்டமையால் (தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,6.) அதற்கு ஏற்ப விளக்கப்பட்டது. அவர், கமஞ்சூல் மாமழையொடு வந்த காற்று என மாற்றிப் பொருள் கூறுவர்.

தலைவி, தலைவன் இரவுக் குறியில் வருவதால் மழை, இடி, காற்று ஆகியவற்றான் வரும் ஏதங்கள் குறித்து அஞ்சுவதாயினள்.

Koviloor Digital Library

நடுக்கின்றி, நிலைபெறுவதாகிய இமயமும், நின்னால் துளங்கும் என்றால், துணையற்ற யாங்கள் எவ்வளவினேம் எனக் குறித்தாள். பெண்டிர் துணையிலர், அளியர் எனப் பொதுவகையான் கூறப்பட்டபோதிலும், அவை தலைவியையே குறித்தன. அருள் உள்ளம் உடைய வலியவனாகிய நீ, மெலியவர்களை நலிவது அறமாகுமா என்றாள்.

காற்றுக் கடவுள், ஆதிசேடனொடு பகைத்து, மேரு மலையை அசைத்த புராணச் செய்தியை உரைப்பதாக ரா. இராகவையங்கார் இப்பாடலுக்கு விளக்கமளித்துள்ளார். இமயம் என்ற சொல், மேருமலையைக் குறிப்பதை, 'இமையவில் வாங்கிய, ஈர்ஞ்சடை அந்தணன்', என்ற கலித்தொகைத் தொடர் புலப்படுத்தும்.

சொற்பொருள் :

கமஞ்சூல்	–	நிறைந்த சூல்; கம – நிறைவு (உரிச் சொல்)
உருமு	–	இடியேறு
கால்	–	காற்று (வாடை)
துளக்கும்	–	அசைக்கும்

மேற்கோள் :

1. "தன்கண் தோன்றிய பிணி பற்றி இளிவரவு பிறந்தது"
தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,6 பேராசிரியர்
2. "ஈர்ங்குரல் உருமின் ஆர்கலி நல்ஏறு
பாம்பு கவின் அழிக்கும்" நற்றிணை,114
3. "உருமுச் சிவந்து எறிந்த உரன்அழி பாம்பின்"
அகநானூறு,92
4. "காலொடு பட்ட மாரி" நற்றிணை,2
5. "கமஞ்சூல் மாமழை" திருமுருகாற்றுப்படை,7
6. "பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெயல்"
கலித்தொகை,45

பொருள் முடிவு :

மாமழை. நீ அளி இலையோ. இமயமும் துளக்கும் பண்பினை. பெண்டிர் துணையிலர். அளியர். இஃது எவன்.

Koviloor Digital Library

159. குறிஞ்சி

"தழை அணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற்கு எவ்வம் ஆக,
அம்மெல் ஆகம் நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின;
யாங்கு ஆகுவள்கொல் பூங்குழை?" என்னும்
அவல நெஞ்சமொடு உசாவாக்
கவலை மாக்கட்டு – இப்பேதை ஊரே.

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தது; உயிர்செல வேற்றுவரைவு வரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்ததூஉம் ஆம்.

வடம வண்ணக்கன் பேரிசாத்தன்

பொருள் :

தழையாடையை அணிந்த பெரிய அல்குலைப் பொறுத்தலாற்றாத, நுணுகிய சிறிய இடைக்குத் துன்பம் உண்டாகுமாறு, அழகிய மெல்லிய மார்பு நிறையும்படிப் பருத்துப் பெருமையும் கோடுகளும் உடைய முலைகள், இணைச் செப்புடன் மாறுபட்டு விளங்கின. பேதைமையை உடைய இவ்வூர், அழகிய குழையை அணிந்த இவள் என்ன துன்பத்தை அடைவாளோ என எண்ணும் துன்புறும் உள்ளத்தோடு, கவலையை வினவி அறியாத மாக்களையுடையது.

விளக்கம் :

சிறு நுசுப்பு என்பதால், பேரல்குல் எனப் பொருள் கொள்ளப்பட்டது. அல்குலும், ஆகமும் அகன்று காட்ட. அஃகித் தோன்றும் மருங்குலின் நுண்மை சிறப்பிக்கப்பட்டது. செப்பு, முலைக்கு வடிவத்தாலன்றிக் காதலன் உள்ளத்தை அடைத்து வைத்தலான் பயன்பற்றியும் உவமம் ஆயிற்று. பருவம் எய்திய கன்னியைத் தனியே மனைக்கண் மணம் முடித்துத் தராமல் இருத்தி, முதுமையுறச் செய்தல், அறனன்று என்பதை இவ்வூரார் அறிந்திலர் போலும் என்றாள். பருவம் வாய்த்தமையால் தலைவி இற்செறிக்கப்பட்டாள் என்பது இப்பாடலால் புலனாகும். தன் துயர் உசாவாமையால், ஊராரை மாக்கள் என்றாள். கவலை உசாவா மாக்கள் எனக் கூட்டிப் பொருள் உரைக்கப்படும்.

சொற்பொருள் :

தழை – மகளிர் உடுக்கும் ஆடை விசேடம்

Koviloor Digital Library

(ஆகம்) அகலம் – மார்பு

எவ்வம்	–	துன்பம்
பேதை ஊர்	–	அறியாமையுடைய ஊர்
அகலம்	–	மார்பு
அவலம்	–	பிறர் வருத்தம் கண்டு தானும் அவலித்தல்
பூங்குழை	–	அடையடுத்த ஆகுபெயர் (குழையுடையாள்)
மாக்கட்டு	–	மாக்களை உடையது
உசாவா	–	வினவியறியாத
கொம்மை	–	பெரிய

மேற்கோள் :

1. "தழையணி அல்குல் மகளிருள்ளும்
விழவு மேம்பட்ட என் நலனே" குறுந்தொகை,125
2. "கொம்மை வரி முலை" அகநானூறு,65
3. "முலையும், சூழி மென்முகம் செப்புடன் எதிரின"
அகநானூறு,315
4. "யாங்காகுவென் கொல் அளியென் யானே" நற்றிணை,152
5. "முலை முகம் செய்தன, முள் எயிறு இலங்கின,
தலைமுடி சான்ற, தண்தழை உடையை" அகநானூறு,7
6. "முலையே முகிழ் முகிழ்த்தனவே
யாங்காகுவள் கொல் தானே" குறுந்தொகை,337

பொருள் முடிவு :

இப்பேதை ஊர், பூங்குழை யாங்கு ஆகுவள்
எனக் கவலை உசாவா மாக்கட்டு.

Koviloor Digital Library

160. குறிஞ்சி

நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவின் ஓங்குசினைக் கட்சியில், பிரிந்தோர்
கையற நரலும் நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்;
இஃதோ – தோழி! – நம் காதலர் வரவே?

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாகிய தலைமகளை நோக்கி, தோழி, வரைவர் என ஆற்றுவிப்புழி, தலைமகள் கூறியது. **மதுரை மருதன் இளநாகன்**

பொருள் :

தோழி. நெருப்பைப் போன்ற சிவந்த தலையையுடைய ஆண் அன்றில் பறவை, இறாமீனைப் போன்ற வளைந்த அலகினையுடைய தன் பெண் அன்றிலுடன், தடா மரத்தின் உயர்ந்த கிளையின்கண் உள்ள தன் கூட்டிலிருந்து, தம் காதலரைப் பிரிந்தோர்க்குச் செயலறவு தோன்றும்படி ஒலிக்கும். இத்தகைய, இருள் செறிந்த யாமப் பொழுதினையுடைய மிக்க குளிர்ச்சியுடன் வாடைக் காற்று வீசும் கூதிர்க்காலத்திலும் நம் தலைவர் வந்திலர். அவர், வாராமையோ, நம் வரைவிற்குக் காரணமாவது.

விளக்கம் :

அன்றில், ஆணும் பெண்ணுமாய் உடனாய் இணைந்து வாழும் பறவைகள். கிரௌஞ்ச மிதுனம் என்ற பறவையினம் போல இரட்டையாய் வாழ்வதால் 'புணர் அன்றில்' எனப்பட்டது. கூட்டில் உடனிருந்த போதிலும், புணராது வருந்துவதால் அவை தம் செயலறவு தோன்ற ஒலிக்கும் குரல, துணையைப் பிரிந்தோர் செயலறவிற்கு ஏதுவாயிற்று. அன்றில் ஒருகண் துயின்று, ஒருகண் ஆர்வத்தால் தன் துணைமேல் வைத்து உறங்கும் அன்புடைய பறவையாகும். மணம் புரிந்து, ஓரில்லத்தில் அன்றில் போல வாழும் வாழ்வு பெற்றிலேன் எனத் தலைவி ஏங்குவாளாயினள். பகையைத் தாங்கித் தன் பெடையைக் காக்கும் ஆற்றல் குறித்து ஆண் அன்றிலுக்கு 'நெருப்பின் அன்ன செந்தலையும்,' நள்ளென் யாமத்தும் தன் செயலறவு தோன்றப் புலம்புதல் குறித்துப் பெண் அன்றிலுக்கு வளைந்த அலகும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இது, சக்கரவாகம் போல், பகலில் புணரும் பறவை என ரா. இராகவையங்கார் குறிப்பிடுவர்.

Koviloor Digital Library

வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிந்த தலைவன், வரவு தாழ்த்திய போது, தலைவி ஆற்றாமை மிக்கு, வாடை தன்னை நலிதலைக் கூறினாள்.

சொற்பொருள் :

செந்தலை	–	செஞ்சூட்டு (ஆகுபெயர்)
கொடுவாய்	–	வளைந்த அலகு
உயவு	–	வருத்தம்
தடவு	–	தடா மரம்
கட்சி	–	கூடு
நரலும்	–	வருந்திக் கதறும்
நள்	–	செறிவு (உரிச் சொல்)

மேற்கோள் :

1. "மன்றப் பெண்ணை வாங்கு மடல் குடம்பைத்
துணைபுணர் அன்றில் உயவுக் குரல் கேட்டொறும்"
நற்றிணை,303

2. "பெய்பனி நலிய உய்தல் செல்லாது
குருகினம் நரலும்" ஐங்குறுநூறு,457

3. "ஒன்றில் காலை அன்றில் போல" நற்றிணை,124

4. "ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்"
குறிஞ்சிப்பாட்டு,219

5. "நள்ளென்றன்றே யாமம்" குறுந்தொகை,6

6. "பெடை புணர் அன்றில் இயங்கு குரல் அளைஇக்
கங்குலும் கையறவு தந்தன்று" நற்றிணை,152

7. "தண் வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழலே"
குறுந்தொகை,35

பொருள் முடிவு :

தோழி. வாடையும் வாரார். காதலர் வரவு இஃதோ.

Koviloor Digital Library

161. குறிஞ்சி

பொழுதும் எல்லின்று; பெயலும் ஓவாது,
கழுது கண்பனிப்ப வீசும்; அதன் தலைப்
புலிப்பற் தாலிப் புதல்வற் புல்லி,
'அன்னா!' என்னும், அன்னையும்; அன்னோ!
என் மலைந்தனன் கொல் தானே – தன்மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்து நின்றனனே?

இரவுக் குறிக்கண் வந்த தலைமகனைக் காப்பு மிகுதியான் எதிர்ப்படப் பெறாத தலைமகள், பிற்றை ஞான்று, தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. நக்கீரர்

பொருள் :

பொழுதும் இருண்டது. இருளில் திரிதற்குரிய பேய்களும் நடுங்கும் வண்ணம் மழைஇடைவிடாது பெய்வதாயிற்று. இத்துணைக்கும் மேலாக, தாயும், புலிப்பல்லைக் கோத்த தாலியை அணிந்துள்ள தன் மகனைத் தழுவி என்னை அன்னையே என அழைப்பாள். தனது மலையில் விளைந்த சந்தனம் மணக்கின்ற மார்பினையுடைய தலைவன், இத்துணை இடையீடுகளையும் பொருட்படுத்தாது, மழையில் நனைந்த யானையைப் போல வந்து நின்றனன். அவன், என்ன காரியம் மேற்கொண்டு வந்தனனோ.

விளக்கம் :

தலைவன் இரவுக் குறியில் இடைவழியில் தோன்றும் ஏதங்களை அஞ்சாது வருதல், தலைவியின் ஆற்றாமையை மிகுவிப்பதாயிற்று.

இராக்காலத்தில் பேய்கள் அச்சமின்றித் திரிவன. அவைகளும் நடுங்கின என மழையின் கடுமை கூறப்பட்டது. புதல்வனைப் புல்லி செவிலித்தாய், அன்னா எனத்தலைவியை அழைத்தமை, 'கனவின் அரற்றுதல்' எனப்படும். பொழுது இருண்டமையால், வழியறிந்து இயங்குதல் அருமை கூறப்பட்டது. பெயலும் வீசும் என்பதால், இயங்குதற்குத் தடை குறிக்கப்பட்டது. இத்தடைகளைப் பொருட் படுத்தாமல் தலைவன் வந்த வழியும், தலைவியை எய்தப் பெறாமைக்குத் தடையாகச் செவிலி, தலைவியை 'அன்னா' என அழைக்கும் ஒலி கேட்கும். இதனால் செவிலித்தாய், தன்னையே தழுவிக்கிடப்பவள்

Koviloor Digital Library

என்பதும் குறிக்கப்பட்டது. அன்னை, சந்தனத்தின் மணமறிந்து, ஏதோ தீண்டி அச்சுறுத்தும் தெய்வம் வந்ததோ என அஞ்சித் தன் புதல்வனைத் தழுவிக் கொண்டனள். தலைவியையும், அன்னையே எனத் தன் அருகில் அழைத்தனள். ஆரம் நாறும் மார்பு, முயங்கித் துய்க்கப் பெறாது கழிவது நினைத்தனள்.

யானை, மழையில் நனைந்து, பிடியின் உறவிற்குக் காத்திருத்தல் போலத் தலைவன், தலைவியின் வருகைக்காக இரவுக் குறியில் காத்திருந்தமை குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

எல் – இருள்

பெயல் – மழை

கழுது – பேய்

தாலி – கழுத்தின் தொங்கும் அணிகலன்

கண்பனிப்ப – நடுங்க

புல்லி – தழுவி

அன்னை – செவிலி

அன்னா – தலைவியை விளிக்கும் சொல்

மலைதல் – கருதுதல்

மேற்கோள் :

1. "எல்லும் எல்லின்று" குறுந்தொகை,179
2. "துஞ்சிச் சேர்தல்" என்ற மெய்ப்பாடு.
   தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,23 பேராசிரியர்
3. "காப்பு மிகுதிக்கண், மனைப்பட்டுக் கலங்கி உணர்வு அழிந்தவழித் தலைவி, ஆராய்ச்சி உடையதாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறியது"
   தொல்காப்பியம், களவியல்,20 நச்சினார்க்கினியர்
4. "புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி" அகநானூறு,7
5. "ஆரம் நாறும் மார்பினை
   வாரற்க தில்ல, வருகுவள் யாயே" குறுந்தொகை,198

Koviloor Digital Library

6. “நீ வரின், மணம் கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கு என அஞ்சுவர் சிறுகுடியோரே”
கலித்தொகை, குறிஞ்சிக்கலி,16

பொருள் முடிவு :

பொழுதும் எல்லின்று. பெயலும் வீசும். அன்னையும் அன்னா என்னும். மார்பினன் வந்து நின்றனன். என் மலைந்தனன் கொல்லோ.

Koviloor Digital Library

162. முல்லை

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்ஆ புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை! வாழியோ, முல்லை! – நீ நின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ, மற்று – இது தமியோர் மாட்டே?

வினைமுற்றி மீளும் தலைமகன், முல்லைக்கு உரைப்பனாய் உரைத்தது.

கருவூர்ப் பவுத்திரன்

பொருள் :

முல்லையே. நீ வாழ்வாயாக. முல்லையே. மேகத்தால் பாதுகாக்கப் பெற்ற, நீரையுடைய அகன்ற முல்லை நிலத்தில் வினை முற்றிப் பலரும் ஊருக்குத் திரும்பும் ஒளி மழுங்கிய மாலைக் காலத்தில், நீ நினது சிறிய வெள்ளிய அரும்புகளால் சிறு முறுவல் கொண்டனை. தம் காதலியரைப் பிரிந்து தனிமையுடையோரைக் கண்டு சிரித்தனை போல உன் ஆற்றலைக் காட்டுதல் நினக்குத் தகுவதாகுமோ?

விளக்கம் .

மகளிர், தம் கற்பிக்கு அடையாளமாக முல்லை மலரைக் கூந்தலில் சூடுவர். இயல்பாகவே மாலையில் அரும்பும் முல்லையைக் கண்ட தலைவன், தன்னைப் பேணும் மகளிர்க்குப் பற்றுக்கோடாக இல்லாதவரைப் பார்த்து எள்ளி நகையாடுவதாகக் கூறினன். தனித்து இருப்போரைக் கண்டு இரக்கம் கொள்ளாமல், அவர் செய்த குற்றத்தைச் சுட்டிக்காட்டி எள்ளி நகைத்தல் அறமாகுமா எனக் குறித்தான். வினை முற்றிப் பலரும் இல்லம் திரும்பும் மாலையில், தலைவன் காலம் தாழ்த்தி வருதலை இப்பாடல், குறிப்பால் புலப்படுத்தும். தன்னை வளர்ப்போர் பக்கம் சார்ந்து, அவர்களுக்குத் துணையாய் நின்று, நீ என்னை அவளின் வேறாகக் கருதி நகுவது நினக்குத் தகுமா, என்றனன். தன்னை வளர்ப்பவர்களிடம் ஒருவன் நன்றியுடையனாய் இருத்தல் உலகியல் என நினைந்தான். இக்கார்ப்பருவத்தில் துணையொடு வதியப் பெறாமையால் முல்லை, தன்னை எள்ளி நகைப்பதாகக் கருதினான். முதல், கரு, உரிப்பொருள் ஆகிய மூன்றும் அமைந்து சிறப்பதாய் இப்பாடல் உள்ளது. பெயல் புறந்தந்த என்பதால், முல்லை நிலத்தில், மழை நீரே கிடைப்பது எனச் சுட்டப்பட்டது. முல்லை, பெண்ணாக உருவகம் செய்யப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

கார்	–	மேகம் (ஆகுபெயர்)
புறந்தந்த	–	காப்பாற்றிய
வியன்	–	அகன்ற (உரிச்சொல்)
புலம்	–	முல்லை நிலம்
புல்லென் மாலை	–	சிறிது பொழுது நிற்கும் மாலைக்காலம்
வாழி	–	குறிப்பு மொழி

மேற்கோள் :

1. "அம்சிறை வண்டின் மென் பறைத் தொகுதி
முல்லை நறுமலர்த் தாது நயந்து ஊத
எல்லை போகிய புல்லென் மாலை" அகநானூறு,234

2. "புல்லென் மாலையும், புலம்பும்
இன்று கொல், தோழி, அவர் சென்ற நாட்டே"
குறுந்தொகை,46

3. "பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லை
தொகுமுகை இலங்கு எயிறாக
நகுமே தோழி, நறுந்தண் காரே" குறுந்தொகை,126

4. "ஆர்கலி ஏற்றொடு கார் தலைமணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகைக்கும்" குறுந்தொகை,186

பொருள் முடிவு :

முல்லை. வாழி. முல்லை. புலத்து, மாலையில் நீ முகையின் முறுவல் கொண்டனை. தமியோர் மாட்டு நகுவை போலக் காட்டல் தகுமோ.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

163. நெய்தல்

யார் அணங்குற்றனை – கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீன்ஆர் குருகின் கானல் அம் பெருந்துறை,
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே!

தன்னுள் கையாறு எய்திடு கிளவி. அம்மூவன்

பொருள் :

பூழி நாட்டாரது சிறிய தலையையுடைய வெள்யாட்டின் தொகுதி பரந்து காணப்படுவது போலக் கடற்கரைச் சோலையில் மீனை உண்ணுகின்ற நாரைகளின் தொகுதி காணப்படும். அச்சோலை சூழ்ந்த பெரிய நீர்த்துறையில், வெண்ணிறப் பூக்களையுடைய தாழைகளை அலைகளால் மோதி வருத்துகின்ற நின் குரல், இருள் செறிந்த கங்குல் பொழுதினும் கேட்கின்றது. கடலே. நீ யாரால் வருத்தமுற்றனை.

விளக்கம் :

தலைவி, தன்னுடைய ஆற்றாமையைக் கடலின் மேல் ஏற்றிக் கூறும் மரபு பற்றிய பாடல் இது. 'அவரவர் உறு பிணி தம போல் சேர்த்தியும்'' (தொல்காப்பியம், பொருளியல், 2.) கூறப்படும் பக்கச் சொல்லாக இப்பாடல் விளக்கப்பெறும்.

பூழிநாடு, புல்லார் வியன் புலன் உள்ள நாடாதலின், அந்நாட்டவர்க்கு வெள்யாட்டின் மிகுதி கூறப்பட்டது. விருந்து புறந்தரும் வாழ்க்கை, தன்னைப் போல் கடலுக்கும் உள்ளமை கருதி, ''மீனார் குருகு'' கூறப்பட்டது. கடலில் மீன் உண்ணும் நாரைகள், நிலத்தில் புல் உண்ணும் ஆடுகளைப் போலக் காட்சி தருவன.

தன்னுடைய புலால் நாற்றத்தைப் போக்கும் தாழையையும் கடல் வருத்தும் என்ற குறிப்பு, தனக்கு இனிமை செய்யும் தோழியும் நள்ளென் கங்குலில் உறங்காமல், தன்னொடு வருந்துவதைக் குறிப்பதாகும். ஊரெல்லாம் துயிலும் கங்குலிலும், நீ துயிலாமையால், நீயும் என்னைப் போல காதலரைப் பிரிந்து, துயரால் அரற்றுகின்றனையோ எனக் கடலை நோக்கித் தலைவி வினவியதாக இப்பாடல் அமைந்துள்ளது.

'கடலே! நீ யாரால் துன்புற்றனை? தாழையால் துன்புற்றனையா? அதனை அலைகளால் மோதி அலைக்கின்றனையே. யாரோ ஒருவர்

Koviloor Digital Library

செய்த துன்பத்திற்கு, நீ தாழையை ஒறுத்தல் தகுமா?' எனப் பலவாறு தலைவி எண்ணுதல், தன்னுட் கையாறு எய்திடு கிளவி எனப்படும்.

சொற்பொருள் :

அணங்குற்றனை – வருத்தமுற்றனை

பூழியர் – பூழிநாட்டார்

வெள்ளை – வெள்யாடு (ஆகுபெயர்)

தோடு – தொழுதி

குருகு – நாரை

கானல் – கடற்கரைச் சோலை

மேற்கோள் :

1. "இடையன் சிறுதலை ஆயமொடு குறுகல் செல்லா" புறநானூறு,54
2. "பூழியர் உருவத் துருவின் நாள் மேயல் ஆரும்" நற்றிணை,192
3. "தயங்கு திரை பொருத தாழை வெண்பூ" குறுந்தொகை,226
4. "தாழை, வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்
புலவுப் பொருது அழித்த பூ நாறு பரப்பின்
இவர் திரை" அகநானூறு,130
5. "புல்லுடை வியன் புலம் பல்ஆ பரப்பி
கல்உயர் கடத்திடை கதிர்மணி பெறூஉம்
மிதிஅல் செருப்பின் பூழியர் கோவே" பதிற்றுப்பத்து,21

பொருள் முடிவு :

கடலே. கங்குலும் நின் குரல் கேட்கும். யார் அணங்குற்றனை.

Koviloor Digital Library

164. மருதம்

கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த் தேக்கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்று முதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பௌவம் அணங்குக –தோழி! –
மனையோள் மடமையின் புலக்கும்
அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே!

காதற் பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப உரைத்தது.

மாங்குடி மருதன்

பொருள் :

தோழி. திரண்ட கொம்பினையுடைய வாளைமீனின், நிறைந்த சூலினைக் கொண்ட இளைய பெட்டை, கொத்தாக உள்ள தேமாவின் இனிய கனிகளைப் பற்றிக்கொள்ளும். மனையாட்டி, அறியாமையால் புலத்தற்குக் காரணமாகும் அத்தன்மையுடையேமாகத் தலைவன் திறத்து யாங்கள் ஆயினோம் என்றால், இத்தகைய வளம் பொருந்திய பழைமையாய், அறிவுச் சுற்றத்தால் முதிர்ந்த வேளிர் குலத்திற்கு உரியவர்களின் குன்றூர்க்குக் கிழக்கில் உள்ள குளிர்ந்த பெரிய கடல் எம்மை வருத்துக.

விளக்கம் :

குன்றூர்க்குக் கிழக்கில் உள்ள கடல், கீழ்க்கடலைக் குறிப்பதாகும். தேமாவின் கனி, நீர் நிலையில் உதிர்ந்த கனியன்று. நீரில் படியும் கிளைகளில் பழுத்த கனி ஈண்டு குறிக்கப்பட்டது.

வாளை மீனின் தலையீற்றுப் பெடை ஆதலின், நீரில் பல இடங்களிலும் விரைந்து சென்று, இரை தேட இயலாமை உணர்த்தப்பட்டது. இருக்கும் இடத்திலேயே வளமான, இனிய, கொத்தோடு விளங்கும் மாங்கனி, வாளையின் மடநாகு முயற்சி ஏதுமின்றிப் பற்றிக் கொள்வதற்கு ஏற்ப, நீரில் தோய்வதாய்க் கிடந்தது. தலைவனும், தானே வலியச் சென்ற தங்களை நுகர்ந்தானேயன்றி, தாங்கள் அவனை மனையாட்டியிடமிருந்து, அவள் கூறுவதுபோல் நயப்பித்துப் புறம் போகாதவாறு பிரித்திலம் என்றாள். மனையாட்டி, உண்மை அறியாமல் தம்மீது குறை கூறிப் புலந்தனள் என்றும், யாம் அத்தகையேம் ஆயின், அத்தவற்றிற்குத் தண்டமாகக் கடல் தெய்வத்தால் ஒறுக்கப்படுவேம் ஆகுக என்றும் பரத்தை சூள் உரைத்தனள்.

Koviloor Digital Library

மனையோள் என்ற சொல், பரத்தை தலைவனின் மனைக்குரியளாம் பேறு பெறாமை குறித்தது. 'வாளை மடநாகு' எனப் பரத்தை குறிப்பிடுதல், தலைவன் நுகர்தற்கு ஏற்ற இளமை நலம் வாய்க்கப்பெற்றமை கருதியாகும். இல்லறக் கடமைகளுக்கு மட்டும் உரியளாம் தன்மை பெற்ற தலைவி, 'மனையோள்' எனப் பரத்தையால் இகழ்ந்துரைக்கப்பட்டனள். மனையோள் என்ற சொல், புறத்தில் நிகழ்வது அறியும் வாய்ப்பு இல்லாதவள் மனைவி எனக் குறிப்பதாகும். தீது நீங்கக் கடலாடும் மரபு ஈண்டுக் குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

நாகு	–	இளமை குறித்த சொல்
கணைக்கோடு	–	திரண்ட கொம்பு, செதிலைக் குறித்தது.
கமஞ் சூல்	–	நிறைந்த சூல். முதற் சூல்
தேக் கொக்கு	–	இனிய மா; மாவினுள் ஒரு சாதி – தேமா
துணர்	–	கொத்து
பவ்வம்	–	கடல்
அனையேம்	–	அத்தகையேம் – நெஞ்சறி சுட்டு
அணங்குக	–	வருத்துக

மேற்கோள் :

1. "நீடிய மரத்த கோடுதோய் மலிர் நிறை" குறுந்தொகை,99
2. "பைந்துணர், நெடு மரக் கொக்கின் நறுவடி"
பெரும்பாணாற்றுப்படை,308–9
3. "தொன்று முதிர் வேளிர் குன்றூர்"
நற்றிணை,280
4. "அணங்குடை முந்நீர்" அகநானூறு,207
5. "உருகெழு தெய்வம், புனை இருங்கதுப்பின் நீ வெய்யோள் வயின்
அனையேன் ஆயின் அணங்குக என் என"
அகநானூறு,166
6. "அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்பொடு

Koviloor Digital Library

எம்பாடு ஆதல் அதனினும் அரிதே"

நற்றிணை,330

7. "கழனி மாஅத்து விளைந்து உகுதீம்பழம்
பழன வாளை கதூஉம்" குறுந்தொகை,6

பொருள் முடிவு :

தோழி, மனையோள் புலக்கும். மகிழ்நற்கு அனையேம் ஆயினம் எனின், பவ்வம் அணங்குக.

Koviloor Digital Library

165. குறிஞ்சி

மகிழ்ந்ததன் தலையும் நற உண்டாங்கு,
விழைந்ததன் தலையும் நீ வெய்துற்றனை—
இருங்கரை நின்ற உப்புஒய் சகடம்
பெரும்பெயல் தலைய வீஇந்தாங்கு, இவள்
இரும்பல் கூந்தல், இயல் அணி கண்டே

பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்த்தும் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது. பரணர்

பொருள் :

நெஞ்சே. ஏறுதற்கு அரிய கரையில், ஏறமாட்டாது நின்ற விரும்பிக் குறையிரிந்த போது, அவள் மறுத்தனள். அந்நிலையில், அழிந்தாற் போல, இவளது, கரிய பலவாகிய கூந்தலோடு கூடிய, இயற்றப்பட்ட அழகினைக் கண்டு நீ ஒரு முறை விரும்பிய பின்னரும் விருப்பத்தை அடைந்தனை. நின் செயல், கள்ளை உண்டு அறிவழிந்ததன் மேலும், அதனை விரும்பி உண்பதுபோல் உள்ளது.

விளக்கம் :

தலைவன், பாங்கியின் துணையால் தலைவியை அடைய விரும்பிக் குறையிரந்த போது, அவள் மறுத்தனள். அந்நிலையில், தலைவன், காமத்தால் நாண் அழிந்து, விருப்பம் மிகுந்த தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது.

கள் உண்பார், உணர்விழந்த போதிலும், மீண்டும் அதனையே உண்ணும் வேட்கையுடையராவர். எதனால் அறிவழிந்தார்களோ, அதனையே மீண்டும் பெறவேண்டும் என்ற வேட்கை ஒன்றே அவர்கள் உள்ளத்தில் காணப்படும். பிற எவையும் தோன்றா! கொண்ட காமத்தால் நாணழிந்த தலைவனுக்கு, அவள் மீது கொண்ட காமம் ஒன்றே தோன்றுவதாயிற்று. பிற எவையும் தோன்றவில்லை.

சகடத்தில் ஏற்றப்பட்ட உப்பு, பெருமழையால் சிறுகச் சிறுகக் கரைந்து, அழிந்து, பின் இல்லையாகும். பெருமழையில், சகடமும் அடித்துச் செல்லப்படும். அதுபோல, 'நாணத்தொடு, அதனைத் தாங்கிய தன் உயிரும் அழிவதாயிற்று எனத் தலைவன் குறித்தனன். சகடம் நிற்க உப்பு அழிவது போல, உடல் நிற்க உள்ளம் அழிவதைக் குறித்ததாகவும் கொள்ளப்படும்.

Koviloor Digital Library

தலைவன், தன்னைப் பிணித்த தலைவியின் அழகு குறித்துக் கூந்தலை நினைந்தான். ஏறுதற்கு அரிய கரை, என்பது, தலைவி பெறுதற்கு அரியளாம் தன்மையைக் குறித்தது. உப்பு ஒய் சகடம் என்ற தொடர், சகடம் ஒய் உப்பு என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. களித்தல், உணர்வு அழியாத நிலை என்றும், மகிழ்தல் அறிவழிந்த நிலை என்றும் 'பரிமேலழகர் விளக்குவர். (திருக்குறள், 1281.)

சொற்பொருள் :

நறவு – கள்

சகடம் – வண்டி

மகிழ்தல் – கள்ளுண்டாரின் அறிவழிந்த நிலை

வெய்துறல் – வேட்கையுறல். வெம்மை – வேண்டல், (தொல்காப்பியம், உரியியல், 38.)

ஒய்தல் – செலுத்துதல்

மேற்கோள் :

1. "களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்
வெளிப்படும் தோறும் இனிது" திருக்குறள்,1145
2. "களித்தாற்குக் கள்ளற்றே" திருக்குறள்,1288
3. "நோன் பகட்டு உமணர் ஒழுகை" சிறுபாணாற்றுப்படை,55
4. "சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்
பல்எருத்து உமணர் பதிபோகும் நெடு நெறி" பெரும்பாணாற்றுப் படை,63–4
5. "உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை" அகநானூறு,30
6. "கடல் விளை அமுதம் பெயற்கு ஏற்றாஅங்கு
உருகி உகுதல்" நற்றிணை,88
7. "உப்பியல் பாவை உறை உற்றது போல
உக்குவிடும் என் உயிர்" கலித்தொகை,138

பொருள் முடிவு :

சகடம் வீந்தாங்கு, இவள் கூந்தல் அணி கண்டு
நறவு உண்டாங்கு, நீ வெய்துற்றனை.

Koviloor Digital Library

166. நெய்தல்

தண் கடல் படுதிரை பெயர்த்தலின், வெண்பறை
நாரை நிரைபெயர்ந்து அயிரை ஆரும்,
ஊரோ நன்றுமன், மரந்தை
ஒருதனி வைகின், புலம்பு ஆகின்றே.

காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது. கூடலூர் கிழார்

பொருள் :

குளிர்ச்சியையுடைய கடலில் தோன்றிய அலைகள், மீன்களை இடம் பெயர்த்துக் கொண்டு வந்து தருதலினால், வெண்மையான சிறகுகளையுடைய நாரையின் வரிசை, அவ்விடத்திற்குப் பெயர்ந்து சென்று, அயிரை மீனை உண்ணுதற்கு இடனாகிய ஊர், மரந்தை என்னும் கடற்றுறைப் பட்டினமாகும். தலைவனோடு உடன் உறையுங்கால், அவ்வூர் மிகவும் நன்மையுடையதாகும். அவனைப் பிரிந்து, 'தான் ஒருத்தியாகத் தனிமையில் பொழுதைக் கழித்தால், ஒருவரும் இல்லாது தனிமையுடையதாக அவ்வூர் தோன்றும்.'

விளக்கம் :

தலைவனோடு கூடி உறையும் போது, பல்லோர் உறையும் பேரூர் போலவும், பிரிந்தவழி, ஒருவரும் இல்லாது தனிமையுற்றது போலவும் மரந்தை என்ற நகரம் துய்ப்பனவற்றில் குறைவின்றி இருத்தலை, நாரை அயிரை ஆரும்' என்ற தொடர் புலப்படுத்தும். எங்கோ இருந்த நாரைகள், பறந்து வந்து கடற்றுறையில் அலைகளால் தரப்பட்ட மீன்களை, எவ்வித முயற்சியும் இன்றிப் பெற்று வயிறாரஉண்பது போல, பிற நாட்டவரும் வந்து, நுகர்வன நுகர்ந்து மகிழ்வதற்கு உரிய நகரமாய் மரந்தை திகழ்ந்தது. அலைகளால் தரப்பட்ட அயிரை மீனை, நாரைகள் உண்ணுதல், ஊழினால் தரப்பட்ட தலைவியைத் தலைவன் பெற்று மகிழ்ந்தமையைக் குறித்தது.

மாந்தரஞ் சேரல் இரும் பொறையின் ஊர், மரந்தை என்பதாகும். கூடலூர் கிழார், இம் மன்னனைப்பாடிய பாடல் ஒன்று புறநானூற்றிலும் உள்ளது. இம்மன்னன் வேண்ட, ஐங்குறுநூறு என்னும் தொகை நூலைத் தொகுத்தவரும் இவரே. இவ்வூர் மரந்தை அன்று, மாந்தை என ரா. இராகவையங்கார் கூறுவர்.

மரந்தை, இயற்கை அழகால் நன்மையுடையதாயினும், தலைவி இற்செறிக்கப்பட்டுத் தலைவனைக் காண இயலாத தனிமையில்

Koviloor Digital Library

துயருறுவதால் ஒருவரும் இல்லாத ஊர் போல் தோன்றுவதாயிற்று. இவ்வூர் கடற்றுறைப் பட்டினமாதலின், அதற்கு ஏற்ப கடலின் நிகழ்ச்சிகள் கூறப்பட்டன.

சொற்பொருள் :

படுதிரை	–	ஒலிக்கும் அலை; கடலில் தோன்றும் அலை
பெயர்த்தல்	–	இடம்மாற்றித் தருதல்
பறை	–	சிறகு
வெண் பறை நாரை	–	பறத்தலையுடைய வெள்ளிய நாரை வெண்மையான சிறகுகளையுடைய நாரை.
நிரை	–	கடற்றுறையில் நாரைகள் அலை முகட்டில் மீன் அருந்த வரிசையாக அமர்ந்து இருத்தலைச் சுட்டும்
அயிரை	–	மீனின் வகை
மன்	–	இடைச்சொல் – கழிவுப் பொருள்

மேற்கோள் :

1. "புலம்பித் தோன்றல்," என்ற மெய்ப்பாடு
   தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,18

2. "காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து
   சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற; குறுந்தொகை,41

3. "தடந்தாள் நாரை இரிய, அயிரைக்
   கொழுமீன் ஆர்கைய" பதிற்றுப்பத்து,29

4. "இனிதே காணுநர் காண்புழி வாழ்தல்
   கண்உறு விழுமம் கைபோல் உதவி
   நம்உறு துயரம் களையார் ஆயினும்
   இன்னாதன்றே அவரில் ஊரே"
   நற்றிணை,216

பொருள் முடிவு :

மரந்தை நன்று மன், தனிவைகின் புலம்பு ஆகின்று.

Koviloor Digital Library

167. முல்லை

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்,
கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ,
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
'இனிது' எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது. கூடலூர் கிழார்

பொருள் :

நன்றாகக் காய்ச்சிய பாலை, உறை ஊற்றிப் பெற்ற முற்றிய தயிரை, காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்து, குவளையைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை நெருங்கிப்படர இனிய புளிப்புச் சுவையுடைய குழம்பினைத் தலைவி, தானே துழாவிச் சமைத்தனள். அழுக்குற்ற அவ்விரல்களைத் தான் உடுத்தியிருந்த தூய ஆடையில் துடைத்தனள். அதனால் அழுக்கேறிய அவ்வுடையைத் துவையாமல் உடுத்திக் கொண்டனள். தான், சமைத்த உணவினைக் கணவன் உண்டற்கண், 'இனிது' என்று புகழ்ந்து கூறிய அளவில், ஒள்ளிய நெற்றியையுடைய அவள் முகம் பயின்றாரன்றிப் பிறர் அறியாதவண்ணம் நுண்ணிதாக மகிழ்ந்தது.

விளக்கம் :

தலைவி, இல்லறம் நிகழ்த்தும் சிறப்பினை, நேரில் கண்டறிந்து வந்த செவிலித்தாய், நற்றாய்க்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியின் அடிசில் ஆக்கும் திறமும், தலைவனின் அன்போடு இயைந்த பாராட்டு மொழிகளும், அப்புகழ் மொழிகளால் தலைவி செருக்குக் கொள்ளாது அகத்தே மகிழும் அரிய பண்பும் செவிலியால் கண்டறியப்பட்டன.

நன்றாகக் காய்ச்சிய பாலில் உண்டாக்கப்பட்ட தயிர் என்பதை, 'முளிதயிர்' என்ற தொடர் புலப்படுத்தும். 'தீம்புளிப் பாகர்' என்பதை இனிமை தராத உணவிற்கும் இனிமை தர, புளியின் சுவை சேர்த்து அடப்பட்ட பாகற்காய் கறி என ரா.இராகவையங்கார் விளக்கம் தருவர்.

உடம்பு, குளியாதது; உடை, கழுவாதது; விரல்கள், தயிர் பிசைந்தவை; கண்கள், குய்ப்புகை பொருந்தியன; அட்டது, கைப்புடைய பாகல். இத்துணையானும் இனிதாதற்கு ஏது இல்லையாயினும், தலைவன், தன் மனைவி மேல் கொண்ட அன்பினால், 'இனிது' எனப்

Koviloor Digital Library

புகழ்ந்தனன். அப்பாராட்டுரை ஒன்றே, அவள் மனத்திற்கு நிறைவினைத் தருவதாயிற்று. ஆயினும், தன்கண் தோன்றிய மகிழ்ச்சியை, நகுநயம் மறைத்தலால் 'புறத்தே காட்டிற்றிலள்.

காந்தள் மெல்விரல், குவளை உண்கண், ஒண்ணுதல், முகம் ஆகிய யாவும் இயற்கை அழகுடையனவாக, செயற்கையில் அட்ட பாகலும், தலைவி மேல் கொண்ட அன்பினால் தலைவற்கு இனிதாயிற்று. தாளிப்புப் பெய்யும் போது, பதம் பார்த்ததால், அதன் புகை, கண்களில் படிவதாயிற்று. தலைவியின் உள்ளத்து மகிழ்ச்சி, அவளுடைய நுதலின் பொலிவினால் நுட்பமாக வெளிப்பட்டமையைச் செவிலி அறிந்தனள்.

சொற்பொருள் :

கலிங்கம்	–	ஒருவகை ஆடை
குய்	–	தாளிப்பு
கழுமு	–	பொருந்த (கமழ – பாடபேதம்)
தீம்புளிப் பாகர்	–	மோர்க் குழம்பு; இனிய புளிப்புச் சுவையுடைய பாகற்காய் கறி.
ஒண்ணுதல்	–	தலைவி

மேற்கோள் :

1. "ஏனது சுவைப்பினும், நீ கை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு"
தொல்காப்பியம், கற்பியல்,5

2. "நகு நயம் மறைத்தல்" தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,19

3. "இது, பார்ப்பானும், பார்ப்பனியும் தலைவராகக் கூறியது
கடிமனைச் சென்ற செவிலி கூற்று."
தொல்காப்பியம், அகத்திணையியல்,24

4. "மெல்விரல் சேப்ப, வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ
புகையுண்டு அமர்த்த கண்ணள்"
நற்றிணை,120

5. "கிளர் இழை அரிவை, நெய் துழந்து அட்ட
விளர் ஊன் நறும்புகை எறிந்த நெற்றி"
நற்றிணை,416.

Koviloor Digital Library

6. "நெய்யும், குய்யும் ஆடி, மையொடு
மாசு பட்டன்றே, கலிங்கமும் தோளும்"
நற்றிணை,380

பொருள்முடிவு :

அட்ட பாகர், கணவன் இனிது என உண்டலின் ஒண்ணுதல் முகம் மகிழ்ந்தன்று.

Koviloor Digital Library

168. பாலை

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்து விட்டன்ன
நறுந் தண்ணியளே, நல்மா, மேனி;
புனற் புணை அன்ன சாய்இறைப் பணைத்தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே;
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

சிறைக்குடி ஆந்தையார்

பொருள் :

தலைவியின், நன்மையுடைய, மாமை நிறத்து மேனியின்கண், மழைக்காலத்தில் மலரும் செம்முல்லையின், நீர் ஒழுகும் கொழுவிய அரும்புகளில் பலவற்றைக் கரிய, பனையின், பசிய ஓலையால் ஆகிய குடையில், ஒருங்கே வைத்து மூடி, பெருமழை பெய்யும் விடியற்காலத்தில், அக்குடைக் கலத்தை விரித்து விட்டாற் போன்ற, நறுமையும், குளிர்ச்சியும் உடையவள். புனல் விளையாட்டிற்கு இட்ட தெப்பத்தைப் போல், நுண்ணிய இறையினையுடைய, மூங்கிலின் மென்மையுடைய தோள்களை உடையவள். அவற்றைப் புணர்ந்த அளவினும், அச்சேர்க்கையிலிருந்து நீங்குவதும் இல்லேம். அத்தகைய யாம், பிரியின் உயிர் வாழ்தல் அதனைக் காட்டிலும் இல்லேம்.

விளக்கம் :

தலைவியின் தோளைப் பிரியாது, அதில் துயிலும் நிலையை விரும்பி, 'தணத்தலும் இலம்' என்றான். புனலில் செல்லும் புணை, தலைவியைப் பிரிய இயலாமை குறித்தது. ஓரிரவில், பிறிதொரு சேக்கையில் படுத்து உறங்குவதால் உயிர் வாழ்வேமாயினும், சேய்மைக்கண் தலைவியைப் பிரிந்து சென்று உயிர்வாழ்தல் இயலாது என்றனன். எப்பொழுதும் உடன் உறைதலால், புதிதாக மணத்தலும், தணத்தலும் இல்லையாயின. தணத்தல் – புணர்தலின் நீங்கிய நிலை; பிரிதல் – சேய்மைக் கண் தலைவியை விட்டுப் பிரிதல் என வேறுபடுத்தி நோக்கப்பட்டன. மாரிக்காலத்துப் பூத்தமையின், 'நீர் வார் கொழு முகை' ஆயிற்று. தலைவி மேனியின் இயற்கை மணம் தலைவனால் நினைக்கப்பட்டது. தான் தலைவியைப் பிரிந்தால், அவள் மேனியின்

Koviloor Digital Library

எழில் நலம் வாடும் எனவும், தோள்கள் மெலியும் எனவும் கருதிச் செலவழுங்கினான்.

சொற்பொருள் :

பித்திகம்	–	பிச்சி, செம்முல்லை.
குடை	–	உட்குழிவாகப் பனை ஓலையால் அமைக்கப்பட்ட கூடை.
புணை	–	வேழக் கரும்பினால் ஆக்கப்பட்ட தெப்பம்
மணத்தலும்	–	'உம்' ஈற்று வினை எச்சம், புணர்ந்த அளவினும்
தணத்தல்	–	அகறல், நீங்குதல்
அதனினும்	–	அத்தணத்தல் இன்மையினும்

மேற்கோள் :

1. "பல் பூஞ் சேக்கையில் பகலும் நீங்கார்
மனையில் இருப்பவர் மன்னே" அகநானூறு,389

2. "அவல் வகுத்த பசுங்குடையான்
புதல் முல்லைப் பூப் பறிக்குந்து" புறநானூறு,352

3. "நறுந் தண்ணியளே" குறுந்தொகை,70

4. "முழங்கு நீர்ப் புணை என அமைந்த நின் எழில்நலம்" கலித்தொகை,56

4. "யான் உயிர் வாழ்தல், அதனினும் அரிதே" அகநானூறு,98

5. "பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" புறநானூறு,192

பொருள் முடிவு :

மேனி, நறுந்தண்ணியள், தோள் மணத்தலும் தணத்தலும் இலம். பிரியின் வாழ்தல் அதனினும் இலம்.

Koviloor Digital Library

169. மருதம்

சுரம் செல் யானைக் கல்உறு கோட்டின்
தெற்றென இறீஇயரோ – ஐய! – மற்றுயாம்
நும்மொடு நக்க வால்வெள் எயிறே;
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல
எமக்கும் பெரும் புலவுஆகி
நும்மும் பெறேஎம், இறீஇயர் எம்உயிரே.

கற்புக் காலத்துத் தெளிவிடை விலங்கியது. இனித் தோழி, வரைவு நீட்டித்த வழி வரைவு கடாயதூஉம் ஆம். வெள்ளி வீதியார்.

பொருள் :

ஐய, யாம், நீ நகையாய்க் கூறியதனை மெய்யென நம்பி, நும்மொடு மகிழ்ந்து சிரித்த தூய வெள்ளிய எம்முடைய பற்கள், பாலை நிலத்தில் செல்லும் யானையினது பாறையைக் குத்திய கொம்புபோல இற்று அழிவதாகுக. எமது உயிர், மீன் வலைஞர், தாம் பிடித்த புதிய மீன்களை இட்டு வைத்து உகுத்த மட்கலம் போல, எமக்கும் பெரிய வெறுப்பைச் செய்து, உம்மையும் யாம் பெறேமாய் அழிவதாகுக.

விளக்கம் :

மழைக்காலத்தில், நீர்கசியும் பாறைகளை அறிந்த யானை, கோடைக் காலத்தில் நீர் பெறுவதற்காக, அவற்றைத் தம் கொம்புகளால் குத்திப் பயன்ஏதுமின்றித் தம் கொம்புகளை இழக்கும். பசைபற்ற கல்லோடு மோதும் கொம்பு போல, அன்பற்ற நும்மொடு சிரித்து மகிழ்ந்த எம்பற்கள் அழிக என்றாள்.

இப்பாடலைக் கற்பில் தலைவி கூற்றாகப் பேராசிரியரும், களவில் தோழி கூற்றாக நச்சினார்க்கினியரும் கொண்டனர். பாறையில் குத்தும் யானைக் கொம்பு போல 'எயிறு இறீஇயர்,' என உடம்பையும், மீன் இட்ட மட்கலம் போல, 'உயிர் இறீஇயர்' என உயிரையும் தலைவி வெறுத்தனள். 'எமக்கும்' எனவும், 'பெறேம்' எனவும் பன்மையால் கூறியது, தோழியையும் உளப்படுத்தியதாகும்.

மீனை எடுத்த பின்னரும், அது வைக்கப்பட்ட கலம், புலால் நாற்றம் வீசுவதாகும். அதில் வேறு எப்பொருளையும் இட்டு வைக்கப் பயன்படுவதில்லை. அது போலத் தன் உயிர், தனக்கு வெறுப்பைச் செய்வதோடு, தன் தலைவனுக்கும் தவழுவப் பெறாமையால்

Koviloor Digital Library

வெறுப்பைத் தருவதாயிற்று எனக் குறித்தாள். இரு திறத்தும் பயன் படாமையால், வீணாக உடலுள் ஒட்டி நிற்கும் உயிர், இற்று ஒழிக எனக் கூறினாள். மீன் இட்டு வைக்கப்பட்ட மண்டை, பின்னரும் மீன் வைக்கவே பயன்படும். பிறிதொன்றற்குப் பயன்படாது. அது போலத் தலைவனால் தொடப்பட்டவள், தலைவனுக்கே உரியள். அவள் வேறாகாள் என்பதும் உணர்த்தப்பட்டது. நீ உரைத்தவற்றை மெய்யெனக் கொண்டு, நும்மொடு சிரித்து மகிழ்ந்த நாங்கள், நும்மை வதுவையில் பெற்றிலேம் என்பதைத் தலைவனுக்குத் தோழி உணர்த்தினாள்.

சொற்பொருள் :

சொரிதல்	–	புறத்தே உகுத்தல்
பாணர்	–	மீன் வலைஞர்
இறீஇயர்	–	இற்று அழிக
கோடு	–	தந்தம்
தெற்றென	–	விரைவாக, உறுதியாக
புலவு	–	வெறுப்பு

மேற்கோள் :

1. "கல் ஊற்று ஈண்டல கயனற வாங்கி
இரும் பிணர்த் தடக்கை நீட்டி, நீர் நொண்டு
பெருங்கை யானை பிடியெதிர் ஒடும் கானம்"
நற்றிணை,186

2. "மீன் சீவும் பாண் சேரி" மதுரைக்காஞ்சி,269

3. "மண்டை, இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து"
புறநானூறு,384

4. "பாண்மகள் சின்மீன் சொரிந்து, பல்நெல் பெறூஉம்"
ஐங்குறுநூறு,49

5. "எமக்கும் ஆகாது, என் ஐக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்." குறுந்தொகை27

பொருள் முடிவு :

ஐய, யாம் நக்க எயிறு இறீஇயர், எம்உயிர் எமக்கும் புலவாகி நும்மும் பெறேஎம் இறீஇயர்.

Koviloor Digital Library

170. குறிஞ்சி

பலரும் கூறுக, அஃது அறியாதோரே -
அருவி தந்த நாட்குரல் எருவை
கயம்நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோகாமை, நற்கு அறிந்தனென், யானே.

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கருவூர் கிழார்

பொருள் :

அருவியால் தரப்பட்ட, காலத்தில் விளைந்த, பூங்கதிர்களுடன் விளங்கும் கொறுக்கான் தட்டையைக் கோடைக்காலத்தில் நீர்வேட்டு, ஆழமான நீர் நிலையைக் கண்டறிய விரும்பிச் சென்ற யானை, கவளமாக உண்ணும். இத்தகைய மலையையுடைய தலைவனது நட்பு, முதலில் நின்று பின் நீங்காமையை யான் நன்கு அறிந்தனன் (பிறர் அறிந்திலர்) இக் கேண்மையை அறியாத பலரும் கூறுவன கூறுக.

விளக்கம் :

தலைவன் தலைவியரின் நட்பினது உண்மை நிலையை உணராத பலரும், தத்தமக்குத் தோன்றியவாறே பலவாறு கூறுவர். தலைவியின் நோய், பிறிதொன்றால் விளைந்தது என்பது போல் அவர்கள் கூற்று அமையும். தலைவன் நட்பு, தலைநாள் அன்ன சிறப்புடையது என்று தலைவி கருதினாள்.

கோடையில் நீர் நிலையை நாடிச் சென்ற யானைக்கு, அருவியால் தரப்பட்ட இனிய கொறுக்கச்சித் தட்டை உணவாகக் கிடைத்தது. அது, அதனைக் கவளமாக்கி உண்டு நிறைவடைந்தது. அருவி நீரும் பருகுவதற்குக் கிடைத்தது. அது போல, வேட்டை குறித்துச் சென்ற தலைவனுக்குப் பால்வரை தெய்வத்தால் தலைவி எதிர்ப்பட, அவன் அவளைத் துய்த்து மகிழ்ந்தனன். பால் வரை தெய்வத்தால் கூட்டப்பட்ட நட்பு, இடையே அழிவதன்றிப் பின்னரும் தொடரும் என்ற தலைவியின் மனவுறுதியும், தலைவன் மேல் கொண்ட நம்பிக்கையும் இப்பாடலால் புலனாகும். அருவி, பால்வரை தெய்வமாகவும், எருவை, தலைவியாகவும், யானை தலைவனாகவும், எருவையை உண்டு மகிழ்தல் தலைவியை நுகர்ந்து மகிழ்தலாகவும் உள்ளுறை கொள்ளப்பட்டது. கவளம் மாந்திய யானை, பின்னும்

Koviloor Digital Library

அதனை விரும்பி வருவது போலத் தலைவனும் தன்னை நாடி வந்து மணம் முடிப்பான் எனத் தலைவி கருதினாள். 'கவளம் மாந்தும்' என்ற தொடர், தலைவனுடைய புணர்தல் வேட்கையைப் புலப்படுத்தும். 'நாட்குரல் எருவை' என்ற தொடர், தலைவியின் பூத்துப் பொலியும் இளமையை உணர்த்திற்று. யானை, தான் உண்ணும் உணவினை உருட்டிக் கவளமாக்கிய பின்னரே உண்ணும் இயல்புடையது. தலைவனை யானை என உயர்த்தியும், தன்னை உண்ணப்படும் பொருளாகிய கொறுக்கச்சி எனத் தாழ்த்தியும் தலைவி கூறுதல், அவளுடைய பணிந்த இயல்பினை உணர்த்தும்.

சொற்பொருள் :

எருவை	–	கொறிக்கான் தட்டை
பலர்	–	செவிலி முதலியோர்
தலை போதல்	–	அழிதல் ()தலை – அசைநிலை)
குரல்	–	கதிர், கொத்து

மேற்கோள் :

1. "தலைநாள் அன்ன பேணலின்" நற்றிணை,332
2. "நீரில், வறுங்கயம் துழைஇய இலங்கு மருப்பு யானை" குறுந்தொகை,215
3. "பூழியர், கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தாஅங்கு" அகநானூறு,6
4. "நம்மொடு, நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக்காலும் பயப்பு ஒல்லாதே" குறுந்தொகை, 264
5. "துறைவனொடு, யாத்தேம், யாத்தன்று நட்பே;
அவிழ்த்தற்கு அரிது அது முடிந்தமைந்தன்றே" குறுந்தொகை, 313

பொருள் முடிவு :

யான், நாடன் கேண்மை, தலை போகாமை அறிந்தனென். அஃது அறியாதோர் பலரும் கூறுப.

Koviloor Digital Library

171. மருதம்

காண் இனி வாழி - தோழி - யாணர்க்
கடும் புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப் பட்டாஅங்கு,
இது மற்று எவனோ, நொதுமலர் தலையே?

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பூங்கணுத்திரையார்

பொருள் :

தோழி. இப்பொழுது காண்பாயாக. புதுவருவாயாக விரைந்து ஓடிவரும் தண்ணீர் அடைகின்ற ஆழமான குளத்தின்கண், மீன் சிக்குவதற்காக இடப்பட்ட வலை, நீர்நாய் வந்து சிக்கிக் கொள்ள ஏதுவானாற்போல, இவ்வில்லம், நம் தலைவற்கு வரும் இடம் ஆகாமல், அயலார் வரும் இடமாதல் எங்ஙனம்?

விளக்கம் :

உண்பதற்கு உரிய மீனைப் பிடிப்பதற்காக இடப்பட்ட வலையில், உண்பதற்கு ஆகாத நீர்நாய் அகப்பட்டாற்போல, தன்நலம் தலைவன் வரைந்து கொண்டு துய்ப்பதற்கு ஆகாமல், நொதுமலர் பிறரால் துய்க்கப்படுவதற்கு உரியதாகுமோ எனத் தலைவி அஞ்சினாள். மீனுக்கு இட்ட வலையில் மீன் சிக்காத வருத்தத்தோடு, நீர்நாய் சிக்கி, அதனை விடுவிக்கும் வருத்தமும் தருவதாயிற்று. அதுபோலத் தலைவன் எய்தாத வருத்தத்தோடு, நொதுமலர் வரைவு வேண்டி வந்தவழி அவர்களை விலக்குவதற்கும் வருந்த வேண்டியதாயிற்று. புதுப்புனல், குளத்தை அடையும் போது, குளத்தில் உள்ள மீன்கள், கடும்புனலின் எதிரே செல்ல முற்படும். இதனை அறிந்து, மீன்பிடிப்பவர், குளத்திற்குப் புதுப்புனல் வரும் வழியில் வலைகளை இட்டு வைப்பர். இது வீசிய வலை அன்று. இட்ட வலையாகும். மா என்ற பல பொருள் ஒரு சொல், பொதுவாக எல்லா விலங்குகளையும் குறிக்குமாயினும், நொதுமலரது இழிவு கருதி நீர்நாய் என உரை கொள்ளப்பட்டது.

சொற்பொருள் :

வாழி	-	அசைநிலை
யாணர்	-	புதுவருவாய் (உரிச்சொல்)

Koviloor Digital Library

கயம் – குளம்

மா – விலங்கு (நீர்நாய்)

நொதுமலர் – அயலார்.

மேற்கோள் :

"அழாதீமோ, நொதுமலர் தலையே" நற்றிணை,13

பொருள் முடிவு :

தோழி. காண். நொதுமலர் தலையே. இது எவன்.

Koviloor Digital Library

172. நெய்தல்

தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை,
எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்
தமியர் ஆக இனியர் கொல்லோ?
ஏழ்ஊர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும், என்நெஞ்சே.

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கச்சிப் பேட்டு நன்னாகையார்

பொருள் :

பரத்தல் வாய்ந்த அழகிய சிறகுகளோடு வருத்தத்துடன் பறத்தலையுடைய வெளவால்கள், பழுத்த மரங்களை நாடிச் செல்லும், தனித்து உள்ளோர்க்குத் துன்பத்தைத் தரும் மாலைக்காலத்தில், ஈங்கு யாம் தமியம் ஆகும்படி, நம்மை அகன்றோர், தனிமையுடையவராகவும், இனிமையுடையவரோ? ஏழ் ஊரில் உள்ளவர்களுக்குப் பொதுவாக உள்ள ஒரு தொழிலின் பொருட்டு, ஓர் ஊரின்கண், கொல்லனால் கட்டப்பட்ட, வலித்து அமுக்கும் துருத்தியின் தோல் போல எல்லை முடிவின்றி என் நெஞ்சு வருத்தத்தை அடையும்.

விளக்கம் :

தலைவி, யாம் தனித்திருப்பதால் என் நெஞ்சம் வருந்தவில்லை என்றும், பிரிந்தவர் தனியராய் இனியராய் இருத்தல் இயலாது எனத் தன் நெஞ்சம் வருந்துகின்றது என்றும் கூறினாள். உடலொடு பொருந்திய தோலாக அமைந்தமையின், வெளவாலின் சிறகிற்கு வன்மை கூறப்பட்டது. 'இனியர் கொல்லோ,' என்ற தொடர், இனியராய் இரார் எனக் குறித்தது. ஒன்றுக்கு ஏழு கூறும் மரபு பற்றி, 'ஏழூர்பொது வினைக்கு ஓர் ஊர் யாத்த' எனக் கூறப்பட்டது.

மாலைப் பொழுது, இரவினை உடன் கொண்டு வருவதாகலின், மாலை தோன்றிய உடனே பிரிவுத் துயரம் தோன்றிற்று, ஆதலின் அதனைப் பையுளைத் தரும் மாலை என்றார். இன்று மாலை உணவு கிட்டுமோ என்ற வருத்தம் வெளவால்களுக்கு இருப்பதுபோல, இன்று மாலை, தலைவர் தன்னுடைய தனிமையைத் தீர்க்க வருவாரோ என்ற

Koviloor Digital Library

வருத்தம் தலைவியிடம் காணப்படுவதாயிற்று. வெளவாலின் இத்துயரம், 'நொப்பறை' என்ற தொடரால் குறிக்கப்பட்டது.

வினையின் அளவும், முடிக்க வேண்டிய விரைவும், வேறு துருத்தி இல்லாமையும் ஆகிய தேவைகளுக்கு ஏற்ப உலைக் கூடத்தில் உள்ள தோலின் இயக்கம் அமையும். ஊது உலைக் குருகின் உயிர்க்கும் தலைவியின் ஆற்றாமைக்கு ஒரு முடிவே இல்லை என்பது இப்பாடலால் உணர்த்தப்பட்டது.

சொற்பொருள் :

தாஅவல்	–	பரத்தல்
பறை	–	பறத்தல்
வாவல்	–	வெளவால்
படரும்	–	நினைக்கும் (உரிச்சொல்)
பையுள்	–	நோய் (உரிச்சொல்)
வாங்குதல்	–	வலித்தல்
தலை வரம்பு	–	முடிவு எல்லை
நொ	–	வருத்தம்

மேற்கோள் :

1. "தோல், மிதி உலை"

பெரும்பாணாற்றுப்படை,206–7

2. "தலை வரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு"

அகநானூறு,273

3. "அவர்நிலை, அறியுநம் ஆயின் நன்றுமன் தில்ல
பனிவார் கண்ணேம் ஆகி, இனி அது
நமக்கே எவ்வம் ஆகின்றது,
அனைத்தால் தோழி, நம் தொல்வினைப் பயனே"

அக்நானூறு,243

4. "என் ஆய்நலம் தொலையினும் தொலைக, வென்று
நோய் இலர் ஆக நம் காதலர்" அகநானூறு,115

5. "படர் சுமந்து எழுதரு பையுள் மாலை"

குறுந்தொகை,195

6. "குறுஞ்சினை வேம்பின் நறும்பழம் உணீஇய

Koviloor Digital Library

வாவல் உகக்கும் மாலையும்" ஐங்குறுநூறு,539

பொருள் முடிவு :

ஈங்குத் துறந்தோர் இனியர் கொல்லோ
என் நெஞ்சு வருந்தும்.

Koviloor Digital Library

173. குறிஞ்சி

பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி, நாண் அட்டு,
பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப,
'இன்னள் செய்தது இது என, முன் நின்று
அவள் பழி நுவலும், இவ்வூர்;
ஆங்கு உணர்ந்தமையின், ஈங்கு ஏகுமார் உளேனே.

குறை மறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.

மதுரைக் காஞ்சிப்புலவன்

பொருள் :

பொன்போன்ற ஆவிரையின் புதிய பூக்களை, இடையிட்டு நெருங்கக் கட்டிய நூல்களையுடைய பல மாலைகளை அணிந்த, பனங்கருக்கினால் செய்யப்பட்ட, ஊர்மக்களின் ஆர்ப்பினுக்கு உரிய குதிரையை, அதன் கழுத்தில் கட்டிய மணிகள் ஒலிக்கும்படி ஏறி, நாணத்தை நீக்கி, பழியை மிகுவிப்பதாகிய, உள்ளத்தில் உள்ள காமநோய் செல்லும் இடங்களில் எல்லாம் தெற்றெனத் தெரிய, மடல்மா மேல் ஊர்வதாகிய இச்செயல், இவளால் செய்யப்பட்டது என அவள் முன் நின்று, இவ்வூர் பழிச்சொல் கூறும். அவ்வாறு ஒன்று செய்யத் துணிந்தமையால் குறை மறுக்கப்பட்டவழியும், இவ்வாறு வறிதே மீண்டுசெல்ல முற்பட்டேன்.

விளக்கம் :

மடல்மாவிற்கு ஆவிரை, பூளை, எருக்கு, எலும்பு ஆகிய பல மாலைகளை அணிவிக்கும் இயல்பு குறிக்கப்பட்டது. தலைவனே இவற்றை அணிந்து மடல் ஏறுவதாகவும் கொள்ளப்படும். தலைவனின் கோலத்தைக் கண்ட ஊரார், தலைவி மேல் பழி தூற்றுவதாகவும், தலைவனே தலைவியால் வந்தது இந்நோய் என அவளைப் பழித்துரைப்பதாகவும், இருபொருளும் பொருந்த 'அவள் பழி நுவலும்' என்ற தொடர் அமைந்துள்ளது. தலைவன் மடலேறும் நிலைக்குத் தள்ளப்பட்டமைக்குத் தலைவியே காரணம் என ஊரார்பழிப்பர். தன்னுடைய மடலேறும் செயலால், தலைவிக்குப் பழிவருவதாகிய சொற்களை இவ்வூர் கூறிய போதிலும் 'யான் நாணமடையேன்' எனத் தலைவன் குறித்தனன். பாங்கி, தன் குறை முடிக்காமையால் தலைவன் மடலேறும் உபாயத்தால் தன் குறையை முடித்துக் கொள்ளத் துணிந்தமை இப்பாடலால் புலப்படும்.

Koviloor Digital Library

மடல் ஏறுவதாகக் கூறுவதேயன்றி, எந்நிலையிலும், தலைவன் மடல் ஏறினால், அவன் தலைவிமாட்டு அன்பில்லாதவன் ஆவன். 'மடல் ஏறுதல்', 'ஏறிய மடல்திறம்' எனப் பெருந்திணைப்பாற்படும். களவிற் கூட்டத்தை நீட்டிக்க விரும்பும் தலைவன் மேற்கொள்ளும் உபாயமே, மடல் ஏறுவதாகக் கூறுதல் ஆகும். பழிச் செயல் தலைவன் செய்ய, பழிச் சொல் தலைவிக்கு வருதல் குறிக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள் :

நாண் – செய்யத் தகாதனவற்றின் கண் உள்ளம் ஒடுங்குதல்.
நச்சினார்க்கினியர்

– இழிவாயின செய்தற்கண் விலக்குவது.
பரிமேலழகர்

கலிமா – செருக்குடைய குதிரை (சாதியடை)
ஊர் ஆரவாரித்தற்குக் காரணமாகிய குதிரை

கறங்க – ஒலிப்ப

மேற்கோள் :

1. "நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன், இன்று உடையேன்
காமுற்றார் ஏறும் மடல்" திருக்குறள்,1133

2. "நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து" திருக்குறள்,1132

3. "அணி அலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்
பிணையல் அம் கண்ணி மிலைந்து" கலித்தொகை,139

4. "மணி அணி பெருந்தார் மரபிற் பூட்டி"
குறுந்தொகை,182

5. "என்னை, மடல்மா மேல் மன்றம் படர்வித்தவள்"
கலித்தொகை,141

6. "மா, என மடலும் ஊர்ப, பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப" குறுந்தொகை,17

பொருள் முடிவு :

கலிமா ஏறி, நாண் அட்டு, நோய் சிறப்ப, இன்னள் செய்தது இது என, இவ்வூர் அவள் பழி நுவலும். ஆங்கு உணர்ந்தமையின் ஏகுமார் உளென்.

Koviloor Digital Library

174. பாலை

பெயல் மழை துறந்த புலம்பு உறு கடத்துக்
கவைமுடக் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்து,
பொருள்வயிற் பிரிவார் ஆயின், இவ்வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆரும் இல்லதுவே.

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வெண்பூதி

பொருள் :

உரிய காலத்தில் பெய்யும் மழை, பெய்யாது ஒழிந்தமையால், தனிமையுற்ற பாலைநிலத்தில், கவைத்த முள்ளினையுடைய கள்ளியின் முற்றிய காய்கள் வெடிப்பதால் கடிய ஓசை பிறக்கும். அவ்வோசை, செறிந்த மெல்லிய சிறகுகளையுடைய ஆணும் பெண்ணுமாய் இணைந்துவாழும் புறாக்களைப் பிரித்து ஓட்டும். இத்தகைய காடுகள் செல்லுதற்கு அரியன என்று கருதாமல், அருள் செய்வதற்கு உரியராகிய காதலர், அருள் செய்யப்படுவதற்கு உரியராகிய நம்மைப் பிரிந்து, பொருளைத் தேடும் பொருட்டுச் சென்றார். ஆதலின், இவ்வுலகிற்கு உரிய பொருள்தான், எல்லோரும் உயர்வாக ஏற்றுக் கொள்ளும் பொருள் ஆகும். உயர்வாக யாரும் ஏற்றுக் கொள்ளாதது, அவ்வுலகிற்கு உரிய அருளேயாகும்.

விளக்கம் :

சேர்ந்து உறையும் உயிர்களையும் பிரிக்கும் கொடுமையுடையது காடு ஆதலின், அக்காட்சிகளைக் கண்டு தலைவன் வருந்தி மீண்டு வருவான் எனத் தோழி குறித்தனள். பொருள், இவ்வுலகின் சிறந்த பொருளாகக் கூறப்பட்டமையின் அருள், அவ்வுலகின் சிறந்த பொருளாகக் கொள்ளப்பட்டது.

பாலையின் வெம்மையைக் கருதாமல் சென்றமையால் தலைவன் பொருளின் உயர்வு கருதியமையும், தன்னைத் துறந்து செல்லுதலால் அருளின் உயர்வு போற்றாமையும் நினைந்தனள். அருட்செல்வம், அவ்வுலகிற்கு உரியதாகலின், இவ்வுலகில் யாரும் அதனை விரும்ப வில்லை எனக் கருதியதாகவும் பொருள் கொள்ளலாம். கீழ்மக்களிடம் உளவாகிய பொருட் செல்வம், உயர்ந்தோரால் போற்றப்படுதலும்,

Koviloor Digital Library

செல்வத்துட் செல்வமாகிய அருட்செல்வம் அவர்களால் கொள்ளப்படாமையும் வியப்பாக உள்ளது. பொருள் மேல் கொண்ட வேட்கையால், அருளும் அன்பும் கொன்று அவ்வுலக இன்பத்தை இழத்தல் அறிவுடைமையாகாது என்பது தலைவனுக்கு வலியுறுத்தப்பட்டது.

சொற்பொருள்:

பெயல்மழை	–	காலத்தில் பெய்தலையுடைய மழை
கடம்	–	பாலைநிலம்
அத்தம்	–	காடு
கவைமுள்	–	கவைத்த முள்
நொடி	–	ஓசை
துதை	–	செறிந்த
நத் துறந்து	–	நம் துறந்து, நம்மைத் துறந்து
மன்ற	–	தேற்றம் (உரிச்சொல்)
ஆரும்	–	யாரும் (மரூஉ)

மேற்கோள்:

1. "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள" திருக்குறள்,241
2. "அருளிலாளர், பொருள்வயின் அகறல்"
அகநானூறு,305
3. "புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை"
கலித்தொகை,4
4. "புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்"
அகநானூறு,335
5. "அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள் வயின் பிரிவோர்" குறுந்தொகை,20

பொருள் முடிவு :

அத்தம் அரிய என்னார். நத்துறந்து பொருள்வயின் பிரிவாராயின், பொருளே பொருள். அருளே ஆரும் இல்லது.

Koviloor Digital Library

175. நெய்தல்

பருவத் தேன்நசைஇப் பல்பறைத் தொழுதி,
உரவுத் திரை பொருத திணிமணல் அடைகரை,
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்கு
இரங்கேன் – தோழி! – 'ஈங்கு என்கொல்? என்று
பிறர்பிறர் அறியக் கூறல்
அமைந்தாங்கு அமைக; அம்பல் அஃது எவனே?

பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்துவாட்குக் கிழத்தி உரைத்தது.

உலோச்சன்

பொருள் :

மலர்ந்த பருவத்துத் தேனைவிரும்பிப் பலவாகிய பறத்தலையுடைய வண்டின் கூட்டம் வலிமை வாய்ந்த அலைகளால் மோதப் பெறும், செறிந்த மணல் அடைகின்ற கரையின்கண் உள்ள அலைத் திவலைகளால் நனைந்த புன்னைமரத்தின் நனையாத கரிய கிளைகளில் வந்து கூடும். அத்தகைய மரங்களில் மலர்ந்த பூக்களையும், பெரிய நீரினையும் உடைய கடற்கரைத் தலைவன் பொருட்டு நீ வற்புறுத்தலால், யான் இவ்வருத்தம் அடையேன். இங்கு என்னைக் கண்டு, இவள் வேறுபாட்டிற்குக் காரணம் யாது எனப் பிறர், பிறர் அறியும்படிக் கூறுதல், அவர்களுடைய மனம் விரும்பியவாறு அமைக. அவர்கள், முகிழ்முகிழ்த்துக் கூறும் அம்பலாகிய அஃது யாது செய்தல் கூடும்.

விளக்கம் :

பலரும் கூறும் அலர் கண்டே வருந்தாத யான், சிலர் முகிழ் முகிழ்த்துக் கூறும் அம்பல் குறித்து வருந்துதல் செய்யேன் எனத் தலைவி, தோழியிடம் கூறுவதாய் இப்பாடல் அமைகின்றது. நின்னுடைய ஆற்றாமையைத் தவிர்த்தல் வேண்டும் எனத் தோழி கூறியவழி, ஊரார் கூறும் அலரையும் அம்பலையும் அவளால் எங்ஙனம் தடுத்து நிறுத்துதல் கூடும் எனத் தலைவி அவளை வினவினள்.

அலைகள் மோதும் கடற்கரையில் நிற்றலால், 'நனைந்த புன்னை' என்றார். வண்டுகள் கூடியமையால் நனையாத கிளைகள் எனப் பொருள் கொள்ளப்பட்டது. பல இடங்களிலும் பறந்து செல்லும் வண்டுகள், உரிய பருவத்தில் ஓரிடத்தில் ஒருங்கு கூடுவதுபோல, பலமுயற்சிகளின்

Koviloor Digital Library

பொருட்டுத் தன்னை மணம் முடித்துத் தன்னோடு அளவளாவுவான் எனத் தலைவி தன்னுடைய உறுதியைப் புலப்படுத்தினாள். பூவின் மணம், அக்கடற்கரையின் புலவு நாற்றத்தை மாற்றுவது போல, தலைவன் வருகையும் ஊரார் கூறும் பழிமொழிகளை மாற்றவல்லன என்ற குறிப்பும் இப்பாடலால் உணரப்படும்.

சொற்பொருள் :

பருவத்தேன்	–	மலர்ந்த பருவத்துத் தேன்
நசைஇ	–	விரும்பி
பறை	–	பறத்தலையுடைய வண்டு (ஆகுபெயர்)
அம்பல்	–	சிலர் அறிந்து கூறும் பழிமொழிகள் (அரும்புதல் – அம்பல்)
சேர்ப்பன்	–	நெய்தல் நிலத் தலைமகன்

மேற்கோள் :

1. "அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்
அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்"

தொல்காப்பியம்,களவியல்,49

2. "அஞ்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி"

அகநானூறு,234

3. "அவர் திறத்து இரங்கும் நம்மினும்
நம் திறத்து இரங்கும் இவ் அழுங்கல் ஊரே"

குறுந்தொகை,289

4. "உரவுத்திரை, அடும் கரை" குறிஞ்சிப்பாட்டு,178

பொருள் முடிவு :

தோழி, சேர்ப்பற்கு இரங்கேன். பிறர் கூறல் அமைக அம்பல் எவன்.

Koviloor Digital Library

176. குறிஞ்சி

ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்;
பல்நாள் வந்து, பணிமொழி பயிற்றி, என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை,
வரைமுதிர் தேனின் போகியோனே –
ஆசுஆகு எந்தை – யாண்டு உளன் கொல்லோ?
வேறுபுலன் நல்நாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலிழும், என் நெஞ்சே.

தோழி கிழத்தியைக் குறைநயப்பக் கூறியது. வருமுலையாரித்தி

பொருள் :

ஒருநாளில் வரவுஒழிந்திலன். இருநாளில் வரவு ஒழிந்திலன். பலநாட்கள் வந்து, பணிவைப் புலப்படுத்தும் மொழிகளைப் பலகால் யான் விரும்புமாறு கூறினன். மலைப் பகுதியில் முதிர்ந்து காணப்படும் தேனைக் கொள்பவர், அத்தேன் உள்ள அடையையும் உடன்கொண்டு செல்வது போல, எனது நன்மையுடைய அன்பு நெகிழ்ந்த நெஞ்சத்தையும் உடன் கொண்டு சென்றான். எனக்குப் பற்றுக்கோடாக உள்ள தலைவன், யாண்டு உள்ளனனோ? வேறாகிய நல்ல நாட்டின் புலத்தில் பெய்த, இடியேற்றினையுடைய மழையைப் போல, என் நெஞ்சம், அவன் உள்ள இடத்தில் நின்று கண்ணீர் பெருக்கி அழும்.

விளக்கம் :

தலைவியின் நெஞ்சில் இரக்கம் தோன்றுவதற்காகத் தோழி, தலைவன் பலநாள் வந்தான் என்பதை வகுத்து, ஒருநாள், இருநாள், பலநாள் என அவன் அன்புடைமை தோன்றக் கூறினாள். தேன் கொள்பவர், தேனடையையும் எடுத்துச் செல்வது போலத் தலைவியின் நலத்தை நுகர்ந்த தலைவன், அவளுடைய நெஞ்சினையும் உடன்கொண்டு சென்றனன். தேன் அன்பாகவும், தேனடை அதனையுடைய நெஞ்சாகவும் கொள்ளப்படும். வரையில் முதிர்ந்த தேனடையில் உள்ள தேன், ஒருவரால் கொள்ளப்படாது கழிவதுபோல, தன் மொழியை ஒருவரும் கொள்ளாமையால் தலைவன் பிரிந்து சென்றான் எனத் தோழி கருதியதாகவும், 'வரைமுதிர் தேனின் போகியோன்' என்ற தொடர் விளக்கப்படும். 'வரை முதிர் தேன்' எனச் சுட்டிக் காட்டித் தோழி, தலைவன் நமக்கு அரியவன் என்பதைப் புலப்படுத்தினாள்.

Koviloor Digital Library

வேற்று நாட்டில் பெய்த மழைக்குத் தன் நெஞ்சின் கண்ணீரை உவமித்தமையால், தலைவியின் நெஞ்சு அவன்பால் உள்ளமை உணர்த்தப்பட்டது. தலைவன் யாண்டுளனாயினும், அவன்பால் சென்று இரந்து தன் நெஞ்சினைப் பெற்றுவர விரும்பிய தலைவி, 'யாண்டு உளன் கொல்லோ" என்றனள். தன்னுடன் என்றும் நீங்காது உறையும் நெஞ்சம், வேற்றுநாட்டில் தன்னைக் காணாமல் அழும் என்றனள். கண்ணீரின் மிகுதி தோன்ற, மழையின் மிகுதி சுட்டப் பெற்றது. தன் நெஞ்சின் கண்ணீரைத் துடைக்க, தான் ஆண்டு இல்லாமை குறித்து வருந்துவாளாயினள்.

சொற்பொருள் :

பணிமொழி – பணிவைப் புலப்படுத்தும் மொழி

பயிற்றி – பலகால் கூறி

நன்னர் – நன்மை

தேன் – தேன் கொள்வார். (ஆகுபெயர்)

எந்தை – தலைவனிடம் கொண்ட அன்பால் கூறிய சொல்

கலிழும் – அழும்

மேற்கோள் :

1. "தோழி, வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்"
இறையனார் களவியல் உரை,10

2. "ஆசாகு என்னும் பூசல்" புறநானூறு,266

3. "பல்நாள் வந்து பணிமொழி பயிற்றலின்"
அகநானூறு,310

4. "தூன் உற்ற நோய் உரைக்கல்லான் பெயரும் மன், பன் நாளும்"
கலித்தொகை,37

6. "ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்
பலநாள் பலரொடு பயின்று செல்லினும்"
புறநானூறு,101

பொருள் முடிவு :

போகியோன், எந்தை யாண்டு உளன்கொல், என் நெஞ்சு கலிழும்.

Koviloor Digital Library

177. நெய்தல்

கடல்பாடு அவிந்து, கானல் மயங்கி,
துறைநீர் இருங்கழி புல்லென்றன்றே;
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்; இன்று அவர்
வருவர் கொல் வாழி – தோழி! – நாம் நகப்
புலப்பினும் பிரிவுஆங்கு அஞ்சித்
தணப்புஅருங் காமம் தண்டியோரே?

கிழவன் வரவுணர்ந்து, தோழி கிழத்திக்கு உரைத்தது. உலோச்சன்

பொருள் :

கடலின் ஒசை அடங்கிற்று. கடற்கரைச் சோலை, இருளினால் இருப்பு அறியப்படாது மயக்கத்தைத் தருவதாயிற்று. துறையையும் நீரையும் உடைய பெரிய உப்பங்கழிகள், பொலிவற்றுக் காணப்பட்டன. ஊர் மன்றத்தின்கண் உள்ள பனைமரங்களில் மடலின்கண் பொருந்தி வாழ்தலையுடைய அன்றில் பறவைகளும் மெல்லெனக் கூவின. இங்ஙனம், இடமும் ஆள்அற்று, காலமும் இருட்பட்டுக் காணப்படுவதால் முன்பு நாம் அவரை நகையாடிப் புலந்தபோதிலும், அப்பொழுது பிரிதலை அஞ்சி, நீங்குவதற்கு அரிய காம இன்பத்தை விடாது பணிந்து இரந்து பெற்றவர், இப்பொழுது வருவர் போல் உள்ளது.

விளக்கம் :

கடலில் ஒலியடங்கியமையால் மீன்பிடி படகுகள், கடலில் சென்றன. திமில் விளக்கு இல்லாமையால், கானலில் இருள் சூழ்ந்தது. பறவைகள் தம் கூடுகளில் புக்கமையால் கழித்துறை புல்லென்று காணப்பட்டது. இத்தகைய கால, இடச் சூழல்கள், தலைவன் தலைவியைக் காண ஏற்றனவாய் உள்ளன. 'புலப்பினும் என்ற சொல், களவினும் சிறுபான்மை நகையாடிப் புலத்தல் உண்டு என்பதைக் குறிப்பதாகும். கடல், பாடு அவிதல், கானல் மயங்கல்; கழி, புல்லென்றமை; அன்றில், நரலுதல் ஆகியவை தலைவன் வரவிற்கு ஏதுக்களாய் விளங்கும். பனைமடலில் அன்புடன் துணையைப் புணர்ந்து வாழும் அன்றிலின் வாழ்க்கை, பிரிந்தோர்க்குக் காமத்தை மிகுவிப்பதாகும்; 'அப்பறவை கூடத் தன் துணையுடன் மகிழ்ந்து வாழ்கின்றது; ஆனால் நம் காதலர், நம்முடன் உறைய வந்திலர்', என வருந்திய தலைவிக்குத் தோழி, காதலர், தணப்பரும் காமம் தண்டியோர்

Koviloor Digital Library

எனவும், பிரிவு அஞ்சுபவர் எனவும், புலப்பினும் பொருட்டாய்க் கொள்ளார் எனவும், கூறி அவர் வருவர் என ஆற்றுவித்தனள்.

சொற்பொருள் :

பாடு	–	ஓசை
மன்றலம்	–	மன்று + பெண்ணை, அலம் – அசைநிலை
தண்டியோர்	–	விடாது பணிந்து, இரந்து கொண்டோர்
கொல், வாழி	–	அசைநிலை
பையென	–	மெல்ல
நரலும்	–	ஒலிக்கும்
தணப்பு	–	விட்டு நீங்குதல்

மேற்கோள் :

1. "மன்றிரும் பெண்ணை மடல் சேர் அன்றில்"
கலித்தொகை,129

2. "மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்"
அகநானூறு,50

3. "மன்றப் பெண்ணை வாங்குமடல் குடம்பைத்
துணை புணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்"
நற்றிணை,303

4. "கருங்கால் அன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப் பெடை அகவும் பானாட் குங்குல்"
குறுந்தொகை,301

5. "கடல்பாடு அவிந்து, தோணி நீங்கி,
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்"
அகநானூறு,57

6. "பணிமொழி அன்றோ, நம் உள்ளம் உடைக்கும் படை"
திருக்குறள்,1238

பொருள் முடிவு :

தோழி. கழி, புல்லென்றன்று. அன்றிலும் நரலும் தண்டியோர் இன்று வருவர்.

Koviloor Digital Library

178. மருதம்

அயிரை பரந்த அம்தண் பழனத்து
ஏந்துஎழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கு, இவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்;
தொழுதுகாண் பிறையின் தோன்றி, யாம்நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர்; நோகோ யானே.

கடிநகர் புக்க தோழி, தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு, முன்னர்க் களவுக்காலத்து ஒழுகலாற்றினை நினைந்து, அழிந்து கூறியது.

நெடும்பல்லியத்தை

பொருள் :

அயிரைமீன் மேய்வதற்குப் பரந்த, அழகிய தண்ணிய நீர் அறாத வயல்களில், அழகு மிகுந்த மலர்களையுடைய, உள்ளே துளையைக் கொண்ட திரண்ட தண்டினையுடைய, களையாக வளர்ந்துள்ள ஆம்பலின் மலர்களைக் கிள்ளிப் பறிப்பவர், நீர் வேட்கையடைந்தாற் போல, இத்தலைவியின் முலையிடைத் துயலப் பெற்றும், நடுங்குதலை ஒழிவீர் அல்லீர். தெய்வத் தன்மையால் காணும்போதே பலரும் தொழுது காண்டற்கு உரிய பிறைபோல, களவுக் காலத்தில் யாம், ஒரொருகால் வந்து தோன்றினம். அப்பொழுது எம்முடைய பெரிய தவறுகளைப் பொறுத்தருளினீர். அங்ஙனம் தவறிழைத்தமைக்கு யான் பெரிதும் வருந்துகின்றேன்.

விளக்கம் :

அயிரைமீன், நீரின்றி வாழாமை, தலைவி தலைவனின்றி வாழாமை குறித்தது. பழனத்து வளர்ந்த ஆம்பல் ஆதலின், அதனைக் களையெனக் களைய முற்பட்டனர். பொய்கையின் ஆம்பல் எனக் கொண்டு, மகளிர் தழையாடை வேண்டி, ஆம்பல் இலைகளைப் பறித்தனர் எனவும் பொருள் கொள்ளுதல் கூடும். ஆம்பலுக்கு, உள்ளே புழையுடைய தண்டு கூறப்பட்டமை, நீர் உண்பார், ஆண்டு நின்றவாறே உறிஞ்சிக் குடித்தலும் இயலும் என்பதைக் குறித்தது. கற்பினுள் எளிமை இவ்வாறு உணர்த்தப்பட்டது.

களவுக்காலத்தில், தலைவியின் முலையிடைக் கிடந்தும், அவளை வரைந்து கொள்ளாமையால், அவள் நமக்கு அரியள் என்ற

Koviloor Digital Library

ஓர் அச்சம் தலைவன்பால் இருந்தது. திங்களுக்கு ஒருமுறை தோன்றும் பிறையைக் காண்பது போல், தலைவியைக் காண்டல் அருமையுடைத்தாயிற்று. கா்மத்தால் நேர்ந்த துன்பங்களை அந்நாளில் தலைவன் பொறுத்திருந்த திறத்தைத் தோழி நினைந்தாள். தலைவியைப் பெற தலைவனுக்கு உதவாத தன் பிழையை எண்ணி வருந்தினாள்.

களவினுள் பகற்குறி, இரவுக்குறி என வரையறுக்கப்பட்ட பொழுதுகள், கற்பு வாழ்வில் இல்லை. தலைவி, எக்காலத்தும் தலைவனுக்கு உரியவளாதல் கூடும். இதனால் தலைவன் உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, 'பொழுது மறுப்பு ஆக்கம்' எனப்படும். பேராசிரியர், இப்பாடலைத் தோழி, களவுக் காலத்து ஒழுகலாற்றை நினைந்து, அழிந்து கூறியதாக அமைந்த துறைக்கு ஏற்ப விளக்கம் தந்துள்ளார்.

நச்சினார்க்கினியர், கற்புக் காலத்தில் தலைவியின் முலையிடைக் கிடந்தும் நடுங்கும் தலைவன், களவுக் காலத்து எங்ஙனம் ஆற்றியிருந்தானோ எனத் தோழி வருந்தியதாகப் பொருள் கொள்ளுவர். 'தெறற்கரு மரபின் சிறப்பின் கண்ணும்', என்ற துறைக்கு ஏற்ப அவர் இப்பாடலை விளக்குவர்.

பேராசிரியர், தோழி தன் ஒழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியதாகவும், நச்சினார்க்கினியர், தோழி, தலைவன் ஒழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியதாகவும் பொருள் கொண்டனர்.

சொற்பொருள் :

அயிரை – மீன்வகை

பழனம் – வயல்

தூம்பு – புழை, துளை

கால் – தண்டு

குறுநர் – கிள்ளுபவர்

பிறை – மூன்றாம் நாள் பிறை

பெரிய – பெரிய வருத்தங்கள்

மேற்கோள் :

1. "வளை உடைத்தனையது ஆகிப் பலர் தொழ
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி,
இன்னாப் பிறந்தன்று, பிறையே" குறுந்தொகை,307

Koviloor Digital Library

2. “பொழுது மறுப்பாக்கம் என்னும் மெய்ப்பாடு”

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,24 பேராசிரியர்

3. “பெறற்கரும் பெரும்பொருள் முடித்தபின் வந்த
தெறற்கரு மரபின் சிறப்பின் கண்ணும்”

தொல்காப்பியம், கற்பியல்,9 இளம்பூரணர், நச்சினார்க்கினியர்

4. “நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்” *நற்றிணை,6*

5. “குவளை குறுநர் நீர்வேட்டாங்கு” *நற்றிணை,332*

6. “ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை” *அகநானூறு,239*

7. “அப்பிறை, பதினெண் கணனும் ஏத்தவும் படுமே”

புறநானூறு,1

பொருள் முடிவு :

இவள் இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர். யாம் நுமக்கு அரியம் ஆகிய காலைப் பெரிய நோன்றனிர். யான் நோகு.

Koviloor Digital Library

179. குறிஞ்சி

கல்லென் கானத்துக் கடமா ஆட்டி
எல்லும் எல்லின்று; ஞமலியும் இளைத்தன;
செல்லல் - ஐஇய! - உது எம் ஊரே;
ஓங்குவரை அடுக்கத்துத் தீம்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதையானை சுவைத்த
கூழை மூங்கில் குவட்டிடையதுவே.

பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள் போன்று வரைவு கடாயது.

குட்டுவன் கண்ணன்

பொருள் :

ஐய, கல்லென்னும் ஓசையையுடைய காட்டின்கண், கடமானை வேட்டையில் அலைத்துப் பகற்பொழுது கழிந்தது. அதனைத் துரத்திச் சென்ற வேட்டைநாய்களும் இளைத்தன. செல்லற்க. உயர்ந்த மலைப்பக்கத்தில், இனிய தேனடைகளைக் கிழித்த தொகுதியையுடைய பசிய மூங்கில்களின் குருத்தைத் தின்ற பெரிய வாயினையுடைய, அறியாமையுடைய யானை, சுவைத்தமையால், கூழையாகிய மூங்கிலையுடைய மலைக்குவடுகளுக்கு இடையே உள்ள பள்ளத்தில் அமைந்துள்ளது. அது எம் ஊராகும்.

விளக்கம் :

மலைப்பகுதியில் வளர்ந்துள்ள மூங்கில்கள்பட்டுத் தேனடைகள் கிழிந்து தேன் பெருகும் வளமுடைய ஊர், தங்களுடையது எனத் தோழி, விருந்து புறந்தருதற்கு ஏற்ற வளனுடைமையைத் தலைவனுக்கு உணர்த்தினாள்.

இள மூங்கிலின் சாறு உண்டால், கரு நழுவும் என்ற உண்மை அறியமாட்டாமையால், 'பேதை யானை' என்றார். வயிறு அறியாமல், வாயின் சுவை ஒன்றே கருதி மிகுதியாக உண்டமை தோன்ற, 'சுவைத்த' என்றார். யானை, மூங்கிலை விரும்பி உண்ணுதல் இப்பாடலில் சுட்டப்பட்டுள்ளது. மூங்கிலின் குருத்துக்கள் தோன்றிய அளவில், யானைகள் உண்டுவிடுவதால் மூங்கில்கள் கூழையாயின. இரவில் பனியில் வளைந்த மூங்கில், விடியலில் வெயில்பட விசைத்தெழும் இயல்புடையது. அவை, அவ்வாறு மேலெழும் போது, அவைபட்டுத் தேனடைகள் கிழியும். காற்று, மூங்கிலை அலைத்தலாலும் தேனடைகள் கிழியும்.

தோழி, தன் ஊர், கூழை மூங்கில் வளர்ந்துள்ள குவடுகளுக்கு இடையே உள்ளது எனக் குறியிடம் கூறினாள். தலைவனைத் தன் ஊரில்

Koviloor Digital Library

தங்கிச் செல்லும்படி வேண்டி, இரவுக்குறி நேர்ந்தனள். என்றும் நீங்காது உடனுறையும் தலைவியின் வேட்கையை உணர்த்தி வரைந்து கொண்டு, தன் ஊரில் இல்லறம் நிகழ்த்துதலே தக்கது என்பதை உ.ணர்த்தினாள்.

சொற்பொருள் :

எல்	–	பகற்பொழுது
கயவாய்	–	பெரியவாய், கய – பெருமை (உரிச்சொல்)
கடமா	–	ஒருவகை மானினம்
ஞமலி	–	நாய் (திசைச் சொல்)
செல்லல்	–	செல்லற்க
உது	–	சேய்த்தும் அன்று, அணித்தும் அன்று, இடைப்பட்டது
கூழை	–	குறுகிய

மேற்கோள் :

1. "வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்ட
கட்சிக் காணாக் கடமா நல்ஏறு" புறநானூறு,202

2. "கடமான் கொழுங்குறை" மலைபடுகடாம்,175

3. "எடுத்த வேய் எக்கி நூக்கு உயர்பு தாக்கத்
தொடுத்த தேன் சோரும் வரைபோலும் தோற்றம்"
பரிபாடல்,16, 45–46

4. "இருவெதிர் ஈன்ற வேல் தலைக் கொழுமுகை
சூல்முதிர் மடப்பிடி நாள் மேயல் ஆரும்" நற்றிணை,116

5. "எல்லும் எல்லின்று, அசைவுமிக உடையேன்,
மெல்இலைப் பரப்பின் விருந்து உண்டு, யானும் இக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ"
அகநானூறு,110

6. "முளைவாள் எயிற்ற வள்உகிர் ஞமலி
திளையாக் கண்ண, வளைகுபு நெரிதர"
குறிஞ்சிப்பாட்டு,131–32

பொருள் முடிவு :

ஐய, எல்லும் எல்லின்று, ஞமலியும் இளைத்தன. செல்லல். குவட்டு இடையது உது எம் ஊர்

Koviloor Digital Library

180. பாலை

பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி
இருங்களிற்று இனநிரை ஏந்தல் வரின், மாய்ந்து,
அறைமடி கரும்பின் கண்இடை அன்ன
பைதல் ஒருகழை நீடிய சுரன்இறந்து
எய்தினர் கொல்லோ பொருளே – அல்குல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்பர் ஆகத் தாம்சென்ற நாட்டே?

பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது.

கச்சிப் பேட்டு நன்னாகையார்

பொருள் :

பெரிய யானைக் கூட்டங்கள், பேயின் பற்களைப் போன்ற பருத்த நகங்களையுடைய, நிலத்தே பாவி நடக்கும் அடியினை உடையவை. அவற்றின் வரிசையின் தலைவன், வந்து கைக்கொண்டால், அறுத்தலால் வீழ்ந்து கிடக்கும் கரும்புகளுக்கு இடையே உள்ள பகுதி வருந்துவதைப் போல, வருந்துதலை உடைய ஒற்றை மூங்கில் தனியாக நீண்டு காணப்படும். அத்தகைய பாலைநிலத்தைக் கடந்து, அல்குலின், அழகிய கோடுகள் வாடும்படி, நம்மைத் துறந்து சென்ற காதலர், தாம் சென்ற நாட்டில், நம்மை எண்ணாத வன்நெஞ்சராய்ப் பொருளைப் பெற்றாரோ.

விளக்கம் :

களிற்றின் கூட்டத்திற்குத் தப்பி, ஒருகழை நீடியது போல, அல்குலின் அழகு கெடத் துறந்து சென்றவர், இடையூறுகளைத் தப்பிப் பொருள் எய்தினாரோ? இல்லையோ எனத் தலைவி வருந்துவாளாயினள். 'பொருள் எய்தின' கொல்லோ', என்பதால் நீடலால் பொருள் எய்திற்றிலர் என்பது உணரப்பட்டது. யானைக் கூட்டங்களின் செலவு குறித்துத் தலைவன் சென்ற சுரத்தின் அருமையைத் தலைவி நினைந்தனள். கூட்டமாகச் சென்ற யானைகளின் காலிற் தப்பிய, ஒற்றை மூங்கில், பருமை குறைந்து வாடிச் சிறுகோலாய்த் தனித்து நிற்பது போலத் தலைவன் செய்த சிறுமைகளால், தான் ஒருத்தி தனித்து வாடி நிற்றல் குறித்தாள். அம்மூங்கிலும் என்று அழியும் எனக் கூற முடியாது. தனித்து நிற்கும் தன்னுடைய உயிரும் அத்தகையதே எனக் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

பழூஉ	–	பேய்
பரு உகிர்	–	பருத்த நகம்
அறை	–	அறுத்தல், பாத்தி
கண்இடை	–	இரண்டு கணுக்களுக்கும் இடைப்பட்ட பகுதி
பாஅடி	–	பரவிய அடி., நிலத்தே பரவும் அடி
ஏந்தல்	–	யானையின் தலைவனைக் குறித்தது.
பைதல்	–	துன்பம்
வன்பர்	–	வன் நெஞ்சினர்

மேற்கோள் :

1. "கருமறிக் காதின், கவை அடிப் பேய்மகள்
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல
பிணன் உகைத்துச் சிவந்த, பேருகிர்ப் பணைத்தாள்"
சிறுபாண் ஆற்றுப்படை,197–200

2. "பாஅடி யானை" *புறநானூறு,233*

3. "அறையுற்று, ஆலைக்கு அலமரும் தீங்கழைக் கரும்பே"
மலைபடுகடாம்,118–9

4. "அன்பு இன்மையின், அருள் பொருள் என்னார்,
வன்கண் கொண்டு வலித்து வல்லுநரே"
குறுந்தொகை,395

5. "முளைவளர் முதல மூங்கில் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை" *அகநானூறு,332*

6. "மழகளிறு மிகீஇத் தன்
கால் முளை மூங்கில் கவர்கிளை போல
உய்தல் யாவது" *பதிற்றுப்பத்து,84*

பொருள் முடிவு :

துறந்தோர் சென்ற நாட்டின்கண், பொருள் எய்தினர் கொல்லோ.

Koviloor Digital Library

181. மருதம்

இது மற்றுஎவனோ - தோழி! - துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே?

தலைமகன் பரத்தைபிற் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

கிள்ளி மங்கலம் கிழார்

பொருள் :

தோழி, தாழ்ந்த கொம்பினையுடைய எருமையாகிய ஈன்றணிமையையுடைய கரிய ஆன், உழவனால் கட்டப்பட்ட கன்றின் பக்கத்திலிருந்து நீங்காமல், அருகில் உள்ள பயிர்களை மேயும். இத்தகைய ஊரின் தலைவனின், திருமகள் தங்கும் தம் வாழ்க்கைக்குரிய பல கடமைகளை அணிகலன் போல் விரும்பி ஏற்றுக்கொண்ட பேரறிவு வாய்த்தலையுடைய பெண்டிராகிய எமக்கு, இத்தகையவர் என்னும் இனிமையில்லாத சொல்லாகிய இது என்ன பயனை உடையது.

விளக்கம் :

தலைவனுடைய புறத்தொழுக்கத்தைத் தோழி சுட்டிக்காட்டி, இழித்துக் கூறிய வழி, தலைவி தலைவனைத் குறித்து உயர்வாகக் கூறுதல் இப்பாடலின் நோக்கமாகும்.

இல்லறத்தில் நிற்போர் ஆற்றவேண்டிய கடமைகள் பல. காம இன்பம் ஒன்றுமட்டும் வாழ்வின் நோக்கமாதல் இல்லை. தலைவன், காமத்தால் தன் கடமைகளில் நெகிழ்ந்தானாயினும், தலைவி, அவற்றை அறியும் அறிவு பெற்றிருந்தாள். கடமைகளை நடுநிலையுடன் சிந்திக்கும் ஆற்றல் அவளிடம் காணப்பட்டது.

எருமை, தன்னுடைய கன்றை நீங்காமல், அருகில் உள்ள வயலில் மேய்வது போலத் தலைவன், தன்னுடைய மனைவியை நீங்காதவனாய், அங்கிருந்தவாறே பரத்தையர்பால் இன்பம் துய்த்து

Koviloor Digital Library

மகிழ்ந்தான். ஈன்றணிமையையுடைய எருமையாதலின், அதன் அருகில் இருந்தவாறே மேய்வதாயிற்று. இல்லையெனில் புறத்தே சென்று மேயும். புதல்வனைப் பெற்ற தாயாதலின் சின்னாள் அவளருகே இருந்து புறப்பெண்டிரை நுகர்ந்தனன். அன்றேல், பரத்தையர் சேரிக்கே சென்றிருப்பான். தன் நாட்டில் உள்ள ஓர் எருமைக்கு உள்ள குடும்பப் பற்றும், தலைவனிடம் இல்லாமை கருதி வெறுப்புற்றனள்.

ஊரனுடைய திருமனையில் இருந்து, கடமைகளை ஆற்றிவருதல், ஊரனைத் தழுவுதலை விட இனிது என உணரும் பேரறிவு வாய்க்கப் பெற்றவளாய்த் தலைவி விளங்கினாள். மனையகத்து இல்லறம் காப்போர், துனி கொள்ளுதலும் இன்னாக் கிளவி கூறுதலும் தக்கதன்று எனத் தலைவி உணர்ந்தனள். நான், 'மனைப்பல கடம் பூண்டது' குறித்து, அன்பு மிகுந்து பாராட்டுவதற்கு மாறாக, அவர் வெறுத்தமையே நினைந்தாள். கடம் பூண்டமையால் செயலும், பெருமுது பெண்டிராதலால் உள்ளமும், தூயராகிய தம்மிடம் சொல்லும் தூயதாய் இருத்தல் வேண்டுமாதலின், 'இன்னாக் கிளவி' கூறுவது என்ன பயனுடைத்து என்றாள்.

சொற்பொருள் :

இருமருப்பு	–	தாழ்ந்த மருப்பு, பெரிய மருப்பு
ஆன்	–	எருமை
ஊரன்	–	மருத நிலத் தலைமகன்
இது	–	சுட்டு, இன்னாக்கிளவியைச் சுட்டிற்று. செய்யுளாதலின் சுட்டு முன் வந்தது.
இன்னர்	–	இத்தகையர், பரத்தைமையுடையர்
குழவி	–	எருமைக்கன்று (இளமைப்பெயர்)
திருமனை	–	திருமகள் தங்கும் மனை
கடம்	–	கடமை (தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என ஐவர்க்கும் செய்யும் கடமைகள்)
பூண்ட	–	அணிகலனாய் விரும்பி ஏற்ற
பெருமுது பெண்டிர்	–	பேரறிவு வாய்க்கப்பெற்ற பெண்டிர். (மனைவி)

Koviloor Digital Library

துனி – முதிர்ந்த கலாம்.

மேற்கோள் :

1. "அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்"
தொல்காப்பியம்,கற்பியல்,9 இளம்பூரணர்

2. "பெற்றமும், எருமையும், மரையும் ஆவே"
தொல்காப்பியம்,மரபியல்,60

3. "இன்னன் ஆவது எவன் கொல் அன்னாய்"
ஐங்குறு நூறு,26

4. "சேற்று நிலை முனைஇய செங்கட் காரான்"
குறுந்தொகை,261

5. "இது மற்று எவனோ, தோழி" குறுந்தொகை,299

6. "முதுவாய் இரவலன்" புறநானூறு,48

பொருள் முடிவு :

தோழி, ஊரன், மனைக் கடம் பூண்ட நமக்கு இன்னாக் கிளவி எவன்.

Koviloor Digital Library

182. குறிஞ்சி

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணிஅணி பெருந்தார் மரபிற் பூட்டி,
வெள் என்பு அணிந்து, பிறர் எள்ளத் தோன்றி,
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி,
தெருவின் இயலவும் தருவது கொல்லோ –
கலிழ்கவின் அசைநடைப் பேதை
மெலிந்திலள், நாம்விடற்கு அமைந்த தூதே.

தோழியால் குறைமறுக்கப்பட்ட தலைமகன், தன் நெஞ்சிற்கு உரைத்தது

மடல் பாடிய மாதங்கீரன்

பொருள் :

அழகு ஒழுகும் அசைந்த நடையையுடைய பேதை, நம்மாட்டு நெஞ்சம் நெகிழ்ந்திலள். பனையின் உயர்ந்த உச்சியில் முற்றுதலையுடைய, பெரிய மடலால் செய்யப்பட்ட குதிரைக்கு, மணிகள் அணிந்த பெரிய மாலையை முறையாக அணிவித்து, நாம் வெள்ளிய எலும்பினைமாலையாக அணிந்துகொண்டு, ஊரில் உள்ள பிறர் இகழுமாறு, அம்மடல்மா மேல் தோன்றி, ஒருநாளில் எந்நாளும் தன் பக்கத்தில் துணையாக விளங்கும் நாணத்தைத் துறந்து, தெருவின் கண், நாம், அத்தலைவியிடத்து விடுத்தற்கு அமைந்த தூது, தருவதாகுமோ.

விளக்கம் :

மடல் முற்றியவழியே, கருக்குத் தோன்றுமாதலின், 'விளைந்த மடல்' என்றார். பனங்கருக்குகளால் செய்த குதிரைக்கு மணிகளை மாலையாகப் பூட்டுவர். தன் நெஞ்சத்தின் காமத்தை அறியாமையால், தலைவியைப் பேதை எனக் குறித்தான். அசை நடையால் தன்னைப் பேது செய்தலின் 'பேதை' எனப்பட்டாள். நாணுடையார் மடல் ஏறார் எனத் தோழி, மடல்விலக்கியவழி, தலைவன் நாணத்தைத் துறந்து மடலேறப் புக்கமை இப்பாடலால் உணர்த்தப்பட்டது. மடலேறுதல், 'ஏறிய மடற்றிறம்' எனப் பெருந்திணைப் பாற்படும். இப்பாடல், ஐந்திணைப் பகுதியாதலின், தலைவன் மடலேறுவதாகக் கூறுதல் எனப் பொருள் கொள்ளப்பட்டது. மடலேறுவதைப் பாடியமையால் இப்பாடலாசிரியர், 'மடல் பாடிய' என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

சொற்பொருள் :

விளையல் – முற்றிய

Koviloor Digital Library

தார்	–	மாலை
தூது	–	தோழி (ஆகுபெயர்)
மடல்	–	மடலால் ஆகிய குதிரை (ஆகுபெயர்)
எள்ள	–	இகழ
கலிழ்தல்	–	ஒழுகுதல்

மேற்கோள் :

1. "தோழி, நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி
மடல் மா கூறும் இடனுமாருண்டே"
தொல்காப்பியம்,களவியல்,11

2. "பனைபடு கலிமாப்,
பூண்மணி கறங்க ஏறி, நாணட்டு" *குறுந்தொகை,173*

3. "காணுநர் எள்ளக் கலங்கி" *கலித்தொகை,139*

4. "மறுகின் ஆர்க்கவும் படுப" *குறுந்தொகை,17*

5. "அசைநடைக் கொடிச்சியை" *ஐங்குறுநூறு.258*

பொருள் முடிவு :

பேதை மெலிந்திலள், தூது, மா மடலுக்குத் தார் பூட்டி, நாம் என்பணிந்து, எள்ளத் தோன்றி, நாண் நீக்கித் தெருவில் இயலவும் தருவது கொல்.

Koviloor Digital Library

183. முல்லை

சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை, தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறி கோட்டு
இரலை மானையும் காண்பர்கொல், நமரே! –
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்
புன்புல வைப்பிற் கானத் தானே.

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஔவையார்

பொருள் :

தோழி, கார்ப்பருவத்தில், தாம் சென்ற நாட்டில் உளவாகிய கொன்றை மரத்தின் அழகிய செவ்வி மலர்கள், நம்மைப்போல் பசந்து காணப்படும். மழை பெய்வதற்குமுன் பொலிவிழந்து காணப்பட்ட காயாஞ் செடி, பூக்களோடு கூடிய பெரிய கொம்புகளுடன் மழை பெய்தபின் மயிலின் கழுத்தைப்போல் தோன்றும். அத்தகைய காட்டின் புல்லிய நிலப்பகுதியில், தன்னைப் போல தனித்த சிறிய தலையையுடைய பெண்மானின் நீங்கிய, நெறிந்த கொம்பினையுடைய ஆண்மானையும், நம் தலைவர் காண்பரோ? (காணார்)

விளக்கம் :

பொன்போலப் பூத்த கொன்றையின் மலர்கள், அம்மரம், கார்ப்பருவத்தில் தலைவன் வருகையை எண்ணிப் பசலை பூத்தது போலிருந்ததாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. கொன்றையாவது கார்ப்பருவத்தில் பசக்கும், தலைவியோ, தலைவனைப் பிரிந்த அன்றே பசந்தனள் என்பது, 'கொன்றை, பசக்கும்' என்ற தொடரால் உணர்த்தப்பட்டது. தன்போல எந்த ஒரு விலங்கும் தன் துணையைப் பிரிந்திருப்பதில்லை என்பது, இரலை, பிணையொடு கூடி மகிழும் வாழ்வினால் சுட்டப்பெறும். இரலை, பிணையைப் பிரிந்து தனித்திராது. அதுபோலத் தானும், தன்னுடைய காதலியைப் பிரிந்திருத்தல் இயலாது என்று தலைவன் உணர்ந்து கொள்ளுவான் எனத் தலைவி நினைந்தனள். கொன்றையும் காயாவும், தலைவன் வருவதாகக் குறித்த கார்காலத்தில் மலர்வன. அவை, தலைவற்கு, இல்லம் திரும்ப வேண்டும் என்ற

Koviloor Digital Library

அறிவினை நல்குவன. இரலை மான், பிணையொடு மகிழும் காட்சி, தலைவியொடு இப்பருவத்தில் கூடி உறைதல் வேண்டும் என்ற வேட்கையைத் தூண்டும்: இயற்கையின் இத்தகைய காட்சிகளும், நிகழ்வுகளும் தலைவனை வரச் செய்வன ஆதலின் அவை எண்ணித் தலைவி ஆற்றியிருந்தனள்.

சொற்பொருள் :

பிணை	–	பெண் மான் (பெண்பாற் பெயர்)
தீர்ந்த	–	நீங்கிய (உரிச்சொல்)
இரலை மான்	–	ஆண்மான்
எருத்து	–	கழுத்து
புன்புலம்	–	புன்செய்
காயா	–	காயாஞ்செடி, மரம்போல் வளர்வது
நமர்	–	நம் காதலர், தலைவர்

மேற்கோள் :

1. 'கொன்றை ஊழ்உறு மலரின்
   பாழ்பட முற்றிய பசலை" — அகநானூறு,398
2. "வன்பரற் தெள் அறல் பருகிய இரலை தன்
   இன்புறு துணையொடு மறுவந்து உகளத்
   தான் வந்தன்றே, தளிதரு தண்கார்" — குறுந்தொகை,65
3. "சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை" — புறநானூறு,2
4. "கரு நனைக் காயா, கணமயில் அவிழ" — சிறுபாணாற்றுப்படை,165

பொருள் முடிவு :

புன்புலத்தான், கொன்றையம் பசுவீ, பசக்குங்காலைப் பிணியில் தீர்ந்த, இரலை மானையும் நமர் காண்பர் கொல்.

Koviloor Digital Library

184. நெய்தல்

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை,
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே -
இதற்கு இது மாண்டது என்னாது, அதற்பட்டு,
ஆண்டு ஒழிந்தன்றே மாண்தகை நெஞ்சம் -
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண் வலைப் படூஉம் கான லானே.

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்

பொருள் :

மயில் பீலியில் காணப்படும் கண்ணைப்போன்ற, மாட்சிமைப்பட்ட கூந்தலையுடைய பாவைபோன்றவள், நுண்ணிய வலையையுடைய பரதவரின் மடமையுடைய மகள், ஆவள். அப் பரதவரின் சிற்றூருக்குச் செல்லும்போது, அவள் கண்களாகிய வலையில் அகப்படுகின்ற கிட்றகரைச் சோலை வழியாகச் செல்லுவதைத் தவிர்ப்பாயாக. ஏனெனில், என்னுடைய, மாட்சிமையால், தகுதிபெற்ற நெஞ்சம், இவ்வின்பத்தை விட நீ கூறும் பேரின்பமாகிய இது சிறந்தது என்று எண்ணாமல், என்னை நோக்கி வீசிய கண்வலையில் அக்ப்பட்டு, என்னிடம் மீளாமல், அக்கானலிலேயே தங்கிற்று. குணங்களால் அமைந்து விளங்கும் பெரியோர்களிடத்து, தாம் அறிந்த சான்றினை மறைத்துப் பொய்யாக்கி வேறு கூறும் இயல்பு இருப்பதில்லை.

விளக்கம் :

வலையையுடையார் மகள் ஆதலின், தலைவியின் கண்ணும் வலையாகவே உருவகம் செய்யப்பட்டது. பரதவர், கடலில் வலைவீசி மீன் பிடித்தல போல; தலைவி, கான்லில் கண்பார்வையால் தலைவன் நெஞ்சத்தை மயக்கியமை உணரப்படும். தலைவியின் கண்ணை வலையாகக் கூறியமையால், தலைவன் நெஞ்சம் மீனாகக் கொள்ளப்பட்டது.

பொய்த்தல் இல்லை, கரி பொய்த்தல் இல்லை, அறிகரி பொய்த்தல் இல்லை, அதுவும் ஆன்றோர்க்கு இல்லை எனப் பலவாறு விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. அந்தணனாகிய பாங்கனைத் தலைவன்

Koviloor Digital Library

சான்றோன் எனக்கூறி, தனக்கு அறிவுறுத்தும் அவனும் கானல் வழியாகச் செல்லுதலை நீக்குதல் வேண்டும் என்றான். அப்பாங்கனிடம். பல நல்லுரைகளைக் கேட்டு, மாட்சியில் சிறந்த போதிலும், தான் தலைவியின் கண்வலைப்பட்டமை கூறினான். சிறுமீனையும் தப்பாது அகப்படுத்தலான், 'நுண்வலைப்பரதவர்' என்றான். கொல்லிப்பாவை போலத் தன்னுள் எழுதிக் கொண்ட வடிவம் ஆதலின், 'பாவை' என்றான். தலைவியின் கூந்தலாகிய பாயலில் துயின்றமை கருதி, அவள் 'முடியை' நினைந்தான். பரதவரின் வலை, ஒன்றுமறியாத மீனை அகப்படுத்தும். ஆனால் தலைவியின் உள்ளமோ, மாட்சியும் தகுதியும் உடைய தன் நெஞ்சத்தையே அகப்படுத்தும் என அதனிடை வேறுபாடு குறித்தான்.

சொற்பொருள் :

கரி	–	சான்று
ஆன்றோர்க்கு	–	அறிவான் அமைந்தவர்கண் (உருபுமயக்கம்)
மடமகள்	–	கண்டார்க்கு மடமையைச் செய்யும் மகள்
சிறுகுடி	–	சிற்றூர்
இதற்கு இது	–	சிற்றின்பத்தை விடப் பேரின்பம்
முடி	–	கூந்தல்
கண் வலை	–	உருவகம்
பாவை	–	பாவை போன்றவள் (ஆகுபெயர்)
கானலான்	–	கானலின்கண்

மேற்கோள் :

1. "கடல் புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின்ஐயர்,
உடல் புக்கு கொன்று வாழ்வைமன் நீயும்"
சிலப்பதிகாரம் கானல்வரி,17

2. "நீர், கண்டனிர் ஆயின் கழறலிர்" அகநானூறு,130

3. "கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம்போல"
கலித்தொகை,34

4. "அறிகரி பொய்த்தலின் ஆகுமோ, அதுவே"
நற்றிணை,196

Koviloor Digital Library

நற்றிணை,196

5. "அறனிலாளன், 'அறியேன்' என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்!" *அகநானூறு,156*

6. "கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அம் சிறை விரிக்கும்" *ஐங்குறுநூறு,300*

7. "கலிமயில் கலாவத்தன்ன, இவள்
ஒலிமென் கூந்தலும் உரியவால் நினக்கே"
குறுந்தொகை,225

பொருள் முடிவு :

கானலான் நெஞ்சம் ஒழிந்தன்று, அறிகரி பொய்த்தல்
ஆன்றோர்க்கு இல்லை, குறுகல் ஓம்புமின்

Koviloor Digital Library

185. குறிஞ்சி

"நுதல் பசப்பு இவர்ந்து, திதலை வாடி,
நெடுமென் பணைத்தோள் சாஅய், தொடிநெகிழ்ந்து,
இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும்" எனச்
சொல்லின் எவன்ஆம் - தோழி! - பல்வரிப்
பாம்புபை அவிந்தது போலக் கூம்பி,
கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்
கல்மிசைக் கவியும் நாடற்கு, என்
நல்மா மேனி அழிபடர் நிலையே?

தலைமகன் இராவந்து ஒழுகாநின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை, 'வேறுபட்டாயால்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

பொருள் :

உடலில் வரிசையான பல கோடுகளைக் கொண்ட பாம்பினது படம் ஒடுங்கியது போலக் குவிந்து, கீழ்க்காற்றால் வீழ்த்தப்பட்ட, ஒள்ளிய சிவந்த காந்தள்மலர்கள், பாறையின் மேல் கவிழ்ந்து வீழ்ந்து கிடக்கும். இத்தகைய நாட்டின் தலைவனுக்கு, என்னுடைய நல்ல, மாமை நிறமுடைய மேனியின் மிக்க துயரத்தையுடைய நிலையை, நெற்றியில் பசலை பரந்து, அல்குலின் திதலை ஒளி இழந்து, நெடிய மெல்லிய மூங்கில்போன்ற தோள்கள் மெலிந்து, வளைகள் நெகிழப்பெற்று வேறுபாட்டை உடையளாகுதல் நும்மால் ஆயிற்று எனக் கூறினால் என்ன குற்றம் உளதாகும்?

விளக்கம் :

கொண்டல்காற்றினால் வீழ்த்தப்பட்ட காந்தள், பாறையில் விழுந்து அழகிழந்து காணப்படுதல், ஊரார் அலர் உரைப்பர் எனக் கருதி மெலிந்து இல்லத்தில் கிடக்கும் தலைவியைக் குறிப்பதாகும். பாறையில் வீழ்ந்து கிடக்கும் காந்தள் மலர், பாம்பின் பையெனக் காட்டி மருட்டி, இரவுக்குறியில் வரும் தலைவனுக்கு ஏதம் செய்தல் குறித்தது.

நுதலில் பசலை தோன்றலும், அல்குலில் திதலை வாடலும், தோள், வளை நெகிழும் வண்ணம் நெகிழ்தலும், தலைவியின் மேனியின் மாமை அழகு அழிந்து வேறுபட்டதை உணர்த்தும். இவ் வேறுபாடு, தலைவனால் விளைந்தது, என அவனிடம் தன்னால்

Koviloor Digital Library

கூற இயலாமையால், தலைவி, தோழியை உரைக்குமாறு வேண்டினள். அவ்வாறு உரைப்பதால் பழியாதும் வாராது என்றனள். உரையாமையே குற்றம் எனவும்; உரைத்தல், தலைவிக்குத் துணை புரிவதாகுமேயன்றிக் குற்றமாகாது எனவும் உணர்த்தினாள். உரைத்தால் தலைவன் அறிந்து வரைந்து கொள்ள முயலுவான் ஆதலின், 'சொல்லின் எவனாம்' எனத் தோழியைத் தலைவி வேண்டிக் கொண்டாள்.

பசப்பு இவர்தலும், திதலை வாடுதலும், தோள் மெலிதலும், மேனி படர் உறுதலும், இரவுக் குறிக்கண் இன்பம் துய்க்கவரும் தலைவனால் கண்டு அறியப்படாமையின் அவற்றைத் தலைவனிடம் 'சொல்லின் எவன் ஆம்' எனத் தலைவி, தோழியை வேண்டினாள்.

சொற்பொருள் :

திதலை	–	தேமல், அல்குலில் தோன்றும் கோடுகள்
இவர்ந்து	–	படர்ந்து
சாஅய்	–	மெலிந்து
கொண்டல்	–	கீழ்க்காற்று

மேற்கோள் :

1. "துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழி" குறுந்தொகை,98

2. "பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று என் தடமென்தோளே"
குறுந்தொகை,87

3. "சொல்லின் எவனோ பாண" அகநானூறு,50

பொருள்முடிவு :

தோழி, நாடற்கு, என்மேனி நிலையை. இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும் எனச் சொல்லின் எவன் ஆம்?

Koviloor Digital Library

186. முல்லை

ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகையும் நாடற்குத்
துயில் துறந்தனவால் – தோழி! – எம் கண்ணே.

பருவ வரவின்கண், 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஒக்கூர் மாசாத்தி

பொருள் :

நிறைந்த ஓசையையுடைய இடியேற்றினோடு மேகம் மழைபெய்து கலத்தலையுடைய காடுகளின், புனங்களில் உள்ள, முல்லையாகிய மெல்லிய கொடிகள் முறுவலிக்கும் பற்களைப் போல் அரும்பும். இதனால் நாடன் பொருட்டு, என்கண்கள் உறக்கத்தை ஒழிந்தன.

விளக்கம் :

தலைவன், முல்லையரும்பும் கார்ப்பருவத்தில் வருவதாகக் கூறித் தலைவியைப் பிரிந்து சென்றான். கார்ப்பருவம் வந்தது. காடுகளில் உள்ள புனங்களில் முல்லையில் அரும்புகள் தோன்றின. மாலையும் வந்தது. ஆனால் காதலர் வந்திலர். முல்லை, அரும்பு முதிர்ந்து மலர்ந்த இரவிலும் வாராமையால், அவள் ஆற்றாமை மிகுந்தது. இரவு முழுவதும், அவன் வருகைக்காகக் காந்திருந்தாள். அதனால் அவள் கண்கள் உறக்கம் இழந்தன. கார்ப்பருவத்து மாலை வந்தும் அவர் வாராமையால் தனித்திருக்கும் தன்னை நோக்கி, முல்லை நகுவதாகத் தலைவி கருதினள். உ.வே.சாமிநாதையர், 'முகைக்கும்' என்ற பாடத்தை ஏற்று எச்சமாகக் கொண்டு உரை வகுத்துள்ளார். முல்லை, முறுவலிக்கும் பற்களைப் போல் முகிழ்த்தமை, தலைவன் வினைமுடித்தல்லது வாரான் என்ற குறிப்பினை உணர்த்துவதாகும்.

சொற்பொருள் :

ஆர்கலி	–	மிக்க ஓசை
ஏறு	–	இடியேறு
முகையும்	–	அரும்பும்
கொல்லை	–	பயிரின்றித் தரிசாய்க் கிடக்கும் நிலம்

Koviloor Digital Library

புனம் – பயிர் செய்யப்பட்ட நிலம்

தலை மணந்த – கலந்த

மேற்கோள் :

1. "முல்லை, நீ நின்,
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை,
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே"

குறுந்தொகை,162

2. "முழவு அதிர்ந்தன்ன முழக்கத்து ஏறொடு
உரவுப்பெயல் ஒழிந்த நள்ளென் யாமத்து"

அகநானூறு,328

3. "பாசிலை முல்லை முகைக்கும்" *புறநானூறு,117*

4. "பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறாக
நகுமே தோழி நறுந்தண் காரே" *குறுந்தொகை,126*

பொருள்முடிவு :

தோழி. என்கண் நாடற்குத் துயில் துறந்தன.

Koviloor Digital Library

187. குறிஞ்சி

செவ் வரைச் சேக்கை வருடைமான் மறி
சுரை பொழி தீம்பால் ஆர மாந்தி,
பெருவரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன் – தோழி! –
வலியன் என்னாது மெலியும் என் நெஞ்சே.

வரைவு நீட்டித்தவழி, ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கபிலர்

பொருள் :

தோழி. செவ்விதாக உயர்ந்து விளங்கும் மலைப் பக்கத்தில் தங்குதலையுடைய வருடைமானின் குட்டி, தன் தாயின் மடிபொழிந்த இனிய பாலை, வயிறு நிறையக் குடித்து, பெரிய மலைப்பக்கத்தில் உள்ள நிழலில் துள்ளி விளையாடும். இத்தகைய நாட்டின் தலைவன், கல்லைக் காட்டினும் வலியவன் என்று நினையாமல், என்னுடைய நெஞ்சம், அவன் திறத்து மெலிவடைவதாயிற்று.

விளக்கம் :

தோழி, தலைவன் பொருள் முற்றிவாராமையால், பொருள் பெற்றிலன் எனவும், தலைவியை நினைத்து வாராமையால் அன்பிலன் எனவும் அவன் இயல்புகளைப் பழித்துக் கூறியவழி, தலைவி, அவனைச் சிறப்பித்துக் கூறுதல் இப்பாடலின் நோக்கமாகும். தலைவன் வலியன் ஆதலால் பொருள் பெற்றல்லது திரும்பான் எனவும், தன் நாட்டில் வருடைமானின் அன்போடு இயைந்த வாழ்க்கையைக் கண்டு தன்னை நாடி வருவான் எனவும் தலைவி நினைந்தனள். அவன் கல்லினும் வலியன் என அறியாது மெலியும் தானே அறியாமையுடையவள் எனக் கருதித் தலைவன் திறத்துக் குற்றமின்மை நினைந்தாள்.

வருடையின் கன்று, பாலை நிறையக் குடித்து, மலையின் நிழலில் துயில்வதுபோலத் தலைவனும், பொருள் மிகுதியாகப் பெற்று தன்னுடன் இல்லறம் நிகழ்த்துவான் எனத் தோழிக்கு உணர்த்தினாள். தலைவியைக் காண்பதற்காகப் பன்னாளும் மழைபொழியும் இரவுப் பொழுதில், புலியானை முதலிய விலங்குகளுக்கு அஞ்சாது, அரவின் பைந்தலை இடறிக் கான்யாறுகள் பல கடந்து வந்த வலிமை தோன்ற அவனை, 'வலியன்' என்றாள். பிரிந்து விரைவின் வாராமையின் தலைவனைக் கல்லினும் வலியன் என இகழ்ந்த தோழிக்கு. அவ்வாறு

Koviloor Digital Library

இலன் என உணர்த்தியதாகவும் இப்பாடல் பொருள் கொள்ளப்படும்.

'செவ்வரைச் செச்சை' எனப் பாடம் கொண்டு, ரா.இராகவையங்கார், 'சிவந்த அடிப் பகுதியினையுடைய வெட்சியின் கீழ் உள்ள வருடை மானொடு கூடிய பெண்மான் மடிபொழிந்த பாலைக் கன்று உண்டு மலைநிழலில் விளையாடும்', என உரை விளக்கம் தந்துள்ளார். வருடை, அவ்வினத்தின் ஆண் இனம் என்றும், மறி, அதன் பெண் இனம் என்றும் அவர் விளக்குவர். ஆணும் பெண்ணும், கன்றுமாய் வாழும் மலைப்பகுதி என்பதால், அத்தகைய அன்புடைய வாழ்க்கையைத் தான் பெறாமை நினைந்தனள்.

சொற்பொருள் :

வரை – மலை

சேக்கை – தங்கும் இடம்

வருடை – எண்கால் விலங்கு, முதுகில் நான்கு கால்களுடன் இருந்ததாகக் கூறப்படும் மானின் ஒருவகை.

மறி – குட்டி (இளமைப் பெயர்)

சுரை – மடி, முலைக்காம்பு

உகளும் – துள்ளி விளையாடும்

மேற்கோள் :

1. "நெடுவரை மிசையது, குறுங்கால் வருடை"
ஐங்குறுநூறு,287

2. "மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்தலை மாத்தகர்"
மலைபடுகடாம்,502–3

3. "வரைபாடு வருடை தோற்றம் போல"
பட்டினப்பாலை,139

4. "மறிஇடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன்ஆக நன்றும்
இனிது மன்ற, அவர் கிடக்கை" ஐங்குறுநூறு,401

5. "வாரா வன்கணாளன்" நற்றிணை,89

பொருள் முடிவு :

தோழி, நாடன் வலியன் என் நெஞ்சு மெலியும்.

Koviloor Digital Library

188. முல்லை

முகை முற்றினவே முல்லை; முல்லையொடு
தகை முற்றினவே, தண்கார் வியன்புனம் -
வால் இழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்று, என் மாண் நலம் குறித்தே

பருவம் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

பொருள் :

முல்லைக் கொடிகளில் தோன்றிய அரும்புகள் போதாய் முதிர்ந்தன. அம் முல்லைக் கொடிகளோடு, தண்ணிய கார்ப் பருவத்தினை ஏற்ற, அகன்ற முல்லை நிலங்கள் அழகு முதிர்ந்தன. என்னுடைய மாட்சிமை பொருந்திய அழகினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டு, மாலைக்காலம் வந்தது. என்னைப் பிரிந்து, என் தூய அணிகலன்களை நெகிழச் செய்த காதலர் இன்னும் வந்திலர்.

விளக்கம் :

தலைவன் வருவதாகக் கூறித் தெளிவித்த கார்ப்பருவமும், அப்பருவத்து மாலைப்பொழுதும் வந்தன. காரும், மாலையும் தனித்திருப்போர்க்கு ஆற்றாமையை மிகுவிப்பன. மாலைக்காலம், தன்னுடைய அழகினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டு வந்தது என்றும், பொருள் குறித்துச் சென்ற தன் காதலர், அப்பொருளினும் மேலாகத் துய்த்தற்குரிய தன் இனிய நலத்தினைக் காத்தல் செய்திலர் எனவும் தலைவி கவன்றனள். தலைவன் பிரிவினால் அழிந்த தன் நலத்தைக் கண்டு செல்வதற்காக மாலை வந்தது எனக் கருதினாள் என்றும் பொருள் கொள்ளப்படும்.

இப்பாடல், மாட்டின்றி வந்த செய்யுளாகும். முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களும் இப்பாட்டில் அமைந்துள்ளன.

சொற்பொருள் :

முகை	–	அரும்பு
தகை	–	அழகு
கார்	–	கார்காலம் (ஆகுபெயர்)
நெகிழ்த்தோர்	–	தலைவர்
குறித்து	–	கெடுத்தலைக் குறித்து (அவாய் நிலை)

Koviloor Digital Library

மேற்கோள் :

1. "உவக்காண், தோன்றும் குறும்பொறை நாடன்,
.... ஆய்தொடி அரிவை மாண்நலம் படர்ந்தே"
அகநானூறு,4

2. "கார் கலந்தன்றால் புறவே, பலவுடன்
ஏர் பரந்தனவால் புனமே" ஐங்குறுநூறு,417

3. "விறல் இழை நெகிழ்த்த வீவு அருங்கடுநோய்"
குறிஞ்சிப்பாட்டு,3

4. "புனை இழை நெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு"
நற்றிணை,348

5. "பொழுதோ தான் வந்தன்று ...
தேர்வரும் என்னும் உரை வாராதே" குறுந்தொகை,155

பொருள் முடிவு :

முல்லை, முகை முற்றின, புனம், தகை முற்றின, மாலை

வந்தன்று, இழை நெகிழ்த்தோர் வாரார்.

Koviloor Digital Library

189. பாலை

இன்றே சென்று வருதும், நாளைக்
குன்றுஇழி அருவியின் வெண்தேர் முடுக,
இளம்பிறை அன்ன விளங்கு சுடர்நேமி
விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்ப,
கால்இயல் செலவின், மாலை எய்தி,
சில்நிரை வால்வளைக் குறுமகள்
பல்மாண் ஆகம் மணந்து உவக்குவமே.

வினை தலைவைக்கப்பட்ட இடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்தது.

மதுரை ஈழத்துப் பூதன் தேவன்

பொருள் :

பாகனே. இன்று வினைமேற் சென்று, நாளை வினைமுடித்து மீண்டு வருவேமாக. குன்றிலிருந்து விழும் அருவியைப் போல வெண் பொன் தகடுகளால் பதிக்கப் பெற்ற வெள்ளிய தேர், விரைந்து செல்லவும், இளம்பிறையைப் போன்ற அதன் சக்கரங்கள் வானத்திலிருந்து வீழும் கொள்ளியைப் போல பசிய பயிர்களைத் துணிப்பவும், காற்றைப் போன்ற இயல்புடைய வேகத்தினால், மாலைக் காலத்தில் தலைவி இருக்கும் இடத்தை அடைவேம். சிலவாக நிரைத்த வெள்ளிய வளையல்களை அணிந்த அவளுடைய, மாண்பு பலவும் பெறுதற்குரிய மார்பினைத் தழுவி மகிழ்ச்சியடைவோமாக.

விளக்கம் :

தலைவனின் தேர், விரைந்து செல்வதற்கு ஏற்ப, வெண்பொன் தகடு பதித்து இயற்றப்பட்டமையின், 'வெண் தேர்' எனப்பட்டது. யானைத் தந்தத்தினால் வெள்ளிதாக இயற்றப்பட்ட தேர் என்பதும் பொருந்தும், தேரின் சக்கரங்கள், நிலத்தில் செல்லுங்கால், அவற்றின் புதைந்த பகுதிபோக, எஞ்சிய பகுதி பிறைத்திங்கள் போல தோன்றும், அன்றியும் பிறையின் முழுவடிவம், மெல்லிய கோடாக வட்டமாய்த் தோன்றுதல், தேர்ச்சக்கரத்தின் புறத்தே சுற்றப்பட்ட, இரும்புப் பட்டத்திற்கு உவமமாகவும் கொள்ளப்படும். மேகத்திடைச் செல்லும் பிறையின் செலவு போல, கானத்திடைத் தேரின் சக்கரம் செல்வதாகவும் உவமம் கொள்ளப்படும். இவ்வுவமை, வண்ணம், வடிவு, வினை ஆகிய மூன்றும் விரவி வந்ததாகும். தேரின் செலவு, குன்றிடைக் குதித்து வீழும் அருவி போல் விரைவு குறித்து உவமிக்கப்பட்டது. பயிர்கள்,

Koviloor Digital Library

தேர்ச்சக்கரம் பட்டுச் சிதறுதல், விசும்பிலிருந்து வீழும் கொள்ளிகள் போல் பலவாகத் தோற்றமளித்தன.

காட்சி இனிமை, ஊற்றினிமை, மணம் ஆகிய பல மாட்சிமைப்பட்ட மார்பு ஆதலின், 'பன் மாண் ஆகம்' என்றான். ஆகம், பன்மாண் மணந்து உவக்குவம் எனக் கொண்டு கூட்டி, ஆகத்தைப் பலமுறை தழுவி மகிழ்வோம் என்று கூறியதாகவும் பொருள் கொள்ளப்படும். தலைவன் பிரிவால், பல வளைகள் கழன்றமையால், தலைவி சிலவளையுடையவளாய் விளங்கினாள்.

ரா.இராகவையங்கார், தலைவன் இன்று போய் இரவில் தங்கி, நாளை வருவான் என்ற பொருளை ஏற்க மறுப்பர். அவர், இங்கு நின்றும் அங்குத் தங்கி மாலையில் மீண்டு வருதல் என்பது இல்லை எனப் பொருள் கொண்டார். 'இன்று' என்ற சொல்லை, அவர், இன்மைப் பொருளாகக் கொண்டார். இப்பொருட்கு ஏற்ப, அவர், 'காலையில் செலீஇ' என்ற பாடத்தைக் கொண்டார். தலைவியை ஓரிராப் பொழுதும் பிரிந்திருக்கப் பொறாது கூறினான் என்பதே பொருத்தமாகும் என அவர் கருதுவர்.

சொற்பொருள் :

வருவது	–	வருவேமாக (வியங்கோள் வினை)
நேமி	–	சக்கரம்
துமிப்ப	–	துணிபப
வளை	–	சங்கு (வளையல் – ஆகுபெயர்)
பன் மாண் ஆகம்	–	மாண்பு பலவும் பெறுதற்குரிய ஆகம்

மேற்கோள் :

1. "நெட்டாறு சேறலின்றி அணிமைக்கண் பிரியும் பிரிவு"

தொல்காப்பியம்,களவியல்,17இளம்பூரணர்

2. "இழையணி நெடுந்தேர் ஆழி உறுப்ப,
நுண்கொடி மின்னின் பைம்பயிர் துமிய"

அகநானூறு,254

3. "நல்எழில் நெடுந்தேர் இயவு வந்தன்ன
கல்யாறு ஒலிக்கும் விடர்முழங்கு இரங்கிசை"

மலைபடுகடாம்,323–4

Koviloor Digital Library

4. "கற்பால் அருவியின் ஒலிக்கும் நற்றேர்" அகநானூறு,184

5. "பொலம்படைப் பொலிந்த வெண்தேர்"
குறுந்தொகை,205

6. "கால் உறழ் கடுந் திண்தேர்" கலித்தொகை,33

பொருள் முடிவு :

இன்றே சென்று நாளை வருவது. தேர் முடுக, நேமி துமிப்ப, மாலை எய்திக் குறுமகள் ஆகம் மணந்து உவக்குவம்.

Koviloor Digital Library

190. முல்லை

நெறி இருங் கதுப்பொடு பெருந்தோள் நீவி,
செறிவளை நெகிழ, செய்பொருட்கு அகன்றோர்
அறிவர் கொல் வாழி - தோழி! - பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
நரை உரும் உரறும் அரை இருள் நடுநாள்,
நல்ஏறு இயங்குதொறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பூதம்புல்லன்

பொருள் :

தோழி. நெறிப்பினையுடைய கரிய கூந்தலொடு, பெரிய தோள்களைத் தழுவித் தலைவன் தலையளிசெய்தமையால், இறுகச் செறிந்த வளைகள் நெகிழும்படி, தாம் ஈட்டும் பொருளின் பொருட்டு அவர் என்னைப் பிரிந்து சென்றனர். புள்ளிகளையும், வரிசையான கோடுகளையும், மிக்க சினத்தையும் உடைய பாம்புகளின் பையையுடைய படம், துண்டுபடும்படி வலியையுடைய இடியேறு முழங்குகின்ற பாதிஇரவில், பல பசுக்கள் உள்ள தொழுவத்தின்கண், அவற்றிற்கு நன்மையைத் தரும் ஆனேறு இயங்குந்தோறும், ஒலிக்கின்ற அதன் கழுத்தில் கட்டப்பட்ட ஒற்றை மணியின் குரலை அறிவாரோ?

விளக்கம் :

தலைவன், தலைவியின் கூந்தலும், தோளும் நீவித் தலையளி செய்தமை, பிரிதற்குறிப்புடையது என வளையல்கள் அறிந்து நெகிழ்ந்தன. ஒருமணி, ஆனேற்றின் கழுத்தில் கட்டப்பட்டது. அதன் ஒலி, பசுக்களோடு இன்புற்றிருப்பதை உணர்த்தும். தலைவி, அக்குரல் கேட்டு, அப்பசுக்கள் பெற்ற பேறும் யான் பெற்றிலேன் என வருந்துவதாயினள். இதனால் தலைவி யாமத்தும் துயிலாமை பெறப்பட்டது. அவ் ஒரு மணிக்குரல் அடங்குவதாயின், தொழுவத்தில் உள்ள பல பசுக்களின் கதறும் இன்னா ஒலியே யாண்டும் கேட்கப்படும். ஏறு தனியே அகன்ற வழி, இளநாகு முழுவதும் கண்ணீர் வடித்து வருந்துவன என்பதைக் காப்பியக் கதை நிகழ்ச்சிக்கு ஏற்ப திருத்தக்க தேவர் எடுத்துக்காட்டுவர் (சீவகசிந்தாமணி,1314.). தலைவியின் கதுப்பும், தோளும் கூறியது அவற்றால் தலைவன் பெற்ற இன்பத்தைக்

Koviloor Digital Library

கருதியதாகும். பொருள் பொருட்டு அகன்றவர் பொருளை நினைப்பாரே யன்றி, ஆனேற்றின் மணிஓசையை எங்ஙனம் அறிவர் எனத் தலைவி வருந்தினள்.

சொற்பொருள் :

கதுப்பு	–	கூந்தல்
பைந்தலை	–	பையையுடைய தலை, பைத்தலை, மெலித்தல் விகாரம்
உருமு	–	இடியேறு

மேற்கோள் :

1. "நெறி இருங்கதுப்பின் என் பேதை" — அகநானூறு,35
2. "பொம்மல் ஓதி, நீவியோனே" — குறுந்தொகை,379
3. "நெறி இருங்கதுப்பும், நீண்ட தோளும்" — நற்றிணை,389
4. "உருமுச் சிவந்து எறிந்த உரன் அழி பாம்பின்" — அகநானூறு,323
6. "பானாள், உத்தி அரவின், பைத்தலை துமிய
உரவு உருமு உரறும்" — அகநானூறு,202
7. "ஆன் நுளம்பு உலம்புதொறும் உளம்பும்
நா நவில் கொடுமணி நல்கூர் குரலே" — குறுந்தொகை,86
8. "தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை" — திருக்குறள்,1277

பொருள் முடிவு :

தோழி. அகன்றோர் நடுநாள் ஏறு இயங்குதோறு இயம்பும் மணிக்குரலை அறிவர் கொல்?

Koviloor Digital Library

191. முல்லை

உதுக்காண் அதுவே, இது என மொழிகோ? -
நோன்பினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம் புணர்ந்தமையின், பிரிந்தோர் உள்ளத்
தீம்குரல் அகவைக் கேட்டும், நீங்கிய
ஏதிலாளர் இவண் வரின், 'போதின்
பொம்மல் ஓதியும் புனையல்;
எம்மும் தொடாஅல் என்குவெம் மன்னே.

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

பொருள் :

இதனை என்னவென்று கூறுவேன்! தம்மைத் தாங்கக் கூடிய வலிய மரக்கிளைகளில் அமர்ந்திருந்த பெரிய தொகுதியையுடைய பறவையின் கூட்டங்கள், தாம் தம் துணையொடு புணர்ந்து வாழ்தலால், பிரிந்தோர் தம் துணையை நினையும் வண்ணம், இனிய குரலால் தம்முள் அழைக்கும். அதனை, நம்மைப் பிரிந்து சென்ற அயன்மையையுடைய தலைவர் கேட்டு, இங்கே வரின், அவரைப் பெருமையுடைய எம் கூந்தலைப் போதுகளால் புனைய வருதலை ஒழிக என்றும், எம்மையும் தொடுதலை ஒழிக என்றும் கூறுவேம். அங்ஙனம், யான் செய்வதனை, நீ உவ்விடத்துக் காண்பாயாக.

விளக்கம் :

'பிரிந்தோர் உள்ளாத் தீங்குரல்' என்ற பாடத்திற்குப் பறவைகள், காதலியைப் பிரிந்தோரைப் பற்றி எண்ணாதனவாய் அழைக்கும் குரல் எனப் பொருள் விளக்கப்படும். பறவைகள், துணையுடன் கூடி மகிழும் ஒலி கேட்டும் பிரிந்தவர், எனப் பொருள் கோடல் யாண்டும் இல்லாத வழக்காகும்.

பறவைகள், தம் இனத்துடன் கூடிய அகவும் ஒலி கேட்பதற்கு முன்னரே வந்திருந்தால், அவர் நம்பால் அன்புடையர் என்பது பொருந்தும் என்றும், அவ்வாறு அவர் வாராமல், அகவும் ஒலி கேட்டபின்னரே வருவராயின் நம்மால் புலத்தற்கு உரியவர் என்றும் தலைவி கூறினள். தலைவன், பிரிவிற்கு முன்னர் பொய்யாகத் தொட்டு சூளுற்றமையை நினைந்து, 'புனையல், தொடாஅல்' என்றனள். தாம் தம் இனத்துடன் இன்பம் நுகர்ந்து இனிது வாழ்தலான், அவ்வாறு வாழாது தனித்திருப்போர் மேல் பரிவு கொண்டு பறவைகள், இடித்துக்

Koviloor Digital Library

கூறுவனபோல் அகவின என்ற குறிப்பும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

தம் உள்ளத்தெழுந்த சினம் காரணமாக, 'ஏதிலாளர்' எனப் பன்மையில் கூறிய தலைவி, அவளைப் புனையல், தொடாஅல் என ஒருமையில் கூறலாயினள். தலைவனைக் காணாத வழிப் புலந்த தலைவி, அவனைக் கண்டவழி, புலவி தீர்ந்து எதிர்கொள்வாள் ஆதலின், தலைவி கூற்று, பொருளற்ற கூற்றாகக் கொள்ளப்படும்.

பரத்தையர் கூந்தலைப் புனைந்த கையால் எம் கூந்தலைப் புனையல் எனவும், அவர்கள் உடலைத் தீண்டிய கையால் எம்மைத் தொடாஅல் எனவும் தலைவி ஊடி உரைத்ததாகவும் இப்பாடல், விளக்கப் பெறும். பரத்தையர் இல்லில் சென்று, அவர் கூந்தலைப் புனைக, அவர் மேனியைத் தொடுக எனப் புலந்தனள். இப்பாடல் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

சொற்பொருள் :

நோன்	–	வலிய
தோடு	–	தொகுதி
புள்ளினம்	–	இனமாகிய பறவை
ஏதிலாளர்	–	அயன்மையுடையார், தலைவர்
பொம்மல்	–	பெருமை
மொழிகு	–	செய்கு என்ற வினைமுற்று

மேற்கோள் :

1. "விரிகாஞ்சித் தாதாடி இருங்குயில் விளிப்பவும்
   பிரிவஞ்சாதவர் தீமை" கலித்தொகை,34
2. "ஏதிலாளர்க்குப் பசந்த என் கண்ணே"
   ஐங்குறுநூறு,34
3. "வார்உறு வணர்கதுப்பு உளரிப் புறஞ்சேர்பு
   அழாஅல் என்றுநம் அழுதகண் துடைத்தவர்"
   குறுந்தொகை,82
4. "கைபறத் துறப்போர் கழறுவ போல" நற்றிணை,242
5. "பனிவார் கண்ணள் பலபுலந்து உறையும்
   ஆய்தொடி அரிவை கூந்தல்

Koviloor Digital Library

போது குரல் அணிய வேய்தந்தோயே" *அகநானூறு,104*

6. "புணர்குயில் விளித்தொறும்
நம்வயின் இனைபும் நெஞ்சமொடு, கைம்மிகக்
கேட்டொறும் கலிழுமால்"

நற்றிணை,157

பொருள் முடிவு :

இது என் மொழிகு, கேட்டும் நீங்கிய ஏதிலாளர் வரின், ஓதியும் புனையல், தொடாஅல் என்குவம் அது உவக்காண்.

Koviloor Digital Library

192. பாலை

'ஈங்கே வருவர், இனையல், அவர்' என,
அழாஅற்கோ இனியே? - நோய் நொந்து உறைவி! -
மின்னின் தூவி இருங்குயில், பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப, மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்,
வறுங்குரல் கூந்தல் தைவருவேனே

பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிர் அழிந்து கிழத்தி உரைத்தது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்

பொருள் :

என் நோய்க்கு வருந்தி, என்னுடன் தங்குதலையுடைய தோழியே. தலைவர், இவ்விடத்தே மீண்டு வருவார், வருந்தற்க என நீ சொல்வதனால் அழாமல் இருப்பேனா? கரிய குயிலின் கண்ணுக்கு இனிய மின்னும் சிறகுகள், பொன்னின் உரைத்த துகள் விளங்கும் உரைகல்லைப் போல, மாமரத்தின் அரும்பிலுள்ள நறிய மகரந்தங்களைக் கொழுதுவதால், காட்சிதரும். இத்தகைய இளவேனிற் பருவத்தும் அவர் வாராமையால், புனையப் பெறாத, வறிய கொத்தாக விளங்கும் கூந்தலைத் தைவருவேனாயினேன்.

விளக்கம் :

மாப் பூத்தற்கு முன் வருவதாகக் கூறிச் சென்ற தலைவர், குயில், மாவின் தாது கொழுதும் காலத்திலும் வந்திலரே எனத் தலைவி கவன்றனள். தலைவன் இல்லாதவழிக் கூந்தலைப் புனைதல் இல்லையாதலால் 'வறுங் குரல் கூந்தல்' என்றாள். தன் காதலன் நேரில் வந்து, 'அழேல்' எனக் கூறினால், அழாமல் இருப்பேன் என்றும், தோழியாகிய நீ அவ்வாறு கூறினால், யான் யாங்ஙனம் அழாது அமைதல் கூடும் என்றும் கூறினள். தலைவன் வருகையை உரைத்துத் தோழி, கூந்தலைத் திருத்துமாறு தலைவியை வேண்டிய வழி, அவள் சொல் கேட்டுத் தன் கூந்தலைத் தைவந்தனள். கூந்தல் பாயலில், தலைவனால் தைவரப்பெறற்குஉரிய கூந்தல், அவன் வாராமையால் தன்னால் தைவரப் பெறுவதாயிற்று என வருந்தினள்.

மாம்பூவின் மகரந்தம், பொன்துகள் போலவும், குயிலின் சிறகு, உரைகல்லைப் போலவும் காணப்படும். குயில், மாம்பூக்களைக் கொழுதும் காலம், தலைவன் வருவதாக உரைத்த இளவேனில் எனச் சுட்டப்பெற்றது.

Koviloor Digital Library

இளவேனிலில், குயிலும் மாமரத்தைச் சார்ந்து அழகுபெறும். ஆனால், யான் தலைவரைச் சார்ந்து அழகு பெறுவதற்கு மாறாக, வறுங் கூந்தலைத் தைவருவேன் எனத் தலைவி நினைந்தனள்.

சொற்பொருள் :

இனையல்	–	வருந்தற்க
அழாஅற்கோ	–	அழாது அமைவேனோ
நோய் நொந்து	–	நோய்க்கு வருந்தி
உறைவி	–	உறை என்னும் வினையடிப் பிறந்த பெயர்
தூவி	–	சிறகு
உரை	–	துகள் (ஆகுபெயர்)
கட்டளை	–	உரைகல்
கடுப்ப	–	போல (உவம உருபு)
பொழுது	–	இளவேனில்
வறுங்குரல்	–	வறுவிய கூந்தல்

மேற்கோள் :

1. "அழுகு என்னும் உடன்பாட்டிற்கு அழாற்கு எதிர்மறை"
தொல்காப்பியம், வினையியல்,6 நச்சினார்க்கினியர்

2. "கங்குல் உயவுத் துணையாகிய துஞ்சாது உறைவி"
அகநானூறு,298

3. "நறுந்தாது ஆடிய தும்பி, பசுங்கேழ்ப்
பொன்உரை கல்லின் நிறம் பெறூஉம்"
நற்றிணை,25

4. "பொன் காண் கட்டளை கடுப்ப" பெரும்பாணாற்றுப்படை,200

5. "தாது உகப் பொன்உரை கட்டளை கடுப்ப"
அகநானூறு,178

6. "மாநனை கொழுதி, மகிழ்குயில் ஆலும்" நற்றிணை,9

பொருள் முடிவு :

நோய் நொந்து உறைவி, இனையல். அழாஅற்கோ, வறுங்குரல் கூந்தல் தைவருவேனே.

Koviloor Digital Library

193. முல்லை

மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை,
தட்டைப் பறையின், கறங்கும் நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன்மன் எம் தோளே;
இன்றும், முல்லை முகை நாறும்மே.

தோழி கடிநகர் புக்கு, 'நலம் தொலையாமே நன்கு ஆற்றினாய்!' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

அரிசில் கிழார்

பொருள் :

கள்ளைப் பெய்த, நீலமணியைப் போன்ற நிறமுடைய கலத்தைப் போல, சிறிய வாய்ப்பகுதியையுடைய சுனையின்கண் உளவாகிய பிளந்த வாயினையுடைய தேரைகள், கரடிகை எனும் பறையைப்போல ஒலிக்கும். இத்தகைய நாட்டின் தலைவன், களவுக்காலத்தில், சென்ற திங்களில், நீண்ட பொழுது விளங்கும் முழுநிலா நாளில் என்னுடைய நெடிய தோள்களைத் தழுவினான். அதனால் இன்றும், அவன் சூடிவந்த முல்லையின் மணத்தை என் தோள்கள் வீசாநிற்கும்.

விளக்கம் :

தலைவன், களவுக்காலத்தில் செய்த இன்னருள், இன்றும் மாறாமல் உள்ளது எனத் தலைவி, தோழியிடம் கூறினள். சுனையின் சிறிய வாய்ப்பகுதி, கள் ஊற்றிவைக்கப்பட்ட கலம் போன்றதாகக் கூறப்பட்டுள்ளது. சுனையில் அடைந்து கிடக்கும் தேரைகள், தடடைப் பறைபோல ஒலிஎழுப்பித் தன் இருப்பிடத்தைப் பிறர்க்கு உணர்த்தின. அதுபோலத் தலைவன் தலைவியை, இரவுக்குறியில், நெடுவெண் நிலவில் மணந்தமை பலராலும் அறியப்பட்டு, அலர் உரைக்க ஏதுவாயிற்று. அவ்வலரே, அவன் தலைவியை மணம் முடிக்கவும் காரணமாயிற்று, தலைவன், சென்ற திங்களில் தலைவியை மணந்தானாயினும், அவன் சூடிவந்த முல்லையின் மணம், இன்னும் தன் தோள்களில் வீசுவதாகத் தலைவி கூறுதல், தலைவனின் அன்பு மாறாத பண்பினை விளக்குவதாகும். அம்முல்லையின் மணத்தை இன்றும் நினைத்து மகிழ்ந்து வாழ்வதாகத் தலைவி குறித்தனள்.

Koviloor Digital Library

கிளி கடியும் கருவியாகிய தட்டை என்பது வேறு. ஈண்டுக் குறிக்கப்பட்ட தட்டைப்பறை என்பது வேறு. இது, பல்லியங்களில் ஒன்றாகிய தோற்கருவியாகும். இதனைக் கரடிகை என்றும் கூறுவர். சிறந்த ஆடவர் மேனியில் முல்லை முகையின் மணமும், மகளிர் மேனியில் செண்பக மலரின் மணமும் இயல்பாகவே காணப்படும். தலைவனின் இயற்கை மணமாகிய முல்லையின் மணம், களவில் அவன் தன்னைப் புணர்ந்தவழித் தன் மேனியில் படிதலால், அது இன்றும் மணப்பதாயிற்று எனக் கூறுதல் இயற்கைக்கு மாறாயது என ரா.இராகவையங்கார் கூறுவர். புணர்ந்த மைந்தர்க்கு, மகளிர் மேனியின் மணம் வீசுவதாகப் பாடுதலே மரபாகும். மைந்தர் மேனியின் மணம், மகளிர் மேனியில் நாறுவதாகப் பாடுதல் வழக்கன்று. நன்மக்கட்கு இயல்பாகிய நறுமணம், அவர்தம் மேனியில் நிலைத்து நிற்குமேயன்றி, கலந்தார் மெய்யில் மாறிப் புக்கு நிற்றல் இல்லை. ஆதலின், 'முல்லை முகை நாறும்' என்ற தொடர்க்கு, அவர் களவில் சூடிவந்த முல்லையின் மணம் இன்றும் என்மேனியில் நிற்பதாயிற்று எனக் கூறுவதாகக் கொள்வதே ஏற்புடையதாகும். இன்றைக்கும் எனக்கு இயல்பாகிய செண்பக மணம், அவர் மேனியில் நாறாது, தனக்கு இயல்பாகிய முல்லையின் மணமே, நாறுவதாய் உள்ளது எனத் தலைவி கூறுவதாய்ப் பொருள் உணர்த்தலும் ஏற்புடையதாகும்.

சொற்பொருள் :

மட்டம்	–	கள், மட்டு, அம் சாரியை பெற்றது.
தட்டைப் பறை	–	கரடிகை என்னும் பறை
மணிக்கலம்	–	நீலமணியால் ஆகிய கலம்; நீல நிறமுடைய கள்ளையுடைய கலம்
கறங்குதல்	–	ஒலித்தல்

மேற்கோள் :

1. "சோலைக் கமுகின் சூல் வயிற்றன்ன
   நீலப் பைங்குடம்" பெரும்பாணாற்றுப்படை,381–2

2. "தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்"
   பதிற்றுப்பத்து,42

3. "நுங்கின் தடிகண் புரையும் குறுஞ்சுனை"
   கலித்தொகை,108

Koviloor Digital Library

4. "எறும்பி அளையின் குறும்பல் சுனைய"

குறுந்தொகை,12

5. "அரிக்குரல் தட்டை" மலைபடுகடாம், 9

6. "நெடுநீர் அவல பகுவாய்த் தேரை சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்க" அகநானூறு,154

பொருள் முடிவு :

நாடன், தொல்லைத் திங்கள், நிலவின் தோள் மணந்தனன். இன்றும் முல்லை முகை நாறும்

Koviloor Digital Library

194. முல்லை

என் எனப் படுங்கொல் –தோழி! மின்னுவரை
வான் ஏர்பு இரங்கும் ஒன்றோ! அதன் எதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்;
ஏதில கலந்த இரண்டற்கு என்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே?

பருவ வரவின் கண், ஆற்றாளாம் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கோவர்த்தனார்

பொருள் :

தோழி. மேகம் எழுந்து மின்னி ஒலிக்கும். அது ஒன்று தானா. அம்மேகம் ஒலிப்பதற்கு மேலும், காட்டிலுள்ள மயில்கள், கடியவாய் இசைக்கும். தலைவர் உடனுறையும் போது நட்பாய், இப்பொழுது பகையாய் வருத்தும் இவ்விரண்டன் பொருட்டு, என் அறிவில்லாத உள்ளம், பெரிய கலக்கத்தை அடையும். இவ்வாறு கலக்குறுவதன் காரணம் யாதென்று சொல்லப்படும்.

விளக்கம் :

இயற்கைப் புணர்ச்சியில், சூல் முகில் கண்டு, மயில் மகிழ்ந்து ஆடுவதைக் கண்டு இன்புற்ற தலைவி, தலைவன் இல்லாத நாளில் அது தன் குரலால் வருத்துவதைக் கண்டு, அதன் அயன்மையை உணர்ந்தாள். அலந்தார்க்கு உதவும் மழை, பிரிந்தார்க்குக் காதலர் வாராமை காட்டித் துன்புறுத்துவதால், அதனையும் அயன்மையுடையதாக நினைந்தாள். மேகம், உண்மையான கார்ப்பருவம் இதுவே என மேல்நின்று முழங்குவதாயிற்று. அதனை ஏற்றுக்கொண்ட மயிலும், கீழே இருந்து மகிழ்ந்து தன் தோகையை விரித்து ஆடிற்று. இவ்வாறு கார்ப்பருவத்தில் இவ்விரண்டனாலும் வருந்தும் தன்நிலையைத் தலைவி தோழியிடம் கூறினாள். தலைவன் பிரிவிற்கு உடன்பட்டமையால், தலைவி தன் நெஞ்சத்தினைப் 'பேதை நெஞ்சம்' என்றாள். தலைவனின் வாய்மையை உணராமையால், பேதை நெஞ்சம் எனக் குறித்ததாகவும் பொருள் கொள்ளப்படும். மேக முழக்கம் 'இரங்கும்' என்ற சொல்லாலும், மயிலின் அகவும் ஒலி, 'ஏங்கும்' என்ற சொல்லாலும் வேறுபடுத்திக் குறிக்கப்பட்டன. மேகம், கார்ப்பருவம் வந்தமையை உணர்த்த, மயில், துணையில்லாமையை உணர்த்த தனக்கு இன்பம் தந்த இவ்விரு

Koviloor Digital Library

பொருள்களுமே பகையாய் மாறித் துன்புறுத்துவதற்கு என்ன காரணம் என அறியாது வருந்துவதாகத் தலைவி கூறினள்.

சொற்பொருள் :

ஏர்பு – எழுந்து

இரங்கும் – ஒலிக்கும்

ஏதில் – அயன்மையுடைய

மலக்குறும் – கலக்கத்தை அடையும்

மேற்கோள் :

1. "இரவுப் பெயல் பொழிந்த உதவிபோயே" நற்றிணை,139
2. "விருந்து எவன் செய்கோ மழைக்கே" நற்றிணை,112
3. "என் எனப் படுங்கொல் தோழி" நற்றிணை,228
4. "பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தா நீர் நனந்தலை புலம்ப" குறுந்தொகை,391
5. "மஞ்ஞை, மா இனம்
காலமாரி பெய்தென, அதன் எதிர்
ஆலலும் ஆலின" குறுந்தொகை,251

பொருள் முடிவு :

தோழி. வான் இரங்கும் ஒன்றோ. மஞ்ஞை ஏங்கும். இரண்டற்கு என் நெஞ்சம் மலக்குறும்.

Koviloor Digital Library

195. நெய்தல்

சுடர் சினம் தணிந்து குன்றம் சேரப்
படர் சுமந்து எழுதரு பையுள் மாலை,
யாண்டு உளர் கொல்லோ, வேண்டுவினை முடிநர்?
'இன்னாது, இரங்கும்' என்னார் அன்னோ –
நைவரல் அசைவளி மெய்பாய்ந்து ஊர்தரச்
செய்வுறு பாவை அன்ன என்
மெய் பிறிதாகுதல் அறியாதோரே!

பிரிவிடைப் பருவ வரவின் கண் கிழத்தி மெலிந்து கூறியது. தேரதரன்

பொருள் :

கதிரவன் வெம்மை குறைந்து, மேற்கு மலையை அடைய, என்னிடம் வைப்பதற்காகத் துன்பத்தைச் சுமந்து கொண்டு வாராநின்ற, நோயைத் தரும் இம்மாலைக் காலத்தில். தாம் விரும்பிச் சென்ற வினையை முடிப்பவராகிய நம் காதலர், எங்கே உள்ளனரோ? உடனுறையும் போது, உடம்பைத் தடவி, மென்மையாக அசைந்து வரும் காற்று, அவரில்லாத போது, உடம்பின் கண் புலிபோலப் பாய்ந்து பரவி வருகின்றது. அதனால் அந்தோ, ஒப்பனை செய்யப்பெற்ற பாவையைப் போன்ற என்னுடைய உடம்பு, வேறுபடுதலை அறியாதவராகிய அவர், 'இந்நிலை இன்னாமையை உடையது; தலைவி வருந்துவாள்' என்று வாயினாலும் கூறார்.

விளக்கம் :

மாலைப்பொழுது, தன்னைத் துன்புறுத்துவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு துன்பத்தைச் சுமந்து வந்தது எனத் தன் ஆற்றாமையைத் தலைவி, தோழியிடம் கூறினள். தாம் வேண்டிய வினையை முடிப்பவர் என்ற தொடர், நாம் விரும்பிய வினையை முடியாதவர் என்று பொருள்படும். தலைவனுடன் உறையும் நாளில், உடலைத் தடவி இன்பத்தை மிகுவித்த காற்று, அவன் பிரிவின்கண் புலிபோலப் பாய்ந்து துன்பத்தைத் தருவதாயிற்று என வருந்துவதாயினள். பாவையைப் போன்ற தன்னுடைய அழகு எனத் தலைவி கூறுதல், தற்புகழ்ச்சியாகாது. பட்டாங்குக் கூறியதாகும். மெலிந்த காற்று எனக் கூதிர்ப்பருவம் குறிக்கப்பட்டது.

சொற்பொருள் :

படர் சுமந்து எழுதரும் மாலை – இலக்கணை.

Koviloor Digital Library

சுடர்	–	கதிரவன் (ஆகுபெயர்)
பையுள்	–	நோய் (உரிச்சொல்)
தணிந்து	–	குறைந்து
படர்	–	நினைவு (உரிச்சொல்)
இரங்கும்	–	இரங்குவாள்
அன்னோ	–	இரக்கக் குறிப்பு
குன்றம்	–	கதிரவன் மறையும் குன்றம் (அத்த கிரி)
அசைவளி	–	மெல்லிய காற்று
செய்வு	–	செய்தல் (தொழிற்பெயர்)

மேற்கோள் :

1. "வினை அமை பாவையின் இயலி" நற்றிணை,362
2. "பாவை, இயல் கற்றன்ன ஒதுக்கினள்" அகநானூறு,162
3. "கதிர் சினம் தணிந்த கையறு மாலை" குறுந்தொகை,387
4. "சுடர் சினம் தணிந்து குன்றம் சேர" நற்றிணை,369
5. "செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை.
   செல்சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன
   செய்யவர்" மதுரைக்காஞ்சி,410–12
6. "தாவில் நன்பொன் தைஇய பாவை
   விண் தவழ் இளவெயில் கொண்டு நின்றன்ன
   மிகு கவின்" அகநானூறு,212

பொருள்முடிவு :

என் மெய் பிறிதாகுதல் அறியாதோர், வேண்டுவினை முடிநர் யாண்டு உளர் கொல். இரங்கும் என்னார்.

Koviloor Digital Library

196. மருதம்

வேம்பின் பைங்காய் என்தோழி தரினே,
'தேம் பூங் கட்டி' என்றனிர்; இனியே,
பாரிபறம்பில் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
'வெய்ய உவர்க்கும்' என்றனிர் –
ஐய! – அற்றால் அன்பின் பாலே.

வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது. மிளைக் கந்தன்

பொருள் :

வேம்பினது பசிய காயை, என்னுடைய தோழியாகிய தலைவி கையால் தரின், அதனை இனிய பூமணமுள்ள, கருப்புக் கட்டி என்று இளமைப் பருவத்தில் கூறினீர். என் தோழி பெருமுது பெண்டாகிய இப்பொழுது, பாரி என்னும் வள்ளலுக்குரிய பறம்பு என்னும் மலையிடத்திலுள்ள, தைத் திங்களில் குளிர்ந்தனவாகிய, குளிர்ச்சியையுடைய சுனையில் உள்ள தெளிந்த நீரைத் தந்தாலும், வெம்மையாய் உவர்த்தலைச் செய்யும் என்று கூறுகின்றீர். இது வியப்பைத் தருவதாக உள்ளது. அன்பின் திறம் அத்தகையது போலும்.

விளக்கம் :

வேம்பின் பைங்காய் என்பது, அக்காய் போலக் கைப்புடையனவற்றைக் குறிப்பதாகும். இளமையுடைய தலைவி தரச் சுவைக்கப்படும் பொருள் எதுவாயினும், தலைவற்கு வானுலக அமுதம் போல் தோன்றும். தலைவி பெருமுது பெண்டாய் மூப்பு எய்தியவழி, அவளுடைய செயல்கள் யாவும், தலைவற்கு வெறுப்பைத் தருவனவாய் அமையும். வேம்பின் காய், கட்டியாயிற்று எனவும், தெண்ணீர், வெய்தாயிற்று எனவும் தலைவனின் விருப்பு வெறுப்புகளுக்கு ஒவ்வொரு சான்று தரப்பட்டுள்ளது.

பாரி, கடையெழுவள்ளல்களில் ஒருவன்; பறம்பின் கோமான்; கபிலரை நட்பாகப் பெற்றவன். முல்லைக்குத் தேர்ந்து, கொடைமடம் பட்டவன். அவன் மலை வற்றா வளம் உடையது. சுனைகள் பலவற்றைக் கொண்டது. அறநெறி ஒழுகுபவன் மலையாதலின், அவை என்றும் வற்றுவதில்லை. அச் சுனையின் நீர் தெளிந்தும், சுவையோடும், குளிர்ச்சியுடனும் இருத்தல் இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. தலைவி, தலைவனைப் பேணும் முறை எத்துணை இனியதாயினும், அவனால் அவையாவும் வெறுத்து ஒதுக்கப்பட்டன என்பதற்கு இவ்வொரு சான்று தரப்பட்டுள்ளது.

இளமைக் காலத்து அன்பின் திறம், வேம்பின் காய், தீம்பூங்கட்டியாய் உணரப்பட்டது. முதுமையுற்ற இக்காலத்து அவன்

Koviloor Digital Library

அன்பில்லாத திறம், சுனைநீர், வெய்யவாய் உவர்ப்பதாக உணரப்பட்டது. தருவோரும் ஏற்போரும் ஒருவரே ஆயினும், தரப்படும் பொருள் இடக் காலச் சூழல்களால், ஏற்போர் மனநிலைக்கு ஏற்ப வேறாய் உணரப்படுதல் கண்கூடு.. சுவை என்பது பொருளில் இல்லை என்பதும், ஏற்போர் மனத்தளவில்தான் உள்ளது என்பதும் இப்பாடலால் புலப்படும்.

பாரியின் பறம்பும், அதன் சுனைகளும், அவற்றின் நீரும், அதன் சுவையும் யாவரும் அறிந்த ஒன்றாதலின், அதனையே எடுத்துக்காட்டாய்த் தோழி கூறினள். உவர்க்கும் என்றமையால், கட்டி இனிக்கும் என்பது கூறாமல் உணரப்பட்டது. களவுக் காலத்து அருமையால் இனிதாதலும், கற்புக் காலத்து எளிமையால் உவர்த்தலும் குறித்ததாகவும் இப்பாடல் பொருள் உணரப்படும். தலைவனின் பரத்தைமையால், தலைவி இன்னாதவள் ஆயினள் எனக் குறிப்பதாகவும் இப்பாடல் விளக்குதல் கூடும்.

சொற்பொருள் :

தேம் பூங் கட்டி	–	இனிய, பூமணம் கமழும் கரும்பின் கட்டி கற்கண்டும் ஆம்.
வெய்ய	–	வெம்மையுடைய
ஐய	–	ஐ–வியப்பு (உரிச்சொல்) விளியும் ஆம்.
அன்பின் பால	–	அன்பின் திறத்த.

மேற்கோள் :

1. "ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு என
அடிசிலும், பூவும் தொடுத்தற் கண்ணும்"
தொல்காப்பியம், கற்பியல்,5

2. "அருமைக்காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத்து இரக்கத்தானும்"
தொல்காப்பியம், கற்பியல்,9

3. "தீம் நீர்ப் பெருங்குண்டு சுனை" புறநானூறு,166

4. "அறனில் வேந்தன் ஆளும் வறன் உறு குன்றம்"
அகநானூறு,109

5. "கடும்பரிப் புரவிக் கைவண் பாரி,
தீம் பெரும் பைஞ்சுனை" அகநானூறு,78

பொருள் முடிவு :

என் தோழி, வேம்பின் காய் தரின், கட்டி என்றனிர். இனி தண்ணிய தரினும் வெய்ய உவர்க்கும் என்றனிர், ஐய. அன்பின் பால் அற்று.

Koviloor Digital Library

197. நெய்தல்

யாது செய்வாம் கொல் – தோழி! – நோதக
நீர் எதிர் கருவிய கார் எதிர் கிளை மழை
ஊதை அம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே?

பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கச்சிப் பேட்டு நன்னாகையார்.

பொருள் :

தோழி. நோதலே பிரிந்துள்ள நமக்குத் தக்கதாக நீரை ஏற்றுக் கொண்ட மின்னல் முதலிய தொகுதியையுடைய கார்காலத்தின் பின்னர், பெருமேகத்தில் சிதறிய கிளை மேகங்கள், ஊதைக் காற்றின் குளிர்ச்சியோடு, மிக மயங்கிக் கலந்த, கூதிர்ப் பருவத்தின் வடிவில் கூற்றுவன், காதலனைப் பிரிந்த என்னைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டு வருவான். யாம் செய்யத்தகுவது யாது?

விளக்கம் :

காதலர்களைப் பிரிந்து தனித்து இருப்பவர்கள் துன்புறுதலே தக்கது எனத் துணிந்த கூற்றுவன், அவர்களைக் கொல்வதற்காகக் கூதிர்ப்பருவத்தின் வடிவத்தில் வந்ததாக உருவகம் செய்யப்பட்டது. கார்காலத்தின் பின்னதாகிய கூதிர்ப் பருவ மழை, குளிரைத் தரும் வாடைக் காற்றொடு கலந்து பெய்யும். தலைவன் இல்லாமையால் உடல் வேறுபட்டு, உள்ளம் மயங்கிய தலைவியைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டு கூதிர் வந்தது எனக் கலங்கினாள். உடனுறையும் போது இன்பத்திற்குத் துணை புரிந்த கூதிர், பிரிந்த வழித் தன்னைக் கொல்ல வருவதாக எண்ணினாள். அதனால், தலைவன் உள்ள இடத்திற்குச் சென்று, அவனுடன் உறைந்து, உயிர் தப்புவதோ, அச்செயல், அறநெறி அன்றாதலால், கூற்றுவன் தன் உயிரைக் கொள்ள உடன்படுதலோ என்னும் இரண்டனுள் யாது செய்வது என அறியாது மயங்கினள். தோழியிடம், துன்பத்திலிருந்து உய்வதற்கு உரிய முயற்சிகளாகிய இவ்விரண்டனுள் ஒன்று கூறுக, என வேண்டினள். 'கார், தொடங்கின்று, மாலை, நீந்தலோ அரிது; காதலர் நம்மும் உள்ளார்; யாம் யாது செய்வோம்'' எனத் தலைவி தோழியிடம் வினாவிய அகநானூற்றுப் பாடலும் (364) ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

Koviloor Digital Library

சொற்பொருள் :

நோ தக	–	நோதலே தனக்குத் தக்கதாக
எற்குறித்து	–	என்னைக் கொல்வதை நோக்கமாகக் குறித்து
கருவி	–	தொகுதி
ஊதை	–	குளிர்காற்று, வாடை
எதிர்தல்	–	கூடுதல்
கிளை மழை	–	பெரிய மேகத்தில் சிதறிய கிளை மேகங்கள்

மேற்கோள் :

1. "கூதிர் அற்சிரத்து, ஊதை தூற்ற
பனி அலைக் கலங்கிய நெஞ்சமொடு" அகநானூறு,183

2. "ஆடிய இளமழைப் பின்றை,
வாடையும் கண்டிரோ" நற்றிணை,229

3. "இன்னும் பெய்ய முழங்கி
மின்னும் தோழி, என் உயிர் குறித்தே" குறுந்தொகை,216

4. "யாது செய்வாம் கொல் தோழி" அகநானூறு,364

பொருள் முடிவு :

தோழி. கூதிர் உருவின் கூற்றம் எற்குறித்து வரும். யாது செய்வாம்.

Koviloor Digital Library

198. குறிஞ்சி

யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்
கரும்பு மருள் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை அன்ன பால்வார்பு,
கரிக்குறட்டு இறைஞ்சிய செறிக் கோட் பைங்குரல்
படுகிளி கடிகம் சேறும்; அடுபோர்
எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை,
வாரற்கதில்ல; வருகுவள் யாயே.

தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது. கபிலர்

பொருள் :

யா மரத்தை வெட்டி எறிந்து, அம் மரங்களை எரித்து ஆக்கிய வழியிடத்தில், கரும்பு போன்ற அடிப்பகுதியையுடைய, பசிய தாள்களைக் கொண்ட செவ்விய தினையானது வளர்ந்து காணப்படும். மடப்பத்தையுடைய பெண்யானையின் துதிக்கையைப் போலப் பருத்து, கரிதலையுடைய சந்தனம் முதலிய கட்டைகளின் மேல், அவற்றின் கோலில், பால் முற்றிச் செறிந்து, பசிய கதிர்கள் சாய்ந்து, காணப்படும். அக் கதிர்களில் படிந்து, தினைகளை உண்பதற்காக வரும் கிளிகளைக் கடிய, யாம் செல்லுதும். போரை அடுகின்ற வேலினையும், அவ்வேல் விளங்குதற்குக் காரணமாகிய பெரிய கைகளையும் உடைய மலையமான் திருமுடிக் காரியின் முள்ளூர்க் காட்டில் விளங்கும் சந்தனத்தின் மணம் கமழும் மார்பினையுடையாய். வாரற்க. யாய் ஆண்டு வருகுவள்.

விளக்கம் :

காட்டில் உள்ள மரங்களை வெட்டி வீழ்த்திப் பின்னர் எரியூட்டித் தினைப் புனத்தை உருவாக்குவர். தினையின் தாள், கரும்பு போன்றும், கதிர்கள், பெண்யானையின் கை போன்றும் தோன்றுவன. தினை மணியின் பொறை ஆற்றாமையால், தினைக் கதிர்கள், புனத்தை எரித்தபின் கரிந்து கிடக்கும் மரக் கட்டைகளின் மேல் சாய்ந்து காணப்படும். 'கரிக்குறடு' என்பதற்கு உ.வே.சாமிநாதையர், உலைக் கூடத்தில் கரியை எடுக்க உதவும் குறடு எனப் பொருள் கொண்டார். கொடிறு என்னும் சொல்லேயன்றி, குறடு என்ற சொல், யாண்டும் முந்து நூல்களில் காணப்படாமையின் அப்பொருளின் பொருத்தமின்மையை ரா.இராகவையங்கார் விளக்குவர்.

Koviloor Digital Library

தோழி, தலைவனிடம் தன் மலைக்குரியன பூசி வருக என்றும், இயல்பாகவே மணம் உடைமையால் பூசாது வருக என்றும் கூறினள். தலைவி, அவனைப் புணர்ந்த வழி, அவன் பூசிய சந்தன மணம், தலைவியின் உடலில் காணப்பட்ட வழி, தாய் அப்புதுமணம் கண்டு ஐயுற்று, தினை கடியப் போக விடாள் என்றும், ஆண்டு நிகழ்வது காண வருவாள் என்றும், இதனால் தாம் அஞ்சுதும் என்றும் தலைவற்குக் கூறி குறியிடம் வேறாக உரைத்தாள்.

சொற்பொருள்:

யாஅ	–	யாமரம்
இயவு	–	ஒழுகுதல், நேராதல்
கரிக்குறடு	–	கரிந்த கட்டை
குரல்	–	கதிர்
தில்ல	–	தில் – இடைச்சொல், விழைவுப் பொருள்
யாய்	–	தாய் (செவிலி)
ஆரம்	–	சந்தனம்
பால்	–	தினை முதலிய கதிர்களில் கருமுற்றிப் பால் பிடித்தல்

மேற்கோள் :

1. "யாயை அஞ்சுதல்" தொல்காப்பியம், களவியல்,23
2. "கரும்பு எனக் கவினிய பெருங்குரல் ஏனல்"
   அகநானூறு,302
3. "சுடுபுன மருங்கில் கலித்த ஏனல்" குறுந்தொகை,29
4. "தூய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார்பு இறைஞ்சித்
   தோடலைக் கொண்டன ஏனல்" நற்றிணை,206
5. "யானை, ... இறங்கு கை கடுப்பத்
   தூய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
   நற்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி" .
   குறிஞ்சிப்பாட்டு,35–8
6. "பொய்ப் பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
   கொய்பதம் உற்றன. குலவுக் குரல் ஏனல்"
   மலைபடுகடாம்,107–8

Koviloor Digital Library

7. "செவ்வேல் மலையன், முள்ளூர்க் கானம்"

குறுந்தொகை,312

8. "செவ்வேல், முள்ளூர் மன்னன், கழல் தொடிக் காரி"

அகநானூறு,209

9. "மரம் கொல் கானவன், புனம் துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி"

குறுந்தொகை,214

பொருள் முடிவு :

இயவில் சேறும், யாய் வருகுவள், வாரற்க.

Koviloor Digital Library

199. குறிஞ்சி

பெறுவது இயையாது ஆயினும், உறுவது ஒன்று
உண்டுமன் வாழிய - நெஞ்சே! - திண்தேர்க்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மை ஈர் ஓதி மாஅயோள் வயின்
இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை என ஒன்று இன்றி,
மறுமை உலகத்து மன்னுதல் பெறினே.

தோழி செறிப்பு அறிவுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. பரணர்

பொருள் :

திண்ணிய தேரினையும், வள்ளன்மையுடைய கையினையும், உடைய ஓரி என்பவனுடைய, கொல்லிக் கானத்தைத் தடவி வீசுகின்ற, கோடைக் காற்றின் மணம் கமழும் நெறித்த கூந்தலையும், வகிர்ந்த முன்மயிரினையும் உடைய மாமை நிறம் கொண்ட தலைவியிடம், இன்றே போன்ற நட்பினால், இக்காம நோய் நீங்கும் உபாயம் என்பது ஒன்று இல்லாமல், மறுபிறப்படைய அவ்வுலகத்தும் எனக்கு அவளுடன் நட்பு நிலைபெறுதல் கூடும். ஆதலால் அவளை இவ்வுலகில் அடைவது கிட்டாதாயினும், இதனின் மிக்கதாகிய நன்மை ஒன்று உண்டு. அஃது உறுதி. அதனால், நெஞ்சே, நீ அவள் நினைப்பில் வாழ்வாயாக.

விளக்கம் :

தலைவி, அலர் எழுந்தவழி இற்செறிக்கப்பட்டமையால், தலைவனால் அவளைக் காண இயலவில்லை. காம வேட்கை மிக்க தன் நெஞ்சை நோக்கி, இவ்வுலகில் அவளை அடைதல் இல்லையாயினும், மறுமை உலகில் அவளைப் பெறுதல் உறுதி எனக் கூறி அதனை அமைதியடையுமாறு உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது.

ஓரி, பல பொருள்களில் ஊடுருவிச் செல்லுமாறு அம்பு எய்யும் ஆற்றல் பெற்றமையால், வல்வில் ஓரி எனப்பட்டான். இவன், கடையெழு வள்ளல்களில் ஒருவன். கொல்லி மலைக்குத் தலைவன். இவன் குதிரைக்கும் ஓரி என்று பெயர். மலையமான் திருமுடிக்காரியால் கொல்லப்பட்டவன். திண்ணிய தேரும், வண்மையும் உடையவன். கோடைக் காலத்தும், ஓரியின் கைவண்மையால், கானம் வளம் குறையாத சிறப்புடையது.

Koviloor Digital Library

நட்பு என்ற உணர்வு, உயிரில் தொடர்வது ஆதலால் உயிர் செல்லும் பற்றுவழிச் செல்லும் இயல்புடையது. தலைவன், மறுமை உலகத்தும் தான் கொண்ட நட்பு தொடரும் என நெஞ்சத்திற்குக் கூறினன். நோய், மறுமையில் மன்னுதல் பொருந்தாது. அது உடல்பற்றியது. ஆனால் நட்பு, மறுமையில் மன்னுதல் உடையது. உடலோடு கூடிய நோய் அழிந்தாலும், உயிரோடு இயைந்த நட்பு அழியாது தொடரும், எனக் குறித்தான்.

சொற்பொருள் :

ஈர் ஓதி	–	வகிர்ந்த முன்மயிர்
நெறிபடு கூந்தல்	–	நெறிப்பினையுடைய கூந்தல் (பின்மயிர்)
எறிவளி	–	கோடைக்காற்று.
மாஅயோள்	–	மாமை நிறம் உடையவள்
நோய்	–	காம நோய்

மேற்கோள் :

1. "தோழி இற்செறிப்பு அறிவுறுத்தத் தலைவன் ஆற்றாமை கூறியது" தொல்காப்பியம், களவியல்,12 நச்சினார்க்கினியர்
2. "குவளை உள்ளகம் கமழும் கூந்தல், செம்பொன் திருநுதல் பொலிந்த தேம்பாய் ஓதி" நற்றிணை,160
3. "மழவர் பெருமகன், மாவண்ஓரி" நற்றிணை,52
4. "ஓரி, கருவி வானம் போல வரையாது சுரக்கும் வள்ளியோய்" புறநானூறு,204
5. "நுண்மணல் அறல் வார்ந்தன்ன நன் நெறியவ்வே" குறுந்தொகை.116
6. "வல்வில் ஓரி, கானம் நாறி இரும்பல் ஒலிவரும் கூந்தல்" நற்றிணை,6
7. "அன்றை அன்ன நட்பினர்" குறுந்தொகை,385
8. "ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு" குறிஞ்சிப்பாட்டு,24

பொருள் முடிவு :

நெஞ்சே இந்நோய் மறுமை உலகத்தும் மன்னுதல் பெறும். பெறுவது இயையாது ஆயினும் உறுவது ஒன்று உண்டு.

Koviloor Digital Library

200. நெய்தல்

பெய்த குன்றத்துப் பூநாறு தண் கலுழ்
மீமிசைத் தாஅய், வீசும்வளி கலந்து,
இழிதரும் புனலும்; வாரார் – தோழி! –
மறந்தோர் மன்ற; மறவாம் நாமே –
கால மாரி மாலை மாமலை
இன்இசை உருமினம் முரலும்
முன்வரல் ஏமம் செய்து அகன்றோரே.

பருவ வரவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, 'பருவம் அன்று; வம்பு' என்றவழி, தலைமகன் சொல்லியது. **ஔவையார்**

பொருள் :

தோழி. கார்ப்பருவத்தில் பெய்வதற்கு உரிய மழையையுடைய மாலைக் காலத்தில், பெரிய மலைப்பகுதியில், முழவு போன்ற இனிய ஓசையுடைய இடியேற்றினோடு மேகங்கள் முழங்கும். முன்பு மழை பெய்த குன்றத்தின்கண், மலர்மணம் வீசுகின்ற குளிர்ந்த வெள்ளநீரின் மேல் பரவிய மலர்களைச் சுமந்து வந்து அருவி நீர் வீழும். கார்ப்பருவத்திற்கு முன்னரே வருவதாகப் பாதுகாப்பான மொழிகளைக் கூறிச் சென்றவர், இன்னும் வாரார் ஆயினர். அவர் உறுதியாக நம்மை மறந்தவராதல் வேண்டும். ஆனால் நாம் அவரை மறத்தல் செய்யாம்.

விளக்கம் :

தலைவன் கார்காலம் தொடங்குவதற்குமுன் வருவதாகக் கூறிய மொழிகள், தலைவியின் உயிர்க்குப் பாதுகாப்பாய் அமைந்தன. கார்காலம் வந்தபின்னரும் அவர் வாராமையால், அவர் தன்னை உறுதியாக மறந்தவராதல் வேண்டும் எனக் கருதினாள். இடி முழக்கமும், அருவியின் நீர்ப்பெருக்கும், கார்காலம் வந்தமையை உறுதி செய்தன. தோழி கூறியது போல், இது 'வம்ப மாரி' அன்று எனத் தலைவி தெளிந்தனள். மன்ற என்ற சொல், மறந்தோர் மன்ற எனவும், மறவாம் மன்ற எனவும் ஈரிடத்தும் கூட்டிப் பொருளுரைக்கப்படும். தலைவன் ஏமம் செய்தமையையும் மறந்தவனாதல் வேண்டும் எனத் தலைவி கருதினாள். தலைவன் வாராமையால், அவனுடன் புதுப் புனல் ஆடுதலும், அருவிதந்த மலர்களைப் புனைதலும் இல்லையாயின எனக் கலங்கினாள். உடற்கினியதாய் வீசும் காற்றும்; வாய்க்கினிய அருவி நீரும்; கண்ணுக்கு இனிய குன்றத்து வெள்ளப் பெருக்கும்; மூக்கிற்கினிய

Koviloor Digital Library

பூ மணமும்; செவிக் கினிய இடியேற்றின் இன்னிசையும் ஆகிய ஐம்புல இன்பங்களும், தலைவன் உடனில்லாமையால் துய்க்கப்பெறாது அழிவன எனத் தலைவி வருந்துவதாயினள்.

சொற்பொருள் :

வீ	–	*அப்பொழுது உதிர்ந்த பூ*
மன்ற	–	*தேற்றம் (இடைச்சொல்)*
கலுழ்	–	*வெள்ளம், கலங்கல்*
கால மாரி	–	*உரிய காலத்தில் பெய்யும் மழை*

மேற்கோள் :

1. "நீர்நிறம் கரப்ப ஊழ் உறுபு உதிர்ந்த
   பூ மலர் கலுலிய கடுவரல் கான்யாற்று" *அகநானூறு,18*
2. "இன் குரல், தளிமழை பொழியும்" *மதுரைக் காஞ்சி,262*
3. "கூதிர்ப் பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே" *ஐங்குறுநூறு,252*
4. "இன் இளவேனிலும் வாரார் இன்னே வருதும் எனத் தெளித்தோரே" *அகநானூறு,229*
5. "மலை அலர் அணியும் தலைநீர் நாடன்" *புறநானூறு,390*
6. "இன் இசை உருமொடு" *அகநானூறு,58*

பொருள் முடிவு :

தோழி. உருமினம் முரலும், புனலும் இழிதரும். அகன்றோர் வாரார். மறந்தோர் மன்ற. நாம் மறவாம்.

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி